# பதிற்றுப் பத்து

## ஆராய்ச்சியுரை

உரையாசிரியர்

பண்டிதர் சு. அருளம்பலவனார்

# பதிற்றுப் பத்து

## ஆராய்ச்சியுரை

பழையவுரை ஒப்புமைப்பகுதி பலவகை
ஆராய்ச்சிக் குறிப்புக்கள் முதலியவற்றுடன்

மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தவரும்
காலிநகர் அரசாங்க உயர்தர கலாசாலையின் முன்னைநாள்
தலைமையாசிரியருமாகிய

**பண்டிதர் சு. அருளம்பலவனார்**

இயற்றியது.

யாழ்ப்பாணத்துக் காரைநகர்

**அ. சிவானந்தநாதன் அவர்களால்**

வெளியிடப்பெற்றது.

பதிப்புரிமை ]

[ விலை ரூபா [illegible] 50 ]

முதற் பதிப்பு: 1960

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# முகவுரை

செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் சங்க இலக்கியங்களுள் ஒன்றாகத் திகழும் பெருமை சான்றது பதிற்றுப்பத்து. இது இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு யாண்டுகளுக்குமுன் தமிழ்கூறு நல்லுலகத்தின் ஒரு பகுதியாகிய சேரநாட்டைக் கோல்கோடாது ஆட்சிபுரிந்த சேரவேந்தர் பதின்மர் மீது சங்கப் புலவர்கள் பதின்மராற் பாடப்பெற்றது. ஒவ்வொரு சேரவேந்தன்மீதும் பத்துப் பத்தாகப் பாடப்பெற்ற பத்துப் பத்துக்களின் தொகையாதலின் இது பதிற்றுப்பத்து எனப் பெயர் பெறுவதாயிற்று. இத்தொகை நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னார் இன்னாரென்பது தெரியவில்லை. இது நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை அகநானூறு புறநானூறு என்னும் எட்டுத்தொகை நூல்களுள் நான்காவதாக விளங்குகின்றது. இது புறநானூற்றினைப் போன்று புறப்பொருள் பற்றிய நூலாகும். இந்நூற் பாடல்களிற் பல நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களாற் பழைய இலக்கண இலக்கிய உரைகளில் மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

தமிழகத்தை ஆட்சிபுரிந்த முடியுடை வேந்தர் மூவருள்ளும் முதற்கண் வைத்து எண்ணப்படும் பெருமையுடையோர் சேரவேந்தராவர். பத்துப் பாட்டுள் ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படையுள் "இயறேர்க் குட்டுவன்" "கடுந்தேர்ச் செழியன்" "நற்றேர்ச் செம்பியன்" என மூவேந்தருட் சேரனை முன் வைத்துக் கூறியிருத்தலும், 'சேர சோழ பாண்டியர்' எனச் சேரனை முன் வைத்து மூவேந்தரை நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் தத்தம் உரைகளிற் கூறியிருத்தலும், "போந்தை வேம்பே யாரென வருஉ, மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என மூவேந்தரின் அடையாளப் பூக்களைக் கூறும்போது சேரர் பூவினை முன் வைத்துத் தொல்காப்பியனார் கூறியிருத்தலும் சேரர் பெருமையினை நன்கு புலப்படுத்துவனவாகும். சேரவேந்தரைப் பற்றிய வரலாறு புறநானூறு முதலிய நூல்களிற் காணப்படினும் முழுவதும் சேரகுலத்தரசர்களுடைய வரலாற்றுச் செய்திகளைக் கால ஒழுங்கின்படி விரித்துரைக்கும் தனிச் சிறப்புடைய நூல் பதிற்றுப்பத்து ஒன்றேயாகும். இந்நூல் சங்ககாலச் சேரவேந்தரின் வரலாறு கூறும் வாயிலாக அவ்வேந்தரொடு மாறுபட்ட சோழ பாண்டியர்களினதும் அவர்களுக்குத் துணைவலியாகப் போந்த குறுநில மன்னர்களினதும் பிற தலைவர்களினதும் வரலாறுகளையும் மற்றும் பிற செய்திகளையும் கூறுதலாற் சங்ககாலத் தமிழ் மக்களின் வரலாறு கூறும் மாண்பு மிக்க நூலாகவும் விளங்குகின்றது.

இவ் விழுமிய நூலின்கண், மறப்புகழை மற்றைப் புகழினும் மிக்க புகழாகக்கொண்ட சேரவேந்தரின் வீரமிகுதி கொடைத்திறம் படைப்பெருமை அரண்மாட்சி ஆட்சித்திறம் முதலியவற்றைப்பற்றிய செய்திகளும், சேரநாட்

டின் இயற்கையும், அந்நாட்டின் மலைகள் ஆறுகள் ஊர்கள் முதலியவற்றைப் பற்றிய வரலாறுகளும், அந்நாட்டு வழக்க ஒழுக்கங்களும், பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளும் நாகரிகப் பண்பாடுகளும் உழவு வாணிகம் முதலிய தொழில் வகைகளும், புலவர் பாணர் கூத்தர் விறலியர் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகளும் பிறவும் நன்கு கூறப்பட்டுள்ளன. சேரவேந்தரின் மறப்பண்பையும் கொடைத் திறத்தையும் ஒவ்வொரு பாட்டிலும் சிறப்பாகக் காணலாம்.

இந்நூலின் கடவுள் வாழ்த்தும் முதற்பத்தும் பத்தாம் பத்தும் கிடையாதொழிந்தமையின் இடைநின்ற எட்டுப் பத்துக்களே வெளிவந்துள்ளன. இவற்றுள், **இரண்டாம்பத்து** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனாரும், **மூன்றாம்பத்து** இமயவரம்பன் தம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனாரும், **நான்காம்பத்து** களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும், **ஐந்தாம்பத்து** கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணரும், **ஆறாம்பத்து** ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையாரும், **ஏழாம்பத்து** செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், **எட்டாம்பத்து** தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கிழாரும், **ஒன்பதாம் பத்து** குடக்கோ இருஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழாரும் பாடியவை. முதற் பத்தையோ பத்தாம் பத்தையோ சார்ந்த இந்நூற்பாடல்களிற் சில, **தொல்காப்பியவுரை**களிலும் **புறத்திரட்டு** என்னும் நூலினும் காணப்படுகின்றன.

இந்நூலின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் **துறை வண்ணம் தூக்கு பெயர்** என்பவற்றைத் தெரிவிக்கும் குறிப்புக்கள் அமைந்துள்ளன. துறை பற்றிய குறிப்பு பிறநூல்களிற் காணப்படினும் ஒவ்வொரு பாடலுக்கும் இந்நான்கினையும் வகுத்துரைக்கும் குறிப்புக்கள் சிறப்பாகப் பதிற்றுப் பத்திலேயே காணப்படுகின்றன. இந்நூற் பாடல்கள் யாவும் * **பாடாண்டிணை** ஒன்றனையே பொருளாகக் கொண்டு பாடப்பெற்றனவாகும். இதனைத் தொல்காப்பியவுரையில் '**பதிற்றுப்பத்துநூறும் இவ்வாறே வருதலிற் பாடாண்டிணையேயாயிற்று**' என நச்சினார்க்கினியர் உரைத்தலானும் அறியலாம். இதனால் ஒவ்வொரு பாட்டிற்கும் திணை குறியாதொழிந்தனர். ஒவ்வொரு பாட்டிலும் பொருளாலாதல் அடையாலாதல் சிறப்புமிக்க தொடர் ஒன்றே அவ்வப் பாட்டின் பெயராக அமைந்திருக்கிறது. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய **மலைபடுகடாம்** என்னும் பாட்டினுக்கு அப்பாட்டிலுள்ள மலைபடுகடாம் என்னும் பொருட் சிறப்புடைய தொடரே பெயராக அமைந்திருத்தல் காண்க.

இந்நூலின் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அப்பத்தினால் பாடப்பெற்ற சேரவேந்தன் பெயரும் அவன் குடிவழியும் அருஞ்செயல்களும் அவனைப் பாடிய புலவர் பெயரும் அவர் பாடிய பத்துப்பாடல்களின் பெயர்களும்

---

* பாடாண்-பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு. 'பாடாண் என்பது பாடுதல் வினையையும் பாடப்படும் ஆண்மகனையும் நோக்காது அவனது ஒழுகலாறாகிய திணையை யுணர்த்தினமையின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை'—தொல் புற சூ 25 நச்.

அப்புலவர் பாடிப்பெற்ற பரிசிலும் அவ்வேந்தன் ஆட்சிபுரிந்த கால அளவும் தெரிவிக்கும் பதிகமும் வாக்கியங்களும் அமைந்துள்ளன. சில பதிகங்கள் நூலுட் கூறப்படாத செய்திகளையும் கூறுகின்றன. பதிகங்களின் அமைப்பு முறையைக் கூர்ந்து நோக்கின் இவை யாவும் பிற்காலப் புலவர் ஒருவரால் இயற்றப்பெற்று ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் சேர்க்கப்பெற்றனவென்பது புலனாகும். இப்பதிகங்கள் நச்சினார்க்கினியர் அடியார்க்குநல்லார் என்னும் உரையாசிரியர்களால் தத்தம் உரைகளில் எடுத்தாளப்பட்டிருத்தலின் இவை இவ்வுரையாசிரியர்களின் காலத்திற்கு முற்பட்டன என்பது தெளிவாகும்.

அருமையும் பெருமையும் வாய்ந்த இந்நூலுக்குப் பழையதோர் உரை உளது. இவ்வுரையை எழுதிய ஆசிரியர் பெயர் காலம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. இந்நூல் எழுபத்தாறும் பாட்டின் உரையில் 'சின்மையைச் சின்னூலென்றதுபோல ஈண்டுச் சிறுமையாகக் கொள்க' என்று இவ்வுரையாசிரியர் எழுதியிருத்தலால் இவர் சின்னூல் என்னும் பெயரால் வழங்கப்படும் **நேமிநாதம்** என்னும் நூலை இயற்றிய குணவீர பண்டிதர் காலத்திற்கும், பதிகங்களுக்கும் குறிப்புரை எழுதியிருத்தலால் அப்பதிகங்களை இயற்றிய புலவர் காலத்திற்கும் பிற்பட்டவர் என்று தெரிகிறது இவர் சில்லேராளர் என்பதற்குத் 'தம் குலத்தானும் ஒழுக்கத்தானும் சிறிய ஏராளர்' என்று *உரைத்திருப்பதால் இவரை ஆரியப் பான்மை மிக்க பார்ப்பனரோ என்று நினைத்தற்கு இடமுண்டு. இவர் இந்நூலுரையில் **திருக்குறள் மதுரைக்காஞ்சி புறநானூறு** என்னும் நூல்களை † மேற்கோள்களாகக் காட்டியிருக்கிறார். இவர் இவ்வுரையில் '......என்று உரைப்பாருமுளர்' எனப் § பலவிடங்களிற் பிறர் கருத்துக்களையும் எடுத்துக் கூறுதலால் இவர் காலத்துக்கு முன்பும் சிலர் இந்நூற்கு உரை எழுதினர் என்பது புலப்படுகிறது.

இவ்வுரையாசிரியர் அருஞ்சொற்களுக்கும் தொடர்களுக்கும் பொருள் கூறியும் சொன்முடிபு பொருண்முடிபு காட்டியும் இந்நூலுக்கு எழுதிய உரை சுருக்கமாக அமைந்திருத்தலால் இப்பழையவுரையின் துணை கொண்டு இதன் பொருளை விளங்குவது எளிதின் இயலாததொன்றாம். ஆதலின் இந்நூற் பொருளை யாவரும் எளிதின் அறிந்துகொள்ளத்தக்க நிலையில் இந்நூற்கு உரையிருத்தல் இன்றியமையாததெனக்கண்டு பல யாண்டுகளுக்கு முன்பு பதிற்றுப்பத்திற் கிடைத்துள்ள எண்பது பாடல்களுக்கும் பதிகங்களுக்கும் முதற் பத்தையோ பத்தாம் பத்தையோ சார்ந்த பாடல்களுக்கும் மிக விரிந்த நிலையில் ஆராய்ச்சியுரையினை எழுதி முடித்தேன். இவ்வுரை பதவுரை அகலவுரை வினைமுடிபு மேற்கோளாட்சி பழையவுரை ஒப்புமைப்பகுதி என்னும் பகுதிகள் அமைய எழுதப்பெற்றது. இந்நூற் பாடல்களின் சொன்னயம் பொருணயங்களை விளக்கியும் சொன் முடிபு பொருண் முடிபு காட்டியும் இலக்கணக் குறிப்புக்கள் தந்தும் துறை வண்ணம் தூக்கு இவற்றின் அமை

* பதிற் 76: 11 உரை. † பதிற் 1‍1: 21; 21: 13; 63: 5 உரைகள்.
§ பதிற் 13: 11-2; 13: 22-6; 16: 1-4; 21: 23; 29. 6; 31: 5; 31: 10-4; 32: 15 6; 33: 6-11; 40: 19; 42: 4; 43: 21; 48: 5-9; 53: 6-9; 59: 13; 62: 6-8 உரை.

தியைப் புலப்படுத்தியும் இவ்வுரையினைத் தெளிவுற எழுதியுள்ளேன். முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோற் போற்றிக்கொள்ளல் கடனாதலின் இந்நூற் பாடல்களின் பொருள்வரையுமிடங்களில் பழையவுரைக் குறிப்புக்களையும் ஆங்காங்கு இயைபுபடுத்தியுள்ளேன். பழையவுரையாசிரியரின் உரைநுட்பங்கள் நன்கு புலப்படும் வகையில் இதன்கட் பல ஆராய்ச்சிக் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. பழையவுரையாசிரியரின் கருத்துக்களை முற்றும் கொள்ளாது பல புதிய கருத்துக்களைத் தக்க மேற்கோளுடன் எழுதியுள்ளேன் இந்நூலிலுள்ள அருஞ் சொற்களையும் தொடர்களையும் இந்நூலை இயற்றிய சங்கப் புலவர்கள் எவ்வெப் பொருள்களில் வழங்கினர் என்பதை நன்கு அறிந்து கோடற்குச் சங்ககாலத்தும் அதனை அடுத்தகாலத்தும் தோன்றிய **தொல்காப்பியம் பத்துப்பாட்டு எட்டுத்தொகை சிந்தாமணி சிலப்பதிகாரம்** முதலான நூல்களிலிருந்தும் அவற்றின் பழையவுரைகளிலிருந்தும் **திவாகரம் பிங்கலந்தை** என்னும் பழைய நிகண்டு நூல்களிலிருந்தும் பல மேற்கோள்களைக் காட்டியுள்ளேன். பழையவுரையைக் காண விழைவார்க்குப் பயன்படும் வகையில் ஒவ்வொரு பாட்டின் உரை இறுதியிலும் பழையவுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுமாறு இந்நூற் பாடல்களின் சொற்பொருள்களோடு ஒப்புமையுடைய பகுதிகளைப் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை பெருங்கதை முதலிய நூல்களிலிருந்து எடுத்துக்காட்டியுள்ளேன். சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் இந்நூற் பாடல்களை மேற்கோளாக எடுத்தாண்ட இடங்களும் இதன்கட் காட்டப்பட்டுள்ளன.

ஒரு நூலின் பாடற்பொருளை நுட்பமாக எடுத்து விளக்குவது ஆராய்ச்சியுரையாகும் கற்போர்க்குச் சுவை பயக்குமாறு ஆராய்ச்சியுரையினை எழுதியவர் **மறைமலையடிகளாவர்.** அவர்கள் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை பட்டினப்பாலை ஆராய்ச்சியுரைகளை எழுதியமுறையில் திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை என்னும் நூல்களை எழுதினேன். அக்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர்களாய் இருந்த **நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோமசுந்தரபாரதியார் M. A. ; B. L.** அவர்களும், **நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்களும் அந்நூல்களைப் பார்வையிட்டு மதிப்புரை தந்து ஆராய்ச்சியுரை எழுதுவதில் என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தினார்கள். அதுவே இப் பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரையினை எழுதுவதற்குந் தூண்டுகோலாய் அமைவதாயிற்று. ஆராய்ச்சியுரை எழுதுவதில் நல்வழிகாட்டிய மறைமலையடிகளுக்கும் என்னை ஊக்கப்படுத்திய நன்னர் நெஞ்சத்து இப் பேராசிரியர்களுக்கும் யான் என்றும் நன்றி பாராட்டும் கடமையுடையேன்.

பதிற்றுப்பத்து என்னும் பழந்தமிழ் நூலைத்தேடி ஆராய்ந்து முதன் முதல் அச்சிட்டுத் தமிழ் உலகிற்கு உதவிய பெரியார் **மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்** அவர்களாவர். அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இவ்வுரையினை எழுதிவருங்கால் வேண்டும் உதவிகளைப் பேரன்புடன் செய்தவர்கள் சேற்றூர். ரா. சுப்பிரமணியக் கவிராயர், செந்தமிழ்ப் பத்திராதிபர் நாராயணையங்கார் இவர்களிடம் இலக்கண இலக்கிய தருக்க நூல்களை நன்கு கற்றவரும் வடநூற் பயிற்சியுடையவருமாகிய எனது ஆசிரியர் ஸ்ரீமத். சி. சுப்பிரமணியதேசிகர் அவர்களும், யாழ்ப்பாணத்துச் சைவாசிரிய கலாசாலை முன்னைநாள் தமிழ்ப்பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுமாவர். இவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி என்றும் உரியதாகும்.

இவ்வுரையை எழுதிமுடித்து அச்சிடத் தொடங்குமுன் செவ்வனே பார்வையிட்டு உதவி புரிந்தவர், எனது அருமை நண்பர் யாழ்ப்பாணத்துத் தும்பளை வித்துவான், பண்டிதர் திரு. க. கிருஷ்ணபிள்ளையவர்களாவர். அவர்களும் எனது மனம்பொருந்திய நன்றி என்றும் உரியதாகும்.

இவ்வுரையை யாழ்ப்பாணத்தில் அச்சிட முயன்றும் உலகப் பெரும்போர் காரணமாக அக்காலத்து உண்டான பலவகை நெருக்கடிகளாலும் அச்சிடுதல் இயலாதாயிற்று. பின்பு எனது கருத்திற்கியைந்து இரண்டாம் பத்து உரையைச் சென்னையில் அச்சிடுவித்துத் தந்தவர்கள் தமிழ்ப் பற்றும் சமயப்பற்றும் ஒருங்குடையவரும் என்பாற் பேரன்புடையவருமாகிய திருமயிலை திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்களாவர். கைம்மாறு கருதாது பிள்ளையவர்கள் பெரிதும் முயன்று செய்த பேருதவிக்கு என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

அச்சிடப்பெற்ற இரண்டாம் பத்து ஆராய்ச்சியுரை மிகப் பரந்துபட்டுச் சென்றமையின் அம்முறையில் நூல் முழுவதையும் வெளியிடுதல் இயலாதாயிற்று. அதனால் ஆராய்ச்சிப் பகுதியையும் ஒப்புமைப் பகுதியையும் சிறிது சுருக்கிப் பதவுரை முடிபு ஆராய்ச்சியுரை மேற்கோள் பழையவுரை ஒப்புமைப்பகுதி என வகைப்படுத்தி முதற்பாதி இப்போது வெளியிடப்பெறுகின்றது. பாடினோர் வரலாறு அரும்பத அகராதி முதலியன உரை முழுவதுடன் பின்னர் வெளிவரும்.

இந்நூலைப் பார்வையிட்டு மதிப்புரை வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர், பன்மொழிப் புலவர் திரு. T P. மீனாட்சிசுந்தரனார் M. A; B. L; M. O. L. அவர்களுக்கும், எனது ஆசிரியர் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்கள் வித்துவான் திரு. மு அருணாசலம்பிள்ளை அவர்களுக்கும், மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்களுக்கும், இரண்டாம் பத்து ஆராய்ச்சியுரையினைப் பார்வையிட்டு மதிப்புரை வழங்கிய யாழ்ப்பாணத்து மகா வித்துவான் பிரம்மஸ்ரீ சி கணேசையர் அவர்களுக்கும், சென்னை யூனிவர்ஸிடி தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தமிழ்ப் பண்டிதராயிருந்த இராமநாதபுரம் திரு. மு. இராகவையங்கார் அவர்களுக்கும், யாழ்ப்பாணத்துச் சைவாசிரிய கலாசாலை முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்

துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார் M. A; M. O. L; PH. D. அவர்களுக்கும் இக்கல்லூரியின் துணைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம் M. A. M. LITT அவர்களுக்கும், முன்னாள் துணைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் M. A. அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் M. A; M. O. L; L. T; PH. D. அவர்களுக்கும், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. செ. சிங்காரவேலனார் B. A. அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி என்றும் உரியதாகும்.

இவ்வுரையினைப் பதிப்பித்தற்குப் பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளையவர்களும், யாழ்ப்பாணத்துப் பிரபல வர்த்தகர் திரு ப. கந்தையா பிள்ளையவர்களும் நூறு நூறு ரூபாய்களை உவந்து அளித்தார்கள். இதனை அச்சிட்டு முடிப்பதில் ஊக்கம் குன்றாதவாறு அறிவினும் திருவினும் மிக்க பெரியோர்களும் பொருள் உவந்தளித்தார்கள். ஆயினும் இதனை அச்சிட்டு வெளியிடுவதில் பெருந்தொகையான கைப்பொருள் செலவாயிற்று. பொருளுதவி புரிந்த பெருந்தகையாளர்களுக்கும், இதனை வெளியிடுவதில் என்னோடு ஒத்துழைத்த நண்பர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வாராய்ச்சியுரையை எழுதிமுடிப்பதில் தோன்றாத் துணையாய் இருந்து இன்னருள் புரிந்த **ஆலவாய் இறைவன்** திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

காரைநகர்,
**யாழ்ப்பாணம்.**
31-12-60

இங்ஙனம்,
**சு. அருளம்பலம்.**

# மதிப்புரைகள்

அண்ணமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்

## பன்மொழிப் புலவர் T. P. மீனுட்சிசுந்தரனர்

M. A., B. L., M. O. L. அவர்கள் எழுதியது.

ஈழநாட்டுத் தமிழறிஞர் பண்டிதர் திரு. சு. அருளம்பலம் அவர்கள் பதிற்றுப்பத்திற்கு ஆராய்ச்சியுரை ஒன்று வெளியிட்டுள்ளார்கள். முன்னும் ஒருபகுதிக்கு வெளியிட்டது மிக விரிவாதல் கண்டு இதனை மிக விரிவாகவு மன்றி மிகச் சுருக்கமாகவுமன்றி உரை எழுதியிருப்பது போற்றத்தக்கதே யாம். பதிற்றுப்பத்திற்குப் பழையவுரை ஒன்று இடையிடையே சிதைந்த நிலைமையில் தமிழ்த்தாதாவழியே வெளிவந்து வழங்குகிறது. அதன் பெருமையைப் புகழமுடியாது. ஆனல் மிகமிகச் சுருங்கிய நிலைமையில் உள்ளதால் அது அனைவருக்கும் உதவுமது இல்லை. ஆதலின் விளக்கவுரைகள் தோன்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முன்னே உரைகள் ஆராய்ச்சிகள் எல்லாவற்றையும் மனத்திற்கொண்டு தாம் அவற்றில் திருத்தம் கண்ட இடத்தை விளக்கி இந்த ஆராய்ச்சி உரையை ஆசிரியர் எழுதியுள்ளார். ஒருகால் நூற்றுண்டு இந்நூலில் ஈடுபட்டுப் பழகிய உள்ளத்தோடு இந்த உரையை ஆசிரியர் எழுதுகிருர். இத்தகைய உரை இந்நாளில் தமிழ் ஆராய்ச்சிக்கு விருந்தாகி இனித்து ஒளிரும் என்பதில் ஐயம் இல்லை. வாழ்க அருளம்பலம்; வாழ்க அவர் உரை; வாழ்க பதிற்றுப்பத்து.

## ஸ்ரீமத் சி சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்

எழுதியது

ஒண்டீம் தமிழின்கணுள்ள பண்டைய சங்கப்பனுவல்களுள் பழமைவாய்ந்தது பதிற்றுப்பத்து. சேரஅரசர் பதின்மர்மீது நல்லிசைப் புலவர் பதின்மரால் பாடப்பெற்ற பப்பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளின் தொகுப்பே இந்நூலாகும். இதற்குப் பழையவுரை ஒன்று உள்ளது. அது நூலுள் புகுந்து ஒருவாறு பொருள் காண்டற்கு உறுதுணையாக உள்ளதாயினும் வேண்டிய விரிவுடையதன்று.

பண்டைத் தமிழ் நூல்களை அரிதின் முயன்று வெளியிட்டு எங்கட்குதவிய தாதா மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் செய்த குறிப்புரை மிகவும் சிறப்பாக நூற்பொருளை விளக்குவதாயினும் எல்லார்க்கும் பயன்படத்தக்க விரிவுடையதன்று. சிலகுறிப்புரைகள் ஐயரவர்கள் எழுதியனவோ என்று ஐயுறத்தக்கனவாயுள்ளன.

திருவாளர் ஔவை. துரைசாமிப்பிள்ளை அவர்கள் செய்த விரிவுரை மிகவும் தெளிவாக நூற்பொருளை விளக்கி எல்லார்க்கும் பயன்படத்தக்க வகையில் அமைந்துள்ளதாயினும் பதிகங்களின் பொருளொருமை காண்டற்கு உறுதுணையாகாது ஆராய்ச்சிக்கு இடமாயுள்ள அப்பகுதி தவிர்க்கப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை என்பவற்றின் ஆசிரியரும் எனது அரும்பெறல் அன்பரும் ஆகிய திருவாளர் பண்டிதர்-சுவாமி அருளம்பலவனூர் அவர்கள் பலகாலமாக அரிதின் முயன்று தாமெழுதிய பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையின் ஒரு பகுதியைச் சிலகாலத்துக்குமுன் வெளியிட்டனர். அது பரந்துபட்டுச் சென்றமையால் அம்முறையில் நூல்முழுவதையும் வெளியிடுதல் முடியாதாயிற்று.

பின்னர் ஆராய்ச்சியுரையைப் பதவுரை முடிவு ஆராய்ச்சியுரை ஒப்புமைப்பகுதி என வகைப்படுத்திச் சுருக்கிப் பழைய உரையையும் தனியாகச் சேர்த்து இப்போது முதற்பாதியை வெளியிட்டுள்ளனர். இதிலும் ஆராய்ச்சிப் பகுதியும் ஒப்புமைப் பகுதியும் விரிவாகவேயுள்ளன.

இவ்விரிவுரை பதிற்றுப்பத்து முழுவதையும் தெளிவாக அறிதற்கேற்றதாகவுள்ளது. இடர்ப்பாட்டுக்கிடனாய்த் தெளிவின்றி வரலாறு முரண்படுவனவாயுள்ள பகுதிகளையெல்லாம் இனிது விளக்குகின்றது.

உதாரணமாக 12-ம் பாட்டு 8–10. "மறம் வீங்கு பல்புகழ் கேட்டற்கினிது; நின் செல்வம் 'கேட்டொறும் காண்டல் விருப்பொடு" என்னும் பகுதிக்கு 'மறப்புகழைக் கேட்குந்தோறும் அமர்கடந்துபெற்ற பெருஞ்செல்வமுடையானென்பதுமறியப்படுதலின் மறம்வீங்கு 'பல்புகழ் கேட்டற்கினிது' எனவும், கேட்டொறும் அச்செல்வமெல்லாவற்றையும் வானநாண வரையாதீயும் சேரன்பாற் சென்றால் பெறலாம் என்னும் எண்ணத்தால் பரிசில் வாழ்க்கைப் பரிசிலர்க்கு அவனைக் காண்டற்கு விருப்புண்டாதலின் செல்வம் கேட்டொறும் காண்டல் விருப்பொடு' எனவும் காரணகாரிய முறைமை காட்டியுரைத்துள்ளமை நயக்கத்தக்கது.

19: 7. "மண்ணுறு முரசம்" என்பதற்கு நீராட்டப்பெற்ற என்ற குறிப்புரை கொள்ளாது இன்னொலியாக இமிழ்தற் பொருட்டு மார்ச்சனையமைக்கப்பட்ட முரசென உரைத்தமை பொருணயமுடையது.

21: 8-10. "வருநர் வரையார் வாரவேண்டி, விருந்துகண்மாறு துணீஇய பாசவர், ஊனத் தழித்த வாணிணக் கொழுங்குறை" என்பதில் வேண்டி, உணீஇய என்னுமெச்சங்களைப் பாசவர்க்கேற்றிப் பிறர் கூறுமாறு கூறாது பாட்டுடைத் தலைவற்கேற்றிப், பாசவரைக் கொழுங்குறைக்கு விசேடணமாக்கி உரைத்திருக்கும் நயம் மிகவும் பாராட்டத்தக்கது.

21: 17. "மாரியங்கள்ளின் போர்வல் யானை" என்பதற்குக் கள்ளினுற் போரில் வல்ல யானை' என்று உரைகாரர் கூறியது கொள்ளாது 'கள்ளினையும் யானையையும் உடைய மண்படுமார்ப' என உரைத்திருப்பது மெச்சத்தக்கது.

**22: 14.** கயிறு குறுமுகவை என்பதில் 'தன்னால் வாங்கப்படும் நீர் பெரிதன்றி, தன் கயிறே பெரிதாக வாங்கப்படும் முகவை' என உரைசெய்திருத்தல் வன்னிலமாகிய கொங்கர்நாட்டின் இயல்புக்கும் கூவல்கள் ஆழமாய் சிறிதளவான நீரையுடையனவாய் இருப்பதற்கும் பொருந்துவதாகும். பத்தல் யாதென விளக்கியிருப்பதும் இன்றியமையாதது. கூவலில் நீர் முகக்கும் முகவைகள் கயிற்றால் வாங்கப்படுவனவாகவும் கயிறுகுறுமுகவை என அடைகொடுத்து நீர்வாங்கும் முகவையன்றிக் கயிறு வாங்கும் முகவையென, வாங்கியெடுக்கும் நீர் சிறிதாக வாங்குங் கயிறே பெரிதாக அமைதலாற்போலும்.

**24: 18-22.** "உண்மருந் தின்மரும் வரைகோளறியாது, குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றோ, றடைச்சேம் பெழுந்த ஆடுறு மடாவின், எஃகுறச் சிவந்த ஊனத்தியாவரும், கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி" என்னும் பகுதிக்குப் பிறர் பிறவாறுரைக்க, 'உண்பாரையும் தின்பாரையும் வரைந்து கொள்ளுதலை அறியாமல் (என்றது இவ்வளவினரென அறியாமல்) சோறு இடுதற்கு வேண்டியநெல்லை ஓயாது குற்றுதலால் ஒலித்தலையுடைய பூண் மழுகிய உலக்கையையுடைய இடங்கள்தொறும் சேம்பின் இலையைப் போல எழுந்த அடுதல்பொருந்திய மடாவின், அரிவாள் படுதலால் இரத்தத்தாற் சிவந்த இறைச்சிகளையுடைய (என்றது சிவந்த இறைச்சியைச் சேர்த்துச் சமைத்த) யாவரும் கண்டு மதிமருளுதற்குக் காரணமாகிய குறையாத சோறு, என உரைசெய்திருப்பது பொருளை இனிது விளக்கும் நயமுடையது. அடைச்சேம்பெழுந்த என்றது அடர்ச்செம்பெழுந்த என்னும் பாடம் திரிந்ததோவென எண்ண இடமுண்டு. அங்ஙனமாயின் செம்புத் தகட்டாற் செய்யப்பட்டு உயர்ந்த மடா என உரைக்கலாம்.

**26: 4-5.** "ஆங்குப் பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின், நோகோ யானே நோதக வருமே" என்னும் பகுதிக்கு அவ்விடத்தின் செழுமையான வளத்தை முன்பு நன்றாகக் கண்டறிந்தவர் (நொதுமலர்) நினைப்பின் நெஞ்சு வருந்தவேண்டிவரும்; யான் நோகக்கடவேனோ (நோகேன்) என உரைசெய்திருத்தலும் அப்பகுதிக்கு எழுதிய ஆராய்ச்சியுரையும் பொருட்சுவை மிக்கன. இங்ஙனமே இவ்வாராய்ச்சியுரையில் அநேக நயங்களுள்ளன. அன்றியும் பதிகங்களில் வரலாற்று முரண்பாடு உள்ள பகுதிகளுக்கும் மேற்கோளுடன் நல்லுரை கண்டிருப்பது போற்றத்தக்கது.

**ஆகவே இந்தப் பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரையினைத் தமிழ் கூறும் நல்லுலகம் உவந்தேற்று உரையாசிரியரை மற்றைப் பாகத்தையும் வெளியிடுவதற்கு ஊக்குவிக்குமாக.**

---

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்

## வித்துவான் திரு. மு. அருணாசலம்பிள்ளையவர்கள்

எழுதியது

---

சங்கம் மருவிய தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தென்பது சொற்செறிவும் பொருட்பொலிவும் அருஞ்சொற்களும் ஆழ்ந்த கருத்துக்களும் ஓசையினிமையும் உடையதொரு சிறந்த நூலாகும். பண்டைச் சேர வேந்தர்களின் வரலாறுகளை அறிதற்கு இந்நூல் பெரிதுந் துணை புரிவது. இதன்கட் பல சேர மன்னர்களுடைய போர்ச்செயல்கள் வென்றிச் சிறப்புக்கள் ஆட்சிமுறைமை கொடைத்திறங்கள் அன்பின் இயைந்த ஒழுகலாறுகள் ஆகியவை நன்கு கூறப்பட்டுள்ளன. இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. ஆயினும் அதன் துணைகொண்டு பாடல்களின் பொருளையறிதல் கற்றுவல்லார்க்கே இயல்வதாயிருந்தது. அதனால் கற்கப்புகும் மாணவர்களும் எளிதிற் சுவையுணர்ந்து படித்து இன்புறுதற்குப் பதவுரை முதலியவற்றுடன் கூடிய தெளிவானதோர் உரை வேண்டுமெனப் பலரும் எண்ணினர். இவ்வெண்ணத்தை நிறைவேற்றுதற்கு முன்வந்த புலவர்களில் **பண்டிதர் திரு. சு. அருளம்பலவனாரும்** ஒருவராவர்.

நண்பர் அருளம்பலவனாருடைய உரையானது **பதவுரை வினை முடிபுகள் இலக்கணக் குறிப்புக்கள் கருத்துரை ஒப்புமைப்பகுதிகள்** என்ற முறையில் அமைந்துள்ளது. எளிமையும் தெளிவும் இவ்வுரையில் இடம்பெற்றுள்ளன. **தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம் திருக்கோவையார் சிந்தாமணி** முதலான பழம்பெரு நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் இவருக்குள்ள பயிற்சி மிகுதியையும் புலமைத் திறத்தையும் இவ்வுரை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இவ்வுரையினை எழுதி முடித்தற்கு நண்பர் அருளம்பலவனார் பல ஆண்டுகள் இடையறாது உழைத்திருப்பர் என்பதில் ஐயம் இல்லை. இந்நாலுக்கு எழுதப்பட்டுள்ள **பழைய உரை** முழுதும் உள்ளவாறே காட்டப்பெற்றிருப்பது இப்பதிப்பிற் காணப்படும் ஓர் விசேடமாகும். இஃது இரண்டுரைகளையும் ஒப்புநோக்கியறிதற்கு உதவுகின்றது.

பதிற்றுப்பத்தில் இப்போது கிடைத்துள்ள எண்பது பாட்டல்களுக்கும் இவர் பல்லாண்டுகளுக்கு முன்பே உரையெழுதி முடித்துள்ளாராயினும் முதலிலுள்ள நாற்பது பாடல்களுக்கு எழுதிய உரையே இப்போது வெளிவந்துள்ளது: எஞ்சிய பகுதியும் விரைவில் வெளிவரல் வேண்டும்.

நண்பர் அருளம்பலவனாருடைய உரைச் சிறப்புக்கள்பற்றி எழுதப் புகின் மிகவும் விரியுமாதலின் அதனை விடுத்து, இவர் பழையவுரையினையே பெரிதும் பின்பற்றிச் செல்கின்றார் என்பதனைச் சில எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக இனிக் காண்போம்.

"கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" (செய் 11)

என்றவிடத்து ஆரியராவார் இமயத்தின்கண் வாழும் அருந்தவ முனிவர்கள் எனவும், நிறைமொழி மாந்தராகிய அவரது ஆணையால் ஆண்டுவாழும் கவரி மான்கள் கவலையின்றியுறங்கிக் கனவுகாணும் எனவுங் கொண்டு இவர் பொருள் எழுதியிருப்பது பழையவுரையைத் தழுவியதாகும்.

இமயத்தில் முனிவர்கள் உறையும் செய்தி கண்ணகியின் படிவஞ் சமைத்தற்குக் கற்கொணரச் செல்லும் சேரன் செங்குட்டுவனைக் கண்டு ஆங்கிருந்து வந்த அருந்தவர்கள் கூறியதாலும் "பொதியிலாயினும் இமயமாயினும் ...ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்" என்பதனாலும் அறியப்படும். மேலும், அத்தகைய முனிவர்கள் உறையுமிடங்களைச் சார்ந்து ஒன்றற்கொன்று பகைமையான விலங்குகளும் தம் பகைமை மறந்து ஒருங்கு துயில் கொள்ளுதலும் வேழம் போன்ற பெருவிலங்குகள் அவர்கட்கு வேண்டும் பணிசெய்தலும் உண்டு என்பது,

> "கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
> மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
> செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
> களிறுதரு விறகின் வேட்கும்
> ஒளிறிலங் கருவிய மலை" (பெரும்பாண்) 496-500)

எனத் திருவேங்கடமலை சிறப்பிக்கப்பெற்றிருத்தலாலும் தெரிகின்றது. ஆதலால் பழையவுரையும் அதனைத் தழுவி இவர் எழுதியிருப்பதும் பொருத்தமே யென எண்ணுகின்றேன்.

ஆயின், **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்** வடவாரிய மன்னரை வணங்கிய செய்தி ஈண்டுக் குறிப்பிட்டிருப்பதாகக் கொள்ளலாமெனின், இமயம் குமரி என்னும் அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட மன்னர்களில் தம்மை மீக்கூறுவோருடைய மறந்தபக் கடந்து என்றதனால் மீக்கூறிய ஏனைய மன்னர்களைப்போல ஆரியரையும் மறந்தபக் கடந்தான் என்பது பெறப்படுதலாலும் வடக்குந் தெற்குமாகிய இருபேரெல்லைகளைக் கூற வந்தவிடத்து வடக்கின் கண்ணதாகிய இமயம் இத்தன்மைத்து என அதன் இயல்பு கூறுதலே ஆசிரியர் குமட்டூர்க் கண்ணனார் கருத்தாகலானும் 'ஆசிரியர் துவன்றிய பேரிசையிமயம்' என்ற சொற்றொடர் சேரலாதன் ஆரியரை வென்ற செய்தியுங் கூறப்பட்டிருப்பதாகப் பொருள் கொள்ளுதற்கு இடந்தராமையாலும் அது பொருந்தாது. இவற்றை உட்கொண்டே பழையவுரைகாரரும் நண்பர் அருளம்பலவனாரும் அங்ஙனம் பொருள் கூறாது விடுத்தனர்போலும்.

'பலர்புகழ் செல்வம் இனிதுகண்டிகுமே' (செய்யுள் **11**) என்ற பகுதிக்கு இவர் எழுதிய விளக்கவுரையில்,

'செல்வம் என்றது மன்மீக்கூறுநர் மறந்தபக்கடந்த செல்வத்தை: இதுவே பழைய உரைகாரர் கருத்துமாதல் 'இதனாற் சொல்லியது அவன் வென்றிச் செல்வச் சிறப்புக் கூறியவாறாயிற்று' என அவர் கூறுமாற்றான் அறியப்படும். என்று எழுதி வெற்றியைச் செல்வம் என்று கூறுதற்கு **அகநானூற்றி**லிருந்து மேற்கோளுங் காட்டித் தங்கொள்கையை நிறுவியுள்ளார். இதனால் வெற்

றிச் செல்வச் சிறப்பு என்ற தொடர்க்கு வெற்றியாகிய செல்வத்தின் சிறப்பு எனப் பொருள்கொள்ளவேண்டுமன்றி வெற்றிச் சிறப்பும் செல்வச் சிறப்பும் எனப் பொருள்கோடல் பொருந்தாது என அருளம்பலவனுர் கருதுகின்ருரென்று தெரிகின்றது.

ஒருபாட்டிற் கூறப்படும் கருத்துக்கள் இரண்டாக இருப்பின் 'அவன் வென்றிச் சிறப்பும் அவனது ஓலக்கச் சிறப்பும் உடன்கூறியவாருயிற்று' என அவ்விரண்டனையும் தனித்தனியே பிரித்து எண்ணும்மை கொடுத்து எழுதுதலும், கருத்து ஒன்ருக இருப்பின் 'அவன் கொடைச்சிறப்புக் கூறியவாருயிற்று' என ஒரே தொடராக எழுதுதலும் பழையவுரைகாரர் கைக்கொண்ட முறையாகும். அம்முறையுடன் முரணுதவாறு வெற்றியாகிய செல்வத்தின் சிறப்பு என அவர் விளக்கங் கூறியிருப்பது நினைக்கத்தக்கதாகும்.

"ஏறு பொருத செறு உழாது வித்துநவும்" (செய்யுள் 13) என்ற தொடருக்கு எருமையேறுகள் ஒன்ருேடொன்று பொருதலால் சேறுபட்ட வயல்களாகிய உழாது விதைக்கும் இடங்களும் என்ற பொருள்பட இவர் உரையெழுதியுள்ளார். இது 'பொருத' என்றும் 'செறு' என்றுங் கூறப்பட்டுள்ள சொற்களுக்கு ஏற்ற உரையாகும். மேலும் இப்பாட்டில் வந்துள்ள 'புனல் வாயில்' என்பதற்கு 'வாய்த்தலை' எனப் பொருள் கூறி வாய்த்தலை வேறு வாய்க்கால்வேறு என விளக்கியிருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்ஙனம் பல இடங்கள் எடுத்துக்காட்டலாமாயினும் இவ்வளவில் நிறுத்துகின்றேன். பழமையானதொரு நூலுக்கு எழுதப்பெறும் உரைகளில் கருத்து வேறுபாடுகள் இருத்தல் கூடும். அதுபற்றி அவ்வுரைகளைக் குறைத்து மதிக்காமல் வரவேற்றல்வேண்டும்.

''பூத்த நெய்தல்'' என்னும் பதின்மூன்ரும் பாட்டின் பழையவுரையில் 'நெய்தல் எருமையின் நிரைதடுக்குநவும் என்றது, நெய்தலானது அக்கரும்பு முதலாய மற்ருேரிரையின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போதவுண்ட எருமை நிரையைத் தடுக்கும் இடங்களும் என்றவாறு. இச்சிறப்பானே இதற்குப் பூத்தநெய்தல் என்று பெயராயிற்று' என விளக்கம் எழுதப்பட்டுள்ளது. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பிலும் இப்பகுதி இவ்வாறேயுள்ளது.

'இதன்கண் 'தான் போதவுண்ட' என்ற தொடர் பொருத்தமில்லாமற் காணப்படுகின்றது. இது 'தான் போதவிழ்ந்து என முன்பு எழுதப்பட்டிருந்து பிற்காலத்து ஏடெழுதுவோர் முதலாஞேரால் 'தான் போதவுண்ட' எனப் பிறழ எழுதப்பட்டிருக்கலாமென எண்ணுகிறேன்.* 'தான் போதவிழ்ந்து' (தான்-அது; அந்நெய்தல், போதவிழ்ந்து-பூத்து) என இருப்பின் பொருளும் பொருத்தமும் உடையதாய் அமையும். இதனை நண்பர் அருளம்பலவனுரும் ஏனைய அறிஞர்களும ஆராய வேண்டுகிறேன்.

இங்ஙனம் அரிதின் முயன்று ஆராய்ந்து உரையெழுதித் தம் கைப்பொருள்கொண்டு அச்சிட்டு இந்நூலை வெளிப்படுத்திய நண்பன் அருளம்பலவனுரைத் தமிழுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. **பல்கலைக்கழகப்**

**பாடத்திட்டக் குழுவினர் இவ்வுரையுடன் கூடிய நூலைத் தமிழ் மேல் வகுப்புக்குப் பாடமாக வைப்பராயின்** அதனால் இவர்பெறும் ஊதியம் பெரிதாகாதெனி னும் இவரை ஒருவகையிற் பெருமைப்படுத்தியதாகும். மேலும் இத்துறை யிற் செல்லுமாறு ஊக்கம் ஊட்டியதுடன் இதன் தொடர்பாக எஞ்சியுள்ள பிற்பகுதி வெளிவருதற்கு அது ஓரளவு உதவியாகவும் இருக்கும்.

தமிழ்மாணவர் ஒவ்வொருவரும் இவ்வுரையுடன் கூடிய பதிற்றுப்பத் தில் ஒவ்வொருபடி வாங்கிப்படிப்பராயின் அதுவே இவர்க்குச் செய்யுங் கைம் மாறாகும்.

திரு. அருளம்பலவனார் வாழ்க. அவரது முயற்சி வெல்க.

---

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்விரிவுரையாளர்,*

*சித்தாந்தப்பேராசிரியர், விரிநூற்புலவர், உரைவளம்*

## மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகரவர்கள்

எழுதியது.

பதிற்றுப்பத்து எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. விழுமியநடை பழு நியசொல் கருத்தாழம் தன்மையொடு மரீஇய கற்பனைத்திறம் வரலாற்று நுணுக்கம் முதலிய பல்லாற்றானும் பழமையும் செறிவும் உடையது. புல வர்கள் புலத்தாழம் காணும் அளவுகோலாக அமைந்தது. சேரமன்னர் எண்மருடைய மரபு மாண்பு வீரம் வெற்றி கொடை முதலிய வாழ்க்கை வரலாற்றை ஒருசேர அறிந்துகொள்வதற்குப் பெருந்துணையாவது. பாடாண்திணை ஒன்றையே கூறும் நூறு பாடல்களையுடையது என நச்சினார்க் கினியர் கூறுவர்.

வரலாற்றுக்கருவூலமாகிய இந்நூலின் கருத்தாழத்தை அறியப் பரந்து பட்ட சங்க இலக்கிய அறிவும் தமிழக வரலாற்று நுண்மதியும் மிகமிக இன்றி யமையாதன. இதற்கு ஊன்றுகோலாக மிகப் பழமையான அரும்பதவுரை ஒன்று உள்ளது. அது அரும்பதக் குறிப்புமாகாமல் பொழிப்புரையுமாகா மல் தேவையான இடங்களுக்குச் சொன்னயமும் பொருளும் இலக்கணக் குறிப்பும் தந்து செல்கிறது.

இந்நூலை முதற்கண் பதிப்பித்த என் ஆசிரியப் பெருந்தகை **மகாமகோ பாத்தியாய ஐயர்** அவர்களின் முற்சேர்க்கையும் பிற்சேர்க்கையும் அடிக்குறிப் பும் ஒப்புமைப் பகுதிகளும் பாடற்பொருளை அறிதற்குப் பெரிதும் துணை செய்வன. ஆனாலும் தொடர்புறுத்திப் பொருளுணரும் வகையில் எல்லாருக் கும் இடர்ப்பாடு இருந்துகொண்டுதான் இருந்தது.

அடியேன், **வித்துவான் புலவர் B. O L; M. A.** மாணவர்கட்குப் பாடம்சொல்ல நேர்ந்தபோது யான் ஐயரவர்களிடம் கேட்டறிந்த காலத் தைக்காட்டிலும் சொற்றொடர்பு கண்டு பொருளமைதி கொண்டு ஆய்ந்து

ணர்ந்து அறிவிக்கமாட்டாமையால் சிற்சில இடங்களில் இடர்ப்படநேர்ந்ததும் உண்டு. அதனை ஐயரவர்களுடைய வழிவழிப் பதிப்புக்களும் பின்னெழுந்த சேரர் வரலாற்று நூல்களும் செந்தமிழ்க் கட்டுரைகளும் பிறநூற் பதிப்புக்களில் எடுத்தாண்டுதவிய விளக்கங்களும் மாருதி தேடித்தந்த மருத்து மலையாகப் பயன்பட்டன. ஆனாலும் இந்நூலுக்குச் சிறந்த விருத்தியுரையில்லையே என்ற குறை இடைக்கிடை தோன்றிக்கொண்டுதான் இருந்தது. இந்நிலையில் எங்கள் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பணிபுரிந்த வித்துவான் சித்தாந்தகலாநிதி உயர்திரு ஒளவை. துரைசாமிப்பிள்ளையவர்கள் தக்கதோருரை தந்தார்கள்.

இதுபோழ்து, நுண்மாண் நுழைபுலமும் சங்க இலக்கியங்களில் முறையான பயிற்சியும் பழையவுரையாசிரியர்கள்பால் மாறாத பற்றும் புலவரைப் போற்றும் பண்பும் செருக்கற்ற சிந்தையும் உடைய அன்பர், யாழ்ப்பாணம் காரைநகர் பண்டித அருளம்பலவனார் அவர்கள் சிறந்தவுரையைச் செந்தமிழுலகிற்கு அளிக்கின்றார்கள்.

பொதுவாக நூல்களுக்குத் தாம்பெற்ற பலதுறையறிவைப் பலரும் கண்டு மதிக்க எழுந்தவுரைகளும், படிப்பார் தகுதியறிந்து அவர்கட்குத் தேவையான அறிவுவேட்கையையகற்றும் உரைகளும், பலர்கண்ட நுணுக்கங்களைத் தமவாக்கிக்கொள்ள பொருளீட்ட பதவுரையைப் பொழிப்புரையாக்கிப் பொழிப்புரையைப் பதவுரையாக்கி எழுந்தவுரைகளும், எடுத்த நூற் கருத்தொடு ஒட்டியவாக எட்டப்பறந்து சென்று படிப்பவர்களைக் கண்காணாத் தூரம் இழுத்துச் சென்று மயங்கவைக்கும் உரைகளும் ஆகப் பலவகை உரைகள் எழுந்தன. அவை போலாது இந்நூலுரை நூலெழுந்தகாலத்துப் பழமையோடு ஒன்றத் தேவைக்கு வேண்டிய அளவு தன்னுரையானும் பிறநூலானும் கருத்தை விளக்கிச் செல்கின்றது.

இவ்வுரையாசிரியர் தாம் இடர்ப்பட்ட இடத்தும் தமது விளக்கத்தைப் புகுத்தக்கருதிய இடத்தும் பாடத்தைத் தம் விருப்பம்போல மாற்றிக்கொள்ளாமல் மரபுவழிவந்த பாடப்போக்கிலேயே இவ்வுரையை நடத்திச்செல்வது இவரது நாணயத்திற்கு நல்ல எடுத்துக் காட்டு.

இவ்வுரை ஒவ்வொரு பாடலுக்கும் **பதவுரை முடிபு ஆராய்ச்சியுரை பழையவுரை ஒப்புமைப்பகுதி மேற்கோள்** என்ற ஆறுபிரிவாக எழுதப் பெற்றுள்ளது. பழையவுரை தந்த வளர்ச்சியே தம்முரையென்பதைப் பலவிடங்களில் படிப்போருக்கு வற்புறுத்திச் செல்கின்றது.

பதவுரை மாற்றுச்சொல்லாகமட்டும் அமையாமல் கருத்தறிய உதவும் வழக்குச் சொல்லால் தேவைக்குமிகாமல் உருபு முதலியவற்றை வேண்டியவிடத்து விரித்து மரபு பிழையாது விளக்கமாக அமைந்திருக்கிறது.

முடிபு பாடத்திற் கருத்தைத் தொகுத்துணர உதவும் திறவுகோல். இதில் எங்கேயாவது தேய்வு வளைவு ஒடிவு பிசிர் இருக்குமாயின் பாட்டுப் பூட்டுத் திறக்காது. இதனை நன்றாக மனத்திருத்தி உரையாசிரியர் முடிபுகளைத் தொகுத்திருக்கிறார்.

உண்மை காணவும் உறுதியான அறிவு பெறவும் உதவுவது ஆராய்ச்சி. எடுத்த கருத்து மணிகள் ஆராய்ச்சிச் சாணையிற் றீட்டப்பட்டாலல்லது ஒளிராது. ஆகையால் இவ்வுரையாசிரியர் தம் கருத்துக்கொத்த – வலியுறுத்தக் கூடிய விளக்கங்களைப் பலநூல்களினின்றுந் தந்து செல்வது மிக உயர்ந்த முயற்சியாகும்.

பழையவுரை பழம் பதிப்புக்களிலுள்ளபடியே திருத்தமாகக் கொடுக்கப் பெற்றுள்ளது. புதியவுரையின் விரிவும் நயமும் உணரத் துணைசெய்கின்றது.

சற்றேறக்குறைய காலத்தால் ஒத்த சங்க இலக்கியங்களில் இந்நூற் கருத்துக்களும் சொற்றொடர்களும் எங்ஙனம் பரந்து வேரூன்றியுள்ளன என்பதை அறியவும் அக்காலத்து மரபுகளைத் தொகுத்துணரவும் பொருள்கொள்ளும்வகையில் துணிவு பிறக்கவும் ஒப்புமைப்பகுதிகள் மிக இன்றியமையாதன. இதனை நன்கெழுதவேண்டுமாயின் பரந்த சங்க இலக்கிய அறிவும் உரையாசிரியர்களின் நுணுக்கமான உரைகளில் நினைவு வன்மையும் பெரிதும் தேவை. அவற்றில் இவ்வுரையாசிரியர் முழுவெற்றியுடன் விளங்குகின்றார் என்பதை இவ்வுரை தெளிவாகக் காட்டுகின்றது.

இலக்கணவுரையாசிரியர்கள் தமதுரைகளில் ஆங்காங்கு எடுத்தாண்ட பகுதிகளை ஆங்காங்கே காட்டியிருப்பது உண்மையுணரப் பெரிதும் உபகாரப்படுகிறது.

இவ்வண்ணம் அமைந்த இவ்வுரைப்படைப்பு பல்லாற்றானும் அறிஞர் உலகிற்கு நல்விருந்தாகும். ஆதலால் இவ்வுரையை நன்குசுச் சுவைத்து ஒருசில குறிப்புக்களைத் தொகுத்து நோக்குவோம்

'புண்ணுமிழ் குருதி'யுள் அணங்குடையவுணர் ஏமம் புணர்க்கும் என்ற பகுதிக்கு இதுவரை யாம் கண்டவுரைகள் 'பிறரை வருத்துதலை இயல்பாக வுடைய அவுணர்கள்' என விளக்கந்தந்தன. இவ்வுரைகாரர் ஏமம் புணர்க்கும் எனப் பின் வருதலைச் சிந்தித்து அணங்குடை யவுணர் என்பதற்கு 'பிறரை வருத்துதலையியல்பாகவுடைய அவுணராயிருந்தும் அப்பொழுது தாம் வருந்துதலைவுடையராயிருந்த அவுணர்' எனவுரைகண்டது நயம் பயப்பதொன்றாகும். இப் பகுதிக்குத் தம் கருத்திற்கு அரண்செய்ய "கொள்ளாத் தெவ்வர் கொண்மா" என்ற பரிபாடற் பகுதியையும் அதன் உரைக் குறிப்பையும் காட்டியிருப்பது ஆழமும் விளக்கமும் தெளிவும் தருவதாகும்.

இன்னும் இப்பாடலில் "ஆரியர் துவன்றிய பேரிசையிமயம்" என்ற பகுதிக்கு, தவமுனிவர்கள் நெருங்கிய இமயம் என்றும், அவர்கள் ஆணைப் படி இமயத்தில் அனைத்தும் நடக்கின்றன என்றும் உரையும் விளக்கமும் தந்திருப்பது இலக்கியவுலகில் சாதிக்காழ்ப்பிற்கு இடனின்றி எழுந்த உரையாகும்.

"மறம்வீங்கு பல்புகழில்" 'வாளரில் மயக்கி' என்ற பகுதிக்கு 'வாட் பிணக்கம் உண்டாகப் போர் செய்து' எனப் பொருள்கொண்டு அதற்கு மேற்கோளும் விளக்கமும் பிறவுரைகளோடு ஒப்பிட்டுச் சிறந்தனகொள்ள வைத்த பெருமை பாராட்டுக்குரியது.

"துயிலின் பாயலுள்" கணையமரங்களையும் காவல் மரங்களையும் கதவங்களையும் குத்தி நுதி மழுங்கிய கொம்பினையுடைய யானைகள் பன்றி போன்றனவாய்ப் பாசறைக்கண் முழங்கின என அறிவிக்கும் போது வரும் 'மரங்கொல் மழகளிறு முழங்கும் பாசறை' என்ற அடிக்கு நுதி மழுங்கியதற்கு ஏதுவாகிய பகைவர் நாட்டு மரங்களையு கதவங்களையும் விட்டு தாம் கட்டப்பெற்றிருக்கும் கட்டுத் தறிகளையே இப்பொழுது அழிக்கின்றன எனப் பொருள் தந்தமை மிகவும் இன்பம் பயப்பது. பாசறைக்கண் கதவமும் காவன் மரமும் கணையமும் ஏது, கட்டிய கட்டுத்தறியொன்றே இருக்கும். அதனைச் சாடுகின்றது யானை என்ற பொருளே சாலச் சிறத்தல் தெளிக.

"நிரையவெள்ளத்துள்" தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பொன்றைக் காண்கின்றோம். அங்கு ஆள்வழக்கற்றமையால் வேளைக்கீரை முளைத்திருக்கிறது. சுரைபடர்ந்திருக்கிறது. பீர்க்கங்கொடிகள் கூரைகளின்மேற் படர்ந்துள்ளன. நீரற்ற சாலில் செங்காந்தள் அடிசிவந்து உலர்ந்திருக்கிறது என்று அறிவிக்க வந்தவர் "நீரறு நிறைமுதற் சிவந்த காந்தண் முதல்சிதை மூதில்" என்கிறார். இதில் நிறை என்பதற்குச் சிலர் உழுசால் என உரைகண்டனர். இவ்வுரையாசிரியர் நீர்ச்சால் என உரைகொண்டிருக்கிறார். 'நிறைஇ' என்று வினைமுதற் பொருளைத் தரும் இகர விகுதி புணர்ந்து கெட்டு நிறை என நின்று நிறைதலையுடையது என்னும் பொருள் படுவது. இது நீர்ச்சாலையுணர்த்துமேயன்றி உழுசாலையுணர்த்தாது வீட்டுக்கொல்லையில் நீர் தேங்கும் உழுசாலுக்கு இடமின்று. அதுவும் போரில் அழிந்துபட்ட ஆளற்ற ஊரில். ஆதலால் நீர்ச்சாலாகிய தாழியெனப் பொருள் கோடலே பொருந்துவதாம். திவாகரம் முதலிய நிகண்டுகளும் "கலம் நிறை பொழிதர" என்ற சீவகசிந்தாமணி 69-ம் பாடற் பகுதிக்கு நச்சினார்க்கினியர் நல்கிய உரையும் "தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்தி" "தாழிநறுங் குவளை" முதலிய எடுத்துக்காட்டுக்களும் இக்கருத்துக்குத் தக்க துணையாம். இவ்வண்ணம் ஆய்ந்துணர்ந்தெழுதிய உரைப்பகுதிகள் பல.

"ஓம்பா ஈகையின் வண்மகிழ் சுரந்து" (42: 13) என்ற பகுதிக்குக் களம்பாடும் பொருநர் பாணர் முதலியோர்க்குச் சுரந்து எனப் பொருள் கோடல் இயையாமையைக் காட்டும் ஏதுக்களும், "மகளிர் .... விருந்தின்வீவ் பிடி எண்ணுமுறை பெறுஅ" (43:2-5) என்பதற்குக் காட்டியானை விரும்பும் பிடியெனல் பொருந்தாது. தம் நடையொடு ஒத்தலின் பெண்கள் விரும்பும் பிடி' எனலே பொருந்தும் எனக் காட்டும் மறுப்புரையும், 'ஆர்கலிவானம்' (43: 18) என்பதற்கு முழக்கத்தையுடைய மேகம் எனப் பொருள் கோடலே பொருந்துவதாம் என்ற விளக்கமும் மிக இன்பம் பயப்பன.

இன்னும் பல நயங்களும் உரை நுணுக்கங்களும் மிளிர்கின்றனவாயினும் ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதமாக (தாலி புலாக நியாயமாக) சிலவே எடுத்துக்காட்டினோம். ஆகவே இப் புதியவுரை ஏனையவுரைகளைக் காட்டினும் பல்லாற்றானும் சிறப்பெய்தி விளங்குகின்றதெனலாம்.

இவ்வண்ணம் பதிற்றுப்பத்துக்குச் சிறந்தவுரையெழுதிச் செந்தமிழுக்குச் சிறப்புத்தந்த ஞானச் செல்வம் அருளம்பலவனூர் அவர்களுக்கு எல்லா நலனும் தந்து இனிது காக்க என ஞானமா நடராசப் பெருமான் திருவடியிணையைப் போற்றுகின்றேன்.

யாழ்ப்பாணத்துப் புன்னாலைக்கட்டுவன்

## மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

எழுதியது.

பதிற்றுப் பத்து என்னுஞ் சங்கநூலின் இரண்டாம் பத்திற்கு, காரைநகர், பண்டிதர் அருளம்பலமவர்கள் ஒரு ஆராய்ச்சியுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இப்பதிற்றுப்பத்திற்குப் பழையவுரை ஒன்றும் ஸ்ரீமாந், ஒளவை துரைசாமிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட புத்துரையொன்றும் உளவாயினும், பண்டிதர் அவர்கள் பலநூற் பிரமாணங்களோடு விரிவான ஆராய்ச்சியுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். பல இடங்களில் அவர்களது உரை முன்னைய புத்துரையினும் சிறப்பாகவே காணப்படுகின்றது ''நின் செல்வங் கேட்டொறும்'' ''மழகளிறரிஞிமி றேரப்பும்'' ''எழுமுடி கெழீஇய அகலம்'' ''வெய்துற வறியா நந்திய வாழ்க்கை'' ''நல்லெழில் நெடும்புதவு'' முதலாய தொடர்களுக்கு எழுதிய உரைக் குறிப்புக்கள் நோக்கத்தக்கன.

இந்த இரண்டாம் பத்தினோடு ஏனைய பத்துக்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தின் படிப்போர்க்கு மிக உபகாரமாயிருக்கும். பண்டிதர் அவர்களுடைய முயற்சியும் அறிவும் மிகவும் போற்றத்தக்கதாகும். பிரமாணங்களைச் சுருக்கிக் காட்டுவது உரைக்குச் சிறப்பாயிருக்கும் என்று எண்ணுகிறேன். தமிழபிமானிகள் இதனை அச்சிடுதற்கு உதவிசெய்வார்களாக.

இராமநாதபுரம்

## ராவ்ஸாஹேப் மு. இராகவையங்கார் அவர்கள்

எழுதியது.

தாங்கள் அனுப்பின **பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை** நூலைப் பார்த்தேன். சொல்லாராய்ச்சி பொருளாராய்ச்சி பழையவுரை என முப்பகுதிகளை ஒவ்வொரு பாடலுங்கொண்டு தங்கள் நூல் விளங்குகின்றது. இவற்றுள் சொல்லாராய்ச்சி சிறிது விரிவுடையதே எனினும் பழையசொல் தொடர்களை முன்னோர் பலரும் ஒருமுகமான பொருணோக்கங்கொண்டு காலவழக்குக்கேற்றவாறு ஆட்சிபுரிந்து வந்தவர்கள் என்பதனை விளக்குவதால் வேண்டத்தக்கதே.

அவ்வாறே பொருளாராய்ச்சியும் வேண்டிய பொருட்கூறுகளையும் வழக்குகளையும் அறிய விளக்குவதோடு கற்றோரும் மற்றோரும் அறிதற்குரிய அரிய செய்திகள் பலவற்றையும் தெரிவிக்கின்றது.

மூன்ருவதான பழையவுரை இவற்றுக்கெல்லாம் மூலமாய் பேருதவி புரிவதாதலாலும் முன்னோர் மொழி பொருளைப் போற்றிக்கொள்ளுதல் நம் கடமையாதலாலும் பெரிதும் வேண்டத்தக்கதேயாம். ஆக் மூவகையிலும் தங்கள் ஆராய்ச்சியுரை இன்பம் பயக்கின்றது. சுருங்கச் சொல்லின் தமிழ்மொழிக்கு ஒரு கருவூலம் போலவும் விளங்குகின்றது தங்கள் நூல் எனலாம்.

---

யாழ்ப்பாணத்துச் சைவாசிரிய கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர்

## பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

எழுதியது.

"நற்றிணை நல்ல குறுந்தொகை" என்ற பாட்டிற் பதிற்றுப்பத்துக்கு 'ஒத்த' என்று ஒரு அடை கொடுக்கப்பட்டிருக்கின்றது. பதிற்றுப் பத்துத் தான் பொருளுக்கொத்த சொற்கள் தொடர்களைச் சிறப்பாக உடையது போலும். "புண்ணுமிழ் குருதி" "மறம் வீங்கு பல்புகழ்" என்றற் ருடக்கத் துத் தொடர்களால் ஒவ்வொரு பாட்டும் பெயரிட்டு வழங்குவதும் இதனை வலிசெய்யலாம்.

கருத்துலகு தடுமாறிச் சொல்லுலகு தளர்ந்துபட்ட இக்காலத்துக்குப் பதிற்றுப் பத்துப் புறம்பானதொரு பாஷையாய்த் தோன்றும். "வரைமருள் புணரி வான்பிசிருடைய" என்று பதிற்றுப் பத்தில் இரண்டாம் பத்துத் தொடங்குகின்றது. முதற் பத்துச் சிதைந்து போயிற்று. தொடங்குகின்ற இந்த அடியில் 'உடைய' என்ற சொன்மாத்திரம் பொருள் புலப்படக்கூடிய தாயிருக்கின்றதெனினும் எது உடைய என்று விசாரிக்கும் வழி அதுவும் மரபு நமக்கெட்டாத கடுஞ்சொல்லாய் விடுகின்றது. பிசிர் என்ற வார்த்தை வித்துவ உலகத்தையே கலக்கிவிடும்.

'மனுக் கலவை' என்ற தொடரை யாராவது முன்பின் கேள்விப்பட்டதுண்டா? இத்தொடரும் இந்த முதற்பாட்டில் வருகின்றது. பதிற்றுப் பத்தின் சொற்ருெடர் மிடுக்கை ஊகிக்க அதன் தொடக்கமே போதுமானது.

இப்படிப்பட்ட பதிற்றுப் பத்துக்குச் சுருக்கமான பழைய குறிப்புரை ஒன்று உண்டு. அது பதிற்றுப்பத்தின் சொன்னயம் பொருணயங்களை நுகர்தற்கு ஒரு சிறிதும் போதாது. பண்டித பரீட்சைக்குப் படிக்கிறவர்கள் குறிப்பிட்ட பகுதியை மனப்பாடஞ்செய்து ஒருவாறு ஒப்பித்து வந்தார்கள். பாரிய மகா வித்துவான்கள் சிரமத்துக்கும் பொருட் செலவுக்கும் அஞ்சி உரை வகுக்கப் பின்னின்ருர்கள். இதனைக் கண்டு சகிக்காத பண்டிதர் திரு. சு. அருளம்பலம் அவர்கள் தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்து பதிற்றுப்பத்தில் வரும் அருஞ்சொற்கள் தொடர்கள் உவமைகள் உயர்ந்த கருத்துக்கள் என்றித் தொடக்கத்தனவற்றுக்கெல்லாம் பண்டைச் சான்ருேர்களின் வாக்குகளில் வழக்காறு காட்டிப் பதவுரை விசேஷவுரைகள் வகுத்து, இனி விரித்தற்கு

இடமின்றி விரித்து பழையவுரையையுந் தந்து, ஒரு அருமந்த உரை இயற்றி யிருக்கின்றார்கள். இவ்வுரையை இயற்றுதற்குத் தொல்காப்பியம் முதலிய பண்டைச் சான்றோர்களின் நூலுரைகளை எத்தனை ஆயிரம்முறை திருப்பித் திருப்பிப் படித்திருப்பார்களோ!

காதற் கதைகளே எழுதிக் குவிக்கின்ற இந்தக்காலத்திலே இந்த உரை அமிர்தத்தின் அருமை அறிந்து ஆசி வழங்குவார் அரியர் ஆயினும், வானுலக வாசியாகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இதனைக் கேள்விப்பட்டுக் காமுற்றுக் கசிந்துருகிக் கண்ணீர்வார ஆசிவழங்குவார்களென்றே நான் நான் கருதுகின்றேன். இவ்வுரையின் அருமை பெருமை சிரமம் முதலியவைகளை அறிந்து மதித்தற்குரியவர்கள் ஐயர் அவர்கள்.

"செயற்கரிய செய்வார் பெரியார்"

---

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர்

## டாக்டர் திரு. மு. வரதராசனார்

M A.; M. O L; PH. D. அவர்கள் எழுதியது.

பதிற்றுப்பத்து—இரண்டாம் பத்தின் ஆராய்ச்சியுரையினைப் படித்து உவந்தேன். உரையாசிரியர் திருவாளர் அருளம்பலம் அவர்களின் இலக்கியப் பயிற்சியும் ஆராய்வுத் திறனும் போற்றற்குரியன. பண்டைய மரபினையுங் காத்து முன்னைய உரையையும் போற்றித் தாம் காணும் புதிய உரைப்பகுதிகளையும் இயைபுபடுத்தி இதனைத் தந்துள்ளார். அடிக்குறிப்பாகவும் மேற்கோளாகவும் அவர் எடுத்துக்காட்டியுள்ள குறிப்புக்கள் எண்ணில. பொறுமை மிக்க உழைப்புத் திறனும் நுண்ணிய ஆராய்ச்சி வன்மையும் விளங்கும் வகையில் ஆங்காங்கு அமைந்துள்ள விளக்கங்கள் பற்பல. இவ்வுரையாசிரியரின் தொண்டு சிறப்புறுக; தொடர்ந்து பெருகி வளமுறுக.

---

சென்னை பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர்

## திரு. அ. மு. பரமசிவானந்தம்

M. A.; M. Litt. அவர்கள் எழுதியது

அன்புடையீர்!

வணக்கம். தாங்கள் அனுப்பிய பதிற்றுப்பத்தின் ஆராய்ச்சியுரை (இரண்டாம் பத்துக்கு உரியது) வரப்பெற்றேன். பத்துப் பாடல்களுக்கும் மிக விரிந்த நிலையில் விளக்கம் காட்டி ஒப்புமைப் பகுதிகளைப் பிற இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டி, பதவுரையும் விளக்கமும் பொருத்தி அமைத்துள்ள தங்களது ஆராய்ச்சி உரை சாலச் சிறந்ததாக உள்ளது. சொல்லுக்குச் சொல் விளக்கம் தரும் வகையில் அவற்றுள் பொதிந்துகிடக்கும் கருத்துக்களைத் துருவி ஆராய்ந்து வெளியிடும்முறை போற்றற்குரியதாகும்.

இதுபோன்ற பிறபகுதிகளுக்கும் உரைவரும் என எண்ணுகின்றேன். தங்கள் பணி தமிழன்னைக்குச் சிறந்த தொண்டாக அமைந்துள்ளது. தங்கள் பணி சிறப்பதாக.

---

சென்னை பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர்

## திரு அ. ச. ஞானசம்பந்தன் M. A. அவர்கள்

எழுதியது

பண்டித அருளம்பலவனாரின் பதிற்றுப்பத்து முதற் பாகத்தின் உரையைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. இன்று பலராலும் விரும்பிக் கற்க முடியாத பழந் தமிழ் நூல்களுள் பதிற்றுப்பத்தும் ஒன்று. காரணம் எளிய உரை ஒன்று இன்மையே. இக்காலம் நல்ல உரைகள் வந்துகொண்டிருக்கின்றன.

அன்பரவர்கள் மிகுந்த உழைப்பை மேற்கொண்டு இதனை எழுதியுள்ளார். ஒவ்வொரு சொல்லுக்கும் சொற்றொடருக்கும் அவர் தருகின்ற மேற்கோளாட்சி அவருடைய பரந்துபட்ட புலமையைக் காட்டுகின்றது. மேலும் ஆராய்ச்சிசெய்ய விழைவோர்க்கு இப்பகுதிகள் பெரும்பயன் விளைக்கும் என்பதில் ஐயம் இல்லை. பதிற்றுப்பத்து மிகவும் காலத்தாற் பிற்பட்ட நூல் என்ற தற்கால ஆராய்ச்சியாளர்க்கு நல்ல மறுப்பாக அமைந்துள்ளன அருளம்பலவனாரின் மேற்கோள்கள். சங்க இலக்கிய மேற்கோள்களையே பெரிதும் காட்டியுள்ளார்.

'நின் செல்வம் கேட்டொறும்' (பக். 37) என்றுள்ள சொற்கட்டு நயம் கூறுவது மிகுதியும் சுவை பயப்பதாகவுளது. அரிதிற் கடப்பதை 'நீந்தி என்று கூறுவர் பழைய இலக்கிய ஆசிரியர். அச் சொல்லின் சுவைப்பாட்டையெல்லாம் நன்கு விளங்கியுள்ளார். "எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து" (பக். 80) என்ற தொடருக்குத் தடைவிடைகளாற் பொருள்கண்டு தம் கருத்தை நிறுவுதல் பழைய உரையாசிரியர்களை நினைவூட்டுகிறது. தம் கருத்துச் செம்மையானதே என்பதை நிறுவப் பழைய இலக்கியங்களிலிருந்தே மேற்கோள் காட்டியுள்ளார் ஆசிரியர்.

எவ்வாற்றான் நோக்கினும் உரையாசிரியர் பெரிதும் பயனுடைய ஒரு செயலைச் செய்தாராயிற்று. காலத்திற்கேற்ற தொண்டு; சிறிதன்று பெரிது. தமிழுலகம் ஏற்றுப் பயனடைவதாக. விரைவில் ஆசிரியர் ஏனைய பத்துக்கட்கும் உரை எழுதி வெளியிடுவாரென எதிர்பார்க்கிறேன்.

---

## சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்
# பேராசிரியர் டாக்டர் திரு. மா இராசமாணிக்கனார்
## M. A.; L. T.; M. O. L., PH. D. அவர்கள் எழுதியது

நம் செந்தமிழ் மொழியில் இற்றைஞான்று கிடைத்திருக்கும் நூல்களுள் மிகத் தொன்மை வாய்ந்தவை எட்டுத்தொகை நூல்களாகும். அந்நூல்களுள் பதிற்றுப் பத்தும் ஒன்றாகும். பத்துப்பத்துப் பகுதிகள் சேர்ந்து அமைந்தமையின் பதிற்றுப்பத்து என்னும் பெயர் இதற்கு வந்தது. இந்நூல் முழுவதும் சேரமன்னர்களைப் பாராட்டுவது. ஒவ்வொரு சேர வேந்தரையும்பற்றித் பத்துப் பத்துப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை வண்ணம் தூக்கு பெயர் முதலியன அமைந்துள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் பொருளாற் சிறப்புடைய தொடரொன்று அவ்வப்பாட்டின் பெயராக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பத்தின் முடிவிலும் அப்பத்தின் பாட்டுடைத் தலைவனுடைய பெயரும் செயல்களும் அவனைப் பாடினோர் பெயரும் பத்துச் செய்யுட்களின் பெயர்களும் பாடிய புலவர் பெற்ற பரிசிலும் சேர அரசர் ஆண்ட கால அளவும் ஒவ்வொரு பதிகத்தாலும் தெரிகின்றன. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்று உண்டு. ஆனால் அவ்வுரை வகுத்த சான்றோரது வரலாறு காலம் முதலியன தெரியவில்லை. இப்பதிற்றுப் பத்து நூலுள் எட்டுப் பத்துக்களே கிடைத்துள்ளன. அதனுள் இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் பாடியதாகும்.

இவ்விரண்டாம் பத்துக்குப் பண்டிதர் திரு. சு அருளம்பலவனார் பழைய உரையை அகப்படுத்தி இனிய நல்லுரை ஒன்று வரைந்துள்ளார். இவ்வுரை பாடலும் கண்ணழிப்புரையும் மேற்கோளும் அகலவுரையும்கொண்டு ஒளிர்கின்றது. இறுதியில் பழைய உரையும் இடம்பெற்றுள்ளது இனிய செந்தமிழ் மொழி மறுமலர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில் இந்நல்லுரை இன்றியமையாததொன்றாகும். "நின்செல்வங் கேட்டொறும்" "மழகளி றணிந்த பமித்ரேப்பு" "நீரழிபாக்கம்" "எழுமுடிகெழீஇய அகலம்" "நீரறு நிறைமுதற் சிவந்த காந்தள்" "நல்லெழில் நெடும்புதவு" முதலாய தொடர்களுக்கு எழுதியுள்ள உரைக் குறிப்புக்கள் நோக்கத்தக்கனவாகும்.

இந்நூல் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பயிலும் மாணவர்கட்குப் பாடநூலாக அமைவதற்குரிய எல்லாத் தகுதிகளும் பெற்றுப் பிறங்குகின்றது. இவ்வுரையினால் ஆசிரியரது நுண் மாண் நுழைபுலம் வெள்ளிடை விலங்கலெனத் தெரிகின்றது. ஆசிரியர் முயற்சி வெற்றிபெற்று எல்லா வளங்களும் பெற இறையருளை வழுத்துகின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்

## திரு. T V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்

எழுதியது

நலம். தங்கள் அன்புகூர்ந்தனுப்பிய பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை -இரண்டாம் பத்து உரியகாலத்தில் கிடைத்தது. படித்துப் பெருமகிழ்ச்சி யெய்தினேன். சங்க நூல்களிலும் பிறநூல்களிலும் தாங்கள் சிறந்த புலமை யுடையவர்கள் என்பதைத் தங்கள் பேருரை நன்கு புலப்படுத்துகின்றது. நுண்மாண் நுழைபுலமிக்க தங்கள் ஆராய்ச்சித் திறனையும் ஒப்பற்ற சீரிய உழைப்பினையும் உளம் உவந்து மிகமிகப் பாராட்டுகின்றேன். இத்தகைய விரிந்த ஆராய்ச்சியுரைகளே படிப்போர்க்குப் பேரறிவை உண்டுபண்ணும் வாய்ப்புடையனவாகும். ஆதலால், **பதிற்றுப்பத்து** முழுவதற்கும் **தங்கள் ஆராய்ச்சியுரை வெளிவரவேண்டும்** என்பது உள்ளக்கிடக்கை. **தங்கள் அரிய தமிழ்த் தொண்டினைத்** தமிழ்மக்கள் நன்குணர்ந்து பாராட்டிப் பயன் கொள்வார்களாக. எல்லாம் வல்ல இறைவன் தங்கட்குப் பல்வகை நலன்க ளும் அருளுவாராக.

---

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

## வித்துவான் திரு. செ. சிங்காரவேலனார் B. A. அவர்கள்

எழுதியது

சங்கப் பனுவல்களில் மிகவும் பழையதென வல்லுநராதல் மதித்துப் போற்றப்பெறும் பெரும்புகழ் வாய்ந்தநூல் **பதிற்றுப்பத்து** ஆகும். இதன் கண் முதற்பத்தும் இறுதிப்பத்தும் நீங்கலாகப் பிறபத்துக்கள் அனைத்தும் **டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர்** அவர்களால் **பழையவுரையொடுவெளி** யிடப்பெற்றுள்ளன. நம் ஆதீனப்புலவர் **திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை** அவர்களால் இயற்றப்பெற்ற புத்துரையும் இந்நூற்கு ஒன்று உண்டு. தேர்ந்த புலமையும் அழுத்தமான இலக்கண அறிவும் வாய்ந்த **தமிழ்ப் புல வர் திருவாளர். சு. அருளம்பலவனார்** அவர்களால் இரண்டாம் பத்துக்கு இப்போது ஒரு புதிய ஆராய்ச்சியுரை எழுதப்பெற்று வெளிவந்துள்ளது. சங்கநூற் கல்வி குறைந்திருக்கும் இக்காலத்து இஃது ஓர் இனியபேறு. தமி ழுலகிற்கு ஓர் இனிய வரம் இவ்வுரை. இவ்வுரையாசிரியரே ஏனைய பத்துக் களுக்கும் தம் நுண்மாண் நுழைபுலத்தால் உரை விரிப்பாராயின் தமிழுலகு நற்பயன் பெறும். அந்நாள் விரைகவெனத் தமிழ்த்தாய் திருவடி பரவுவோம். இந்நூல் முழுவதுமே ஆசிரியரின் புலமையை விளக்கும். தமிழ்ப் புலவர் களுக்கும் தமிழாராய்ச்சிபுரியும் மாணவர்க்கும் இந்நூல் விருந்து.

---

உ

கணபதி துணை.

# பதிற்றுப்பத்து

## ஆராய்ச்சியுரை.

---

### இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய

## இரண்டாம் பத்து.

---

### புண்ணுமிழ் குருதி.

11. வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
அருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று
முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை
பலர்மோசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னார மார்பிற்
போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்

பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே
கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியோடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியோ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

துறை-செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம்-ஒழுகுவண்ணம்.
தூக்கு-செந்தூக்கு.
பெயர்-புண்ணுமிழ் குருதி. (8)

**பதவுரை:** *1—6.* வரை மருள் புணரி வான் பிசிர் உடைய-மலையை ஒக்கின்ற அலைகள் வெள்ளிய திவலைகளாக உடையும்படி, வளி பாய்ந்து அட்ட—காற்றுத் தாக்கிச் சிதைத்த, துளங்கு இரு கமஞ்சூல்- அசைகின்ற பெரிய நிறைந்த நீரினையுடைய, நளி இரு பரப்பின்—குளிர்ந்த பெரிய பரப்பினையுடைய, மா கடல் முன்னி—கரிய கடலின நடுவைக் கருதிப் போந்து, அணங்கு உடை அவுணர் ஏமம் புணர்க்கும்-பிறரை வருத்துதலையுடைய அவுணர்க்குக் காவலாகச் சூழ்ச்சிசெய்த, சூருடை முழுமுதல் தடிந்த—சூரனுதற் றன்மையையுடைய மாவின் பெரிய அடியை வெட்டின, பேர் இசை கடு சின விறல் வேள்—பெரிய புகழினையும் கடிய சினத்தினையும் வெற்றியினையுமுடைய முருகவேள், களிறு ஊர்ந்தாங்கு—களிற்றினை ஊர்ந்து பொலிந்தாற்போல,

*7—16.* செ வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப—செய்ய வாயையுடைய வேல் எதிரில் நின்று தடுக்கும் பகைவரை அறுத்தலால், அரு நிறம் திறந்த புண் உமிழ் குருதியின்— அப்பகைவரின் அரிய மார்பு பிளந்ததனால் உண்டாகிய புண்கள் உமிழாநின்ற குருதியால், மணி நிற இரு கழி நீர் நிறம் பெயர்ந்து—நீலமணிபோலும் நிறத்தினையுடைய பெரிய கழியிலுள்ள நீர் நிறம் மாறி, மனுலை கலவை போல—குங்குமக் கலவைபோலும்படி, அரண் கொன்று—அரணினை அழித்து, முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை—மாறுபாடு மிக்க தலைமையுடன் உயர்ந்த முயற்சியையுடையையாய், பலர் மொசிந்து ஓம்பிய—பலர் மொய்த்துக் காத்த, திரள் பூ கடம்பின்—திரண்ட பூக்களையுடைய கடம்பினது, கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்—காவலையுடைய பெரிய அடி துணிபடும்படிப் படையை ஏவி, வென்று எறி முழங்கு பணை செய்த — வென்று அடிக்கப்படுகின்ற முழங்கும் முரசினைச் செய்த, நார் அரி நறவின்-பன்னாடையால் அரிக்கப்பட்ட

நறவினையும், ஆர மார்பின்—முத்து மாலை அணிந்த மார்பினையும், போர் அடு தானை—மாற்றுரைப்போரின்கட் கொல்லும் படையினை யுமுடைய, சேரலாத—சேரலாதனே,

17—25. கவிர் ததை சிலம்பில் துஞ்சும் கவரி—முருக்கு நெருங் கின பக்கமலையிலே உறங்கும் கவரிமான், பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்—பரந்து விளங்கும் அருவியையும் நரந்தம் புல்லை யும கனவிற் காணும், ஆரியர் துவன்றிய பேர் இசை இமயம்—ஆரியர் நிறைந்த மிக்க புகழையுடைய இமயமும், தென்னம் குமரி யொடு ஆயிடை—தென்றிசைக்கட்குமரியுமாகிய அவற்றுக்கிடைப் பட்ட நாட்டின்கணுள்ள, மன்மீக்கூறுநர் மறம் தப கடந்து—அரசர் களுள் தம்மை உயர்த்துக் கூறுவாரது மறம் கெடும்படி எதிர் நின்று வென்று, மார்பு மலி பைந்தார்—மார்பிலே நிறைந்த பசிய மாலை, ஓடையொடு விளங்கும்—நெற்றிபட்டத்துடனே விளங்கும், வலன் உயர் மருப்பின்—வெற்றிமிக்க மருப்பினையுடைய, பழி தீர் யானை—குற்றம் தீர்ந்த யானையின், பொலன் அணி எருத்தம் மேல் கொண்டு பொலிந்த நின—பொன்னரிமாலை அணிந்த பிடரியின்மேல் இவர்ந்து விளங்கிய நினது, பலர் புகழ் செல்வம் இனிது கண்டிகும் —பலரும் புகழும் செல்வத்தை யாம் இனிதாகக் கண்டேம்.

முடிபு : **சேரலாத, கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு யானை எருத்தமேல் கொண்டு பொலிந்த நின் பலர்புகழ் செல்வம் இனிது கண்டிகும் என்க.**

ஆராய்ச்சியுரை: 1—6. மலையை ஒக்கின்ற பெரிய அலைகள் வெள்ளிய திவலைகளாக உடையும்படி கடுவளி பாய்ந்தடுதலின் "வரை மருள் புணரி வான்பிசிருடைய வளிபாய்ந் தட்ட" என்றார். வரை—மலை. மருள்—உவ மவுருபு. புணரி—அலை. "வெண்டலைப் புணரிக் குடகடல்" (புற 2: 10) வான் பிசிர்—மிக்க பிசிருமாம்; பிசிர்—திவலை. "பசும் பிசிர்த், திரைபயி லழுவம்" (அக 210 : 4-5.) கமஞ்சூல்—நிறைவினையுடைத்தாகிய சூல். சூல்—கருப்பம்; ஈண்டு நீரை உணர்த்திற்று. "கார்கோண் முகந்த கமஞ்சூல் மாமழை" (முருகு 7) என்புழிப்போல. நளி—குளிர்ச்சி. இனி "நளியென் கிளவி செறிவுமாகும்" (தொல். உரி 27) என்பவாகலின் நளிகடல் என்பதற்கு 'முத்து முதலியன செறிந்த கடல்' என்றுரைப்பினும் அமையும். "செறி கடலே" (திருக்கோவை 179) எனப் பிறண்டும் வருதல் காண்க. மாக்கடன் முன்னிச் சூருடை முழுமுதல் தடிந்த விறல் வேள் எனக் கூட்டுக. முருக வேள் கரிய கடலுட் புக்குச் சூர்மாவைத் தடிந்ததனை,

"கருங்கடலுண் மாத்தடிந்தான்" - பு **வெ. மா.** 103.
"பார்முதிர் பணிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்" - **முருகு** 45—6.
"பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே" - **சிலப்** 24 பாட்டுமடை.

என வருவனவற்றுலுமறிக. முன்னுதல் கருதிப் போதல்-கலி 9: 10 நச்.

அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும் என்றது பிறரை வருத்துதலை யுடையராயிருந்தும் அப்பொழுது தாம் வருந்துதலையுடையராயிருந்த அவுணர்க்குக் காவலாகப் புணர்க்கும் என்றவாறு. அவுணர்—அசுரர். அவுணர்க்கு என நான்காவது விரிக்க. ஏமம் புணர்க்கும் முழுமுதல் என்றது அவுணரெல்லோரும் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டு சாதித்த மாவின் முதலென்றவாறு. மா அவுணர்க்கு ஏமமாதல், "கொள்ளாத் தெவ்வர் கொண்மா"—'நின்னை மதியாத அவுணர் தமக்குத் துணையாக மதித்த மா' என்னும் பரிபாடல் உரையானும் (பரி 21 : 8) தெளியப்படும். ஏமம்—காவல். சூரவன்மாத்தான் ஓர் மாமரமாய் நின்ருன் என்று புராணங் கூறுதலால், சூருடை முழுமுதல் என்பதற்குச் சூரனுதற் றன்மையையுடைய மாவின் முதல் என உரைக்க. 'சூர்மா—சூரனுகிய மா' (சிலப் 24 : உரையினி. அரும்பத) எனவும், 'சூர் மாமரமாய் நின்றமையால்' (திருக்கோவை 285 வி. உரை) எனவும் வருவன காண்க. தடிந்தது வேலினுலென்க. முருகன் ஒருவராலும் அளந்தறியவொண்ணுத பெரும் புகழினை யுடையனுதலின் 'பேரிசைவேள்' என்ருர். "எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்" "பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே" (முருகு 61: 268) எனப் பிரண்டும் வருவன காண்க. கடுஞ்சின விறல்வேள் என்ருர் சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேற் சீர்மிகு முருகனுதலின். முருகன் கடுஞ்சினம், "முருகற் சீற்றத்து" (பொருந 131) "முருகனன்ன சீற்றத்து" (அக 158 : 16) என வருவனவற்றுலுமறியப்படும். வேள் இருவராதலின் வேனில்வேளின் வேறுபட்டவன் என்பது தோன்றக் குன்ருக் கொற்றத்து முருகனை 'விறல்வேள்' என்ருர். விறல் வேள்—வெற்றியையுடைய வேள். "செருவிலொருவ" (முருகு 261) "ஓங்கு விறற் சேஎய்" "வெல்போரிறைவ" (பரி 5 : 54; 17 : 49) என வருவன காண்க. முருகவேள் யானையை ஊர்ந்தமையின், 'விறல்வேள் களிறூர்ந்தாங்கு' என்ருர். முருகற்கு யானை ஊர்தியாதல்,

> "கால்கிளர்ந் தன்ன வேழமேல் கொண்டு
> ..........................................
> அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே" - முருகு 82—125.
> "செங்கோட்டி யானைக், கழலுடிச் சேஎய்" - குறுந் 1: 2—3.
> "ஊர்ந்ததை, எரிபுரை யோடை யிமைக்குஞ் சென்னிப்
> பொருசமங் கடந்த புகழ்சால் வேழம்" - பரி 21: 1—2.

என வருவனவற்றுலுமறிக. அது *பிணிமுகம் என்னும் பெயருடைத்தாத

---

* பிணிமுகம் என்பது மயிலுக்கும் பெயராதல் 'பிணிமுகம்—மயிலுமாம்' (முருகு 267 நச்,) "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்"—'அம்மயிலாகிய ஊர்தியையுடைய ஒள்ளிய செய்யோனும்' (புற 56: 8 உரை) 'பிணிமுகம்—மயில்' (சிலப் 24: உரையினி. அரும்பத) என்னும் உரைகளான் அறியப்படுதலினுலும், "பிணிமுக முயர்த்து நின்ற பெருந்தகை" எனக் **கந்தபுராணத்து** வருதலினுலும் சூர்மாத்தடிந்தபோது ஊர்ந்தது இந்திரனுகிய மயில் என அப்புராணத்துட் கூறப்படுதலானும், பிணிமுகம் — மயில் என்பாருமுளர்.

லைப் 'பிணிமுகம்—முருகற்குரித்தாகிய யானை' (பரி 5 : 2 உரை) எனவும். 'பிணிமுகம் வாழ்த்தி-பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி" (முருகு 247 நச்) எனவும் வரும் உரைப்பகுதிகளான் அறிக.

முன்னி (3) தடிந்த (5) வேள் களிறூர்ந்தாங்கு (6) எனமுடிக்க,

7—16. எஃகம் விலங்குநரை அறுத்ததால் அருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியாற் கழிநீர் நிறம் பெயர்ந்து மனுலக் கலவைபோலும்படி அரண்கொன்று, கடம்பின் முழுமுதல் துமியப் படையை ஏவிப் பணை செய்த சேரலாத என்க.

எக்காலமும் போர் செய்தலிற் 'செவ்வாய் எஃகம்' என்றார். வாய் என்றது முனையை. எஃகம்—வேல். "சத்தி யெஃகம்...... ஞாங்கரயில் வேல்" என்பது திவாகரம். விலங்குநர் என்றது சேரன் படையை எதிரில் நின்று தடுக்கும் பகை வீரரை. விலங்குதல்—எதிரில் நின்று தடுத்தல். (புற 230 : 4 உரை.) விலங்குநரது பிறரால் திறத்தற்கரிய மார்பு சேரலாதனுடன் செய்த போரில் திறந்தமையின் 'அருநிறந்திறந்த' என்றார். அருநிறந் திறந்த புண்-அரும்புண். மணிநிற நீர் எனக் கூட்டி நீலமணி போலும் நிறமுடைய நீர் எனக் கொள்க. 'மணிநீர்—நீலமணி போலும் நீர்' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தவாறுங் காண்க. (மதுரைக் 351 உரை) கடல்நடுவண் துருத்தியில் வாழ்ந்த கடம்பரது அரண் அருகே அக்கடலைச் சார்ந்த கழி நீர் நின்றமையால் 'இருங்கழிநீர்' என்றார். அரும் புண்கள் உமிழா நின்ற குருதியாற் கழிநீர் தன் நீலநிறம்மாறி மனுலக் கலவைபோலும்படி சேரலாதனின் எஃகம் விலங்குநர் பலரை அறுத்தமை தோன்ற, 'மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து மனுலக்கலவை போல' என்றார். குருதியால் நீர் நிறம்பெயர்தல் "பெருமீன், புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட" (அக 210: 2-3) என்புழிக் காண்க. மேன்மேலும் பெருகாநின்ற குருதிச் செம்புனலால் நீர் மிகச் சிவக்குமாறு தோன்ற மனுலத்தை எடுத்துக் கூறினர். மனுலம் என்றது குங்குமம். சாதிங்குலிக மென்பாரும் உளர். மனுலககலவை போல என்றார் இருங்கழியிற் குருதிச்சேறு பரத்தலின். "அகழி பரந்தொழுகு மங்குருதிச் சேற்று" (பு. வெ. மா. 111) எனப் பிறண்டும் வருதல் காண்க. போலவென்றது போலும் படியென வினையெச்சப் பொருள்பட்டு நின்றது.

'அருநிறந் திறந்த' என முன்வந்த அடைச் சிறப்பானும் 'மணி நிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து, மனுலக்கலவை போல' எனப் பின்வந்த அடைச்சிறப்பானும் இச்செய்யுளுக்குப் புண்ணுமிழ்குருதிஎன்று பெயராயிற்று.

அரண் என்றது பகைவரது மதிலை. கொன்று என்றார் பின் திருத்தினும் திருந்தாதவாறு அழித்தமையால். முரண்—மாறுபாடு. (மலைபடு 547 நச்.; புற 37. 10 உரை.) ஈண்டுப் பகை வெல்லுதற்கேற்ற மாறுபாட்டை. "வேந்தன் அடுமுரண்" என்றார் திருவள்ளுவரும். (குறள் 567) பெற்ற

வெற்றியான் போரின்கண் ஊக்கமிகுதலின் 'உயர்ந்த ஊக்கலை' என்றார். ஊக்கல்—முயல்தல். "உயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்" (மதுரைக் 743.) ஊக்கலையாய் முழுமுதல் துமிய ஏளய்ப் பணைசெய்த சேரலாத என்க.

காவல் மரமாகிய கடம்பினைச் சேரலாதன் தடியாதவாறு வீரர் பலர் மொய்த்து நின்று காத்தமையின், 'பலர் மொசிந்தோம்பிய கடம்பு' என்றார். மொசிதல்—மொய்த்தல். "கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்" (பதிற் 71: 6.) ஓம்பல்—காத்தல் திரள் கடம்பு எனக் கூட்டித் திரண்ட அடியினை யுடைய கடம்பு எனக் கொள்க."திணிநிலைக் கடம்பின் றிரளரை"(குறிஞ்சி 176) எனவருதல் காண்க. பூங்கடம்பு என்றார் மூப்பின்றி நின்றதாகலின். அது, "மூவாக் கடம்பெறிந்தான் மன்னர் கோச்சேரன்" என்புழி, 'மூவாக்கடம்பு —வஞ்சத்தால் நின்றதாகலின் மூப்பின்று ஒருநாளைப்போல நின்ற கடம்பு', என அரும்பதவுரைகாரரும் அடியார்க்குநல்லாரும் பொருளுரைத்தவாற் றனும் (சிலப் 17: உள்வரி 3) அறியப்படும். அக்கடம்பு கடல் நடுவண் துருத் தியுள் நின்றதென்பதும், சேரலாதன் கடல்கடந்து சென்று பகைவர் வலி யை அழித்து அதனைத் தடிந்தான் என்பதும்,

''இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன்'' - **பதிற்** 20: 2-5.

என மேல்வருதலானுமறிக. இச்செய்தியைச் "சேரலாதன், முந்நீரோட்டிக் கடம்பறுத்து" (அக 127 : 3—4) என மாமூலனாரும், "முந்நீரி னுட்புக்கு மூவாக் கடம்பெறிந்தான், மன்னர் கோச்சேரன்" (சிலப் 17: உள்வரி 3) என இளங்கோவடிகளும் கூறுவர்.

கடம்பின் அடி பகைவர் அணுகாவண்ணம் காவலமைந்ததாகலின் 'கடி யுடை முழுமுதல்' என்றார். ஈண்டுக் கடியென்னும் உரிச்சொல் காவல் என்னும் பொருட்டாய் நின்றது. ஏஎய்—ஏவி. பணை—முரசு. (நெடுநல் 115 நச். 'முரசின் விசேடம்' சீவக 2222 நச். வி. உரை.) சேரலாதன் கடற் கடம் பெறிந்து முரசு செய்த செய்தி,

''துளங்குபிசி ருடைய மாக்கட னீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை'' - **பதிற்** 17: 4-5.
''சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின்'' - **அக** 347: 3—5.

என வருவனவற்றானும் அறியப்படும். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், மோகூர்மன்னனை வென்று அவன் காவல் மரமாகிய வேம்பினைத் துண் டங்களாகத் தறிப்பித்த செய்தியை,

''மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து
முரசுசெய முரச்சி'' - **பதிற்** 44: 14—6.

எனப் பரணர் கூறுதல் ஈண்டைக் கேற்ப அறியற்பாலது.

பகைவரை வென்று அடிக்கும் முரசாதலின் 'வென்றெறி பணை' என்றும், அடிக்குங்கால் இடிபோல முழங்கலின் 'முழங்கு பணை' என்றும் கூறினர். 'வேந்தர், வென்றெறி முரசின் நன்பல முழங்கி" (குறுந் 380: 1—2) எனப் பிறண்டும் வருதல் காண்க. பணைசெய்த சேரலாத, வெல்போர்ச் சேரலாத, நறவிற் சேரலாத, மார்பிற் சேரலாத, தானைச் சேரலாத எனத் தனித்தனி கூட்டுக. வெல்லும் போரை வல்ல சேரலாதனாதலின் 'வெல் போர்ச் சேரலாத' என்றார்.

நறவு—கள். (மதுரைக் 213 நச்.) அதனைப் பன்னாடையால் அரித்தல் பற்றி 'நாரரி நறவு' என்றார். தன்பால் வரும கூத்தர் பாணர் முதலான பரிசின் மாக்களுக்கு வழங்குங் கள்ளுடைமையாற் சேரனை 'நறவிற் சேரலாத' என்றார்.

> "நாரரி நறவிற் கொங்கர் கோவே" - பதிற் 88: 19.
> "பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி" - நற் 253: 7.
> 'நாரரி நறவி னெருமை யூரன்" - அக 36: 17.
> "இன்களி நறவின் ......நன்னன்" - அக 173: 16.
> "வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்" - அக 262: 16.

எனப் பிறரும் கூறப்படுமாறு காண்க.

ஆரம் என்பதற்குப் பதக்கம் என்றுரைப்பினும் அமையும். மாற்றாரைப் போரின்கட் கொல்லும வீரச் செல்வத்தினையுடைய படையாகலின் 'போரடு தானை' என்றார். மாற்றாரைப் போரின்கண் அடுதல் வீரச் செல்வமாதல், போரடு திருவின்—மாற்றாரைப் போரின்கட் கொல்லும வீரச் செல்வத்தினையும்' என்னும் புறப்பாட்டுரையிற் காண்க சேரலாதன் என்னும் புள்ளியீற்றுயர்திணைப் பெயர் அண்மை விளிக்கண் சேரலாத என அகரவீறாய் நின்றது. "அண்மைச் சொல்லிற் ககரமாகும்" (தொல். விளி 14) என்பவாகலின்.

17—25. இமயமும் குமரியுமாகிய அவற்றுக்கிடைப்பட்ட நாட்டின்கணுள்ள மன்னர்களுள் தம்மை மீக்கூறுவாரது மறங் கெடவென்று யானை எருத்தமேல்கொண்டு பொலிந்த நின்செல்வத்தை இனிதாகக் கண்டேம் என்க.

கவிர்ததை சிலம்பிற்றுஞ்சுங் கவரி அருவியையும் நரந்தத்தையுங் கனவிற் காணும், ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் என்க. இமயத்தின் பக்க மலைகளிலே முருக்கமரங்கள் நெருங்கியிருத்தலின்' 'கவிர்ததை சிலம்பு'. என்றார். கவிர்—முண் முருக்கு. "கவிரே கிஞ்சுக முண்முருக்காகும்" என்பது பிங்கலந்தை. (பிங் 9: 46) ஈண்டு அதன் இனமாகிய பலாச மரத்தைக் கொள்ளினும் அமையும். ததைதல்—நெருங்குதல். சிலம்பு—பக்கமலை. "நளிமலைச் சிலம்பில்" நெடுநல் 100. சிலம்பில் துஞ்சும் கவரி அருவியொடு நரந்தம் கனவும் இமயம் என்றது, சிலம்பின்கண்ணே இனிதாக உறங்கும் கவரிமான் பகற்காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையுமே கனவினும் காண்பதற்கு இடனாய இமயம் என்றவாறு. பகற்காலத்து

நுகர்ந்த அருவியும் நரந்தமும் தன் மனத்திடத்தே கிடக்கையாலே கவரி மான் அவற்றைக் கனவிற் கண்டது என்க. இதனைக்,

"கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
**நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்**
**கனவிற் கண்டு"** - **கலி** 49: 1—4.

என்பதனாலும் அப்பகுதியுரையானும் தெளியலாம். விலங்கு முதலியன தாம் நுகர்ந்தவற்றைக் கனவிற் காண்டல்,

"கூம்புமுகை யவிழ்ந்த குறுஞ்சிறைப் பறவை
வேங்கை விரியிணர் ஊதிக் காந்தட்
டேனுடைக் குவிகுலைத் துஞ்சி யானை
இருங்கவுட் கடாஅங் கனவும்" - **அக** 132: 10—3.

"கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிறாக் கனவும் நள்ளென் யாமத்து" - **அக** 170: 10—2.

என வருஉஞ் சான்றோர் செய்யுட்களினுங் காண்க.

கவரி என்றது கவரிமாவை. "வான் மயிர் துடக்கிற் றானுயிர் வாழாப், பெருந்தகைக் கவரி" பெருங் (1) 35: 233-4. இமயச் சிலம்பில் அருவிநீர் பரந்து விளங்குதலின் 'பரந்திலங்கு அருவியொடு' என்றார். ஒடு—எண்ணொடு. நரந்தம்—நரந்தம் என்னும் புல். இதனை 'நரந்தந் தாஅய்—நரந்தப் புல்லின்கட் பரந்து' என்னும் (பரி 7: 11) உரையானும் அறிக. இது நரந்தை எனவும் வழங்கும். இமயம், அருவி நரந்தம கவரி என்பனவற்றை உடைத்தாதலை,

"அமைவர லருவி யார்க்கு, மிமையத்து" - **கலி** 105: 74—5.
"நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம்" - **புற** 132: 4—7.

என வருஉஞ் செய்யுட்பகுதிகளா னறிக.

ஆரியர் என்றது முனிவர்களை. மும்மையுமுணரவல்ல அறிவுடையாராகலின் அவர்களை ஆரியர் என்றார். அறிவுடையார்க்கு ஆரியர் என்று பெயராதல், "சான்றோர் மிக்கோர்... .. ஆரியர் உலகென, வாய்ந்த வான்றோர் அறிவுடையோரே" என்னும் திவாகரத்துட் காண்க. வடநாட்டு வேந்தருமாம். அவர்கள் இமயத்து நிறைந்து வாழ்தலின் 'ஆரியர் துவன்றிய இமயம்' என்றார். துவன்றுதல்—நிறைதல். ஆரியர் நிறைந்து வாழ்தலினாலும், *தன் உயரத்தாற் பிறமலைகளை வென்ற வெற்றியினாலும், †நீலமேனி வாலிழை பாகத்தொருவன் வீற்றிருக்கப்பெற்றதனாலும் பெரும்

---

* "பனிவார் விண்டு விறல்வரை" **பதிற்** 31: 17, †"கடவு ணிலைய கல்லோங்கு நெடுவரை" **பதிற்** 43: 6-

புகழுடைய இமயமாதலின் 'பேரிசை இமயம்' என்றார். "பேரிசை இமயமும்" (குறுந் 158) எனவும் "பேரிசைத், தொன்றுமுதிர் வடவரை" (அக 396 : 16—7) எனவும் வருவன காண்க.

இமயம் குமரியெனவே திசை பெறப்படுமாயினும் எல்லை கூறப் புகுந்தாராதலின் அதற்கேற்பத் திசை கூறி யெல்லை கூறுதன் மரபென்பதுபற்றித் தென்னங்குமரி என்றார். தென்குமரி என்பது தென்னங்குமரி என அம்முச்சாரியை பெற்றது. ஒடு-எண்ணொடு. குமரியைத் தென்னங்குமரி என்றமையால் இமயத்தை வடவிமயமாகக் கொள்க. "குமரியொடு வடவிமயத்து" (சிலப் 29: 1) என வருதல் காண்க. கிழக்கு மேறகுத் திசைகட்குக் கடல்கள் எல்லையாகலின் வேறெல்லை கூறாராயினர். "தென்குமரி வடபெருங்கல், குணகுட கடலா வெல்லை" (மதுரைக் 80—1) என வருதல் காண்க. ஆயிடையென்றது இமயம் குமரியாகிய அவற்றுக்கு இடையென்றவாறு. அவ்வென்னும் வகரவீற்றுப் பெயர் ஆயிடையென முடிந்தது.

மன் என்பது அஃறிணை இயற்பெயர்போல ஒருமைக்கும பன்மைக்கும் பொதுவாக வருமாதலின் அரசர்களுள் என உரைக்கப்பட்டது. இனி, மன் என்றதனை அரசு என்றதுபோல அஃறிணைப் பெயராக்கி அம்மன்களில் மீக்கூறும் எனக் கொள்ளினும் அமையும். "குடிமை யாண்மை...... அன்ன பிறவு மவற்றொடு சிவணி, முன்னத்தி னுணருங் கிளவியெல்லாம், உயர்திணை மருங்கி னிலையின வாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" (தொல். கிளவி 56) என்பது இதற்கு விதி. மீக்கூறுதல்—'உயர்த்துக் கூறுதல்' குறள் 386 பரிமேல். 'மேலாகச் சொல்லுதல்' நெடுநல் 116 நச். மறம்—வீரம். தப—கெட. சேரலாதன் இமயம் குமரியாகிய அவற்றுக்கிடைப்பட்ட மன்மீக்கூறுநரை வென்றான் என்பது,

> "குமரியொடு வடவிமயத்
> தொருமொழி வைத்துலகாண்ட
> சேரலாதற்கு" சிலப் 29: 1.

என இளங்கோவடிகள் கூறுதலானும் அறியப்படும். மறந்தபக் கடந்து(25) எருத்த மேல்கொண்டு (19) என மாறிக் கூட்டுக.

யானையின் பிடர்மீதிவர்ந்து செல்லும் சேரலாதனின் மார்பிலே மலிந்த மாலை அதன் ஓடையளவுந் தாழ்ந்து அவ்வோடையொடு விளங்கலின், 'மார்பு மலி பைந்தார் ஓடையொடு விளங்கும்' என்றார். ஈரிடத்துப் பொருள்கள் அண்மையிலிருத்தலால் ஒருசேர விளங்கல், "பாணன் சூடிய பசும் பொற் றாமரை, மாணிழை விறலி மாலையொடு விளங்க, சுரத்திடை யிருந் தனிர்" (புற 141: 1—4) என்புழிக் காண்க. மலிதல்—மிகுதலுமாம். பைந்தார்—செவ்விப் பூவாலான பசியமாலை. 'செவ்விமாலை' கலி 90: 16 நச். தார்—மார்பின் மாலை. "வண்ண மார்பிற் றாருங் கொன்றை" புற 1:2. ஓடை—நெற்றிப்பட்டம். அது பொன்னாற் செய்யப்பட்டு அணியப்பட்டமையின் விளங்குவதாயிற்று. "யானைப், புகர்முகத் தணிந்த பொன்செய் யோடை" (நற் 296) எனவும், "ஓடை விளங்கு முருகெழு புகர்நுதல்......

யானை'' (பதிற் 34 : 6—7) எனவும் வருவன காண்க. விளங்கும் செல்வம் (20) எனக் கூட்டி விளங்குதற்குக் காரணமாகிய செல்வம் எனக் கொள்க. பகைவரைக் குத்திக்கொன்றமையால் வெற்றிமிக்க மருப்பாதலின் 'வலனுயர் மருப்பு' என்றார். வலன்—வலியுமாம். மருப்பின் யானை என இயையும். உயரமும் அழகும் புகர்நிறைந்த மத்தகமும் பிறவுமாகிய நல்லிலக்கணங்களமைந்த, குற்றத்தினீங்கிய யானையாகலின் 'பழிதீர் யானை' என்றார், பொன் என்பது பொலம் எனச் செய்யுட்கண் வந்தது.

யானை எருத்தமேல்கொண்டு பொலிந்த நின் செல்வம் என முடிக்க. வெற்றிபெற்ற வேந்தர் யானைமீது இவர்தல், "மயங்கமர் மாறட்டு மண் வௌவி வருபவர், தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ" (கலி 13 : 9—10) என்புழிக் காண்க. செல்வம் என்றது மன்மீக்கூறுநர் மறந்தபக் கடந்த வெற்றிச் செல்வத்தை. இதுவே பழைய வுரைகாரர் கருத்துமாதல், 'இதனாற் சொல்லியது அவன் வெற்றிச்செல்வச் சிறப்புக் கூறியவாறாயிற்று' என அவர் கூறுமாற்றானறியப்படும். வெற்றியைச் செல்வம் என்றல்,

"இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து
ஒருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்
செல்வ முடையோர்க்கு'' அக 174 : 1—3.

என்புழிக் காண்க. வெற்றியைப் பலரும் புகழ்தல் "வெல்புக ழுலகேத்த விருந்துநாட் டுறைபவர்" என்னும் கலியினுங் காண்க. (கலி 26 : 12) சேரலாதன் பகைவரை வென்று யானைமீதிவர்ந்தபோது அவன் வெற்றிச் செல்வம் இனிது புலனாமையின் 'இனிது கண்டிகும்' என்றார். கண்டிகும்—கண்டேம். இகும் என்னும் அசைச்சொல் தன்மைக்கண் வருதல் அவற்றுள், இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந், தகுநிலையுடைய வென்மனார் புலவர் (தொல் இடை 27) என்பதனாற் கொள்க.

சேரலாதற்கு முருகக் கடவுளை உவமை கூறிய ஆசிரியர் கடலிற்புக்கு மரந்தடிதலும் களிறூர்தலுமாகிய பொதுத் தொழில்களை இருவர்க்கும் எடுத்துக் கூறினார்.

இதனாற் சொல்லியது அவன் வெற்றிச்செல்வச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## பழையவுரை

1. பிசிருடைய வென்றது பிசிராக உடைய வென்றவாறு. 2. கமஞ்சூல்—நிறைந்த நீர்; சூல் போறலாற் சூலெனப்பட்டது. 5 சூருடை முழுமுதலென்றது சூரவன்மாத் தனக்கு அரணாகவுடைய மாவின்முத லென்றவாறு. இனிச் சூரவன்மாத்தான் ஓர் மாவாய் நின்றானென்று புராணம் உண்டாயின் சூரனாதற்றன்மையையுடைய மாவின் முத லென்றவாறாம். 9-10. நீர் நிறம் பெயர்ந்து மனாலக் கலவை போலவென முடிக்க. போல வென்றது ஈண்டுப் போலும்படியென வினையெச்சப் பொருள்பட்டு நின்றது. மனாலமென்றது குங்குமம். சாதிங் குலிக மென்பாரும் உளர். 8-10. 'அரு நிறந் திறந்த' என முன்வந்த அடைச்சிறப்பானும், 'மணிநிற விருங்கழி நீர்

நிறம் பெயர்ந்து மனலக் கலவை போல' எனப் பின்வந்த அடைச்சிறப்பானும் இதற்குப் புண்ணுமிழ்குருதி என்று பெயராயிற்று. 19-20. மேல்கொண்டு பொலிந்த நின் செல்வமென முடிக்க. 21. கவிர்ததை சிலம்பிற்றுஞ்சுமென்றது ஆண்டு உறையும் ஆரிய ராணையானே முருக்கென்னும் முள்ளுடை மரமும், "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா" (திருக்குறள் 969) என்று சிறப்பிக்கப்பட்ட தன் மயிர்க்கும் வருத்தஞ் செய்யாமையால் அக்கவிர் செறிந்த சிலம்பின் கண்ணே இனிதாக உறங்குமென்றவாறு. 22. அருவியொடு நரந்தம் கனவுமென்றது அவ்வாரிய ராணையானே பிற விலங்கானும் மக்களானும் வருத்தமின்றிப் பகற்காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையுமே கனவினும் காணுமென்றவாறு. 24. குமரியொடுவென்னும் ஒடு எண்ணொடு. ஆயிடை யென்றது, இமயம் குமரியாகிய அவற்றுக்கு இடையென்றவாறு. அவ்வென்னும் வகரவீற்றுப்பெயர் ஆயிடையென முடிந்தது. 25. மன் என்றதனை அரசென்றதுபோல அஃறிணைப் பெயராக்கி அம்மன்களில் மீக்கூறுமெனக் கொள்க. மறந்தபக் கடந்து (25) முழங்கு பணை செய்த (14) என மாறி முடிக்க. இங்ஙனம் மாறாது எருத்த மேல்கொண்டு (19) என்னும் வினையொடு மாறி முடிப்பாரும் உளர்.

சேரலாத (16) கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு (16) யானை (18) எருத்த மேல்கொண்டு பொலிந்த நின் (19) பலர் புகழ் செல்வம் கண்டிகும் (20) என மாறிக்கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வெற்றிச்செல்வச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி

1. **புணரிக்கு மலை உவமை:** "மைவரைபோற் றிரை" "குன்றுபோற் றிரைகள்" **தே.** திருஞான. "மலைக் தநிக ரொப்பன வன்றிரைகள்" "தடமால் வரைபோற் றிரைகள்" **தே.** சுந்தர.

1—2. **புணரி காற்றால் பிசிராக உடைதல்:** "மல்குதிரை, வளிபொரு வயங்கு பிசிர் பொங்க, களிகடற் சேப்பனொடு" **நற்.** 299: 7—9. "தூலங் கடுவளியெடுப்ப ஆருற், றுடைதிரைப் பிதிர்வில் பொங்கி" "கொண்டலொடு, குரூஉத்திரைப் புணரியுடைதரு மெக்கர்" **அக.** 1: 17—8; 10: 8—9.

2. **துளங்கிருங் கமஞ்சூல்:** "விலங்குவளி கடவுந் துளங்கிருங் கமஞ்சூல்", **பதிற்** 45: 20.

3. மு. "களியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி" **பதிற்.** 'இருங்கண்' 8.

4. **அணங்குடை யவுணர்.** "அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தென" **புற.** 174: 1.

5. **முழுமுதல்:** முருகு 307; **பெரும்பாண்** 77; **குறுந்** 214, 255, 361. **அக.** 45: 10; **புற.** 58: 2.

3—6. பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச், சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்...... மாமுத றடிந்த மறுவில் கொற்றத், தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்" முருகு 45—61 "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச், சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கித், தீயழ றுவைப்பத் திரியவிட் டெறிந்து, நோயுடை நுடங்குசூர் மாமுத றடிந்து......மாய வவுணர் மருங்கறத் தபுத்தவேல்" "கடுஞ்

சூர் மாமுத றடிந்தறுத்தவே, லடுபோ ராளா'' "சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே'' ''சீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச், சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்'' "மாதடிந் திட்டோய்'' பரி 5: 1—7; 9: 70—1; 14: 18; 18—3—4; 21: 28—9; "உரவுநீர் மாகொன்ற வென்வேலான்'' "மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர், வேல் வல்லான்'' கலி 27: 15—6; 104: 13—4; ''இருங்கடல் மா கொன்றான்'' திணைமா 30 ''மாத்தடிந் தானன்ன மாண்பினான்'' சீவக 1029; "உரவு நீர் மாகொன்ற வேல்'' சிலப் 24; பாட்டுமடை 'உரையினி.' "பனிக்கடற் பிறந்த, வெஞ்சூர் தடிந்த வஞ்சுவரு சீற்றத்து, முருகவேள்'' பெருங் (1) 42: 229—31. "நீர்மாக் கொன்ற சேயோன்'' கல்-

7. **செவ்வா யெஃகம்**: "செவ்வா யெஃகம் வளைஇய வகழி'' பதிற் 33: 9.

8. **அருநிறம்**: "அருநிறத் தழுத்திய வம்பினர்'' "வரிநுதல் யானை அருநிறத் தழுத்தி'' அக 61: 8; 172: 8.

**புண்ணுமிழ்குருதி**: "புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதர'' குறிஞ்சி 172; "கணவிர மாலை யிடூஉக் கழிந்த தன்ன, புண்ணுமிழ் குருதி'' அக 31: 9-10; "புண்படு குருதி'' புற 98: 14; "புண்ணுமிழ் குருதி போர்த்த பொருகளம்'' சீவக 1733; "புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப'' "புண்டாழ் குருதி புறஞ்சோர'' "புண்பொழி குருதி'' சிலப் 16: 214; 19: 37; 19: 48.

12—3. **பகைவருடைய காவன் மரங்களை அழித்தல்**: "உறுசெறுநர் புலம் புக்கவர், கடிகாவி னிலை தொலைச்சி'' மதுரைக் 152—3; "திதியன், தொன்னிலை முழுமுத றுமியப் பண்ணிய, நன்னர் மெல்லிணர்ப் புன்னை போல'' அக 145: 11—3; "வடிநவில் நவியம் பாய்தலி னூர்தொறுங், கடிமரந் துளங்கிய காவும்'' 'நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து, வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங், கடிமரத் தடியு மோசை'' "கடிமரந் தடித லோம்பு'' புற 23: 8—9; 36: 7—9; 57—10. "பழையன் காக்குங் குழைபயி னெடுங் கோட்டு, வேம்புமுத றடிந்த .... பொறைய'' சிலப் 27: 124—6.

**கடம்பு தடிந்தது**: "கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே'' "துளங்குபிசி ருடைய மாக்கட னீக்கிக், கடம் பறுத்து'' பதிற் 12—3; 17: 4—5; "மால்கட லோட்டிக் கடம்பறுத்து'' அக 347—4. "கடம்புமுத றடிந்த காவலனை'' சிலப் 29: ஊசல்வரி

14. **வென்றெறி முழங்கு பணை**: வென்றெறி முரசின்'' அக 137—5; "வென் றெறி முரசின் வேந்தர்'' "வென்றிரங்கும் விறன் முரசினோன்'' புற 112—4; 387: 19. "வென்றி முரசி னிரங்கி'' கார்நாற் 35.

15. **நாரரி நறவு**: "நாரரி நறவ முகுப்ப'' பரி 6: 49; "நாரரி நறவுண்டிருந்த தந்தைக்கு'' "நாரரி நறவின்'' அக 216: 3; 296: 9. "நாரரி, நனைமுதிர் சாடி நறவின்'' "நாரரி தேறன் மாந்தி'' "நாரரி நறவின்'' புற 297: 5—6; 367: 7; 400: 14.

**ஆரமார்பு**: முருகு 104; குறுந் 321: 1; கலி 52—15; 79: 11—2; 135: 17—8; புற 19: 19; 59: 1; பு. வெ மா 43; சீவக 699; பெருங்(1) 47: 134.

16. **போரடுதானை**: "போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ'' பதிற் 23: 10; 43: 11. "போரடு தானையான்'' பரி 12: 86; "போரடு தானைக் கட்டி'' அக 226: 16; "போரடு தானை எவ்வி'' புற 233: 6; "போரடு தானைப் பொலந்தேர் வளவ'' தொல். புற 36: 1—2 நச். மேற்.

17—8. **ஓடையானை**: பதிற் 34: 6—7; நெடுநல் 169, நற் 296: 2—3; பரி 18: 27; 21: 1—2; கலி 86: 1; அக 100: 9—10; 201: 1—3; 358: 13; 387: 18; புற 3: 7—11; 126: 1; பு. வெ. மா 98; 170. சீவக 7; சிலப் 3: 123—4.

18 **உயர்மருப்பியானை**: "ஒளிறேந்து மருப்பிற் களிறு'' நற் 284: 9; "உயர் மருப் பியானை'' அக 148: 3; "உயர்மருப் பேந்திய வரைமருள் நோன் பகடு'' "உயர்மருப் பியானை'' புற 161: 17; 334: 8.

19. "பெருங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து, மருந்தில் கூற்றத் தருந் தொழில் சாயாக், கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி" *புற* 3: 11—3; "யானை யெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச், சேனைத் தலைவராய்ச் சென்றோ ரும்" *நாலடி* 3. "மழகளிற் றெருத்தின் மைந்துகொண் டிருந்த, மன்ன குமரன்" பெருங்(!) 33: 130—1.

20. **பலர் புகழ் செல்வம்:** "பலர் புகழ் திருவின்" *அக* 338 : 5.

19—20 **நின் செல்வம் கண்டிக்கும்:** "நின் செல்வம், வேல்கெழு குரிசில் கண் டேனாதலின்" *புற* 198: 9—10.

21. **சிலம்பில் கவரி துஞ்சல்:** "கவரிமா னேறு கண்படை கொள்ளும், தகரங் கவினிய தண்வரைச் சாரல்" பெருங்(!) 50: 20—1.

23. "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்" *நற்* 170 : 6.

23—4. "அரவழுங்கும் பெருந்தெய்வத்து, வளைஞரலும் பனிப்பௌவத்துக், குணகுட கடலோ டாயிடை மணந்த" *பதிற்* 51: 13—5. "வடாஅது பனிபடு நெடு வரை வடக்குந், தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்" *புற* 6: 1—2.

25. **மறந்தபக் கடந்தல்:** "மலைத்த தெவ்வர் மறந்தபக் கடந்த" *பதிற்* 65—3.

---

## 2. மறம்வீங்கு பல்புகழ்.

12. வயவர் வீழ வாளரின் மயக்கி
இடங்கவர் கடும்பி னரசுதலை பணிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே
தாரணி யெருத்தின் வாரல் வள்ளுகிர்
அரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்
தோடுகொ ளினநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநக ரரசுதுயி லீயாது
மார்திரம் பணிக்கு மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிதுநின் செல்வங் கேட்டொறும்
காண்டல் விருப்பொடு கமழுங் குளவி
வாடாப் பைம்மயி ரிளைய வாடுநடை
அண்ணன் மழகளி றரிஞிமி றோப்பும்
கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கற்
றொல்பசி யுழந்த பழங்கண் வீழ
எஃகுபோழ்ந் தறுத்த வானிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன
நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை

நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய
அமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.

இதுவுமது.
பெயர்—மறம்வீங்கு பல்புகழ். (8).

**பதவுரை** *1—3.* **வயவர்** *வீழ* **வாள்** *அரில் மயக்கி—தம்முடனே போர்செய்யும் வீரர் படும்படி வாட்பிணக்கமுண்டாகப் போர்செய்து, இடம் கவர் கடம்பின் அரசு தலை பனிப்ப—அவர்க்குரிய நாட்டைக் கவர்ந்துகொள்ளும் படைத்தலைவரையுடைய பகை வேந்தர் தலை நடுங்க, கடம்பு முதல் தடிந்த—அவருடைய காவல் மரமாகிய கடம்பின் அடியை வெட்டின, கடு சின வேந்தே—மிக்க சினத்தையுடைய வேந்தே,*

*4—9. தார் அணி எருத்தின்—மாலையை ஒத்த பிடரி மயிரினையும், வாரல் வள் உகிர்—நீண்ட கூரிய நகங்களையுமுடைய, அரிமான் வழங்கு சாரல்—சிங்கவேறு உலாவும் மலைப்பக்கத்திலே, பிறமான்—பிறவிலங்குகளின், தோடு கொள் இன நிரை—தொகுதியைக் கொண்ட இனமாகிய நிரை, நெஞ்சு அதிர்ந்தாங்கு—நெஞ்சு நடுங்கினாற்போல, முரசு முழங்கு நெடு நகர் அரசு துயிலீயாது—முரசு ஒலிக்கின்ற உயர்ந்த அரண்மனைக்கண்ணே அரசுகள் துயிலாமல், மாதிரம் பனிக்கும்—திசைகளிலிருந்து நடுங்குதற்கு ஏதுவாகிய, மறம் வீங்கு பல்புகழ்—மறப்புகழாகிய மற்றைப் புகழினும் மிக்க பல்புகழ், கேட்டற்கு இனிது—கேட்டற்கு இனிதாகும்.*

*9—14. நின் செல்வம் கேட்டொறும்—நினது செல்வத்தைக் கேட்குந்தோறும், காண்டல் விருப்பொடு—நின்னைக் காண்டல் வேண்டுமென்ற விருப்பத்தால், கமழும் குழவி—மணங்கமழும் காட்டு மல்லிகையால், வாடா பை மயிர்—சோர்வில்லாத பசிய மயிரினையும், ஆடு நடை—வெற்றியைத் தோற்றுவிக்கும் நடையினையுமுடைய, அண்ணல் இளைய மழ களிறு—தலைமையினையுடைய இளைய களிற்று யானை, அரி ஞிமிறு ஓப்பும்—வரிகளையுடைய ஞிமிறுகளை ஓட்டுகின்ற, கன்று புணர் பிடிய குன்று பல நீந்தி—கன்றோடு கூடிய பெண் யானைகளையுடைய குன்றுகள் பலவற்றை அரிதிற் கழித்து வந்து, அவண் இறுத்த—அவ்விடத்தே தங்கிய, இரு பெரு ஒக்கல்—மிகப்பெரிய சுற்றத்தின்,*

*15—25. தொல் பசி உழந்த பழங்கண் வீழ—தொன்றுதொட்ட பசியால் வருந்திய துன்பம் நீங்கும்படி, எஃகு போழ்ந்து அறுத்த*

— அரிவாளாற் பிளந்து அறுக்கப்பட்ட, வால் நிண கொழு குறை —வெள்ளிய நிணத்தையுடைய கொழுவிய குறையாகிய, மை ஊன பெய்த வெண்நெல் வெண்சோறு— ஆட்டுத் தசையை இட்டு ஆக்கின வெள்ளிய நெல் அரிசியின் வெள்ளிய சோற்றை, நனை அமை கள்ளின் தேறலொடு மாந்தி—அரும்பில் அமைத்த கள்ளாகிய தெளிவுடனே உண்டு, நீர் படு பருந்தின் இரு சிறகு அன்ன—மழை நீரில் வருந்திய பருந்தினது கரிய சிறகை ஒத்த, நிலம் தின் சிதார்—மண் தின்ற கந்தையை, களைந்த பின்றை—களைந்த பின்பு, நூலா கலிங்கம் வால் அரை கொளீஇ—நூலா நூலாகிய பட்டு நூல் முதலியவற்றுற் செய்த கலிங்கத்தை வெள்ளிதாகிய அரையிலே உடுத்தி, வணர் இரு கதுப்பின்—கடை குழன்ற கரிய கூந்தலினையும், வாங்கு அமை மெல் தோள்—வளைந்த மூங்கிலையொத்த மெல்லிய தோளிணையுடைய, வசை இல் மகளிர்—குற்றமில்லாத விறலியர், அயர்பு— அமர்ந்து, மெய் ஆர்த்த சுற்றமொடு—உண்மை மகிழ்வால் ஆரவாரித்த சுற்றத்தோடு, நின் பெரு கலி மகிழ்வு நுகர்தற்கு இனிது—நின் பெரிய ஆரவாரத்தையுடைய ஓலக்கத்துச் செல்கின்ற விநோத மகிழ்ச்சி அநுபவித்தற்கு இனிதாகும்.

**முடிபு: வேந்தே நின் செல்வம் புகழ் கேட்டற்கினிது; நின் பெருங்கலி மகிழ்வு நுகர்தற்கினிது என்க.**

(ஆ-ரை) வயவர்—வீரர். அரில்—பிணக்கம். இப்பொருட்டாதல் "நூலின் வலவா நுணங்கரின் மாலை" (பொருந 161) என்புழிக் காண்க மயக்கி—போர் செய்து. "பெருங்களிற் றினத்தொடு...... இரும்புலி மயக்குற்ற" (கலி 48: 6—7) என்புழி 'மயக்குற்ற—போர் செய்தலுற்ற' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தவாறு காண்க இனி, வாளரின் மயக்கி எனக் கொண்டு 'வாள் வீரராற் கலக்கி' என்றுரைப்பினுமமையும். வீரர் படும்படி போர் செய்தலோடு அவர்க்குரிய நாட்டையும் வௌவும் ஆற்றல் வாய்ந்த சுற்றத்தையுடைய வேந்தராதலின், 'இடங்கவர் கடும்பின் அரசு' என்றார். 'மயங்கமர் மாறட்டு மண்வௌவி வருபவர்' (கலி 31—9) என்றார் பிறரும். ஈண்டுக் கடும்பு என்றது படைத்தலைவரை. "உரைசெல வெறுத்த வவ னீங்காச் சுற்றமொடு" (மலைபடு 3 6) என்புழிச் சுற்றம் என்பதற்குப் 'படைத் தலைவர்' என நச்சினார்க்கினியர் உரைத்தவாறு காண்க அரசு என்றது கடம்பைக் காவல் மரமாகவுடைய பகைவேந்தரை. 'வயவர் வீழ வாளரின் மயக்கி, இடங்கவர் கடும்பி னரசு' என அப்பகைவேந்தரின் ஆற்றலை எடுத்துக் கூறியது, அவ்வாற்றலுடையாரை வென்ற சேரலாதலின் பேராற்றலைப் புலப்படுத்தற் பொருட்டென்க. இவ்வாறு பகைவரின் ஆற்றலைக் கூறுமாற்றால் அவரை வெல்லும் வேந்தனின் பேராற்றலைப் புலப்படுத்தும் முறையை,

"வெல்போர் வேந்தர் முரசுகண் போழ்ந்து" பதிற் 79: 12.

"தெண்கடல் வளைஇய மலர்தலை யுலகத்துத்
தம்பெயர் போகிய வொன்னார் தேய" பதிற் 88: 3—4.

"கழிந்தோர் உடற்றுங் கடுந்தூ வஞ்சா
வொளிறுவாள் வயவேந்தர்
களிறொடு கலந்தந்து
தொன்று மொழிந்து தொழில் கேட்ப" பதிற் 90: 5—8.

என மேல்வருவனவற்றிலுங் காண்க.

அரசு தலைபனித்தல் சேரலாதனின் பேராற்றலைக் கண்டு. "அரைசுதலை பனிக்கு மாற்றலை யாகலின்" (புற 42—8) எனப் பிறண்டும் வருதல் காண்க. பகைவரை வென்றும் சினந் தணியப் பெறுனய் அவர் காவல் மரமாகிய கடம்பினை அடியோடு வெட்டி வீழ்த்தியதனல் "கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே" என்றுர். "கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின், நெடுஞ்சேரலாதன்" (பதிற் 20: 4—5) என வருதல் காண்க.

4—9. அரிமான் வழங்கும் சாரற்கண் பிறமான் நெஞ்சதிர்ந்தாங்கு நெடுநகர்களில் அரசர்கள் துயிலாமல் திசைகளிலிருந்து நடுங்குதற்கேது வாகிய மறம்வீங்கு பல்புகழ் கேட்டற்கு இனிது என்க.

அரிமான்—சிங்கம். அதன் பிடரிமயிர் மாலைபோல் தூங்கலின் 'தாரணி யெருத்தின் அரிமான்' என்றுர். தார்—மாலை. அணி—உவமவுருபு. "மின் னணி நுண்ணிடை" (திருக்கோவை 342) என்புழிப்போல. எருத்து—பிடரி. ஈண்டு அதன் கணுள்ள மயிர்க்காயிற்று. ஏருதல் தோன்றத் 'தாரணி யெருத்தின்' என்றுர். வாரல், அல்சாரியை. வார்—நீட்சி. வள்—கூர்மை. தாரணி எருத்தின் என்றதனல் அஞ்சத்தகு தோற்றமுடைமையும், வள்ளுகிர் என்றதனற் பொருதற்கேற்ற கருவியுடைமையுங் கூறினர். "போருகிர் வள்புலி" (திருவாசகம். திருவார்த்தை 8) என வருதல் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. சிங்கம் உலாவும் மலைப்பக்கத்திலே பிற விலங்குகள் தோடு கொள்இன நிரையாக வாழினும் அதனை வெல்லும் ஆற்றலின்மையால் அஞ்சி நெஞ்சு நடுங்கி வாழ்வனவாயின. "நாகநடுங்கச் சிங்கம் வேட்டந்திரி சரிவாய்" (திருக்கோவை 156) என வருதல் காண்க. வழங்குதல்—உலாவுதல். பிறமான் என்றது மலைப்பக்கத்தில் வாழும் புலி, யானை, மான் முதலான விலங்குகளை. தோடு—தொகுதி. அரசர் பலர் ஒருங்கு கூடியும் அதனல் வலிபெறுராய்ச் சேரலாதனுக்கு அஞ்சி நடுங்குமாறு தோன்றப் "பிறமான், தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந்தாங்கு பனிக்கும்" என்றுர். சேரலாதனுக்குச் சிங்கமும பகையரசர்களுக்குப் பிற விலங்கினங்களும் உவமை.

"இருப்புலி கொன்று பெருங்களி றடூஉம்
அரும்பொறி வயமா னனையை" பதிற் 75: 1—2.

எனப் பிறருங் கூறுமாறு காண்க.

மாக்கடல் நீக்கிக் கடம்பறுத்தல், இமயம் குமரியென்னும் எல்லைகளுக்குட்பட்ட நாட்டின் மண்மீக் கூறுநர் மறந்தபக் கடத்தல் முதலியவற்றுலாய மறப்புகழைக் கேட்டு அப்புகழ்ச்சிக்குக் காரணமாய வலியையுடைய சேரன் தம்மேல் வருதலுண்டாம் என்று திசைதொறும் இருக்கும் அரசுகள் அஞ்சித் துயிலாது நடுங்குதலின் 'அரசு துயிலீயாது மாதிரம் பனிக்கும் மறம் வீங்கு பல்புகழ்' என்றுர்.

"விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலு முண்டென் றலமந்து
நெஞ்சுநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே" புற 31: 12--7.

எனப் பிறண்டும் வருதல் ஈண்டறியற் பாலது.

முரசு என்றது ஈண்டு ஏமமுரசை. "ஏம முரச மிழுமென முழங்க, நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற், றவிரா வீகைக் கவுரியர் மருக" (புற3: 3 5) என வருதல் காண்க. இவ்வுலகிற்குக் காவலாக முரசு முழங்கும் உயர்ந்த அரண்மனையை இடமாகக்கொண்டும் அதனால் வலிபெறுமல் துயிலாது நடுங்குமாறு தோன்ற 'முரசு முழங்கு நெடுநகர்' எனப் பகையரசரின் அரண்மனையைச் சிறப்பித்துக் கூறினர். அரசர்கள் அரண்கொண்டும் அச்சத்தால் துயிலாமை "தொன்மருங் கறுத்த லஞ்சி யரண்கொண்டு, துஞ்சா வேந்தரும்" (பதிற் 81; 35—6) என்பதனாலுமறிக. அரசு என்பது பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணைப் பெயராகலின் அரசுகள் என உரைக்கபபட்டது. "துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே" என்புழி அரசு—அரசுகள் எனப் புறப்பாட்டுரைகாரர் (புற 31: 17) பொருளுரைத்தவாறுங் காண்க.

துயிலீயாது என்பது துயிலாது என்னும் வினைத் திரிசொல். துயிலாமல் எனத் திரிக்க. இனித் திரியாது, இடத்து நிகழ் பொருளின் தொழிலை இடத்திற்கேற்றி, மாதிரமானது அரசு துயிலீயாது பனிக்குமென அம்மாதிரத்தின் வினையொடு முடிப்பினும் அமையும் மாதிரம்—திசை. பனிக்கும் புகழ் என்பது 'நோய் தீரு மருந்து' போனின்றது. பனிக்கும் என்னும் பெயரெச்சம் புகழ் என்னும் ஏதுப் பொருண்மை கோடல், "நிலனும் பொருளும்" என்னும் சூத்திரத்தில் (தொல். வினை 37) கருவிக்கணடங்கும்.

மறம் வீங்கு பல்புகழ் என்றது அரசர்க்குச் சிறந்த மறப்புகழ் கல்வி ஈகை முதலியவற்றால் வரும் மற்றைப் புகழினும் மிக்க பல்புகழ் என்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்கு மறம்வீங்கு பல்புகழ் என்று பெயராயிற்று.

அரசர்க்கு மறப்புகழ் சிறந்த புகழாதல், "அடுதிற லுயர்புகழ் வேந்தே" (மதுரைக் 130)என்பதனாலுமறிக. மறம்வீங்கு பல்புகழ் என்பதற்கு வீரத்தான் மிகுந்த பலவாகிய புகழ் எனினுமாம். பகையரசர்க்கு நடுக்கத்தை விளைக்கும் மறப்புகழ், இரவலர் முதலாயினர்க்கு இன்பத்தை விளைத்தலின் 'மறவீங்கு புகழ் கேட்டற் கினிது' என்றார். புகழ் என்பது சாதி யொருமை யாகலின் இனிது என்னும் ஒருமைப் பயனிலைகொண்டது.

9—14. நின்செல்வத்தைக் கேட்குந்தோறும் நின்னைக் காணும் விருப்பத்தாற் குன்றுபல நீந்திவந்து அவண் இறுத்த சுற்றம் என்க.

சேரலாதனின் மறப்புகழைக் கேட்குந்தோறும் அமர்கடந்து பெற்ற பெருஞ்செல்வமுடையான் என்பதும் அறியப்படுதலின் 'மறம்வீங்கு புகழ் கேட்டற்கினிது; நின்செல்வம் கேட்டொறும்' என்றார். அச்செல்வ மெல்லாவற்றையும் வானநாண வரையாது ஈயும் சேரன்பாற் சென்றாற் பெறலாம் என்னும் எண்ணத்தாற் பரிசில் வாழ்க்கைப் பரிசிலர்க்கு அவனைக் காண்டற்கு விருப்புண்டாதலின் 'செல்வம் கேட்டொறும் காண்டல் விருப்பொடு' என்றார். விருப்பொடு குன்றுபல நீந்தி வந்து இறுத்த என முடிக்க. சேரநாட்டுக் குன்றுகள் பலவற்றையும் கடத்தல் அரிதென்றெண்ணாது காண்டல் விருப்பத்தால் அரிதிற் கழித்துச் செல்லுதலாற் குன்றுபல நீந்தி' என்றார். அக்குன்றுகள் பலவும் யானை முதலிய விலங்குகளையுடைமையால் எழிதிற் கழித்தற் கரியனவென்பார், 'அண்ணன் மழகளிறு அரிஞிமி றோப்பும், கன்று புணர் பிடிய குன்று' என்றார். வள்ளியோரை நினைந்து இரவலர் அரியவழி பலவற்றையுங் கடந்து செல்லல்,

> "ஆனினங் கலித்த வதர்பல கடந்து
> மானினங் கலித்த மலைபின் னொழிய
> மீனினங் கலித்த துறைபல நீந்தி
> யுள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறியாழ்
> சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண" புற 138: 1—5.

என வருதலானுமறிக.

குளவி—காட்டுமல்லிகை என்பர் நச்சினார்க்கினியர். (முருகு 191 உரை) 'மலைமல்லிகை' என்பர் புறநானூற்றுரைகாரர் (புற 168: 12 உரை) 'மலைப் பச்சை' என்பர் திவாகரரும் பிங்கலரும். கடுப்புடைப் பறவையாகிய குளவியை நீக்குதற்குக் 'கமழுங் குளவி' என்றார். குளவி மணமுடைத்தாதல், "கான்மிகு குளவி" (பதிற் 30: 23) "நாறிதழ்க் குளவி"(புற 380: 7)என வருவனவற்றானுமறியப்படும். குளவியால் ஓப்பும் எனமுடிக்க.

பைம்மயிரினையும் ஆடு நடையினையுமுடைய களிறு என்க. களிற்றின் உடம்பில் மயிர் நிமிர்ந்து நிற்பினும் பசுமையுடைத்தாகலின் 'வாடாப் பைம் மயிர்' என்றார். இளைய களிறு என இயையும். ஆடுநடை என்பதற்கு அசைந்த நடை என்றுரைப்பினுமமையும். இளைய என்பதனாற் களிற்றின் இளமை கூறப்பட்டமையின் மழகளிறு என்பது பெயர் மாத்திரையாய் நின்றது.

வரிகளையுடைய ஞிமிறாதலின் 'அரிஞிமிறு' என்றார். "அணிமிகு வரி ஞிமிறு" (குறிஞ்சி 111)எனப் பிறரும் கூறுதல் காண்க. அரி—வரி பு. வெ. மா. 237 உரை. கன்றோடுகூடிய பிடியைப் புணர்ந்த களிறு அப்பிடியில் வீழ்கின்ற ஞிமிற்றை ஒப்புதற்கிடனாகிய குன்றாதலின், 'களிறு ஞிமிறோப் பும் கன்றுபுணர் பிடிய குன்று' என்றார். "கன்றுடை மருங்கிற் பிடிபுணர்ந் தியலும்......அண்ணல் யானை" (நற்.190)என வருதல் காண்க. களிறு பிடியில் வீழும் ஞிமிற்றை ஓப்பல்.

> "உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
> முருகு நாறுசெந் தேனினை முழைநின்றும் வாங்கிப்
> பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
> பருகு வாயினிற் கையினின் றளிப்பது பாராய்" கம்ப. சித்திரகூட 10.

என்பதனாலுமறியப்படும். இனி, களிறு ஞிமிறோப்பும் என்பதற்குக் களிறு தன் மதத்தில் வீழ்கின்ற ஞிமிற்றைக் குளவியால் ஓப்பும் என்றுரைப்பினு மமையும்.

"நெடுநிலை யாஅம் ஒற்றி நனைகவுள்
படிஞிமிறு கடியும் களிறே" அக 59: 8—9.

எனப் பிறண்டும் வருதல் காண்க. 'மழகளிற் றரிஞிமிறு' எனப்படாமையின் களிற்றில் மொய்க்கும் ஞிமிற்றைப் *பிடி ஓப்பும் எனல் பொருந்தாதென்க. ஓப்பும் குன்று என முடிக்க. குளவியும் யானையும் மலைக்குரியவாதல்,

"பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்
வல்வில் லோரிக் கொல்லிக் குடவரை" குறுந் 100.

என்பதனாலுமறிக. 'அவண் இறுத்த' என்புழி 'அவண்' என்னுஞ் சுட்டு ஒக்கல் இருக்கும் இடத்தைக் குறித்து நின்றது. சுற்றம் என்றது கூத்தர்ச் சுற்றத்தை. "கோடியர் தலைவ..... நின் னிரும்பே ரொக்கலொடு" பொருந 57—16. பாணர்ச் சுற்றமெனினு மமையும். இருபேரொக்கல் என்பதற்குக் கரிய பெரிய சுற்றம் என்றுரைப்பினுமமையும்.

விருப்பொடு (10) நீந்தி (13) இறுத்த ஒக்கல் (14)என்க.

15—25. ஒக்கற் பழங்கண் வீழ மையூன் பெய்த சோற்றைக் கள்ளின் தேறலொடு மாந்தி, நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ மகளிர் இழை யணிய நின் பெருங்கலி மகிழ்வு நுகர்தற்கு இனிது என்க.

ஒக்கற் பழங்கண் எனக் கூட்டுக. பழங்கண்—துன்பம். திருக்கோவை 329 பேர். அது பலநாள் உணவின்மையால் உண்டாகிய பசியால் வருந் திய துன்பமாகலின் 'தொல்பசி யுழந்த பழங்கண்' என்றார். அடுகின்ற பசி யால் மிக வருந்தியமை தோன்ற 'உழந்த' என்றார். "ஆடுபசி யுழந்த நின் னிரும்பே ரொக்கலொடு" (பொருந.61)எனப் பிறருங் கூறுதல் காண்க. வீழ (15) மாந்தி (18)என முடிக்க. எஃகு என்றது ஊனை வெட்டும் அரி வாளை. அதனாற் பிண்டமாகிய தசையைப் பிளந்து சிறு துண்டங்களாகக் குறைக்கப்பட்ட தசையை 'எஃகு போழ்ந்தறுத்த குறை' என்றார். தசை சிவந்திருப்ப அதனைப் பொருந்திய நிணம் வெண்மையதாகலின் 'வாணி ணம்' என்றார். நிணத்தையுடைய கொழுவிய தசையாகலின் 'கொழுங் குறை' என்றார். "பருத்திப் பெண்டிர் பனுவ லன்ன......நிணந்தயங்கு கொழுங்குறை" (புற 125: 1—2)எனப் பிறருங் கூறுதல் காண்க. கொழுங் குறை—கொழுவிய தசை. பெரும்பாண் 472 நச். குறைக்கப்பட்டமையின் தசையைக் குறை என்றார். குறையாகிய ஊன் என்க. மையூன்—ஆட் டுத்தசை; 'செம்மறியாட்டின் தசை' என்பர் புறநானூற்றுரைகாரர். (புற96: 72 உரை) சோற்றோடு ஊனையுங்கூட இட்டு ஆக்குதலின் 'ஊன் பெய்த சோறு' என்றார். இதனை,

* களிறறில் வீழும் வண்டைப் பிடிஓப்பல். "படுமதங் கவரும் வண்டு பைங் தளிர்க் கவரி யேந்திப், பிடிமகிழ்ந் தோப்ப நின்ற பெருங்களிற் றரசு" (சீவக2715) என்பதிற் காண்க.

"புகழ்படப் பண்ணிய பேருன் சோறும்" **மதுரைக்** 533.
"புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுதத
மலரா மாலைப் பந்துகண் டன்ன
வூன்சோற் றமலை" **புற** 33: 12—4.
"அட்டான் ருனுக் பொழுந்துவை யூன் சோறும்" புற 113: 2.

என வருவனவற்றுலும், "கோழூன்குறைக் கொழுவல்சி" என்பதற்குக் 'கொழுத்த இறைச்சியையுடைய கொழுந்திருக்கின்ற சோற்றினையும்; ஊனைக்கூட இட்டு ஆக்குதலிற் கொழுவல்சியென்ருர்' என்ற (மதுரைக் 141 நச்) உரையினுலும் நன்குணரலாம். இனி, ஊன்பெய்த சோறு என்பதற்குக் கறியாகிய ஊனை இட்ட சோறு என்றுரைப்பினும் அமையும். *செந்நெல் வெண்சோற்றை விலக்க வெண்ணல் வெண்சோறு என்ருர்.

நனையமை கள் என்றது தென்னை பனை ஈந்து முதலியவற்றின் அரும்பு விரியாத செவ்விப் பாளையில் அமைக்கப்படும் கள்ளை. கள்ளின் தேறல்—கள்ளாகிய தேறல். 'கட்டேறல்—கள்ளாகிய தெளிவு' புற 1:0: 12 உரை. இன் தவிர்வழி வந்தது. தேறலை இடையிடையே பருகிச் சோற்றை உண்டலின் 'சோற்றைத் தேறலொடு மாந்தி' என்ருர். "நிணந் தயங்கு கொழுங்குறை, பருஉக்கண் மண்டையொ டூழ்மாறு பெயர, வுண்கும்" (புற.125: 2 -4)என வருதல் காண்க.

'நீர்ப்படு பருந்தின் இருஞ்சிறகு' கிழிந்ததும் அழுக்கேறியதுமாகிய ஆடைக்குவமை. "கூதிர்ப் பருந்தின் இறஞ்சிற கன்ன, பாறிய சிதாரேன்" (புற 150: 1—2.)எனப் பிறரும் கூறுதல் காண்க. சிறகன்ன சிதாஅர் என்க. பாயலின்றிக் கிடத்தலின் மண்தின்ற கந்தையாகலின் "நிலந்தின் சிதாஅர்" என்ருர். நிலந்தின் என்றது "உண்டற் குரிய வல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலு மரபே" (தொல் பொருள் 19) என்ற சூத்திரத்து உம்மையாற் கொள்ளப்படும்.

நூலாக் கலிங்கம் என்றது ஒருவர் நூலா நூலாகிய பட்டுநூல் முதலாயவற்ருற் செய்த கலிங்கம் என்றவாறு. நூல் சினையும் கலிங்கம் முதலுமாகலின் அச்சினையோடு முதற்குள்ள ஒற்றுமை பற்றி, நூற்ற என்னும் பெயரெச்சத்தின் எதிர் மறையாகிய நூலாத என்னும் சினைவினையை முதன்மேலேற்றி வழுவமைதியாற் கூறினுர் என்க. கலிங்கம்—ஆடை. வாலரை—அழுக்கேறிய ஆடைகள் கிடத்தலின் வெள்ளிதாகிய அரை. "இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம், எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ" (மலைபடு 561—2)என்புழி. 'வெள்ளரை—அழுக்கேறிய சீலைகள் கிடத்தலின் வெள்ளிதாகிய அரை' என நச்சினூர்க்கினியர் உரைத்தவாறுங் காண்க.

மகளிர், கடைகுழன்ற கறுத்த மயிரினையுடையராகலின் 'வணரிருங் கதுப்பின்' என்ருர். "கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்" என்ருர் சிந்தாமணியினும். (சீவக 164). வணர் — கடைகுழன்ற. (கலி 57—1)நச். நெறித்த எனினும் அமையும். 'வணர்குரல்—நெறித்த மயிர்' எனப் பரிமேலழகர் உரைத்தல் காண்க. (பரி 10—89 உரை.) மகளிர்க்கு

* "செந்நெல் வெண்சோறு" நற். 367: 3.

ஊறு இனிதாதல் நோக்கித் தோளுக்கு மென்மை கூறினர். "வெண்ணெய்போன் றூறினியள்" எனச் சிந்தாமணியாசியர் கூறுதலுங் காண்க. (சீவக 480.)

தொல்பசியுழந்த பழங்கணுடையராய்க் குன்றுபல நீந்தித் திரிதரும் நல்கூர் வாழ்க்கையராயினும், வணரிருங் கதுப்பு வாங்கமை மென்றோள் முதலியவற்றால் அழகுடையராயினும் தம் ஒழுக்க நிலையில் தவறாதவர் என்பார் 'வசையின் மகளிர்' என்றார். மகளிர் என்றது விறலியரை. அவர்க்கு அரசன் இழைகளை 'அளித்தலின் "வயங்கிழை யணிய" என்றார். "மலர்ந்த வேங்கையின் வயங்கிழை யணிந்து, மெல்லியன் மகளிர் எழினலஞ் சிறப்ப...... நல்குவன் பலவே" (பதிற் 40: 22—31.) எனவருதல் காண்க. வயங்கு இழை, முத்துமாலை பொன்னரிமாலை முதலியன. "நாலின் வலவா நுணங்கரின் மாலை, வாலொளி முத்தமொடு பாடினி யணிய" (பொருந. 16க் - 2) "பொன்னின், ரொடையமை மாலை விறலியர் மலைய" (பெரும்பாண் 486—6)என வருவன காண்க. கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும் கூத்தன், தன் சுற்றமொடு சென்று அரசனால் தலைநா ளன்ன விருப்பொடு பன்னாள் உபசரிக்கப்பெற்று இன்புற்றானாகலின். 'அமர்பு, சுற்றமொடு நுகர்தற்கினிது பெருங்கலி மகிழ்வே' என்றான். அமர்பு என்பதற்கு மனம்விரும்பி என்றுரைப்பினும் அமையும். மெய் ஆர்த்த சுற்றம்—உண்டியும் உடையும் அணிகளும் பெற்ற உண்மை மகிழ்வான் ஆரவாரித்த சுற்றம். இனி, தன் மெய்யுடன் ஆர்க்கப்பட்டாற்போலப் பிரிவின்றித் திரியும் சுற்றமுமாம். சுற்றம் என்றது கூத்தற் சுற்றத்தை. மந்திரி முதலிய சுற்றத்தார் என்று உரைப்பாருமுளர்.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்பும் அவனது ஓலக்க விநோதச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

## பழையவுரை

7. துயிலீயாதென்பது துயிலாதென்னும் வினைத்திரிசொல்; துயிலாமலெனத் திரிக்க. இனித் திரியாது, 'யாறுநீ ரொழுகாது கிடந்தது' என்னும் வழக்குப்போல இடத்து நிகழ்பொருளின் தொழிலை இடத்திற்கேற்றி, மாதிரமானது அரசு துயிலீயாது பனிக்குமென அம்மாதிரத்தின் வினையொடு முடிப்பினும் அமையும். 8. மறம்வீங்கு பல்புகழென்றது அரசர்க்குச் சிறந்த மறப்புகழ் மற்றைப் புகழினும் மிக்க பல்புகழென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு மறம்வீங்கு பல்புகழ் என்று பெயராயிற்று. 8—9. நின் செல்வம் இனிது; யாது இனிதெனிற் பல்புகழ் கேட்டற்கு இனிதென முடிபுகொள்க. 9. கேட்டொறு மென்பதற்கு அச்செல்வத்தையென வருவிக்க. 21. நூலாக் கலிங்கமென்றது ஒருவர் நூலாநூலாகிய பட்டு நூல் முதலியவற்றாற் செய்த கலிங்கமென்றவாறு. நூலாமையென்னுந் தொழில் கலிங்கத்துக்குச் சினையாகிய நூல்மேலதாதெனின், அச்சினையோடு முதற்குள்ள ஒற்றுமை பற்றிச் சினை வினையை முதல்மேலேற்றி வழுவமைதியாற் கூறினனென்க. இனி நூலாநூற் கலிங்கமென்பான் நூலென்பதனைத் தொகுத்

துக் கூறினனென்பாரும் உளர். 25. நுகர்தற்கு இனிதுநின் பெருகலி மகிழ்வேயென்றது நின் பெரிய ஆரவாரத்தையுடைய ஓலக்கத்துச் செல்கின்ற விநோத மகிழ்ச்சி அனுபவித்தற்கு இனிதென்றவாறு.

வேந்தே (3) நின்செல்வம் (9) புகழ் (8) கேட்டற்கினிது; (9) நின் பெருங்கலி மகிழ்வு நுகர்தற்கினிது (25) · என வினை முடிபு செய்க.

இதனாற் சொல்லியது, அவன் வென்றிச் சிறப்பும் அவனது ஓலக்க விநோதச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி

1. **வயவர் வீழ:** "உறுபுலி யன்ன வயவர் வீழ" **பதிற்** 5-ம் பதி 10. 'வடிமணிப் புரவியொடு வயவர் வீழ" **பட்டினப்** 232.

2. "முனை, பனிப்பப் பிறந்து" **பதிற்** 4-ம் பதி "நின், காமர் கழலடி சேரா, நாமஞ்சா றெவ்வரி னடுங்கினள் பெரிதே" **கலி** 30: 19—21. "நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்ப" **பு. வெ. மா:** 128. "வேந்துதலை பனிப்ப வேந்துவாட் செழியன்" **சிலப்** 14: 5

3 **கடம்புமுத றடிந்த:** "கடம்புமுத றடிந்த காவலனைப் பாடி" **சிலப்** 29, ஊசல்வரி.

**சேரலாதன் கடம்பு தடிந்தது:** **பதிற்** 11: 12—3 அடிக்.

**கடுஞ்சின வேந்தே:** "கடுஞ்சின வேந்தே" "கடுஞ்சின வேந்தர்" **பதிற்** 30: 44: 70: 10. "கடுஞ்சின வேந்தன்" "கடுஞ்சின வேந்த னேவலி னெய்தி" **அக** 164; 14; 211: 11.

4. **வள்ளுகிர்:** **பொருந** 34; **சிறுபாண்** 136: 182; **குறிஞ்சி** 131; **குறுந்** 67: 3; 201: 3. **அக** 362: 5.

4—5. **வள்ளுகிர் அரிமான்:** "வள்ளுகிர் நோன்றாள் அரிமா" **நாலடி** 198.

5. **அரிமான்:** **பதிற்** 88, 15; **சீவக** 432; 3019; **பெருங்(!)** 44: 134.

**அரிமான் வழங்கு சாரல்:** "அரிமாவும் பரிமாவுங் களிறுங் கராமும், பெருமலை விடரகத் தொருங்குடன் குழீஇ" **கலி** 103: 18—9.

7. **முரசு முழங்கு நெடுநகர்:** "நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கும்" "முழவுகண் டுயிலாக் கடியுடை வியனகர்" **புற** 68: 17; 247: 8. "வான்றோய் நகருண், முழங்கு மதிரு முரசு" **பு. வெ. மா** 158. "வள்வார் முரச மதிர் மாநகர்" **கம்ப.** நகர 73.

8. **பல்புகழ்:** "கெடலரும் பல்புகழ்" "மாயாப் பல்புகழ்" **பதிற்** 48: 3; 90: 10. "பல்புகழ் முற்றிய கூடல்" **பரி** 17: 22—3. "பல்புகழ்த் தடக்கை" "பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்" **அக** 22: 5; 265: 4. "பல்புகழ் நுவலுநர் கூற" "பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே" **புற** 160: 15; 221: 1.

**மறம் வீங்கு பல்புகழ்:** "வென்றிப் பல்புகழ்" **மலைபடு** 544. "வெல்புக ழுயர்நிலை" "வெல்புகழ் மன்னவன்" **கலி** 105: 50; 118: 1. "அடுபுகழ் மேவலொடு" **அக** 214: 7. "விறற்புகழ், வசையில் விழுத்திணைப் பிறந்த, இசைமேந் தோன்றல்" "மறப்புகழ் நிறைந்த மைந்தினோன்" **புற** 159: 26—8; 290: 6. "விறற்புகழ் மன்னற்கு" **பழமொழி** 275. "வீங்கிய திண்டோள் வெல்புகழாய்" **சீவக** 1639. "சயப்புகழார் பலர் வாழும் தடங்குருகூர்" **திருவாய்** (3) 2—11.

11. **ஆடுநடை:** "ஆடுநடை யண்ணல்" **பதிற்** 44: 7; 86: 8.

12. **மழகளிறு:** **பதிற்** 16: 8; 32: 3; 84: 11. **கலி** 86: 1. **அக** 102 :9· **புற** 22: 8; 38: 1; 103: 7. **பு. வெ. மா** 162. **சீவக** 2917. **பெருங்(!)** 33: 130.

*அரிஞிமிறு:* "தருமணன் முற்றத் தரிஞிமி ரூர்ப்ப" **மதுரைக்** 684. "ஆர மார்பி னரிஞிமி ரூர்ப்ப" **அக** 102: 10.

*களிறு ஞிமிறோப்பல்:* "படுவண் டோப்பும்...... அண்ணல் யானை" **பெருங்(!)** 48: 27—9.

13. **கன்று புணர் பிடி:** "கனறுடை மடப்பிடி" **அக** 12: 15.

12—3. **களிறு பிடி கன்று:** **பொருந** 125—6. **மதுரை** 101—2. **நற்** 202: 3—4; 399: 6—8. **அக** 168: 9—10; 321: 9; 347: 12—3. **புற** 369: 26—7. **கம்ப.** நாட்டுப் 32.

**யானையையுடைய வழியை நீந்தல்:** "ஓங்கல் யானை யுயங்கி மதந்தேம்பிப், பன்மர வொருசிறைப் பிடியொடு வதியுங், கல்லுடை யதரகானம் நீந்தி" **அக** 295: 6—9

10—3. **குளவிய குன்று:** "பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவி" **நற்** 346—9.

13. **குன்று பல நீந்தி:** "குன்ற நீந்தி" **நற்** 212—6. "வெம்பர லதர குன்று பல நீந்தி" "கோடுயர் பிறங்கன் குன்றுபல நீந்தி" **அக** 33: 11; 393: 1.

14. **இருபேரொக்கல்:** **சிறுபாண்** 139—144. **பெரும்பாண்** 25. **மலைபடு** 157. **அக** 301: 23. **புற** 150: 13; 320: 14—5; 370: 3; 378: 13; 391: 8; 393: 10; 394: 16; 396: 23.

13—4. **இரவலர் குன்றுபல நீந்திச் செல்லல்:** "கன்முழை யருவிப் பன்மலை நீந்திச், சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததை" "குன்று மலையும் பலபின் னொழிய, வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென" **புற** 147: 1—2; 208: 1—2.

15. "பசித்த வொக்கற் பழங்கண் வீட" **புற** 389: 14.

**தொல்பசி:** **பெரும்பாண்** 253. **அக** 193: 10.

**பழங்கண்:** **அக** 48: 2—3; 174: 9. **புற** 389: 14.

16. **வானிணக் கொழுங் குறை:** "ஊனத் தழித்த வானிணக் கொழுங் குறை" **பதிற்** 21: 10. "செந்தீ அணங்கிய செழுநிணக் கொழுங்குறை" **அக** 237: 9. "இழுதி யன்ன வானிணக் கொழுங்குறை" **புற** 150: 9.

17. **மையூன்:** **நற்**83: 5. **புற**96: 7

**ஊன்பெய்த சோறு;** "ஊண மலைச் சிறுகுடி" கலி50: 13; "வானிணம் உருக்கிய வாஅல் வெண்சோறு" **அக**.107: 9 "எய்ம்மா னெறிதசைப் பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை" "நிணம்பெருத்த கொழுஞ் சோற்றிடை" **புற**177:13-4; 384: 15 "ஊன்களோ டவை பதஞ்செய்ய" **கந்த.** மகேந்திர நகர்புகு 29.

18 **நனையமைகள்:** **பதிற்** 40: 19; 65: 17; **அக**213: 7; 221: 1; 366: 11: **புற**297: 6; 396: 16

20. **சிதாஅர்;** **பொருந**81; 154; **புற**69: 3; 138: 5; 398: 19· 400: 10.

14-21: **பொருந**79-83;153-8; **சிறுபாண்** 2 5-45; **பெரும்பாண்** 467-479. **மலைபடு** 560-66; **புற**113: 1-4; 261: 6-10; 385: 5-7; 392: 13-9; 393: 9-19; 398: 16-23; 400: 16-7.

22. **வணரிருங் கதுப்பு:** "வாருறு வணர் கதுப்பு" **குறுந்**82: 1; "வெறி கமழ் வணரைம்பால்" "வாருறு வண ரைம்பால்" **கலி**57: 1; 58: 1. "வணர்சுரி ஐம்பால்" **அக** 152: 3; "வணரொலியைம் பாலார்" **இன்னு**15; "வணர்சுரி யைம்பாலோய்" **சிலப்**7: 31.

**வாங்கமை மென்றோள்:** "வாங்கமைத் திரடோள்" **மலைபடு**57; 'வாங்கமை மென்றோட் குறவர்மட மகளிர்' **கலி**39: 16; வாங்கமை புரையும் வீங்கிறைப் பணைத் தோள்" **அக**343: 1; "வாங்கமை மென்றோட் குறவர் மகளிரேம்" **திணைமொழி** 8. "வாங்கமை மென்றோண் மடந்தை" **நாற்** சூ139 மேற் 'கண்ணுஞ்' "பஞ்சி யனைய வேய்மென்றோள்" **சீவக**351; "வாங்கமைப் பணைத் தோள்' **சிலப்** 15: 201.

23. **வயங்கிழை:** **சிறுபாண்** 18; **பட்டினப்**218; **நற்** 299: 4; **ஐங்**210: 4; 234: 1; **கலி** 11: 5, 31: 12; **அக.** 306: 10; **புற** 222: 1; பெருங்(2)120: 96

***வயங்கிழை யணிய:*** *"வள்ளி மருங்குல் வயங்கிழை யணிய" புற 316: 9.*

***விறலியர்க்கு இழை:*** *"ஒண்ணுதன் மகளிர்க் காரம் பூட்டி" பதிற் 48: 2; "விறலியர், சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய"* **மலைபடு** 569-70. *"புறம் பெற்ற வயவேந்தன், மறம்பாடிய பாடினியும்மே, யேருடைய விழுக்களஞ்சிற், சீருடைய விழைபெற் றிசினே" "சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி...பாரி வேள்பாற் பாடினை செலினே" "பாடினி மாலை யணிய" "வாடா மாலை பாடினி யணிய" புற* 11: 11-3; 105: 1-8; 319: 14; 364: *1.*

---

## 3. பூத்தநெய்தல்.

13. தொறுத்தவய லாரல்பிறழ்நவும்
ஏறுபொருதசெறு வுழாதுவித்துநவும்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமையி னிரைதடுக் குநவும்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா வாம்ப லார்நவும்
ஒலிதெங்கி னிமிழ்மருதிற்
புனல்வாயிற் பூம்பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடுகவி னழிய நாமந் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க
ஊரிய நெருஞ்சி நீறுடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர் பனிக்கும் பாழா யினவே
காடே கடவுண் மேன புறவே
ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன
ஆறே யவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
அழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப

நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே.

துறை-செந்துறைப் பாடாண்பாட்டு,
வண்ணம்-ஒழுகுவண்ணம்.
தூக்கு-செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர்-பூத்தநெய்தல் (3).

**ப—ரை.** *1—10.* *தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்—ஆநிரை கட்டிய வயல்களாகிய ஆரல்மீன் உகழும் இடங்களும், ஏறு பொருத செறு உழாது வித்துநவும்—ஏறுகள் பொருதலாற சேறுபட்ட வயல்களாகிய உழாது விதைக்கும் இடங்களும், கரும்பின் பாத்தி பூத்த நெய்தல்—கரும்பு நிற்கும் பாத்தியிற் பூத்த நெய்தல், இரு சுண எருமையின் நிரை தடுக்குநவும்— அக்கரும்பு முதலாய வேறு இரையின் பாங்கரிற் செல்லாது பெரிய உடலிடத்தையுடைய எருமை நிரையைத் தடுக்கும் இடங்களும், கலி கெழு துணங்கை ஆடிய மருங்கின—ஆரவாரம் பொருந்தின துணங்கைக் கூத்தை மகளிர் ஆடிய இடத்தில் நின்று, வளை தலை மூதா ஆமபல் ஆர்நவும்—வளைந்த தலையையுடைய முதிய பசுக்கள் ஆம்பல்மலர்களையே நின்று தின்னுமிடங்களுமாகிய, ஒலி தெஙகின்—தழைத்த தெங்கினையும், இமிழ் மருதின்—புள்ளினம் ஒலிக்கும் மருதமரங்களையும், புனல் வாயில்—நீரோடும் வாய்த்தலைகளையும, பூ பொய்கை—பூக்களையுடைய பொய்கைகளையும், பாடல்சானற பயம் கெழு வைப்பின்—புலவராற் பாடுதல் முற்றுப்பெற்ற பயன்பொருந்திய ஊர்களையுமுடைய,*

*"0—19.* *நாடு கவின் அழிய—நாடுகள் அழகு அழியும்படி, நாமம் தோற்றி—அந்நாட்டு மக்களுக்கு அச்சம் தோன்றும்படி செய்து, கூற்று அடூஉ நின்ற யாக்கைபோல—கூற்றுவனாலே கொல்லப்படா நின்ற யாக்கை போலும்படி, நீ சிவந்து இறுத்த—நீ கோபித்துச் சென்றுவிட்ட, நீர் அழி பாக்கம்—வெள்ளத்தான் அழிவுபடினல்லது பகைவரான் அழியாத பாக்கங்கள், விரி பூ கரும்பின கழனி புல்லென—விரிந்த பூக்களையுடைய கரும்பினையுடைய வயல்கள் பொலிவு அழிய, திரி காய் விடத்தரொடு கார் உடை போகி—முறுகிய காயையுடைய விடத்தர் என்னும் மரத்தோடு கரிய உடைமரமும் நெடிதாக வளரப்பெற்று, சுவை தலை பேய் மகள் கழுது ஊர்ந்து இயங்க—கவைத்த தலைமயிரையுடைய பேய்மகள் பேயை ஊர்ந்து செல்ல, ஊரிய நெருஞ்சி நீறுடு பறந்தலை—பரந்த நெருஞ்சியையுடைய புழுதி பரந்த பாழ்பட்ட இடத்தையுடையவாய், தாது எரு மறுத்த கலி அழி மன்றத்து—தாதாகிய எரு ஒழிந்த ஆர*

வாரம் அழிந்த மன்றத்தையுடையவாய், உள்ளம் அழிய ஊக்குநர் மிடல் தபுத்து—அம்மன்றிலே போதற்கு உள்ளம் அழியச்செய்தே பின்னும் தம் கரும வேட்கையாற் போகமேற்கொண்டவருடைய வலியைக் கெடுத்தலானே, உள்ளுநர் பனிக்கும் பாழாயின—பின்பு போக நினைப்பார் நடுங்குதற்குக் காரணமாகிய பாழாயின.

20—28. காடே கடவுள் மேன—நின் நாட்டுப் பெருங்காடான இடங்களெல்லாம் கடவுளான் மேவப்பட்டன; புறவு ஒள் இழை மகளிரொடு மள்ளர் மேன—அந்நாட்டுச் சிறுகாடான இடங்களெல்லாம் விளங்கிய அணிகலத்தையுடைய மகளிரொடு நின் படையாளரான் மேவப்பட்டன; ஆறே அவ் அனைத்து—காடும் புறவும் அல்லாத பெருவழிகளும் கடவுளும் மள்ளரும் உலாவிப் போதரும் இடங்களாயின; அன்றி—இவை அல்லாமலும், ஞாலத்து கூலம் பகர்நர் குடி புறம் தரா—பூமியினகண் நெல முதலிய பண்டங்களை விற்கும் வாணிகரின் குடியைப் பாதுகாத்து, குடி புறந்தருநர் பாரம் ஓம்பி—தம் கீழ்க் குடிகளாகிய வரிசையாளரைப் புறந்தரும் மேற்குடிகளாகிய காணியாளர் குடும்பத்தைப் பாதுகாத்து, நீ காத்த நாடு—நீ பாதுகாத்த நாடு, அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது—செவ்வாய் சென்ற பக்கத்தில் சுக்கிரன் ஓடப்பெறாது, மழை வேண்டு புலத்து மாரி நிற்ப—மழை வேண்டும காலத்து மழைபொழிய, நோயொடு பசி இகந்து ஒரீஇ—நோயும் பசியும்விட்டு நீங்கபபெற்று, பெரும பூத்தன்று—பெருமானே பொலிந்தது.

முடிபு: நாடு கவினழிய நாமந் தோற்றிக் கூற்றடூஉ நின்ற யாக்கை போலும்படி நீ சிவந்து இறுத்த நீரழி பாக்கங்கள் கழனி புல்லென விடத்தரொடு உடைபோகப்பெற்றுப் பேய்மகள் கழுதூர்ந்து இயங்கப் பாழாயின; நீ காத்த நாட்டிற் காடு கடவுளான் மேவப்பட்டன; அந்நாட்டுப் புறவுகள் மள்ளரான் மேவப்பட்டன; அந்நாட்டு ஆறு அவ்வனைத்தாயிற்று; அன்றியும் கூலம் பகர்நர் குடிபுறந் தராக் குடி புறந்தருநர் பாரமோம்பி நீ காத்த நாடு மழை வேண்டு புலத்து மாரி நிற்ப நோயொடு பசியிகந்தொருவப் பெற்றுப் பூத்தது என்க.

(ஆ-ரை) 1—10. பிறழ்நவும் வித்துநவும் தடுக்குநவும் ஆர்நவுமாமாகிய, தெங்கினையும் மருதினையும் வாயிலினையும் பொய்கையினையும் வைப்பினையுமுடைய நாடு எனக. ஆநிரைகளுக்கு மேய்புலமாக இருந்த வயல்களில் நீர்நிறைந்து நிற்குமாறுதோன்றத் 'தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்' என்றார். தொறுத்த என்பது தொறு என்னும் பெயரடியாகப் பிறந்த பெயரெச்சம். தொறு—நிரை. இதனைத் "தொகைமலி தொறுவை யாளும் தோன்றல்" (சீவக 474) என்புழித் தொறு—நிரை என நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றானுமறிக. "இருவகைத் தொறுவும்" (பெருங் (1) 37 215) என வருதலின் தொறு என்பதற்கு பசுநிரை ஆட்டுநிரை ஆகிய

இருவகை நிரைகளையும் கொள்ளினும் அமையும். ஆரல்—ஒருவகைச் சிறிய மீன். "ஒழுகுநீ ராரல்" (குறுந். 25) என வருதல் காண்க. வயலில் ஆரல் உண்மை "கழனியாரல்" (பெருங்(3) 7: 29) என்பதனாலுமறிக.

ஏறுபொருதசெறு உழாது வித்துநவும் என்றது நீர்தேங்கி நிற்றலால் எருமைகள் உழக்கச் சேறுபட்ட வயல்கள் பின் ஏரான் உழப்படாது முளை விதைக்கும் இடங்களுமென்றவாறு.

"காரேறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவின்" பெரும்பாண் 210—2

என வருதல் காண்க. ஏறு என்றது காரேருகிய கடாக்களை. செறு—வயல். செய்யைச் செறுவென்பது அருவாநாட்டு வழக்கு என்பர் நச்சினார்க்கினியர். (தொல். எச். 4.)

கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல் என்றது கரும்பின் பாத்தியில் நீர் இடையருது நிற்றலின் தானே முளைத்துப் பூத்தநெய்தல் என்றவாறு. "கரும்பின், பாத்திப் பன்மலர்ப் பூத்ததும்பின்று" (புற 386: 10—11) என வருதல் காண்க. கரும்பு நடுதற்குப் பாத்திசெய்தலும் அதனுள் நீர் நிற்றலும் "கரும்புநடு பாத்தி யன்ன, பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே" (குறுந் 262) என்பதனாலுமறியப்படும்.

நெய்தல் எருமையின் நிரை தடுக்குநவும் என்றது நெய்தலானது அக்கரும்பு முதலாய மற்றோரிரையின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி எருமை நிரையைத் தடுக்கும் இடங்களுமென்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்குப் பூத்தநெய்தல் என்று பெயராயிற்று.

நெய்தலைப் பூத்த நெய்தல் என்றது, நெய்தன் மலர்களே இரையாகி எருமை நிரையைத் தடுத்தமையின். "வைகுறு விடியல் போகிய வெருமை, நெய்தலம் புதுமலர் மாந்தும்" (அக 100: 16—7) என வருதல் காண்க. பெரிய உடலிடத்தையுடைய எருமையாகலின் 'இருங்கண் எருமை' என்ருர். 'இருங்கண் மூரி—பெரிய உடலிடத்தையுடைய எருது' எனப் பழைய வுரைகாரர் உரைத்ததுங்காண்க. (பதிற் 67: 15 உரை) இருங்கண்—கரிய உடலிடம் எனினுமமையும். "இருள்நடந் தன்ன கருங்கோட் டெருமை" (திணை நூற் ஐம்148) என வருதல் காண்க. 'இருங்கண்' எனவும் 'நிரை எனவும் முன்னும் பின்னும் எருமைக்கு அடைகொடுத்துக் கூறியது பெரிய உடலிடத்தையுடைய எருமையின் நிரை நின்று தின்றற்கேற்ற மிக்க பூக்களைப் பூக்கும் நெய்தலின் வளமிகுதி தோன்றற்பொருட்டு. இனி எருமையின் இரை தடுக்குநவும் எனப் பிரித்து, பூத்த நெய்தல்கள் எருமைகளின் இரையாய் அவற்றை வேறு இரையின் பாங்கரிற்செல்லாது தடுக்குமிடங்களும் என்றுரைத்தலுமொன்று. கரும்பு நெய்தல் எருமை என்பவற்றை எடுத்துக் கூறியது, பகைவர் நாட்டின் நீர்வள நிலவளங்கள் நன்கு புலனுதற்பொருட்டு. "ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கு, நாடெனப் படுவது நினதே யத்தை" (புற 35: 10—11); "பழனம் படிந்த படுகோட் டெருமை...... உரனழிந்தோடு மொலிபுன லூரன் (திணைமொழி ஐம் 31) எனப் பிறவும் வருவன காண்க.

துணங்கை என்பது மகளிர் ஆடும் ஒருவகைக் கூத்து. "இலங்குவளை மடமங்கையர் துணங்கை" (மதுரைக் 159—60) எனவும், "மகளிர் தழீஇய துணங்கை யானும்" (குறுந் 31: 2) எனவும் வருவன காண்க. "பழுப் புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்" (முருகு 156 நச். மேற்) என்பது இதன் இலக்கணம். பாடும் பாட்டுக்களி னாலும், இயம்பும் வாச்சியங்களினாலும் காண்போரானும் துணங்கைக்கண் ஆரவாரமெழுதலின் 'கலிகெழு துணங்கை' என்றார். புறத்துப்போய் இரை தேட மாட்டாத முதிய ஆக்கள் துணங்கை ஆடிய இடத்து நின்று, வீழ்ந்து கிடக்கும் ஆம்பன் மலர்களைத் தின்னும் இடங்களைத் 'துணங்கை யாடிய மருங்கின், மூதா ஆம்பல் ஆர்நவும்' என்றார். "மகளிர், அணிந்திடு பல்பூ மரீஇ யார்ந்த, ஆ" (நற் 395) எனப் பிறரும் வருதல் காண்க. ஆ என்றது காராவை. அது தலையைத் தாழ்த்திச் செல்லுதலின் 'வளை தலை ஆ' என்றார். "வளைதலை மாத்த தாழ்கரும் பாசவர்" (பதிற் 67: 16) என வரல் காண்க. இப்பகுதியாற் பெருக ஆம்பல் சூடித் துணங்கையாடுவாரை உடையனவென அவ்விடங்களின் செல்வச் சிறப்புக் கூறியவாறாயிற்று. "மகளிர், இரவும் பகலும் பாசிழை களையார், குறும்பல் யாணர்க் குரவை யயரும்......புகாஅர்" (பதிற் 73: 5—9) எனப் புகாரின் செல்வச் சிறப்பைப் பிறரும் கூறுதல் காண்க.

பிறழ்ந, வித்துந, தடுக்குந என வந்தன வினைப்பெயர்த் திரிசொற்கள். உம்மை—எண்ணும்மை.

நிலநலத்தானும் நீர்க்குறைவின்மையானும் தெங்கு தழைத்து வளர்தலின், 'ஒலிதெங்கின்' என்றார். ஒலிதல்—தழைத்தல். "மஞ்ஞை, யொலி நெடும் பீலி" புற 50: 2—3 இமிழ் மருது—தன்னிடத்து இறைகொள்ளும் நாரை, சிரல், கிளி, மயில் முதலாய புட்கள் இமிழும் மருது. நாரை முதலியன மருதில் இறைகொள்ளல்,

"பழனப் பன்மீ னருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்" ஐங். 70: 1—2.

"இருஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை யுறங்குந் தண்டுறை யூரன்" அக 286: 6—7.

"கிளிவளர் பூ மருது" சீவக 264.

"மஞ்ஞை, பரித்தவை பழன நாரைப் பார்ப்பொடு
மருதிற் சேக்கும்" சீவக 1853.

என வருஉஞ் செய்யுட்பகுதிகளிற் காண்க. 'இமிழ் மருதென்றதற்குப் புள்ளி மிழ் மருதென்று ஒரு பெயர் வருவிக்க' என்பர் பழையவுரைகாரர். புள்ளினங்கள் ஒலித்தலின் 'இமிழ்' என்னும் பொது வினையாற் கூறினர். "புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல் (புற 15: 4) எனப் பிறரும் கூறுதல் காண்க.

புனல் வாயில் என்றது பொய்கைநீர் வயலுக்குச் செல்லும்பொருட்டு அதன் முன்னே படுத்த மதகை, புனல் வழங்கும் வாயிலாதலின் 'புனல் வாயில்' என்றார். இது 'வாய்த்தலை' என்றும் வழங்கப்பட்டமை, 'புனல் வாயில்—நீரோடும் வாய்த்தலை' என்னும் புறப்பாட்டுரையானறியப்படும்.

(புற 135: 25 உரை) 'வாய்த்தலையினின்றும் குதித்துவரும் வாய்க்கானீர்' (சிலப் 10: 90 அடிநல்) எனவும் 'புனலாலே வாய்க்கால் உட்கரை முரிதலின்......வாய்த்தலையிலே மொய்த்தார் படலிடுதற்கென்க' (சீவக 40 நச்) எனவும் வரூஉம் உரைப்பகுதிகளில் வாய்த்தலையின் வேறாக வாய்க்கால் கூறப்படுதலின் புனல்வாயில், வாய்க்கால் எனல் பொருந்தாதென்க. புனல் வழங்கும்படி வாய்த்தலைகளமைக்கப்பட்டமை,

"காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை" சிலப் 10: 108.

"பழங்கொள் தெங்கிலை யெனப் பரந்து பாய்புனல்
வழங்கமுன் னியற்றிய சுதைசெய் வாய்த்தலை" சீவக 40.

என வருவனவற்றாலுமறியப்படும்.

பொய்கையென்பது இடமகன்றதும் நன்னீரையுடையதுமாகிய நீர்நிலை. "கண்ணகன் பொய்கை" (மதுரைக் 171) எனவும், "தேவரும் விழையுந் திருநீர்ப் பொய்கை" (பெருங்(1) 38: 74—5) எனவும் வருவன காண்க 'மானிடராக்காத நீர்நிலை' என்பர் நச்சினார்க்கினியர். (சீவக 337 உரை) பல வகைப் பூக்களையுடைமையாற் 'பூம்பொய்கை' என்றார்.

"அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை" பெரும்பாண் 293—4.

"முட்டாள சுடர்த்தாமரை
கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை" மதுரைக் 249—53.

என வருவன காண்க. பொய்கை வயற்கணுள்ளது. "தேங்கமழ் பொய்கை யகவய லூரனை" (ஐங். தெழு 45) என வருதல் காண்க.

பலவகைப் பயன்களும் பொருந்தலாற் புலவராற்பாடுதல் முற்றுப்பெற்ற நல்ல நாடாதலின் 'பாடல்சான்ற பயங்கெழு வைப்பின்' என்றார். "பாடல் சான்ற நன்னாட்டு" (மதுரைக் 331) என வரல் காண்க. 'பாடல்சான்ற—புகழ்தலமைந்த' எனினுமாம். பாடல்சான்ற (9) நாடு (10) என முடிப்பினும் அமையும். பயம் என்றது புது வருவாயினை. "யாணர்ப், பயன்றிகழ் வைப்பின்" (புற 7: 12—3) எனப் பிறாண்டும் வருதல் காண்க. வைப்பு—ஊர். பகைவர் நாட்டின் நலங்களையெல்லாம் எடுத்துக் கூறினார், அந்நலங்களெல்லாம் அழிந்து நாடு காடாகும்படி சேரலாதன் பகைவரை வெல்கின்ற சிறப்புத் தோன்ற.

10—19. நாடு என்றது பகைவர் நாட்டை. கவினழிய என்றார் அழகு பொருந்திய நாடாதலின். நாட்டின் கவின், "தொறுத்தவய லாரல் பிறழ்நவும்...... பயங்கெழு வைப்பின் நாடு" என்றதனால் அறியப்படும். நாடு கவினழிய நாமந் தோற்றி என்றது நாட்டின் அழகழியும்படி எரியூட்டல் முதலாய செயல்களால் அந்நாட்டு மக்களின் உள்ளத்தே அச்சத்தைத் தோற்றுவித்து என்றவாறு. சேரலாதன் பகைவரது நாடு கவினழிய எரியூட்டியமை,

"யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
..............................................

அழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்'' பதிற் 15: 1—8

என்பதனுலுமறியப்படும். நாம்: நாமம் என உரிச்சொல் ஈறு திரிந்தது. நாம்—அச்சம். தோற்றி இறுத்த என முடிக்க. சிவந்து—கோபித்து, "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" என்பது தொல்காப்பியம். (தொல் உரி 76) இறுத்த பாக்கம் என முடிக்க.

கூற்ருவது: வாழ்நாள் இடையருது செல்லுங் காலத்தினைப் பொருள் வகையாற் கூறுபடுத்துங் கடவுள். அடூஉ நின்ற—அடப்படா நின்ற. என்றது கூற்றுவன் உயிரை அட்டுக்கொள்ளுங்கால் அஞ்சி வருந்திக்கிடக்கும் நிலையை. அந்நிலைக்கண் யாக்கை ஒருகாலைக்கு ஒருகால் அழகழியுமாறு போலப் பாக்கங்கள் சேரலாதன் சிவந்திறுத்துச்செய்யும் அழிவு செயல்களால் ஒருகாலைக் கொருகால் அழகழிதலின், 'கூற்றடூஉ நின்ற யாக்கை போல, நீ சிவந்திறுத்த பாக்கம்' என்ருர். 'யாக்கைபோல' என்புழிப் போல வென்பதனைப் போலும்படியென வினையெச்ச நீர்மையாக்கி, போல்கின்றது மேல்வருகின்ற பாக்கமாக உரைக்க. இனி, யாக்கைபோல(11) நாடுகவினழிய(10) என மாறிக்கூட்டி உரைப்பினும் அமையும்.

நீரான் அழிவுபடினல்லது பகைவரான் அழியாத பாக்கம் என்பார் 'நீரழி பாக்கம்' என்ருர்.

"உவலை சூடி உருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே'' பதிற் 28: 12—4.

"தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்ருென் றறியாத புரிசைசூழ் புனலூரன்'' கலி 67: 3—5.

என வருவன ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. நீர் என்றது யாற்றுநீரை. ஆகவே பாக்கம் என்றது நீர்க்கரைக்கணுள்ள ஊர்க்குப் பெயராமாறு அறியப்படும். பாக்கம் என்பது நெய்தநிலத்து ஊர்க்கேயன்றி,

"நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறையறு மையிற் போகிச் சாரற
குறவர் பாக்கத் திழிதரு நாடன்'' குறுந் 339: 1—3.

என்புழிக் குறிஞ்சிநிலத்தூர்க்கும்,

"குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் ணிலைய பாக்கமு முடைத்தே'' ஐங் 439.

என்புழி முல்லைநிலத்தூர்க்கும் வந்தமைபோல, ஈண்டு மருதநிலத்தூர்க்குப் பெயராய் வந்தது. என்னை? "நாடுகவி னழியப் பாக்கம் கழனி புல்லென...பாழாயின" என வருதலின். இனி, நீரழி பாக்கம்—தம் நீர்மையழிந்த பாக்கங்கள் என் உரைப்பினுமமையும். பாக்கம் (12) பாழாயின (19) எனக் கூட்டுக. பாழாயின என்ற பன்மையாற் பாக்கங்கள் பலவாதல் அறியப்படும். பாய்புனலால் கழனிக்கண் கரும்புகள் நன்கு செழித்து வளர்ந்து பூத்திருத்தல் தோன்ற 'விரிபூங் கரும்பின் கழனி' என்ருர். "ஆய்க்கரும் படுக்கும் பாய்புன லூரன்" (அக 116: 4) எனவும்,

"அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் தோற்றம் போல

வாடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே யத்தை" புற 35: 8—11.

எனவும் வருவன காண்க. கழனி புல்லென என்றது விரிபூங்கரும்பினுற் பொலிவுபெற்ற கழனிகள் எரியூட்டலாற் பொலிவு நீங்கிப் புல்லென என்றவாறு.

"கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக .
வேம நன்னு டொள்ளெரி யூட்டினை" புற 16: 15—7.

என வருதல் காண்க.

விடத்தர் உடை முதலிய முள்ளுடை மரங்கள் அழிக்கப்படுதலின்றி வளர்ந்து பூத்துக் காய்க்கும்படி, நெடுங்காலம் மக்களின்றுகப் பகைவர் நாடு பாழ்பட்டமை தோன்றத் 'திரிகாய் விடத்தரொடு காருடைபோகி' என்றுர். விடத்தர், 'விடத்தேரை' எனவும், 'விடத்தே தொடரி' எனவும் வழங்கும். விடத்தரொடு—ஒடு உடனிகழ்ச்சி. உடை முள்ளுடைத்தாதல் "சிறியிலை யுடையின் சுரையுடை வான்முள்" (புற 324: 4) என்பதனுலுமறியப்படும். போகி—போகப்பெற்று. செயப்பாட்டுச் செய்தெனெச்சம். போகல் என்பது நெடுமையாகிய பண்புணர்த்தல், "வார்தல் போகல் ஒழுகல் மூன்றும், நேர் பும் நெடுமையுஞ் செய்யும் பொருள" (தொல். உரி 21) என்பதனுலறிக. 'உடை போகவெனத் திரிக்க' என்பர் பழையவுரைகாரர்.

பேய்மகளின் சேர்ந்து திரண்ட மயிர் நிமிர்ந்து நுனி கவராய் நிற்ற லின் கவைததலைப் பேய்மகள் என்றுர். கவைத்தலை கூறினர் எனினும் பிறழ்பல், பேழ்வாய் முதலாயினவுங் கொள்க.

"உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்" முருகு 47—51

எனத் திருமுருகாற்றுப்படையில் வருதல் காண்க. சேரலாதலான் பகை வர் நாட்டைப் பெரும்பாழ் செய்தலின் பேய்மகள் கழுதை ஊர்ந்து செல்ல என்றுர்.

"கணங்கொள் கூளியொடு கதுப்பிதத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும்
---------------------------------------------------------
அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான்" பட்டின 259—70.

எனப் பிறண்டும் வருதல் காண்க. கழுது—பேய் 'பேயில் ஒருசாதி' என் பர் நச்சினுர்க்கினியர். (மதுரைக் 633 வி. உரை) ஊர்தல்—ஏறுதல: "ஊர்ந் ததை .... புகழ்சால் வேழம்" பரி 21: 1—2. இனி. பேய்மகள் கழுது ஊர்ந்து செல்ல என்பதற்குப் 'பேய்மகளும் கழுதும் பரந்து செல்ல' எனினும் அமையும். "பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற். கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப" (மதுரைக் 632—3) எனவருதல் காண்க. நாடு பாழ் பட்டமையின் முள்ளையுடைய நெருஞ்சி எங்கும் வளர்ந்தமையால் 'ஊரிய நெருஞ்சி' என்றுர். "நெருஞ்சிக காடுறு கடுநெறி யாக மன்னிய...திருந்து

தொழில் வயவர் சீறிய நாடே" (பதிற் 26: 10—14) என வருதல் காண்க. பெயன் மழை புரவின்ருக வெய்துற்றுப் பறந்தலை நீருடுவதாயிற்று. பறந்தலை—பாழ்பட்ட இடம் புற 225: 7 உரை. போர்க்களம் எனினுமாம்.

தாதெரு மறுத்த மன்றம், கலியழி மன்றம் என இயையும். நிரைகள் ஊரினீங்குதலானும் சேரலாதன் தன்னுடனே பொருதார் தேயத்திலூர்களின் மன்றுகள் மக்களில்லையாய்ப் பாழாம்படி அழித்தலானும் தாதாகிய எருவும் ஆரவாரமும் இல்லாத மன்றங்களானமையின் 'தாதெரு மறுத்த கலியழி மன்றம்' என்ருர். தாதெரு—துகளாகிக்கிடக்கும் எரு பகைவர் ஊர்களின் மன்றுகளை அழித்தல் "அளியும்......மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட" (பெரும்பாண் 422—3) என்பதனுலுமறியப்படும், பாழான மன்றிலே போதற்கு மனவெழுக்சி அழியினும் பின்னும் தம் கருமவேட்கையாற் போகமேற்கொண்டவருடைய வலியைக் கெடுதலின் 'மன்றத்து உள்ளம் அழிய ஊக்குநர் மிடல் தபுத்து' என்றும், அதனுல் பின்பு போக நினைப்பார் அஞ்சி நடுங்குதலின் 'உள்ளுநர் பனிக்கும்' என்றும் கூறினர். உள்ளம்—மனவெழுச்சி பரி.2 : 36 பரிமேல். ஊக்குநர்—மேற்கொண்டவர். 'ஊக்கார்—மேற்கொள்ளார்' எனப் புறநானூற்றுரைகாரர் உரைத்தவாறுங் காண்க. (புற 122: 1 உரை) தபுத்துப் பாழாயின என முடிக்க ஊக்குநர் உள்ளுநர் என்பன வினைப்பெயர்கள். பனிக்கும் என்னும் பெயரெச்சம் பாழ் என்னும் பெயர் கொண்டது.

சேரலாதன் தான் காத்தநாட்டிற் பெருங்காடுகளைக் கெடுத்து நாடாக்கி வளம்படுத்தியதனுல் ஆண்டு மக்கள் வதிந்து தாம் வழிபடு தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைத்தமையின் 'காடே கடவுண்மேன' என்ருர். அந்நாட்டுச் சிறுகாடான இடங்களை நன்கு திருத்திப் படையாளர்கள் மகளிரோடு உறையும் படைநிலைகளாக்கியமையின் 'புறவு மகளிரொடு மள்ளர் மேன' என்ருர்.

'ஆனை மும்மத மாடிய காடெலா
மானை நோக்கியர் வாய்மது வாடின'' **சீவக** 2578.

என்பதும், 'இவன் திருத்துதலின் ஆனை திரிந்த காடுகளெல்லாம் கணவரொடு கூடிய மகளிர் கொப்புளித்த மதுவை யாடின' என்னும் அப்பகுதியுரையும் ஈண்டறியற்பாலன. காடு—பெருங்காடு. புறவு—சிறுகாடு.

காட்டில் ஆள்வழக்கற்ற பெருவழிகள், அத்தஞ்செல்வோர் அலறத் தாக்கிக் கைப்பொருள் வௌவும் ஆறலைகள்வரானும், கோள்வலுளியமும் வாள்வரி வேங்கையும் முதலாய விலங்குகளானும் இடையூறின்றி முன் சொன்ன கடவுளும் மள்ளரும் உலாவிப்போதரும் வீதிகளானமையின் 'ஆறே அவ்வனைத்து' என்ருர். அனைத்து என்னுது அவ்வனைத்து எனச் சுட்டு இரட்டித்தது அந்த அந்தத் தன்மையது என முன் நின்றவற்றின் பன்மை தோற்றற்கென்பது. கூலம்—பண்டங்கள். அவை நென் முதலாயின. பகர்நர் என்பதற்கு இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்கும் வணிகர் எனினுமாம். "பல்பண்டம் பகர்ந்து வீசும், தொல்கொண்டித் துவன்றிருக்கை" (பட்டினப் 211—2) என்புழி, 'பகர்ந்து — இலாபத்தை

வெளிப்படையாகச் சொல்லி' என நச்சினார்க்கினியர் உரைத்தவாறு காண்க. தாராவென்பது தராவெனக் குறுகிற்று.

குடியென்றது வாரம் முதலிய பகுதிதரும் வரிசையாளராகிய கீழ்க் குடிகளை. புறந்தருநர் என்றது அக்கீழ்க் குடிகளைப் புறந்தரும் மேற்குடிகளாகிய காணியாளரை உணவின் பிண்டம் உண்டி முதற்றுதலான் குடி புறந்தருநரைப் பாதுகாத்தல் ஏனைக்குடிகளுக்கும் பாதுகாப்பாக அமைதலானும், வருபடை தாங்கிப் பெயர் புறத்தார்த்துப் பொருபடை தரூஉம் கொற்றம், உழுபடை ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனுதலானும் சேரலாதன் குடிபுறந்தருநர் பாரம் ஓம்பினான் என்க.

'பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே'' புற 35: 32—4.

எனச் சான்றோர் கூறுதல் காண்க. பாரம்—குடி புற 35: 32 உரை- பார மோம்பி (25) நீ காத்த நாடு (28) என இயையும்.

மழைக் கோளாகிய வெள்ளி செவ்வாய் சென்று தங்கிய இராசியிற் சேர்ந்தாலும் அதன் பார்வைக்குட்பட்டாலும் மழை இலதாமாகலின் 'அழல் சென்ற மருங்கின் வெள்ளியோடாது மாரிநிற்ப' என்றார். ஓடாது—ஓடப் பெறாது. கோனிலை திரியிற் கோணிலை திரியும்; அஃதின்றாகப்பெற்று. கோனிலை திரிதலாற் கோணிலை திரிந்து மழையின்றுதல்,

''கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவளங் கூரும்'' மணி 7: 8—9

என்பதனாலுமறிக. அழல் என்றது செந்தீ வண்ணனாகிய செவ்வாயை. வெள்ளி—வெண்ணிறமுடைய சுக்கிரன். "வசையில் புகழ் வயங்கு வெண் மீன்" என்றார் பட்டினப் பாலையினும்.

சேரலாதனின் ஆட்சிச் சிறப்பால் பசியும் பிணியும் நாட்டினீங்கலின் "நோயொடு பசியிகந் தொரீஇ நீ காத்த நாடு" என்றார். "நீபுறந் தருதலின் நோயிகந் தொரீஇய யாணர் நன்னாடும்" (பதிற் 15: 23—4) என மேல் வருதலுங் காண்க. பசி முதலியன நீங்கல் ஒரு நாட்டின் இலக்கணமாதல்,

''உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு'' குறள் 734.

எனத் திருவள்ளுவர் கூறியவாற்றானுமறிக. பசியும் பிணியும் நீங்கலால் நாடு பொலிவுபெற்று விளங்குதலின் 'நாடு பூத்தன்று' என்றார்.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்பும் தன்நாடு காத்தற் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

'தொறுத்த' என்றும் (2) 'ஏறுபொருத' என்றும் (7) 'ஒலிதெங்கின் என்றும் (8) புனல்வாயில் என்றுமிருந்த நான்கடியும் வஞ்சியடியான் வந்தமையான் வஞ்சித்தூக்குமாயிற்று.

## மேற்கோள்.

"கறுப்புஞ் சிவப்பும்" (தொல்.உரி 76) என்னும் சூத்திரவுரையில் 'தீசிவந் திறுத்த நீரழிபாக்கம்' எனச் சிவப்பு வெகுளியாகிய குறிப்புணர்த்தும் என்றும்,

"வார்தல் போகல்" (தொல் உரி 21) என்னும் சூத்திரவுரையில், 'வெள் வேல் விடத்தேரொடு காருடைபோகி' என, போகல் என்னும் சொல் நெடு மையாகிய பண்புணர்த்தும் என்றும் உரைத்தனர் சேனாவரையர்.

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" (தொல் புற 20) என்னும் சூத் திரவுரையில் இச்செய்யுளை எடுத்துக்காட்டி 'இதனுண் மறத்திற் சென்று நாட்டை அழித்தவாறும், அறத்திற் றிரிந்த வேந்தனை யழித்து அவன் நாட்டைக் குடியோம்பிக் காத்தவாறும் கூறிற்று' என்றும், "ஆனைமும்மத மாடிய காடெலாம்" என்னும் சிந்தாமணிச் செய்யுளுரையில் (சீவக 2578) 'இவன் திருத்துதலின் ஆனைதிரிந்த காடுகளெல்லாம் கணவரோடு கூடிய மகளிர் கொப்புளித்த மதுவையாடின' "புறவே, யொள்ளிழை மகளிரொடு மள்ளர்மேன" என்றும் உரைத்தனர் நச்சினார்க்கினியர்.

## பழையவுரை

பிறழ்ந (1) எனவும் வித்துந (2) எனவும் தடுக்குந (4) எனவும் ஆர்ந (6) எனவும் வந்தன வினைப்பெயர்த்திரிசொல். 3-4 நெய்தல் எருமையின் நிரை தடுக்குநவுமென்றது நெய்தலானது அக்கரும்பு முதலாய மற்றோரிரை யின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போத வுண்ட எருமை நிரையைத் தடுக்கும் இடங்களுமென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு, பூத்தநெய்தல் என்று பெயராயிற்று. 6. மூதா ஆம்பலார்நவுமென் றது புறத்துப்போய் இரைதேவிட்டாத முதிய ஆக்கள் துணங்கையாடிய இடத்து நின்று (5) ஆம்பலையே தின்னும் இடங்களுமென்றவாறு. என் றது பெருக ஆம்பல் சூடித் துணங்கையாடுவாரை உடையனவென அவ் விடங்களின் செல்வச்சிறப்புக் கூறியவாறாயிற்று. 7. இமிழ் மருதென்றதற் குப் புள்ளிமிழ் மருதென்று ஒருபெயர் வருவிக்க. 8. புனல்வாயில்-வாய்த் தலை. I—10 ஒலிதெங்கென்னும் பெயர்க்கு முன்னின்ற பெயர்கள் எண்ணும் மையோடு நின்றமையால் அவற்றையுடைய நாடென இரண்டாவதன் தொகையாய், அச்சொல்......அவற்றையெல்லாம் எழுவாயாக்க நாட்டிற்கு அவ்விடங்கள் சினையாகலின், நாடு கவினழியவென்னும் முதற்பயனிலை யோடு வழுவமைதியாக முடிக்க. 10—11 கூற்றடூஉ நின்ற யாக்கைபோல நாடு கவினழிய வென மாறிக் கூட்டிக் கூற்றுவனாலே கொல்லப் படாநின்ற யாக்கை ஒருகாலைக்கு ஒருகால் அழகழியுமாறுபோல, நாடு அழகழியும்படி யென உரைக்க. இனி, மாறுதே போலும்படியென, போலவென்பதனை வினை யெச்ச நீர்மையாக்கி, போல்கின்றது மேல்வருகின்ற பாக்கமாக உரைப்பினும் அமையும். இனி, கூற்றுவனை அட்டுநின்ற யாக்கை உடையானொருவன் உளனாயினும் அவனைப்போல நீ சிவந்தென்றுரைப்பாரும் உளர். 12, நீரழி பாக்கமென்றது வெள்ளத்தான் அழிவுபடினல்லது பகைவரான் அழியாத பாக்கமென்றவாறு. பாக்கமென்றது நெய்தநிலத்து ஊர்க்கேயன்றி, "கட் கொண்டிக் குடிப் பாக்கத்து நற்கொற்கை" (மதுரைக் 137-8) என்று வந்தமை யான் ஒரோவழி அரசனிருப்புக்கும் பெயராமாகலின் ஈண்டுப் பாக்கமுடைய பேரூர்களெனப்பட்டது. 14. உடைபோகவெனத் திரிக்க 17—19. மன்றத்து உள்ளம் அழிய ஊக்குநர் மிடல் தபுத்து உள்ளுநர்ப் பனிக்கும் பாழென்றது

அம்மன்றிலே போதற்குஉள்ளம் அழியச்செய்தே பின்னும் தம் கரும வேட்கையாற் போகமேற்கொண்டவருடைய வலியைக் கெடுத்தலானே பின்பு போக நினைப்பார் நடுங்குதற்குக் காரணமாகிய பாழென்றவாறு 18. தபுத்து: தபுக்கவெனத் திரிக்க. 20. காடே கடவுள் மேனவென்றது நின்நாட்டுப் பெருங்காடான இடங்களெல்லாம் முற்காலத்துக் கோயில்களான வென்றவாறு. மேயினவென்பது மேனவென்று இடைக்குறைந்தது. 20—21. புறவு மகளிரொடு மள்ளர்மேன வென்றது சிறுகாடான இடங்களெல்லாம் நின் படையாளர்கள் மகளிரோடு உறையும் படைநிலைகளாயினவென்றவாறு. 22. ஆறே அவ்வனைத்தென்றது காடும் புறவும் அல்லாத பெருவழிகளும் ஆறலை கள்வரும் பிற இடையூறுமின்றி முன்சொன்ன கடவுளும் மள்ளரும் உறையுமிடமாயின வென்றவாறு அனைத்தென்னுது அவ்வனைத்தென்று சுட்டு இரட்டித்தது, அந்த அந்தத் தன்மையதென முன்நின்றவற்றின் பன்மைதோன்றற்கென்பது. 23. தாராவென்பது தராவெனக் குறுகிற்று. 34. குடிபுறந் தருநரென்றது தம் கீழ்க்குடிகளாகிய வரிசையாளரைப் புறந்தரும் மேற்குடிகளாகிய காணியாளரை. பாரமோம்பி (24) நீ காத்த (28) என மாறிக்கூட்டுக. வெள்ளியோடாமல் (25) எனவும் (26) பசியிகந்தொருவ (27) எனவும் திரிக்க. 22-6. இனி, ஆறு முன்சொன்ன அவ்வனைத்தாவதுமன்றி ஆறலைகள்வரின்றிக் கூலம்பகர்வார் இயங்கும்படியான வழக்காலே அந்தக் கூலம்பகர்வார் குடிகளைப் புறந்தந்தென்றும். குடிபுறந்தருநர் பாரத்தை ஓம்பி மழைவேண்டு புலத்து மாரி நிற்பவென்றும், கூலம்பகர்நர் குடிபுறந் தருதலை ஆற்றின் தொழிலாகவும், குடிபுறந்தருநர் பாரமோம்புதலை மழையின் தொழிலாகவும் கூட்டி உரைப்பாருமுளர்

கூற்றடூஉ நின்ற யாக்கைபோல (11) நாடுகவி னழிய நாமந்தோற்றி (11) நீசிவந்திறுத்த நீரழி பாக்கங்கள் (12) கழனி புல்லெனக் (13) காருடை போகக் (14) கழுது ஊர்ந்து இயங்கப் (15) பாழாயின (15); நீ காத்தநாட்டிற் (28) காடு கடவுளான் மேவப்பட்டன (20); அந்நாட்டுப் புறவுகள் மள்ளரான் மேவப்பட்டன (21); அந்நாட்டு ஆறு அவ்வனைத்தாயிற்று: அன்றியும் (22) கூலம்பகர்நர் குடிபுறந்தராக் (23) குடிபுறந்தருநர் பாரமோம்பி (24) நீகாத்த நாடு (28) மழைவேண்டிய புலத்து மாரிநிற்ப (26) நோயொடு பசியிகந் தொருவப் (27) பூத்தது (28) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்பும் தன் நாடுகாத்தற் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

(1) 'தொறுத்த' என்றும் (2) 'ஏறுபொருத' என்றும் (7) 'ஒலிதெங்கின்' என்றும் (8) புனல்வாயில் என்றுமிருந்த நான்கடியும் வஞ்சி யடியான் வந்தமையான் வஞ்சித்தூக்குமாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

2. "தொய்யாது வித்திய துளர்படு துடவை" மலைபடு 122.

3. கரும்பின் பாத்தி: "கரும்பு நடு பாத்தி" குறுந் 2[illegible]: 7.

5. துணங்கை: "முழாவிமிழ் துணங்கைக் தழூஉப்புணை யாக" பதிற் 52: 14. "துணங்கையந் தழூஉ வின் மணங்கமழ் சேரி" மதுரைக் 329; 'விழவயர்

துணங்கை தழூஉகஞ் செல்ல'' நற் 50: 3. ''எல்வளை மகளிர், துணங்கை நாளும் வந்தன'' குறுந் 364: 6. ''தளரிய லவரொடு, துணங்கையாய்'' ''நிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ள'' கலி 66: 17—8; 73: 16.

6. மூதா: குறுங் 204: 4; அக 156: 4; புற 323: 2.

7 இமிழ் மருது: ''மருதிமிழ்ந் தோங்கிய'' பதிற் 23: 18.

8. ''மலரணி வாயிற் பொய்கை'' ஐங் 81: 3; ''வயலமர் கழனி வாயிற் பொய்கை'' புற 354: 4.

புனல் வாயில்: ''தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை'' புற 136: 25.

பூம்பொய்கை: ''நீர்ப்பூம் பொய்கை'' ''நற்பூம் பொய்கை'' பெருங் (1) 53: 173; (3) 9: 34; ''பூவார்ந்தன பொய்கைகள்'' தே. சுங். திருத்துறையூர் 10.

9. பாடல்சான்ற வைப்பு: ''பாடல்சான்ற வைப்பின், நாடு'' பதிற் 75: 13—4; ''பாடல்சான்ற நெய்த நெடுவழி'' சிறுபாண் 151.

பயங்கெழு வைப்பு: ''கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம், பயங்கெழு வைப்பு'' அக 126: 12—3; ''பயங்கெழு வைப்பின்'' சிலப் 26: 17

9—10. வைப்பின் நாடு: பதிற் 15: 13—15; 75: 13—4; 76: 15; பொருந 226; அக 201: 13; புற 2: 11; 7: 13; 63: 14—5; 202: 21.

10. நாமந்தோற்றி: ''நனிகடுஞ் சிவப்பொடு நாமந்தோற்றி'' அக 235: 14.

13. பூங்கரும்பு: 'வான்பூங் கரும்பின்'' குறுந் 149: 3; ''பூங்கரும்பின்'' புற 24: 13.

கரும்பின் கழனி: ''கரும்பலாற் காடொன் றில்லாக் கழனி'' சீவக 2902.

14. போகி: ''களரி பரந்து கள்ளி போகி'' புற 356: 1.

15. கழுது: நற் 171: 9; 255: 1; அக 122: 14; 311: 4.

16. பறந்தலை: ''வெம்மை தண்டா எரியுகு பறந்தலை'' அக 29: 15.

17. தாதெரு: மலைபடு 531; நற் 343: 3; அக 165: 4; புற 33: 11; 215: 2; 311: 3.

தாதெரு மன்றம்: ''தாதெரு மன்றத்து'' ''காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்து'' கலி 103: 62; 103: 60; ''தாதெரு மன்றந் தானுடன் கழிந்து'' சிலப் 16: 102.

19. உள்ளுநர்ப் பனிக்கும்: ''உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை'' ''உள்ளுநர் உட்கும் கல்லடர்ச் சிறுநெறி'' அக 29: 19; 72: 17; ''இவ்வெனவுரைத்து மென்று நினைப்பினும் பனிக்கு முள்ளம்'' சீவக 2762; ''உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்'' சிலப் 5: 117.

20 காடும் புறவும்: ''காடும் புறவுங் கவின்று வளஞ்சிறப்ப'' பெருங் (4) 2: 58.

21. ஒள்ளிழை மகளிர்: மதுரைக் 623; நற் 155: 1; 188: 3; 253: 5; அக 146: 6. 239: 9; பெருங் (1) 55: 6.

24. குடிபுறந்தருதல்: ''குழவிகொள் வாரிற் குடிபுறந் தந்து'' பதிற் 6-ம் பதி 9; ''குடிபுறந் தருகுவை யாயின்'' புற 35: 33.

27. ''பசியும் பிணியும் பகையு நீங்கி'' சிலப் 5: 72; மணி 1: 70; ''பசி பகை யானதுந் தீங்கு நீங்குக'' இரண்டாவது குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி.

## 4. சான்றோர் மெய்ம்மறை.

14. நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே
நாள்கோ டிங்கண் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை

போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரோடு
துப்புத் துறைபோகிய துணிவுடை யாண்மை
அக்குர னனைய கைவண் மையையே
அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப
கூற்றுவெகுண்டு வரினு மாற்று மாற்றலையே
எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ பாடினி வேந்தே
இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅலிய ரோவிவ் வுலகமோ டுடனே.

**துறை-செந்துறைப் பாடாண்பாட்டு.**
**வண்ணம்-ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.**
**தூக்கு-செந்தூக்கு.**
**பெயர்-சான்றோர் மெய்ம்மறை (12).**

**ப-ரை.** *1—4. நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்—நிலமும் நீரும் காற்றும் ஆகாயமும் என்ற பூதங்கள் நான்கினையும் போல, அளப்பரியை—அளத்தற்கரிய பெருமையையுடையை; நாள் கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்—நாண்மீன்களும் கோண்மீன்களும் திங்களும ஞாயிறும் முழங்கும் நெருப்பும் என்ற, ஐந்து ஒருங்கு புணர்ந்த—ஐந்தும் ஒருங்கு சேர்தலாலுளதாகிய, விளக்கத்து அனையை—விளக்கபோலும் விளக்கத்தையுடையை.*

*5—7. போர் தலைமிகுத்த ஈர் ஐம்பதின்மரொடு—போர்செய்வதில் மிக்க மேம்பாடுற்ற துரியோதனன் முதலிய நூற்றுவரிடத்து, துப்பு துறை போகிய—வலிக்கூறுபாடாய்ப்போன, துணிவுடை ஆண்மை—துணிவுபொருந்திய ஆண்மையையுடைய, அக்குரன அனைய கைவண்மையை—அக்குரனைப்போலும்கொடையையுடைய.*

*8—10. அமர் கடந்து மலைந்த தும்பை பகைவர்—போரை வஞ்சியாது எதிர்நின்று பொருத தும்பை சூடிய பகைவருடைய, போர்*

பீடு அழித்த—போரையும் பெருமையையும் அழித்த, செரு புகல் முன்ப—போரைவிரும்பும் வலியையுடையோய், கூற்று வெகுண்டு வரினும் மாற்றும் ஆற்றலை—கூற்றுவன் வெகுண்டு எதிர்வரினும் அதனையும் விலக்கும் வலியையுமுடையை.

*11—17.* எழு முடி கெழீஇய திரு ஞெமர் அகலத்து—ஏழுமுடியாற் செய்த ஆரம் பொருந்திய வெற்றித்திரு தங்கிய மார்பினையும், நோன் புரித் தட கை—வலிபொருந்துதலையுடைய பெரிய கையினையுமுடைய, சான்றோர் மெய்ம்மறை—வீரர்க்கு மெய்புகுகருவி போன்றவனே, வான் உறை மகளிர் நலன் இகல் கொள்ளும்—வானரமகளிர் அழகிற்கு அவளையொப்பேன் யானே யானே என்று தங்களில் மாறுகொள்ளுதற்குக் காரணமான, வயங்கு இழை கரந்த—விளங்குகின்ற தலைக் கலன்களால் மறைந்த, வண்டு படு கதுப்பின்—வண்டுகள் மொய்க்கின்ற கதுப்பாகிய, ஒடுங்கு ஈர் ஓதி—ஒடுங்கிய நெய்ப்பினையுடைய கூந்தலையுடைய, கொடு குழை கணவ—வளைந்த மகரக்குழையுடையாளுக்குக் கணவ, பல் களிறு தொழுதியொடு வெல் கொடி நுடங்கும்—பலவாகிய களிறுகளின் தொகுதியில் வென்றெடுத்த கொடி அசையும், படை ஏர் உழவ—படையை ஏராகவுடைய உழவ, பாடினி வேந்தே—பாடினிக்கு வேண்டுவன வழங்கும் வேந்தே.

*18—23.* இலங்கு மணி மிடைந்த பொலம் கலம் திகிரி—விளங்குகின்ற மணிகள் செறிந்த பொன்னணிகளையுடைய சக்கரத்தால், கடல் அக வரைப்பின்—கடலை எல்லையாகவுடைய பூமியில், இப்பொழில் முழுது ஆண்ட—இந்நாவலம் பொழிலை முழுதும் ஆண்ட, நின் இணைமுன் முதல்வர் போல நின்று—நின்குடியில் முன்னிருந்த முதல்வர்போல ஒழுகி, நீ கெடாஅ நல்லிசை நிலைஇ—நீ கெடாத நல்ல புகழை நிலைப்பித்து, இவ்வுலகமோடு உடன் தவாலியர்—இவ்வுலகத்தோடு கூடக் கெடாதொழிவாயாக.

முடிபு: நிலமுதற் பூதம் நான்கும் போலப் பெருமை அளத்தலரியை, நாண்மீன் முதலிய ஐந்தும் ஒருங்கு புணர்ந்த விளக்கத்தனையை; அக்குரன் அனைய கை வண்மையை; அன்றி முன்ப, நின் வலி இருக்கும்படி சொல்லிற் கூற்று வெகுண்டு வரினும் அதனையும் மாற்றும் வலியையுடையை; ஆதலால் சான்றோர் மெய்ம்மறை, கொடுங்குழை கணவ, படையேருழவ, பாடினி வேந்தே, நின் திணை முன் முதல்வர்போல நின்று நல்லிசையை நிலைப்பித்து இவ்வுலகத்தோடு கூடக் கெடா தொழிவா யாக என்க.

(ஆ-ரை) வெவ்வேறாகிய குணங்களை இயல்பாகவுடைய நிலமுதற் பூதங்கள் நான்கும்போலச் சேரன்பால் இயல்பாகவமைந்த குணங்கள் நான்

கும் அளப்பரியவாதலின் 'நிலநீர் வளிவிசும்பென்ற நான்கின் அளப்ப ரியை' என்றார்.

"இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும
வறிது நிலைஇய காயமும் என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை" புற 20: 1—5.

எனப் பிறருங் கூறுதல் காண்க. அரியை என முதன் மேலேற்றிக் கூறி னும் குணங்களின் பெருமை அளத்தற்கரியது என்பது கருத்தாகக் கொள்க.

பகைவர் பிழைசெய்தால் அப்பிழையைப் பொறுத்தலில் நிலத்தைப் போன்றும், அவர் வழிபட்டால் அவர்க்குச் செய்யும் அருளுடைமையில் நீரைப்போன்றும், அவரை அழித்தற்கேற்ற மனவலியும் சதுரங்கவலியு முடைமையில் வளியைப் போன்றும், அவரை அழித்தற்ந உசாவும் உசா வினது விரிவில் விசும்பைப் போன்றும் அவ்வத்தன்மைக்கண் அளப்பரியை யென உவமையைப் பொருத்திக் கொள்க.

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளிதலைஇய தீயுந்
தீமுரணிய நீருமென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்" புற 2: 1—8.

எனப் பிறருங் கூறுதல் காண்க. அன்றியும் நான்கும் எண்ணல் முதலிய அளவைகளானும் அளத்தற்கருமையுங் கொளக

நிலனை முற்கூறி அதனால் அரசனது பொறையை முற்கூறினார் அது உலகம் பொன்றுந் துணையும் புகழ்விளைப்பதாகலின். இனிப் பலவகை உயிர்ப்பொருள்களையும் உயிரில் பொருள்களையும் தாங்கும் சிறப்புப்பற்றி நிலத்தை முற்கூறினார் எனினுமமையும். நிலம் நீரினும், நீர் தீயினும், தீ வளியினும், வளி விசும்பினும் ஒடுங்கும் முறை பற்றி 'நில நீர் வளி விசும்பு' என முறைப்படுத்தோதினர். பூதங்கள் ஐந்தையும் எண்ணாது தீயை ஒழித் தது மேல் விளக்கத்துக்கு உவமமாக எண்ணுகின்ற வற்றோடு கூட்டியெண் ணவேண்டி யென்பது

விசும்பிலுள்ள மீன்கள் நாண்மீன் என்றும் கோண்மீன் என்றும் இரு வகைப்படுதலின் 'நாள் கோள்' என்றார் "நீணிற விசும்பின் வலனேர்பு திரி தரும், நாண் மீன் விராய கோண் மீன் போல" (பட்டினப் 67—8) என வரு தல் காண்க நாண் மீன் அச்சுவினி முதலிய இருபத்தேழும் பிறவும் கோண் மீன் ஞாயிறு முதலிய ஒன்பது ஈண்டுக் கோள் என்றது விளக்க ஒப்புமை யால் அஃதில்லாத இராகு கேது என்னும் இரண்டும் நீக்கி, நின்ற ஐந்தையு மென்பது, கனையழல்—செறிந்த நெருப்புமாம். ஐந்தொருங்கு புணர்ந்த எனத் தொகை கூறியது, நாளும் ஏனைக் கோளும் பலவாதலின் அவற்றை ஒவ்வொன்றாக நிறுத்தித் திங்கள் ஞாயிறு அழல் என்ற மூன்றுடன் என்

ணியபடியை விளக்குதற் பொருட்டென்க. ஐந்தும் என்ற உம்மை தொக்கது. விளக்கம்—ஒளி. "ஒளிமிக்கு, அவற்ரேரன்ன சினப்போர் வழுதி" (புற51: 3—4) என்ருர் பிறரும்.

ஈரைம் பதின்மர்—நூற்றுவர். இது தொகைக் குறிப்புப் பெயர். ஒடு, இடப் பொருளில் வந்தது. ஈரைம்பதின்மரொடு போகிய என முடிக்க துப்பு—வலி. துறை—கூறுபாடு. பொருந120 நச். துப்புத் துறைபோகிய என்றது துணைவலியாய்ப்போன என்றபடி. "மூவரு ளொருவன் றுப்பாகிய ரென" (புற 122. 5) எனவரல் காண்க. துறைபோகிய அக்குரன் என்க. பிறர்க்கு உவமையாகக் கூறுதற்கேற்ற மிக்க வண்மையையுடையான் அக்குரனுதலின் 'அக்குரனனைய கைவண்மையை' என்ருர். "அந்திமான் சிசுபால னக்குரன் வக்கிரன், சந்திமான் கன்னன் சந்த னிடை வள்ளல்" என இவனை இடைவள்ளல் எழுவரிலொருவனுகவும கன்னனின் வேருகவும் பிங்கலந்தை கூறும்.

கடந்து—'வஞ்சியாது எதிர்நின்று'. கலி 1: 4 நச். புற 110: 1 உரை. அமர்கடந்து மலைந்த பகைவர் என்பதற்குப் 'பிறருடன் செய்த போரை வென்று பின் நின்னுடன் மலைந்த பகைவர்' எனினும் அமையும். ஈண்டுச் சேரனின் பேராற்றலைப் புலப்படுத்தற்பொருட்டு அவனுடன் மலைந்த பகைவரின் வெற்றியை எடுத்துக் கூறினுராகக் கொள்க. பொருதற்குத் தும்பைசூடிய பகைவராதலின் 'தும்பைப் பகைவர்' என்ருர். "போர் கருதித், துப்புடைத் தும்பை மலைந்தான் துகளறு சீர், வெப்புடைத் தானையெம் வேந்து" (பு. வெ. மா 127) என வருதல் காண்க. பகைவர் போர் பீடழித்த வலியினுல் சேரலாதன் மேலும் போரை விரும்புதலின் 'செருப்புகல் முன்ப' என்ருர். வெகுளியின் கூற்றஞ் சிறத்தலின் 'கூற்று வெகுண்டு வரினும்' என்ருர். கூற்று வெகுண்டு எதிர்வரின் அது விலக்குதற்கரிய தொன்ருகவும் அதனையும் மாற்றும் ஆற்றலுடையான் என்றது சேரன் மன வலியைப் புலப்படுத்தற் பொருட்டென்க. "பகையெனிற், கூற்றம் வரினும் தொலையான்" (கலி 43: 9—10) எனப் பிறருங் கூறுதல் காண்க. ஈண்டு ஆற்றல் என்றது மனவலியை.

"கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை" குறள் 765.

என்பதன் விசேடவுரையில் 'ஆற்றல்—மனவலி' எனப் பரிமேலழகர் உரைத்தவாறுங் காண்க.

எழுமுடி கெழீஇய அகலம், திருஞெமர் அகலம் என இயையும். எழுமுடி யென்றது ஏழு அரசரை வென்று அவர்கள் எழு முடியானுஞ் செய்ததோர் ஆரததை. பகைவரை வென்று அவர் முடிக்கலனைக் கொள்ளுதல்

'இருபெரு வேந்தரையு முடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு" பதிற் 8-ம் பதி

என்பதனுலுமறியப்படும். சேரலாதன், எழுமுடியாரத்தை மார்பி லணிந் திருந்தமையால் 'எழுமுடி கெழீஇய அகலத்து' என்ருர்.

"நீயே, பிற ரோம்புறு மறமன்னெயில்
ஓம்பாது கடந்தட்டவர்

முடிபுனைந்த பசும் பொன்னின்
அடிபொலியக் கழறைஇய
வல்லாளனை வயவேந்தே'' புற 40: 1—5.

எனப் பகைவரை வென்று அவர் மகுடமாகச் செய்த பொன்னால் வீரக்கழல் செய்து புனைதல் கூறப்படுதலின், எழுமுடி கெழீஇய அகலம் என்பதற்கு ஏழு அரசரை வென்று அவர்கள் எழுமுடிப் பொன்னாற் செய்த ஆரம் பொருந்திய மார்பு எனப் பொருளுரைத்தல் அமையாதோ வெனின், அமையாது. என்னை? முடிபுனைந்த பசும்பொன்னின்...... கழல் என்றதுபோல ஈண்டு முடிப்பொன்னின் ஆரம் எனக் கூறப்படாமையானும், முடிப்பொன்னால் ஆரம் புனைந்து அணிந்துழி, அவ்வாரம் ஏனைப்பொன்னாரத்தின் வேறுபட்டு விளங்கி அரசர் எழுவரை வென்ற பெருவெற்றியை விளக்காமையானும் என்பது. எழுமுடியென்பது எழுமுடியாற்செய்த ஆரமாதல்.

''எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து'' பதிற் 40: 13.

எனக் காப்பியாற்றுக் காப்பியனாரும்,

''எழுமுடி மார்பி னெய்திய சேரல்'' பதிற் 45: 6.

எனப் பாணரும்,

''எழுமுடி மார்ப'' சிலப் 28: 169.

என இளங்கோவடிகளும் ஒருபெற்றிப்பட 'எழுமுடி' என்றதன்றி எழுமுடிப் பொன்னால் ஆரம் புனைந்தமையை எடுத்துக் கூறாமையானும், 'எழுமுடி யென்பது ஏழு அரசரை வென்று அவர்கள் எழுமுடியானுஞ் செய்ததோர் ஆரமாம்' என இந்நூற் பழையவுரைகாரரும், 'எழுமுடி — எழுமுடியாற் செய்த ஆரம்' எனச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியரும் (சிலப் 28: 169 உரை) உரைத்தமையானும் நன்கு தெளியப்படும.

சேரலாதன் போர்த்தொழில் மிக்கு நடத்தலானே திருமகள் தங்கிய மார்பனாதலின் 'திருஞெமர் அகலத்து' என்றார். ''செருமிக்குப் புகலுந் திருவார் மார்பன்" (மலைபடு 356) என்றார் பிறரும். ஞெமர்—பரந்த எனினுமாம். இப்பொருட்டாதல்' "வரிமணன் ஞெமர" (புற 90: 8) என்புழிக் காண்க. அகலத்து மெய்ம்மறை, தடக்கை மெய்ம்மறை, சான்றோர் மெய்ம்மறை என இயையும். நோன்—வலி. புரி என்பது ஈண்டு முதனிலைத் தொழிற் பெயராய்ப் பொருந்துதல் என்னும் பொருள்பட நின்றது. 'நோன்புரித் தடக்கை—வலியைச் செய்தலையுடைய தடக்கை' எனினுமாம். தடக்கை என்பதற்கு முழந்தாளைப் பொருந்துமாறு நீண்ட கை என்றுரைப்பினும் அமையும். ''தாடோய் தடக்கை, வெல்போர் வழுதி" (அக 312: 11—2)என வருதல் காண்க.

சான்றோர்—போரிற்கு அமைந்தோராய வீரர். 'போரிற்கு அமைந்தோர்' எனப் புறநானூற்றுரையாசிரியரும் (புற 63; 5 உரை) 'போரில் அமைதியுடைய வீரர்' என இந்நூற் பழையவுரைகாரரும் உரைப்பர். வீரரைச் சான்றோர் என்றல்,

''சாந்தெழின் மறைத்த சான்றோர் பெருமகன்'' பதிற் 67: 18.
''கொலக்கொலக் குறையாத் தானைச் சான்றோர்'' பதிற் 82; 13.
''தேர்தர வந்த சான்றோர்'' புற 65: 5.

என வருவனவற்றிலுங் காண்க. மெய்ம்மறை—மெய்புகுகருவி. அது போரில் அம்பு முதலிய கருவிகள் தாக்காதபடி உடம்பிலணியுங் கவசமாகும்.

"மொய்யமர் ஞாட்பினுண் முரண்கொண் மன்னவர்
மெய்புகு பொன்னணி கவச மொப்பல" சீவக 2819.

'நற்படை நலியா நன்மையொடு பொலிந்த
சாலிகைக் கவயங் கோல மாகப்
புக்க மெய்யினர்" பெருங் (3) 17: 226—8.

என வருவன காண்க. அது புலித்தோல் முதலியவற்றாற் செய்யப்படுதல், 'புலிநிறக் கவசம்—புலியினது தோலாற் செய்யப்பட்ட மெய்புகு கருவி' என்னும் புறப்பாட்டுரையானும் (புற 13: 2 உரை) அறியப்படும். சேரலாதனைச் சான்றோர் மெய்ம்மறை என்றது, அச்சான்றோர்க்கு மெய்புகு கருவிபோலப் போரிற்புக்கால் வலியாய் முன்னிற்றலின்.

"நும்படை செல்லுங் காலை யவர்படை
யெடுத்தெறி தானை முன்னரை யெனாஅ
யவர்படை வரூஉங் காலை நும்படைக்
கூழை தாங்கிய வகல்யாற்றுக் குன்று
விலங்கு சிறையி னின்றனை யெனாஅ
வலிதாற் பெருமநின் செவ்வி" புற 169: 1—6.

என்பதனால், தம்முடையபடை பகைவர்மேற் போம் காலத்து அவரது படையாகிய வேல் முதலியவற்றை ஓங்கியெறியும் படைக்கு முன்னே நின்றும், பகைவர்படை அடர்த்து வருங்காலத்துத் தம்படையினது அணியைத் தாங்க வேண்டி அதனைத் தடுத்து நின்றும் அரசர் தம்படைக்கு மெய்ம்மறையாக நிற்றல் அறியப்படும்.

சான்றோர்க்கு மெய்புகு கருவிபோலப் போரிற் புக்கால் வலியாய் முன்னிற்குஞ் சேரலாதனைச் சான்றோர் மெய்ம்மறை என்று கூறிய சிறப்பான் இச்செய்யுளுக்குச் சான்றோர் மெய்ம்மறை என்று பெயராயிற்று.

சான்றோர் மெய்ம்மறை என்றதனால் சேரலாதன் வலியை இனிது புலப்படுத்தினர். அது, "எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பில்... ..நெடுமொழி மறந்த சிறுபே ராளர், அஞ்சி நீங்குங் காலை, யேம மாகத் தான்முந் துறுமே" (புற 178) என்புழி 'ஏமமாகத் தான்முந்துறுமே' என்பதற்கு 'அவர்க்கு அரணாகத்தான் தன்வலியான் முந்துற்று நிற்பன்' என அதன் உரையாசிரியர் உரைத்தவாற்றானுமறியப்படும்.

வானுறை மகளிர் என்றது அரமங்கையரிற் சிறந்தோராகிய உருப்பசி திலோத்தமை முதலாகிய வானரமகளிரை. அது, "அரமங்கையரென வந்து விழாப்புகுமவ்வவர் வானர மங்கையரென வந்தணுகும் மவள்" என்னும் திருக்கோவையார் (371) விசேடவுரையில், 'அரமங்கையர் தேவப்பெண்களுக்குப் பொதுப்பெயர்; வானர மங்கையரென்றது அவரின் மேலாகிய உருப்பசி திலோத்தமை முதலாயினாரை' எனப் பேராசிரியர் உரைத்தவாற்றானு மறியப்படும். வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும் என்பதற்கு வானுறை மகளிரை நலனால் இகல்கொள்ளும் என்றுரைப்பினும் அமையும். நலன்—

அழகு. "சிறந்ததன் ஞறு நலனு நினையாது" (கலி145: 10) என்புழிப்போல. இகல் கொள்ளும் கொடுங்குழை என இயையும்.

வயங்கிழை கரந்த கதுப்பு என்றது தலையிலணிந்த மின்னுமிழ்ந்தன்ன சுடரிழைகளின் விளக்கத்தாற் றேன்றாது மறைந்த கதுப்பு என்றவாறு. 'இழைசுட ரெறித்தலானும்... உருவினைத் தெரியக் காணார்" (நைடத. சுயம் வர) எனப் பிறண்டும் வருதல் காண்க. இனி, தலைக்கோலங்களை அணிந்த மையால் அவற்றால் மறைந்த கதுப்பு என்றுமாம். கதுப்பில் வண்டுபடுதல் அதன் நறுநாற்றத்தால் என்க. "வண்டுபடு நாற்றத் திருள்புரை கூந்தல்" (நற் 2 0) எனச் சான்றோர் கூறுதல் காண்க.

வானுறை மகளிர் நலனிகல் கொள்ளுதற்கு வயங்கிழை கரந்த வண்டு படு கதுப்பு முதலியனவும் ஏதுவாமாகலின் அவற்றை எடுத்துக்கூறினார். "கேழ்கிளர் தொய்யகம்......தாழ்தரு கோதையுந் தாங்கி முடிமிசை, யாழின் கிளவி யரம்பைய ரொத்தாள்" (சிலப் 6: 106 8 அடி நல்மேற்) என வருதல் காண்க கதுப்பாகிய ஒடுங்கீரோதி என்க. "நெறிபடு கூந்தல், மையீரோதி" (குறுந் 199) எனப் பிறண்டும் வருதல் காண்க. நெய்ப்பினையுடைய மயிரைச் சுருளாக முடித்தமையின் 'ஒடுங்கீரோதி' என்றார். 'ஒடுங்கீரோதி—சுருள்' என்றார் பழையவுரைகாரரும். கொடுங்குழை என்பது அன்மொழித் தொகையாய்ச் சேரன் பெருந் தேவியை உணர்த்தியது. மகளிரைச் சார்த்து வகையாற் பாடுதலன்றித் தனித்துப் பாடுதல் சிறப்பன்மையின் 'ஒடுங் கீரோதிக் கொடுங்குழை கணவ' என்றார்.

களிறுத் தொகுதியில் வெல்கொடி எடுத்த படையாகலின் 'களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும் படை' என்றார். யானையில் வெல் கொடி எடுத்தல், "வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுக" நெடு நல் 87) "களிறணி வெல்கொடி" (அக 162. 22) என வருவனவற்றாலுமறிக. களிற்றுத் தொழுதி என்றது யானைப்படையை. அது படையின் உறுப்பாக லின் 'களிற்றுத் தொழுதியொடு நுடங்கும் படை' என்றார். களிறு மா தேர் மறவர் எனனும் நான்கன் றெகுதியே படையென்பது.

"படுமணி மருங்கின பணைத்தாள் யானையும்
கொடிநுடங்கு மிசைய தேரும் மாவும்
படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண் டன்ன கண்ணகன் றானை" புற 351: 1—4

என்பதனுலும், "உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை"—யானை முதலிய நான் குறுப்பானும நிறைந்து போரின்கணூறுபடுதற் கஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை; ஈண்டுப் படையென்றது அந்நான்கன் றெகுதியை' என்ற (குறள் 761 பரிமேல்) உரையானும் அறியலாம். வெல்கொடி—போரை வென்று எடுக்கின்ற கொடி. வெல்கொடி நுடங்கும் படை என்றதனால் சேர லாதன் இப்படையொடு மேற்சென்று பொருதுவென்றமை பெறுதும். ஏர்—உழுபடை. பகைவராகிய விளைநிலத்தே படையாகிய ஏரால் உழுது வேல் அம்பு முதலிய ஆயுதங்களாகிய விதைகளை வித்தி வெற்றியாகிய பயனைக்கொள்ளுதலின் சேரனைப் 'படையேருழவ' என்றார். வீரரை 'வில்

லேருழவர்' எனத் திருவள்ளுவர் கூறியிருத்தலும் (குறள் 872) ஈண்டைக் கேற்ப அறிக. இது ஒருவழியுருவகம். விறலியர்க்கு அணிகலம் முதலிய வற்றை நல்கி அவரைப் புரத்தலின் 'பாடினி வேந்தே' என்றூர். பாடினி— விறலி. மேல் அரசனை வாழ்த்துகின்றவர் ஈண்டுக் கொடுங்குழை கணவ, பாடினி வேந்தே என அவனை முன்னிலைப்படுத்துவாராயினர்.

திகிரி என்றது ஆஞ்ஞா சக்கரத்தை. "காவிரி நாடன் திகிரி போல்" (சிலப் 1: 5) என்றூர் பிறரும். திகிரியால் (18) ஆண்ட (19) முதல்வர் (20) என இயையும். "ஐயமின்றி யானை யோடிய, தெய்வத் திகிரி கைவத் துயரிய, நிலப்பெரு மன்னர்" (பெருங் (2) 15. 120—2) என வருதல் காண்க. கட லக வரைப்பு என்றது கடலை யெல்லையாகவுடைய மண்ணகத்தை "நிலவுக் கடல் வரைப்பின் மண்ணகம்" (புற 3: 1) என்றூர் பிறரும். வரைப்பு-எல்லை. இப்பொழில் என்றது நாவலம் பொழிலை. "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (தொல். செய் 79) என்புழி, பொழில் என்பதற்கு நாவலம் பொழில் எனப் பேராசிரியர் உரைத்தமை காண்க. பிறவேந்தர் இப்பொழி லின் ஓரொரு பகுதியை ஆள, இவன் முன்னோர் பொழின்முழுதையும் ஒருங்கு ஆண்டமை தோன்ற, 'பொழின் முழுதாண்ட' என்றூர். நீயும் அம் முன்னோரைப்போல இப்பொழின் முழுதையும் ஆளுகைசெய்து ஒழுகுவா யாகவென்பார் 'பொழின் முழுதாண்ட முன்றிணை முதல்வர்போல நின்று' என்றூர்.

நின் திணை முன் முதல்வர் என மாறிக்கூட்டுக திணை—குடி. முன் முதல்வர் என்றது முன்னே ஆண்டுகழிந்த இவன் குலத்து முன்னோரை. நின்று—அம்முதல்வர்போல ஒழுகி. முன்னோர் வழி ஒழுகுதல் வேண்டு மென்பது, "பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது" (மதுரைக் 182) என வும், "தொல்லோர் சென்ற நெறிய போலவும்" (புற 58: 25) எனவும் சான்றோர் கூறுமாற்ருனுமறிக ஒன்ருவுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன் ருது நிற்பதொன்றில்லை யாதலின் 'கெடாஅ நல்லிசை' என்றும், மண் ணின் மேல் வான்புகழ் நட்டார் சாவாவுடம்பெய்திஞராகலின் அவ்வுடம்பு எய்தவேண்டி நல்லிசையை நிலைபெறுத்துகவென்பார் 'நல்லிசை நிலைஇ' என்றுங் கூறிஞர் நிலைஇ—நிலைப்பித்து. நிலைஇத்தவாலியர் எனக் கூட் டுக. இவ்வுலகத்தோடு கூடநின்று நிலைபெறுவாயாகவென்று வாழ்த்து வார் 'தவாலியரோ இவ்வுலகமோடுடனே' என்றூர். "ஓங்குவாண் மாற... .. நின்று நிலைஇய ருலகமோடுடனே" (புற 56: 21—5) என்றூர் பிறரும். தவல் —கேடு. 'தவலினேய் செய்தார்க்கு" (கலி 134: 11) உலகமோடுடனே— உலகத்தோடுகூட, புற 56: 25 உரை.

இதனுற் சொல்லியது அவன் பல குணங்களையும் ஆற்றலையும் ஒருங்கு கூறி வாழ்த்தியவாருயிற்று.

அளப்பரிமையே' (2) எனச் சொற்சீரடி வந்தமையாற் சொற் சீர்வண் ணமுமாயிற்று. ஈண்டுச் சொற்சீரென்றது அளவடியிற் குறைந்தும் வஞ்சி யோசையின்றி அகவலோசையாயும் வரும் அடியினை.

## மேற்கோள்.

"அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" (தொல். உவமை 38) என்னுஞ் சூத்திரவுரையில் நிரனிறுத்தமைத்தல் வருமாறு:—"நில நீர் வளி விசும் பென்ற நான்கி, னளப்பரி யையே"......எனவரும் என்றும், "உவமப்போலி யைந்தென மொழிப" (தொல். உவமை 24) என்னும் சூத்திரவுரையில், பல பொருளினுமுளதாகிய கவின் ஓரிடத்து வரின் இதற்குவமையாம் என வுரைத்து "நாள்கோ டிங்கண்ஞாயிறு கனையழல் வந்தொருங்கு புணர்ந்த விளக்கத்தனையை" என்று வரும் என்றும் உரைத்தனர் உரையாசிரியர்.

"வழங்கியன் மருங்கின் வகைபட நிலைஇ" (தொல். புற 27) என்னும் சூத்திரவுரையில் இச்செய்யுளை எடுத்துக்காட்டி. பரவற்கண் வந்த செந் துறைப்பாடாண்பாட்டு; இதனை வாழ்த்தியலென்பர் என்றுரைத்தனர் நச்சினார்க்கினியர்.

## பழையவுரை

1 பூதங்கள் ஐந்தையும் எண்ணாது தீயை ஒழித்தது மேல்விளக்கத் துக்கு உவமமாக (4) எண்ணுகின்றவற்றோடு கூட்டவேண்டி யென்பது. 3 ஈண்டுக் கோளென்றது விளக்கமில்லா இராகு கேது என்னும் இரண்டும் நீக்கி நின்ற ஏழினும், சிறப்புப்பற்றி வேறு எண்ணப்பட்ட திங்கள் ஞாயி றென்னும் இரண்டும் நீக்கி, நின்ற ஐந்தையுமென்பது. 4 ஐந்தென்று தொகை கூறியது நாள் கோளென்னும் அவற்றைத் தொகைக்கூற்றின் ஒரோ வொன்றுக்க வென்பது. 11 எழுமுடி யென்பது ஏழு அரசை வென்று அவர்கள் ஏழு முடியானுஞ் செய்ததோர் ஆரமாம். 12 நோன்புரித் தடக்கை யென்றது வலி பொருந்துதலையுடைய தடக்கையென்றவாறு. ஈண்டுச் சான் றோர் என்பது போரில் அமைதியுடைய வீரரை. மெய்ம்மறை—மெய்புகு கருவி. மெய்மமறை யென்றது அச்சான்றோர்க்கு மெய்புகு கருவிபோலப் பாரிற் புக்கால் வலியாய் முன்னிற்றலின். இச்சிறப்பு நோக்கி இதற்கு, 'சான்றோர் மெய்ம்மறை' என்று பெயராயிற்று. 13 வானுறை மகளிர் நலன் இகல் கொள்ளுமென்றது, வானவர் மகளிர் அழகிற்கு அவளை யொப்பேன் யானே யானேயென்று தங்களில் மாறுகொள்ளுமென்றவாறு. 15 ஒடுங்கீ ரோதி—சுருள்.

நிலமுதற் பூதம் நான்கும் போலப் (1) பெருமை அளத்தலரியை (2) நாண் மீன் முதல் (3) ஐந்தையும் விளக்கத்தால் ஒப்பை (4) கைவண்மையால் அக்குரனென்பவனை யொப்பை (7) அன்றி முன்ப (9) நின் வலி இருக்கும் படி சொலலிற் கூற்று வெகுண்டுவரினும் அதனையும் மாற்றும் வலி யுடையை (10) ஆதலாற் சான்றோர் மெய்ம்மறை (12) கொடுங்குழை கணவ (15) படை யேருழவ பாடினி வேந்தே (17) நின் குடி முன் முதல்வர் போல நின்று (20) நல்லிசையை நிலைப்பித்து (21) இவ்வுலகத்தோடுகூடக் கெடா தொழிவாயாக (22) என வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் பல குணங்களையும் ஆற்றலையும் ஒருங்கு கூறி வாழ்த்தியவாறாயிற்று.

"அளப்பரியையே" (2) எனச் சொற்சீரடி வந்தமையாற் (1) சொற்சீர் வண்ணமுமாயிற்று. ஈண்டுச் சொற்சீரென்றது அளவடியிற் குறைந்தும் வஞ்சியோசையின்றி. அகவலோசையாயும் வரும் அடியினை.

## ஒப்புமைப் பகுதி.

1—2. *நில முதலிய பூதங்கள் பெருமைக்கு எல்லையாகக் கூறப்படுதல்:* "நீர் நிலந் தீவளி விசும்போ டைந்தும், அளந்துகடை யறியினு மளப்பருங் குரையை" **பதிற்** 24: 15—6; 'நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று, நீரினு மாரள வின்றே" **குறுந்** 3: 1—2; "நிலத்தினும் பெரிதே நேர்ந்தவர் நட்பே" **தொல்** களவு 20: 30 நச் மேற். "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது" "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின், நன்மை கடலிற் பெரிது" "வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந், தானறி குற்றப் படின்" **குறள்** 102, 103, 272. "மண்ணினும் வானினு மற்றை மூன்றினும், எண்ணினும் பெரியதோ ரிடர்" **கம்ப.** அயோமுகி 99.

3. **நாள் கோள்:** "நீடுநாள்களுங் கோள்களு மென்னமே னிமிர்ந்து" **கம்ப.** மராமர 128.

**திங்கள் ஞாயிறு:** "விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி" **சிலப்** 1: 43.

5 **ஈரைம் பதின்மர்:** "ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவிய" **பெரும்பாண்** 415; "ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய" **புற** 2: 15; "ஈரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரோ டேதில ராகி" **பழமொழி** 356; "ஈரைம் பதின்ம ருடன்றெழுந்த போரில்" **சிலப்** 29: ஊசல்வரி; "ஈரைம் பதிர் நனிவளா" **வில்லி** வாரணாவத 94.

6 **துப்புத்துறை போகிய:** "துப்புத்துறை போகிய வெப்புடைத் தும்பை" "துப்புத்துறை போகிய கொற்ற வேந்தே" **பதிற்** 39: 3; 62: 9

8. **தும்பைப் பகைவர்:** "தும்பைக், கறுத்து தெவ்வர்" **பதிற்** 39: 3—4; "வாடாத் தும்பை வயவர்" **பெரும்பாண்** 101.

9. **செருப்புகன் முன்ப:** "அருங்கட னிறுத்த செருப்புகன் முன்ப" **பதிற்** 77: 22; "ஒன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்" **மதுரைக்** 726.

10. "மடங்கல்போற் சினை இ" **கலி** 2: 3; "கூற்றுவெகுண் டன்ன முன்பொடு" "கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்" **புற** 42: 23; 56: 11; "கூற்றெனத் தெளித்தனர்" **சீவக** 2226. "கூற்றையுங் கட்பொறி இறுகக் காண்பரே, ஊற்றுறு குருதியோ டுயிரு முண்ப ரால்" **கம்ப.** இலங்கைக் கேள்வி 22.

11. **திருவெழு மார்பு:** "திருவெழு மரகலத்து...... அலங்கற் செல்வன்" **பதிற்** 31: 7—9; "திருவெழு மரகலத்துச் செங்கோல் வேந்தே" **சிலப்** 28: 157.

12. **சான்றோர் மெய்ம்மறை:** "ஏந்தெழி லாகத்துச் சான்றோர் மெய்ம்மறை" **பதிற்** 58: 11.

14. **வயங்கிழை:** பதிற் 12: 23-ம் அடிக்குறிப்பு.

**வண்டுபடு கதுப்பு:** "வண்டுபடு கூந்தல்" "வண்டார் கூந்தல்" **பதிற்** 46: 4; 90: 50. "வண்டுபடு கூந்தலைப் பேணி" **ஐங்** 267: 4; "வண்டினம் மேவுங் குழலாள்" **திருக்கோவை** 302; "வண்டுழல் புரிகுழன் மடந்தை மாரொடும்" **கம்ப.** கரன்வதை 121. 'தகையும் வண்டிமிர் கருங் குழல்" **வில்லி.** சம்பவ 31.

15. **ஒடுங்கீ ரோதி:** "ஒடுங்கீ ரோதி யொண்ணுதல்" **பதிற்** 74: 17; "ஒடுங்கீ ரோதி மாஅயோளே" "ஒடுங்கீ ரோதி நினக்கு மற்றூே" **அக** 86: 31; 160: 1.

14—5. "தன்னிறங் கரந்த வண்டுபடு கதுப்பின், ஒடுங்கீ ரோதி" **பதிற்** 81: 27—8.

15. **கொடுங்குழை கணவ:** "திருந்திழை கணவ" "வாணுதல் கணவ" "நன்னுதல் கணவ" "ஆன்றோள் கணவ" "நல்லோள் கணவன்" "சேயிழை கணவ"

"புரையோள் கணவ" "ஒண்டொடி கணவ" **பதிற்** 24: 11; 38: 10; 42: 7; 55: 1; 61: 4; 65: 10; 70: 16; 90: 50. "மங்கையர் கணவ" **முருகு** 264; "மங்கையர் கணவன்" "கொடியோள் கணவன்" **மலைபடு** 58: 424.

16. **களிற்றுத் தொழுதி:** "பல்களிற்றுத் தொழுதியொடு" **பதிற்** 62: 1; "இரும்பிடித் தொழுதி" **புற** 44: 1; "களிற்றின தொகுதியர்" **சிலப்** 5: 159.

**வெல்கொடி: பதிற்** 5-ம் பதி 1. **முருகு** 67; 122; **முல்லை** 91; **மலைபடு** 581—2; **அக** 149: 15; 354: 3.

**களிற்றின்மீது கொடி:** "கொடிநுடங்கு நிலைய கொல் களிறு" "மேம்படு வெல்கொடி நுடங்கத், தாங்க லாகா வாங்குநின் களிறே" "மலையுறழ் யானை வான் றோய் வெல்கொடி, வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்க" **பதிற்** 52: 1; 53: 20—1; 69: 1—2; "உரவுக் களிற்று வெல்கொடி நுடங்கும் பாசறை" **பதிற்** 52: 1; 53: 20—1; 69: 1—2; 88: 17; "அரச, யானை கொண்ட துகிற்கொடி போல" "களிறணி வெல்கொடி" "ஓடையானை யுயர்மிசை யெடுத்த, ஆடுகொடி" **அக** 111: 3—4; 162: 22; 358: 13—4; "கொல்களிற்று மீமிசைக், கொடி" 'கொடி நுடங்கு யானை" **புற** 9: 7; 228: 10.

16—7. "வரைபுரையு மழகளிற்றின்மிசை, வான்றுடைக்கும் வகையபோல, விரவுருவின கொடிநுடங்கும், வியன்றானை" **புற** 38: 1—4.

17. **பாடினிவேந்து:** "பசும்பூண் மார்ப பாடினி வேந்தே" **பதிற்** 17: 14.

19. **பொழின் முழுதாண்ட:** "உலகமுழு தாண்ட சுந்தரனை" **திருவிளை.** கடவுள் 10.

19—20. "உலக மாண்ட வுயர்ந்தோர் மருக" **மதுரைக்** 23. "பொதுமை சுட்டிய மூவ ருலகமும், பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும்" **புற** 357: 2—3.

20. **முன்றிணை முதல்வர்:** "முன்றிணை முதல்வர்க் கோம்பின ருறைந்து" "முன்றிணை முதல்வர் போல நின்று" **பதிற்** 72: 4; 85: 5.

21. **கெடா நல்லிசை:** "செல்லா நல்லிசை" **பட்டினப்** 184; "தொலையா நல் லிசை" **மலைபடு** 70; "கெடாஅ நல்லிசை" "கெடலரு நல்லிசை" **அக** 135: 11; 339: 14; "தொலையா நல்லிசை" "கெடுவி னல்லிசை" "மாயா நல்லிசை" **புற** 123: 5; 221: 12; 399: 12; "கேடி னல்லிசை" **சீவக** 1458.

**நல்லிசை நிலீஇ:** "கெடலரும் பல்புகழ் நிலைஇ" **பதிற்** 48: 3; "மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" "ஒருதா மாகிய பெருமை யோரும், தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந் தனரே" **புற** 165: 1—2; 366: 4—5; "இந்நிலத்து மன்னுதல் வேண்டி னிசை நடுக" **நான்மணி** 17.

---

## 5. நிரைய வெள்ளம்.

**15.** யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
மழைதவழ்பு தலைஇய மதின்மர முருக்கி
நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்

வெண்பூ வேளையோடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதற்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பின்
அறியா மையான் மறந்துதுப் பெதிர்ந்தநின்
பகைவர் நாடுங் கண்டுவந் திசினே
கடவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்க்
கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்
சீர்பெறு கலிமகி ழியம்பு முரசின்
வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தாரணிந் தெழிலிய தொடிசிதை மருப்பின்
போர்வல் யானைச் சேர லாத
நீவா ழியரிவ் வுலகத் தோர்க்கென
உண்டுரை மாறிய மழலை நாவின்
மென்சொற் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துற வறியாது நந்திய வாழ்க்கைச்
செய்த மேவ லமர்ந்த சுற்றமோ
டொன்றுமொழிந் தடங்கிய கொள்கை யென்றும்
பதிபிழைப் பறியாது துய்த்த லெய்தி
நிரைய மொரீஇய வேட்கைப் புரையோர்
மேயின ருறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலி னோயிகந் தொரீஇய
யாணர்நன் னாடுங் கண்டுமதி மருண்டனென்
மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சா
தீத்துக்கை தண்டா கைகடுந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி
ஏமமாகிய சீர்கெழு விழவின்
நெடியோ னன்ன நல்லிசை
ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.

துறை-செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம்-ஒழுகுவண்ணம்.
தூக்கு-செந்தூக்கு.
பெயர்-நிரைய வெள்ளம் (4).

ப-ரை 1–15. பரந்து ஆடு கழங்கு அழி மன் மருங்கு அறுப்ப—பரவி ஆடுகின்ற கழங்குகள் அழிதற்குக் காரணமான அரசர்களின் குலத்தை இல்லையாக்க வேண்டி, மழை தவழ்பு தலைஇய மதில் மரம் முருக்கி—மேகம் தவழ்ந்து மழையைப்பெய்த மதிலின் வாயிலிலுள்ள கணைய மரத்தை முறித்து, நிரை களிறு ஒழுகிய—நிரைத்த களிறுகள் சென்ற, நிரைய வெள்ளம்—பகைவர்க்கு நரக வேதனையைச் செய்யும் படைவெள்ளத்தோடு, யாண்டு தலைப்பெயர வேண்டு புலத்து இறுத்து—யாண்டு கழியத் தான் அழிக்கவேண்டுமென்ற நிலங்களிலே தங்கி. முனை எரி பரப்பிய துன் அரும் சீற்றமொடு—பகைப்புலத்தே நெருப்புப் பரவுமாறு செய்த நண்ணுதற்கரிய கோபத்தோடு, கொடி விடு குரூஉ புகை பிசிர கால் பொர—தீக்கொழுந்து விடுகின்ற நிறத்தையுடைய புகை பிசிராகும்படிக் காற்று அடித்தலால், அழல் கவர் மருங்கின் உருவு அற கெடுத்து—நெருப்புப்பற்றிய இடங்களைப் போல உருவம் நீங்கும்படி கெடுக்கப்பட்டு, தொல் கவின் அழிந்த—தன் பழைய அழகு அழிந்த, கண் அகல் வைப்பின்—இடம் அகன்ற ஊர்களையும், வெண் பூ வேளையொடு பை சுரை கலித்து—வெள்ளிய பூக்களையுடைய வேளைச் செடியுடனே பசிய சுரையும் தழைத்து வளரப்பெற்று, பீர் இவர்பு பரந்த—பீர்க்கங்கொடி ஏறிப் பரந்த, நீர் அறு நிறை முதல் சிவந்த காந்தளின் முதல் சிதை மூதில்—நீர் அற்ற சாலிடத்தேயுள்ள சிவந்த காந்தளின் அடி சிதைந்த பழைய வீடுகளையுடைய, புலவு வில் உழவின் புல்லாள் வழங்கும்—புலால் நாறும் வில்லின் தொழிலையே உழவுத்தொழிலாகவுடைய புல்லிய தொழிலையுடைய ஆறலைகள்வர் இயங்கும். புல் இலை வைப்பின்—புல்லிய இலைகளாலே வேயப்பட்ட வீடுகளையுடைய ஊர்களையுமுடைய, புலம் சிதை—இடஞ் சிதைந்த, அரம்பின்—குறும்பினையுடைய, அறியாமையான் மறந்து துப்பு எதிர்ந்த—நினது வலிமிகுதியை அறியாமையால் நின்னொடு எதிர்தல் தகாது என்பதை மறந்து நின் வலியோடு மாறுபட்ட, நின் பகைவர் நாடும் கண்டு வந்திசின—நின் பகைவருடைய நாட்டையும் கண்டு வந்தேன.

16—23. கடலவும்—கடலிலுள்ளனவும், கல்லவும்—மலையிலுள்ளனவும், யாற்றவும்—யாறு செல்லும் முல்லை மருத நிலங்களிலுள்ளனவும், பிறவும்—பிற இடத்திலுள்ளனவுமாகிய, வளம பல நிகழ்தரும்—வளங்கள் பலவும் உளவாகும், நனந்தலை நல் நாட்டு—அகன்ற இடத்தையுடைய நல்ல நாட்டிலுள்ள, விழவு அறுபு அறியா—விழாக்கள் நீங்கி யறியாத, முழவு இமிழ் மூதூர்—முழவு முழங்குகின்ற மூதூர்க்கணுள்ள, கொடி நிழல் பட்ட பொன் உடை நியமத்து—கொடிகளின் நிழலமைந்த பொன்னையுடைய அரசன் கோயி

லில், சீர்பெறு கலி மகிழ் இயப்பு முரசின் வயவர் வேந்தே—வெற்றிப் புகழ்பெற்ற மிக்க மகிழ்ச்சியானே ஒலிக்கின்ற வீர முரசினையுடைய வீரருக்கு வேந்தே, பரிசிலர் வெறுக்கை—பரிசிலருடைய செல்வமாக இருப்பவனே, தார் அணிந்து எழிலிய—மாலை அணியப் பெற்று அதனால் அழகு பெறற, தொடி சிதைத மருப்பின்—தொடி சிதைந்த மருப்பினையுடைய, போர் வல் யானை சேரலாத—போர் செய்தலில் வல்ல யானையையுடைய சேரலாதனே.

24—34. உண்டு உரை மாறிய மழலை நாவின்—கள்ளை உண்டு சொல் தடுமாறிய மழலை வார்த்தையையுடைய நாவினையும், மென் சொல்—மெல்லிய சொல்லினையுமுடைய, கலப்பையர்—வாச்சிய முட்டுக்களையுடைய பையையுடைய பாணர் முதலியோர், இவ்வுலகத்தோர்க்கு நீ வாழியர் என—இவ்வுலகத்தோர் ஆக்கத்தின்பொருட்டு நீ வாழ்வாயெனச் சொல்லி, திருந்து தொடை வாழ்த்த—திருந்திய நரம்புத் தொடையினையுடைய யாழொடு வாழ்த்த, வெய்து உறவு அறியாது நந்திய வாழ்க்கை—துன்பம் உறுதலை அறியாது பெருகிய வாழ்க்கையினையும், ஒன்றுமொழிந்து அடங்கிய கொள்கை—கடவுளைப் பரவி அதனால் ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையும், நிரயம் ஒரீஇய வேட்கை—நரகத் துன்பத்தினின்று நீங்குதற்கேதுவாகிய நல்வினைகளை விரும்புதலையுமுடைய, புரையோர்—உயர்ந்தோர், செய்த மேவல் அமர்ந்த சுற்றமொடு—தாம் செய்த காரியங்களைப் பின சிதையாது மேவுதலைப பொருந்தின சுற்றத்தாரோடு, என்றும் பதி பிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி—எக்காலத்தும் ஊரை விட்டு நீஙகுதலை அறியாது தங்கித் தவநுகர்ச்சியைப் பெற்று, மேயினர் உறையும்—இவன் நாட்டிலே வாழவேண்டுமென்று விரும்பினராய் வாழும், பலர் புகழ் பண்பின் நீ—பலரும் புகழும் பண்பினையுடைய நீ, புறந் தருதலின்—காத்தலினால், நோய் இகந்து ஒரீஇய—பசியும் பிணியும கைவிட்டு நீங்கிய, யாணர் நல் நாடு—புது வருவாயையுடைய நல்ல நாட்டையும, கண்டு மதிமருண்டனென—கண்டு அறிவு இறும்பூது எய்தினேன்.

35-40. மண்ணுடை ஞாலத்து மன் உயிர்க்கு—அணுச் செறிதலையுடைய ஞாலத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கு, எஞ்சாது ஈத்து—குறையாது கொடுத்து, கை தண்டா—அவ்வீகைச் செயலில் மாறாத, கைகடு துப்பின்—ஈத்தலிற் கையிடத்துள்ள மிக்க வலிமையால், புரைவயின் புரைவயின் பெரிய நல்கி—உயர்ந்த தேவாலயங்கள் தோறும் பெரிய ஆபரணம் உள்ளிட்டவற்றைக் கொடுத்து, ஏமமாகிய சீர் கெழு விழவின்—இன்பமாகிய சிறப்புப்பொருந்திய விழாவினையுடைய, நெடியோன் அன்ன நல் இசை—திருமாலைப் போன்ற நல்ல

புகழுமுடைய, ஒடியா மைந்த—கெடாத வன்மையையுடையோய், நின் பண்பு பல நயந்து—நின் பண்புகள் பலவற்றையும் காண விரும்பி

**முடிபு: மைந்த, நின் பண்புகள் பலவற்றையும் காண விரும்பி நின் பகைவர் நாடும் கண்டுவந்தேன்; அதுவேயன்றி வேந்தே, வெறுக்கை சேரலாத நீ புறந்தருதலின் நோய் இகந்து ஒரீஇய நின் நாடும் கண்டு மதிமருண்டேன் என்க.**

(ஆ—ரை.) 1—15. மன் மருங் கறுப்ப வேண்டி வெள்ளமொடு வேண்டு புலத்து இறுத்த நீ சீற்றமொடு உருவறக் கெடுத்தலாலே தொல் கவின் அழிந்த கண்ணகன் வைப்பினையும், புல்லாள் வழங்கும் புல்லிலை வைப்பினையுமுடைய புலஞ்சிதைந்த பகைவர் நாடுங்கண்டு வந்தேன் என்க.

மகளிர் பரவி நின்று கழங்கு ஆடுதலின், 'பரந்தாடு கழங்கு' என்றார். "மகளிர்......முத்த வார்மணற் பொற்கழங் காடும்" (பெரும்பாண் 327—35) எனவும், "கழங்காடு மகளிரோதை யாயத்து" (சிலப் 27; 24—5) எனவும் வருவன காண்க. கழங்கு அழி மன் என்றது எண்ணுதற்குக் கருவியாயுள்ள கழங்கு எண்ணுதற்குப் போதாமைக்குக் காரணமாகிய மிக்க அரசர் என்றவாறு. "எல்லா மெண்ணி னிடுகழங்கு தபுந" (பதிற் 32: 8) என்பதனால் கழங்கு எண்ணுதற்குக் கருவியாதலறிக. அழி மன் என்பது 'நோய்தீரு மருந்து'போனின்றது. மன் என்றது பகையரசர்களை. மருங்கு—குலம். அறுப்ப (8) இறுத்து (1) என மாறிக் கூட்டுக.

மலைநாட்டமைந்த உயர் மதிலாதலின் 'மழைதவழ்பு தலைஇய மதில்' என்றார். தலைஇய—பெய்த. மலைபடு 1 நச். மதின் மரம் என்றது மதிற் கதவங்களைத் தடுத்து நிற்கும் கணைய மரத்தை. இதனை, "எழூஉத் தாங்கிய கதவு" (புற 97: 8) என்பதனாலும், 'கணைய மரத்தால் தடுக்கப்பட்ட கதவு' என்னும் அப்பகுதியுரையானும் அறியலாம். மதின்மர முருக்கிய களிறு எனக் கூட்டுக.

"கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய வெழுமுருக்கி" புற 14: 1—2.

என்றார் பிறரும். நிரைகளிறு—நிரைத்த களிறு கலி 132: 5. நச். யானையுடைய படை காண்டற் கினிதேயாயினும் அச்சிறப்புப்பற்றிக் கூறாது, மதின்மர முருக்கிய சிறப்புப்பற்றிக் 'களிறொழுகிய வெள்ளம்' எனப் படையிற் களிற்றை எடுத்துக் கூறினர். 'மதிற்கால் சாய்த்தற்குக் களிறு சிறந்தமையின் அதனையே கூறினர்' எனப் பேராசிரியர் கூறுதலும் காண்க. (திருக்கோவை 338 உரை) நிரயம் என்பது நரகவேதனையை உணர்த்தல், "நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே" (புற 376: 15)என்புழிக் காண்க. 'நிரயத் தானை—நரக வேதனையைச் செய்யும் தானை' என்றார் அடியார்க்கு நல்லாரும் (சிலப் 26: 37 உரை )

பகைவர்க்கு நரகம்போலும் வேதனையைச் செய்யும் படை வெள்ளத்தை நிரயவெள்ளம் என்று கூறிய சிறப்பானே இச்செய்யுளுக்கு நிரைய வெள்ளம் என்று பெயராயிற்று. 'நிரையவெள்ளமென்றது பகைவர்க்கு நிரயபாலரைப்போலும் படைவெள்ளமென்றவாறு; நிரையமென்றது நிரயத்து

வாழ்வாரை இச்சிறப்பானே இதற்கு நிரையவெள்ளம் என்று பெயரா யிற்று' என்பர் பழையவுரைகாரர்.

படையை வெள்ளம் என்றது அதன் மிகுதிபற்றி. வெள்ளமொடு என மூன்ருவது விரித்து (4) வேண்டு புலத்து இறுத்து (1) என மாறிக் கூட்டுக. "வெள்ளத் தானையொடு வேண்டுபுலத் திறுத்த கிள்ளி வளவன்'' (அக 346: 21—2) எனப் பிறண்டும் வருதல் காண்க. வேண்டுபுலம்—'வேண்டும் நிலங்கள்' (மதுரை 150 நச் 'தாம் வேண்டிய இடம்' புற 230: 2 உரை. மிக்க சீற்றமொடு பகைப்புலத்தே எரியைப் பரப்புதலின் 'முனையெரி பரப் பிய துன்னருஞ் சீற்றமொடு' என்ருர். இது, 'எரிபரந்தெடுத்தல்' என்னும் துறை கூறிற்று. சீற்றமொடு (2) அழல் கவர் மருங்கி னுருவறக் கெடுத்து (7) என முடிக்க.

அழல் என்றது காட்டுத்தீயை. கொடி விடு புகை என்றது அத்தீயி னின்று எழுகின்ற புகையை. கொடி—ஒழுங்குமாம். மிக்க தீயினின்றும் திரண்டெழுகின்ற புகை கரிதாக விளங்கித் தோன்றலின் 'குருஉப்புகை' என்ருர். "முனைசுடவெழுந்த மங்குன் மாப்புகை" (புற 103: 6) என்ருர் பிற ரும். கடுங்காற்ருதல் தோன்றப் 'புகை பிசிர' என்ருர். அழல் கவர் மருங்கு என்றது கடுங்காற்று அடித்தலாற் சுடர் சிறந்துருத்துக் காட்டுத்தீ பற்றிய இடங்களை.

''கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்'' பதிற் 25: 6—7.

என வருதல் காண்க கெடுத்து—செயப்பாட்டுவினையெச்சம். மருங்கு— இடம். இன், ஒப்புப்பொருட்டு. பிறரால் அழிக்கப்படாமையால் தொன்று தொட்டு வருகின்ற கவின் சேரலுல் அழிந்தமை தோன்றத் 'தொல்கவின்' என்ருர்.

சேரலாதனுல் நாடு அழிந்தமையின் ஊரில் வாழ்வார் இன்ருய் வேளை யும் சுரையும் நன்கு தழைத்து வளர்தலின் 'வேளையொடு சுரை கலித்து' என்ருர்.

''வெண்பூ வேளையொடு சுரைதலை மயக்கிய
விரவுமொழிக் கட்டூர் வயவர் வேந்தே'' பதிற் 90: 29—30.

என வருதல் காண்க. வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்து என்ரு ராயினும், வேளையொடு சுரை கலித்துப் பூக்க என்பதுவே கருத்தாகக்கொள்க.

'வேரறுகு பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தாரறிய லாகா கிடந்தனவே — போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினுர் நாடு''

என முத்தொள்ளாயிரத்து வருதல் காண்க. வேளை—ஓர் செடி. இதன் பூ வெள்ளிதாதல் ''வேளை வெண்பூ" (புற 215: 3) என்பதனுலும் பாழிடத்தே வளர்தல் 'வெருவரு பறந்தலை, வேளை வெண்பூக் கறிக்கும், ஆளி லத்த மாகிய காடே" (புற 23: 20—2) என்பதனுலுமறிக. ஒடு உடனிகழ்ச்சிப் பொருளது. சுரை—காட்டுச் சுரை. கலிக்கவெனத் திரிப்பினுமமையும்' பாழ்த்த வீடுகளில் பீர்க்கு ஏறிப் படர்ந்தமையின் 'பீரிவர்பு பரந்த மூதில்'

என்றூர். "ஊரெழுந் துலறிய பீரெழு முதுபாழ்" "பீரெழுந்து, மனை பாழ் பட்ட" (அக 167: 10; 273: 1-2) என வருவன காண்க. பீர்க்கு-பேய்ப் பீர்க்கு.

இல்லில் மக்களின்றுகச் சாலில் நீரற்றுப்போதலின், அச்சாலிடத்து வளர்ந்த காந்தளின் முதல் சிதைந்தமையின், 'நீரறு நிறைமுதற் காந்தண் முதல் சிதைமுதில்" என்றூர் நிறை—சால். "கலம்நிறை பொழிதர நின்ற மேதியால்" (சீவக 69)என்புழி, நிறை—சால் என நச்சினர்க்கினியர்உரைத்த வாறு காண்க. "நிறை வட்டம் இடங்கர் நீர்ச் சாலாகும்" என்பது பிங்க லந்தை, (பிங, 6: 636) நிறைமுதல்—நிறையிடத்து "தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்தி" (அக 129: 7) என்றூர் பிறரும். 'உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்" (புற 90: 1) என வெண்காந்தள் கூறப்படுதலின் அதனை விலக்கிச் செங்காந்தள் என்பது தோன்றச் 'சிவந்த காந்தள்' என்றூர். சிவந்த என்பது இயல்பான சிவப்பைக் குறித்து நின்றது. "சிவந்ததா மரை" என்புழில்போல. முதல் என்றது கிழங்கை. முதில் என்றது பாழ்த்த மனையை. முதில்லையுடைய புல்லிலை வைப்பு எனக்கூட்டுக.

புலவுவில் லுழவிற் புல்லாள்—என்றது ஆறலைகள்வரை. புலவுவில்—புலால் அம்பைத் தொடுத்தலின் புலால் நாற்றத்தையுடைய வில். 'எய்த அம்புதன்னை மீட்டுந் தொடுத்தலிற் புலால் நாற்றத்தையுடைய வில்' என்பர் நச்சினர்க்கினியர். (மதுரைக் 142 உரை) வில்லுழவின் என்பதற்கு வில்லாகிய ஏரினுல் உழுதலையுடைய எனினுமாம். வழிப்போவாரை மறைந் திருந்து கொல்லும் புல்லியதொழிலுடைமையால் ஆறலைகள்வரைப் 'புல் லாள்' எனறூர்.

'கடிகை வெள்ளிலுங் கள்ளி வற்றலும்
வாடிய வுவலொடு நீடதர் பரப்பி
யுழைவயிற் பிரியாது முழைவயி னெடுங்கிய
வாறலை யிளையரை யாண்மை யெள்ளி" பெருங் (1) 55: 83—6.

என வருதல் காண்க. புல்லிலை வைப்பு என்பதனை 'நூலாக்கலிங்கம்' (பதிற் 12: 21) என்றதுபோலக் கொள்க. வைப்பு என்றது குடிபோய்ப் பாழ்த்த ஊர்களை. சேரனுல் நாட்டின் இடங்கள் பலவாறு சிதைந்தமையின் 'புலஞ் சிதை நாடு' என்றூர். "இழிபறியல் பெருந்தண்பணை, குரூஉக்கொடிய வெரி மேய, நாடெனும் பேர் காடாக......ஊரிருந்தவழி பாழாக......பாழாயின" (மதுரைக் 154—76) என வருதல் காண்க

அரம்பிற் (13) பகைவர் (15( துப்பெதிர்ந்த (14) பகைவர் (15) எனத் தனித்தனி கூட்டுக. அரம்பு—குறும்பு. சீவக 2727 நச். பகைவர் நின் வலி மிகுதியை அறியின் நின்னெடு எதிர்தல் தகாது என்பதனை நினைந்து நின் வலியொடு மாறுபடார் என்பது தோன்ற, "அறியாமையான் மறந்து துப்பெதிர்ந்த பகைவர்' என்றூர். துப்பெதிர்தல்—வலியோடு மாறுபடுதல். (புற 50: 8—9 உரை)—வந்திசின், இசின் தன்மைக்கண் வந்தது. "இனிது கண்டிசிற் பெரும" (புரு 22: 36) என்புழிப்போல.

16—23. கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவுமாகிய வள்ம்பல நிகழ் தரும் நன்னுட்டு முதூர் நியமத்தின்கண் வெற்றிப் புகழ்பெற்ற மிக்க

மகிழ்ச்சியான் இயம்பும் முரசினையுடைய வயவர் வேந்தே, பரிசிலர் வெறுக்கை, சேரலாத என்க.

கடல் என்றது கடலிலுள்ளனவாகிய அரும்பொருள்களை. அவை முத்து பவளம் சங்கு முதலியன. கல்—மலை. "கல்காயுங் கடுவேனிலொடு" (மதுரைக் 106) கல்ல என்றது மலையிலுள்ளனவாகிய அரும் பொருள்களை. அவை பொன் மணி அகில் சந்தனம் முதலியன. யாற்ற என்றது யாறு பாயும் முல்லை மருத நிலங்களிலுள்ள பொருள்களை. முல்லை நிலத்துப் பொருள்கள்: பொன் தேன் மயிற்பீலி முதலியன. மருத நிலத்துப் பொருள்கள்: செந்நெல் கரும்பு வாழை முதலியன. பிறவும் என்றது ஒரு நிலமாகச் சொல்லப்படாத பல நிலப்பண்புகளையுடைய இடத்துப் பொருள்களை. பிற இடத்தனவும் என்பர் நச்சினார்க்கினியர் (மதுரைக் 504 உரை) நிகழ்தரும் என்றார் இடையறாது நிகழ்தலின்.

வளம்பல நிகழ்தரும் நன்னாட்டு மூதூர் செல்வம் மிக்கதாதலின் ஆண்டு விழா என்றும நிகழ்தலின் 'விழாவறுபறியா' என்றும், விழாவில் அடிக்கப்படும் முழவு எக்காலத்தும் மூதூர்கண் ஒலித்தலின் 'முழவிமிழ் மூதூர்' என்றும் கூறினர். "முழவுகண் புலரா விழவுடை யாங்கண்" (நற் 220: 6) என்றார் பிறரும். அறுபு—அற்று* செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். "கொடியறு பிறுபு செவி செவிடுபடுபு" (பரி 2: 38) என்புழி 'அறுபு—அற்று' எனப் பரிமேலழகர் பொருளுரைத்தவாறுங் காண்க. பேரொலியாக ஒலித்தல்பற்றி முழவினை எடுத்துக் கூறினாராயினும், குழல் யாழ் முதலியன ஒலித்தலுங் கொள்க.

"குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து" 156—8.

எனப் பட்டினப்பாலையில் வருதல் காண்க. மூதூர் (18) நியமத்து என இயையும். கொடிநிழற்பட்ட நியமம் எனக்கூட்டி மிக்க கொடிகள் நனிவிரவுதலினால் அவற்றின் நிழலிலமைந்த நியமம் எனக்கொள்க. திருவீற்றிருந்த நியமமாகலின் பொன்னுடை நியமம் என்றார். நியமம்—அங்காடித்தெருவுமாம். நியமத்து (19) இயம்பும் (20) என முடிக்க. சீர் என்றது ஈண்டு வெற்றிப் புகழை. வீரர்க்கு எல்லாப் புகழினும் வெற்றியாலுளதாகும் புகழ் உயர் புகழாதலின் அதனைப் பெற்றதனாலுளதாகிய மிக்க மகிழ்ச்சியைக் 'கலிமகிழ்' என்றார். சேரலாதன் தன் வீரருடன் சென்று பகைவரை வென்றமை தோன்றச் சீர்பெறு கலிமகிழ் † இயம்பு முரசின் வயவர் வேந்தே என்றார்.

பரிசிலர் வாழ்வுக்கு வேண்டும் செல்வத்தை வரையாது வழங்குதலின் சேரலாதனைப் 'பரிசிலர் வெறுக்கை' என்றார். "பாணர்க் ககலாச் செல்வ முழுதுஞ் செய்தோன், எங்கோன் வளவன்" (புற 34: 14—5) என வருதல் காண்க. பரிசிலர்—பரிசிற் பொருளால் வாழ்க்கையை நடத்துதலையுடைய பாணர் கூத்தர் முதலியோர். "பரிசில் வாழ்க்கைப் பரிசிலர்" (சிறுபாண் 218) என்றார் பிறரும். வெறுக்கையாக இருப்பவனை 'வெறுக்கை' என்றார். அந்தணருடைய செல்வமாக இருப்பவனை 'அந்தணருடைய வெறுக்கை"

---

* அறுதல்—நீங்குதல் "எல்லாத் தவறு மறும்" (கலி 107: 17) என்புழிப்போல
† "வென்றிவெம் முரச மார்ப" சீவக 299.

எனத் திருமுருகாற்றுப்படையில் கூறியிருத்தல் ஈண்டறியற்பாலது வெறுக்கை அண்மைவிளி.

தாரணிந்தெழிலிய யானை, மருப்பின் யானை, போர்வல்யானை எனத் தனித்தனி கூட்டுக. தார் என்றது கழுத்திலணிந்த மாலையை. தார் அணி யப்பட்டதனால் அழகு மிகப்பெற்ற யானையாதலின் 'எழிலிய யானை' என்றார். 'எழிலிய—எழில்பெற்ற' புற 68: 5 உரை. இது பண்புப் பெயரடியாக வந்த பெயரெச்சம். தொடிசிதை மருப்பு—பகைவர் மதிலையும், மதிற் கதவையும் பொருதலாற் தொடி சிதைந்த மருப்பு.

'நீண்மதி லரணம் பாய்ந்தெனத் தொடிபிளந்து
வைநுதி மழுகிய தடங்கோட் டியானை'' ஐங் 444: —3
''கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
நுதிமுக மழுகிய மண்ணை வெண் கோட்டுச்
சிறுகண் யானை'' அக 24: 11—3.

எனப் பிறண்டும் வருவன காண்க. தொடி—மருப்புச் சிதையாவண்ணம் இரும்பினாற் செய்து அதன் நுனியில் அணியப்படும் பூண். ''யானை மருப் பின், இரும்பு செய்தொடியின்'' (அக 26: 6–7) என வருதல் காண்க. வினை நவின்ற போர்யானையாதலின் 'போர்வல் யானை' என்றார். இப்பகுதி யால் சேரலாதன் அலங்கரிக்கப்பட்ட யானை முதலிய படையுடன் மேற் சென்று பகைவர் மதிலை அழித்தமை கூறினார்.

24—31. 'நீ வாழியர் இவ்வுலகத்தோர்க்கு' எனக் கலப்பையர் திருந்து தொடையொடு வாழ்த்த, வெய்துறவறியாது நந்திய வாழ்க்கையினையும், ஒன்றுமொழிந்து அடங்கிய கொள்கையினையும், நிரையமொரீஇய வேட்கை யினையும் உடைய புரையோர் செய்த மேவலமர்ந்த சுற்றத்தோடு என்றும் பதிபிழைப்பறியாது துய்த்தலெய்தி மேயினருறைவதும், நீ புறந்தருதலின். நோயிகந்தொரீஇயதுமாகிய நாடும் கண்டு மதி மருண்டனென் என்க.

இவ்வுலகத்தோர் என்றது பாணர் கூத்தர் முதலிய பரிசின் மாக்களை. அரியவும் பெரியவுமாகிய பொருள்களை ஓம்பாது வீசிப் பரிசிலர் யாவரதும் ஆக்கத்துக்குக் காரணமாய் விளங்கிய சேரலாதன் நெடுங்காலம் வாழின் தமது வாழ்க்கை செல்வக்குறைபாடின்றி இனிது செல்லும் என்னும் கருத் தாற் கலப்பையர் தம்மைப் பிறர்போல் வைத்து 'நீ வாழியர் இவ்வுலகத் தோர்க்கு' எனச் சொல்லி வாழ்த்துவாராயினர். சேரலாதன் பரிசிலர் யாவர்க் கும் ஓம்பாது வீசியமை.

''விரியுளை மாவுங் களிறும் தேருக்
வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசி
................................................
எமர்க்கும் பிறர்க்கும் யாவ ராயினும்
பரிசின் மாக்கள் வல்லா ராயினும்
கொடைக்கட னமர்ந்த கோடா நெஞ்சினன்'' பதிற் 20. 15—23.

என்பதனாலறியப்படும்.

இவ்வுலகத்தோர்க்கென வாழ்த்த என முடிக்க. உண்டு உரை மாறிய நா என இயையும் மழலைநா—கள்ளையுண்ட மயக்கத்தால் மழலை வார்த்தை

யையுடைய நா. "உண்டு மகிழ்ந்தட்ட மழலை நாவிற் பழஞ் செருக்காளர்" (மதுரைக் 668—9) எனவும், "நறவார்ந்து...மழலைச் சொற்களின் வைதினை கூறினான்" (சீவக 939) எனவும் வருவன காண்க. மழலை என்றது தெளிவில்லாத மொழியை. இசைவல்லோரது சொல்லும் மென்மையாக இருத்தலின் 'மென்சொற் கலப்பையர்' என்றார். "மென்மொழி* மேவலர் இன்னரம்புளர" என்றார் திருமுருகாற்றுப்படையினும் (முருகு 141) மழலை நாவினையும் மென்சொல்லினையுமுடைய கலப்பையர் எனக் கொள்க. கலப்பையர் என்றது முழவு தூம்பு பதலை கரடிகை முதலாகிய இசைக்கருவிகளைக்கொண்ட பையையுடைய பாணர் கூத்தர் முதலாயினாரை.

"வாங்குபு தகைத்த கனப்பைய ராங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும
வயிரிய மாக்கள" பதிற் 23: 4—6.
"தலைப்புணர்த் தகைத்த பஃறொகை கலப்பையர்
இரும்பே ரொக்கற் கோடியர்" புற 310: 22—3.

எனவருவன காண்க. 'கலப்பை—வாச்சிய முட்டுக்களையுடைய பை, மலைபடு 13 நச் தொடை—நரம்புத்தொடை. ஈண்டு ஆகுபெயராய் யாழை உணர்த்தியது. அதனைத் திருந்துதொடை என்றது வாசித்துக் கைவந்த யாழாதல் பற்றி தொடையொடு என விரியும் ஒடு வேறுவினை ஒடு என்பாருமுளர். யாழொடு வாழ்த்த எனவே யாழில் மிழற்றுவதும் வாழத்துரையே யாகலின், ஆண்டு விரியுமொடு வேறு வினையொடுவாவது யாண்டையதென்க. வாழ்த்த நீ புறந்ததெலின் (33) என முடிக்க.

பசி பிணி முதலியன நீங்கச் சேரலாதன் நாட்டை இனிது புறந்தருதலின் ஆண்டு வாழ்வோர் துன்பமுறுதலறியாது பெருகிய வாழ்க்கை வாழுதலின் 'வெய்துற வறியா நந்திய வாழ்க்கை' என்றார். வெய்து—வெம்மை. ஈண்டுத் துன்பத்தை. இதனை, "இருதலை வந்த பகைமுனை கடுப்ப, இன்னுயி ரஞ்சி இன்னா வெய்துயிர்த்து" (மதுரைக் 402—3) என்புழி 'வெய்துயிர்த்து வெப்பத்தைப்போக்கி: எனவே அச்சத்தால் நெஞ்சிற் பிறந்த வருத்தத்தைப் போககியென்றார்' என்னும் நச்சினார்க்கினியர் உரையானுமறிக. நந்திய—பெருகிய செய்தன என்பது கடைக்குறைந்தது. அமர்ந்த—விரும்பிய எனினுமாம். மேவலமர்ந்த என்பதற்கு 'மேவுதலையுடைய அத்தலைவரொடு மனம்பொருந்தின' என்பர் பழையவுரைகாரர். மனனுணர்வுடைமையாற் பிறப்பற முயன்று கடவுளை வழுத்தி அதனால் ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைமையால் 'ஒன்று மொழிந்து அடங்கிய கொள்கை' என்றார். எல்லா உலகங்களுக்கும எல்லாவுயிர்களுக்கும் முதல் வனாயிருக்கும் † கடவுள் ஒன்று என்பது யாவர்க்கும் துணிபாகலின் கடவுளை 'ஒன்று' என்றார். அடங்கிய என்பதற்கு 'மனமொழி மெய்களால் அடங்கிய' வெனினுமமையும்.

நிரயம் என்றது நரகத்துன்பத்தை. $ தீவினைசெய்தோர் நரகத் துன்

* "கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழி" திருக்கோவை 78.

† "ஒன்றெனக் கண்டேயெம் ஈசன் ஒருவனை" திருமந். 1744.

$ "பாவர்சென்று அல்கும் நரகம்—தீவினையார் சென்று தங்கும் நரகம்" திருக்கோவை 387 பேர்.

பத்தை எய்துவராகலின் அத்துன்பத்தினின்று நீங்குதற்கு ஏதுவாகிய நல்வினைகளின் மேற்சென்ற பற்றுள்ளத்தை 'நிரயமொரீஇய வேட்கை' என்றார் வேட்கை—பற்றுள்ளம். 'வேட்கையாவது பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம்' தொல். உயிர்மயங்கு 86 நச். புரையோர் என்றது சான்றோரை. "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்" (புற 191: 6—7) எனவும், 'சான்றோர்—முற்றவுணர்ந்து ஐம்பொறியுமடக்கியோர்' (தொல். கற்பு 5: 15 நச்) எனவும் வருவன காண்க. பதிபிழைப்பு என்றது பகைவரால் துன்பம் வந்தவிடத்துக் குடிமக்கள் அந்நாட்டைக் கைவிட்டு நீங்குதலை.

"வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்" நற் 153: 8—9
"பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென
வதுகைவிட் டகன்றொரீஇக் காக்கிற்பான் குடைநீழற்
பதிபடர்ந் திறைகொள்ளும் குடிபோல" கலி 78: 4—6.

என வருவன காண்க. சேரன் ஆட்சித் திறத்தால் குடிமக்கள் ஊரைவிட்டு நீங்குதலை என்று மறியாமையின் 'என்றும் பதிபிழைப்பறியாது' என்றார். இது பகையின்மை கூறிற்று. துய்த்தல்—அடங்கிய கொள்கையாலுதாகும் தவப்பயனை நுகர்தல். மேயினர் முற்றெச்சம்.

பலர்புகழ் பண்பின் நீ என்க. பலர் புகழ் பண்பு என்றது நட்பின்ரும் பகைவரும் முதலாகிய பலரும் ஒரு பெற்றிப்படப் புகழ்தற்கேதுவாகிய ஆண்மையும் வண்மையும் பொறையும் முதலாகிய நற்பண்புகளை. பண்பு—நற்குணங்கள் கலி 78: 4 நச். சேரலாதன் அரசியற் சிறப்பால் பசியும் பிணியும் நாட்டினின்று நீங்குதலின் 'நீ புறந்தருதலின் நோயிகந் தொரீஇய நாடு' என்றார். "நோயொடு பசியிகந் தொரீஇப், பூததன்று பெருமநீ காத்த நாடே" (பதிற் 13: 27—8) என வந்தவாறுங் காண்க. ஈண்டு நோய் என்றது பசியையும் பிணியையும். "நோயிகந்து நோக்கு விளங்க......உலகமாண்ட வுயர்ந்தோர்" (மதுரைக் 13—23) என்புழி நோய் என்பதற்குப் பசியும் பிணியும் என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமை காண்க. ஒரீஇய நாடு என இயையும். யாணர் நாடு—நீ புறந்தருதலால் மிக்க புதுவருவாயையுடைய நாடு "மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப, பெருவிறல் யாணர்த்தாகி .....வருவிருந் தயரு, மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந" (புற 42: 11—18) என்றார் பிறரும்.

நின் பகைவர் நாடுங் கண்டேன். நின் நாடுங் கண்டேன்; அறியாமையான் மறந்து துப்பெதிர்ந்த பகைவரின் பாழ்த்த நாட்டைக் கண்டு மதிமருட்கை எய்தாது, புரையோர் சுற்றமொடு பதிபிழைப்பறியாது துய்த்தலெய்தி மேயினருறைவதும் நோயிகந் தொரீஇயதும் மிக்க புதுவருவாயையுடையதுமாகிய நின் நாட்டினைக்கண்டு மதிமருட்கை எய்தினேன் என்பார் 'நின் பகைவர் நாடுங் கண்டுவந்திசினே .... . நீ புறந்தருதலின் நோயிகந் தொரீஇய யாணர் நன்னாடுங் கண்டு மதிமருண்டனென்' என்றார். ஈண்டு மருட்கை பெருமை காரணமாகப் பிறந்த மருட்கை. "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே" என்றார் தொல்

காப்பியனாரும். (தொல். மெய் 7) மதி மருண்டனென்—அறிவு உவகை மிழக்கி னுள் நின்றவாறு நில்லாது திரிந்து வியப்படைந்தேன். மதி—'அறிவு' திருக்கோவை 171 பேர். 'இயற்கையாகிய நுண்ணறிவு' குறள் 637 பரிமேல்.

ஞாலத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கு எஞ்சாது ஈத்து அவ்வீகைச் செயலில் மாருத கையிடத்துள்ள மிக்க வன்மையாற் புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி நெடியோனன்ன புகழையுடைய மைந்த, நின் பண்புகள் பலவற்றையும் காணவிரும்பியதால் என்க.

இவ்வுலகத்திலுள்ள பரிசிலர் யாவர்க்கும் அவரவர்க்கு வேண்டும் அளவிற் குறைவுபடாது கொடுத்தலின் 'மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது ஈத்து' என்ருர். மண்—அணு. ஞாலத்து மன்னுயிர் எனக் கூட்டுக. "மலர்தலை யுலகத்து மன்னுயிர்" (பெரும்பாண் 32) என்ருர் பிறரும். ஈண்டு மன்னுயிர் என்றது மக்களுயிரை. சேரலாதன் மன்னுயிர்க்கு எஞ்சாது ஈத்துப் பின்னும் இரப்போர்க்கு மாருது ஈத்தலின் 'ஈத்துக் கைதண்டா' என்ருர்.

"இரந்தோர் வாழ நல்கி யிரப்போர்க்
கீத றண்டா மாசித றிருக்கை" பதிற் 76; 7—8
"இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னு
முன்னே தந்தனெ னென்னுது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யல ளுகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்" புற 171: 1—5.

என வருவன ஈண்டறியற்பாலன. கை—செயல் நெடுநல் 45 நச். தண்டா—'மாருத' பதிற் 76: 8 பழையவுரை. 'தணியாத' புற 6: 26 உரை. தண்டா மைந்த எனக் கூட்டுக. இனித் தண்டாத் துப்பு எனக் கூட்டித் தண்டாமைக்குக் காரணமாகி வலி என்றுரைப்பினும் அமையும். கைகடுந்துப்பு என்றது கையிடத்தமைந்த வரையாத வண்மைத் தன்மையை. துப்பின் நல்கி எனக் கூட்டுக. 'கைவள்ளீகை—கைவண்மையாற் கொடுக்கும்கொடை' (புற 143: 6) என்ற உரை காண்க. தேவாலயங்கள் உயர்ந்த இடங்களாதலின் 'புரைவயின்' என்ருர். புரை—உயர்ச்சி. அடுக்குத் தொறுப்பொருட்டு. ஏமமாகிய விழவு என்க. ஏமம்—இன்பம். விழவின் நெடியோன் என்க. நெடியோன்—திருமால். "நீனிற வுருவின் நெடியோன்" பெரும்பாண் 402. உரைசால் சிறப்பின் நெடியோனுதலின் புகழுக்குத் திருமாலை உவமை கூறினர். "புகழொத்தீயே யிகழுந ரடுநனை" "மாயோ னன்ன, உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற" (புற 56: 13: 57: 2—3) எனப் பிறரும் கூறுதல் காண்க. நல்லிசை மைந்த என முடிக்க. மைந்து—வலி. பண்பு பல என்றது ஆண்மையும் வண்மையும் செங்கோன்மையும் முதலாகிய பண்புகள் பலவற்றை. நயந்து என்னும் வினையெச்சம் ஏதுப்பொருட்டு. நயந்ததால் நின்பகைவர் நாடுங் கண்டுவந்தேன்; நின்நாடுங்கண்டு மதிமருண்டனென் என்க.

இதனுற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்பும் தன் நாடுகாத்தற் சிறப்பும் உடன் கூறியவாருயிற்று.

## மேற்கோள்.

"நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப" (தொல். உரி 77) என்னும் சூத்திரவுரையில் 'கறுத்த காயா' 'சிவந்த காந்தள்' என அவை வெகுளியே யன்றி நிறவேறுபாடுணர்த்தற்குமுரிய என்றவாறு' என்று உரைத்தனர் சேனாவரையர்.

"இயங்குபடையரவம்" (தொல். புற 8) என்னும் சூத்திரவுரையில், 'அடுத் தூர்ந் தட்டகொற்றத்தானும்—எடுத்துச்சென்ற இரு பெரு வேந்தர் படை யாளர் வரவறியாமல் இரவும் பகலும் பலகாலும் தாம் ஏறி அந்நாட்டைக் காவல்புரிந்தோரைக்கொன்ற கொற்றமும்; "யாண்டு தலைப்பெயர......முழ விமிழ் மூதூர்" என்னும் பதிற்றுப்பத்தும் அழிவுகூறிய இடம் அப்பாற் படும்' என்று உரைத்தனர் நச்சினார்க்கினியர்.

## பழையவுரை.

நீ சீற்றமொடு (2) அழல் கவர் மருங்கின் உருவறக் கெடுத்து (7) என முடிக்க. 4. நிரைய வெள்ளமென்றது பகைவர்க்கு நிரைய பாலரைப்போலும் படை வெள்ளமென்றவாறு. நிரையமென்றது நிரையத்து வாழ்வாரை. இச் சிறப்பானே இதற்கு 'நிரைய வெள்ளம்' என்று பெயராயிற்று. 5 மன்மருங் கறுப்பவென்றது மன் மருங்கறுப்ப வேண்டி யென்றவாறு. 7 கெடுத் தென்ப தனைக் கெடுக்கவெனத் திரிக்க. தொல்கவினழிந்த கண்ணகன் வைப்பினை யும் (8) புல்லாள் வழங்கும் (12) புல்லிலை வைப்பினையுமுடைய புலஞ்சிதை (18) நாடு (15) என முடிக்க. 8 தொல்கவினழிந்த வைப்பென்றது சுடுண்டு அழிந்த ஊர்களை. 13 புல்லிலை வைப்பென்றது குடிபோய்ப் பாழ்த்த ஊர் களை. 9 சுரை கலிக்கவெனத் திரிக்க. 10–11 நிறைமுதற் காந்தளெனக் கூட்டுக. 11—13. முதில்லையுடைய புல்லிலைவைப் பெனக் கூட்டுக. 13 புல் லிலை வைப்பென்றது புல்லிய இலைகளாலே வேயப்பட்ட ஊரென்றவாறு. இதனை 'நூலாக் கலிங்கம்' (பதிற் 12: 21) என்றதுபோலக் கொள்க. 12 புல் லாளென்றது புல்லிய தொழிலுடைய ஆறலை கள்வரை. அரம்பிற் (13) பகைவர் (15) என முடிக்க. 13 அரம்பென்பது குறும்பு. 20—21. சீர்பெறு கலிமகிழியம்பும் முரசின் வயவரென்றது வெற்றிப்புகழ் பெற்ற மிக்க மகிழ்ச்சி யானே ஒலிக்கின்ற முரசினையுடைய வீரரென்றவாறு. 19—20 நியமத்து இயம்புமென முடிக்க. 24—6. நீ வாழியரிவ்வுலகத்தோர்க் கெனத் திருந்து தொடை வாழ்த்தவென முடித்து, இவ்வுலகத்தோர் ஆக்கத்தின் பொருட்டு நீ வாழ்வாயாகவெனச் சொல்லித் திருந்திய நரம்புத் தொடையினையுடைய யாழொடு வாழ்த்தவென வுரைக்க. தொடையொடென விரியும் ஒடு வேறு வினையொடு. 25—6. மழலைநாவினையும் மென் சொல்லினையுமுடைய கலப் பையரெனக் கொள்க. வெய்துறவறியாது நந்திய வாழ்க்கையினையும் (27) ஒன்று மொழிந்தடங்கிய கொள்கையினையும் (29) நிரைய மொரீஇய வேட் கையினையும் உடைய புரையோர் (31) செய்த மேவலமர்ந்த சுற்றத்தோடு (28) பதிபிழைப்பறியாது துய்த்தலெய்தி (30) மேயினருறையும் (32) நாடென (34) மாறிக் கூட்டியுரைக்க. 28 செய்த மேவலமர்ந்த சுற்ற மென்றது (சுற் றத்) தலைவர்செய்த காரியங்களைப் பின் சிதையாது தாம் அவற்றை மேவு

தலையுடைய அத்தலைவரோடு மனம்பொருந்தின சுற்றமென்றவாறு. செய்தன வென்பது கடைக்குறைந்தது. ஈத்துக்கை தண்டா (36) மைந்த (40) என முடிக்க. 37. புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கியென்றது உயர்ந்த தேவாலயமுள்ள இடங்களிலே உயர்ந்த ஆபரணம் உள்ளிட்டவற்றைக் கொடுத்தென்றவாறு.

நின் பகைவர் நாடும் கண்டு வந்தேன் (15); அதுவேயன்றி வேந்தே வெறுக்கை (21) சேரலாத (23) நீ புறந்தருதலின், நோயிகந் தொரீஇய நின் (33) நாடும் கண்டு மதிமருண்டேன் (34); இவை இரண்டும் காணவேண்டின காரணம் யாதெனின், மைந்த! நின் பண்பு பலவற்றையுங்காண நயந்து (40) என வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது, அவன் வென்றிச் சிறப்பும் தன் நாடுகாத்தற் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

1. "வென்று கலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்து" **பதிற்** 53: 1. "வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த, பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்" **மதுரைக்** 233—4.

**1—2. பகைப்புலத்து எரிபரப்பல்:** "அடாஅ வடுபுகை யட்டுமலர் மார்பன்" "முனைசுடு கனையெரி யெரித்தலிற் பெரிது, மிதழ்கவி னழிந்த மாலையொடு" "ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇப், போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப" **பதிற்** 20: 20; 48: 10—1; 71. 9—10; "காலெனக் கடிதுராஅய் நாடுகெட வெரிபரப்பி" "இழிபறியாப் பெருந்தண்பணை, குரூஉக்கொடிய வெரிமேய, நாடெனும்பெயர் காடாக" **மதுரைக்** 125—6; 154—5; "வாடுக விறைவநின் கண்ணி யொன்னார், நாடுசுடு கமழ்புகையெறித்த லானே";"பகைவ,ரூர்சுடு விளக்கத்தழுவிளிக்கமபலைக்,கொள்ளை மேவலை" "பெருந்தண்பணை பாழாக வேமநன்னா டொள்ளெரி யூட்டினை" "முனை சுட வெழுந்த மங்குன் மாப்புகை, மலைசூழ் மஞ்சின் மழகளி றணியும், பகைப்புலத் தோனே" **புற** 6: 21—2: 7: 7—9; 16: 16—7; 103: 6—8: "செம்ம லுடையார் நாட், டோரெரியுள் வைகினவூர்" **பு. வெ. மா.** 49.

3. "திருமழை தலைஇய" **மலைபடு** 1.

**மழைதவழும் மதில்:** "வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி" **மலைபடு** 92: "வான்றோ யிஞ்சி" "வான்றோய் புரிசை" **அக** 35: 2; 114; 9: "மழைதுஞ்சு நீளரணம்" **பு.வெ. மா.** 119; "புயல்வந்த மாமதில்" **திருக்கோவை** 381; மழைவிளையாடு மதில்" **தஞ்சை** 238.

4. **நிரைய வெள்ளம்;** "நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்" **குறுந்** 258: 6. "நிரையத் தானையொடு" **சிலப்** 26: 37.

5. **மன்மருங்கறுத்தல்;** "சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு பொருந" **முருகு** 275—6; "சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே" **பரி** 14: 13; "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல், சீர்மிகு முருகன்" "மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்" **அக** 59: 10—1; 220: 5; "மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால் போல்" **தொல். புற** 13 நச் மேற்; "மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்" **மணி** 22: 25; "சூர்மருங் கறுத்த நெடுவேல்" **பாரதப் பாட்டு.**

6. **குரூஉப்புகை:** "குரூஉக் குய்ப்புகை" **மதுரைக்** 757.

6—7. "கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி" **புற** 229: 11.

8. **தொல்கவின்:** **நற்** 283: 4; 350: 5; 391: 1; **கலி** 2: 28; 26: 10; **அக** 147: 12.

**கண்ணகன் வைப்பு:** "கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்து" **பதிற்** 3-ம் பதி. 5. "கண்ணகன் வைப்பி னுடு மூரும்" **நற்** 377: 2.

10—11. "பீரிவர் வேலிப் பாழ்மனை" **பதிற்** 20: 10.

11. **காந்தண் முதல்:** "காந்தண் முழுமுதல்" **குறுந்** 361: 4.

12. **புலவுவில்:** "புலவுவில் விளையர்" **பதிற்** 71; 15; "புலவுவிற் பொலி கூவை" **மதுரைக்** 142.

**வில்லுழவு:** "வில்லே ருழவர்" **அக** 193: 2; "வில்லே ருழவின்" **புற** 371: 13, "வில்லேருழவர்" **பு. வெ. மா** 5; **குறள்** 872; "மாரி வளம்பெரு வில்லே ருழவர்" **சிலப்** 11: 210.

13. **புல்லிலை:** "புல்லிலை வெட்சியும்" **கலி** 103: 2.

**புல்லிலை வைப்பு:** "ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை" **பெரும்பாண்** 83; "இலைவேய் குரம்பை" **மதுரைக்** 310; "புல்வேய் குரம்பைக் குடிதொறும்" **மலைபடு** 439; 'கொன்னிலைக் குரம்பை" **குறுந்** 284: 7; "தேக்கின், அகலிலை குவித்த புதல்போல் குரம்பை" **அக** 315: 15—6.

**அரம்பு:** "அரம்பு மல்லலும்" **பெருங்** (2) 12: 48; "அரம்புசெய் பிணி" **தணிகை. பிரமன்** 19.

14. **அறியாமையான் எதிர்தல்:** "நின், மைந்துமலி பெரும்புக ழறியார் மலைந்த, போரெதிர் வேந்தர்" "அறியா தெதிர்ந்து துப்பிற் குறையுற்று" **பதிற்** 23: 15—7; 59: 11; "பாரியது, அருமை யறியார் போரெதிர்ந்து வந்த, வலம்படு தானை வேந்தர்" **புற** 116: 16—8; "அருந்தமி ழாற்ற லறியார் மலைந்த, கனக விசயரை" **சிலப்** 27: 189—90.

**துப்பெதிர்தல்:** "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மையன்" **புற** 380: 10; "துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து" **பு வெ. மா** 243.

8—15. **வைப்பின் நாடு:** பதிற் 13: 9—10; அடிக்குறிப்பு.

16. "மலையவுங் கடலவும்" **பெரும்பாண்** 67; "மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்." **மதுரைக்** 504; "கல்லவும் கடத்தவும்" **கலி** 103: 4; "மலையவுங் கடலவு மரும்பல கொணர்ந்து" **சிலப்** 23: 33.

18 "முழவிமிழ் மூதூர்" **பதிற்** 30: 20; "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" **முருகு** 220; "அருஅ யாணரகன்றலைப் பேரூர்ச், சாறு" **பொருந** 1—2; "விழவு மேம்பட்ட பழவிறன் மூதூர்" **பெரும்பாண்** 411: "முழவிமிழு மகலாங்கண், விழவுநின்ற வியன்மறுகில்" **மதுரைக்** 327: 8; "துஞ்சா முழவின் மூதூர்" **குறிஞ்சி** 235; 'சாறயன் மூதூர்" **பட்டினம்** 215; 'ஆடியல் விழவி னழுங்கன் மூதூர்" "முழவுக்கண் புலரா விழவுடை யாங்கண்" "விழவுத்தலைக்கொண்ட பழவிறன் மூதூர்" "ஊரே,......கலிகெழு மறுகின் விழவயரும்மே" **நற்** 90: 1; 220: 6; 293: 4; 348: 3—4; "பேரூர்கொண்ட வார்கலி முழவின்" **குறுந்** 222: 1; 'அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்" "பழவிறன் மூதூர்ப் பலருடன் துவன்றிய, விழவு" "முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்" "விழவுகொள் மூதூர்" **அக** 115: 1; 141: 10—11; 206: 11; 352: 5; "கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்" **புற** 94: 4; "விழவுடை வீதி மூதூர்" **சீவக** 816.

19. **கொடி நிழல்:** "விசும்பகடு திருகிய வெங்கதிர் நுழையாப், பசுங்கொடிப் படாகைப் பந்தர் நீழல்" **சிலப்** 14: 215—6.

**பொன்னுடை நியமம்:** "பொன்னுடை நியமத்து" **பதிற்** 30: 12.

18—19. **மூதூர் நியமம்:** "நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்" **நற்** 45: 4; **அக** 83: 7.

21. **வயவர் வேந்தே:** "விரவுமொழிக் கட்டூர் வயவர்வேந்தே" **பதிற்** 90: 30.

**பரிசிலர் வெறுக்கை:** "பரிசிலர் வெறுக்கை பாணர்நாளவை" "பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை" **பதிற்** 38: 9; 65: 11.

22—3. **தார் அணி யானை:** "பொலந்தார் யானை" **பதிற்** 75: 3;"தாரொடு பொலிந்த விணைநவில் யானை" **மலைபடு** 227; "மலர்தார், மையணி யானை" "தார்பூண் களிற்றின்" **அக** 116: 12—3; 166: 12; "தாரணி யானை" **புற** 201: 13.

**தொடிசிதை மருப்பின் யானை:** "அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பின், பிடிமிடை களிற்றில்" "பகைவர் மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பிற், கந்துகால் ஒசிக்கும் யானை" **அக** 99: 12—3; 164: 11—3

23. "போர்வல் யானை" **பதிற்** 21: 17; **அக** 36: 16.

26. **கலப்பையர்:** "வாங்குபு தகைத்த கலப்பையர்" "காவிற் றகைத்த துறை கூடு கலப்பையர்" **பதிற்** 23: 4; 41: 5; "நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" **மலைபடு** 13.

27 "நாம மறியா வேம வாழ்க்கை" **பதிற்** 68: 12.

31. நிரையம்: "நிரைய நெஞ்சத் தன்னை" **நற்** 236: 5.

30—2. "பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇ .... இனிதமர்ந் துறையும்" **மலைபடு** 479—85.

**யாணர் நன்றாடு:** "அருஅ யாணரவ ரகன்றலை நாடே" **பதிற்** 23: 25; "யாணர் நன்னாட் டுள்ளும்" **புற** 212: 6.

**கண்டுமதி மருளல்:** "கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி" **பதிற்** 24: 22.

35. **பண்ணுடைநூலக** பதிற் 18: 9; 31: 2; 69: 12; **நற்** 153: 2; **அக** 379: 6; **புற** 2: 1; 19: 1; 35: 3; **இனிதூற்** 146; சிறுபஞ். கடவுள். **கார்நாற்** 8; **சிலப்** 26: 42; **மணி** 11: 95; **திருவாய்மொழி** (3) 6: 11.

38, **சீர்கெழு விழவு:** "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" முருகு 220.

39. நல்லிசை **பதிற்** 14: 21 அடிக்குறிப்பு.

---

## 6. துயிலின் பாயல்

16. கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி
நாடுகண் டன்ன கணைதுஞ்சு விலங்கற்
றுஞ்சுமரக் குழாஅந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணா வையவி தூக்கிய மதில
நல்லெழி னெடும்புதவு முருக்கிக் கொல்லு
பேன மாகிய நுனிமுரி மருப்பிற்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரங்கொல் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை யாகலிற் காண்குவந் திசினே
யாறிய கற்பி னடங்கிய சாய
லூடினு மினிய கூறு மின்னகை
யமிர்துபொதி துவர்வா யமர்த்த நோக்கிற்
சுடர்நுத லசைநடை யுள்ளலு முரியள்
பாய லுய்யுமோ தோன்ற றாவின்று
திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வயிரமோ டுறழ்ந்துபூண் சுடர்வர
வெழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
புரையோ ருண்கட் டுயிலின் பாயல்

பாலுங் கோளாலும் வல்லோய்நின்
சாயன் மார்பு நனியலைத் தன்றே.

இதுவுமது.
பெயர் - துயிலின் பாயல் (18).

**ப—ரை.** *1—9.* கோடு உறழ்ந்து எடுத்த கொடு கண் இஞ்சி—மலையொடு மாறுபட எடுத்த வளைந்த இடத்தையுடைய புறமதிலையும், நாடு கண்டன்ன கணை துஞ்சு விலங்கல்—கண்டார்க்கு நாடு கண்டாற்போன்ற அப்புக்கட்டுகள் தங்கும் மலைபோன்ற இடைமதிலையுமுடைய. துஞ்சு மரம் குழாஅம் துவன்றி—மதில் வாயிலிற் றூங்கும் கணையமரங்களின் கூட்டம் நெருங்கப்பெற்று, புனிறு மகள் பூணா ஐயவி தூக்கிய—ஈன்றணிமையையுடைய மகள் அணியாத ஐயவி தூக்கப்பட்ட, மதில நல் எழில் நெடு புதவு முருக்கி கொல்லுபு—மதிலிடத்தனவாகிய நன்றாகிய அழகிய நெடிய கதவுகளை முறித்து அழித்தலால், ஏனம் ஆகிய நுனி முரி மருப்பின்—பன்றியின் கோமபைப்போலாகிய நுனி முரிந்த மருப்பினையுடைய, கடாஅம் வார்ந்து கடு சினம் பொத்தி—மதம் சொரியப்பெற்று மிக்கசினம் மூளப்பெற்று, மரம் கொல் மழ களிறு முழங்கும் பாசறை—கட்டுத்தறியை அழிக்கின்ற இளைய களிறுகள் முழங்கும் பாசறையிடத்து, நீடினையாகலின் காண்கு வந்திசின்—நீட்டித்தாயாகலின் நின்னைக் காண்பேன் வந்தேன்.

*10—20.* ஆறிய கற்பின்—அறக்கற்பினையும், அடங்கிய சாயல்—தன்கண்ணே அடங்கிய மென்மையினையும், ஊடினும் இனிய கூறும்—ஊடிய காலத்தும் இனிய மொழிகளைக் கூறும், அமிர்து பொதி துவர் வாய்—அமிழ்து பொதிந்த செம்மையுடைத்தாகிய வாயினையும், அமர்த்த நோக்கின்—அமர்த்த கண்களையும், சுடர் நுதல்—ஒளியையுடைய நெற்றியையுமுடைய, அசை நடை உள்ளலும் உரியள்—அசைந்த நடையினையுடைய பெருந்தேவி நின்னை நினைத்து வருந்துதலுமுரியள்; பாயல் உய்யுமோ—அவள் பாயல் வருத்தத்திற்கு உய்வாளோ, உய்யாளன்றே; தோன்றல்—தலைவனே, தாஇன்று திருமணி பொருத திகழ் விடு பூண் பசும்பொன்—வலியில்லையானபடியாலே அழகிய மணிகளோடு பொருக ஒளிவிடுகின்ற பூணன் பசும்பொன், வயங்கு கதிர் வயிரமோடு உறழ்ந்து சுடர்வர—தன்னிடை அழுத்தின விளங்குகின்ற கிரணங்களையுடைய வயிரங்களோடு மாறுபட்டு விளங்க, எழுமுடி கெழீஇய திரு ஞெமர் அகலத்து—எழுமுடியானுஞ் செய்த ஆரம் பொருந்திய திருமகள் தங்கி பரந்த மார்பாகிய, புரையோர் உண் கண் துயில் இன் பாயல்—காதன் மகளிரின் கண்ணினது துயிலுக்கு இனிய பாயலை, பாலும்—நின் மகளிர்க்கு நின்னிடத்தினின்றும் பகுத்தலையும், கோ

ளாலும்—அம்மகளிர்பால் நின்றும் வாங்கிக் கோடலையும், வல்லோய்—வல்லவனே, நின் சாயல் மார்பு நனி அலைத்தன்று—நினது மென்மையினையுடைய மார்பு அவளை மிக வருத்திற்று.

முடிபு: பாசறைக்கண் நீ நீடினையாகலின் நின்னைக் காண வந்தேன்; நின் தேவியாகிய அசைநடை நின்னை நினைத்தலுமுரியன்; அன்னபின்பு அவள் பாயல் வருத்தத்திற்கு உய்யுமோ, உய்யாளன்றே; தோன்றல்! அகலப் பாயல் பாலும் கொள்ளலும் வல்லோய்! நின் மார்பு அவளை மிக வருத்திற்றுகாண்; நீ அவள்பாற் கடிதெழுக என்க.

ஆ—ரை. 1—4. மதிலிடத்தனவாகிய கதவுகளை இடித்தழித்தலால் நுனிமுரிந்த மருப்பினையுடைய களிறு முழங்கும் பாசறைக்கண் நீடினையாகலின் நின்னைக் காண்பேன் வந்தேன் என்க.

கோடுறழ்ந்தெடுத்த இஞ்சியென்றது மலையுள்ள இடங்களிலே அம்மலைதானே மதிலாகவும் மலையில்லாத இடங்களில் மதிலே அரணாகவும் அவ்வாறு மலையொடு மாறுபடவெடுத்த மதில் என்றவாறு. அரண் அமைந்த இடம் மலைநாடாதலின் *மலைகளை இயற்கை அரணாகக்கொண்டு, இடையிடையே மலையற்ற பகுதிகளுக்கு அம்மலைபோன்று சுவர் அமைத்து அரண் செய்தனர். இனி, கோடுறழ்ந்தெடுத்த இஞ்சி என்பதற்கு மலையொடு மாறுபட்டுத் தோன்றுமாறு எடுத்த மதில் எனினுமமையும். "வரைபுரை நிவப்பின் வான்றோயிஞ்சி' (மலைபடு 92) எனப் பிறண்டும் வருதல் காண்க.

கோடு—மலை. "கோடுகொண் டெழுந்த கொடுஞ் செலவெழிலி" முல்லை 5. உறழவெனத் திரித்து அதனை 'எடுத்த' வென்னும் வினையொடுமுடிக்க. இனித் திரியாதே 'உறழ்ந்து' என்பதனைப் பிறவினை வினையெச்சமாகக் கொண்டு எடுத்த என்பதனோடு முடிப்பினும் அமையும். உறழ்தல்—மாறுபடுதல். "முள்ளுறழ் முளையெயிற்று" கலி 3: 13 எடுத்த—கட்டிய. தான் வளைந்த உள்ளிடத்தையுடைய மதிலாதலின் 'கொடுங்கணிஞ்சி' யென்றார். "உடன் வளைஇ யோங்கு நிலை"—'இவ்விடங்களையெல்லாம் சேர வளைத்து உயர்ந்த மதில்' என்ற (நெடுநல் 92 நச்.) உரைப்பகுதி ஈண்டறியற்பாலது. கொடுங்கண்—வளைந்த இடம். கொடுமை—வளைவு. "கொடுங்காய் கொண்டன வவரை" மலைபடு 110. இஞ்சி—மதில் மலைபடு 92 நச். ஈண்டு இஞ்சியென்றது புறமதிலை.

நாடு கண்டன்ன விலங்கல் என்றது, § பகைவர் முற்றுகையால் நெடுநாட்பட மதில் அடைபட்டுக் கிடக்கும் காலத்தே † அகத்தார் உண-

* 'நீரரண் நிலவரண் மலையரண் காட்டரணென இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்கானுஞ் சூழப்படுவது அரணென்பதாம்'—குறள் 742 பரிமேல்.

§ சோழன் நலங்கிள்ளி ஆவூர் முற்றியிருந்த காலத்து நெடுங்கிள்ளியால் மதில் அடைபட்டுக்கிடந்தமை புறம் 44 ம் செய்யுளால் அறியலாம்

† மூவேந்தரும் பறம்பை முற்றுகையிட்டகாலத்து அகத்தார் உணவின்றி வருந்தியமை அகம் 78: 15—22; 303: 10—14 அடிகளாலும் அவற்றின் பழையவுரையாலும் அறியலாம்.

வின்றி வருந்தாவாறு விளைத்துக்கோடற்கு வயலும் குளமும் உளவாகச் சமைத்து வைத்தமையாற் கண்டார்க்கு நாடுகண்டாற்போன்ற மதில் என்றவாறு. மதில் சூழ்ந்த உள்ளிடம் ஒரு நாடுபோன்ற விரிவினையுடையதென்றவாறு. உள்ளிடத்தின் தோற்றம் மதின் மேலேற்றப்பட்டது.

*கணைதுஞ்சு விலங்கல்* மதிலுக்கு வெளிப்படை. ‡ அப்புக்கட்டுக்கள் தங்கும் ஞாயிலையுடைய மதிலாதலின் 'கணைதுஞ்சு விலங்கல்' என்றார். மதில் $ ஞாயிலில் அம்பு துஞ்சல், "எயில்... ஞாயில் தொறும புதை நிறீஇ"—'மதிலிடத்தே ....அதன் தலையில் எய்து மறையுஞ் சூட்டுத்தோறும் அம்புக்கட்டுக்களையும் கட்டிவைத்து' (பட்டினப் 288—91 நச்.) எனவும் "அம்புடை ஞாயி லரண்"—'பகழியையுடைய முடக்கறையாற் சிறந்த எயிலிடத்து' (பு. வெ. மா. 118 உரை,) எனவும் வரும் உரைப்பகுதிகளானுமறிக. கணை -அம்பு. "கணைகொடிது யாழ்கோடு" குறள் 279. துஞ்சுதல்—தங்குதல். "அம்பு துஞ்சுங் கடியரணால்" புற 20: 16. விலங்கல் போறலின் மதில் விலங்கலெனப்பட்டது. விலங்கல்—மலை. "விலங்கலைக் கால் விண்டு மேன்மேலிட" திருக்கோவை 24. இதனால் இம்மதில் பேரிடத்ததாகி உறுபகையூக்க மழிப்பதாய்ப் புறத்தாராற் கொளக்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி அகத்தார் நிலைகெளிதாம் நீரதாய் அமைந்தமை கூறினார். ஈண்டு விலங்கல் என்றது இடைமதிலை.

துஞ்சுமரக்குழாஅந் துவன்றி ஐயவி தூக்கிய புதவு எனவும், மதில நல்லெழில் நெடும்புதவு எனவும் கூட்டுக. மதிலிடத்தனவாகிய கதவுகளுக்குக் காவலாகத் துஞ்சுமரமும் ஐயவியும் அமைந்தமையின், 'துஞ்சுமரக் குழாஅந் துவன்றி ஐயவி தூக்கிய மதில புதவு' என்றார். துஞ்சுமரம் என்றது மதில்வாயிற் றூங்கும் கணையமரங்களை. "துஞ்சுமரந் துவன்றிய...ஓங்குநிலை வாயில்" (பதிற் 22: 21—2) என வருதல் காண்க. அம்மரங்கள்தாம் பலவாதலின் 'துஞ்சுமரக் குழாஅம்' என்றும், நெருங்கக் கிடத்தலின் 'துவன்றி' என்றுங் கூறினார். குழாஅம்—கூட்டம. துவன்றல்—நெருங்கல். "ஒண்சுடர் விளக்கத்துப் பலருடன் துவன்றி" மதுரைக் 580. கணைய மரங்களை நெருங்க அமைத்தமை பகைவரின் போர்வல் யானைகள் கதவங்களை இடித்து அழிக்காதபடி என்க "களிறே, எழூஉத் தாங்கிய கதவு மலைத்து" (புற 9 : 8) என வரல் காண்க.

ஐயவியென்றது கதவிற்குக் காவலாகப் புறவாயிலிலே தூக்கப்படும் துலாமரத்தை. "ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவி.....நெடுமதில்" (பதிற் 22.22—5)என மேலவருதல்காண்க. இது 'ஐயவித்துலாம்' எனவும்படும். இது கதவையணுகாதபடி மதில்வாயிலிற் கற்கவி தொடங்கி நாற்றப்படும் மரம் என்பது. 'ஐயவித்துலாம்—கதவையணுகாதபடி கற்கவி தொடங்கி நாற்றும் துலாமுமாம்' என அடியார்க்கு

‡ அப்புக்கட்டு—அம்புக்கட்டு. "அப்பும் புதையும்" பெருங் (1) 52: 16.

$ ஞாயில்—மதிலுறுப்பு. "நிரைநிலை ஞாயில் நெடுமதில்" அக 124: 16.

நல்லார் உரைத்தவாற்றானும் (சிலப் 15: 213 உரை) அறியப்படும். இவ்வைய வித்துலாம் நெருங்கினார் தலைகளைத் திருகிக்கொள்ளும் வலியுடனே நெருக்கு மரமென்பது "நற்றலைகள் திருக்கும்வலி நெருக்குமர நிலையே" (சீவக 102) என்பதன் விசேடவுரையில், 'தலைகளைத் திருகிக்கொள்ளும் வலியுடனே நெருக்குமரமாவது ஐயவித்துலாம்' என நச்சினார்க்கினியர் உரைத்தலான் அறியலாம். புனிற்றுமகள் பூணும் வெண்சிறுகடுகிற்கும் ஐயவி என்று பெயராதலின் அதனை விலக்கி ஐயவித்துலாம் என்னும் பொருள் தோன்றப் 'புனிற்றுமகள் பூணு ஐயவி' என்றார். இது வெளிப்படை என்னும் இலக்கணத்தின் பாற்படும். புனிறு—ஈன்றணிமை. "புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதின்" தொல். கற்பு 5: 27. பூணுதல்—புகைத்தல். "ஐயவி புகைப்பவும்" புற 98: 15. துவன்றி, தூக்கிய செயப்பாட்டு எச்சம். ஈண்டு மதில் என்றது உண்மைநிலை.

கொடுங்கணிஞ்சியையும் (1) விலங்கலையுமுடைய (2) மதில் (4, எனக் கூட்டுக. மதில (4) புதவு (5) என இயையும்.

நல்லெழில் நெடும்புதவு என்றது ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்பாலே கட்டுதலால் வலிநன்றாகியதும், சாதிலிங்கம் வழித்தலால் அழகியதும்' வென்றெழு கொடியொடு வேழஞ் சென்று புகும்படி உயர்ந்த மதில் வாயிலின் நெடுநிலையிலமைதலின் நெடியதுமாகிய கதவு என்றவாறு. நக்கீரர்,

"ஒருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
...... ....... ....... ....... ....... — — — — ...
ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயில்" 79—88.

என நெடுநல்வாடையிற் கூறுதல் காண்க.

எழில்—அழகு புதவு—வாயில். "புதவக் கதவம் புடைத்தனன்" சிலப் 23: 43. ஈண்டு வாயிலிலமைந்த கதவங்களை. மதில புதவக் கதவம் முருக்கிக் கொன்று *ஏனக்கொம்புபோலாகிய மருப்பினையுடைய களிறு என்க. முருக்கி—முறித்து சீவக 807 நச். ஏனம் என்பது ஈண்டு அதன் கொம்பை யுணர்த்தலின் ஆகுபெயர். இனி, நுனிமுரி மருப்பின் ஏனமாகிய களிறு என மாறிக்கூட்டி, மதிலிடத்தனவாகிய கதவுகளை முறித்து நுனிமுரிந்த மருப்புடைமையாற் பன்றிபோலத் தோன்றிய களிறு என்றுரைப்பினு மமையும்.

"களிறு, கதவெறியாச் சிவந்துரா அய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப் போன்றன" புற 4: 10—3.

---

* ஏனம்—பன்றி. அதற்குக் கொம்புண்டென்பது, "வளைமருப் பேனம்" பெரும்பாண் 110 "கிலந்தின் மருப்பின் —— இருள் துணிந் தன்ன ஏனம்" மலைபடு 245—7; "வையேந்து மருப்பின்......பன்றி" "பிறையுறழ் மருப்பிற் கடுங்கட்பன்றி" அக 178: 1—2; 322: 10.

எனக் கதவை முறித்து நுனைதேய்ந்த கோட்டையுடைய களிறுகளுக்குக் கூற்றை உவமை கூறியிருத்தல் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. இதனாற் பகைவர் மதிலழித்தமை கூறினார்.

கடாஅம் வார்ந்து கடுஞ்சினம்பொத்தி மரங்கொல் மழகளிறு முழங்கும் பாசறை என்றது போர்வேட்கையான் மதஞ்சொரியப் பெற்று அதனாற் கடுஞ்சினம் மூளப்பெற்று அச்சினத்திற்கேறபப் போர் பெருமையின் கட்டுத்தறியை முறிக்கின்ற இளைய களிறுகள் முழங்கும் பாசறை யென்றவாறு.

"விசும்பின், ஏறெழுந்து முழங்கினும் மாறெழுந்து சிலைக்கும்
கடாஅ யானை கொட்கும் பாசறை" அக 144: 11—3.
"கார்மழை முழங்கினும் வெளில்பிணி நீவி
நுதலணங் கெழுதரும் தொழினவில் யானை" பதிற் 84: 3—4.

என வருவனவற்றாலும் வினைநவின்ற யானைகளின் போர்வேட்கை இனிதறியப்படும் யானைகளுக்குப் போர்வேட்கையாற் கடாஅம் வார்தலும், அதனாற கடுஞ்சினம் பொத்துதலும், 'பிடிபுணர்ந்து இயலவென்றது: அவ்வினைநவில் யானை கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி அச்சினத்திற்கேற்பப் போர்பெருமையிற் பாகர் அதன் சினத்தை அளவுபடுத்தற்குப் பிடியைப் புணர்க்கையான் அப்பிடியொடு புணர்ந்தும் போர்வேட்டுத் திரியவென்றவாறு' எனப் பழையவுரைகாரர் உரைத்தலானும் (பதிற் 82: 4—6 உரை) அறியப்படும். மதத்தாற் சினம் மூளல், 'சினந்திகழ் கடாஅம்—சினம் விளங்குதற்குக் காரணமாகிய மதம்' (குறிஞ்சி 164 நச்) என்பதனாலுமறிக. பொத்தி—மூண்டு கலி 145: 58 நச்; கலந்து பு.வெ.மா. 288 உரை. வார்ந்து, பொத்தி செயப்பாட்டு வினையெச்சங்கள். மரம் என்றது கட்டுத் தறியை. யானை அதனை அழித்தல், "கந்தடு வெகுளி வேகக் கடாமுகக் களிற்று" (சீவக 2765) என்பதனாலுமறிக. மரங்கொல்—மரங்களை முறிக்கின்ற எனினுமாம். கடாஅம் வார்தலாற் S களிறுகள் கார்காலத்து மழையின் உருமேறுபோலப் பிளிறுதலின் 'முழங்கும்' என்றார். "மாமலைபோல் யானை மதமுழக்கம்" (இனியவை 16) "கடுமதக் களிப்பினாற் காரென முழங்கலின்" (சீவக 1831) எனப் பிறண்டும் வருவன காண்க.

'இன்ன காலத்து வருவேன்' என்று தன் மனையாளுக்குச் சொல்லிப் பகைவரொடு பொருதற்குப் புறப்பட்ட சேரலாதன் வினைமுடித்து மீளாது குறித்த காலத்துக்குமேலே பாசறைக்கண் நீட்டித்தமையின் 'பாசறை நீடினையாகலின்' என்றார். "வியனெடும் பாசறை நீடிய வயமான்றோன்றல்" (முல் 500)என வருதல் காண்க. காண்கு என்பது செய்கென்னும் வாய்பாட்டு வினைமுற்று. இது 'வந்திசின்' என்னும் வினைகொண்டு முடிந்தது. "அவற்றுள், செய்கென் கிளவி வினையொடு முடியினும், அவ்வியல் திரியாதென்மனார் புலவர்" (தொல். வினை சூ. 7) என்பது விதி.

---

S யானை முடிக்கிற்கு இடி: குறிஞ்சி 162—5; பரி 8: 17—8; அக 145: 7—10; 350: 10—11; புற 81: 11. பு. வெ. மா. 37; 289 பெருங் (1) 51: 40—1.

10—20. நின் தேவியாகிய அசைநடை உள்ளலும் உரியள்; ஆன பின்பு பாயல் உய்யுமோ தோன்றல்! அகலப்பாயல் பாலும்கொளாலும் வல்லோய்! நின் சாயன் மார்பு அவளை நனியலைத்தன்று என்க.

ஆறிய கற்பினையும் அடங்கிய சாயலினையும் ஊடினும் இனிய கூறும் வாயினையும் அமர்த்த நோக்கினையும் சுடர்நுதலினையுமுடைய அசைநடை என்க. சேரலாதனின் பெருந்தேவி மிக்க துன்பத்தும் சீற்றம்கொள்ளாத அறக்கற்பினையுடையளாதலின் 'ஆறிய கற்பின்' என்றார்.

'ஆறிய கற்பிற் றேறிய நல்லிசை
வண்டார் கூந்த லொண்டொடி'' பதிற் 90: 49—50.

எனப் பிறருங் கூறுதல் காண்க.

பெருந்தேவியிடத்து ஐம்பொறியானும் நுகரும் மென்மையெல்லாம் அடங்கிக்கிடததலின் 'அடங்கிய சாயல்' என்றார். அது "அமிர்துபொதி துவர்வாய் அமர்த்த நோக்கிற், சுடர்நுத லசைநடை" என வருமாற்றானும றியப்படும். சாயல் என்பது ஐம்பொறியானும் நுகரும் மென்மையை உணர்த்துமென்பது, 'சாயலென்னுஞ் சொல் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளாலு நுகரும் மென்மையையுணர்த்தும்' எனவும் (தொல். உரி 27 உரை). 'சாயன்மென்மையெனப் பொதுப்படச் சூத்திரஞ் செய்தது ஐம்பொறியாலும் நுகரு மென்மையெல்லாம் அடங்குதற்கு; ''மயி லன்ன சாயல்'' (ஏலாதி 28) "சாயன் மார்பு" (கலி 65) என ஒளிக்கும் ஊற்றி ற்கும் வந்தன; பிறவுங் காண்க' எனவும் (சீவக 8 உரை) வரும் நச்சினார்க் கினியர் உரைப்பகுதிகளான் அறியலாம். அடங்கிய—தன்கண்ணே யடங் கிய. ''அடங்கிய கற்பி னய்நுதன் மடந்தை" (புற 249: 10) என்புழி 'அடங் கிய கற்பு—தன் கண்ணேயடங்கிய கற்பு' என அதன் உரையாசிரியர் உரைத்தவாறு காண்க.

உயர்குடிப் பிறந்த கற்புடை மகளான பெருந்தேவி. பாசறை நீடல் முதலிய ஏதுக்களால் தன் தலைவனுடன் ஊடிய காலத்தும் இன்முகந் திரிந்து ‡'பாசறை நீடி நந்நோய் அறியா வறனிலாளன்' 'தோள்வளை நெகிழ்த்த கொடியன்' † என்பன போன்ற கடியனவற்றை மொழியாது தன் ஆறிய கற்பினால் இனிய மொழிகளை இன்னகையுடன் மொழிதலின் 'ஊடினும் இனிய கூறும் இன்னகை வாய்' என்றார்.

''... ........... .... குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை இன்முகந் திரியாது
கடவுட் கற்பி னவனெதிர் பேணி'' குறுந் 252: 3—5.

''தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினுங் கேளவரை யேத்தி யிறைஞ்சுவார்'' பரி 20: 88—9.

எனச் சான்றோர் கூறுதல் காண்க. ஊடினும் என்ற உம்மை எச்சவும்மை உயர்வுமாம்.

‡ ''காய்ச்சின வேந்தன் பாசறை நீடி, நந்நோ யறியா வறனி லாளர், இந் நோய் களைதுவர் கொல்லென'' அக 294: 12....4; ''நெடிய திரண்ட தோள்வளை நெகிழ்த்த, கொடிய னாகிய குன்றுகெழு நாடன்'' குறுந் 252: 1—2.

† கல்லாகக் கொடியன் என்றல்; நற் 28: 4; குறுந் 26: 1—8; 255: 2; 278: 4; 307: 1; 387: 7; அக 163: 12; 379: 10.

அமிர்து என்றது எயிற்றில் ஊறியநீரை. அதுதான் அமிழ்துபோலும் இனிய நீராதலின் அதனை 'அமிர்து' என்றார். "கரும்பின், காலெறி கடிகைக் கண்ணயின் றன்ன, வாலெயி றூறிய வசையி றீநீர்" (குறுந் 267) "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரை" "ஊறுநீர் அமிழ்தேய்க்கு மெயிற்றாய்" (கலி 4: 13; 20: 11) எனச் சான்றோர் கூறுதல் காண்க. துவர்—செம்மை நிறம். இயல்பாகவே சிவந்த வாயாதலின் செவ்வாய் என்னாது 'துவர்வாய்' என்றார். 'துவர்ச்செவ்வாய்—இயல்பான சிவப்பாற் சிவந்தவாய்' என்னும் (கலி 55: 4 நச்) உரையானும் துவர் என்பது இயல்பான சிவப்பைக் குறித்தல் அறியலாம். அமர்த்தல்—அமர்செய்தல்; மாறுபடுதலுமாம். "கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப், பேதைக் கமர்த்தன கண்" (குறள் 1084) என்பதன் விசேடவுரையில் 'அமர்த்தல்—மாறுபடுதல்' எனப் பரிமேலழகர் உரைத்தவாறு காண்க.

சுடர்நுதல்—ஒளியையுடைய நுதல். நுதலுக்கு ஒளியுண்மை, "தண்கதிர் மண்டிலம் அவிரறச் சாஅய்ப், பகலழி தோற்றம் போலப் பையென, நுதலொளி கரப்பவும்" (அக 277: 1—3) என்புழிக் காண்க. இனிச் சுடர் நுதல் என்பதனை உவமைத் தொகையாகக்கொண்டு, 'பிறைபோன்ற நுதல்' என்றுரைப்பினுமமையும். "கவின்பெறு சுடர்நுதற், கூரெயிற்று முகைவெண் பற் கொடிபுரையு நுசுப்பினாய்" (கலி 58: 3—4)என்புழி, 'சுடர்நுதல்—பிறை போன்ற நுதல்' என நச்சினார்க்கினியர் உரைத்தவாறு காண்க. பாசறைக் கண் நீடிய அரசன், பெருந்தேவியை நினைந்து அவள்பாற் கடிதின் எழ வேண்டி அமிர்துபொதி துவர்வாய் முதலாயினவற்றைக் கூறுவாராயினர்

கொடிபுரை நுசுப்பினையுடைய பெருந்தேவி இடையின் நுண்மையால் நுடங்கிய நடையினையுடையளாதலின் 'அசைநடை' என்றார். 'அசையியற்கு—நுடங்கிய இயல்பினையுடையாட்கு' குறள் 1098 பரிமேல். அசைநடை—அசைத்த நடை கலி 128: 3 நச். அசைநடை என்பது ஈண்டு அன்மொழித் தொகையாய்ப் பெருந்தேவியை உணர்த்திற்று.

உள்ளலுமுரியள் என்றது யான் குறித்த நாளளவும் ஆற்றியிருக்க வென்ற நின்னேவல் பூண்டு நின்னை உள்ளாதிருத்தலேயன்றி, நீ குறித்த நாளுக்குமேலே நீட்டித்தாயாகலின் நின்னை நினைத்து வருந்தலுமுரியளென்றவாறு. "காய்சின வேந்தன் பாசறை நீடி, நந்நோ யறியா வறனிலாளர்" (அக 294: 12—3) என்பதனாலும் பிரிந்த தலைவன் மீளாது நீட்டித்தலால் தலைவி வருந்தலறியலாம். ஈண்டு உள்ளல்—நினைத்து வருந்தல். 'அரும்படர்—பொறுத்தற்கரிய நினைவாலுண்டாகிய நோய்' புற 145: 10 உரை. உள்ளலுமுரியள் என்புழி உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை.

தன் தலைவன் பாசறை நீடலாற் பெருந்தேவிக்கு நினைவாலுளதாகிய நோய் படுக்கைக்கண் மிகுதலினாலும், அதனால் மருந்து பிறிதில்லாப் பெருந்துயர் எய்துதலினாலும் 'பாயல் உய்யுமோ' என்றார். பாயல்—படுக்கை. "பயினறுங் கதுப்பிற் பாயலுமுள்ளார்" குறுந் 254. ஈண்டுப் பாயலிற் படும் துன்பத்தை. உய்யுமோ, ஓ எதிர்மறை. தோன்றல், அண்மை விளி.

தாவின்று(14) திருமணி பொருத திகழ்விடு (15) பூண் (16) பசும்பொன் (15) என மாறிக் கூட்டுக. ஈண்டுத் தாவென்றது வலி. "தாவே வலியும் வருத்தமுமாகும்" என்பது தொல்காப்பியம். (உரி 48) பொன்னுக்கு வலி யாவது உரனுடைமை. 'இன்றி'. என்னும் வினையெச்சக் குறிப்புச் செய்யுட் கண் இன்று என நின்றது.

'' இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற விகர முகர மாதல்
தொன்றியல் மருங்கிற் செய்யு ளுரித்தே,' தொல் உயிர் மயங்கு 35.

என்பது விதி. இன்று என்பதனை இன்றுகவெனத் திரித்து இன்றுகையால் என ஏதுப்பொருட்டாகக் கொள்க. என்றது ஒளியையுடைய மணிகளோடு பொரவற்றும்படி ஓட்டற்ற ஒளியையுடைய பசும்பொன் என்றவாறு. வலி யில்லாதபொன் சிறந்த பொன் என்பது "தாவினன் பொன்" (மதுரைக் 456) என்பதனாலுமறிக.

திருமணி—அழகிய மணி. பொருதல்—தன்கண் மணியை இறுகப்பற்று தலும் மாறுபட்ட ஒளியை விடுதலுமாம். பசிய பொன் ஒளிவிட்டு மணி யொடு மாறுபடல், 'நிறந் திகழ் பாசிழையென்றது தன்னின் அழுத்திய மணி யினும் தன்னிறந்திகழும் பசும்பொன்னிழை' எனவும்,(பதிற்73உரை)'மின்னி மணி பொரு பசும்பொன்—நீலமணியைத் தாளுளிவிட்டு மாறுபடும் பசிய பொன்னொளி' எனவும் (கலி 143:3-4 நச்) வரும் உரைப்பகுதிகளானுமறிக. பசும்பொன் தன்னிடையழுத்தின வயிரங்களொடு மாறுபட்டு விளங்கலின் 'பசும்பொன் வயிரமோடு உறழ்ந்து சுடர் வர' என்றார். இனித் 'திருமணி பொருத திகழைத் தாவின்று விடும் பசும்பொன் வயிரமோடு உறழ்ந்து பூண்களில் விளங்க' எனினுமாம். ஈண்டுத் தா-குற்றம். வயிரத்தை, 'வயங்கு சுதிர் வயிரம்' என விதந்தது அதன் நலமும் அதனொடு மாறுபட்டு விளங்கும். பசும்பொன்னின் ஒளிநலமும் தோன்றற்கு என்க. 'சுடர்வர—விளக்கம் வர' மதுரைக் 720நச். பூண் பசும்பொன் சுடர்வர எழுமுடி கெழீஇய அகலம் என்க. அகலம்—மார்பு. அகலப் (17) பாயல் (18) என்க. அத்து, தவிர்வழி வந்தது.

புரையோர் என்றது உயர்ந்தோராகிய காதன் மகளிரை. புரையோ ரென்ற பன்மையாற் காதன் மகளிர் பலரெனக் கொள்க. உண் கண்—மையுண்கண். கண்ணிற்கு மையிடுதல் அழகின் பொருட்டு "மையேர் குவளைக் கண்" (திருக்கோவை 66) எனவும், "மையாற் றளிர்க்கு மலர்க் கண்கள்" (நான்மணிக் 3) எனவும் வருவன காண்க. பாயல்—படுக்கை. "கண்படு பாயல்" அக 187:20. அகலத்தைப் பாயல் என்றது * மகளிர் அதனிற் றுயில்கோடல் கருதி. உண்கண் துயில் என்றது உண்கட் டுயில் என்றமையின் உண்கண்ணினது துயில் என ஆறுவது விரிக்க. துயிலின்

---

* மகளிர் கணவன் மார்பிற் றுயிலல்: நற் 20: 1—2; ஐங் 14: 3—4; 205: 2—5; அக 40: 16—7; சீவக 1298.

பாயல் என்பதற்குத் 'துயிலுதல் இனிய பாயல்' என்றுவது 'துயிலுதலை யுடைய இனிய பாயல்' என்றுவது உரைப்பினுமமையும்.

அகலத்தை மகளிர்க்குப் பாயல் எனச் சிறப்பித்தமையால் இச் செய்யுளிற்குத் துயிலின் பாயல் என்று பெயராயிற்று.

பாயலைப் பாலும் கொளாலும் வல்லோய் என இரண்டாவது விரிக்க. பால் என்றது அவ்வகலப் பாயலை வேற்றுப்புலத்து வினையில்வழி மகளிர்க்கு நுகரக் கொடுத்தற்குந் தன்னிடத்தினின்றும் பகுத்தலை. "வணங்கு சிலை பொருத நின் மணங்கம ழகலம் மகளிர்க் கல்லது மலர்பறி யலையே" (பதிற் 63.3-4) "மகளிர் மலைத்த லல்லது மள்ளர், மலைத்தல் போகிய சிலைத் தார் மார்ப" (புற 10:9-10) 'இளையோர்க்கு மலர்ந்த மார்பினை—மகளிர்க்கு மனமகிழ்ந்து கொடுத்த மார்பினையுடையை' (சிறுபாண் 232 நச்) எனப் பிறண்டும் வருவன காண்க.

கொளால்—கொள்ளுதல். என்றது வேற்றுப்புலத்து வினையுள்வழி, அவ்வகலப்பாயலை மகளிர் விரும்பினர் என்று அவர்க்கு நுகரக்கொடுத்து அவரொடு தங்கியிராது காமத்தை வென்று வினைபொருளாகத் தவிர்தலை. "சாயன் மார்பிற் பாயன் மாற்றி" (அக 210:11) என்பதும், 'ஒருவழிப் படாமையு மோடிய துணர்தலும், அரியே ருண்கண் அரிவைய ரேத்த' (சிறு பாண் 214-5) என்புழி, 'ஒருவழிப் படாமையும்—அவர்கள் அங்ஙனம் விரும்பினுர்கள் என்று அவர்கள் வசத்தனுகாமையும், என்ற உரைப் பகுதியும் ஈண்டறியற்பாலன. பாலும் கொளாலும் வல்லோர்க்கன்றி யாகாமையின் 'வல்லோய்' என்றுர். பாலும் கொளாலும் வல்லோய் என்பது துயிலினிய அகலப் பாயலை வேற்றுப்புலத்து வினையுள்வழி நின் தேவிபால் நின்றும் வாங்கிக்கொண்ட வல்லோயாகிய நீ, பகைவரை வென்று பாசறைக்கண் நீடாது மீண்டு நின்னை நினைந்து வருந்தும் பெருந்தேவிக்கு நுகரக் கொடுத்தற்கு அவ்வகலப் பாயலை நின்னிடத்தினின்றும் பகுப்பாயாக என்றும் குறிப்பிற்று.

சாயன் மார்பு—மென்மையையுடைய மார்பு. ஈண்டுச் சாயல் என்றது ஊற்றின் மென்மையை. "மயிலன்ன சாயல்" (ஏலாதி 28) "சாயன் மார்பு" (கலி 65) என ஒளிக்கும் ஊற்றிற்கும் வந்தன என நச்சினுர்க்கினியர் உரைத்தலுங் காண்க. (சீவக. 8 உரை) ஆடவர் மார்பு மகளிரை வருத்தல்,

> "சுணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
> மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்" அக 22:1-3.

என்பதனுலுமறிக தன் தலைவனின் ஊறினிய மார்பைப் பெருமையால் நின்றெரியுங் காமநோய் தீயினுங் கடியதாய்ப் பெருந்தேவியை மிக வருத்தியமையின், "சாயன் மார்பு நனியலைத் தன்று" என்றுர். சாயல் வருத்துதலை,

> "நீயலே னென்றென்னை யன்பினுற் பிணித்துத்தஞ்
> சாயலிற் சுடுதல் லல்ல தவர்தம்மைப்
> பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
> தீயுறை சுடுதலோ விலர்ம ருயிழை
> தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்" கலி 135 18-22.

என்பதனுலு மறிக. அலைத்தன்று—அலைத்தது. அலைத்தல்—வருத்துதல்.

"அழிபட ரலைப்ப வகறலோ கொடிதே" கலி 192:24. மார்பு அலைத்தன்று என்பது §அவ்வலைவு தீருமாறு அவள்பாற் கடிது எழுக என்னும் குறிப்பிற்று.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச்சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

## மேற்கோள்.

சாயல் என்னும் உரிச்சொல் மென்மைப் பொருளில் வருதற்குச் 'சாயன் மார்பு' என்பது மேற்கோள். (தொல். உரி 29 சேனா.)

## பழையவுரை.

(1) கோடுறழ்ந்து எடுத்த கொடுங்கணிஞ்சி யென்றது மலையுள்ள விடங்களிலே அம்மலைதானே மதிலாகவும் மலையில்லாத இடங்களில் மதிலே அரணாகவும் இவ்வாறு மலையொடுமாருட எடுத்த வளைந்த இடத்தையுடைய புறமதிலென்றவாறு. உறழவெனத்திரிக்க. 'கோடுபுரந்தெடுத்த' என்பது பாடமாயின் மதிலில்லாத இடங்களை மலை காவலாய்ப் புரக்கவெடுத்த வென்க. (2) நாடுகண் டன்ன கணைதுஞ்சு விலங்கலென்றது நெடுநாட்பட அடைமதிற்பட்ட காலத்தே விளைத்துக் கோடற்கு வயலும் குளமும் உளவாகச் சமைத்து வைத்தமையாற் கண்டார்க்கு நாடுகண்டாற்போன்ற அப்புக்கட்டுக்கள் தங்கும் மலைபோன்ற இடைமதிலென்றவாறு. விலங்கல் போறலின், விலங்கலெனப்பட்டது. நாடுகண்டாலொப்பது அம்மதிலையடைந்த விடமென்னின், அவ்விடவனுமைப்பற்றி அதன் உவமையை அம் மதில் மேலதாகக் கூறிற்றெனக்கொள்க. (3) துஞ்சுமரமென்றது மதில் வாயிலிற் றூங்கும் கணையமரங்களை; இனிக் கழுக்கோலாக நாட்டிய மரமென்பாருமுளர். (4) ஐயவி யென்றது கதவிற்குக் காவலாகப் புறவாயிலே தூக்கப்படும் துலாமரத்தை; அப்புக்கட்டென்பாருமுளர். ஈண்டு மதிலென்றது உண் மதிலை, கொடுங்கணிஞ்சியையும் (1) விலங்கலையுமுடைய (2) மதில் எனக்கூட்டுக. இனி, இடையில் விலங்கலென்றதனை மாற்றார் படையை விலங்குதலையுடைய வென்றாக்கி, முன்னின்ற கொடுக்கணிஞ்சியென்ற தொன்றுமே மதிலதாக ஐயவி தூக்கிய மதிலென்றதனை ஆகுபெயரான் ஊர்க்குப் பெயராக்கி நாடு கண்டன்ன ஊரென மாறி யுரைப்பாருமுளர். (13) உள்ளலுமுரியளென்றது யான் குறித்த நாளளவும் ஆற்றியிருக்கவென்ற நின்னேவல் பூண்டு நின்னை உள்ளாதிருத்தலேயன்றி நீ குறித்த நாளுக்குமேலே நீட்டித்தாயாகலின் நின்னை நினைத்து வருந்துதலுமுரியளென்றவாறு. (14-5) தாவின்று திருமணிபொருத திகழ் விடு பசும்பொன்னென்றது வலியில்லையான படியாலே அழகிய மணிகளொடு பொருத ஒளிவிடுகின்ற பசும்பொன்னென்றவாறு. ஈண்டுத் தாவென்றது வலி; பொன்னுக்கு வலியாவது உரனுடைமை. இன்றென்பதனை இன்றாகவெனத் திரித்து இன்றாகையாலெனக் கொள்க. என்றது, ஒளியையுடைய மணிகளொடு பொரவற்றாம்படி ஓட்டற்ற

§ "துனிதீர் கொளகைகங் காதலி யினிதுற, பாசறை வருத்தம் விடநீயும் .....கோய்சுவற் புரவி . கடவுமதி" "காய்சின வேந்தண பாசறை நீடி, நந்நோ யறியா வறனி லாளர், இந்நிலை களைய வருகுவர் கொல்" அக 124: 7—13; 294: 12—4.

ஒளியையுடைய பசும்பொனென்றவாறு. (15—6) பூண் பசும் பொன்வயிரமொடு உறழ்ந்து சுடர் வரவெனக் கூட்டி, பூணான பசும்பொன் தன்னிடையழுத்தின வயிரங்களொடு மாறுபட்டு விளங்கவென வுரைக்க. (13) புரையோரென்ற பன்மையாற் காதன்மகளிர் பலரெனக் கொள்க. (17-8) அகலப்பாயலென இருபெயரொட்டாக்கி, அத்தை அல்வழிச் சாரியை என்க. துயிலினிய பாயலெனவுரைக்க. அகலத்தை மகளிர்க்குப் பாயலெனச் சிறப்பித்தமையான் இதற்கு, துயிலின் பாயல் என்று பெயராயிற்று (19) பாலுங்கொளாலும் வல்லோயென்றது அவ்வகலப்பாயலை வேற்றுப்புலத்து வினையில்வழி நின்மகளிர்க்கு நுகரக் கொடுத்தற்கு நின்னிடத்தினின்றும் பகுத்தலையும், வினையுள்வழி அம்மகளிர்பால்நின்றும் வாங்கிக் கோடலையும் வல்லோயென்றவாறு.

பாசறைக்கண் நீ (8) நீடினையாகலின் நின்னைக் காணவந்தேன் (9) நின் தேவியாகிய அசைநடை நின்னை நினைத்தலுமுரியள் (13); ஆனபின்பு அவள் பாயல் வருத்தத்திற்கு உய்யுமோ (14) உய்யாளன்றே; தோன்றல்; அகலப் (17) பாயல் (18) பாலும்கொளாலும் வல்லோய்; நின் (19) மார்பு மிக அவளை வருத்திற்றுக்காண்; (20) நீ அவன்பாற் கடிதெழுகவென வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது, அவன் வென்றிச் சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச்சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

1 மதிலுக்கு மலை: "வரைபோ லிஞ்சி" பதிற் 62: 10; "வரையுறழ் நீண்மதில்" கலி 92: 12; 'ஓங்கன் மதிலுள்" பு. வெ மா. 90; "மதில்வடி வாகிய மலைப்புடை மருங்கே" பெருங் (3) 27: 46.

2. கணைதுஞ்சு விலங்கல்: "அம்பு துஞ்சுங் கடியரணால்" புற 20: 16.

4—8. "செற்றோர், கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின் .. ஓங்கெழில் யானை" பட்டினப் 228—31; "செற்றோர், வெல்கொடி யரண முருக்கிய, கல்லா யானை" "நீண்மதி லரணம் பாய்ந்தெனத் தொடிபிளந்து, வைந்நுதி மழுகிய தடங்கோட் டியானை" ஐங் 429: 2—4; 444: 2—3; "அயிறிணி நெடுங்கத வமைத்தடைத் தணிகொண்ட, வெயிலிடு களிறேபோல்" கலி 135: 3—4; "கடிமதிற் கதவம் பாய்தலின் தொடிபிளந்து, நுதிமுகம் மழுகிய மண்ணை வெண்கோட்டுச், சிறுகண் யானை" "பகைவர், மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பிற், கந்துகால் ஒசிக்கும் யானை" அக 24: 11—3; "எயிறு படையாக வெயிற்கத விடாஅ ... பெருங்கை யானை" "நுதிமுக மழுங்க மண்டி யொன்னார், கடிமதில் பாயுநின் களிறடங்கலவே" "களிறே எழூஉத்தாங்கிய கதவுமலைத்தவர், குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தலிற், பருஉப்பிணிய தொடி கழிந்தனவே" புற 3: 9—11; 31: 7—8; 97: 8—10; "களிறுங் கதவிறப்பப் பாய்ந்த" பு. வெ. மா. 107.

7. மு "கடாஅம் வார்ந்து, கடுஞ்சினம் பொத்தி" பதிற் 82: 5,

7—8. "கடாஅம் வார்ந்து, நிலம்புடையூ வெழுதரும் வலம்படு குஞ்சரம்" பதிற். 'இலங்குதொடி' 1—2; "கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக ... சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு, மையல் வேழ மடங்கலின்" குறிஞ்சி 162—5; "கடாஅஞ் செருக்கிய கடுஞ்சின முன்பிற் களிறு" நற் 103: 3—4.

8. **மழகளிறு:** பதிற் 12: 12 அடிக்குறிப்பு.

***களிறு முழங்கல்:*** "வெண்கோட் டியானை முழங்கிசை" **அக** 347: 12; "முழங்கு மால் களிறு" **சீவக** 1857; "யானை முழங்கு மாநகர்" **பெருங்** (1) 57: 115.

***களிறு முழங்கும் பாசறை:*** 'கடாஅயானை முழங்கும் பாசறை யானே" **பதிற்** 'வந்தனென்' 9—10; "கடாயானை ஒருபாற் களித்ததிரு, மாய்கழலான் கட்டூரகத்து' **பு. வெ. மா** 53.

8—9. **வேந்தன் பாசறையில் தங்குதல்:** "பகைவெம் மையிற் பாசறை மரீஇ" **பதிற்** 50: 23; "நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப், பாசறை யல்லது நீயொல் லாயே" **புற** 31: 5—6; "தண்குவளைத் தூமலர்த் தாரான், பகை மெலியப் பாசறையுளான்" **பு வெ. மா.** 56.

***பாசறையில் நீடுதல்;*** "காய்சின வேந்தன் பாசறை நீடி" **அக** 294: 12.

9. **காண்குவந்திசினே:** **பதிற்** 41: 13; 54: 1; 64: 15; 82: 11; 90: 55; **புற** 17: 33; 125: 4; 391 = 14

12. ***துவர்வாய்;*** ***பொருந*** 27; ***நற்*** 190: 9; ***குறுந்*** 300; **ஐங்** 185; ***கலி*** 55: 4; ***அக*** 27: 10; 29: 13; 39: 23; 62: 2; 75: 10; 162: 13; 179: 11; 212: 5; 343: 18; 385: 16; **சீவக** 1074.

***அமிர்துபொதி துவர்வாய்;*** "பூவொடு வளர்ந்த மூவாப் பசுங்காய், நீரினு மினிய வாகிக் கூரெயிற்று, அமிழ்த மூறுஞ் செவ்வாய்" **அக** 335: 23—5; "படு திரைப் பவளவா யமுத மாந்தியும்" "வாளிஞன் மிடைந்த கண்ணுள் வருமுலைத் தடத்துள் வைகித், தோளிஞன் மிடைந்து புல்லித் தொண்டை வாயமுத மாந்தி" **சீவக** 196; 1694.

11—12 ***இன்னகைத் துவர்வாய்:*** "இன்னகை, முருந்தெனத் திரண்ட முள் ளெயிற்றுத் துவர்வாய்" **அக** 179: 10—11; "இன்னகைத் துவர்வாய், வாசவ தத்தை" **பெருங்** (2) 2: 48—9.

12. ***அமர்த்த நோக்கு:*** 'கடைசிவந்து, ஐய அமர்த்த வுண்கண்" **அக** 237: 15—6

10—13 "சுடர்நுதன் மடநோக்கின், வாணகை யிலங்கெயிற், றமிழ்து பொதி துவர்வா யசைநடை விறலியர்" **பதிற்** 51: 19—21; "வாருறு வணரைம் பால் வணங்கிறை நெடுமென்றோட், பேரெழின் மலருண்கட் பிணையெழின் மானோக் கிற், காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற், கூரெயிற்று முகைவெண் பற் கொடிபுரை நுசுப்பினாய்' **கலி** 58: 1—4; "இன்னகை, முருந்தெனத் திரண்ட முள்ளெயிற்றுத் துவர்வாய்க், குவளை நாண்மலர் புரையு முண்கணிம், மதியேர் வாணுதல்" **அக** 179: 10—3

15. **இருமணி பொருத:** "வயங்குமணி பொருத" **அக** 167: 1.

14—2. **தாவின்று பொருத பொன்:** "தாவி னன்பொன்" **அக** 212: 1; "தன் மலைப் பிறந்த தாவி னன்பொன்" **புற** 152: 28.

17. மு. "எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து" **பதிற்** 14: 11.

1`—7. **மார்பில் பூண்:** **பதிற்** 17: 14; 31: 14; 70: 16; **மதுரைக்** 715—6; **குறிஞ்சி** 121—2; **பட்டினப்** 297; **ஐங்** 353; **புற** 88: 4; **களவழி** 6; **சீவக** 695; **சிலப் 13. 127**

20 ***சாயன் மார்பு:*** "தண்ணந் துறைவன் சாயன் மார்பே" **நற்** 327: 9; "ஊரன் மார்பே ...... இன்சா யற்றே" **ஐங்** 14; "சாயலின மார்பன்" "இன்சாயன் மார்பன்" "தண்டாத் தீஞ்சாயற் பரத்தை வியன்மார்ப" **கலி** 42: 30; 65: 5; 93: 1; "சாயன் மார்பில்" "சார லுடன் சாயன் மார்பே" **அக** 210: 10; 328: 15

**ஆடவர் மார்பு மகளிரை வருத்தல்:** 'உறுகதி ரிளவெயி லுண்ணு நாட, வின்மார் பணங்கிய செல்ல லருநோ, யார்க்குநொந் துரைக்கோ யானே" **நற்** 396: 7—9; "ஆய்வய லூரன், விழைதரு மார்ப முறுநோய்" **ஐந்-ஐம்** 25.

## 7. வலம்படு வியன்பணை.

17. புரைவது நினைப்பிற் புரைவதோ வின்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்துதிறை பகரக் கொள்ளுநை யாதலிற்
றுளங்குபிசி ருடைய மாக்கட னீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
ஆடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவர்
அரணங் காணாது மாதிரந் துழைஇய
நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகவிந் நிழலென
ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பின்
அமிழ்துதிகழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்கு நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மார்ப பாடினி வேந்தே.

இதுவுமது.
பெயர்—வலம்படு வியன்பணை (5).

ப—ரை. *1—3. புரைவது நினைப்பின்—நினக்குப் பொறுமையினால் ஒப்பதாகிய பொருளை நினைத்தால், பகைவர் பெரிய தப்புநராயினும்—பகைவேந்தர் பெரியனவாகிய பிழைகளைச் செய்தனராயினும், பணிந்து திறை பகர கொள்ளுநையாதலின்—பணிந்து நினக்குத் திறையை அளிக்க அத்திறைகளை ஏற்றுக்கொள்ளுவாயாதலின், புரைவது இன்று—அங்ஙனம் ஒப்பாம் பொருள் இல்லை.*

*1—14. துளங்கு பிசிர் உடைய மா கடல் நீக்கி—அசைகின்ற நீர் பிசிராக உடையும்படி பெரியகடலைக் கடந்து, கடம்பு அறுத்து—பகைவரது காவல்மரமாகிய கடம்பினை அறுத்து, இயற்றிய—அக்கடம்பினாற் செய்யப்பட்ட, வலம்படு வியல் பணை—வெற்றி தன்பாலேபட நின்ற அகலத்தையுடைய முரசை, ஆடுநர் பெயர்ந்து வந்து—நீராடுதலையுடையராய்ப் பெயர்ந்து வந்து, அரும்பலி தூஉய்—அரிய பலியைத் தூவி, கடிப்பு கண் உறூஉம்—கடிப்பை முரசின் கண்ணில் உறுவிக்கும், தொடி தோள் இயவர்—தொடியணிந்த தோளினையுடைய இயவர், அரணம் காணாது மாதிரம் துழைஇய—பாதுகாப்பான இடத்தைக் காணாது திசையெல்லாம் சென்று தேடிய, நன தலை பைஞ்ஞிலம் இந்நிழல் வருக என—அகன்ற இடத்தி லுள்ள மக்கட்டொகுதி இக்குடை நிழற்கண்ணே வருக என்று சொல்லி, ஞாயிறு புகன்ற—ஞாயிறு விரும்பிய, தீது தீர் சிறப்பின்*

*—குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய, அமிழ்து நிகழ் கருவிய கண மழை தலைஇ—நீர்விளங்குகின்ற மின்னல் முதலிய தொகுதியை யுடைய கூட்டமாகிய மேகங்களைப் பெய்வித்து, கடு கால் கொட்கும் —கடியகாற்றுச் சுழன்று அடிக்கும், நன் பெரும் பரப்பின்—நன்றாகிய பெரிய பரப்பினையுடைய, விசும்புதோய் வெண்குடை நுவலும்-ஆகாயத்தை முட்டிய வெண்கொற்றக் குடையின் அருட் சிறப்பைச் சொல்லுதற்குக் காரணமாகிய, பசும் பூண்மார்ப—பசியபொன்னாற் செய்த பூணையணிந்த மார்பனே, பாடினி வேந்து—பாடினிக்கு அரசே.*

**முடிபு: வியன்பணையைக் கடிப்பைக் கண்ணுறாஉம் இவவர் அரணம் காணாது மாதிரந் துழைஇய பைஞ்ஞிலம் இந்திழற் கண்ணே வருக எனச்சொல்லி வெண்குடையின் அருட்சிறப்பைச் சொல்லுதற்குக் காரணமாய் நின்ற பசும்பூண் மார்ப, பாடினி வேந்தே, நினக்குப் புரைவது நினைப்பிற் பகைவர் பெரிய தப்புநராயினும் பணிந்து திறை பகரக் கொள்ளுநையாகலின் புரைவதோவின்று என்க.**

(ஆ—ரை) 1—3. புரைவது—ஒப்பது. புரை—ஒப்பு. "கொடிபுரை நுசுப்பினள்" கலி; கடவுள் 9. "பெரிய தப்புந ராயினும் பகைவர், பணிந்துதிறை பகரக் கொள்ளுநை" எனப் பொறையுடைமை கூறுதலாற் பொறையுடைமையால் ஒப்பதாகிய பொருளே நினைக்கப்பட்டது என்பது தெளிவாகும். *புரையுநர் என்னாது புரைவது என்றதனால், "அகழ்வாரைத் தாங்கு நிலம் போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்த றலை" (குறள் 151) எனச் சான்றோராற் பொறையுடைமைக்கு எடுத்துரைக்கப்பட்ட நிலமும் ஒப்பாகாது என்றபடி. 'நினைப்பின்' என்றார் ஒப்பாம் பொருள் அரிதாகலின். "புரைவதோவின்று" என்றதனால் நீ பிறர்க்குப் பொறையுடைமையால் உவமமாகப் பொருந்துவதல்லது நினக்குப் பிறருவமமாகா வொருபெரு வேந்து என்பதனைக் குறிப்பித்தார். இன்றே ஏ, தேற்றம். புரைவது இன்றுவதற்கு மிக்க பொறையுடைமையே ஏதுவென்பார், 'பெரிய தப்புநராயினும் பகைவர் திறை பகரக் கொள்ளுநை' எனப் பொறையுடைமையை எடுத்துக்காட்டினார்.

பெரிய தப்பு, இகழ்ந்துரைத்தல் திறையிடாதொழிதல் போல்வன. "சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை, யருஞ்சமந் ததையத்தாக்கி முரசமொ, டொருங்ககப் படேஎ னாயின்" (புற 72: 9—9) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் உரைத்ததும், "இமையத் தாபதர் எமக்கீங் குணர்த்திய, வமையா வாழ்க்கை யரைசர் வாய்மொழி, நம்பா லொழிகுவ தாயி னாங்கஃ், தெம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்" (சிலப் 26: 9—12) எனச் சேரன்செங்குட்டுவன் உரைத்ததும், "பதி பாழாக வேறுபுலம் படர்ந்து" (பதிற் 71: 18) எனத் திறையிடாக் குறும்பர் நாட்டிலே அந்நாட்டுப்பதி பாழாகப் பெருஞ் சேரலிரும்பொறை சென்றமை கூறப்பட்டிருத்தலும் ஈண்டறியற்பாலன. உம்மை, எதிர்மறை. திறை,

* "புரையுந ரில்லாப் புலமையோய்" முருகு 280.

பகைவரால் கொடுக்கப்படும் களிறு கலம் முதலாயின. "ஒளிறுவாள் வய வேந்தர், களிறொடு கலந்தந்து, தொன்றுமொழிந்து தொழில் கேட்ப' (பதிற் 90: 6—8) எனப்பிறாண்டும் வருதல் காண்க. 'பகர—கொடுக்க' புற 116: 13 உரை. இனித் திறைபகர வென்பதற்குத் திறையைக் கொள்வாயாக எனச் சொல்லித்தர' எனினுமாம். "ஞாலத்தரசர்—திறைகொள் இறையோ வெனவந்து இடம்பெறுதலின்றி, முறையோ வென நின்றார் மொய்த்து" என முத்தொள்ளாயிரத்து வருதல் காண்க. கொள்ளுநை என்றது பகைவர் பெரிய பிழைகளைச் செய்தனர் என்று எண்ணி அவர் அளிக்கும் திறைகளை மறுத்து பிழைகளைப்பொறுத்து ஏற்றுக்கொள்வாய் என்றவாறு. பகைவர் பிழைசெய்தால் அப்பிழையைப் பொறுத்தல்வேண்டுமென்பது "போற்றார்ப் பொறுத்தலும்......உடையோய்" [புற 2: 7—8] எனப் பிறர் கூறுமாற்றானு மறிக கொண்டனை என்னாது 'கொள்ளுநை' என்றார், பிழைபொறுத்தல் எக்காலத்தும் உண்மையின்.

4—14. துளங்கு என்றது துளங்குகின்ற அலையை. அலை பிசிராக உடைதல் "வரைமருள் புணரி வான்பிசி ருடைய" [பதிற் 11: 1) என்பதனானுமறிக. உடைய நீக்கி என இயையும். மாக்கடல்—'பெரிய கடல்' சீவக 911 நச். 'நீராணிறைந்ததோர் பெரிய கடல்' திருக்கோவை 147 பேர். கடல் நடுவிலுள்ள துருத்திக்கண் நின்ற கடம்பைக் கடல்கடந்து சென்று தடிந்தமையின் 'மாக்கடனீக்கிக் கடம்பறுத்து' என்றார். நீக்கி—கடந்து இனி மாக்கடனீக்கி என்பதற்குத் 'தன்னுள் வாழ்வார்க்கு அரணாகிய பெரிய கடல் வலியை அழித்து' என்றுவது, 'பெரிய கடலின்கண் பகைவர் வலியை அழித்து' என்றுவது உரைப்பினுமமையும். கடம்பு துருத்திக்கணுள்ள பகைவரின் காவல் மரம். கடம்பறுத்தியற்றிய பணை என்க.

வலம்படு வியன்பணையென்றது, போர்செய்து வருந்தாமற் பகைவர் வெருவி ஓட முழங்கி அரசனுக்கு வெற்றி தன் பாலே படநின்ற முரசென்றவாறு. இச்சிறப்பான் இச்செய்யுளுக்கு வலம்படுவியன்பணை என்று பெயராயிற்று.

முரசு வெற்றிக்கு ஏதுவாதல், 'வலனிரங்கு முரசு—வெற்றியுண்டாக ஒலிக்கு முரசு' (பரி 7: 6 பரிமேல்) என்ற உரையானும் அறியப்படும். படுதல்—உண்டாதல். வியல்—அகலம். ஆடுநர் என்றது வினையெச்ச முற்று வினைத்திரி சொல். அரும்பலி—அரியபலி; என்றது குருதிப்பலியை. 'அரும்பலி சோறு தசை முதலிய அரியபலி; அரியபலி கிடைக்காதபலி' என்பர் தஞ்சைவாணன்கோவை உரையாசிரியர். (தஞ்சை 334 உரை) பலிதூவியது முரசிற் கடவுள் உறைதல் பற்றி.

"அருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோ னேந்திய அரும்பெறற் பிண்டம்" பதிற் 30: 34—5.

என்புழிக் 'கடவுளென்றது முரசுறை கடவுளை' எனப் பழையவுரைகாரர் உரைத்தமை காண்க கடிப்பு—முரசு அடிக்குங் குறுந்தடி. "பறையறை கடிப்பின்" நற் 46. கண் என்றது முரசின், குறுந்தடியால் அடிக்கும் பக்கத்தை, கண்போறலின் கண் எனப்பட்டது. "பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச,

மாக்க ணகலறை யதிர்வன முழங்க'' (பட்டினப் 336—7) என வருதல் காண்க. உறூஉம்—கடிப்பைக் கண்ணில் உறுவிக்கும்; என்றது அடிக்கும் என்றபடி. கண்ணுறூஉம் என்பது ஈண்டுப் பிறவினைமேல் நின்றது "சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை......ஒருங்ககப் படேஎனாயின்'' (புற 72: 7—9) என்புழிப்போல. இயவர் பலிதூவி முரசு முழங்குதல்,

''உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசங் கண்பெயர்த் தியவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோ ளோச்ச'' பதிற் 19: 5—8

என்புழிக் காண்க.

தொடி—வீரர் புயத்தில் அணியும் வீரவளை. "தொடியணிதோ ளாடவர் தும்பை புனைய'' பு. வெ. மா. 241. வெருவரு செங்களத்து அஞ்சாது நின்று முரசு முழக்கும் மறப்பண்புடைமையால் இயவரும் வீரர்போன்று தோளிற் றொடியணிவாராயினர் ''செங்கள விருப்பொடு......இயவர்... தொடித்தோ ளோச்ச'' (பதிற் 19: 5—8) என வருதல் காண்க. ஈண்டு இயவர் என்றது முரசடிப்போரை. இப்பெயர் தோற்கருவி இசைக்கு மாக்களுக்குப் பெயரா தல் ''இயவர் தோற்கருவி இசைக்கு மாக்கள்'' என்னும் திவாகரத்துட் காண்க. வியன்பணையைக் (5) கடிப்பைக் கண்ணுறூஉம் இயவர் (7) என்க.

'அரணங் காணாது மாதிரந் துழைஇய, நனந்தலைப் பைஞ்ஞிலம் வருக விந் நிழல்' என்பது இயவர் கூற்று. அரணங் காணாது—தம் நாட்டை ஆள்பவர் கலக்கமுறுத்த அலைபெற்றுத் தம்மைப் பாதுகாத்தற்கேற்ற பாது காப்பைக் காணாது பலதிசைகளிலும் ஆராய்ந்து தேடுதலின் 'மாதிரந் துழைஇய' என்றார் துழைஇய பைஞ்ஞிலம் என்க. பைஞ்ஞிலம் — மக்கட் டொகுதி. "பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்'' புற 62: 10. நனந்த லைப் பைஞ்ஞிலம் என்றார், அகன்ற இடத்தையுடைய நாட்டிலிருந்தும் பைஞ் ஞிலம் அரண்காணாமை தோன்ற. மக்கள் யாவராயினும் தன்கீழ்வரின் பகை நொதுமல் நட்பு என்னும் வேறுபாடு கருதாது ஒரு பெற்றித்தாகப் பாது காக்கும் அருட்சிறப்புடைமையின் 'பைஞ்ஞிலம் வருக இந்நிழல்' என்றார். இந்நிழல் என்றது சேரலாதன் வெண்குடை நிழலை. அதனை நிழல் என் றது தன்கீழ் வாழ்வாரைப் பகை முதலிய வெம்மைகளினின்றும் காத்து இன்பம் நல்குதல் பற்றி.

''கடனறி மன்னர் குடைநிழற் போலப்
பெருந்தண் ணென்ற மரகிழல்'' நற் 136: 4—5.

''கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ'' புற 35: 19—21.

''மண்குளிரச் செய்யு மறவேல் நெடுந்தகை
தண்குடை'' சிலப் 19: 21—2.

எனப் பிறவண்டும் வருவன காண்க. நாடு ஆட்சிபெற்ற அரசர் செய்யும் வருத்தத்திற்கு அஞ்சி வந்தடைந்தோரை நெஞ்சு வருந்தாதபடி காக்கும் சேரலாதனின் அருட்சிறப்பைக் குடைமேலேற்றி 'இந்நிழல்' என்றார். வருக இந்நிழலென (9) நுவலும் (13) என முடிக்க.

ஞாயிறு புகன்றதும் தீதுதீர் சிறப்பினையுடையதும் கருவிய கண மழை தலைஇக் கடுங்கால் கொட்பதும் நன்பெரும் பரப்பினையுடையதுமாகிய விசும்பினைத் தோய்ந்த வெண்குடை என்க. ஞாயிற்றின் வெயிலாலும் கருவி வானத்தின் மிகுபெயலாலும், காற்றின் கடிய வேகத்தாலும் கெடாது நின்று காக்கும் குடை என்பது தோன்ற, ஞாயிறு புகலுதல் முதலாயின வற்றை விசும்பினுக்கு அடையாக்கியுரைப்பாராயினர். குடையையுயர்த்துக் கூறுதல் "நடைமிகுத் தேந்திய குடைநிழன் மரபு" (தொல் 36) என்னும் துறையின்பாற்படும். புகன்ற—விரும்பிய. ஞாயிறு விசும்பில் இயங்குதல் பற்றி 'ஞாயிறு புகன்ற' என்றார். "விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலம்" (நெடுநல் 160—1) என்றார் பிறரும். S மைம்மீன் புகைதல், தூமந் தோன்றுதல் முதலாகிய குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைமையால் 'தீதுதீர் சிறப்பின் விசும்பு' என்றார்.

அமிழ்து திகழ் மழை, கருவிய மழை, கணமழை எனத் தனித்தனி கூட்டுக. கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழையாதலின் 'அமிழ்து திகழ் மழை' என்றார். அமிழ்து என்றது நீரை. தான் உணவாகி உலகத்தை நிலை நிறுவுதற்கு ஏதுவாதல்பற்றி அதனை 'அமிழ்து' என்றார். "வானின் றுலகம் வழங்கி வருதலாற், றானமிழ்த மென்றுணரற் பாற்று" என்றார் திருவள்ளுவரும். (குறள் 11) கருவியமழை—மின்னும் இடியு முதலாகிய தொகுதியையுடைய மழை.

"பொலந்தொடி போல மின்னிக் கணங்கொள்
இன்னிசை முரசி னிரங்கி மன்னர்
ரெயிலூர் பஃறோல் போலச்
சென்மழை தவழுமவர் நன்மலை நாட்டே" நற் 197: 9—12.

"இருள்தூங்கி முழங்கி மின்னிப் புலரா விரவும்
பொழியா மழையும்" திருக்கோவை 259.

எனப் பிறாண்டும் வருவன காண்க. கருவி—தொகுதி. மழை—மேகம். "மாரிக் குன்றம் மழை சுமந் தன்ன" பெரும்பாண் 49 தலைஇ—துளிகளைச் சொரிவித்து எனலுமாம். ஏவல் வினையெச்சம் தலைஇக் கால்கொட்கும் விசும்பு என்க. இனித் தலையவெனத் திரித்துக் கொட்கும் என்னும் வினையொடு முடிப்பினும் அமையும். தீதுதீர் சிறப்பினையுடைமையால் 'நல்' என்றும், தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே யகன்று விரிதற்குக் காரணமாகிய மிக்க பரப்புடைமையால் 'பெரும் பரப்பின்' என்றும் விசும்பினுக்கு அடைகொடுத்துக் கூறுவாராயினர். வெயிலழல் கவியாது வியலக வரைப்பின் உயிரழல் கவிக்கும் உயர்ச்சித்தாகிய வெண்குடையாதலின் 'விசும்பு தோய் வெண்குடை' என்றார். வெண்குடை நுவலுமென்றது வெண்குடையின் அருட்சிறப்பைச் சொல்லுமென்றவாறு. 'நனந்தலைப் பைஞ்ஞிலம் வருக விந்நிழல்' என்றதனால் நனந்தலையுலகத்துள்ளார் யாவராயினும் தன் நிழற்கீழ்வரின் பாதுகாக்கும் தன்மையதாகலின், தொடர்பு பற்றாதே வருத்தமுற்றார்மேற் செல்வதாய அருளுடைமை பெறப்பட்டது. நுவலும்(13)

S "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்" புற 117: 1.

மார்ப (14) என முடிக்க. இயவர், நனந்தலைப் பைஞ்ஞிலம் வருக விந்நிழல்' என்று வெண்குடையின் அருட்சிறப்பைப நுவலுதற்குத் தன்னையடைந் தோரைப் பாதுகாக்கும் மார்பின் வலி ஏதுவாகலின் மார்ப என்பது ஏதுப் பெயர். "கொண்பெருங் கானத்துக் கிழவன், றண்டா ரகல நோக்கின மலர்ந்தே" (புற 155: 7—8) என்புழி 'மண்டை அகல நோக்கி மலர்ந்த வென்ற கருத்து, கொடுக்கும் பொருள் மார்பின் வலியான் உளதாமாக லின் அகலநோக்கினவென்றதாகக் கொள்க' என்ற உரைப்பகுதி ஈண்ட றியற்பாலது.

இதனாற்சொல்லியது பொறையுடைமையொடு படுத்து அவன் வென் றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று

## பழையவுரை.

(5) வலம்படு வியன்பணை யென்றது போர்செய்து வருந்தாமற் பகை வர் வெருவியோடமுழங்கி அரசனுக்கு வென்றி தன்பாலேபட நின்ற முரச மென்றவாறு. இச்சிறப்பான் இதற்கு 'வலம்படுவியன்பணை' என்று பெய ராயிற்று. (6) ஆடுநரென்றது வினையெச்ச முற்றுவினைத்திரிசொல். (11) அமி ழ்து திகழ் மழையென முடிக்க. அமிழ்தென்றது நீர். தலைஇயென்பதனைத் தலையவெனத் திரிக்க. (13) வெண்குடை நுவலுமென்றது வெண்குடையின் அருட்சிறப்பைச் சொல்லுமென்றவாறு. (13-4) நுவலும்மார்பவென முடிக்க. இஃது ஏதுப்பெயர்.

வியன்பணையைக் (5) கடிப்பைக் கண்ணுறுமியவர், (7) 'அரணங்காணாது மாதிரந்துழைஇய (8) பைஞ்ஞிலம் இந்நிழற் கண்ணே வருக' எனச்சொல்லி (9) வெண்குடையின் அருட்சிறப்பைச் சொல்லுதற்குக் காரணமாய் நின்ற (13) பசும்பூண்மார்ப, பாடினிவேந்தே (14) நினக்குப் புரைவது நினைப்பிற் (1) பகைவர் பெரிய தப்புநராயினும் (2) பணிந்து திறைபகரக் கொள்ளுநை யாதலின் (3, புரைவதோவின்று (1) என மாறிக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது, பொறையுடைமையொடு படுத்து அவன் வென் றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

***2—3. பகைவர் திறை பகர்தல்:*** "பணிந்து திறை தருபநின் பகைவராயின்" "பணிந்துதிறை தருபநின் பகைவ ராயின்" **பதிற்** 59: 12; 62: 12; "பல்வேறு வகை யிற் பணிந்த மன்னர்" **பெரும்பாண்** 428. 'பகைவர் திறைதந்த யானைகள்' **மலைபடு** 572 நச். "பகைவரும், தந்திறை கொடுத்துத் தமராயினரே" "நன்கலங் களிற்றொடு நண்ணார் ஏந்தி, வந்து திறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து" **அக** 44. 1—2; 124: 1—2; "வந்து தந்த பணி திறையால்" **புற**: 22: 26; "கோடி, நிதியந் திறை யளந்தார் கோரும்" பு. வெ மா 45; "திறை சுமந்து நிற்குந் தெவ்வர் போல" **சிலப்** 25: 36.

4. **மாக்கடல்** பதிற்: 11: 3 அடிக்.

5 **கடம்பறுத்தல்: பதிற்** 11: 12—3 அடிக்.

கடம்பறுத் தியற்றிய பணை: **பதிற்** 11: 12—4 அடிக்

**வலம்படு பணை:** "வலம்படு முரசம்" "வலம்படு முரசின்" **பதிற்** 56: 4; 64: 1; "வலம்படு முரசிற் சேரலாதன்" **அக** 127:

**வியன்பணை:** **பதிற்** 31: 30; 39: 5.

5—6. **முரசுக்குப் பலி:** "விரவுவேறு கூலமொடு குருதி வேட்ட, மயிர் புதை மாக்கண்" **பதிற்** 29: 11—2; "குருதி வேட்கை யுருகெழு முரசம்" "பலிபெறு முரசம்" "குருதிப் பலிய முரசு" **புற** 50: 5; 362: 3; 369: 5; "பலிபெறு முரசின்" **பு. வெ. மா** 158; "மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி" 'உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து, மயிர்க்கண் முரசமொடு" **சிலப்** 5: 88; 26: 195-6. "கூற்றுக் கண் விழிக்கும் குருதி வேட்கை, முரசு" **மணி** 1: 30—1: "கோற்றெழில் வேந்தன் கொற்ற முரசம், பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி யோச்சி" **பெருங்** (2)2: 29—30. "பரவிய பலிபெறு முரசம்" **சூளா.** சுயம்வர 210.

7. **இயவர்:** **பதிற்** 27: 5; **மதுரைக்** 304; **புற** 336: 6.

8. **மாதிரந் துழைஇய:** **அக** 189: 11; 229: 9 **புற** 174: 21; 370: 4.

9. **பைஞ்ஞிலம்:** "உண்ணுப் பைஞ்ஞிலம்" **பதிற்** 31: 6; "வேறுபடு பைஞ்ஞிலம்" **புற** 62: 10

10. **தீதுதீர்சிறப்பு:** "திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்" **நெடுநல்** 89; "தீதுதீர் சிறப்பிற் றிருமகளாயினும்" **பெருங்** (3) 5: 71; "தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி" **சிலப்** 11: 30.

11. **கருவிய மழை:** **பதிற்** 31: 15; 76: 10; **பொருந** 236; **பெரும்பாண்** 24; **நற்** 213: 8; 238: 5; 329: 10—11; 365: 6; **குறுந்** 42; 94; 197; 205; **ஐங்** 476; 488; **அக** 4: 6; 139: 18—9; 158: 1; 304: 1; **புற** 159: 19; 204: 13; **சீவக** 725; 2752; **மணி** 17: 92. **மழைதலைஇ.** **பதிற்** 84: 23; **ஐங்** 371: 2; **பரி** 20. 8

12. **கடுங்கால்:** "கடுங்காலொடு கரைசேர" **மதுரைக்** 78.

13. **விசும்புதோய் வெண்குடை:** "வான்றோய் வெண்குடை" **பதிற்** 52: 31; "விண்டோய் வெண்குடை" "விசும்பிவர் வெண்குடை" **அக** 135: 11; 231: 12; "விசும்புற வோங்கிய வெண்குடை" "விண்பொரு நெடுங்குடை" "வான்றோய் நீள்குடை **புற** 75: 11; 175: 6; 266: 7. "வானுயர வோங்கு குடை" **சீவக** 2490; "விண்டோய் குடை" **திருக்கோவை** 383

14 **பசும்பூண்:** **நற்** 227: 5; 349: 9; **அக** 162: 21; 253: 5; 266: 12; 303: 4; 338: 5; **புற** 69: 15; 76: 9; 153: 3.

**பாடினிவேந்து:** **பதிற்** 14: 17 அடிக்.

---

## 8. கூந்தல் விறலியர்

18. உண்மின் கள்ளே யடுமின் சோறே
எறிக திற்றி யேற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
இருள்வண ரொலிவரும் புரியவி ழைம்பால்
ஏந்துகோட் டல்குன் முகிழ்நகை மடவரற்
கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே
பெற்ற துதவுமின் றப்பின்று பின்னும்
மன்னுயி ரழிய யாண்டுபல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட

தண்ணிய லெழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவ தாயினும்
சேரலாதன் பொய்யல னசையே.

துறை—இயன்மொழி வாழ்த்து.
வண்ணம்—ஒழுகு வண்ணம்.
தூக்கு—செந்தூக்கு.
பெயர்—கூந்தல் விறலியர். (6)

ப—ரை. *1—7.* *கள் உண்மின்—நீயிர் கள்ளினை உண்மின்; சோறு அடுமின்—அதுவேயன்றி உண்டற்குச் சோற்றை அடுமின்; திற்றி எறிக—அதுவேயன்றித் தின்றற்கு இறைச்சியை அறுமின்; புழுக்கு ஏற்றுமின்—அதுவேயன்றித் தின்றற்குப் புழுக்கப்படுமவற்றை அடுப்பிலே ஏற்றுமின்; வருநர்க்கு வரையாது—வருவார்க்கு வரையாதே கடிதின் உதவுதற்பொருட்டு, பொலம் கலம் தெளிர்ப்ப—பொன்னாற் செய்யப்பட்ட அணிகலங்கள் ஒளிப்ப, இருள் வணர் ஒலி வரும் புரி அவிழ் ஐம்பால்—இருண்ட கடை குழன்றழைத்த நெறிப்புப் பரந்த கூந்தலினையும், ஏந்து கோடு அல்குல்—உயர்ந்த வளைவினையுடைய அல்குலினையும், முகிழ் நகை—தோன்றுகின்ற முறுவலினையும, மட வரல்—மடப்பம் வருதலினையுமுடைய, கூந்தல் விறலியர்—வரிசை பெறுதற்குரிய கூந்தல் விறலியரும், அடுப்பு வழங்குக—அடுப்புத் தொழிலிலே வழங்குக; பெற்றது உதவுமின்—இன்னும் வருநர்க்குச் சோறிடுதலேயன்றி அச்சேரன்பால் நாம் பொருளாகப்பெற்றது கொடுமின்; பின்னும தப்பு இன்று—இவ்வாறு எல்லாம் கொடுத்தாலும் பின்னும் காரியத்தில் தப்பில்லை.*

*8—12* *மண்ணுடை ஞாலம் புரவு எதிர்கொண்ட—அணுக்களையுடைய இந்நிலவுலகத்தைப் பாதுகாத்தலை ஏற்றுக்கொண்ட, தண் இயல் எழிலி—தண்ணிய இயல்பையுடைய மேகம், தலையாது மாறி—பெய்யாது ஒழிந்து, யாண்டு பல துளக்கி—பலயாண்டுகளாக நிலை கலங்கச் செய்து, மன் உயிர் அழிய—நிலைபெற்ற உயிர்கள் அழியும்படி, மாரி பொய்க்குவதாயினும்—மழை பெய்தலிற் பொய்த்தாலும், சேரலாதன் நசை பொய்யலன்—சேரலாதன் விரும்பிய பரிசிற் பொருள்களைத் தருதலிற் பொய்த்தல் செய்யான்.*

முடிபு: **நீயிர் கள்ளினையுண்மின்; அதுவேயன்றி உண்டற்குச் சோற்றை யடுமின்; அதுவேயன்றித் தின்றற்குத் திற்றியை யறுமின்; அதுவேயன்றித் தின்றற்குப் புழுக்கப்படுமவற்றை அடுப்பிலே ஏற்றுமின்; வருநர்க்கு வரையாதே கடிதின் உதவுதற்பொருட்டுக் கூந்தல் விறலியர் அடுப்புத் தொழிலிலே வழங்குக. இன்னும் வருநர்க்குச் சோறிடுதலேயன்றி அவன்பால் நாம் பொருளாகப் பெற்றது கொடு**

மின்; இவ்வாறு எல்லாம் கொடுத்தாலும் பின்னும் காரியத்திற் றப்பில்லை; இதற்குயாது காரணமெனின் மன்னுயிரழிய மாரி பொய்த்தாலும் சேரலாதன் நசை பொய்யலன் என்க.

(ஆ—ரை) 1—7 'உண்மின் கள்ளே யடுமின் சோறே, எறிக திற்றி யேற்றுமின் புழுக்கே' என்பது சேரலாதன்பாற் பரிசில்பெற்ற தலைமைப் பாணன் தன் இற்கண் அடுப்புத்தொழிற்குரியாரை நோக்கிக் கூறியது. 'வழங்குக அடுப்பே' என்றது வரிசை மகளிராகிய கூந்தல் விறலியரை நோக்கிக் கூறியது. உண்மின் கள்ளே என முதற்கட் கூறியது அடுப்புத்தொழிற்குரியார்க்கு மகிழ்ச்சியும் ஊக்கமும் உண்டாதற்பொருட்டு. 'அடுமின் சோறே எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே' என ஏவியது அடுப்புத்தொழிற்குரியாரையாதலின் 'உண்மின் கள்ளே' என ஏவியதும அவரையே என்பது தெளிவாகும். * கள்ளும் உணவெனப்படுதலின் 'உண்மின் கள்ளே' எனப் பொது வினையாற் கூறினர். "வெப்புடைய மட்டுண்டு" "நாட்கள்ளுண்டு" (புற 24: 5; 123: 1) எனப் பிறரும் கூறுதல் காண்க. எறிதல்—அரிவாளினால் அறுத்தல். "எஃகுபோழ்ந் தறுத்த வானிணக் கொழுங்குறை" பதிற் 12: 16. திற்றி—தசை. "நாகா வீழ்த்துத் திற்றி தின்ற" அக 249. 13. ஏற்றுமின் புழுக்கு என்றது வருநர்க்குச் சோற்றுடன் உதவுதற்பொருட்டுத் திற்றியையேயன்றிப் புழுக்கப்படுமவற்றையுஞ் சமைப்பீராக என்றவாறு. புழுக்கு—புழுக்கப்படுவனவாகிய அவரை துவரை முதலியன. 'புழுக்கல்—அவரை துவரை முதலியன' என்றார் சிலப்பதிகார அரும்பதவுரைகாரரும். (சிலப் 5: 68 உரை) உண்மின் அடுமின் ஏற்றுமின் என்ற பன்மையால் அடுப்புத் தொழிற்குரியார் பலர் என்பது அறியப்படும்.

பொருளின்மையால் உணவின்றி வருந்தும் பாணன் சேரலாதன்பாற் பெற்ற பெருவளமுடையனாதலின் தன்பால் வருநர்க்கு வழங்குதற் பொருட்டு, 'அடுமின் சோறே எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே' என ஏவுவானாயினன். பாணன் சேரலாதன்பாற் பரிசில் பெற்றமை "பெற்ற துதவுமின் ...சேரலாதன் பொய்யலன் நசையே" என வருதலான் அறியப்படும். வருநர் என்றது விருந்தினரை. வருநர்க்கு—விருந்தினர்க்கு புற 10: 8 உரை. வருநர்க்கு வரையாது (3) வழங்குக அடுப்பு (6) என முடித்து, வரையாது என்பதனை வரையாமல் எனத் திரித்து வரையாதொழியும்படி யெனக் கொள்க. ஈண்டு வரைதல், காலத்தை அளவுபடுத்திக் கூறுதல். தெளிர்த்தல்—ஒலித்தல். தெளிர்ப்ப (3) வழங்குக (6) என முடிக்க. "செறிதொடி தெளிர்ப்ப வீசி "(நற் 20: 5)" எல்வளை தெளிர்ப்ப நின்போல் யானும் ஆடி" (தொல் களவு சூத் 23 நச் மேற்) என வருவன காண்க.

ஐம்பாலினையும் அல்குலினையும் நகையினையும் மடவரலினையுமுடைய கூந்தல் விறலியர் என்க. கருமை முதலிய நல்லிலக்கண மமைந்த கூந்தலென்பார் 'இருள்வணரொலிவரு புரியவிழ் ஐம்பால்' என்றார். "கண்

---

* 'மட்டபபுகா" பதிற் 90: 26; "அரியலம் புகவின்" குறுந் 258: 5; 'கள்ளாகிய உணவினையுடைய இழிந்த குடி' மதுரைக் 137 நச்.

ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்" என்றார் சிந்தாமணி யிலும். (சீவக 164) இருள் ஐம்பால் என்றார் கருமை மிக்க கூந்தலாதலின். "வீங்கிருள், பின்னிவிட் டனகுழற் பெருங்கட் பேதை" (சீவக 1457) என் றார் பிறரும். வணர்—கடை குழன்ற. புரி—நெறிப்பு. சீவக 2688 நச். இனி, வணர் என்பதற்கு வளைவு எனப் பொருளுரைத்துப் புரியவிழ் ஐம்பால் என்பதற்குச் சுருள் விரிகின்ற ஐம்பால் என்றுரைப்பினும் அமையும். ஐம்பால் –குழல் அளகம் கொண்டை பனிச்சை துஞ்சை யென்ற ஐந்து பகுதியை யுடைய கூந்தல். ஏந்துகோட்டல்குல் என்பதற்குஏந்திய பக்கத்தினையுடைய அல்குல் எனினுமாம். முகிழ் நகை என்றது தோன்றுகின்ற நகை. முகிழ்த்தல்—தோன்றுதல். "தெ ய்யில் சூழ் இள முலை முகிழ் செய" கலி 125: 8—9. நகை—முறுவல். மடம் என்பது ஒன்றினை அறிந்தும் அறி யாததுபோல் இருக்கும் தன்மை. 'கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை' என்பர் நக்கீரரும் (இறை சூத் 2 உரை) நச்சினார்க்கினியரும் (சீவக 359 உரை) அடியார்க்கு நல்லாரும். (சிலப் 16: 86 உரை)வரிசை மகளிர் ஆடல் பாடற்கேற்ற அழகுடையராதல் தோன்ற அவர்கூந்தன் முதலியவற்றை எடுத்துக் கூறினர்.

கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பென்றது வந்தார்க்குச் சோறு கடிதின் உதவுதற்பொருட்டு அடுப்புத்தொழிற்குரியரல்லாத வரிசை மகளி ரும் அடுப்புத் தொழிலிலே வழங்குகவென்றவாறு. இச் சிறப்பானே இச் செய்யுளுக்குக் கூந்நல்விறலியர் என்று பெயராயிற்று

ஐம்பால் (4) எனக் கூந்தல் முற் கூறப்பட்டமையால் கூந்தல் விறலி யர் என்றதை ஒரு பெயராக வுரைக்க. இனி, ஐம்பாற் (4) கூந்தல் (6) எனக் கூட்டி ஐந்து பகுதியையுடைய கூந்தல் என்றுரைப்பினு மமையும்.

பாணன் சேரலாதன்பாற் பெரும் பொருளைப் பரிசிலாகப் பெற்றனு தலின் சோற்றை அட்டும் திற்றியை எறிந்தும் புழுக்கை ஏற்றியும் வரு நர்க்குச் சோறிடுதலேயன்றி அவன்பால் நாம் பொருளாகப் பெற்றதும் கொடுமின் என்றான். பரிசிலர் தாம்பெற்ற பொருளைப் பிறர்க்கு ஈதல்,

> பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
> யோம்பா துண்டு கூம்பாது வீசி
> வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை" புற 47: 4—6.

என்பதனாலுமறிக. பிறர்கு வழங்கத்தக்க பெரும் பொருளைப் பாணர் முத லாயினர்க்கு அரசர் வழங்கினர் என்பது "வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி ... யாமவ ணின்று வருதும்" எனப் பெரும்பாணாற்றுப்படையில் (26—8) வருதலானுமறிக. முன்னே தந்தனன் என்றது பின்னும் பரி சிலர் விரும்பிய பொருளைச் சேரலாதன் தப்பாது வழங்குதலின் 'பின்னும் தப்பின்று' என்றான்.

> "முன்னே தந்தனெ னென்றது துன்னி
> வைகலுஞ் செலினும் பொய்யல னாகி
> யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்" புற 171: 3—5

என்றார் பிறரும். பின்னும் தப்பின்று என்றான் முன்னும் தப்பின்மை யான்.

8—12. மேகம் இவ்வுலகைப் புரக்குமாறு தோன்ற, 'மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட எழிலி' என்றார்.

"உலகம் புரக்கும் உருகெழு சிறப்பின்
வண்ணக் கருவிய வழங்கெழு கமஞ்சூல்" பதிற் 81: 1—2
"மாரியு முண்டீண் டுலக புரப்பதுவே" புற 107
"வானின் றுலகம் வழங்கி வருதலான்" குறள் 11

எனப் பிற சான்றோரும் கூறுதல் காண்க. மண்—அணு. ஞாலம் என்றது ஞாலத்துயிர்களை; ஆகுபெயர். புரவெதிர் கொண்ட என்றது தான் உணவாய் நின்றும், நல்ல உணவுகளை உளவாக்கியும் நீர் வேட்கையையும் பசியையும் நீக்கி உயிர்களைப் பாதுகாத்தலை ஏற்றுக்கொண்ட என்றவாறு. புரவு—புரத்தல். பாதுகாத்தல். எதிர்கொள்ளல்—ஏற்றுக்கொள்ளல்' "எஞ்சொல் எதிர் கொண்டு" (பு. வெ. மா 220) என்புழிப்போல. புரவெதிர் கொண்டவென இறந்தகாலத்தாற் கூறினர், 'மேல் தலைபாது மாறி' எனப் பெய்தலின்மை கூறுதலின். எழில்—மேகம். கார்கோண் முகந்த கமஞ்சூலெழிலியாதல் தோன்றத் 'தண்ணிய லெழிலி' யென்றார். இனிக் குழவியைப் பார்த்துறாஉந் தாய்போல் உலகத்தை மழைசுரந்து ஓம்பும் தண்ணளியுடைமைபற்றித் 'தண்ணியலெழிலி' என்றார் எனினுமாம். தலையாது—பெய்யாது. தலைதல்—பெய்தல். "மாரி தலையு மவன் மல்லல் வெற்பே" மலைபடு 233. மாறி-தவிர்ந்து எனினுமாம். புரவெதிர் கொண்ட மேகம், பெய்யாது தவிர்தலால் விளைவஃகிப் பசிநீடுதலால் உலகத்துயிர்கள் கலக்கமெய்துதலின் 'துளக்கி' என்றார்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி" குறள் 13.

என்றார் திருவள்ளுவரும். எழிலி பலயாண்டுகளாகப் பெய்யாதொழிதலின் 'யாண்டு பல துளக்கி' என்றார். நிலைபேறுடைய உயிர்களாயினும் மேலும் மாரி பொய்த்தலால் இறந்துபடுமாதலின் 'மன்னுயிரழிய மாரி பொய்க்குவதாயினும்' என்றார். மழை இன்மையால் உயிர்கள் அழிதல், "மன்னுயிர் மடிந்த மழைமா றமையத்து" (அக 31: 4) "கழிந்தது பொழிந்தென வான் கண் மாறினும்......எல்லா வுயிர்க்கு மில்லால் வாழ்க்கை" (புற 103: 1-3) "மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை" (மணி 7: 10) 'மழை வறந்துழி அதனால் வாழ்வார்போல இறந்துபடுதலே நமக்குள வென்பதாம்' (குறள் 1192 பரிமேல்) எனவருவனவற்றாலுமறிக. மாரி—மழை. பொய்த்தல்—பெய்யுங் காலத்துப் பெய்யாதொழிதல். "காலத்தினன் மழை மாறினும்" திருக்கோவை 27. பொய்க்குவதாயினும் என்ற உம்மை சேரலாதனின் செங்கோற் சிறப்பால் அவன் நாட்டில் மழை பொய்யாமை தோன்ற நின்றது. செங்கோன்மையால் மழை பொய்த்தலின்மை,

"வானம் பொழுதொடு சுரப்ப
பல்வே லிரும்பொறை நின்கோல் செம்மையின்" பதிற் 89: 1—9.
"கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே" புற 117: 6—7

என வருவனவற்றாலுமறிக. எழிலி பொய்த்தலின்றேவெனின் அருகி வரும்

வற்கட காலத்தன்றிப் பொய்த்தலின்று என்க. 'எழிலி பொய்க்குவதாயினும் சேரலாதன் பொய்யலன்' எனக் கொடையில் மாரியினும் சேரலாதனை உயர்த்திக் கூறியவாறு. "பாரி யொருவனு மல்லன், மாரியு முண்டீண்டுலகுபுரப் பதுவே'' (புற 107) எனப் பாரியை மாரியோடொப்பித்துக் கபிலர் கூறியிருத்தலும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. சேரலாதன் பரிசிலர் விரும்பிய பொருள்களைத் தப்பாது அளித்தலின், 'சேரலாதன் பொய்யலன் நசையே' என்றார்.

> ''வள்ளியை யென்றலிற் காண்குவந் திசினே
> உள்ளியது முடித்தி'' பதிற் 54: 1—2.
> 'வரைமருண் முகவைக்கு வந்தனென் பெரும'' புற 370: 21.

என வருவனவற்றாற் பரிசிலர் விரும்பிய பொருளைப் பெறுதற்கு அரசர்பாற் செல்லுதலும்,'' இரவலர்க் குள்ளிய நசைபிழைப் பறியாக், கழறொடி யதிகன் அக 162:17—8) "வைகலுஞ் செலினும் பொய்யல னாகி, யாமவேண்டி யாங்கெம் வருங்கல நிறைப்போன்" (புற 171: 4—5) என வருவனவற்றால் அரசர் பரிசிலர் விரும்பிய பொருளைப் பொய்யாது அளித்தலும்அறியப்படும். இதனாற் பின்னும் தப்பின்மைக்குக் காரணம் கூறினான்.

இதனாற் சொல்லியது அவன் கொடைச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## பழையவுரை

(2) திற்றி—இறைச்சி. வருநர்க்கு வரையாது (3) வழங்குக அடுப்பு (6) என முடிக்க; வரையாமல் எனத் திரித்து வரையாதொழியும்படியெனக் கொள்க. பொலங்கலந் தெளிர்ப்ப (3) என்பதனையும் வழங்குக (6) என்பதனோடு முடிக்க. 6. கூந்தல்விறலியர் வழங்குக அடுப்பென்றது வந்தார்க்குச் சோறு கடிதின் உதவுதற்பொருட்டு அடுப்புத்தொழிற்குரியரல்லாத வரிசை மகளிரும் அடுப்புத்தொழிலிலே வழங்குக வென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு, கூந்நல் விறலியர் என்று பெயராயிற்று. ஐம்பாற் (4)கூந்தல்(6)என மாறிக் கூட்டுக. இனி, மாறாது கூந்தல் விறலியரென்றதை ஒரு பெயராக உரைப்பினும் அமையும்

நீயிர் கள்ளினையுண்மின்; அதுவேயன்றி உண்டற்குச் சோற்றையடுமின்; அதுவேயன்றித் (1) தின்றற்குத் திற்றியை யறுமின்; அதுவேயன்றித் தின்றற்குப் புழுக்கப்படுமவற்றை அடுப்பிலே யேற்றுமின் (2); வருநர்க்கு வரையாதே கடிதின் உதவுதற்பொருட்டுக் (3) கூந்தல் விறலியர் அடுப்பிலே வழங்குக (6); இன்னும் வருநர்க்குச் சோறிடுதலே யன்றி அவன்பால் நாம் பொருளாகப் பெற்றது கொடுமின்: இவ்வாறு எல்லாங் கொடுத்தாலும் பின்னுக்குக் காரியத்திற் றப்பில்லை (7); இதற்கு யாது காரணமெனின், மன்னுயிரழிய (8) மாரிபொய்த்தாலும் (11) சேரலாதன் நசைபொய்யலன் (12) அதுகாரணமென வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் கொடைச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

2. திற்றி: ''அழித்தானாக் கொழுந்திற்றி'' மதுரைக் 211; ''விழவயர்ந் தன்ன கொழும்பல் திற்றி'' அக 113; 16.

3. **வருநர்க்கு வரையாது:** "வருநர்க்கு வரையா" "வருநர்க்கு வரையாது" **புற** 10: 8; 177: 17

**பொலங்கலந் தெளிர்ப்ப:** "ஒண்பொ னவிரிழை தெளிர்ப்ப" **மதுரைக்** 661; "பொலந் தொடி தெளிர்ப்ப" 'இலங்குவளை தெளிர்ப்ப" "தெரியிழை தெளிர்ப்ப" **ஐங்** 24; 197; 235; "சேயிழை தெளிர்ப்ப" "செறிதொடி தெளிர்ப்ப" "எல்வளை தெளிர்ப்ப" "இலங்குவளை தெளிர்ப்ப" **அக** 51: 12; 106: 8; 140: 6; 261: 5:

4. "ஒலிவருங் கூந்தல்" "ஒலிவருந் தாழிருங் கூந்தல்" **நற்** 6: 10; 295: 2; "வெறிகமழ் வணரைம்பால்" **கலி** 57: 1; "வணரொலி யைம்பாலார்" **இன்னா** 15; "வணரொலி யைம்பாலாய்" **கார்நாற்** 11.

5. **ஏந்துகோட்டல்குல்:** "பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்குல்" **நெடுநல்** 245; "ஏந்துகோட், டம்பூந் தொடலை யணித்தழை யல்குல்" **புற** 341: 1—2; "ஏந் தெழி லல்குலாய்" கார்நாற் 13.

5—6 **மடவரல் விறலியர்:** "மடவரல் வள்ளி" "முருகு 102; "மடவரன் மகளி ரொடு" பெரும்பாண் 387; "மடவரன் மகளிர்" **நெடுநல்** 39;

6. **கூந்தன் விறலியர்:** "கூந்தன் மகளிர்" நெடுநல் 53; நற் 145: 3; 'விரையொலி கூந்தனும் விறலியர்" புற 109: 16; "கூந்தன் மகளிர்" சீவக 2355.

4—6. "சுடர்நுதன் மடநோக்கின், வாணகை யிலங்கெயிற், றமிழ்துபொதி துவர்வா யசைநடை விறலியர்" "வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத் தோள், ஏந்தெழின் மழைக்கண் வனைந்துவர விளமுலைப், பூந்துகி லல்குற் றேம் பாய் கூந்தல், மின்னிழை விறலியர்" **பதிற்** 51: 19—21; 54: 3—6; "பாதிரி கமழு மோதி யொண்ணுதல், லின்னகை விறலி" "ஏந்துகோட் டல்குன், மடவர லுண்கண் வாணுதல் விறலி" புற 70: 14—5; 89: 1—2.

8. **மன்னுயிர்:** பதிற் 15: 35 அடிக்.

9 **மண்ணுடைஞாலம்:** பதிற் 15: 35 அடிக்

**புரவெதிர்தல்: பதிற்** 80: 10; **நற்** 237: 8; **புற** 54: 5; 175: 10; 199: 5;

9—10. "மன்னுயிர் புரைஇய வலனேர் பிரங்கும்..... மாமழை" பதிற் 24: 27–7; "வானத், துளிநோக்கி வாழுமுலகம்" நான்மணி 28

10, **தண்ணியலெழிலி:** "தண்ணியலெழிலி தாழ்ந்த பொழுதே" அக 175: 18.

எழிலி தலையாது மாறி: "பயங்கெழு மாமழை பெய்யாது மாறி" புற 266: 1

8—10. "மன்னுயி ரழிய யாண்டுபல மாறித், தண்ணிய லெழிலி தலையா தா யினும்" பதிற் 20: 24—5.

11. "கருவி வானம் பொய்யா தாயினும்"நற்365: 6.

---

## வளனறு பைதிரம்.

19. கொள்ளை வல்சிக் கவர்காற் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்துசுர னறுப்ப
ஒண்பொறிக் கழற்கான் மாறா வயவர்
திண்பிணி யெஃகம் புலியுறை கழிப்பச்
செங்கள விருப்பொடு கூல முற்றிய
உருவச் செந்தினை குருதியோடு தூஉய்
மண்ணுறு முரசங் கண்பெயர்த் தியவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோ ளோச்ச
வம்புகளை வறியாச் சுற்றமோ டம்புதெரிந்

தவ்வினை மேவலை யாகலின்
எல்லு நனியிருந் தெல்லிப் பெற்ற
அரிதுபெறு பாயற் சிறுமகி ழானும்
கனவினு ளுறையும் பெருஞ்சால் பொடுங்கிய
நாணுமலி யாக்கை வாணுத லரிவைக்
கியார்கொ லளியை
இனந்தோ டகல வூருட னெழுந்து
நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்துநீ
வாழ்த லீயா வளனறு பைதிரம்
அன்ன வாயின பழனந் தோறும்
அழன்மலி தாமரை யாம்பலொடு மலர்ந்து
நெல்லின் செறுவி னெய்தல் பூப்ப
அரிநர் கொய்வாண் மடங்க வறைநர்
தீம்பிழி யெந்திரம் பத்தல் வருந்த
இன்றோ வன்றோ தொன்றோர் காலை
நல்லம னழிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத் திரங்க
மாணா மாட்சிய மாண்டன பலவே.

துறை—பரிசிற்றுறைப் பாடாண்பாட்டு.
வண்ணம்—ஒழுகுவண்ணமும் சொற்சீர் வண்ணமும்.
தூக்கு—செந்தூக்கு.
பெயர்—வளனறு பைதிரம். (18)

ப—ரை: *1—10.* கொள்ளை வல்சி—கொள்ளைப் பொருளை உணவுடைய, கவர் கால் கூளியர்—செலவை விரும்பின காலையுடைய மறவர், கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரன் அறுப்ப—கற்களையுடைய நீண்டவழியை அகழ்ந்து வழியில் அருமையை நீக்க, ஒள் பொறி கழல் கால்—தாங்கள் செய்த அரிய போர்த்தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழல் அணிந்த காலினையுடைய, மாறு வயவர்—வீரத்தின் மாறுபடாத வயவர், திண்பிணி எஃகம் புலி உறை கழிப்ப—திண்ணிய பிணிப்பையுடைய எஃகினைப் புலித்தோலாற் செய்த உறை கழித்துப் போர்க்குரியவாம்படி பண்ண, செங்கள விருப்பொடு—குருதியாற் சிவக்கும் களத்தே செல்லும் விருப்பத்தோடு, கூலம் முற்றிய உருவம் செந்தினை—பலிக்குரிய பண்டமாக முற்றிய அழகிய சிவந்த தினையை, குருதியொடு தூஉய்—குருதியுடன் கலந்து தூவி, மண் உறு முரசம் கண்பெயர்த்து—மார்ச்சனை

பொருந்திய வீர முரசத்தைத இடத்தினின்றும் பெயர்த்து, இயவர் —முரசு முழக்கும் வீரர், கடிப்புடை வலத்தர் தொடி தோள் ஓச்ச —குறுந்தடியை வலப்பக்கத்திலுடையராய்த் தொடியணிந்த தோளால் அடிக்க, வம்பு களைவு அறியா சுற்றமொடு—கைச்சரடு களைதலையறியாத படைவீரரொடு, அம்பு தெரிந்து — அம்புகளை ஆராய்ந்து, அவ்வினை மேவலை—அப்போர்த் தொழிலை விரும்புதலை யுடையையா யிருந்தாய்

11—5. ஆகலின்—நீ வினையை மேவுகின்றபடியால், எல்லு நனி இருந்து—பகற்பொழுதின்கண்ணே நின்பிரிவை மிகவும் ஆற்றி யிருந்து, எல்லி பெற்ற—இரவின்கண்ணே பெற்ற, அரிது பெறு பாயல் சிறு மகிழானும்—அரிதிற் பெறுகின்ற உறக்கத்தின்கண் உண்டாகும் சிறு மகிழ்ச்சிக் காலத்தும், கனவினுள் உறையு—கனவினுள் தங்கி வருந்து, பெரு சால்பு ஒடுங்கிய—பெரிய அமைதித்தன்மை தங்கப்பெற்ற, நாணு மலி யாக்கை—நாணமமிகுந்த யாக்கையையுடைய, வாள் நுதல் அரிவைக்கு ஆளியை—ஒளிபொருந்திய நெற்றியையுடைய அரிவைக்கு அருளுடையையாகியநீ, யார் கொல்—என்ன உறவு உடையை.

16—27. பல—பலவாகிய, நீ வாழ்தல் ஈயா—நீ பண்டுபோலே குடியேறுகவென்று வாழ்வு கொடாத, வளன் அறு பைதிரம்—வளப்பம அற்ற பகைவர் நாடுகள், ஊர் உடன் எழுந்து இனம் தோடு அகல—ஊரிலுள்ளார் ஒருங்கு எழுந்து சுற்றமும் பசுமுதலிய தொகுதியும் விட்டு நீங்க, நாஞ்சில் கடிந்து நிலம் கண் வாட—உழுவாரின்மையின் கலப்பைகள வெறுக்கப்பட்டு நிலங்கள் வளப்பமின்றிப் பொலிவழிய, அன்னவாயினவை—அவ்வியல்பினையுடையவாயினவை, பழனம் தோறும்—நீர்நிலைச் செறுக்கள் தோறும், அழல் மலி தாமரை ஆம்பலொடு மலர்ந்து—நெருப்புப்போன்ற தாமரை ஆம்பலொடு மலர, நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப—நெல்லினையுடைய வயலில் நெய்தல்கள் மலர, அரிநர் கொய் வாள் மடங்க—நெல்லை அரிவாரது கொய்யும் அரிவாட்கள் நெற்றுளின் பருமையாலே தங்கள் வாய்மடிய, அறைநர் தீ பிழி எந்திரம்—கரும்பை வெட்டுவாரது இனிய சாற்றைப் பிழியும் எந்திரம், பத்தல் வருந்த—பலகாலுஞ் சாறேறுடிப் பத்தல் வருந்த, தொன்று ஓர் காலை நல்ல மன்—பண்டு ஒரு காலத்து நல்ல, இன்றே அன்று—இன்றைக்கு அன்ன தன்மையுடையவன்று, அளியதாம என சொல்லி—இரங்கத்தக்கனதாம் என்று சொல்லி, காணுநர் கை புடைத்து இரங்க

—காண்போர் கைகொட்டி இரங்க, மாட்சிய மாண மாண்டன— மாட்சியவாய் முன்பு கிடந்தன மாட்சிமைப்படாதனவாய் மாண்டன.

**முடிபு: நீ அவ்வினை மேவலையாயிருந்தாய்; நீ அவ்வினையை மேவு கின்றபடியால், எல்லு தனியிருந்து எல்லிப் பெற்ற சிறு மகிழ்ச்சிக் காலத்தும் கனவினுள் உறையும் நின்னரிவைக்கு நீ யார் கொல்; நீ அவள்பால் வாராமைக்குக் காரணம் யாது? நீ அழிக்க* என்று அழிந்த நாடுகள் அழிந்து அற்றால் வருவல் எனின், ஆம்; அழிக்க அழிந்து நீ பின் வாழ்தலியாத பைதிரம் காணுநர் கைபுடைத்திரங்க மாட்சிய மாண மாண்டன; அதனால் அது குறையன்று; நின் அன்பின்மையே குறை; இனி நீ அவள்பாற் கடிது எழுக என்க.**

(ஆ—ரை) 1—10. கூளியர் சுரனறுப்ப, வயவர் புலியுறை கழிப்ப, இயவர் தோளோச்ச நீ சுற்றமொடு அவ்வினை மேவலையாயிருந்தாய் என்க

கொள்ளை வல்சிக் கூளியர் எனவும், கவர்காற் கூளியர் எனவும் கூட்டுக. கொள்ளை வல்சிக் கூளியர் என்றது பகைப்புலத்துக் கொள்ளையாகப் பெற்ற பொருளை உணவாகவுடைய கூளியர் என்றவாறு.

> "சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
> கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
> கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
> கொள்பத மொழிய வீசிய புலனும்" புற 23: 4—7.

என வருதல் காண்க கொள்ளைப்பொருளை உணவாகக் கோடல், "கொண்டியுண்டித் தொண்டையோர் மருக" (பெரும்பாண் 454) என்பதனாலுமறிக. வல்சி—உணவு. "வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேளை வெந்தை வல்சி யாக" புற 246: 7—8. கொள்ளை வல்சிக் கூளியர் பகைப் புலத்தைக் கொள்ளை கொள்ளும் விருப்பால் விரைந்து சேறல் பற்றிக் 'கவர்காற் கூளியர்' என்றார். இனித் தானை செல்லுதற்கு வழியமைக்க வேண்டி விரைந்து சேறல் பற்றிக் 'கவர்காற் கூளியர்' என்றார் எனினுமாம். கூளியரின் விரைந்து செல்லும் விருப்பை அவர் காலின்மேலேற்றிக் 'கவர்கால்' என்றார். கவர்—விருப்பு. "கவர்விருப்பாகும்" என்பது தொல்காப்பியம் (உரி 66) கவர்கால்—பகுத்து விரையும் கால் எனினுமாம் கூளியர்—மறவர். "குறவரும் மறவரும் கூளியராகும்" என்பது பிங்கலந்தை. அரசன் பணித்தவாறு ஏவல் செய்யும் கூளிப்படை மறவராதலின் கூளியர் என்றார். முருகப் பெருமானின் ஏவலாளரை "வேறுபல் லுருவிற் குறும் பல் கூளியர்" (முருகு 282) என நக்கீரனார் கூறியிருத்தலும், 'கூளியர்—சேவித்து நிற்போர்' என நச்சினார்க்கினியர் உரை எழுதியிருத்தலும் ஈண்டைக்கேற்ப அறிக.

சேரலாதன் பகைபுலத்துக்குச் செல்லும் நெடுவழி மலைகளையுடைய அருவழியாயிருத்தலின், படையிலுள்ள தேர் முதலியன இனிது சேறற் பொருட்டு மலையிடத்துக் கல்லைப்போழ்ந்து வழியில் அருமையை நீக்கு

*'என்று—எற்றுக்கொண்டு அக 168: 6 உரை. 'எதிர் நின்று' முருகு 55 நச்.

தலைக் "கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப" என்றார். "அடுக்கன் மீமிசை... இடிச்சுர நிவப்பின் இயவு" (மலைபடு 19—20) எனப் பிறாண்டும் வருதல் காண்க. மோரியர் பகைவரொடு பொரக்கருதித் தென்னாடு போந்த காலை அவர் தேருருள் செல்லுமாறு குறுக்காக நின்ற மலையைப் போழ்ந்து வழி செய்தமை, "மோரியர், பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த அறை" (அகந 69) "மோரியர், திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த, உலக விடைகழி யறை" (புறம் 175) என வருவனவற்றால் அறியப்படும். கல்—மலை. சுரன்—வழியிலருமை. அறுப்ப—நீக்க.

கழல் என்பது வீரத்துக்கும் கொடைக்கும் அடையாளமாக ஆடவர்களால் அணியப்படும் காலணி. "விழைவுறு தியாகத்து வீரத்து வீக்கிய, கழலே யாடவர் கான்மிசை யணிவடம்" எனத் திவாகரத்தும், "ஆடவர் கொடை வீரத்தா லணிவது கழலென்றாமே" எனச் சூடாமணியினும் வருவன காண்க. ஈண்டுக் கழல் என்றது வீரக் கழலை. "வீரவார் கழல்" (வில்லி பதின்மூன்றாம் 20) என வருதல் காண்க. ஒண்பொறிக் கழற்கால் என்பதற்குப் பொன்னாற் செய்யப்பட்டமையால் ஒள்ளிய விளக்கத்தையுடைய கழலை அணிந்தகால் என்றுரைப்பினும் அமையும். பொறி—விளக்கம். சீவக 44 உரை. மாறுவயவர்—போரிலே பிறக்கடியிடாமையும் தம்மொடு வீரமொத்தாரோடன்றிப் பிறரொடு படையெடாமையும் அடி பிறக்கிட்டோனையும் படையிழந்தோனையும் கொல்லாமையும் முதலாகிய வீரத்தின் மாறுபடாத இயல்புகளையுடைய வீரர்.

"அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு" மதுரைக் 37—8,

"அம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
யன்னோர்" பதிற் 42: 4—7.

எனப் பிறாண்டும் வருவன காண்க.

ஈண்டு எஃகம் என்பது வேல் வாள் என்னும் ஆயுதங்களின் பொதுப் பெயராக நின்றது. "வைநுதி மழுகிய புலவுவா யெஃகம்" (பெரும்பாண் 119) என்புழி வேலையும், "எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண் கூர்ந்து" (முல்லை 68) என்புழி வாளையும் எஃகம் என்பது உணர்த்திவரல் அவற்றினுரைகளானும் அறியப்படும். வேலுக்குத் திண்பிணி குழைச்சினுள் இறுகச் செறிந்திருத்தலாகவும், வாளுக்குத் திண்பிணி பிடியுடன் இறுகச் செறிந்திருத்தலாகவும் கொள்க. "காழ் மண்டெஃகம்" (மதுரைக் 739) எனவும் "திண்பிடி யொள்வாள்" (முல்லை 46) எனவும் வருவன காண்க. போரிற் கலங்கித் தந்நிலையிற் றிரியாத ஆயுதமென்பார், 'திண்பிணியெஃகம்' என்றார்.

"வேலே, குறும்படைந்த வரண்கடந்தவர்
நறுங்கள்ளி னூடுனைத்தலிற்
சுரைதழீஇய விருங்காழொடு
மடை கலங்கி நிலைகலங் கினவே" புறம் 97: 4—7.

என்பதனுற் போரில் வேல்நிலை கலங்குதலறிக. வேல் வாள் என்னும் போர்க் கருவிகளைப் புலித்தோலாற் செய்த உறையில் இட்டு வைத்தமையால், 'எஃகம் புலியுறை கழிப்ப' என்ருர். உறை கழிப்ப வென்றது எஃகினை உறைகழித்துப் போர்க்குரியவாம்படி பண்ண என்றவாறு. எஃகம் புலியுறை கழிப்ப என்ருராயினும் ஏனைக் கருவிகளையும் போர்க்குரியவாம்படி சித்தஞ் செய்தல் கொள்க.

செங்கள விருப்பொடு செந்தினையைக் குருதியொடு தூஉய் முரசங் கண்பெயர்த்து இயவர் தோளோச்ச வென்க. செங்களம்—போரிற்படும் மாவினதும் மாக்களினதும் உடல்களினின்றும் பெருகுங் குருதியாற் சிவக்குங் களம். "குருதிச் செங்களம்" (அக 268: 3) என்ருர் பிறரும். "வியன்களத்து .....அந்தி மாலை விசும்புகண் டன்ன, செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்து" (பதிற் 35: 4—8) என்பதும் ஈண்டைக்கேற்ப அறிக. செங்கள விருப்பொடு ஓச்ச என முடிக்க. கூலமுற்றிய வென்பதற்கு பலிக்குரிய மற்றைப் பண்டங்கள் குறைவறக் கூடின வெனினுமாம். கூலம்—பண்டங்கள். செந்தினையைக் குருதியொடு தூவியது முரசுறை கடவுளுக்குப் பலியாக வென்க. கடவுளைச் செந்தினையும் குருதியுங்கொண்டு பூசிக்கும் வழக்கம்,

"குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்" முருகு 42—4
"உருவச் செந்தினை குருதியொடு தூஉய்" அக 22—10.

என வருவனவற்ருலு மறியப்படும். குருதிவேட்கை முரசினைப் பூசித்தற்குக் குருதி சிறந்தமை பற்றிக் குருதியொடு என ஒடுக்கொடுத் தோதினர். குருதியென்றது யாட்டின் குருதியை. அது,

"மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலி செய்து" முருகு 232 4.
"மறியருந்துந் திண்பிணி முரசம்" பு வெ. மா. 98

என வருவனவற்ருலுமறியப்படும். இன்னொலியாக இமிழ்தற்பொருட்டு மார்ச்சனை அமைக்கப்பெற்ற முரசாதலின் 'மண்ணுறு முரசம்' என்ருர். 'மண்—மார்ச்சனை' சீவக 628 நச். கொற்ற முரசினைப் பலியிடுதற்கு வைக்கப்பட்ட இடத்தினின்றும் பெயர்த்தலைக் கண்பெயர்த்து என்ருர். கண்—இடம். கடிப்பை வலக்கையிற் கொண்டு முரசை ஓச்சுதலின், 'கடிப்புடை வலத்தர் தோளோச்ச' என்ருர்.

"பழக்க நாள்வரு மேருவை யுள்ளுறத் தொளைத்தொரு பணைய·க்கி
வழக்கி னூழல களந்தவ னமைத்ததோர் வான்குணில் வலத்தேந்தி
முழக்கினுலை" — கம்ப. கும்ப 347.

எனக் கம்பர் கூறுதல் காண்க. இயவர் தொடியணிந்த தோளினராகலின் 'தொடித்தோளோச்ச' என்ருர். "கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோளியவர்" (பதிற் 17. 8) என வந்தமை காண்க. தொடி—தோள்வளை. ஈண்டுத் தோள் என்றது கையை. "தாளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்ரு

னைத் தோளிற் றிருகுவான் போன்ம்" (கலி 101: 31—2) என்புழிப் போல. ஓச்ச— அடிக்க.

வம்பு களைவறியாச் சுற்றம் என்றது போர் வேட்கையான் எப்பொழுதும் கையினின்றும் வம்பைக் களைதலறியாத படைச்சுற்றம் என்றவாறு. வம்பு—கைச்சரடு இது கைக்கு அணியும் தோலாலாகிய கவசம். சுற்றமொடு அம்பு தெரிந்து அவ்வினை மேவலையாகலின் எனக் கூட்டி அம்பு தெரிதலும் வினைமேவுதலும் சுற்றத்தினதும் அரசனினதும் தொழில்களாகக் கொள்க. இனிச் சுற்றமொடு வினைமேவலையாகலின் எனக் கூட்டி அம்பு தெரிதலை அரசன் தொழிலாக வுரைத்தலுமொன்று. அம்புகளை ஆராய்ந்து நல்லனவற்றைக் கைக்கொள்ளுதலை, 'அம்பு தெரிந்து' என்றார். "நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப், புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே" (கலி 7: 9—10) "அடுசிலை யழல வேந்தி யாருயிர் பருகற் கொத்த, விடுகணை தெரிந்து" (சீவக 1086) எனப் பிறண்டும் வருவன காண்க.

சுரனறுப்ப (2) புலியுறை கழிப்பத் (4) தோளோச்ச (8) அவ்வினை மேவலை (10) என முடிக்க.

11—15. நீ வினையை மேவுகின்றபடியால் பகலெல்லாம் மிகவும் ஆற்றியிருந்து இராக்காலத்தே பெற்ற சிறுமகிழ்ச்சிக் காலத்தும் கனவினுள் உறையும் நின் அரிவைக்கு நீ யார்கொல் என்க.

பிரிவுத்துயர் ஆற்றுதற்கரிதாகவும் பகற்பொழுதின்கண் மிகவும் ஆற்றியிருத்தலின் 'எல்லுநனியிருந்து' என்றார். எல்லு—பகற் பொழுது. நனி என்றது ஆற்றுதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் மிகுதியைக் குறித்து நின்றது. ஈண்டு இருத்தல் என்றது தலைவன் பிரிந்துழித் தலைவி ஆற்றியிருத்தலை. 'பிரிந்துழித் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகலின் இருத்தலை அதன்பிற் கூறி' எனத் தொல்காப்பிய வுரையில் (அகத் சூத் 14 உரை) நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. எல்லிப் பெற்ற (11) மகிழ் (12) என முடிக்க. எல்லி—இராப் பொழுது. "எல்லிப்பொழுது வழங்காமை முன்னினிதே" இனியவை 35. அரிது பெறு பாயல் என்றது இராப்பொழுதின் கண்ணே நெடுக வருந்தியிருந்து பின் அரிதாகப்பெற்ற உறக்கம் என்றவாறு.

"இரும்பல் கூந்தற் சேயிழை மடந்தை
கனையிருள் நடுநாள் அணையொடு பொருந்தி
வெய்துற்றுப் புலக்கும் நெஞ்சமொ டைதுயிரா
ஆயிதழ் மழைக்கண் மல்கநோய் கூர்ந்து
பெருந்தோள் நனைக்குங் கவிழ்ந்துவார் அரிப்பனி
மெல்விரல் உகிரிற் றெறியினள்
... ... ... ... ... ... ...
துயில்துறந் தனள்கொல் அளியள் தானே. அக 373: 10—19.

எனப் பிரிந்த தலைவி துயிலின்றி வருந்தல் கூறப்பட்டிருத்தல் காண்க. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணசையாற் பொருதற்குச் சென்றானாக, அவன் பெருந்தேவி கூதிர்ப்பாசறையின்கண் துயிலின்றிப் புலம்பொடு வதிந்தமையை,

'செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி

யின்னே வருகுவர் இன்றுணை யோரென
வுகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து
...... ...... ......
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
வுரோகிணி நினைவன ணோக்கிநெடி துயிரா
மாயிதழ் மேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச்சில தெறியா
புலம்பொடு வதியும் நலங்கிள ரரிவை'' நெடுநல் 153—163.

என நக்கீரனர் விரித்துரைத்திருத்தல் ஈண்டு அறியற்பாலது.

ஈண்டுப் பாயல் என்றது உறக்கத்தை. "எமக்குமெங் கண்பாயல் கொண்டு" (கலி 145: 23—4) என்புழிப்போல சிறிதுகால உறக்கத்தில் துனி மறத்தலின் அதுவே 'சிறுமகிழ்' எனப்பட்டது துயிலுங்காலத்து உணர்வின்மையின் அக்காலத்து வருத்தமின்ருயிற்று "தொழுதெழுவார் வினைவள நீறெழ நீறணி யம்பலவன்'' என்னும் திருச்சிற்றம்பலக்கோவையார் உரையில் 'தொழுதெழுவார் என்றது துயிலெழுங்காலத்தல்லது முன்னுணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு' எனப் பேராசிரியர் உரைத்திருத்தல் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. சிறுமகிழ் என்புழிச் சிறுமை காலத்தின் மேற்று. உம்மை, எச்சவும்மை. சிறுமகிழ்ச்சிக் காலத்தும் பெருந்தேவி நினைவு மிகுதியால் [s] தன் தலைவனைக் கனவிற் கண்டு வருந்துதலின் 'கனவினுள் உறையும்' என்ருர்.

"நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது'' குறள் 1217.

என்ருர் திருவள்ளுவரும். பெருந்தேவி தன் ஆற்ருமையைப் பெருஞ்சால்பினலும் நாணினலும் வெளியிட்டுரையாது வருந்துதலின் "பெருஞ்சால் பொடுங்கிய நாணுமலியாக்கை யரிவை" என்ருர்

"உட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான கடவலின்'' குறிஞ்சி 11—2

'என்று ணினைந்தா ளிதுபோலுமிவ் வேட்கை வண்ணஞ்
சென்றே படினுஞ் சிறந்தார்க்கு முரைக்க லாவ
தன்று யரிதா யகத்தே சுட்டிருக்கும் செந்தீ
யொன்றே யுலகத் துறுநோய் மருந்தில்ல தென்ருள்'' சீவக 1932.

என வருவன காண்க.

கற்பும் நிறையும் பொறையும் முதலாகிய சிறந்த குணங்களின் அமைதி தங்கப்பெற்ற அரிவையாதலின் 'பெருஞ்சால்பொடுங்கிய அரிவை' என்ருர். சால்பு—தத்தங் குலத்துக்கேற்ற குணங்களின் அமைதி. குறிஞ்சி 15 நச். ஒடுங்குதல—தங்குதல். "இடங்கர் ஒடுங்கி'' மலைபடு 211. நாணு—நாணம். அது காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ளவொடுக்கம்' என்பர் நச்சினர்க்கினியர். (தொல் களவு சூத் 8 உரை). 'பெண்டிர்க்கு இயல்பாகவே உள்ளதொரு தன்மை' என்பர் நக்கீரனர். (இறை சூத் 2 உரை) இது மனத்தின் பண்பாதல், "கன்னிமனஞ் சூழ்கிடந்த நாணென்னுங் கடியரணம்'' (நைட. அன். தூது 97) என்பதனலறியப்படும். இக்

s. 'அரிதினில் துயிலெய்திய வழித் தலைமகனைக் கனவிற் கண்டு' தொல் மெய்ப் 22 நச்

குணம் யாக்கைமூலம் வெளிப்பட்டுத் தோன்றலின் 'நாணுமலி யாக்கை' என்றார் "பெருநா ணணிந்த சிறுமென் சாயன், மாணலம்" (அக 120: 7-8) "தெரிவையர்க்கு, மெய்நாண் உயிரினு மிக்கதொன்றால்" (நற்றிணை 31) எனப் பிறண்டும் வருவன காண்க. யாக்கையையுடைய அரிவை என்க. சேரன், பெருந்தேவியின் அழகை நினைந்து அவள்பாற் கடிதின் எழவேண்டி, அவள் அழகை நுதன்மேலிட்டு 'வாணுதலரிவை' என்றார். ஈண்டு அரிவை என்பது பருவங்குறியாது பெண் என்னுந் துணையாய் நின்றது. "புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்கு" (நெடுநல் 166) என்புழிப்போல. அளி-அருள். யார்கொல் என்றது கனவினுள் உறையும் அரிவையின் பிரிவாற்றாமையை நீக்க முயலாது யாதோர் இயைபும் இல்லாதவன் போல் போர் வினையை மேவி நீட்டித்தாய் என்ற குறிப்பிற்று. யார் என்னும் வினைக் குறிப்பு ஈண்டு முன்னிலைக்கண் வந்தது.

16—27. 'பலவாகிய நீ வாழ்தலீயா வளனறு பைதிரம் ஊருடனெழுந்து இனந்தோடகல, நாஞ்சில் கடிந்து நிலங்கண் வாட, அன்னவாயினவை, பழனந்தோறும் தாமரை ஆம்பலொடு மலர, நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப, அரிநர் கொய்வாண் மடங்க, அறைநர் எந்திரம் பத்தல் வருந்தத் தொன்றோர்காலை நல்லமன்; இன்றோ அன்று; அளியதாம்' எனச் சொல்லிக் காணுநர் கைபுடைத்திரங்க மாட்சிய மாணு மாண்டன என்க.

பல (27) பைதிரம் (8) எனக் கூட்டுக. ஊருடனெழுந்து இனந்தோடகல (16) எனவும், நாஞ்சில் கடிந்து நிலங்கண் வாட (17) எனவும் கூட்டுக. சேரலாதனின் போர்வினைக்கு அஞ்சிப் பகைவரது ஊரிலுள்ள குடிமக்கள் ஒருங்கு எழுந்து அகல அவர்களால் ஓம்பப்பட்ட சுற்றமும் பசு முதலியவற்றின் தொகுதியும் ஊரைவிட்டு அகலுதலின் 'இனந்தோடகல ஊருடனெழுந்து' என்றார். ஊர்—குடிமக்களுக்கு ஆகுபெயர். பகைதலை வந்தெனக் குடிமக்கள் ஊரைவிட்டு நீங்கல்,

> "பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென
> அதுகை விட் டகன்றொரீஇக் காக்கிறபான் குடைநீழற்
> பதிபடர்ந் திறைகொள்ளும் குடிபோல்" கலி 78: 4—6.
>
> "ஊரெழுந் துலறிய பீரெழு முதுபாழ்" அக 167: 10.

என வருவனவற்றாலுமறியப்படும். உடன்—ஒருங்கு. ஊரெழுந்து என்னும் முதல் வினையை வழுவமைதியால் இனந்தோடகலவென்னும் அதன் சினைவினையொடு முடிக்க ஊர் உடனெழுதலால் நாட்டில் மக்களின்மையிற் கலப்பைகள் கடியப்பட்டு நிலம் பயிர்செய்யப்படுதலின்றாய்ப் பொலிவின்றிக் கிடத்தலின் 'நாஞ்சில் கடிந்து நிலங்கண் வாட' என்றார். நாஞ்சில்—கலப்பை. "அறனுழு நாஞ்சில்" கலி 8: 12. கடந்து என்பது கடியப்பட்டு எனச் செயப்பாட்டுப் பொருள்பட நின்றது கடிதல்—வெறுத்தல். ஈண்டு விரும்பி ஓம்பப்பட்ட கலப்பைகள் தேடுவாரற்றுப் பயனின்றிக் கிடத்தலை. கண்—இடம்.

நீ வாழ்தலீயாவென்றது நீ பண்டுபோலே குடியேறுகவென்று வாழ்வு கொடாதவென்றவாறு. 'வாழ்தலீயா' என்ற அடைச்சிறப்பான் இச்செய்யுளுக்கு வளனறு பைதிரம் என்று பெயராயிற்று.

பைதிரம்—நாடு. "பைதிரம் மண்டிலம் பாடி தேயம்.....நாடென்ப" என்பது பிங்கலந்தை. இடையறவு படாது பிதிர் வழியாற் பகைவர்க்கு வந்த நாட்டைச் சேரலாதன் வென்று தன்னடிப் படுத்தியமையால் 'வாழ்தலீயாப் பைதிரம்' என்றூர். சேரலாதன் அழிக்க அழிந்து தம் வளப்பமெல்லாம் நீங்கிய நாடுகளாதலின் 'வளனறு பைதிரம்' என்றூர். அன்ன என்னுஞ் சுட்டு இனந்தோடகலல் நிலங்கண் வாடல் என்பவற்றைக் குறித்தது. பைதிரம் (18) தோடு அகலக் (16) கண்வாட (17) அன்னவாயின என முடிக்க. ஈண்டு ஆயின வென்பது வினையாலணையும் பெயர்.

இனி, 'இனம் தோடு அகல ஊர் உடன்எழுந்து—சுற்றமும் பசு முதலிய தொகுதியும் விட்டு நீங்க ஊரிலுள்ளார் ஒருங்கு எழுந்து, நிலம் கண் வாட நாஞ்சில் கடிந்து—நிலம் வளப்பமின்மையாற் பொலிவழியும்படி கலப்பையால் உழுதல் நீங்கி; எழுந்து, கடிந்து வளனறு பைதிரம் என்க. ஊரும் நிலமும் பைதிரத்தின் பகுதிகளாதலின் சினைவினை முதல்வினையொடு முடிந்தது. அன்ன என்னுஞ் சுட்டு, எழுதல் கடிதல் வளனறுதல் என்பவற்றைக் குறித்தது' என உரைப்பினும் அமையும்.

பழனம்—நீர்நிலைச் செறு சிலப் 10: 113 உரை. பழனத்தில் வளர்தலும் காலையில் மலர்தலுமாகிய ஒற்றுமைபற்றித் தாமரை ஆம்பலொடு மலர்ந்து என்றூர்.

> 'களனி விடியற் கணைக்கா லாம்பல்
> தாமரை போல மலரு மூர'' ஐங் 62.

என வருதல் காண்க மலர்ந்த செந்தாமரை மலர்கள் அழல்போற் றோன்றலின் "அழன்மலி தாமரை" என்றூர். "எரியகைந் தன்ன தாமரை" (அக 106: 1) "எரிமருள் தாமரைப் பெருமலர்" (புற 364. 3) என வருவன காண்க. மலி, உவமவுருபு. ஆம்பல்—கருங்குவளை மலர். ஆம்பலிற் செவ்வாம்பலு முண்மையின் 'அழன்மலி' என்றதனை ஆம்பலொடு கூட்டி 'நெருப்புப்போலும் செவ்வாம்பல் மலர்கள்' என்றுரைப்பினும் அமையும். "பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயின், ஆம்பலஞ் செறுவில்" (ஐங் 57) எனவும்,

> "அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
> வெள்ளந் தீப்பட்ட தெனவெரீஇ—புள்ளினந்தம்
> கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை யுடைத்தரோ
> நச்சிலைவேற் கைக்கோதை நாடு" முத்.

எனவும் வருவன காண்க. ஒடு—எண்ணொடு. மலர்ந்து என்பதனை மலரவெனத் திரிக்க. இனித் திரியாதே மலர்ந்து—மலரப்பெற்று என உரைப்பினுமமையும். நெல்லின் செறுவில் நீர் இடையறாது நிற்றலின் அந் நீரால் நெய்தல் வளர்ந்து பூப்பதாயிற்று.

> 'வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
> அரியலங் கழனி' நற் 190: 5—6.
> "தண்ணறு நெய்தற் றளையவிழ் வான்பூ
> வெண்ணெ லரிநர் மாற்றின ரறுக்கும்" ஐங் 190: 1—2

எனப் பிறரும் வருவன காண்க. இதனால் நாட்டின் நீர்வளம் இனிது அறியப்படும்.

அரிநர் என்றது நெல்லரிவாரை. கொய்வாள்—நெல்லின் தாளைக் கொய்யும் அரிவாள் "நெல்லரி தொழுவர் கூர்வாள்" (நற் 195: 6) என்றார் பிறரும். நெற்றாளின் பருமையாலே கொய்யும் அரிவாட்கள் தங்கள் வாய் மடிந்தன. நெற்றாள் மூங்கில்போலும் பருமையுடைத்தாதல் "முடந்தை நெல்லின் கழையமல் கழனி" (பதிற் 32: 13) என வருதலானுமறிக. அறைநர் என்றது கரும்பறுப்பாரை. நெல் அரியப்படுதலும், கரும்பு அறுக்கப் படுதலுமுடைமையால் அவற்றைச் செய்வாரை 'அரிநர்' 'அறைநர்' என்றார்.

"அறைக் கரும்பி னரி நெல்லின்" பொருந 193—4.

"அரிநர், கீழ்மடைக் கொண்ட வாளையும் ....
அறைநர், கரும்பிற் கொண்டதேனும்" புற 42: 1.

என வருவன காண்க. எந்திரம் என்றது கரும்பின் தீஞ்சாற்றை பிழியும் ஆலையை. "எந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை, விசய மடூஉம புகைசூழாலை தொறுங், கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்" (பெரும் பாண் 260—2) "கழைக்கரும் பெறிந்து கண்ணுடைக்கு மெந்திரம்" (சீவக 1614) என வருவன காண்க. எந்திரம் வருந்தலாவது கரும்பின் மிகுதியால் இடையறாது சாற்றைப் பிழிதல். பத்தல் என்றது கரும்பின் சாறு விழும் கூனை.

"கிருதர் எந்திரத்திடு கரும்பாமென நெரிவார்
குருதி சாறெனப் பாய்வது குரைகடற் கூனில்" கம்ப கிங் 40.

"குழுவு மீன்வளர் குட்டமெனக் கொளா
வெழுவு பாட லிமிழ்கருப் பேந்திரத்
தொழுகு சாறகன் கூனையி னாழ்முறை
முழுகி நீர்க்கருங் காக்கை மூளைக்குமே" கம்ப. ஆறுசெல் 49.

என வருவன காண்க. பத்தல் வருந்தலாவது பலகாலும் கரும்பின் சாறு ஓடிக் கூன் இசிவடைதல். 'எந்திரமென்னும் முதலெழுவாயை வழுவமைதியாற் பத்தல் வருந்தவென்னும் அதன் சினைவினையொடு முடிக்க' என்பர் பழையவுரைகாரர்.

அன்னவாயினவை, தாமரை மலர (20) நெய்தல் பூப்ப, (21) வாள் மடங்கப் (22) பத்தல் வருந்த (23) தொன்றோர் காலை (24) நல்ல (25) என முடிக்க. நல்லவென்பது குறிப்பு வினைமுற்று. மன் கழிவிரக்கப் பொருளில் வந்தது. இப்பகுதியால் பகைவர் நாட்டின் வளமிகுதியைக் கூறினார்.

பண்டு நல்லனவாகிய இயல்புகளையுடைய பைதிரங்கள் சேரனால் அழிக்கப்பட்டு அவ்வியல்புகள் எல்லாம் நீங்கப்பெற்றமையின் 'இன்றோ அன்று' என்றும், அவை காண்பார் இரங்கத்தக்க நிலையில் உள்ளன வென்பார் 'அளியதாம்' என்றும் கூறினார். இன்றோ என்புழி ஓகாரம் வினா; அன்று அளியதாம் என்பது அதற்கு விடை. அன்றோ, ஓகாரம் அசை நிலை. அன்று—அன்னதன்மையுடையதன்று. காணுநர் கைபுடைத்திரங்கல் இரக்கமிகுதியால்.

"வலமின் றம்ம காலையது பண்பெனக்
கண்பனி மலிர்நிறை தாங்கிக் கைபுடையூஉ
மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூர" பதிற் 26: 7—9.

என வருதல் காண்க.

மாணா மாண்டனவற்றை மாட்சியவென்றது பண்டு அழகிய ஊரும் வயலுமாய்த் தோன்றிக் கிடந்த பண்புபற்றியெனக் கொள்க. அன்னவாயின (19) மாணாமாண்டன (27) என்றது ஊருடனெழுதல் முதலாய தன்மையுடையவாயினவை மாட்சிமைப்படத் திருத்தினும் திருந்தா நிலைமையவாய் ஊரும் வயலும் தெரியாதபடி உருவம் மாய்ந்தன என்றவாறு. "ஊரறியலாகா கிடந்தனவே—போரின், முகையவிழ் தார்க்கோதை முசிறியார் கோமான், நகையிலைவேல் காய்த்தினுர் நாடு" என முத்தொள்ளாயிரத்தும் வருதல் காண்க. இனி, மாண்டன பல (27) அளியதாம் எனச் சொல்லிக் (25) காணுநர் கைபுடைத்திரங்க (26) மாணா மாண்டன (27) என மாறிக் கூட்டி, மாட்சிமைப்பட்டனவாகிய அப்பைதிரங்கள் பலவும் காணுநர் அளியதாம் எனச் சொல்லிக் கைபுடைத்திரங்க மாட்சிமைப்படாத தன்மையுடையவாயின என உரைப்பினும் அமையும்.

இதனாற் சொல்லியது அவன் வெற்றிச் சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

பாணன் பாசறைக்கண் வந்து தேவியின் ஆற்றாமை கூறி, இனி அவள் பாற் I போகவேண்டுமென்று இரந்தமையாற் பரிசிற்றுறையாயிற்று.

'அவ்வினை மேவலை யாகலின்' (10) எனவும், 'யார்கொலளியை' (15) எனவும் சொற்சீர் வந்தமையாற் சொற்சீர் வண்ணமும் ஆயிற்று.

## பழையவுரை.

1. கவர்கால்—செலவை விரும்பின கால். 2. சுரன்—வழியில் அருமை. 4. எஃகம் புலியுறை கழிப்பவென்றது எஃகினைப் புலியுறை கழித்துக் கடைவன கடைந்தும் அல்லன வாய்கீறியும் போர்க்குரிய வாம்படி பண்ணவென்றவாறு. 5. கூலம் முற்றியவென்றது பண்டமாக முற்றியவென்றவாறு; இனிப் பலிக்குரிய மற்றைப் பண்டங்கள் குறைவறக் கூடினவென்பாரும் உளர். 9. வம்பு—கைச்சரடு. சுரனறுப்ப (2) புலியுறை கழிப்பத் (4) தோளோச்ச (8) அவ்வினை மேவலை (10) என முடிக்க. 11. எல்லு நனியிருந்தென்றது பகற்பொழுதின்கண்ணே ஒரு விநோதமும் இன்றி நெடுக வருந்தியிருந்தென்றவாறு. பெற்ற (11) மகிழ் (12)என முடிக்க. அரிது பெறுதலைப் பாயன்

---

I போகவேண்டுமென்று இரத்தலும் பரிசிலாதல்,

'அரிமதர் மழைக்க ணம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தன்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல வின்று பெயரி
னதுமன் எம் பரிசில் ஆவியர் கோவே" புற 147.

என வையாவிக் கோப்பெரும்பேகனைப் பெருங்குன்றூர்கிழார் பாடியவாற்றானுமறியப்படும்.

மேல் ஏற்றுக. ஈண்டுப் பாயல், உறக்கம். ஊருடனெழுந்து இனந்தோடகல் (16) எனவும், நாஞ்சில் கடிந்து நிலங்கண்வாட (17) எனவும் கூட்டுக. ஊரெழுந்தென்னும் முதல் வினையை வழுவமைதியால் இனந்தோடகல வென்னும் அதன் சினைவினையொடு முடிக்க. தோடகலக் (16) கண்வாட (17) அன்னவாயின (19) என முடிக்க. ஈண்டு ஆயினவென்பது தொழிற் பெயர். 17-8 நீ வாழ்தலீயாவென்றது நீ பண்டுபோலே குடியேறுகவென்று வாழ்வுகொடாத வென்றவாறு. 'வாழ்தலீயா' என்ற அடைச்சிறப்பான் இதற்கு 'வளனறு பைதிரம்' என்று பெயராயிற்று. .20. தாமரை மலர வெனத் திரிக்க. 22. கொய்வாள் மடங்கவென்றது நெற்றாளின் பருமை யாலே கொய்யும் அரிவாட்கள் தங்கள் வாய் மடியவென்றவாறு. 23. எந்திர மென்றது ஆலையை. எந்திரமென்னும் முதலெழுவாயை வழுவமைதியாற் பத்தல் வருந்த வென்னும் அதன் சினை வினையொடு முடிக்க. பத்தல் வருந்த லாவது பலகாலும் சாறேடி நனைந்து சாதல். தாமரை மலர (20) நெய்தல் பூப்ப (21) வாள் மடங்கப் (22) பத்தல் வருந்த (23) நல்ல (25) என முடிக்க. (27) மாணுமாட்சிய மாண்டன வென்றது மாட்சிமைப்படத் திருத்தினும் மாட்சிமைப்படாத அழகையுடையவாய்ப் பின்னைத் திருந்தாதவளவே யன்றி உரு மாய்ந்தனவென்றவாறு. மாணுதவற்றை மாட்சிய வென்றது பண்டு அழகிய ஊரும் வயலுமாய்த் தோன்றிக்கிடந்த பண்புபற்றி யெனக் கொள்க. மாட்சிய வென்பது வினையெச்ச முற்று. இனி மாணுமாட்சிய வென்பதற்கு மாணுமைக்குக் காரணமாகிய பெருக்கு முதலாயவற்றின் மாட்சியவென்பாருமுளர். பலவாகிய (27) நீ (17) வாழ்தலீயா வளனறு பைதிரம் (18) ஊருடனெழுந்து இனம்தோடு அகல (16) நாஞ்சில் கடிந்து நிலங்கண் வாட (17) அன்னவாயினவை பழனந்தோறும் (19) தாமரை ஆம்பலொடு மலர (20) நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப (21) அரிநர் கொய்வாள் மடங்க அறைநர் (22) எந்திரம் பத்தல் வருந்தத் (23) தொன்றோர் காலை (24) நல்லமன் அளியதாமெனச் சொல்லிக் (25) காணுநர் கைபுடைத்திரங்க (26) மாணுமாட்சிய மாண்டன (27) எனக் கூட்டுக. பைதிரம் (18) என்னும் எழுவாய்க்கு மாண்டன (27) என்பது பயனிலை; அன்னவாயின (19) என்னும் பெயரும் இடையே ஒரு பயனெனப்படும். அன்னவாயின (19) மாணுமாட்சிய மாண்டன (27) என்றது பைதிரங்கள் (18) ஊருடனெழுதல் (16) முதலாய வறுமையையுடைய அளவாய் நின்றன; பின் அவ்வளவினவன்றித் திருத்தவும் திருந்தா நிலைமையவாய் நின்றன; பின் அவ்வளவுமன்றி ஊரும் வயலும் தெரியாதபடி உருவம் மாய்ந்தன (27) என்றவாறு.

நீ அவ்வினை மேவலையாயிருந்தாய்; நீ வினையை மேவுகின்றபடியால் (10) கனவினுள் உறையும் (13) நின்னரிவைக்கு (14) நீ யார்கொல் (15); நீ அவள்பால் வாராமைக்குக் காரணம் யாது? நீ அளிக்க என்று அழிந்த நாடுகள் அழிந்து அற்றால் வருவலெனின், ஆம்; அழிக்க அழிந்து நீ பின் வாழ்தலீயாத பைதிரம் (18) காணுநர் கைபுடைத்திரங்க (26) மாணுமாட்சியவாய் மாண்டன (27); அதனால் அது குறையன்று; நின் அன்பின்மையே குறை; இனி நீ அவள்பாற் கடிது எழுகென வினை முடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

பாணன் பாசறைக்கண் வந்து தேவி ஆற்றாமை கூறி இனி அவர்பாற் போகவேண்டுமென்று இரந்தமையாற் பரிசிற்றுறையாயிற்று.

'அவ்வினை மேவலை யாகலின்' (10) எனவும், 'யார்கொ லளியை' (15) எனவும் சொற்சீர் வந்தமையாற் சொற்சீர் வண்ணமும் ஆயிற்று.

## ஒப்புமைப் பகுதி

1. **கவர்கால்:** "கவர்காற் கோவலர்" **அக** 264: 4.

2. "வெஞ்சுரம் போழ்ந்த துஞ்சுவரு கவலை" **அக** 207: 4.

3. **ஒண்பொறிக் கழற்கால் மறவர்:** "ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற் கால்,......மறவர்" ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழறகால் ......விரிநூலறுவை யர்" **பதிற்** 30: 40—1; 34: 2—3; "ஒண் பொறிப் புனைகழல் சேவடிப் புரள . புனையாக் தாடும் அத்தி" **அக** 376: 7—10; "பூம்பொறிக் கழறகால் நெடுந்தகை" **புற** 281: 9.

**மாறுவவவர்:** "மாறு மைந்தர்" "முனைபுகல் புகல்வின் மாறு மைந்தரொடு" **பதிற்** 39: 9; 84: 17; "மாறுதுற்ற வடுப்படு நெற்றி......மறவர்" **மதுரைக்** 594—6; "மாறுமைந்தின்......முதியர்" **அக** 233: 6—8; "மாறுத மாமன்னர்" **இனியவை** 34.

• 4. **திண்பிணி:** "திண்பிணித் திவவு" **பொருந** 15.

**ஆயுதங்களை உறையில் வைத்தல்:** "உறைகழி வாளின் மின்னி" **நற்** 337: 9; "கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோள்" **அக** 24. 16; 'கதிர்வா ளுறை கழித்து" **திருவாசகம்** திருப்பாண்டி 4. "உறைகழியா னெவாளும்" **பு வெ மா** 148; 'உறைகழி வாளினன்' **பெருங்** (3) 20: 110.

**செங்களம்:** **பதிற்** 4ம் பதி 11; **குறுந்** 1: 1; **புற** 278: 7; **பு. வெ மா** 127; 137; 207; **சீவக** 279; **தொல்** புற சூ 21: 16—7 நச் மேற்.

6. **உருவச் செந்தினை:** "உருவச் செந்தினை நீரொடு தூஉய்" **அக** 172: 14.

6—7. **முரசுக்குக் குருதிப்பலி:** "பல்வேறு கூலமொடு குருதி வேட்ட, மயிர் புதை மாக்கண்" **பதிற்** 29: 11—2; "குருதி வேட்கை யுருகெழு முரசம்" **புற** 50: 5. "உயிர்ப்பலி யுண்ணும் ......மயிர்க்கண் முரசொடு" **சிலப்** 5, 87—8. "குருதி வேட்கை முரசு" **மணி** 1: 30—1.

7. **மண்ணுறு முரசு:** 'மண்ணுறு முரசின் வேந்து" **ஐங்** 443.

7—8. **தொடித்தோளியவர்:** **பதிற்** 17—7 அடிக்.

8. **கடிப்புடை வலத்தர்:** "தண்டுடை வலத்தர்" எஃகுடை வலத்தர்" "தோமர வலத்தர்" "அம்புடை வலத்தர்" **பதிற்** 41: 12; 51: 30; 54: 14; 80: 11.

9 **அம்பு தெரித்து:** 'தெரிகணை நோக்கி" **கலி** 39: 22; "கணை வலந் தெரிந்து" "வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்து" "உருவ வல்வில் பற்ற அம்பு தெரிந்து" **அக** 38: 4; 48: 12; 81: 11; "கொண்ட கொடுஞ் சிலையன் கோல்தெரிய" **பு வெ. மா** 1. "ஆருயிர் பருகுற் கொத்த, விடுகணை தெரிந்து" **சீவக** 1086; "கணைதெரிந்து" **கம்ப**. நாக பாச 71.

மு. "வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப், புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே" **கலி** 7: 9—10; "விரற்றலைப் புட்டில் வீக்கி வெஞ்சிலை கணையோ டேந்தி" **சீவக** 2202. "விரற்புனை கோதைவல் வில்லின் வல்லவர்" **வில்லி** பதின்மூன்றும் 254. 'முன்கைக், கார்விற் செறிகா ணெறிகைச் செறிகட்டி" **பெரிய**. கண்ணப்ப 60.

11. **எல்லு:** "எல்லும் எல்லின்று" **அக** 370: 2.

**எல்லி:** "எல்லியுங் காலையும்" **பெருங்** (4) 3:17; "எல்லியும் நண்பகலும் இடர் கூருதல் இல்லையென்றே" **தே சுந்**. திருப்பழ 10.

12 அரிதுபெறு: "அரிதுபெறு சிறப்பிற் காமம்" அக 335: 5.
சிறுமகிழானும்: "சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்" பதிற் 23: 9.

14. நாணுமலி யாக்கை: 'சேணு மெம்மொடு வந்த, நாணும்" நற் 15: 9—10; "நாணே நம்மொடு, நனிநீ டுழந்தன்று" குறுந் 149; "நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல், அந்நீங் கிளவிக் குறுமகள்" "இவளே, பெருநா ணணிந்த சிறுமென சாயல்" அக 9: 21—5; 120: 6—7; ' பெண்பாலவர்கட் கணியாய்ப் பிரியாத நாணும்" சீவக 1961.

வாணுதலரிவை: "மீனொடு புரையுங் கற்பின், வாணுதலரிவை" பதிற் 89: 19—20.

16. "கொடுவி லாடவர் படுபகை வெரீஇ, ஊரெழுந் துலறிய" அக 167: 9—10.

18. பைதிரம்: "வளந்தலை மயங்கிய பைதிரம்" பதிற் 38: 3.

20. தாமரைக்கு நெருப்பு உவமை: ' அழன் மருள் பூவின் தாமரை" பதிற் 23: 23; "சுடர்த் தாமரை" மதுரைக் 249; "விளக்கி னன்ன சுடர்விடு தாமரை" நற் 310: 1; "எரிமலர்த் தாமரை" பரி 9: 4; "சுடர்ப்பூந் தாமரை" அக 6: 16; "அழலவிழ் தாமரை யாய்வய லூரன்" ஐந்-ஐம 25; "புனலெரி தவழ்ந்தெனப் பூத்த தாமரை" சீவக 1180.

தாமரை யும் பல்: "ஆம்ப, குமரைக் கிறைஞ்சுந் தண்டுறை யூரன்" நற் 300: 3—4; "அரக்காம்பல் தாமரை யஞ்செங் கழுநீர்" கைந்நிலை. மருதம் 11; "நெய்தலுங் குவளைப் பூவும் நெகிழ்ந்தசெங் கமலப் போதும்" கம்ப கிட்ப எழுச்சி 54.

19—20 பழனத் தாமரை: ' கழனித் தாமரை" ஐங் 53; 94; ' தாமரைப் பழனத்து" "பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து" அக 106: 1; 176: 6; "செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை" புற 397: 19; "தாமரை மலருஞ் செய்வய லூர" திணைமொழி ஐ 36; "பழன வெண்டாமரை" சீவக 1555; "பழனப் பாசடைப், பயிலிளந் தாமரை" சிலப்.

பழன ஆம்பல்: "பழனத் தேந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால், ஆம்பல்" குறுந் 178: 1—3.

21. "நீர்ச்செறுவி, னீணெய்தல்" பட்டினப் 11—2; "செறுவிற், கண்ணுறு நெய்தல் கதிரொடு நயக்கும்" "செறுவிற் பூக்கும், நின்னூர் நெய்த லனையேம்" குறுந் 296; 309; "நீரார் செறுவி னெய்தல் பூப்ப" கலி 75: 1; "நெய்தலஞ் செறுவின்" அக 113: 6; 'நெய்தலங் கழனி" புற 209: 2.

23. இரும்பி னெந்திரம்: "கரும்பி னெந்திரங் கட்பி னோதை" மதுரைக் 258; "கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றும்" ஐங் 55; கரும்பி னெந்திரஞ் சிலைப் பின்" புற 322: 7.

25 அளியதாம்: "பெரும்பாழாகும மளிய தாமே" பதிற் 22: 38.

---

## 10. அட்டு மலர் மார்பன்

**20.** நுங்கோ யாரென வினவி னெங்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் வாழ்கவவன் கண்ணி
வாய்ப்பறி யலனே வெயிற்றுக ளனைத்தும்
மாற்றோர் தேஎத்து மாறிய வினையே

கண்ணி னுவந்து நெஞ்சவிழ் பறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறி யலனே
கனவினும், ஒன்னார் தேய வோங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி யிரட்டும்
கடாஅ யானைக் கணநிரை யலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து
புலவ ரேத்த வோங்குபுகழ் நிறீஇ
விரியுளை மாவுங் களிறுந் தேரும்
வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதி னிலைஞாயில்
அம்புடை யாரெயி லுள்ளழித் துண்ட
அடாஅ வடுபுகை யட்டுமலர் மார்பன்
எமர்க்கும் பிறர்க்கும் யாவ ராயினும்
பரிசின் மாக்கள் வல்லா ராயினும்
கொடைக்கட னமர்ந்த கோடா னெஞ்சினன்
மன்னுயி ரழிய யாண்டுபல மாறித்
தண்ணிய லெழிலி தலையா தாயினும்
வயிறுபசி கூர வீயலன்
வயிறுமா சிலீயரவ னீன்ற தாயே.

துறை—இயன்மொழி வாழ்த்து.
வண்ணம்—ஒழுகுவண்ணமும் சொற்சீர் வண்ணமும்.
தூக்கு—செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர்—அட்டுமலர் மார்பன் (20).

ப—ரை. *நும் கோ யார் என வினவின்*—நும்முடைய இறைவன் யார்தான் என்று கேட்பீராயின், *எங்கோ*—எம்முடைய இறைவன், *இருமுந்நீர்த் துருத்தியுள்*—கரிய கடலிடையேயுள்ள தீவில், *முரணியோர் தலைச்சென்று*—பகைவரை முடிவுசெய்து, *கடம்பு முதல் தடிந்த*—அவருடைய காவல் மரமாகிய கடம்பினது அடியை வெட்டின, *கடுசின முன்பின் நெடுஞ்சேரலாதன்*—கடிய சினமும் வலியுமுடைய நெடுஞ்சேரலாதனாவான்; *அவன் கண்ணி வாழ்க*—அவன் கண்ணி வாழ்வதாக.

6—10. *மாற்றோர் தேஎத்து மாறிய வினை*—பகைவர் நாட்டிலே பின்வாங்கிய போர்வினையை, *வெயில் துகள் அனைத்தும் வாய்ப்பு அறியலன்*—ஞாயிற்றின் கதிரினிடையே தோற்றும் துகள் அளவும்

வாய்த்தல் அறியான்; கண்ணின் உவந்து—கண்ணினுல் உவகையை வெளிப்படுத்தி, நெஞ்சு அவிழ்பு அறியா—மனத்திற் பகையை வெளிபபடுத்துதலே அறியாத, நண்ணூர் தேஎத்தும்—பகைவரிடத்தும், கனவினும் பொய்ப்பு அறியலன்—கனவின்கண்ணும் பொய்த்தலறியான்.

*10—20.* ஒன்னார் தேய ஓங்கி நடந்து—பகைவர் அழியும்படி மனவெழுச்சியோடு மிக்குச் சென்று, படியோர் தேய்த்து—பகைவரை அழித்து, வடி மணி இரட்டும்—வடித்த மணி ஒன்றற்கொன்று மாறி ஒலிக்கும், கடாஅ யானை கண நிரை அலற—மதமிக்க யானைத் திரளின ஒழுங்குகள் அலறும்படி, வியல் இரு பரப்பின் மா நிலம் கடந்து—அகன்ற பெரிய பரப்பினையுடைய பெரிய நிலத்தை வஞ்சியாது எதிர்நின்று வென்று அடிப்படுத்து, புலவர் ஏத்த ஓங்கு புகழ் நிறீஇ-புலவர்கள் உயர்த்துக் கூறும்படி உயர்ந்த வெற்றிப் புகழை உலகின்கண்ணே நிறுத்தி, விரி உளை மாவும களிறும் தேரும்—விரிந்த தலையாட்டத்தினையுடைய குதிரைகளையும் களிறுகளையும் தேர்களையும், வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசி—வயிரியர்க்கும் கண்ணுளர்க்கும் தனக்கென்று பாதுகாவாது பெருகக் கொடுத்து, கடிமிளை—காவற் காட்டினையும், குண்டு கிடங்கின்—ஆழத்தினையுடைய அகழியினையும, நெடுமதில்—நெடிய மதிலினையும், நிலை ஞாயில்—நிலைத்த ஞாயிலினையுமுடைய, அமபுடை ஆர் எயில்—அம்புக்கட்டுக்களையுடைய அணுகற்கரிய அரணை, உள் அழித்து உண்ட—உள் புக்கு அழித்து உண்ட, அடாஅ அடுபுகை அட்டு மலர் மார்பன்—ஊர் சுடுபுகை செறிந்து அகன்ற மார்பன்.

21—3. பரிசின் மாக்கள் எமர்க்கும் பிறர்க்கும்—பரிசின்மாக்களாகிய எமர்க்கும் பிறர்க்கும், யாவராயினும்—கண்டார் மதிக்கும் தோற்றம் இலராயினும், வல்லாராயினும்-ஒரு கல்வி மட்டாராயினும், கொடை கடன் அமர்ந்த—கொடையாகிய கடனை விரும்பிய, கோடா நெஞ்சினன்—கோட்டமில்லாத நெஞ்சினையுடையவன்.

24—37. மன் உயிர் அழிய—நிலைபெற்ற உயிர்கள் அழியும்படி, யாண்டு பல மாறி—பல யாண்டுகள் தன்னியல்பில் மாறுபட்டு, தண் இயல் எழிலி தலையாதாயினும்—தண்ணிய இயல்பினையுடைய மேகம் பெய்யாதாயினும், வயிறு பசி கூர ஈயலன்—வயிற்றிற் பசி மிகும்படி ஈதலைச் செய்யான், அவன் ஈன்ற தாய்—அவனைப் பெற்ற தாய், வயிறு மாசு இலீஇயர்—வயிறு குற்றமின்றி விளங்குவாளாக.

முடிபு: நுங்கோ யாரென வினவின் எங்கோ சேரலாதன்; அவன் கண்ணிவாழ்க. அவன் மாற்றோர் தேஎத்து மாறிய வினையே வெயிற் றுகள் அனைத்தும் வாய்த்தலறியான்; பொய்த்தலறியான்;

அட்ட அடிபுனை அட்டுமலர் மார்பன்; கொடைக்கடனமர்ந்த கோடா நெஞ்சினன்; கோடையிடத்து எழிலி தலையாதாயினும் வயிறு பசிகூர ஈயலன்; ஆதலான், அவனையீன்றதாய் வயிறு குற்றமின்றி விளங்குவாளாக என்க.

ஆ—ரை 1—5. சேரலாதன்பாற் பரிசில் பெற்று மீளும் பாணன் தன் செல்வப் பொலிவு கண்டு 'நுங்கோ யார்' என்று வினவியாற்கு, 'எங்கோ முந்நீர்த் துருத்தியுள், முரணியோர்த் தலைச்சென்று, கடம்பு முதல் தடிந்த சேரலாதன்' எனத் தன் இறைவன் இன்னான் என்று கூறினான். நுங்கோ யாரென்று வினவுதலும், பரிசில் பெற்று மீள்வோன் தனக்குப் பரிசில் நல்கியோன் இன்னான் என்று கூறுதலும்,

"நுங்கோ யாரென வினவி னெங்கோ
..........................................
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்" புற 212: 1—8.

என்ற பிசிராந்தையார் செய்யுளுள்ளுங் காண்க. பாணன் தன் இரும்பேரொக்கலொடு பரிசில் பெற்று மீளுதலின் அச் சுற்றத்தாரையும் உளப்படுத்தி 'நும்' என்று பன்மையிற் கூறினான். ஈண்டுக் கோ என்றது பரிசில் நல்கிப் புரப்போனை. எங்கோ (1) சேரலாதன் (5) என இயையும்.

தன்னொடு மாறுபட்ட பகைவர் கடல் நடுவண் தீவொன்றில் வாழ்ந்தமையாற் சேரலாதன் கடல் கடந்து அப்பகைவரை முடிவுசெய்து அவர் காவல் மரமாகிய கடம்பின் அடியைத் தடிந்தமையின், 'இருமுந்நீர்த் துருத்தியுள், முரணியோர்த் தலைச்சென்று, கடம்பு முதறடிந்த சேரலாதன்' என்றான். நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலுடைமையின் முந்நீர்: ஆகுபெயர். 'யாற்று நீரும் ஊற்று நீரும் மழைநீருமுடைமையால், கடற்கு முந்நீரென்று பெயராயிற்று' என்பர் புறநானூற்றுரைகாரர். (புற 9: 10 உரை) முந்நீர்த் துருத்தி—தீவு முரணியோர்—மாறுபட்டோர். என்றது பகைவரை. முரண்—மாறுபாடு. தலைச்சென்று—முடிவிலே சென்று. என்றது முடித்து என்றபடி. முரணியோரை முடிவுசெய்தும் சினந்தணியப் பெறாஅய் அவர் காவல் மரமாகிய கடம்பை அடியோடு தடிந்தமையின் 'கடம்பு முதறடிந்த கடுஞ்சின ... சேரலாதன்' என்றான். "அதிரமண்டி .. பாழ்பலசெய்து......விறல்வேம் பறுத்த, பெருஞ்சினக் குட்டுவன்" (பதிற் 46: 8—17) எனக் கடல்பிறக் கோட்டிய குட்டுவன் இயல்பைப் பரணர் கூறுமாறுங் காண்க. முந்நீர்த் துருத்தியுள் முரணியோர்த் தலைச்சென்ற வலியுடையோனாதலின் 'முன்பிற் சேரலாதன்' என்றான், எங்கோ நெடுஞ்சேரலாதன் என்று தன் தலைவனைக் கூறினமையால் அதற்கேற்ப 'வாழ்க வவன் கண்ணி' என்று அவன் கண்ணியை வாழ்த்துவானாயினான். "கோடியர் முழவின் முன்ன ராடல், வல்லா னல்லன் வாழ்க வவன் கண்ணி" (பதிற் 56: 2—3) "நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன், யார்கொல் வாழ்கவவன் கண்ணி" (புற 77: 5—6) எனப் பிற

ரும் தலைவரைக் கூறி அவர் கண்ணியை வாழ்த்துதல் காண்க. நீடு வாழ்க வென்பான் 'வாழ்கவவன் கண்ணி' என்ருன். கண்ணி—போர்ப்பூ என்பர் அகநானூற்றுரைகாரர் (அக. கடவுள் 2 உரை) 'கண்ணியென்பன சூடும்பூ' என்பர் பேராசிரியர். (தொல். மரபு 79 உரை)

6—10 சேரலாதன் மிக்க வலியானே தான் அழிக்கவேண்டுமென்று விரும்பிய பகைவர் நாட்டிற் சென்று பொருதலின் 'மாற்ருேர் தேஎத்து' என்ருர். தேஎம்—நாடு. பகைவர் நாட்டிற் செய்த போரில், அவர்க்கு அஞ்சி அடியொதுங்கிப் பிற்பெயர்தலாகிய செயல் சேரலாதன்பால் எக்காலத்தும் நிகழாமையின் மாற்ருேர் தேஎத்து மாறிய வினை வாய்ப் பறியலன்' என்ருர். மாறுதல்—பிற்பெயர்தல். முதுகிடுதல். மாருமைந்து—முதுகிடாதவலி' மலைபடு 332 நச். மிகச்சிறிதும் பிற்பெயராமை தோன்ற 'வெயிற்றுகளனைத்தும் வாய்ப்பறியலன்' என்ருர். வெயிற்றுகள்—சிற்றிடுக்கின் வழியே வீட்டினுள் நுழையும் ஞாயிற்றின் கதிரில் தோன்றும் நுண் துகள்கள். அவை வெயிற்கதிரிலன்றிப் புலப்படாச் சிறுமையவாகலின் மிக்க சிறுமைக்கு வெயிற்றுகளை எடுத்துக் கூறினுர்.

> "நுண்வெயிற் றுகளினும் நொய்தா லம்மதானே" தொல் 21: 16 நச் மேற்
> 'இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
> சிறிய வாகப் பெரியோன்" இருவ சகம். திருவண்ட 5—6.

எனப் பிறசான்ருேருங் கூறுமாறு காண்க. அனைத்தும்—அளவும். "கடிப்பகை யனைத்தும்..... அரலை தீர வுரீஇ" மலைபடு 22—4. இதனுற் பகைவர்க்கஞ்சிப் பிற்பெயராத சேரலாதன் ஆண்மை கூறினுர். "எறிபடைக் கோடா வாண்மை" (புற 154: 10) என்ருர் பிறரும்.

அகத்துச் செற்றம் நிகழவும் அதனை மறைத்தற்பொருட்டு அச்செற்றத்தின் மறுதலையாய உவகையைக் கண்ணினுல் வெளிப்படுத்தலின் 'கண்ணி னுவந்து' என்றும், அகத்தே நிகழும் செற்றத்தை யாதோராற்ருனும் வெளிப்படுத்தாமையின் 'நெஞ்சவிழ் பறியா' என்றும் கூறினுர். முகத்தினினிய நகாஅ, அகத்தின்ன வஞ்சராய அப்பகைவரிடத்தும் நனவின்கண்ணன்றிக் கனவின்கண்ணும் பொய்த்தலறியாமையின் 'நண்ணுர் தேஎத்தும் பொய்ப்பறியலனே கனவினும்' என்ருர். தனக்கு வெற்றியுண்டாமாறு போர்தொடங்குதற்குச் சிறந்த நாட்கேட்ட துரியோதனனிடத்தும் பொய்யாது நாட்கூறிய சகாதேவன் செயல் இதற்கு எடுத்துக்காட்டாக அறியத்தக்கது. நெஞ்சவிழ்பறியா என்பதற்கு அகத்தே நிகழுஞ் செற்றத்தால் மனம் மலர்தலை அறியாத எனினுமாம். நண்ணுர்—தன்னையடையாதவர்; என்றது பகைவரை. தேஎத்தும்: உம்மை உயர்வு சிறப்பு. பொய்ப்பு—பொய்த்தல். கனவினும்: உம்மை எச்சவும்மை.

10—20 ஒன்னுர் தேய ஓங்கி நடந்து படியோர்த் தேய்த்து மாநிலங் கடந்து ஓங்கு புகழ் நிறீஇ மாவும் களிறும் தேரும் வயிரியர் கண்ணுளர்க்கு ஒய்யாது வீசி, ஆரெயில் அழித்துண்ட அடாஅ அடுபுகை அட்டு மலர் மார்பன் என்க.

கடுஞ்சின முன்பிற் சேரலாதன் மனவெழுச்சியோடு மிக்குச் செல்லுதலால் அவன் பகைவர் அழிதல் ஒருதலையாகலின் 'ஒன்னார் தேய வோங்கி நடந்து' என்றார். ஓங்கி நடந்த சேரலாதன் தன்னை வணங்கியோரை நீக்கி, வணங்காதாரை அழித்தலின் 'படியோர்த் தேய்த்து' என்றார்.

"படியோர்த் தேய்த்த வாண்மை" பதிற் 79: 6.

"படியோர்த் தேய்த்த பணிவி லாண்மை" மலைபடு 423.

"படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை" அக 22: 5

என வருவனவற்றாலும் படியோர்த் தேய்த்தல் அரசன் செயலாதல் தெளியப்படும். யானையின் செயலாக வுரைப்பாருமுளர். படியோர்–வணங்காதார். மலைபடு 423 நச். இச்சொல் 'பிரதியோர்' என்னும் வடமொழித் திரிபு என்பர் அகநானூற்றுரைகாரர். (அக 22: 5 பழையவுரை.) வடிமணி–தெளிந்த மணி எனினுமாம். கயிற்றிற் பிணித்து இடுதலால் இருபக்கத்துந் தாழ்ந்த மணிகள் யானை நடக்குந்தோறும் ஒன்றற் கொன்று மாறி ஒலித்தலின் 'மணி இரட்டும் யானை' என்றார். இரட்டல்—மாறி ஒலித்தல். கடாஅ யானை—போர் வேட்கையால் மதமிக்க யானை. படையிடத்து யானைகள் தொகுதியாக ஒழுங்குபட நிற்றலின் 'யானைக் கணநிரை' என்றார். "வான்மருப்பிற் களிற்று யானை மாமலையிற் கணங்கொண்டு" (பதிற் 80: 1—2) என வருதல் காண்க. 'கடாஅ யானைக் கணநிரை' எனப் பகைவரது யானைப் படையின் நண்ணுதற் கருமையைக் கூறியது அதனை அலறப் பொருகின்ற சேரலாதன் பெருவலி தோன்றப் பொருட்டென்க. அலறுதல்—துதிக்கை மருப்பு முதலாயின தடியப்படுதலாலுளதாகிய துன்பத்தாற் கதறுதல். "யானைத், தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சிலொப்ப நிலமிசைப் புரள, வெறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்" (புற 19: 9—12) "அரசுவா வழைப்பக் கோடறுத்து" (பதிற் 79: 13) என வருவன காண்க. நால்வகைப் படைகளுள் வலி சிறந்த யானைப் படையைத் தம் மிகுவலியாற் சென்று அழித்தலின் 'யானைக் கணநிரை அலற' என்றாராயினும் ஏனைக் குதிரைப் படை முதலாயின அழித்தலுங் கொள்க. படையை அழித்துப் பகைவரை வென்று அவர் நாட்டை அடிப்படுத்தலின் 'யானைக் கணநிரை யலற மாநிலங் கடந்து' என்றார். கடந்து என்பதற்குக் கடந்து அடிப்படுத்து என ஒருசொல் வருவிக்க. கடத்தல்—வெல்லல். ஒன்னார் தேய நடந்து மாநிலம் கடந்தமையால் சேரன் வெல் புகழ் பூமியில் நிலைபெறுதலின் 'மாநிலங் கடந்து ஓங்குபுகழ் நிறீஇ' என்றார்.

"பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ" புற 18: 2—3.

எனப் பிறரும் கூறுதல் காண்க. புகழ் என்றது வென்றிப் புகழை. அரசர்க்கு மற்றைப் புகழினும் வென்றிப் புகழ் உயர்புகழாதலின் அதனை 'ஓங்கு புகழ்' என்றார். அதனைப் புலவர் பெருமக்கள் புகழ்ந்து பாடுதலின் "புலவ ரேத்த வோங்குபுகழ் நிறீஇ" என்றார். "வென்றிப் பல்புகழ் விறலோ டேத்தி" என்றார் மலைபடு கடாத்தும். (மலைபடு 544.)

போர்க் குதிரைகளை உளை முதலியன சூட்டி அலங்கரித்தலின் 'விரியுளை மா' என்றார். "பரியுடை நன்மா விரியுளை சூட்டி" (பதிற் 65: 2) என்றார் பிறரும். அது கவரியாதல், "முரசுடைச் செல்வர் புரவிச்சூட்டு, மூட்டுறு கவரி" (அக 156: 1—2) எனவும் 'நன்மான் பொங்குளை — நன்மான் தலைக்கணிந்த வெண்கவரி' (ஐங் 13—1 உரை) எனவும் வருவனவற்றாலறியப்படும். மாவை விரியுளைமா என்றதற்கேற்பக் களிறு தேர்களை, ஓடையொடு பொலிந்த களிறு, நெடுங் கொடிய தேர் எனக்கொள்க. பாடுபெற அலங்கரிக்கப்பட்ட படையொடு வந்த பகைவரைச் சேரலாதன் வென்று மா முதலியவற்றைக் கைக்கொண்டு அவற்றைத் தனக்கெனப் பாதுகாவாது பரிசிலர்க்கு வழங்கியமையின் 'விரியுளை மாவுங், களிறுந் தேரும் ஓம்பாது வீசி' என்றார்.

வயிரியர் கண்ணுளர் என்போர் கூத்தராவர் என்பது, "நாடகர் நிருதர் நடரே கண்ணுளர், கோடியர் வயிரியர் பொருநர் கூத்தர்" எனப் பிங்கலந்தையினும் (பிங் 5: 99) "கண்ணுளர் வயிரியர் வினைஞர் நடரென், றெண்ணிய பெயர்கள் கூத்தற் கெய்தும்" எனத் திவாகரத்தும் (மக்கட்) வருவனவற்றாலும், 'வயிரியர்' என்பதற்கும் (மதுரைக் 628, 750 நச்; புற 9: 9 உரை) 'கண்ணுளர் என்பதற்கும் (மலைபடு 50 நச்; புற 153: உரை) கூத்தர் என்று நச்சினார்க்கினியரும் புறநானூற்றுரைகாரரும் பொருளுரைத்தமையானும் தெளியப்படும். அங்ஙனமாயின் கூத்தர் என்னாது 'வயிரியர்' 'கண்ணுளர்' என இருவேறு பெயர்களாற் கூறியதென்னையெனின், கூத்தர் பலவகையினராதல் பற்றியென்க. தொல்காப்பியவுரையில்,

> 'கூத்தராயிற் பாசவரும் வேள்ாளரும் பிறரும் அவ்வாடற் றொழிலுக்கு உரியோர்களும் பாரதி விருத்தியும் விலங்கியற் கூத்தும் கானகக் கூத்துங் கழாய்க் கூத்தும் ஆடுபவராகச் சாதிவரையறை யிலராகலின அவரை முன் வைத்தார்'

என நச்சினார்க்கினியர் உரைத்தவாறுங் காண்க. (தொல். புறத். 36: 3—6 உரை). ஈண்டு வயிரியர் என்றது பாடுங் கூத்தரை. "மன்றம் போந்து மறுகு சிறை பாடும் வயிரிய மாக்கள்" (பதிற் 23: 3—6.) என வருதல் காண்க. பாணர் எனினுமாம். "அருஞ்சிறை யறையிசை வயிரியர்" என்னும் பரிபாடல் (பரி 10: 130) உரையில் வயிரியர் என்பதற்குப் 'பாணரும் கூத்தரும்' எனப் பரிமேலழகர் பொருளுரைத்தமை காண்க. கண்ணுளர் என்றது சாந்திக் கூத்தரை. 'கண்ணுளர்—சாந்திக் கூத்தர்' என அடியார்க்குநல்லாரும் பொருளுரைத்தவாறு காண்க. (சிலப் 5: 49 உரை) இவர் கழைக்கூத்தாடுதலுமுண்டு என்பது "கலிநடைக் கழைக் கண்ணுளர்" (கம்ப. பம்பை 21) என கம்பர் கூறுமாற்றானறியப்படும். மேலே, "கொடைக் கடனமர்ந்த கோடா நெஞ்சினன்" (23) என்று கொடை கூறுகின்றான், ஈண்டு "ஓம்பாது வீசி" என்று கொடை கூறியதற்குப் போர்க்குச் சென்றவிடத்துக் கொண்டவற்றைக் களம் பாடச் சென்றோர்க்குக் கொடுக்குங் கொடையென வுரைக்க. பாணர் கூத்தர் களம்பாடல்,

"பாணர் பைம்பூ மலைய விளையர்
இன்களி வழாஅ மென்சொ லமர்ந்து
நெஞ்சுமலி யுவகையர் வியன்களம் வாழ்த்த" பதிற் 40: 24—6.
"அகன்கட் டடாரி தெளிர்ப்ப வொற்றி
வெந்திறல் வியன்களம் பொலிகென் றேத்தி" புற 370: 18—9

என வருவனவற்றாலு மறிக. பரிசிலர்க்கு மா முதலியவற்றைப் போர்க்களத்தில் அளித்தலை, "மாற்றார், உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள் வாழ்த்திக், காண்கு வந்திசிற் கழறொடி யண்ணல்......மழையினும் பெரும்பயம் பொழிதி யதனாற், பசியுடை யொக்கலை யொரீஇய, இசைமேந் தோன்றனின் பாசறை யானே" (பதிற் 64: 13—20) என்பதனாலு மறிக.

17—20. மிளையினையும் கிடங்கினையும் மதிலினையும் ஞாயிலினையுமுடைய ஆரெயில் என்க காவற்காடு முதலியன வுடைத்தாக அரண்கள் அமைக்கப்பட்டமை,

"அருங்குழுமிளைக் குண்டுகிடங்கின்
உயர்ந்தோங்கிய நிரைப்புதவின்
நெடுமதில் நிரைஞாயில்
அம்புமிழ் அயிலருப்பம்" மதுரைக் 64—7

என்பதனாலு மறிக மதிலரணைச் சூழ்ந்து அகழியும், அதனைச் சூழ்ந்து காவற்காடும் அரணாக அமைந்தமையின், 'கடிமிளைக் குண்டு கிடங்கின் நெடுமதில்' என்றார். மதிலரணைச் சூழ்ந்து காட்டரண் முதலாய அரண்கள் அமைந்திருத்தல்,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடு முடைய தரண்" குறள் 742.

என்பதனாலு மறியப்படும்.

கடிமிளை—காவற்காடு. அது கடத்தற்கரிய செறிவுடைத்தென்பது. "அருங்குழுமிளை" (மதுரைக் 64) "கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை" (புற 21: 5) என்பவற்றாலும் பகைவர் கடத்தற் கரிதாம்படி முட்கள் பரப்பப்பட்டுக் கிடக்கும் என்பது, 'தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து, அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து' என்பதனாலும் அறியப்படும். (தொல். புற சூ 10 நச் உரை) ஆழ்ந்த அகழியாதலின் 'குண்டகழி' என்றார். "நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி" (புற 21: 3) எனப் பிறண்டும் வருதல் காண்க. ஏணிக்கு எட்டாதவாறு மிக உயர்ந்திருத்தலின் 'நெடுமதில்' என்றார். மதிற்குச் சிறப்புப் பற்றி உயர்வு கூறினாராயினும், புறத்தார்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினை செய்யலாந் தலையகலமும் கல் இட்டிகைகளாற் செய்யப்படுதலிற் குத்தப்படாத திண்மையும் முதலாயினவுங் கொள்க.

"உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கு நூல்" குறள் 743

எனத் திருவள்ளுவர் கூறியவாறுங் காண்க.

ஞாயில் என்பது மதிலுறுப்பு. அது "மதிலு ஞாயிலின்றே" (புற 355: 1) "ஞாயின் மதில்" (பு. வெ. மா. 99) என்பனவற்றாலுமறியப்படும். "ஞாயில்

......மதிலுறுப்பெனக் கூறும்" என்பது பிங்கலந்தை. இது சிற்றுறுப்பா தல் "மீன்பூத் தன்ன வுருவ ஞாயில்" (புற 21: 4) என்பதனாலும், மதிற் றலையிலமைந்திருத்தல், "ஞாயி லேந்து நிலை யரணம்" (பு வெ. மா. 86) என் பதனாலும், எய்தால் மறைதற்கு மதிற்றலையில் அமைக்கப்படுவதென்பது,

"நிரைஞாயில்—நிரைத்த சூட்டினையுடைய; அஃது எய்தால் மறைதற்கு உயரப்படுப்பது' மதுரைக் 66 நச்.

'ஞாயில் —ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையுஞ் சூட்டு' சீவக 105 நச்

என்னும் உரைப் பகுதிகளாலும் அறியப்படும். பிறரால் அழிக்கப்படாமை யின் 'நிலைஞாயில்' என்றார்.

அம்புடை எயில் எனக்கூட்டி அம்புக்கட்டுக்களையுடைய எயில் எனக் கொள்க. "அம்பு துஞ்சுங் கடியரணால்" (புற 20: 16) என வருதல் காண்க. அம்புக்கட்டுக்களை ஞாயிலில் வைத்தல், "அம்புடை ஞாயில்" (பு. வெ. மா. 118) 'ஞாயில் தொறும் புதைநிறீஇ—எய்து மறையுஞ் சூட்டுத்தோறும் அம்புக் கட்டுக்களையும் கட்டிவைத்து' (பட்டினப் 288 நச்) என்பனவற்று லறியப்படும். கடிமிளை குண்டு கிடங்குகளானும் மதிற்பொறிகளானும் அணு கற்கரிய மதிலாதலின் 'ஆரெயில்' என்றார். 'அருமை—பொறிகளான் அணு கற்கருமை' எனப் பரிமேலழகர் உரைத்தவாறுங் காண்க (குறள் 743 உரை) எயில்—அரண். மதுரைக் 367 நச். பகைவரது அரணின் கடிமிளை முத லியவற்றை எடுத்துக் கூறினர், அதனைக் கடந்து உள்ளழித்துண்ட சேர லாதனின் பேராற்றலை நன்கு புலப்படுத்தற் பொருட்டு.

உள்ளழித் துண்ட வென்றது 'எயிலைக் கடந்து உள்ளழித்தன்றி உணவு உண்குவ மல்லேம்' என்று தாம் உரைத்த வஞ்சினத்துக்கேற்பப் பகைவர் எயிலைக் கடந்து உள்ளழித்து உணவினை உண்ட என்றவாறு. இதனை,

"இன்றினிது நுகர்ந்தன மாயின் நாளை
மண்புனை யிஞ்சி மதில்கடந் தல்லது
உண்குவ மல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" பதிற் 40: 5—8.

"இற்றைப் பகலுள் எயிலகம் புக்கன்றி
பொறற்றோரான் போனகங் கொள்ளானால்" தொல். புற 12 நச் மேற்.

என வருவனவற்றாலுமறிக. உண்ட மார்பன் என இயையும். அடாஅ அடு புகை—ஊர்சுடு புகை. இது வெளிப்படை என்ற இலக்கணத்தின்பாற் படும். அட்டு—செறிந்து.

அடாப்புகையை அடுபுகையெனவும், அப்புகை அட்டுமலர்ந்த மார்பன் எனவும் கூறிய சிறப்பால் இச்செய்யுளுக்கு அட்டுமலர் மார்பன் என்று பெயராயிற்று.

ஊர்சுடுபுகை உடலிற் பரத்தல் "வாடுக விறைவநின் கண்ணி யொன் னார், நாடுசுடு கமழ்புகை யெறித்தலானே" (புற 6: 21—2) என்பதனாலு மறிக. சேரலாதன் பகைவர் நாட்டை எரியூட்டி அழிவுசெய்தமை, "யாண்டு தலைப்பெயர வேண்டுபுலத் திறுத்து, முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்ற மொடு" (பதிற் 15. 1—2) என்பதனாலு மறிக. 'அட்டுமலர் மார்பனென்றது

பகைவரைக் கொன்று அரசெருக்கானே அகன்ற மார்பனென்றவாறு; இச் சிறப்பானே இதற்கு, அட்டுமலர் மார்பன் என்று பெயராயிற்று' என்பர் பழையவுரைகாரர்.

21—23 பரிசின்மாக்கள்—பரிசிலர். அவர் பாணர் கூத்தர் முதலானோர். எமர்க்கு என்றது தன் பாணராகிய எமர்க்கு என்றவாறு. எமர்க்கும் பிறர்க்கும் கொடைக்கடனமர்ந்த என முடிக்க. வல்லாராயினும் என்று ஒரு கல்விமாட்டாதவர் கூறப்படுதலின் யாவராயினும் என்றது எமர்க்கும் பிறர்க்கும் எனப்பட்ட பரிசின்மாக்களிற் கண்டார் மதிக்கும் தோற்றமில்லாதாரை என்க. உம்மை, இழிவு சிறப்பு. வல்லாராயினும் என்பதற்குச் 'சிலவற்றைச் சொல்ல அறியாராயினும்' எனினுமாம். 'வல்லினும் வல்லேனாயினும்' என்பதற்குச் 'சிலவற்றைச் சொல்ல அறிவேனாயினும் அறியேனாயினும்' எனப் புறநானூற்றுரைகாரர் பொருளுரைத்தவாறு காண்க. (புற 161: 23 உரை) பயன் கருதாது பிறர்க்கீயும் சேரலாதன், பரிசின் மாக்கள் யாவராயினும் வல்லாராயினும் வறுமையான் வருந்தி வந்தோராதலின் அவர்க்குக் கொடைக்கடனமர்ந்தான். "உண்ணாமையின் ஊன்வாடித், தெண்ணீரிற் கண்மல்கிக், கசிவுற்றவென் பல்கிளையொடு, பசியலைக்கும் பகையொன்றென்கோ......எமக்கீவோர் பிறர்க்கீவோர், பிறர்க்கீவோர் தமக்கீபவென வனைத்துரைத்தனன் யானாக" (புற 136. 6—22) என்பதும், 'எமக்கீவோர் பிறர்க்கீவோர்' என்பதற்கு 'வறுமையுற்ற எங்களுக்கு ஒன்றை இடுவோரன்றே பயன் கருதாது பிறர்க்கு இடுமவர்களாவர்' என அதன் உரைகாரர் எழுதிய வுரையும் ஈண்டு சிந்திக்கற்பாலன. வல்லார் முதலியோர்க்கும் ஈதல்வேண்டுமென்பது "வல்லாராயினும் வல்லுநராயினும், வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி, யருள வல்லை யாகுமதி" (புற 27: 15—7) எனச் சான்றோர் கூறுமாற்றானு மறியப்படும். 'வரையாது கொடுத்தலும்—அங்ஙனம் கல்விமிகுதியில்லாத பரிசிலர்க்குக் கொடாதிருத்தலை மேற்கொள்ளாதே அவர்கள் அளவிற்குத் தக்கவற்றைக் கொடுத்தலையும்' (சிறுபாண் 217—8 நச்) என்பதும் ஈண்டறியற்பாலது. வல்லாராயினும் என்ற உம்மை வல்லுநர்க்கும் கொடைக்கடனமர்ந்தான் என்பது பட நிற்றலின் எச்சவும்மை.

> "வல்லினும் வல்லா ராயினும் சென்றோர்க்குச்
> சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
> மாஅல் யானை ஆஅய்" அக 152: 19 21.

என வருதல் காண்க. வல்லாராயினும் என்ற உம்மை எதிர்மறை என்று பழையவுரைகாரர் உரைத்தது வல்லார்க்குக் கொடுத்தலின்மைபற்றியென்க. 'வல்லாராயினும்......அருளவல்லை யாகுமதி' (புற 27: 15—7) எனச் சான்றோர் அறிவுறுத்துவதனால் வல்லார்க்குச் சிலர் கொடாதொழிந்தமை துணியப்படும். ஈகை கடனாதல்பற்றிக் 'கொடைக்கடன்' என்றார். "ஈதல் இசைபட வாழ்தல்" எனத் திருவள்ளுவர் பணித்தவாறும் காண்க. (குறள் 231) கடன்—கடமை. "அடனசை மறந்தவெங் குழிசி மலர்க்குங், கடனறியாளர் பிறநாட் டின்மையின்" புற 393: 4—5. கொடைக்கடனமர்ந்த சேர

லாதன் தன்பாற் பரிசில்பெற வந்த பரிசின்மாக்கள் கண்டார் மதிக்கும் தோற்றமுளராயினும் இலராயினும் ஒருகலை வல்லுநராயினும் மாட்டாரா யினும் அவரவர் தகுதிக் கேற்ப ஈயும் கோட்டமில்லாத நெஞ்சினனாதலின் 'கொடைக்கட னமர்ந்த கோடா நெஞ்சினன்' என்றார். "கொடைக் கட னேன்ற கோடாநெஞ்சின் உதியன்" ( அக 168: 6—7.) எனப் பிறரும் கூறுதல் காண்க.

நடந்து (10) கடந்து (13) நிறீஇ (14) வீசி (16) என நின்றவற்றை நெஞ்சினன் (23) என்னும் முற்றுவினைக் குறிப்பொடு முடிக்க.

24—27. உலகில் நிலைபெற்ற உயிர்களின் பசியையும் நீர்வேட்கை யையும் நீக்கும் எழிலி, யாண்டுபலவாகப் பெய்யாதொழியின் அவ்வுயிர்கள் அழியுமாகலின் "மன்னுயிரழிய யாண்டுபல மாறி எழிலி தலையாதாயினும்" என்றார். "மன்னுயிரழிய யாண்டுபல துளக்கி .....தண்ணியலெழிலி தலை யாது மாறி, மாரி பொய்க்குவதாயினும்" (பதிற் 18: 8—11) என வந்தவா றுங் காண்க. மாறி என்றது யாண்டுதொறும் பருவம் பொய்யாது பெய் யும் நன்னியல்பில் மாறுபட்டு என்றவாறு. பருவம் பொய்யாது பெய்தல் வானத்தின் இயல்பு. "பொய்யா வானம்" என்றார் பிறரும். (நெடுநல் 2; சிலப் 23. கட்டுரை 9) "துளிபதனறிந்து பொழிய" (புற 391: 20) என்பதும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. தலையாதாயினும், உம்மை எதிர்மறை.

யாண்டு பலவாக எழிலி தலையாதொழிதலால் விளைவஃகிப் பயன்கள் குன்றிய வற்கடகாலத்தும் இரவலர்க்கு வயிற்றிற் பசி மிகும்படி சிறிது ஈதலைச் செய்யானாதலின் 'வயிறு பசிகூர வீயலன்' என்றார்.

"அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்க வவன்றாளே" புற 103: 11—2.

"வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை
யிரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெய
...... ............ ......... ...... .. .... டொருந்திக்
தன்னிலை யறியுந னாக வந்நிலை
யிடுக்க ணிரியல் போக வுடைய
கொடுத்தோ னெந்தை கொடைமேந் தோன்றல்" புற 388: 1—7.

என்பன ஈண்டறியற்பாலன. இதனால் வற்கடகாலத்தும் இரவலரின் பசி தணியுமாறு நிரம்பக் கொடுத்தல் கூறினர். 'வயிறுபசிகூர வீயலனென மூன்றாவதும் கொடை கூறியதற்கு, மழை பெய்யா விழைவில் காலைத் தன் பரிகரமாயுள்ளார்க்கு அவர்கள் பசித்து வருந்தாமல் வேண்டும்பொழுது களிலே வேண்டுவன கொடுக்குமென்று ஓர் கொடை நிலையாக வுரைக்க' என்பர் பழையவுரைகாரர்.

பலர்புகழ் பண்பினையுடைய சேரலாதன் பாணர் கூத்தர் முதலாகிய யாவர்க்கும் வேண்டுவன வழங்கி அவர்கள் இன்மை தீர்க்கும் நல்லோ னாய் வாழ்ந்தானாகலின் அவனை ஈன்ற தாய்வயிற்றை வியந்து "வயிறு மாசிலீஇய ரவன் ஈன்ற தாயே" என வாழ்த்தினர். "புலிசேர்ந்து போகிய

கல்லளை போல, ஈன்ற வயிரோ விதுவே, தோன்றுவன் மாதோ போர்க் களத் தானே" (புற 86: 6) என ஒரு வீரனைப் பெற்ற தாய் தன் வயிற்றை எடுத்துக் கூறுதலுங் காண்க. நல்லோன் ஒருவனை வாழ்த்துதலொடு அவனைப் பெற்ற தாய் தந்தையரையும் வாழ்த்தல்,

*"சிறுவெள் ளருவிப் பெருங்க ணுடனை*
*நீவா ழியர்நின் தந்தை*
*தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே" புற 137: 13—5.*

என வருமாற்றானறியப்படும். தாய்வயிறு விளங்குவாளாகவென்றது அத் தாய் வயிற்றை யாவரும் புகழ்ந்து பேசுமாறு அவள் வயிற்றிற் பிறந் தோர் இசைமேஎந் தோன்றல்களாய் நெடுங்காலம் வாழ்தலொடு, அவர் கள் சந்ததியும் வழிவழிப் பெருகுவதாக என்பதாம். அவன் ஈன்ற தாய் வயிறு மாசிலீஇயர் என்பதற்கு அவனைப்பெற்ற தாயின் வயிறு குற்ற மின்றி விளங்குக' என்றுரைப்பினும் அமையும்.

இதனாற் சொல்லியது அவன்றன் செல்வப் பொலிவு கண்டு நீ யாருடைய பாணன் என்று வினவியாற்கு யான் இன்னாருடையேன் என்று சொல்லி முடிக்க அவன் குணங்கள் இன்ன கூறிப் பின் அவனை வாழ்த்தி முடித்தவாறாயிற்று.

வாய்த்தலறியான்; பொய்த்தலறியான்; அட்டுமலர் மார்பன்; கொடைக் கடனமர்ந்த கோடாநெஞ்சினன்; வயிறு பசிகூர வீயலன் என அவன் இயல்புகளை மொழிந்து அவனை வாழ்த்தி முடித்தலின் துறை இயன்மொழி வாழ்த்தாயிற்று.

'இருமுந்நீர்' (2) எனவும், 'முரணியோர்' (3) எனவும், 'கடிமிளை' (17) எனவும், 'நெடுமதில்' (18) எனவும் எழுந்த நான்கடியும் வஞ்சியடியாக லான் வஞ்சித்தூக்குமாயிற்று.

'கனவினும்' என்பது கூன்.

---

## பழையவுரை.

3 முரணியோரையென விரியும் இரண்டாவதனைத் தலைச்சென்றென் பதற்கு இடத்திலே சென்றென்பது பொருளாக்காது முடிவிலே சென் றென்பது பொருளாக்கி அதற்குப் போந்தபொருள் முடிவு செயலாக்கி அதனொடு முடிக்க. மேலே கொடைக் கடனமர்ந்த கோடா நெஞ்சினன் (23) என்று கொடை கூறுகின்றான் ஈண்டு ஓம்பாது வீசி(16)என்று கொடை கூறியதற்குக் காத்தற்குச் சென்றவிடைக் கொண்டவற்றைக் களம்பாடச் சென்றோர்க்குக் கொடுக்கும் கொடையெனவுரைக்க. 20. அடாஅ அடுபுகை— ஊர்சுடு புகை. அட்டுமலர் மார்பனென்றது பகைவரைக் கொன்று அச் செருக்கானே அகன்ற மார்பனென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு அட்டு மலர் மார்பன் என்று பெயராயிற்று. 21. எமர்க்கும் பிறர்க்குமென நின்ற வற்றைக் கொடைக்கடனமர்ந்தவென்பதோடு முடித்து, எமர்க்கென்றது தன் பாணராகிய எமர்க்கென்றும், பிறர்க்கென்றது தன்பாணரல்லாத பிறர்க் கென்றும் உரைக்க. 21-2 பரிசின் மாக்கள் யாவராயினும் வல்லாரயினு

மெனக் கூட்டிப் பரிசின்மாக்களென்றதற்கு முன்சொன்ன எமர்க்கும் பிறர்க்குமெனப்பட்டாரையே ஆக்கி, யாவராயினு மென்றதற்குக் கண்டார் மதிக்கப்படும் தோற்றமிலராயினுமெனவும், வல்லாராயினு மென்றதற்கு ஒரு கல்விமாட்டாராயினுமெனவும் உரைக்க. யாவராயினுமென்ற உம்மை இழிவு சிறப்பு; வல்லாராயினும் என்ற உம்மை எதிர்மறை. நடந்து (10) கடந்து (13) நிறீஇ (14) வீசி (16) என நின்றவற்றை நெஞ்சினன் (2) என்னும் முற்றுவினைக் குறிப்பொடு முடிக்க. 26. வயிறு பசிகூர வீயலனென மூன்றுவதும் கொடை கூறியதற்கு மழைபெய்யா விளைவில்காலைத் தன் பரிகரமாயுள்ளார்க்கு அவர்கள் பசித்து வருந்தாமல் வேண்டும் பொழுதுகளிலே வேண்டுவன கொடுக்குமென்று ஓர் கொடை நிலையாக வுரைக்க.

நுங்கோ யாரென வினவின் எங்கோ (1) சேரலாதன்; அவன் கண்ணி வாழ்க (5); அவனியல்பிருககுமாறு சொல்லின் மாற்றேர் தேஎத்து மாறிய வினையே (7) வெயிற்றுக ளனைத்தும் வாய்த்தலறியான் (6); பொய்த்தலறியான் (9); அட்டுமலர் யார்பன் (20); கொடைக்கடனமர்ந்த கோடாநெஞ்சினன் (23); கோடையிடத்து எழிலி தலையாதாயினும் (25) வயிறு பசிகூர வீயலன் (26) ஆதலான் அவனையீன்ற தாய் வயிறு விளங்குவாளாக (27) வினை முடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன்றன் செல்வப் பொலிவு கண்டு நீ யாருடைய பாணனென்று வினவியாற்கு யான் இன்னாருடையேனென்று சொல்லி முடிக்க அவன் குணங்கள் இன்ன கூறிப் பின் அவனை வாழ்த்தி முடித்தவாறாயிற்று.

'இருமுந்நீர்' (2) எனவும், 'முரணியோர்' (3) எனவும், 'கடிமிளை' (1 ) எனவும், 'நெடுமதில்' (18) எனவும் எழுந்த நான்கடியும் வஞ்சியடியாகலான் வஞ்சித்தூக்குமாயிற்று. கனவினுமென்பது கூன்.

---

## ஒப்புமைப் பகுதி

3. **தலைச்சென்று:** மதுரைக் 68, 139, 221; புற 16: 3; 221: 5.

4. **கடுஞ்சினமுன்பு:** "காலனனைய கடுஞ்சின முன்ப" பதிற் 39: 8; "கடுஞ்சின முன்பிற் களிறு" நற் 103: 3

4—5. சேரலாதன் கடம்பு முதல் தடிந்து: பதிற் 11: 13—6 அடிக் குறிப்பு.

5. **நெடுஞ்சேரலாதன்:** "குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்கு" பதிற் 5ம் பதிகம் 2; "குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு" 6-ம் பதிகம் 1.

**கண்ணியை வாழ்த்தல்:** "யாங்குவல் லுநையோ வாழ்கநின் கண்ணி" "உள்ளியது முடித்தி வாழ்கநின் கண்ணி" "சினஞ்செலத் தணியுமோ வாழ்கநின் கண்ணி" பதிற் 52: 27; 54: 2; 59: 13; "வாழ்கநின் கண்ணி" நற் 121: 7; "இனிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி" அக 314: 13; "வேல்கெழு குருசில் கண்டே னதலின், விடுத்தனென் வாழ்கநின் கண்ணி" புற 198: 11; .-2; "வண்டார் கமழ்கண்ணி வாழ்க வென்று' பு. வெ. மா. 13; வாழ்கநுங் கண்ணி மாதோ" சீவக 1890.

7. **ஒன்னார்தேஎத்து:** "பகைவர் தேஎத் தாயினும்" பதிற் 32: 16.

9 **தண்ணார்:** பட்டினப் 225; பு வெ. மா. 46.

10. **ஒன்னார்தேய:** "ஒன்னார் தேயப் பூமலைந் துரைஇ" "தம்பெயர் போகிய வொன்னார் தேய" **பதிற்** 40: 9; 88: 4.

**வடிமணி:** **பதிற்** 31: 5; 52: 2; **பெரும்பாண்** 120; **பட்டினப்** 232, **ஐங்** 468; **பரி** 12: 29; **கலி** 97: 13; **அக** 350: 7; **பு. வெ. மா** 253.

11—2. மணியையுடைய யானை **பதிற்** 33: 2—3; **சிறுபாண்** 141: 2; **நற்** 227: 5; **பரி** 19: 28: **கலி** 99: 7; **புற** 22: 2—8; 72: 3—4; 165: 6—7 201: 4; 351: 1; **பு வெ. மா.** 53; இன்னா 14; **சீவக** 2155.

12. யானைக் கணநிரை: "நிவந்த யானைக் கணநிரை" **மதுரைக்** 744.

14. "புலவர் பாடும் புகழுடையோர்" **புற** 27: 7.

**புகழ்திறீஇ:** "தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ" **புற** 18: 3.

**விரியுளைமா:** "விரியுளைப் பொலிந்த வீங்குசெலற் கலிமா" "விரியுளை நன்மான்" "விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்" **நற்** 121: 8; 185: 4; 270: 8; **அக** 125: 16; "விரியுளை நன்மா" **ஐங்** 488; **கலி** 75: 16; "விரியுளை மான்" **திணை மாற்** 113.

**மாகளிறு தேர்:** "நெடுநல் யானையுந் தேரு மாவும்" "ஆடு நடைப் புரவியும் களிறுந் தேரும்" **புற** 240: 1; "பருமித்த களிறு மாவும் பரந்திய றேரும் பண்ணி" "ஆய்மதக் களிறு திண்டேர் அணிமணிப் புரவி" **சீவக** 263; 2178; "ஆடியல் யானையுந் தேரும் மாவும்" **சிலப்** 26: 83. "தேரும் புரவியும் வார் கவுள் யானையும்" **பெருங்** (2) 19: 218.

16. **ஓம்பாது வீசி:** "அரிய வென்று தோம்பாது வீசி" **பதிற்** 44: 4; "ஓம்பாது வீசி" **மதுரைக்** 146

15—6. பரிசிலர்க்கு மா முதலியன வழங்கல்: **பதிற்.** 'வந்தனென்' 2—3; **சிறுபாண்** 142—3; **பெரும்பாண்** 27—8; **மதுரைக்** 223—4; **மலைபடு** 399—400; **கலி** 42: 20—1; 50; 15—7; **அக** 238: 11—14; **புற** 69: 18; 114: 6; 123: 3—4; 205: 12—4. 393: 2—4; 334: 8—10; 359: 15—6; **பு. வெ. மா.** 214.

13—6. அமர்கடந்து பெற்றவற்றைப் பரிசிலர்க்கு நல்கல்: **பதிற்** 2ம் பதி 8—11; 43: 28—9; 44: 3—4; 47: 1—2; 48: 4—7; 6ம் பதி 3—4; 9ம் பதி 8—9; **சிறுபாண்** 246—8; **பெரும்பாண்** 491—3; **மதுரைக்** 145—6; 220—4; 766 நச் **மலைபடு** 71—2; **அக** 349: 5—8; **புற** 6: 11-16; 12: 3—5; 122: 6—7; 320: 16—7; **பு வெ மா.** 16: 51.

18. **நிலைஞாயில்:** "நிரை நிலை ஞாயில் நெடுமதில்: **அக** 124: 16.

17—9. கடிமிளைக் குண்டு கிடங்கின். நெடுமதி னிரைபதணத், தண்ணலம் பெருங்கோட் டகப்பா" **பதிற்** 22: 4—?; "குண்டுகண் ணகழிய மதில்" "கோள் வன் முதலைய குண்டுகண் ணகழி, வானுற வோங்கிய வளைந்துசெய் புரிசை" "குண்டுகண் ணகழிய குறுந்தாண் ஞாயில், ஆரெயில்" "நெடுமதி னிரைஞாயிற், கடிமிளை குண்டு கிடங்கின். மீப்புடை யாரரண்" **பதிற்** 22: 4—6; 45: 7; 53: 8—9; 71: 12—3; 'இலங்குதொடி' 11—3; "கல்லிடித் தியற்றிய இட்டுவாய்க் கிடங்கின், நல்லெயில்" **மதுரைக்** 730—1; "தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயிற், சிதைந்த விஞ்சிக் கதுவாய் மூதூர்" **புற** 350: 1—2; "கிடங்கு சூழ் மதில்" **சீவக** 586; "அருமிளை யுடுத்த வகழி சூழ் போகி......போருழந் தெடுத்த வாரெயில்" **சிலப்** 13: 183—9.

19, **ஆரெயில்:** **பதிற்** 29: 13; 33: 11; 62: 4; 71: 13; 84: 8; **மதுரைக்** 367; **புற** 203: 10; 392: 7; **பு. வெ. மா.** 210.

21. "எமர்க்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலின்" **புற** 161: 8.

22. **பரிசின்மாக்கள்:** "பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி" "பரிசின் மாக்கள், வரிசை யறிதலோ வரிதே" **புற** 6: 16; 121: 2—3.

***வல்லாராயினும்:*** "வல்லா ராயினும் வல்லுனராயினும்" ***புற*** 57: 1.

***கொடைக்கடன்:*** "கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து" ***பெரும்பாண்*** 445; "கொடைக்கட னிறுத்த செம்மலோய்" ***மலைபடு*** 543; 'இதனாற் கொடைக்கட னிறுத்த அவன் தொல்லோர் வரவு கூறினர்' ***மலைபடு*** 539—40 நச் வி. உரை. "கொடைக்கடனுஞ் சாஅயக் கண்ணும்" ***நாலடி*** 184.

24 ***பதிற்*** 18: 8 அடிக்குறிப்பு.

***மன்னுயிர்:*** ***பதிற்*** 15: 35 அடிக்குறிப்பு.

***யாண்டுபல:*** "யாண்டுபல கழிய" ***மதுரைக்*** 150.

25. ***தண்ணியலெழிலி:*** ***பதிற்*** 18: 10 அடிக் குறிப்பு.

24—5. ***பதிற்*** 18: 8—10 அடிக்குறிப்பு.

## பதிகம்.

மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசி னுதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மா ணல்லினி யீன்றமகன்
அமைவர லருவி யிமையம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னாரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி
அமையார்த் தேய்த்த வணங்குடை நோன்றாள்
**இமைய வரம்ப னெடுஞ்சேர லாதனைக்**
**குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு.**

அவைதாம்: புண்ணுமிழ் குருதி, மறம்வீங்கு பல்புகழ், பூத்தநெய்தல், சான்றோர் மெய்ம்மறை, நிறையவெள்ளம், துயிலின்பாயல், வலம்படு வியன்பணை, கூந்தல்விறலியர், வளனறுபைதிரம், அட்டுமலர் மார்பன். இவை பாட்டின் பதிகம்

பாடிப்பெற்ற பரிசில்: உம்பற்காட்டு ஐந்நூறூர் *பிரமதாயம் கொடுத்து முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகம் கொடுத்தான் அக்கோ.

இமையவரம்ப னெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான்.

*பிரமதாயம்—அந்தணர்களுக்கு விடப்படும் இறையிலி நிலம்.

ப—ரை: 1—3. மன்னிய பெரும் புகழ்—நிலைபெற்ற பெரிய புகழினையும், மறு இல் வாய்மொழி—குற்றம் இல்லாத மெய்ம்மொழியினையும், இன் இசை முரசின்—இனிய ஓசையையுடைய முரசினையுமுடைய, உதியஞ் சேரற்கு — உதியஞ்சேரல் என்ற வேந்தனுக்கு, வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்—வெளியன் மகளான நல்லினி என்பாள் ஈன்ற மகன்,

4—7 அமை வரல் அருவி இமையம் வில் பொறித்து—அமைந்து வருதலையுடைய இமயமலையில் வில் இலச்சினையைப் பொறித்து, இமிழ் கடல் வேலி தமிழகம் விளங்க — ஆரவாரத்தையுடைய கடலை வேலியாகவுடைய தமிழ்நாடு விளங்கும்படி, தகை சால் சிறப்பொடு தன் கோல் நிறீஇ—நன்மை அமைந்த தலைமையால் செங்கோலை நிலை நிறுத்தி, பேர் இசை மரபின ஆரியர் வணக்கி—பெரிய புகழ் பொருந்திய முறைமையினையுடைய வடநாட்டரசரை வணங்கச் செய்து,

8—13 நயன் இல் வன் சொல் யவனர் பிணித்து—இன்பம் பயத்தலில்லாத வன்சொல்லைப் பேசுவோராகிய யவனரைப் போருள் அகப்படுத்தி, நெய் தலை பெய்து—நெய்யை அவர் தலையில் இட்டு, கை பின் கொளீஇ—கையைப் பிறகு ஒன்றோடொன்று பொருந்தப் பிணித்து, அரு விலை நல் கலம் வயிரமொடு கொண்டு—மதித்தற்கரிய விலையையுடைய நன்றாகிய அணிகலன்களையும் வயிரங்களையும் பின் தண்டமாகக் கொண்டு, பெரு விறல் மூதூர் தந்து பிறர்க்கு உதவி—அவற்றைப் பெரிய வெற்றியையுடைய மூதூரிற் கொணர்ந்து பாணர் முதலிய பிறர்க்குக் கொடுத்து, அமையார் தேய்த்த—பகைவரை அழித்த, அணங்குடை நோன் தாள்—பிறரை வருத்தலையுடைய வலிய முயற்சியுடைய, இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனை—இமய வரம்பன்நெடுஞ் சேரலாதன் என்னும் வேந்தனை, குமட்டூர் கண்ணனார் பாடினார் பத்துப் பாட்டு—குமட்டூர்க் கண்ணனார் புகழ்ந்து பாடினார் பத்துப்பாட்டு.

முடிபு: இமையம் விற்பொறித்துத் தமிழகம் விளங்கத் தன் கோனிறீஇ ஆரியர் வணக்கி யவனர்ப் பிணித்து நன்கலம் வயிரமொடு கொண்டு மூதூர்த் தந்து பிறர்க்குதவி அமையார்த் தேய்த்த நோன்றாளையுடைய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு என்க.

ஆ—ரை 1—3. பெரும்புகழினையும் வாய்மொழியினையும் முரசினையுமுடைய உதியஞ்சேரல் என்க. பெரும் புகழ் என்றது வென்றி கொடை முதலியவற்றாலாய புகழை. அப்புகழ்கள்தாம் உலகுள்ளளவும் அழியாது நிலைபெறுதலின்

'மன்னிய பெரும் புகழ்' என்றார். தீங்கு பயத்தலில்லாத மெய்ம்மொழியை 'மறுவில் வாய்மொழி' என்றார்.

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்" குறள் 291

என்றார் திருவள்ளுவனார். இன்னிசை முரசின் உதியஞ்சேரல் என்றார். சேரல் முடியுடையப் பெருவேந்தனாகலின். "இன்னிசை முரசிற் பொருப்பன்" (கலி. 105—73) எனப் பாண்டியனைப் பிறர் கூறுதலுங் காண்க. முடிவேந்தர்க்கு முரசு உரியதாதல் "படையுங் கொடியுங் குடையு முரசு......தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய" (தொல்: மரபு 71) என்பதனாலறிக. வேண்மாள்—வேளிர்குல மகள். உதியஞ்சேரற்கு வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன் (3) இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதன் (13) என இயையும்.

4—7. பனிபடு நெடுவரையாகிய இமயத்து அருவி எக்காலத்தும் அமைந்து வருதலுடைமையின் 'அமைவரலருவி இமயம்' என்றார். 'அமைவர லருவி யார்க்கு மியைத்து' (கலி 105: 74—5) எனப்பிறரும் கூறுதல் காண்க. சேரலாதன் இமையத்துத் தன் இலாஞ்சனையாகிய வில்லைப்பொறித்தமை,

"வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமையத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து" அக 396: 3—5.

என மாமூலனாரும்.

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" அக 396: 16—8.

எனப் பரணரும் கூறுமாற்றுமானும் அறியப்படும். பொறித்து—வைத்து. சிறுபாண் 41 நச். தமிழகம்—தமிழ்நாடு. இது சேரர் சோழர் பாண்டியர் என்னும் மூவர்க்கும் உரியதென்பது, "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி, னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழிய தென்மனார் புலவர்" (தொல். செய்: 79) எனத் தொல்காப்பியனார் உரைத்தவாற்றானும் அறியப்படும். தமிழகத்தின் வடதிசை ஒழிந்த மூன்று திசைகளும் கடலை வேலியாகவுடைமைபற்றி 'இமிழ் கடல் வேலித் தமிழகம்' என்றார். 'தெற்கின்கட் குமரிக் கடலும் கிழக்கின் கண்ணும் மேற்கின் கண்ணும் ஒழிந்த கடலுகளுமே தமிழ் நாட்டிற்கு எல்லையென்று கூறுபடுத்த......நல்ல நாட்டிடத் தென்க' என அடியார்க்கு நல்லார் உரைத்தலுங் காண்க. ( சிலப் 8: 1—2 உரை ) கடல் வேலி—கடலாகிய வேலி எனினுமாம். வேலி—அரண். சூழ்தலுமாம். தமிழகம் விளங்கத் தன்கோல் நிறீஇ என்றது தன் நாடாகிய குடபுலமன்றித் தமிழகம் முழுமையும் விளங்கும்படி தன் கோலை நிறுத்தி என்றவாறு. இதனால் நெடுஞ் சேரலாதன் தமிழகத்தைத் தன் கோற்கீழ் வைத்தாண்டமை கூறினார். தகை சால் சிறப்பொடு தன்கோணிறீஇ என மாறிக்காட்டுக. தகை—நன்மை. என்றது அறநெறியை. கோல்—அரசாட்சி. இனி மாறாதே, தகைசால் சிறப்பொடு ஆரியர் வணக்கி எனக் கிடந்தவாறே கொண்டு அறநெறி பொருந்திய தலைமையால் ஆரியரை வணங்கச் செய்து என்று உரைப்பினும் அமையும்.

ஈண்டு "மாண்ட, அறநெறி முதற்றே யரசின் கொற்றம்" (புற 55: 9—10) என்பது அறிதற்பாலது. பேரிசை—வென்றி முதலியவற்றானாய பெரியபுகழ். சேரலாதனுக்குப் பகைவராகிய ஆரியமன்னரைப் 'பேரிசை மரபினரியர்' என மிகுத்துக் கூறியது அப்புகழுடையாரை வணக்கிய சேரலாதனின் பேராற்றல் புலப்படவேண்டி என்க.

8—13. யவனர்மொழி தீந்தமிழ் போன்று இன்பம் பயவாது கடின மொழியாயிருத்தல்பற்றி "நயனில் வன்சொல் யவனர்" என்றார். "வன்சொல் யவனர்" என்றார் இளங்கோவடிகளும். (சிலப் 29: ஊசல் வரி) யவனப் பிணித்து—தன்னொடு மாறுபட்டு எதிர்ந்த யவன அரசரின் வலியைக் கெடுத்து அவரைப் போரில் அகப்படுத்தி. பகைவரைப் போரிற் பிணித்தல்,

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொடு
ஒருங் ககப் படேஎ னாயின்" புற 72: 7-9
"பகைவர்ப் பிணிக்கு மாற்றல்" புற 229: 5.

என்பனவற்றாலும் அறியப்படும். நெய்தலை: பெய்தலும் கைபிற் கொள்ளுதலும் அவரை அவமதித்தற் பொருட்டு என்க. போரில் தோற்றார் கையைப் பிணித்தல், "போர்தோற்றுக் கட்டுண்டார் கைபோல்வ" என்னும் பரிபாடலினுங் காண்க. (பரி 18: 24) அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு என்றது அந்த யவனரைச் சிறைவிடுத்தற் பொருட்டு அருவிலை நன்கலங்களையும் வயிரங்களையும் பின் தண்டமாகப் பெற்று என்றவாறு.

"நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே" புற 156: 5—6.

எனப் பிறண்டும் வருதல் காண்க.

அருவிலை நன்கலமும் வயிரமும் கொண்டு மூதூர்த்தந்து பிறர்க்குதவி என்க. பகைவர் பாற் பெற்ற பொருள்களை தம் மூதூர்க் கொணர்ந்து பிறர்க்குக் கொடுக்கும் வழக்கம்.

"தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்து" பதிற் 6-ம் பதி.
"பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தை யாண்டவிளம் பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்துபிறர்க் குதவி" பதிற் 9-ம் பதி.

என வருவனவற்றாலுமறியப்படும்.

மூதூர் என்றது வஞ்சியை. சேரலாதன் மூதூர் வஞ்சியாதல், "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத், தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன், வஞ்சி" (அக 396: 16—9) எனவும், "முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம் பெறிந்தான், மன்னன் கோச்சேரன் வளவஞ்சி" (சிலப் 17: உள்வரி 3) எனவும் வருவனவற்றாலுமறியப்படும். அதனைப் பெருவிறன் மூதூர் என்றது *தன்னலத்தாற் பிற மூதூர்களை வென்ற பெரிய வெற்றியையுடைய மூதூராதல்பற்றி. "வலம்படு சிறப்பின்

* "வஞ்சியன்ன வென் னலந்தந்து" அக 396: 19.

வஞ்சி மூதூர்" என்றார் சிலப்பதிகாரத்தும். (சிலப் 28—4) பிறர்க்குதவி யென்றது, விலைமதித்தற்கரிய நன்கலன்களையும் வயிரங்களையும் தனக்கென ஓம்பாது பாணர்முதலாகிய பரிசிலர்க்கு அளித்து என்றவாறு. "அரிய வெல்லாமெளிதினிற் கொண், டுரிய வெல்லா மோம்பாது வீசி" என மதுரைக்காஞ்சியில் வருதல் (மதுரைக் 145: 6) ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

நோன்றாள்—வலிய முயற்சி. மலைபடு 163 நச். 'தாளென்றது படையறுத்தலும் அழித்தற்கு வேண்டும் கருவிமுதலாயின இயற்றலும்' புற 109: 13 வி. உரை. சேரலாதன் வலிய முயற்சியாற் பகைவரை அழித்தமையின் 'அமையார்த் தேய்த்த நோன்றாள்' என்றார். "மண்டம ரட்ட மதனுடை நோன்றாள்......விறல்கெழு வேந்தே" (புற 213: 1—2) எனப் பிறருங் கூறுதல் காண்க. பகைவரைக்கொன்ற முயற்சி பிறர்க்கு அச்சத்தைச் செய்தலின் அதனை 'அணங்குடை நோன்றாள்' என்றார்.

பிறர்குதவி அமையார்த் தேய்ந்த எனக் கூட்டிப் பிறர்க்கு ஈந்து அதனால் பகைவர அளித்த என்றுரைப்பினுமமையும். ஈகை வென்றிற்கு ஏதுவாதல்

"அருளா வல்லை யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத் துப்பினின் பகையெதிர்ந் தோரே" புற 27: 17—9.

என்பதன் விசேடவுரையில், 'அருளிலர் கொடாமை வல்லராகுக வென்றதனால் பயன் அவையுடையோர் பகைவரை வெல்வராதலால் பகையெதிர்ந்தோர் அவையிலராக வென்பதாம்' என அதன் உரையாசிரியர் உரைத்தவாற்றானும் அறியப்படும். அமையார்—தன்னொடு பொருந்தாதோர்; என்றது பகைவரை. இமய வரம்பன்—தன் ஆணைக்கு இமயத்தை வரம்பாகவுடையவன். சேரலாதன் தெற்கே குமரிமுதல் வடக்கே இமயம் வரை தன் ஆணையைச் செலுத்தினன் என்பது,

"ஆரியர் துவன்றிய பேரிசை யிமையம்
தென்னங் குமரியோ டாயிடை
பன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே" பதிற் 11: 23—5

என்பனவும் 'குமரியொடு வடவிமயத் தொருமொழி வைத்துலகாண்ட சேரலாதற்கு' (சிலப் 29: உரைப்பாட்டு)எனவும் வருவனவற்றிலும் அறியப்படும்.

## ஒப்புமைப் பகுதி

1. பெரும்புகழ்: "மைந்துமலி பெரும்புகழ்" பதிற் 23: 16; "உலகில் பெரும்புகழ்', பெருங் (1) 54: 82.

வாய்மொழி: பொய்யறியா வாய்மொழியால்" மதுரைக் 19.

2. இன்னிசை முரசு: 'இன்னிசை முரசு முழங்க" இன்னிசை முரச மிடைப்புலத் தொழிய" மதுரைக் 80—340; "இன்னிசை முரசி னிரங்கி" நற் 197: 10; "இன்னிசை முரசின்" கலி 105: 73; "இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்க" "இன்னிசை முரசி னிரங்கி" அக 251: 9; 312: 10;

**முரசின் உதியஞ் சேரர்:** **பதிற்** 15: 20—1. அடிக்குறிப்பு.

4. **அருவி இமையம்:** "உயர்வரை யிமயத் துச்சி, வாஅ னிழி தரும் வயங்கு வெள்ளருவி" **நற்** 369: 7—8.

**இமையத்துவிற் பொறித்தது:** "வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட், டிமயஞ் சூட்டிய வேம விற்பொறி, மாண்வினை நெடுந்தேர் வானவன்" **புற** 32: 14-6; 'விடர்ச்சிலை பொறித்த வேந்தன்'; "இமையத்து, வானவர் மருள மலைவிற பூட்டிய வானவர்"; "விற்றிலைக் கொண்ட வியன்பேரிமையத்து"; "விடர்ச்சிலை பொறித்த விறலோனாயினும்" **சிலப்** 23: 82; 25: 1—3; 25; 118; 25: 183; 28: 136; "விடர்ச்சிலை பொறித்த வேந்தன்" **மணி** 28: 104.

5. **கடல்வேலி:** விரிகடல் வேலி வியலகம்" **சிறுபாண்** 114.

**தமிழகம்:** "வையக வரைப்பிற் றமிழகம்" **புற** 168: 18; "இமிழ் கடல் வரைப்பிற் றமிழகம்" **சிலப்** 3: 47; "சம்புத் தீவினுட் டமிழக மருங்கில்" **மணி** 17: 62.

6. **தன்கோ னிறீஇ** "உம்பற் காட்டைத் தன்கோ னிறீஇ" **பதிற்** 3-ம் பதி.

**தகைசால் சிறப்பு:** "தகைசால் சிறப்பிற் றன்னொடு" **பெருங்** 37: 56

9. **நெய்தலைப் பெய்து:** **பெருங்** (3) 22: 199.

10. **அருவிலை நன்கலம்:** "அருவிலை நன்கல மமைக்குங் காலை" **புற** 218: 4; "அருவிலை நன்கலஞ்செய் போர்வை" **சீவக** 2586; "அருவிலை நன்கல மமைந்தவை பிறவும்" **பெருங்** (4) 2: 82.

11. **விறன்மூதூர்:** **பெரும்பாண்** 411; **மலைபடு** 487; **அக** 17: 19; 114: 10; **சிலப்** 19: கட்டுரை 4.

10—11 "நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து, கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின்முற் றளிப்ப" **புற** 148: 36.

7—11. **பகைவர்பாற் பெற்றவற்றைப் பிறர்க்கீதல்:** **பதிற்** 20: 13—7 அடிக்குறிப்பு.

12. **அமையார்த் தேய்த்தல்:** **பதிற்** 20: 11 அடிக்குறிப்பு.

**தோன்றுள்:** **பதிற்** 64: 14; **முருகு** 4; **பொருந** 53: 147; **சிறுபாண்** 115; **பட்டினப்** 278; **மலைபடு** 163: **நற்** 8: 7; **அக** 29: 1; **புற** 75; 6: 148:2; 182: 8; 387; 29

# மூன்றாம் பத்து

## 1. அடுநெய் யாவுதி

(21) சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவைதுணை யாக
எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
உருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்துகண் மாறா துணீஇய பாசவர்
ஊனத் தழித்த வானிணக் கொழுங்குறை
குய்யிடு தோறு மானா தார்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை யெழுந்த வடுநெய் யாவுதி
இரண்டுடன் கமழு நாற்றமொடு வானத்து
நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி
ஆர்வளம் பழுநிய வையந்தீர் சிறப்பின்
மாரியங் கள்ளின் போர்வல் யானைப்
போர்ப்புறு முரசங் கறங்க வார்ப்புச்சிறந்து
நன்கலந் தரூஉ மண்படு மார்ப
முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியற் செருப்பிற் பூழியர் கோவே
குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை
பல்பயந் தழீஇய பயங்கெழு நெடுங்கோட்டு
நீரறன் மருங்கு வழிப்படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சாச்
சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந
யாண்டுபிழைப் பறியாது பயமழை சுரந்து

நோயின் மாந்தர்க் கூழி யாக
மண்ணா வாயின் மணங்கமழ் கொண்டு
கார்மலர் கமழுந் தாழிருங் கூந்தல்
ஒரீஇயின போல விரவுமலர் நின்று
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்
அலங்கிய காந்த ளிலங்குநீ ரழுவத்து
வேயுறழ் பணைத்தோ ளிவளோ
டாயிர வெள்ளம் வாழிய பலவே.

**துறை—செந்துறைப் பாடாண் பாட்டு.**
**வண்ணம்—ஒழுகுவண்ணம்.**
**தூக்கு—செந்தூக்கு.**
**பெயர்—அடுநெய் யாவுதி. (13)**

**ப—ரை:** *1—7.* சொல்-சொல்லிலக்கணம் சொல்லும் நூல், பெயர்-பொருளிலக்கணம் சொல்லும் நூல், நாட்டம்-சோதிட நூல், கேள்வி-வேதம், நெஞ்சம் — இந்திரியங்களின் வழியோடாது உள்ளடங்கிய தூய நெஞ்சம், என்ற ஐந்து உடன் போற்றி—என்று சொல்லப்பட்ட ஐந்தினையும் ஒருங்கே பேணி, அவை துணையாக — அவ்வைந்தும் துணையாக, எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை—உயிர்க்கு வருத்தம் செய்ய எண்ணாமல் விளக்கமுற்ற கொள்கையொடு, காலை அன்ன சீர் சால் வாய்மொழி—ஞாயிற்றினைப்போல எஞ்ஞான்றும் தப்பாதாகிய நன்மையமைந்த வேதத்தினால், உரு கெழு மரபின் கடவுள் பேணியர்—உட்குதல் பொருந்திய முறைமையினையுடைய தேவர்களை வழிபடும்பொருட்டு, கொண்ட தீயின் சுடர் எழுதோறும் — எடுத்த வேள்வித் தீயின் சுடர் எழுந்தோறும், விரும்பு மெய் பரந்த—விரும்பப்படும் மெய்யின்கட் பரந்த, பெரும் பெயர் ஆவுதி—பெரிய புகழினையுடைய ஆவுதிப் புகையும்,

*8—13.* வருநர் வரையார் வாரவேண்டி — தன்பால் வருவார் அளவுபடுத்தாராய் வாரிக்கொள்ள வேண்டியும், விருந்து கண்மாறாது உணீஇய—விருந்தினர் இடம் மாறிச் செல்லாமல் உண்ணவேண்டியும், பாசவர் ஊனத்து அழித்த வால் நிணை கொழு குறை ஆட்டு வாணிகர் இறைச்சி கொத்தும் அடைகுறட்டிலே வெட்டிய வெள்ளிய நிணத்தையுடைய கொழுவிய தசையை, குய்யிடுதோறும்—பொரிக்குந்தோறும், செழு நகர் நடுவண்—வளவிய நகரின் நடுவே, கடல் ஒலிகொண்டு ஆனாது ஆர்ப்ப - கடலின் ஒலியையுடைத்தாகி அமையாது ஒலிக்கும்படி, அடு மை எழுந்த-அடுதலாற் கருமையாக எழுந்த, அடுநெய் ஆவுதி-அடிசில் நெய்யாகிய ஆவுதிப் புகையுமாகிய,

*14—19.* இரண்டு உடன் கமழும் நாற்றமொடு-இரண்டும் ஒருங்கு கமழ்கின்ற நாற்றத்தால், வானத்து நிலைபெறு கடவுளும் விழைதக பேணி-தேவருலகில் நிலைபெறுகின்ற கடவுளும் அது விரும்பத் தேவர்களையும் விருந்

தாய் வரும் மக்களையும் பேண, ஆர்வளம் பழுநிய - நிறைந்த செல்வத்திலே நின்று பழுத்த, ஐயம் தீர் சிறப்பின்-ஐயத்தினீங்கிய சிறப்பினையும், மாரியம் கள்ளின்-மாரிபோன்ற கள்ளினையும், போர்வல் யானை-போரிலே வல்ல யானையினையுமுடைய, போர்ப்பு உறு முரசம் கறங்க-தோல் போர்த்தலுற்ற முரசம் முழங்க, ஆர்ப்பு சிறந்து-ஆரவாரம் மிக்கு, நன்கலம் தரூஉம்-நன்றாகிய அணிகலங்களைக் கொணரும், மண்படு மார்ப-பகைவர் மண்ணெல்லாம் படுகின்ற மார்ப,

20—24. முல்லை கண்ணி-முல்லைப் பூவாற் செய்த கண்ணியையுடைய, பல் ஆன் கோவலர்-பல பசுவையுடைய கோவலர், புல்லுடை வியன் புலம் பல் ஆ பரப்பி-புல்லுடைய அகற்சியையுடைய நிலத்தே பல பசுவை மேயவிட்டு, கல் உயர் கடத்திடை-துறுகற்களுயர்ந்த காட்டினிடத்தே, கதிர்மணி பெறூஉம்-ஒளியையுடைய மணிகளைப் பெறுகின்ற, மிதி அல் செருப்பின் பூழியர் கோவே—மிதியாகிய செருப்பு அல்லாத செருப்பு என்னும் மலையையுடைய பூழி நாட்டார்க்கு வேந்தே, குவியல் கண்ணி மழவர் மெய்ம்மறை – போர்க் கண்ணியெல்லாம் குவிதலையுடைய கண்ணியையுடைய மழவர்களுக்கு மெய்புகு கருவி போன்றவனே,

25—29. பல் பயம் தழீஇய - பல பயன்களும் பொருந்திய, பயம் கெழு நெடு கோட்டு-பயன் பொருந்திய உயர்ந்த சிகரங்களையுடைய, நீர் அறல் மருங்கு வழிப்படா-நீர் அற்ற இடத்தின்கண் செல்லாத, பாகுடி பார்வல் கொக்கின்-கூர்மையான பார்வையையுடைய கொக்கினது, பரிவேட்டு அஞ்சா —இரையை விரும்பிக் குத்துதலுங்கு அஞ்சாத, சீருடை தேஎத்த - புகழையுடைய தேயத்தின் கண்ணேயுள்ள, முனைகெட விலங்கிய-பகைவர் போர் கெடுதற்குக் காரணமாய்க் குறுக்கிட்டுக் கிடக்கின்ற, நேர் உயர் நெடு வரை-நேரே உயர்ந்த நெடிய மலையாகிய, அயிரை பொருந – அயிரை மலைக்குத்தலைவனே,

30—38. யாண்டு பிழைப்பு அறியாது பய மழை சுரந்து—யாண்டுதொறும் பிழைத்தல் அறியாது பயன்பொருந்திய மழை சுரக்கப்பட்டு, மாந்தர்க்கு நோய் இல் ஊழி ஆக—மக்கட்கு நோய் இல்லாத வாழ்வு நெடுங்காலம் உண்டாக, மண்ணு வாயின் மணம் கமழ் கொண்டு-மயிர்ச் சந்தனத்தைப் பூசுதல் செய்யாவிடத்தும் நறுமணம் கமழ்தலைக்கொண்டு, கார் மலர் கமழும்—முல்லை மலரின் நறுமணம் கமழும், தாழ் இரு கூந்தல் – தாழ்ந்த கரிய கூந்தலினையும், ஓரீஇயின போல—அக்கூந்தலினை நீங்கின மலர்களைப்போல, இரவு மலர் நின்று—இராக்காலத்தும் மலர்ச்சி நிலைபெற்று, திருமுகத்து அலமரும் பெரு மதர் மழைகண்-அழகிய முகத்திலே சுழலும் பெரிய மதர்த்த குளிர்ந்த கண்களினையும், அலங்கிய காந்தள் இலங்கு நீர் அழுவத்து – குலை அசைகின்ற காந்தளையுடைய விளங்குகின்ற நீரையுடைய நதியின் கரையிலுள்ள, வேய் உறழ் பணை தோள் இவளோடு-மூங்கிலை ஒத்த பெருமையையுடைய தோளினையுடைய இப்பெருந்தேவியோடு, பல ஆயிர வெள்ளம் வாழிய – பல ஆயிர வெள்ளகாலம் வாழ்வாயாக.

**முடிபு:** மண்படு மார்ப, பூழியர் கோவே. மழவர் மெய்ம்மறை, அயிரைப் பொருந, பயமழை சுரந்து மாந்தர்க்கு நோயிலூழி உண்டாக இவளோடே பலவாயிரம் வெள்ளம் வாழிய என்க.

**ஆ—ரை:** 1—7. சொல் முதலிய ஐந்தையும் போற்றி அவை துணையாகக் கொள்கையொடு வாய்மொழியாற் கடவுட் பேணியர் கொண்ட தீயின் ஆவுதி என்க.

சொல் என்பது சொல்லிலக்கணஞ் சொல்லும் நூலுக்காதலின் ஆகுபெயர். பெயர் என்பது பொருள். இதனைப் "பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" (**பதிற்** 90: 23) என்பதனாலுமறிக. நாட்டம்-கண். "நுதல திமையா நாட்டம்" **அக**. கடவுள் 4. ஈண்டுக் கண்போன்று மேனிகளுங் கருமங்களை அறிதற்குக் கருவியாகிய சோதிட நூலை. "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு" (**குறள்** 392) என்றார் **திருவள்ளுவரும்**. கேள்வி-வேதம். இப்பொருட்டாதல் "வடுவில் கொள்கை யுயர்ந்தோ ராய்ந்த, கெடுவில் கேள்வியுள்" என்னும் பரிபாடலினுங் காண்க. (பரி 2:24-5) "சொற் பெயர் நாட்டங் கேள்வி" என்றொழியாது நெஞ்சையும் உடன் கூறியது இந்திரியங்களின் வழியோடாது அடங்கிய தூய நெஞ்சமில்வழி அவற்றை ஓதியுணர்ந்தும் பயனின்மையின்,

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" **குறள்** 24.

என்பது ஈண்டு அறியற்பாலது. நெஞ்சும் ஒன்றாக எண்ணப்பட்டமை தோன்ற ஐந்து எனத் தொகை கூறினர். சொல் முதலிய நான்கையும் ஓதியுணர்ந்ததோடு நெஞ்சினை இந்திரியங்களின் வழியோடாது காத்ததனால் 'ஐந்துடன் போற்றி' என்றார். உடன்-ஒருங்கு. போற்றி-பேணி. **கலி** 62: 9 நச். துணையாகக் (2) கொண்ட (6) என முடிக்க.

**விரதத்தின்கண்** உயிர்க்கு வருத்தஞ்செய்ய எண்ணுமையின் 'எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கை' என்றார். எவ்வம்-வருத்தம். "உண்ணின்ற வெவ்வ முரைப்ப" (**கலி** 144: 24) என்புழி **நச்சினார்க்கினியரும்**, "வாய் போற் பொய்ம்மொழி யெவ்வமென் களைமா" (**அக** 3: 14) என்புழி அதன் **பழையவுரைகாரரும்** எவ்வம் என்பதற்கு வருத்தம் எனப் பொருளுரைத்த வாறு காண்க. இனி, எவ்வஞ் சூழாது (3) கொண்ட தீ (6) எனக் கூட்டி உயிர்ப்பலி கொடுத்தலை எண்ணாமற் கொண்ட தீ என உரைத்தலுமொன்று. சூழாமல் எனத்திரிக்க. கொள்கையென்றது வேள்வி வேட்டற்கு உடலாக முன்பு செலுத்தும் விரதங்களை.

"கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப" **பதிற்** 74: 1—2.

என வருதல் காண்க. கொள்கை—விரதமாதல், "ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை, நான்மறை முதல்வர் சுற்றமாக......வேள்வி முற்றிய" (**புற** 26: 12—5) என்புழிக் கொள்கை என்பதற்கு 'விரதங்கள்' என அதன்

உரைகாரர் உரைத்தலானுமறிக. அது கைக்கொள்வாரிடத்து விளங்கித் தோன்றலின் 'விளங்கிய கொள்கை' என்றார்.

காலையன்ன வாய்மொழி யெனக் கூட்டி ஞாயிற்றினைப்போல எஞ்ஞான்றும் தப்பாதாகிய மெய்ம்மொழி யெனக் கொள்க.

> "முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
> யேமுற விளங்கிய சுடரினும்
> வாய்மை சான்றநின் சொன்னயந் தோர்க்கே" **நற்** 283: 6—8.

> "வாய்மை வயங்கிய வைகல்" **பரி** 2: 24.

என வருவன காண்க. காலை, நாட்காலையிற் றோன்றும் ஞாயிற்றுக்கு ஆகுபெயர். வாய்மொழி—வேதம். "வலம்புரி வாய்மொழி யதிர்புவான் முழக்குச் செல்" (**பரி** 13: 44) என்புழி 'வாய்மொழி — வேதம்' எனப் **பரிமேலழகர்** பொருளுரைத்தமை காண்க. வாய்மொழியாற் (4) கொண்டதீ (6) என்க. "மறையார் வேள்வி மந்திரச் செந்தீ" (**சீவக** 1059) பிறரும் கூறுதல் காண்க. வாய்மொழியொடு என ஓடு விரிப்பினு மமையும். வேதமொழி நன்மை பயத்தலின் 'சீர்சால் வாய்மொழி' என்றார். சீர்—புகழுமாம்.

தெய்வவடிவு மக்களுக்கு அச்சம் பயக்கும் தன்மைபற்றி 'உருகெழு மரபிற் கடவுள்' என்றார். "வாடாப் பூவி னிமையா நாட்டத்து, நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு" (**மதுரைக்** 457—8) என மாயோன் முருகன் முதலிய தெய்வங்களையும், "உருகெழு மரபி னயிரை" (**பதிற்** 88: 12) எனக் கொற்றவையையும் சான்றோர் கூறுதல் காண்க. கடவுள் என்றது ஈண்டுத் தேவர்களை. தேவர் பொருட்டு வேள்வி செய்தல், "வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப" (**பதிற்** 74: 2) "அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்" (**புற** 99: 1) என வருவனவற்றானுமறியப்படும். கடவுள் என்பதற்கு 'முனிவர்' எனக்கோடல் அமையாதோவெனின், அமையாது. என்னை? "கடவுட்பேணியர், கொண்ட தீயின் சுடரெழு தோறும், விரும்புமெய் பரந்த பெரும்பெயராவுதி" எனக் கடவுட்பொருட்டு வேள்வி செய்தல் கூறப்படுதலின்.

> "வேள்வியிற் **கடவு** ளருத்தினை கேள்வி
> யுயர்நிலை யுலகத் **தையரின்** புறத்தினை" **பதிற்** 70: 18—9.

என முனிவரின் வேறாகக் கடவுளைக் கூறி அவரை வேள்வியின் அருத்துதல் கூறப்படுதலினாலும், வேள்வியின் அருத்துதல் தேவர்களையே யென்பது "அமரர்ப்பேணியு மாவுதி யருத்தியும்" (**பட்டினப்** 200)என்பதனாலும், 'தேவர்களை வழிபட்டும் யாகங்களைப் பண்ணி அவற்றின் ஆவுதிகளை அவர் நுகரப் பண்ணியும்' என்னும் அப்பகுதி உரையானும் அறியப்படுதலினாலும் கடவுள் என்றது ஈண்டுத் தேவர்களையே யென்பது தெளியப்படும். கடவுள் என்பதற்குத் 'தேவர்கள்' என்றே இந்நூற் **பழையவுரைகாரரும்** பொருள்கொண்டனர் என்பது 'பேணியென்றது முன்சொன்ன **வேள்வியால் தேவர்களையும்**......பேணி' என அவர் உரைத்தலான் அறியப்படும்.

*நாற்றவுணவினராகிய தேவர்களைக் கருதி வேள்வித்தீயின்கண்ணே சொரியும் ஆவுதிகளை அத்தேவர் நுகர்தலின், அவரைப் பேணுதற்குக் கொண்ட தீயைக் 'கடவுட்பேணியர் கொண்ட தீ' என்றார். ஆவுதி சொரியுந்தோறும் வேள்வித்தீ ஓங்கியெழுதலின், 'தீயின் சுடரெழுதோறும்' என்றார். "சுடர்விடு வேள்வியகத்து" (பு. வெ. மா. 163) எனப் பிறாண்டும் வருதல் காண்க. சுடரெழுதோறும் மெய்பரந்த ஆவுதியெனக் கூட்டுக. அண்மையிலிருந்து ஆவுதிகளைச் சொரிதலான் எழும் ஆவுதிப் புகை மெய்யின்கட் பரத்தலின் 'மெய்பரந்த ஆவுதி' என்றார். ஆவுதி நறும்புகை மெய்யின்கட் பரத்தல் வாழ்நாள் நீட்சிக்குக் காரணமாதலின் அதனால் விரும்பப்படும் புகையை 'விரும்பு ஆவுதி' என்றார். இனி 'விரும்பு மெய் பரந்த ஆவுதி' என்பதற்கு விருப்பும் மெய்யும் பரத்தற்குக் காரணமாகிய ஆவுதியெனினுமாம். ஈண்டு விருப்பு மெய் என்னும் ஒற்று மெலிந்தது எனக்கொள்க. 'மை பரந்த' என்பது பாடமாயின் மை போலப் பரந்தவென்க. பெரும் பெயர் – பெரிய புகழ். "பெரும் பெயர்ப் பிரமன்" (சீவக 2207) ஆவுதி-தீயின்கண்ணே வேட்டலைச் செய்யும் நெய் முதலியன. "அங்கி வேட்கும் ஆவுதி" என்றார் **பட்டினப்பாலையினும்**. (பட்டினப் 54—5) ஈண்டு ஆவுதியென்றது ஆவுதிப் புகையை.

8—13. வருநர் வாரவேண்டியும் விருந்து உணீஇய வேண்டியும் கொழுங்குறை குய்யிடுதோறும் செழுநகர் நடுவண் கடலொலிகொண்டு ஆனாது ஆர்ப்ப எழுந்த ஆவுதியென்க.

வருநர் என்றது சுற்றத்தாரை. விருந்து கண்மாறு துணீஇய வென்றது விருந்தினர் சுவை மிகுதியால் வேறு இடம் மாறிச் செல்லாமல் உண்ணவேண்டி யென்றவாறு. "கொய் குரல் மலிந்த கொழுந்துவை யடிசில், இரவலர்த் தடுத்த வாயில்" (புற 250: 1—2)எனப் பிறரும் கூறுதல் காண்க. கண்மாறல்-இடம் மாறல். இப்பொருட்டாதல், "புயல்கண் மாறிய வுவகையர்" (புற 143: 4) என்பதனானுமறிக. குய்யிடுங் கொழுங்குறையைப் பாசவர் ஊனத் தறித்தமையின், 'பாசவர் ஊனத் தறித்த குறை' என்றார். பாசவர்–ஆட்டு வாணிகர். 'பச்சிறைச்சி சூட்டிறைச்சி விற்பாருமாம்' என்பர் **அடியார்க்குநல்லார்**. (சிலப் 5: 26 உரை) ஊனம்–இறைச்சி கொத்தும் அடை குறடு. "பாசவர் எஃகாடூனம் கடுப்ப மெய் சிதைந்து" (பதிற் 67: 16—7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நிணமுடைமையிற் 'கொழுங்குறை' என்றார். குறையென்றது ஆட்டுக்கிடாயின் தசையை. "மைவிடை யிரும் போத்துச் செந்தீச் சேர்த்தி.........இரப்போர்க் கீந்து" (புற 334: 4—7) என வருதல் காண்க. குய்-தாளிப்பு. ஈண்டுப் பொரித்தலை. வருவார்க்கெல்லாம் குறைவின்றி வழங்கற்பொருட்டுக் குய்யிடுதல் பன்முறை நிகழ்தலின் 'குய்யிடுதோறும்' என்றார். குய்யிடுதோறு (11) கடலொலிகொண்டு (12) ஆர்ப்ப (11)எனக் கூட்டுக.

"வையங் காவலர் வழுங்கெழு திருநகர்
மையல் யானை யயாவுயிர்த் தன்ன
நெய்யுலை சொரிந்த மையூ னோசை" புற 261: 6—8.

* "வாடாப் பூவி னிமையா நாட்டத்து, நாற்ற வுணவி னோரும்" புற 60: 16—7.

என வருதல் காண்க. இனிக் 'கடலொலிகொண்ட' என்பது பாடமாயின் கடலொலிகொண்ட நகர் என்க.

"கலங்கழு மரவமுங் கருணை யாக்குவார்
சிலம்பொலி யரவமு மிச்சில் சீப்பவர்
இலங்குபொற் கிண்கிணி யிரங்கு மோசையும்
உலம்புமா லுவர்க்கட லொலியின் மிக்கவே". சீவக 832.

என வருதல் காண்க. நகர்-அரண்மனை. 'மாளிகை' அக. 15: 11 பழையவுரை. நகர் நடுவண் என்றது அட்டிற்சாலையை.

"கொடைக்கட னென்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போலவொலி யெழுந்து" அக. 168: 6—7.

எனப் பிறண்டும் வருதல் காண்க. புகை மிகுதியால் 'மையெழுந்த' என்றார் "குரூஉக் குய்ப்புகை மழை மங்குதலிற், பரந்து தோன்றா வியனகரால்" என்றார் மதுரைக்காஞ்சியினும். (மதுரைக் 757—8) மையெழுந்த - மைபோல வெழுந்தவெனினுமாம். ஆர்ப்ப (11) எழுந்த (13) என முடிக்க.

அடுநெய்யை ஆவுதியென்றது. விருந்து புறந் தருதலையும்ஒரு வேள்வியாக்கிக் கூறலானுமென்பது.

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்" குறள் 87.

"பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்" குறள் 88.

என விருந்தோம்பலை வேள்வி என்று திருவள்ளுவர் கூறியிருத்தலும், வேள்வி —விருந்தோம்பலாகிய வேள்வி; sஐம்பெரு வேள்வியினொன்றாதலின் வேள்வியென்றும்' எனப் பரிமேலழகர் உரையெழுதியிருத்தலும் (குறள் 87 உரை) ஈண்டறியற்பாலன.

அடுநெய்யிலெழுந்த புகையை வேள்விப்புகையோடொப்பித்து அடுநெய்யாவுதியென்ற சிறப்பானே இச்செய்யுளுக்கு அடுநெய்யாவுதி யென்று பெயராயிற்று.

'அடுநெய்யாவுதியென்றது அடிசில் நெய்யாகிய ஆவுதியென்றவாறு; அடுநெய்யை ஆவுதியென்றது விருந்துபுறந்தருதலையும் ஒரு வேள்வியாக்கி †ஆள்வினை வேள்வியென்று ஒருதுறையாக நூலுட் கூறலானென்பது. இச்சிறப்பானே இதற்கு அடுநெய்யாவுதியென்று பெயராயிற்று' என்பர் பழையவுரைகாரர். 'எழுந்த' என்ற வினையான் ஆவுதியென்றது ஆவுதிப்புகையை. இரண்டு

---

S. ஐம்பெருவேளவி: கடவுள் வேள்வி, பிரமவேள்வி, பூதவேள்வி, மானுடவேள்வி தென்புலத்தார்வேள்வி யென்பன. "கடவுள் பிரமம் பூத மானுடம். - தென்புலத்தாரென் றைவகை வேள்வி பிங்கலந்தை 83

† "வான்வினைநீக்கி வருக விருந்தென்னும், ஆள்வினைவேள்வி யவன்"(215)என்று ஆள்வினைவேள்வியென்பதனை ஒருதுறையாகப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும்.

என்றது பெரும்பெயராவுதிப்புகையும் அடுநெய்யாவுதிப்புகையுமாகிய இரண்டனையும். 'ஆவுதியென்ற இரண்டனையும் அவற்றுடைய புகைமேற்கொள்க' என்பர் பழையவுரைகாரர். விருந்துகொடுத்தல் ஆள்வினை வேள்வியாமன்றி அதற்கு அடுதல் அஃதாகாது. அடுதலால் அது நிகழ்தலின் காரணத்தைக் காரியமாகக் கூறினர். இரண்டுடன் கமழு நாற்றமொடு என்றார் இருவேள்வியும் ஒருங்கு நிகழ்தலின். நாற்றமொடு (14) பேணி (15) எனக் கூட்டுக. நாற்றமொடு என்பதனை நாற்றத்தான் எனக்கொள்க. கடவுளும் விழைதக வென்றது, கடவுளும் 'இவ்வாறு நாம் அறஞ்செய்யப்பெறின் அழகிது' என்று அது விருப்ப வென்றவாறு. பேணி என்றது முன்சொன்ன வேள்வியால் தேவர்களையும் பின்பு அதனோடு ஒப்பித்துச்சொன்ன ஆள்வினை வேள்வியால் விருந்தாய்வரும் மக்களையும் பேணியென்றவாறு. அதனைத் திரித்துப் பேணப்பழுநிய (16) எனமுடிக்க. பழுநியவென்பது பெயரெச்ச வினைத் திரிசொல். ஆர் வளம் - கொடுக்கக் கொடுக்கக் குறைபடாத நிறைந்த செல்வம், "பாடுநர் கொளக் கொளக் குறையாச் செல்வத்து" (பதிற் 82:12) எனப் பிறண்டும் வருதல் காண்க. பழுநிய, முற்றுப்பெற்றவெனினுமாம். வளம் பழுநிய சிறப்பு என்க. சிறப்பின் மார்ப என இயையும் கள்ளின் மார்ப எனக் கூட்டுக. "பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி" (நற் 253: 7) எனவரல் காண்க. தன்பால்வரும் பரிசிலர்க்கு வழங்கும்பொருட்டு மாரி போன்ற கள்ளுடைமையின் "மாரியங்கள்ளின்" என்றார்.

"சேறுசெய் மாரியி னளிக்குநின்
சாறுபடு திருவி னனைமகி ழானே" பதிற் 65: 16—7.

எனப் பிறண்டும் வருதல் காண்க. 'கள்ளிற் போர்வல் யானையென்னும் ஒற்று மெலிந்தது' என்பர் **பழையவுரைகாரர்**. யானையையுடைய மார்ப என்க. "போர்வல் யானைச்சேரலாத" (பதிற் 15: 23) எனவருதல் காண்க. முரசம் என்றது வென்றிமுரசை. ஆர்ப்பு-வெற்றியாலுண்டாகும் ஆரவாரம் அது முரசம் முழங்க மிகுதலின் 'முரசங் கறங்க வார்ப்புச் சிறந்து' என்றார். ஆர்ப்புச் சிறந்து (18) நன்கலந் தரூஉம் மார்ப (19) எனக்கூட்டுக. கலம் என்றது பகைவர் நாட்டிற்பெற்ற அருங்கலங்களை. மண் என்றது பகைவர் நிலத்தை. "மயங்கமர் மாறட்டு மண்வௌவி வருபவர்" கலி 31: 9. மண்படுதற்கு மார்பின் வலி ஏதுவாகலின் மார்ப என்பது ஏதுப்பெயர்.

20-24 கோவலர் வியன்புலம் பல்லா பரப்பிக் கடத்திடைக் கதிர் மணி பெறூஉம் செருப்பிற்பூழியர் கோவே, மழவர் மெய்ம்மறை என்க.

கோவலர் முல்லைநில மக்களாதலானும் அந்நிலத்துப் பூக்களில் முல்லை சிறத்தலானும் கோவலர் முல்லைக் கண்ணியை அணிவாராயினர். "பல்லான் கோவலர் கண்ணிச், சொல்லுப வன்ன முல்லைமென் முகையே" (குறுந் 358) என வருதல்காண்க, கோவினத் தயாராகலின் 'பல்லான்கோவலர்' என்றார். பல்லான் கோவலர் என்பதற்குப் பலபசுக்களையும் பல எருதுகளையுமுடைய கோவலர் என்பர் **அடியார்க்கு நல்லார்**. (சிலப் 16:98 உரை) புல்லுடைவியன்புலம் என்றது மேய்புலத்தை, அது பல்லான்களும் மேயத்தக்க அகற்சியையுடைய நிலமாகலின் 'வியன்புலம்' என்றார்.

"காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராது சென்று பெரும்பதவப் புன்மாந்தி
நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்" கலி 109: 1-3.

என வருதல் காண்க. கடம்-காடு. மலைபடு 415 நச். ஈண்டுச் செருப்பு என்னும் மலையைச் சூழ்ந்த காட்டை. அதில் உயர்ந்த துறுகற்களுண்மையின் 'கல்லுயர் கடத்திடை' என்றார். "கல்லியல் வெம்மைக் கடம்" (திருக்கோவை 201) எனப் பிறண்டும் வருதல் காண்க. கல்லிற் பிறந்த கதிர்மணி கடத்திடைப் பரந்து கிடத்தலின் 'கடத்திடை மணி பெறூஉம்' என்றார். சிறந்த மணியாதல் தோன்றக் 'கதிர்மணி' என்றார். மணிபெறூஉம் (22) செருப்பு (23) எனக் கூட்டுக.

செருப்பு என்பது ஒருமலை. மிதியல் என்பது அடை. மிதியென்று * செருப்பிற்குப் பெயராகிச் செருப்பல்லாத செருப்பு என்று வெளிப்படுத்தாளுக வுரைக்க. 'குவியற் கண்ணி' என்னும் தொடை நோக்கி மிதியற் செருப்பென வலிந்தது. பூழியர்—பூழிநாட்டவர். § பூழிநாடு செந்தமிழ் நிலத்தைச் சூழ்ந்த கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டனுள் ஒன்று. இந்நாடு இச்சேரன் ஆட்சிக் குட்பட்டமையாயின் 'பூழியர் கோவே' என்றார். பிறசேரரும் இதனை ஆட்சிபுரிந்தமை "பூழியர் கோவே" (பதிற் 84: 6) "பூழியர் பெருமகன்" (புற 337: 28) என வருவனவற்று லறியப்படும்.

குவியற்கண்ணி யென்பதற்கு வெட்சி முதல் வாகையீருய போர்க்கண்ணியெல்லாம் குவிதலையுடைய கண்ணியெனக் கொள்க. "கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" (பதிற் 58: 8) என்புழிக் 'கண்ணி கண்ணுதல் – தாங்கள் சூடிய போர்க்கண்ணிக்கு ஏற்ப வினை செய்யக் கருதுதல்' என்ற பழையவுரையானும் வீரர் போர்க்கண்ணி சூடுதல் அறியப்படும். † வெட்சிக் கண்ணி முதலியன அவ்வத்திணையின் அடையாளமாகச் சூடப்படுவனவாகலின் குவியற் கண்ணி மழவர், வெட்சி முதலிய புறத்திணைகளை மேற்கொண்ட மழவர் என்று உணரலாம். சேரனை இம் மழவர்க்கு மெய்ம்மறை என்றது, சேரன் வெட்சி முதலிய போர்த்துறைகளை மேற்கொண்டு அப் போர்களில் மழவர்க்கு மெய் புகு கருவிபோல வலியாய் முன்னின்றமை பற்றியென்க. மழவர்—வீரர், புற 90: 11 உரை; 'சில வீரர்' மதுரைக் 395 நச்.

"திம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்" மதுரைக் 395.
"மைபடு பெருந்தோண் மழவர்" மதுரைக் 687.
"உருவக் குதிரை மழவர்" அக 1: 2.

---

* "செருப்புத் தன் காற்கேயாம்" நாலடி 35. 7. § தொல் எச்ச சூ 4 சேனாவரையர் உரை பார்க்க

† வெட்சி முதலிய புறத்திணைகளுக்கு வெட்சி முதலிய பூக்களைச் சூடுதல் மாபு, இதனை, 'வெட்சியாவது களவின்கண் நிரைகொள்ளு மொழுக்கம்; இதற்கு அப்பூச்சூடுதல் உரித்தென்று கொள்க' (தொல். புற சூ 1 நச்) 'வஞ்சியென்றது ஒருவர் மேலொருவர் சேறலை; இதற்கு வஞ்சி சூடிச் சேறலு முலகியல்' (தொல் புற சூ 5 நச்) 'தும்பையென்பது சூடும் பூவினாற் பெற்ற பெயர்' (தொல் புற சூ 114 நச்) என வரூஉம் தொல்காப்பிய உரைப்பகுதிகளானு மறிக

"தகர்மருப் பேய்ப்பச் சுற்றுபு சுரிந்த
சுவன்மாய் பித்தைச் செங்கண் மழவர்" அக 101: 4—5.
"ஓங்குதிற, லொழிறிலங்கு நெடுவேன் மழவர்" புற 88 2–3.
. "வழுவில் வன்கை மழவர்" புற 90: 11.

என வருஉஞ் செய்யுட் பகுதிகளான் மழவரின் வீரம் வலி முதலியனவற்றை அறியலாம்.

25—1: பல்பயந் தழீஇயதும் பயங்கெழு நெடுங்கோடுடையதும் கொக்கின் பரிவேட்பஞ்சாததும் சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கியது மாகிய அயிரைமலைக்குத் தலைவ என்க.

பல்பயம் என்றது மலையிற் பொருந்திய பழம் கிழங்கு தேன் முதலாகிய பொருள்களை. "பாரியது பறம்பே......உழவருழாதன நான்கு பய னுடைத்தே" (புற 109: 1—3) எனப் பிறரும் கூறுதல் காண்க. அயிரை, அருவியின் பயன் பொருந்திய உயர்ந்த சிகரங்களையுடைமையாற் 'பயங்கெழு நெடுங்கோட் டயிரை" என்றார். பயம் என்றது அருவிப் பயனுதல், "பாடின் னருவிப் பயங்கெழு மீமிசை" என்பதனுலும், 'ஓசையினிதாகிய அருவியின் பயன் பொருந்திய உச்சி மலையிலே' என்ற அப்பகுதி யுரையினுலும்(மலைபடு278 நச்) *அறியப்படும். "பாடின் னருவிப் பயங்கெழு மாமலை" எனச் சிந்தாமணியில் (சீவக 2112) வருதலும் ஈண்டறியற்பாலது. அயிரை அருவியுடைத்தாதல்,

"இழுமென விழிதரும் பறைக்குர லருவி
முழுமுதன் மிசைய கோடுதொறுந் துவன்றும்
அயிரை நெடுவரை" பதிற் 70: 23—6.

என்பதனுலுமறிக.

நீரறன் மருங்கு வழிப்படா (26) அயிரை (29) எனக் கூட்டுக. அயிரை மீன் நீர் குறைந்த இடத்து எதிரேறிச் செல்லு மியல்புடைமையின் அதனை விலக்குதற்கு 'நீரறன் மருங்கு வழிப்படா' என்றார். மீன்கள் அற்றநீர்க்கு எதிரேறிச் செல்லுமியல்பு, "கடும்புனல் சாஅய் கயல் அறல் எதிர"—'கடிதா யோடின நீரினின்றும் ஒருகால்பற்றிக் கயல்கள் அற்ற நீர்க்கு எதிரே வருகையி னுலே' என்னும் (நெடுநல் 18 நச்) உரையானும் அறியப்படும். மருங்கு—இடம். கொக்கு இரையைக் குறித்து சேய்மையிலிருந்து நுனித்து நோக்கு வதின்மையின் பாகுடி யென்பதற்குச் சேய்மையெனல் பொருந்தாதென்க. இனிப் பாகுடி அயிரை எனக்கூட்டிப் பலியாக இட்ட பொருள்களையுடைய அயிரை எனினும் அமையும். பார்வல்—பார்வை. "இன்கணுடைத்தவர் பார் வல்" குறள் 1152. கொக்கு இரையைப் பார்த்திருத்தல் "கொக்கின், பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு" (குறுந் 147) என்பதனுலுமறிக.

பரிவேட்பு என்றது ஈண்டு இரையை விரும்பிக் குத்துதலை. "கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" (குறள் 490) என்பது காண்க. கொக்கின் பரிவேட்புக்கு அயிரைமீன் அஞ்சுதலின் அதனை விலக்கி அயிரை மலை என்று பொருள் கோடற்பொருட்டுக் 'கொக் கின் பரிவேட் பஞ்சா அயிரை" என வெளிப்படை கூறினர். பயங்கெழு நெடுங்கோட் டயிரை, முனைகெட விலங்கிய அயிரை, நேருயர் நெடுவரை

அயிரை என அயிரை இன்னது என வெளிப்படுத் துரைக்கின்றவர் 'கொக்கின் பரிவேட் பஞ்சா அயிரை' எனவும் வெளிப்படை கூறியது * ஒரு வகை மீனுக்குப் பெயராகிய அயிரை என்பதைப் பெயராகவுடைமைபற்றி யென்க. இனிப் புனைந்துரை நயம்பற்றியெனினுமாம். அயிரைமலை நாடுகளினிடைப் பட்டிராது சேரநாட்டெல்லை யகத்திருத்தலின் 'சீருடைத் தேஎத்த' என்றும், புறத்தேயுள்ள பகைவர் போர் கெடுதற்குக் காரணமாய்க் குறுக்கிட்டுக் கிடத்தலின் 'முனைகெட விலங்கிய' என்றும், செங்குத்தாக உயர்ந்த நெடிய மலையாகலின் 'நேடுயர் நெடுவரை' என்றுங் கூறினர். அயிரைமலை சேரநாட்டிலுள்ளதென்பது, 'அயிரை பரைஇ யென்றது தன்னாட்டு அயிரை யென்னும் மலையில் வாழும் கொற்றவையை......வழிபட்டு' (பதிற். 3ம் பதி8 உரை) என்பதனாலும் அறியப்படும். முனை-போர். அயிரை நெடுவரையாதல் ''அயிரை நெடுவரை'' (பதிற் 70) என வருதலானுமறிக.

30—8. யாண்டு பிழைப்பறியாது பயமழை சுரந்து மாந்தர்க்கு நோயிலூழியாக இவளோடே பல ஆயிரவெள்ளம் வாழியவென்க.

யாண்டுதொறும், பிழைப்பறியாது மழை சுரத்தற்கும் மாந்தர்க்கு நோய் நீங்கப்பெற்று நெடுங்கால வாழ்வு உண்டாதற்கும் சேரன் செங்கோன்மை காரணமாதலின் ''யாண்டு பிழைப்பறியாது பயமழை சுரந்து நோயின் மாந்தர்க் கூழியாக......வாழிய'' என்றார். ''கோஒல் செம்மையிற் பெயல் பிழைப்பறியா'' (புற 117) எனவும், ''நோயிகந்து நோக்கு விளங்க......உலக மாண்ட உயர்ந்தோர் மருக'' (மதுரைக் 13—23) எனவும் சான்றோர் கூறுதல் காண்க. யாண்டு மழை சுரந்து பிழைப்பறியாது மழை சுரந்து எனத் தனித் தனிகூட்டுக. இனி யாண்டு பிழைப் பறியாது என்பதற்கு 'ஓர் யாண்டேனும் பிழைத்தலறியாது' எனினுமாம். பயமழை-உயிர்களின் பசியையும் நீர் வேட்கையையும் நீக்குதற்குப் பயன்படும் மழை. சுரந்து ஈண்டுசெயப்பாட்டு வினையெச்சம். மாந்தர்க்கு நோயிலூழியாகவென மாறிக் கூட்டுக. இனி 'நோயின் மாந்தர்க் கூழியாக' எனக் கிடந்தவாறே கூட்டி, மழை சுரத்தலான் நோயில்லாத மாந்தர்க்கு ஊழிகால வாழ்வு உண்டாக எனினுமாம். நோய்—பசியும் பிணியும். ஊழி—நெடுங்காலம். பு. வெ, மா. 16 உரை.

தாழிருங் கூந்தலினையும் மழைக்கண்ணினையும் பணைத்தோளினையுமுடைய இவள் என்க.

தன் தலைவன் வேற்றுப்புலத்து வினைசெய்தற்குப் பிரிந்துழிப் பெருந்தேவி தன் கூந்தலைக் கைசெய்யாமையின் 'மண்ணுவாயின்' என்றார். உயர்குடிப் பிறந்த கற்புடை மகளிர் கணவன் பிரிந்தவழித் தம் கூந்தலைப் புனைந்து கொள்ளார் என்பது.

* அயிரை என்பது ஒருவகை மீனுக்குப் பெயராதல், ''அயிரைக் கொழுமீ னார் கைய'' (பதிற் 29: 4—5) ''தொண்டி முன்றுறை யயிரை'' ''தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை, நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்'' (குறுந் 128, 166) என வருவனவற்றாலறிக.

அரிமதர் மழைக்க ணம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தன்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல வின்று பெயரி
னதுமனெம் பரிசி லாவியர் கோவே'' புற 147: 5—9.

என்பதனுலுமறியப்படும். மண்ணுதல்—பூசுதல். குறிஞ்சி 108 நச். தகர முத லியவற்றைப் பூசுதலாற் கூந்தல் நறுமணம் கமழ்தல், ''தண்ணறுந் தகரங் கமழ மண்ணி, மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்'' (குறிஞ்சி 108—112) ''நறுந்தண் டகரமு நானமு நாறு, நெறிந்த குரற் கூந்தல்'' (கலி 93: 21—2) ''தகர நாறுந் தண்ணறுங் கதுப்பினே'' (அக 141: 13) என வருவனவற்ரு லறியப்படும். பெருந்தேவியின் § கூந்தல் இயற்கைமணமுடைமையால் 'மண்ணு வாயின் மணங்கமழ் கொண்டு' என்ருர். ''சூழ்பொழில்வாய் முகை தணித் தற் கரிதாம் புறந்தாழ்தரு மொய்குழலே''—'சூழ்ந்த பொழிலிடத் துளதா கிய போதுகளாற் றனது நறுநாற்ற மாற்றுதற் கரிதாஞ் சுருண்ட தாழ்ந்த நெருங்கிய குழலையுடையாய்' (திருக்கோவை 314 பேர்)என்பதனுலும் கூந்த லுக்கு இயற்கைமணமுண்மை யறியப்படும். மண்ணுவாயினும் என்ற உம்மை இதாக்கது. § கற்புக்கு அடையாளமாக முல்லைமலரையணிதலின் 'கார்மலர் கம ழும் கூந்தல்' என்ருர். ''கார்மலர் கமழுங் கூந்தல்'' (அக 198: 5) எனப் பிற ரும் கூறுதல் காண்க. † முல்லை கார்காலத்து மலர்தலின் அதனைக் 'கார்மலர்' என்ருர். புறத்தே தாழ்ந்த நீண்ட கரிய கூந்தலாதலின் 'தாழிருங் கூந்தல்' என்ருர்.

ஓரீஇயினபோல வென்பதற்கு மேற் சொன்ன கூந்தலை ஒருவின குவளை மலர்களைப்போலவென வுரைக்க.

''அறலென வவிர்வருங் கூந்தன் மலரென
வாண்முகத் தலமரு மாயிதழ் மழைக்கண்'' அக 162: 10-11.

எனச் சான்ருேர் கூறுதல் காண்க. இனிப் பொய்கையென வருவித்துப் பொய் கையை ஒருவின குவளை மலர்களைப்போல வென உரைப்பினும் அமையும்.

இரண்டு கண்களும், இரண்டு குவளை மலர்கள் சேர்ந்தாற் போன்றமை யின் 'ஓரீஇயின போல' வெனப் பன்மையாற் கூறினுர். ''குவளை, யெதிர் மலர்ப் பிணைய லன்னவிவ, ளரிமதர் மழைக்கண்'' (நற் 160) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஓரீஇயின போலவெனக் கண்ணிற்கு உவமை கூறப்பட்டமைக்கு ஏற்பத் திருமுகம் என்பதற்குத் தாமரைபோலும் திருமுகம் எனக் கொள்க.

---

§ கூந்தலுக்கு இயற்கை மணமுண்மை: நற் 95: 8; 137: 1; 250: 8; 270: 2—3; குறுந் 2: 4—5; 116: 1; 199: 3—4; 270: 8; 272: 8; 312: 6; கலி 43—23; 57: 1; புற 113: 9 என்பனவற்ருலுமறியப்படும்.

† முல்லை கார்காலத்து மலர்தல்; நற் 115; 248; குறுந் 178, 126, 162, 186, 188, 220, 221, 358; 382; ஐங் 437, 448, 476 அக 114—3; 224: 4—6; 364: 7—9 ஐந் .எழு 23; கைந்நிலை 25; சீவக 413; 1931; 2882 என்பனவற்றிற் காண்க.

§ கற்புக்கு அடையாளமாக முல்லை அணிதல்: சிறுபாண் 30 நச்; அக 274;13-4, சீவக 626; 2438 நச்.

"தூமலர்த் தாமரைப் பூவினங்கண்
மாயிதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்" **அக** 361: 1—3.

எனவும்,

"தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப் பூப்போற்
காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்க டம்மால்" **சீவக** 2133.

எனவும் வருவன காண்க. "மையேர் குவளைக்கண் வண்டினம் வாழும் செந் தாமரை வாய்" (திருக்கோவை 66) என்பதும், மையழகையுடைய **குவளை போலும் கண்ணாகிய** வண்டினம் தான் வாழ்வதற்குத் தகும் இவள் **முகமாகிய தாமரை** மலர்க்கண்' என அப்பகுதிக்குப் **பேராசிரியர்** எழுதிய உரையும் ஈண்டறியற் பாலன. திரு-'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' திருக் கோவையார் 1 பேர்.

இரவுமலர் நின்று என்றது *பொம்கைப் பூப்போலன்றி இரவுக் காலத்தும் மலர்ச்சி நிலைபெற்று என்றவாறு. மலர் ஈண்டு முதனிலைத் தொழிற்பெயர். மலர் நின்று (34) அலமலரும் (35) என முடிக்க. அலம ரும்—சுழலும். "அலமர றெருமர லாயிரண்டும் சுழற்சி" என்பது தொல் காப்பியம். (உரி 14) கண் அலமரல் அச்சம் முதலிய பெண்ணியல்பால் என்க. மதர்—செருக்கு. மழைக்கண் என்பதற்கு மழைபோலக் குளிர்ந்த கண் எனி னுமாம்.

அலங்கிய காந்தள்—குலை அலங்கிய காந்தள். "குலையலங் காந்தள்" (கலி 40–12) எனவும். "அலங்குதலைக் காந்தள்" (நற் 359) எனவும் வருவன காண்க. அலங்குதல்-அசைதல். காந்தளையுடை நீரழுவம் என்க. "நீரயற் கலித்த நெரி முகைக் காந்தள்" (பரி 14-13) என வருதல் காண்க. இலங்குநீர் அழுவம்-விளங் குகின்ற நீர்ப் பரப்பு. நீர் விளங்குதல், "இலங்கு நீர்ச்சேர்ப்ப" "இலங்குநீர்த் தண்சேர்ப்ப" (**கலி** 125: 15,126: 5) என வருவனவற்றாலு மறிக. அழுவம்- பரப்பு. "உரவுநீ ரழுவத் தோடுகலம் கரையும்" **பெரும்பாண்** 350. 'அலங்கிய காந்தள்' என முன்னும் 'அழுவத்து வேய்' எனப் பின்னும் வந்த அடைகளான் நீரழுவம் என்றது நதியை. நீரழுவத்து வேய் என்றது ஒருநாளும் உடல் வெம்மையாற் கொதியாது குளிர்ந்தேயிருக்கும் தோள் என்றற்கென்க. வேயு றழ் தோள்-நிறத்தானும் திரட்சியானும் அழகானும் மூங்கிலையொத்த தோள்.

"வேய்நிறத் தோளினுர்க்கு" **சீவக** 1893.
"வேயெனத் திரண்ட தோள்" **கலி** 57: 1.
"வேய்வனப் புற்ற தோளை நீயே" **நற்** 82.

என வருவன காண்க. காந்தளுள்ளவிடத்து எழுந்த மூங்கிலைத் தோளுக்கு உவமை கூறியமையால் § அக்காந்தளையும் கைக்கு உவமையாக்குக.

---

* பொய்கைப்பூ இரவிற் கூம்புதல் "நீலம் கூம்பும் மாலை"(ஐங் 116)"இம்மாலை, இருங்கழி மாமலர் கூம்ப" "இன்கழி மாமலர் கூம்ப...... இறுத்தந்த மருண் மாலை" (கலி 130: 4—5; 147· 6—7) என வருவனவற்றிற் காண்க.

§ மகளிர் கைக்குக் காந்தள் உவமை: ஐங் 293; பரி 19 19: 76; கலி 40: 11—2; 59: 3—4; அக 105: 15—8. திணை. ஐம் 2.

"காந்தளங் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை" (153—4)

என்றார் **பட்டினப்பாலை**யினும். பெருமதர் மழைக்கண் பணைத்தோள் மகளிரின் நல்லிலக்கணங்கள். "அகலல்கு றேள்கண்ணென மூவழிப் பெருகி" (கலி 108—2) எனச் சான்றோர் கூறுதல் காண்க. இவளோடு ஆயிர வெள்ளம் வாழியவென்க.

"வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடி
..............................................
ஊழியோ டூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை" சிலப். நடுநல் 193—6.

என **இளங்கோவடிகளும்** கூறுதல் காண்க. சேரன் மாதேவியை 'இவள்' என அண்மைச் சொல்லாற் சுட்டலின் அரசனும் தேவியும் ஒருங்கிருந்துழிப் புலவர் வாழ்த்தியவாறாகக் கொள்க. மிகப் பலகாலம் வாழ்கவென்பார் 'ஆயிர வெள்ளம் வாழிய பலவே' என்றார். பல ஆயிர வெள்ளம் என மாறிக் கூட்டுக. வெள்ளம் என்பது ஒரு பேரெண்ணுதல், "வெள்ள வரம்பி னூழி" (ஐங் 281) "வெள்ளமு நுதலிய, செய்குறி யீட்டம்" (பரி 2: 4—5) 'பல ஓவெள்ளம்-பல வெள்ளம் என்னும்எண்ணைப் பெற்ற காலம்' (மதுரைக் 22 நச்) என்பனவற்றாலுமறிக.

இது **நாடு காத்தற் சிறப்புக்** கூறி வாழ்த்திய செந்துறைப் **பாடாண் பாட்டு.**

## மேற்கோள்

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" (**தொல் புற 20**) என்ற சூத்திர வுரையில், "ஐவகை மரபி னரசர் பக்கமும்" என்பதி லரசியலென்னுது பக்கமென்றதனுன் அரசர் ஏனை வருணத்தார்கட் கொண்ட பெண்பாற்கட் றோன்றிய வருணத்துப் பகுதியோருஞ் சிலதொழிற்குரியர் என்று கொள்க' என்று கூறிச் "சொற்பெயர் நாட்டம்......பெரும்பெய ராவுதி" என்ற பகுதியை எடுத்துக் காட்டி இதன்கண் ஓதியவாறுங் காண்க' என்றும், "வழக்கொடு சிவணிய வகைமை யான" என்னும் (**தொல் புற 31**) சூத்திரவுரையில் "மிதியற் செருப்பிற்பூழியர் கோவே......அயிரைப் பொருந" என்ற இது மலையடுத்தது என்றும் கூறுவர் **நச்சினார்க்கினியர்.**

## பழையவுரை

(1) சொல்-சொல்லிலக்கணஞ் சொல்லும் நூல், பெயர் – பொருளிலக்கணஞ் சொல்லும் நூல். "பெற்ற பெரும் பெயர் பலர்கை யிரீஇய" (பதிற் 90: 23) என இத்தொகையுள் மேலே வந்தமையால் பெயரென்பது பொருளாம். நாட்டம்-சோதிட நூல், கேள்வி-வேதம். நெஞ்சமென்றது இந்திரியங்களின்வழியோடாது உடங்கிய தூய நெஞ்சினை. (3) எவ்வம் சூழாமை-உயிர் வருத்தம் சூழாமை. சூழாமலெனத் திரிக்க. காலை அன்ன வாய்மொழி–ஆதித்தனைப்போல எஞ்ஞான்றும் தப்பாதாகிய மெய்ம்மொழி; மொழியானென ஆனுருபு விரிக்க; ஓடு விரிப்பினும் அமையும். துணையாகக் (2)

கொண்ட (6) என முடிக்க. (7) விருப்பு மெய்யென்னும் ஒற்று மெலிந்தது. 'மைபரந்த' என்பது பாடமாயின் மைபோலப் பரந்தவென்க. (9) பாசவர்–ஆட்டு வாணிகர். (10) ஊனம்–இறைச்சி கொத்தும் அடைகுறடு. கடலொலி கொண்டு (12) ஆர்ப்ப (11) எனக் கூட்டி ஆர்ப்ப எழுந்த (13) என முடிக்க; இனிக் 'கடலொலி கொண்ட' என்பது பாடமாயின் கடலொலி கொண்ட நகரென்க. (13) அடுநெய்யாவுதியென்றது அடுசில்நெய்யாகிய ஆவுதியென்றவாறு; அடுநெய்யை ஆவுதியென்றது விருந்து புறந்தருதலையும் ஒருவேள்வியாக்கி ஆள்வினை வேள்வியென்று ஒரு துறையாக நூலுட் கூறலானென்பது. இச்சிறப்பானே இதற்கு அடுநெய்யாவுதி என்று பெயராயிற்று. (7—13) ஆவுதியென்ற இரண்டனையும் அவற்றுடைய புகைமேற்கொள்க. (14) நாற்றமொடென்பதனை நாற்றத்தானெனக் கொள்க. (15) கடவுளும் விழைதகவென்றது கடவுளும் இவ்வாறு நாம் அறஞ்செய்யப் பெறின் அழகிதென்று அது விரும்பவென்றவாறு. பேணியென்றது முன் சொன்ன வேள்வியால் தேவர்களையும், பின்பு அதனோடு ஒப்பித்துச்சொன்ன ஆள்வினை வேள்வியால் விருந்தாய் வரும் மக்களையும் பேணியென்றவாறு; அதனைத் திரித்துப் பேணப் பழுனிய (16) என முடிக்க. பழுனியவென்பது பெயரெச்ச வினைத்திரிசொல். (16) ஆர்வளம் பழுனிய சிறப்பென்றது கொடுக்கக் கொடுக்கக் குறைபடாத நிறைந்த செல்வத்திலே நின்று பழுத்த சிறப்பென்றவாறு. (17) கள்ளிற் போர்வல் யானையென்னும் ஒற்று மெலிந்தது. ஆர்ப்புச் சிறந்து (18) கலந்தரூஉம் மார்ப (19) எனக் கூட்டுக. (19) மண்படுமார்ப வென்றது பகைவர் மண்ணெல்லாம் படுகின்ற மார்ப வென்றவாறு. பல்லா பரப்பிக் (21) கதிர்மணி பெறூஉஞ் (22) செருப்பு (23) என முடிக்க. (23) செருப் பென்பது ஒரு மலை. மிதியலென்பது அடை; மிதியென்று செருப்பிற்குப் பெயராகிச் செருப்பல்லாத செருப்பென்று வெளிப்படுத்தானாக வுரைக்க. குவியற் கண்ணி (24) என்னுந்தொடை நோக்கி மிதியற் செருப்பென வலிந்தது. மிதியற் செருப்பென்பதற்குப் பிறவாறு சொல்வாரும் உளர். (24) குவியற் கண்ணியென்றதற்கு வெட்சிமுதல் வாகையீறாய போர்க்கண்ணியெல்லாம் குவிதலையுடைய கண்ணியென்க. (26—9) பரிவேட்பு அஞ்சா அயிரையென்று வெளிப்படை கூறுகின்றானாதலின் அதற்கேற்ப, நீரறன் மருங்கு வழிப்படா வென்று பெயரெச்சமறையே பாடமாதல்வேண்டும். இனிப்படாதென்று வினையெச்ச மறையாகிய பாடத்திற்கு நீரற்றவிடத்தில் தான்படாத படியாலே கொக்கின் பரிவேட்புக்கு அஞ்சா அயிரையென வுரைக்க. அயிரை யென்பது ஒரு மலை. நெடுங் கோட்டு (25) அயிரை (29) என முடிக்க. (31) மாந்தர்க்கு நோயின்றாகியாகவென மாறிக்கூட்டுக. கிடந்தவாறும் பொருள் படும். (34) ஓரீஇயினபோலவென்பதற்குப் பொய்கையென வருவித்துப் பொய்கையை ஒருவினபோலவென உரைக்க. இனி மேற்சொன்ன கூந்தலை ஓரீஇயினபோல வென்பாருமுளர். இரவுமலர் நின்றென்பது பொய்கைப்பூப் போலன்றி இரவுக்காலத்தும் மலர்ச்சிநிலைபெற்றென்றவாறு. ஓரீஇயினபோல (34) அலமரும் (35) எனக் கூட்டுக. (36) காந்தளுள்ளவிடத்து எழுந்த மூங்கிலைத் தோளுக்கு உவமை கூறி அக்காந்தளையும் கைக்கு உவமையாக்குக.

நீரழுவம்—நதியென்க. (36—7) நீரழுவத்து வேயென்றது ஒருநாளும் உடல் வெம்மையாற் கொதியாது குளிர்ந்தேயிருக்கும் தோளென்றற்கென்க.

மண்படு மார்ப (19) பூழியர் கோவே (23) மழவர் மெய்ம்மறை (24) அயிரைப் பொருந (29) பயமழை சுரந்து (30) மாந்தர்க்கு நோயிலூழி உண்டாக (31) இவளோடே (37) பலவாயிர வெள்ளம் வாழிய (38) எனக் கூட்டி **வினைமுடிவு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் **நாடுகாத்தற் சிறப்புக்** கூறி வாழ்த்திய வாறுயிற்று.

## ஒப்புமைப் பகுதி

5. **கடவுட் பேணியர்:** "அருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்' **பதிற்** (30: 34)

8. **வருநர் வரையார்:** "வருநர் வரையாப் பெருநாளிருக்கை' **அக** 27: 15.

10. **வாளிணைக்கொழுங்குறை:** **பதிற்** 12: 16 அடிக்குறிப்பு.

10—11. "செந்தீயணங்கிய செழுநிணக் கொழுங்குறை" **அக** 237: 9.

9—11 "மையறப் புழுக்கிய நெய்கனி வெண்சோறு, வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி" **அக** 126: 1-2; "அமிழ்தட் டானுக் குய்யுடையடிசில், வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை" **புற** 10: 7-8.

12. **செழுநகர்:** **பெரும்பாண்** 435; **நற்** 159: 7; **அக** 205: 17; **புற** 391: 17.

16. **வளம் பழுநிய:** "பெட்டாங்கியும் பெரு வளம் பழுனி" **புற** 113: 3

17. **மாரியங்கள்:** "மழையென மருளு மகிழ்செய் மடத்து"**பொரு**ந84; "மாரி வண் மகிழ்" "மாரிவண்மகிழ் ஓரி" **நற்** 190: 2; 265: 7; "இரும்பிழி மாரி யழுங்கண் மூதூர்" "நனைமுதிர் சாடி, பன்னு ளரித்த கோ ஓய் உடைப்பின், மயங்கு மழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்" "தூவற் கள்ளின்" **அக** 122: 1; 166: 1-3; 298: 15.

**போர்வல் யானை:** **பதிற்** 15: 23 அடிக்குறிப்பு.

18. **போர்ப்புறுமுரசம்:** "போர்ப்புறு முரசங் கண்ணதிர்ந் தாங்கு" **பதிற்** 84: 2; போர்ப்புறு முரசி னிரங்கி" **அக** 188: 3; "போர்ப்புறு முரசங் கறங்க" **புற** 241: 4.

19. **நன்கலந்தரூஉர்:** "பாடுசா னன்கலந் தரூஉம்" "நாடுகெட வெருக்கி நன்கலந் தரூஉம்" **பதிற்** 59: 18; 83: 7; "நேரார், நாடுபடு நன்கலந் தரீஇயர், நீடினர் தோழி" **ஐங்** 463. "அம்புடைக் கையர் அரண்பல நூறி, நன்கலந் தரூஉம் வயவர் பெருமகன்" **அக**69: 18-9; "ஒன்னுர் வாட அருங்கலந் தந்து" **புற** 198: 15.

20 **கோவலர் முல்லைக்கண்ணியணிதல்:** "ஆடுடையிடைமகன் சென்னிச் சூடியவெல்லாஞ் சிறுபசு முகையே" **குறுந்** 221: 4-5; "புல்லினத்தாயர் மகன் சூடிவந்ததோர், முல்லை யொருகாழுங் கண்ணியும்" **கலி** 115: 4-5;

"இடையன் தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ, வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்" அக 94: 4—6; "முல்லையங் கண்ணி சிந்தக் கால்விசை முறுக்கி யாயர், ஒல்லென வொலிப்ப வோடி" சீவக 438.

**பல்லான் கோவலர்:** ஐங் 87: 1; 476: 3; அக 399: 11; புற 265: 4; சிலப் 16: 98.

21. மு. "புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி" பதிற் 62: 13.

20—21. "கொடுங்கோற் கோவலர், ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பி" நெடுநல் 3-4.

22. **கடத்திடை மணிபெறல்:** "கானத்து......புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்......அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்" "கடத்திடை....இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்" பதிற் 58: 12 8; 66: 17-9.

24. **மழவர் மெய்ம்மறை** 'வாலூன் வல்சி மழவர் மெய்ம்மறை" பதிற் 55: 8.

27. **பார்வல்:** பதிற் 84: 5; மதுரைக் 231; அக 22: 14; 391: 1; புற 3: 19. **பார்வற் கொக்கு:** "கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்......பார்வலிருக்கும்" அக 346: 3–11.

**முனைகெட விலங்கிய:** "ஒன்னாத் தெவ்வர் முனைகெட விலங்கி" பதிற் 53: 10.

30. **பயமழை:** "பயமழை தலைஇய" கலி 53: 7; "பயங்கெழு மாமழை" புற 266: 1.

33. **கமழுங் கூந்தல்:** நற் 6: 9–10; 95: 8; 137: 1; 250: 8; 270: 2-3; 298: 10–11; 301: 9; குறுந் 2: 4–5; 116: 1–4; 199: 4; 270: 6–8; 272: 8; 312:6; கலி 43: 23; அக 244: 4-5; 291: 22-3: 295: 21; புற 113: 9.

35. **திருமுகத் தலமருங் கண்:** "திருமுகத் தலமருங் கண்ணினைந்து" நற் 269: 6; "மலரென வாண்முகத், தலமரு மாயிதழ் மழைக்கண்" அக 162: 10-11.

"**பெருமதர் மழைக்கண்:** "ஈரிய கலுழு மிவள் பெருமதர் மழைக்கண்" குறிஞ்சி 248; "பெருமதர் மழைக்கண்" அக 361: 3; மணி 22: 83; பெருங் (1) 33: 136.

38. **ஆயிரவெள்ளம்:** "ஆயிரவெள்ளமென்றறிந்த தாழியாய்" கம்ப. இலங்கை கேள்வி 30.

**வாழிய பல:** "வழுதி வாழிய பல" நற் 150: 4; "நுண்பஃறுளியினும் வாழிய பலவே" "வயங்குபன் மீனினும் வாழியர் பலவென" புற 34: 22-3: 371: 5.

**ஆயிரவெள்ளம் வாழிய:** "ஆயிர வெள்ள வூழி, வாழியாத வாழிய பலவே" பதிற் 63: 20-1.

## 2. கயிறுகுறு முகவை.

(22) சினனே காமங் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொ லன்புமிக வுடைமை
தெறல்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்
தறந்தெரி திகிரிக்கு வழியடை யாகுந்
தீதுசே ணிகந்து நன்றுமிகப் புரிந்து
கடலுங் கானமும் பலபய முதவப்
பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது
மையி லறிவினர் செவ்விதி னடந்துதம்
அமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி யுய்த்த வுரவோ ரும்பல்
பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்
சிரறுசில வூறிய நீர்வாய்ப் பத்தற்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்
உளைப்பொலிந்த மா
இழைப்பொலிந்த களிறு
வம்புபரந்த தேர்
அமர்க் கெதிர்ந்த புகன் மறவரொடு
துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை
ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவிக்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதி னிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ
போர்த்தெறிந்த பறையாற் புனல்செறுக் குநரும்
நீர்த்தரு பூசலி னம்பழிக் குநரும்
ஒலித்தலை விழவின் மலியும் யாணர்
நாடுகெழு தண்பணை சீறினை யாதலிற்
குடதிசை மாய்ந்து குணமுதற் றோன்றிப்
பாயிரு ளகற்றும் பயங்கெழு பண்பின்

ஞாயிறு கோடா நன்பக லமயத்துக்
கவலை வெண்ணரி கூமுறை பயிற்றிக்
கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்
கருங்கட் பேய்மகள் வழங்கும்
பெரும்பா ழாகும மன்னிய தாமே.

**துறை-வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.**
**வண்ணம்-ஒழுகுவண்ணமும் சொற்சீர் வண்ணமும்.**
**தூக்கு-செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்**
**பெயர்-கயிறுகுறு முகவை (14).**

*சினன்-அளவிறந்த சினமும், காமம்—அளவிறந்த காமமும், கழி கண்ணோட்டம்-அளவிறந்த உவகையும், அச்சம்-பகைவர்க்கு அஞ்சுதலும், பொய்ச்சொல்-பொய் கூறுதலும். அன்புமிக உடைமை-பொருண்மேல் மிக்க அன்புடைமையும், தெறல் கடுமையொடு பிறவும்-குற்றத்தின் மிக்க தண்டமும் ஆகிய இவற்றொடு பிறவுமாகிய, இவ்வுலகத்து அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும் தீது-இவ்வுலகத்தே தரும நூனெறியைத் தெரிந்து செலுத்தும் ஆக்ஞா சக்கரத்துக்குத் தடையாகும் தீமைகள், சேண் இகந்து-தூரத்தே விட்டு நீங்க, நன்று மிக புரிந்து - நன்றாகிய கருமங்களை மிகவும் செய்து, கடலும் கானமும் பல பயம் உதவ-கடலும் காடும் பலவாகிய பயன்களைக் கொடுக்க, பிறர் பிறர் நலியாது-ஒருவரை ஒருவர் வருத்தாமலும், வேற்று பொருள் வெஃகாது-பிறர் பொருளை விரும்பாமலும், மை இல் அறிவினர் செவ்வியின் நடந்து-குற்றம் அற்ற அறிவினராய்ச் செவ்விய நெறியிலே ஒழுகி, தம் அமர் துணை பிரியாது - தமது நெஞ்சிற்கு அமர்ந்த வாழ்க்கைத் துணைவியைப் பிரியாமல், பாத்து உண்டு-பிறர்க்குப் பகுத்தளித்துத் தாமுமுண்டு, மாக்கள் மூத்த யாக்கையொடு பிணி இன்று கழிய-குடிமக்கள் மூத்த யாக்கையும் பிணியுமில்லாமல் அவற்றினின்று நீங்க, ஊழி உய்த்த உரவோர் உம்பல்-நெடுங்காலம் அரசியலைச் செலுத்திய வலியுடையோருடைய வழித் தோன்றியோய்!*

*11—16.* பொன் செய் கணிச்சி திண் பிணி உடைத்து - இரும்பினாற் செய்த குந்தாலியால் திண்ணிய செறிவையுடைய பாறையை உடைக்க சிரறு சில ஊறிய நீர் வாய் பத்தல் - சிதறி ஊறுதலின்றிச் சில்லூற்றாக ஊறிய நீரைத் தன்னிடத்தே பெற்ற பத்தலினின்று, கயிறு குறு முகவை - தன் கயிற்றையே நின்று வாங்கப்படும் முகவையை, மூயின மொய்க்கும் - நீருண்ணும் பொருட்டு நெருங்கிச் சூழ்ந்தனவாய் மொய்க்கும், ஆ கெழு கொங்கர் நாடு அகப்படுத்த - பசுக்களையுடைய கொங்கரது நாட்டை அகப்படுத்திய, வேல் கெழு தானை-வேல் பொருந்திய சேனையையுடைய, வெருவரு தோன்றல்-அஞ்சத்தக்க தோன்றலே,

*17—27.* உளை பொலிந்த மா-தலையாட்டத்தாற் பொலிந்த குதிரைகளோடு, இழை பொலிந்த களிறு-பட்டம் முதலாகிய பூண்களாற் பொலிந்த யானைகளோடு, வம்பு பரந்த தேர்-தேர்ச்சீலை பரந்த தேர்களோடு, அமர்க்கு

எதிர்ந்த புகல் மறவரொடு-போரை ஏற்றுக்கொண்ட போரை விரும்பும் வீரரோடு, துஞ்சு மரம் துவன்றிய-கணைய மரங்கள் நெருங்கிய, மலர் அகன் பறந்தலை-பரந்து அகன்ற வெளியையுடைய, ஓங்குநிலை வாயில்-கோபுர வாயிற்கண், தூங்குபு தகைத்த - தூங்கக் கட்டிய, வில்விசை மாட்டிய விழுசீர் ஐயவி-வில்லின் விசையை மாளப்பண்ணிய மிக்க கனத்தையுடைய ஐயவித்துலாத்தையும், கடி மிளை-காவற் காட்டினையும், குண்டு கிடங்கின்-ஆழத்தினையுடைய கிடங்கினையும், நெடு மதில்-நெடிய மதிலினையும், நிரை பதணத்து-நிரைத்த மதிலின் உயர் மேடையினையுமுடைய, அண்ணல் அம் பெரு கோடு அகப்பா எறிந்த-தலைமையையுடைய அழகிய பெரிய சிகரங்களோடு கூடிய அகப்பாவை அழித்த, பொன் புனை உழிஞை - பொன்னாற் செய்த உழிஞை மாலையைச் சூடிய, வெல் போர் குட்டுவ-வெல்லும் போரைச் செய்யும் குட்டுவ,

28—38. போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும்-தோலைப் போர்த்து முழக்கிய பறையின் ஒலியால் ஆற்று நீரை அடைப்பவரும், நீர் தரு பூசலின் அம்பு அழிக்குநரும்-நீரிற் செய்கின்ற விளையாட்டின் ஆரவாரத்தினால் அம்பினாற்செய்யும் போரின் ஆரவாரத்தினை அழியச் செய்வாரும், ஒலி தலை விழவின் மலியும்-ஒலியைத் தன்னிடத்தே கொண்ட நீர் விழாவின் கண் மக்கள் மிக்காற்போல மிகும், யாணர் நாடு கெழுதண் பணை-புதுவருவாயையுடைய நாட்டிற் பொருந்திய மருத நிலங்கள், சீறினையாகலின்-நீ பகைவரைக் கோபித்தாயாதலின், குடதிசை மாய்ந்து குணமுதல் தோன்றி-மேற்றிசையிலே மறைந்து கீழ்த்திசையிடத்தே தோன்றி, பாய் இருள் அகற்றும்-பரந்த இருளை நீக்கும், பயம் கெழு பண்பின் - பயன்பொருந்திய பண்பினையுடைய, ஞாயிறு கோடா நன்பகல் அமையத்து-ஞாயிறு ஒருபாற் சாயாமல் நின்ற நன்றாகிய உச்சிக்காலத்தே, கவலை வெள் நரி கூ முறை பயிற்றி-கவர்ந்த வழிகளிலுள்ள வெள்ளிய நரிகள் கூவுதலைப் பலகாற் செய்ய, கழல் கண் கூகை குழறு குரல் பாணி-பிதுங்கிய கண்ணையுடைய கூகை குழறுகின்ற குரலாகிய தாளத்துக்கு ஏற்ப, கருங்கண் பேய் மகள் வழங்கும் - கொடிய கண்ணையுடைய பேய்மகள் ஆடும், அளிய தாம் பெரும் பாழாகும் மன் - இரங்கத்தனவாம்படி பெரிய பாழாகும் நிச்சயமாக.

**முடிபு:** உரவோரும்பல், தோன்றல், குட்டுவ, நீ சீறினையாதலின் நாடு கெழு தண்பணை அளியதாம் பெரும்பாழாகும் என்க.

**ஆ—ரை;** *1—11.* சினன் முதலியனவும் பிறவுமாகிய அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது சேணிகப்ப நன்று மிகப் புரிந்து, கடலும் கானமுகு பயனுதவ, மாக்கள் பிணியின்று கழிய ஊழி உய்த்த உரவோர் உம்பல் என்க.

சினன்-சினம், "சென்ற கவுதமன் சினனுற" பரி 19: 15. சினம் தன்னின் வலியார்மேலெழின் தனக்கே தீங்கு பயத்தலானும் மற்றை யெளியார்மேலெழின் இம்மைக்கட் பழியும் மறுமைக்கட் பாவமும் பயத்தலானும் முகத்தின்கண் நகையையும் அகத்தின்கண் உவகையையும் கெடுத்தலானும் அருள் முதலாகிய நற்பண்புகளை நீக்கி ஆகாதனவாகிய தீச்சிந்தைகளெல்லாவற்றையும் பிறப்பித்தலானும் சினம் மக்களாற் கடியப்படவேண்டியதொன்றாயினும்,

பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் செங்கோல் செலுத்தும் அரசர்க்கு அளவான சினம் வேண்டப்படுதலின், ஈண்டுச் சினன் என்றது அளவிறந்த சினத்தை என்க. நடுவு நின்று உண்மை ஆராயும் அரசர்க்கு அளவிறந்த சினம் தோன்றிய வழிக் கலக்கத்தான் ஒரு பொருளின் உண்மை தோன்றாமையின் *அஃது அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது என்க. " இறந்த வெகுளியிற் றீதே " (குறள் 531) எனத் திருவள்ளுவர் கூறுதலுங் காண்க. ஏகாரம் எண்ணுப்பொருட்டு. இதனைக் காமம் முதலியவற்றோடும் கூட்டுக.

காமம் என்றது அளவிறந்த காமத்தை. சிறியோர் செயலாகலின் இதனைச் 'சிறுமை' என்பர் திருவள்ளுவர் (குறள் 431). இது ஆக்கத்தைச் சிதைத்து அழிவைத் தந்து பழியையும் பாவத்தையும் ஆக்கலின் இதுவும் அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது என்க.

"காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்" குறள் 866.

என்பதன் உரையில் 'முன்னோனுக்கு யாவரும் பகையாகலானும் ஏனோனுக்குக் காரியந் தோன்றாமையானும் தாமே அறிவர்' எனப் பரிமேலழகர் உரைத்தலுங் காண்க. செங்கோன்மையனாகிய சச்சந்தன் தன் மனைவிபாற் கொண்ட அளவிறந்த காமத்தால் அவளுடன் இடைவிடாதிருப்பக் கருதித் தன் அமைச்சருள் ஒருவனாகிய கட்டியங்காரனிடம் தன் அரசியற் பாரத்தைக் கொடுத்துத் தான் எண்ணிய வண்ணம் இன்புற்றிருங்கால், தானே அரசாளக்கருதிப் படையொடு போந்த கட்டியங்காரனுடன் பொருது சச்சந்தன் மாய்ந்த செய்தி, அளவிறந்த காமம் அரசர்க்குத் தீதாதலைக் காட்டும்.

கழிகண்ணோட்டம் என்றது அளவிறந்த உவகையை. இதனை, 'மாணா உவகை' என்பர் திருவள்ளுவர். அது 'மாணா உவகையும்-அளவிறந்த உவகையும்; அளவிறந்த உவகையாவது கழிகண்ணோட்டம்' என்னும் பரிமேலழகர் உரையானும் அறியப்படும். (குறள் 432 உரை) கழிகண்ணோட்டம், செல்வம் புகழ் முதலியன கெடுதற்கேதுவாகிய § மறவி தோன்றுதற்கு ஏதுவாகலின் இதுவும் அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது என்க.

"இவறலு மாண்பிறந்த மானமும் மாணா
வுவகையு மேத மிறைக்கு" குறள் 432.

என்றார் திருவள்ளுவரும்.

அச்சம்-பவைர்க்கு அஞ்சுதல். படையும் நட்பும் அரணும் முதலாகிய திட்பங்களெல்லாம் உடையராயினும் அச்சமுடையார்க்கு அவை பயனிலவாய்க் கெட்டுப்போதலின் அச்சம் அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீதாகும் என்க. " அச்ச முடையார்க் கரணில்லை " " வினைத்திட்ப மென்ப

* அரசர் கடுஞ்சினத்தைக் கடிந்தொழுகியமை " வெஞ்சின மின்மையும் வயவரேத்த" (சிறுபாண் 210-2) என்பதனாலு மறிக

§ 'சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு—மிக்க உவகைக் களிப்பான் வரும் மறவி' குறள் 531 பரிமேல்.

தொருவன் மனத்திட்ப, மற்றவை யெல்லாம் பிற" "அஞ்சாமை யீகை அறி வூக்க மிந்நான்கும், எஞ்சாமை வேந்தர்க் கியல்பு" (குறள் 534, 661, 382) எனத் திருவள்ளுவனார் கூறுதலுங் காண்க. "பகை பெருமையிற் றெவ்வஞ் செப்ப" (பதிற் 82: 1) என்பதனாலும் பகைவர்க்கு அஞ்சுவார்க்கு அரண் முத லியன அரணாகாமை தெளியப்படும்.

பொய்ச் சொல், புகழைக் கெடுத்துக் காரியக்கேட்டிற்கு ஏதுவாகலின் இதுவும் அறந்தெரி திகிரிக்கு வழியடையாகுந் தீது என்க. "உயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும், பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே" (மது ரைக் 197-8) என்பதனால் பண்டைத் தமிழ் அரசர் பொய்ச்சொல்லைத் தவிர்ந் தொழுகியமை அறியப்படும்.

அன்புமிகவுடைமை, பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படுவனவற் றைச் செய்துகொள்ளாது அதன்மேல் அளவிறந்த பற்றுள்ளமுடையனாதல். இது 'உலோபம்' எனப்படும். 'பற்றுள்ளம்' என்பர் திருவள்ளுவர். பொருளாற் செய்யப்படுவன: அறம் பொருள் இன்பங்கள். பொருளின்கட் பற்றுள்ளானது செல்வம் பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடுதலி னாலும் குணங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்துதலினாலும் அன்பு மிக வுடைமை அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது என்க.

"பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று" குறள் 433.

என்றார் திருவள்ளுவரும்.

தெறல் கடுமையை, 'மிகுதண்டம்' என்றும் 'கையிகந்த தண்டம் என் றும் ஆன்றோர் கூறுவர். தெறல் தெறுதல்; தெறுதல் - தண்டஞ் செய்தல். தண்டமாவது: ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியினும், வழீஇயினாரை அந் நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்பநாடி யத்தக வொறுத்தல். இவ்வாறு ஒறுத் தல் அரசர்க்கு முறையாயினும் தெறல் கடுமையினால் தேசமும் கெட்டு பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடும் சுருங்குதலின் இதுவும் அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது என்க.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்" குறள் 567.

என்றார் திருவள்ளுவனார்.

பிறவும் என்றது செல்வக் களிப்பாகிய செருக்கு, நன்மையினீங்கிய மானம், மிக்க உவகைக் களிப்பான் வரும் மறவி முதலாயினவற்றை. பிறவு மாகிய தீது என்க. இச் சேரனின் முன்னோர் தருமநூனெறியைத் தெரிந்து உலகோம்பியமையின் 'இவ்வுலகத்து அறந்தெரி திகிரிக்கு' என்றார், அரசர் அறம் தெரிந்து அரசு புரிந்தமை, "மன்னவன்......நல்லாற்றி னுயிர் காத்து" — 'அரசன்......நல்ல தருமநூனெறியாலே பல்லுயிர்களையும் பாதுகாத்து' (கலி 118: 1-2 நச்) என்பதனாலுமறியப்படும். திகிரி-ஆக்ஞா சக்கரம், வழி யடை-தடை, இப்பொருட்டாதல் 'குன்றம் உருண்டால் குன்றி வழியடை யாகாதவாறு போலவும்' (இறை. சூ 3 உரை) எனவருதலானு மறிக. சினன்

முதலாகத் தீமைகள் பலவாயினும் சாதிபற்றித் தீது என்றூர். தீமைகளை முற்றுகக் கடிந்தொழுகியமையின் 'சேணிகந்து' என்றூர். இகந்து என்பதனைத் திரித்து இகப்ப உய்த்த (11) என முடிக்க.

நன்று என்றது செவ்வியோர்க்கு அளித்தல் யாவர்க்கும் தலையளி செய்தல் முதலியவற்றை. கடிந்த தீமைகளிலும், செய்த நன்மைகள் மிகப்பலவாதலின் 'நன்று மிகப் புரிந்து' என்றூர். புரிந்து உய்த்த(11) என முடிக்க.

கடலும் கானமும் பல பய முதவ என்றது உரவோரின் செங்கோன்மையால் கடலும் கானமும் பலவாகிய பயன்களை உதவ என்றவாறு. "நிலம் பயம் பொழிய......இலங்கு கதிர்த் திகிரி முந்திசி னேரே" (பதிற் 63: 13-7) எனவும், "தொடுப்பினுயிரம் வித்தியது விளைய, நிலனு மரனு பயனெதிர்பு நந்த......உலக மாண்ட உயர்ந்தோர்" (மதுரைக் 11-23) எனவும் வருவன காண்க. கடலும் கானமும் என்றுராயினும், உபலக்கணத்தால் மருதமும் குறிஞ்சியும் பலபய முதவுதலுங்கொள்க.

"கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னுட்டு" **பதிற் 15: 16-7.**

எனக் **குமட்டூர்க்கண்ணனர்** கூறுதலுங் காண்க. 'உதவ' என்பதனையும் உய்த்த(11) என்னும் வினையொடு முடிக்க.

பிறர் பிறர் நலியாது வேற்றுப் பொருள் வெஃகாது மையிலறிவினராய்ச் செவ்விதின் நடந்து தம் துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள் மூத்த யாக்கையும் பிணியுமின்றிக் கழிய ஊழி உய்த்த உரவோர் என்க. பிறர் பிறர் நலியாது என்றது கருவியிற் கொல்லுதல் தீக்கொளுவுதல் முதலிய தீச்செயல்களாற் குடிமக்கள் ஒருவரை ஒருவர் நலியாது என்றவாறு. நலிதல்-வருத்துதல். "வயவு நோய் நலிதலின்" கலி 29: 1. பிறர் பொருளை விரும்பலும் குற்றமாகலின் வேற்றுப் பொருள் வெஃகாது என்றூர். பிறர் நலியாது பிறர் வேற்றுப்பொருள் வெஃகாது என நிரனிறையாகக் கூட்டிப் பொருளுரைப்பாருமுளர். வேற்றுப் பொருள் பிறர் பொருளாகலின் அவ்வாறு உரைத்தல் பொருந்தாதென்க. தெறலும் அன்பு மிகவுடையும் அரசர் தொழிலாக முற் கூறப்பட்டமையின் பிறர் பிறர் நலியாது வேற்றுப் பொருள் வெஃகாது ஒழுகுதலைக் குடிமக்கள் செயலாகக் கொள்க. மையில் அறிவு-ஐயந் திரிபு மயக்கங்களாகிய குற்றங்களினீங்கிய அறிவு. மை-குற்றம். "மையறுசிறப்பி னுயர்ந்தோர்" (தொல். களவு சூத் 26) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மையிலறிவினர் என்றதனுல் குடிமக்கள் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் பகுத்துணரும் அறிவுடையராமாறு இச்சேரனின் முன்னேர்கல்வியை வளம் படுத்தியமை கூறினர். தம் அறிவிற்கேற்ப நடுவுநிலைமை யுடையோராய் ஒழுகினமை தோன்றச் 'செவ்விதின் நடந்து' என்றூர். செவ்விதின்-நடுவுநிலை மையுடையோராய். 'செவ்வியோர் — நடுவுநிலைமையுடையோர்' எனப் **புறப் பாட்டுரைகாரர்** உரைத்தலுங்காண்க. (புற 29: 8 உரை)

தம் துணை எனக் கூட்டுக. துணை என்றது வாழ்க்கைத் துணையை. நெஞ்சிற்கு அமர்ந்த துணையாகலின் 'அமர் துணை' என்றூர். துணைப்பிரியாது என்

றதனால் தம் துணைமேற் செய்யத்தகும் அன்பும், பாத்துண்டு என்றதனால் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறனும் பொருந்த மக்கள் இல்வாழ்க்கை நடாத்தியமை கூறினர். உண்டு என்னும் எச்சத்தினைக் கழிய என்னும் வினையொடு முடிக்க. மூத்த யாக்கை என்றது காலம் எய்துமுன்னரே நரை முதலியவற்றால் மூத்துத் தோன்றும் யாக்கை. மக்கள் மூத்த யாக்கையும் பிணியுமின்றி வாழ்தலுக்கு அரசியற் செம்மையும் ஏதுவாதல். "யாண்டுபல வாக நரையில வாகுதல், யாங்கா கியரென வினவுதி யாயின்......வேந்தனு மல் லவை செய்யான் காக்கும்" (புற 191) எனவும், "நோயிகந்து நோக்கு விளங்க......உலக மாண்ட வுயர்ந்தோர்" (மதுரைக் 13-23) எனவும் சான் றோர் கூறுமாற்றானு மறியப்படும். இன்றியென்னும் வினையெச்சக் குறிப்பின் இறுதிக்கணின்ற இகரம் செய்யுட்கண் உகரமாக நின்றது. என்னை?

"இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற விகர முகர மாத
லென்றியன் மருங்கிற் செய்யுளு ளுரித்தே" தொல். உயிர் மயங்கு 35.

என்பவாகலின். ஊழி—நெடுங்காலம். "உலவா வளஞ்செய்தா னூழி வாழ் கென்று" (பு. வெ. மா. 161) என்புழி, ஊழி—நெடுங்காலம் என அதன் உரை காரர் உரைத்தலுங் காண்க. உய்த்த—அறந்தெரி திகிரியைச் செலுத்திய.

இகப்ப(5) கழிய (10) உய்த்த உரவோர் (11) என்க. உம்பல் என்பதற் குக் குடியிற் பிறந்தோய் என்றுரைப்பினும் அமையும். முன்னோர் புகழைக் கூறி அவர் வழித் தோன்றினோய் என்று அரசரை விளிக்கும் மரபு,

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்" புற 18: 1-4.

என்புழியுங் காண்க.

12—16. கொங்கர் நாட்டை அகப்படுத்திய வேல்கெழு தானையையுடைய தோன்றல் என்க.

கணிச்சியால் திண்பிணியுடைக்கச் சிலவாக ஊறிய நீர் வாய்க்கப்பெற்ற பத்தலினின்று வாங்கப்படும் முகவையை மொய்க்கும் ஆக்களையுடைய கொங் கர் என்க. பொன்—இரும்பு. "பொன்னியற் புனைதோட்டியான்" புற 14: 3. கணிச்சி-குந்தாலி. 'குந்தாலிப் படை' கலி 101: நச். கணிச்சியால் உடைத்து எனக் கூட்டுக. "காமங் கணிச்சி யுடைக்கும்" (குறள் 1251) என்றார் பிறரும். திண்பிணி என்றது திண்ணிய பிணிப்பையுடைய பாறையை. பிணி-செறிவு. உடைத்து என்றதனை உடைக்க எனத் திரித்து ஊறிய என்னும் வினையொடு முடிக்க. இனித் திரியாதே உடைக்கப்பட்டு ஊறிய எனப் பொருளுரைப்பி னும் அமையும். பாறை செறிந்த முரணில மாதலின் கணிச்சியால் திண்பிணியை உடைக்கக் கூவலிற் சிதறி ஊறுதலின்றிச் சில்லூற்றாக ஊறுதலின், 'சிரறு சில ஊறிய' என்றார்.

"பரல்மண் சுவல முரணில முடைத்த
வல்வாய்க் கணிச்சிக் கூழார் கூவலர்
ஊறு திட்ட வுவலைக் கூவல்" அக 21: 21–3.

என்பது ஈண்டு அறியற்பாலது. சிரறுதல்–சிதறுதல். "சிரறு சேலாடிய நீர்வாய்ப் பதத்த" என்றாற்போல, சிரறுதல் சிதறுதன்மேல் நின்றது என, **நச்சினார்க்கினியர்** உரைத்தலுங் காண்க. (கலி 88: 13 உரை)

பத்தல் என்பது கூவல் நீரை ஊற்றி ஆனிரையை உண்பிக்கும் பொருட்டு அதன் அயலிற் றோண்டப்படும் குழி. அது,

"வெயில்வெய் துற்ற பரலவ லொதுக்கிற்
கணிச்சியிற் குழித்த கூவ னண்ணி
யான்வழிப் படுநர் தோண்டிய பத்தல்" **நற்** 240

என்பதனாலுமறியப்படும். கூவற்கண் நீர்நிற்கும் குழி அப்பத்தல் போறலின் அதனைப் பத்தல் என்றார்.

கயிறுகுறு முகவை என்றது தன்னால் நீர் வாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே பெரிதாக நின்று வாங்கப்படும் முகவையென்றவாறு. இச் சிறப்பானே இச்செய்யுளுக்குக் **கயிறு குறு முகவை** என்று பெயராயிற்று.

கூவற்கண் நீர் மிக்க ஆழத்திலிருத்தலால் முகவையால் நீர் வாங்குதலினும் முகவை பூண்ட நீண்ட கயிற்றை வாங்குதல் பெரிய கருமமாயிற்றென்க. குறு–முதனிலைத் தொழிற்பெயர். குறுதல்–வாங்குதல், வலித்தல். முகவை–நீரை முகக்கும் கருவி. நீர் வேட்கையாற் பசுக்கள் நீரை உண்ணவேண்டி முகவையை நெருங்கிச் சூழ்ந்தன. மூய்தல்–நெருங்கிச் சூழ்தல். "ஆயிரரு மங்கண் மூயினர்க ளண்ணலை" **கந்த.** சகத் 18. மூயின, முற்றெச்சம். மொய்க்கும் ஆ என்க. ஆ என்றது ஈண்டு ஆனிரையை. ஆகெழு கொங்கர் என்றார், கொங்கர் பசுக்களை மிகுதியாகவுடையராகலின். இதனைக் "கொங்கர், ஆபரந்தன்ன செலவின்" (பதிற் 77: 10-11) "கொங்கர் படுமணி யாயம்" (அக 79: 5–6) என வருவனவற்றானு மறியலாம். கொங்கர் நாடகப் படுத்த தோன்றல் எனக் கூட்டுக. கொங்கர் நாடு–கொங்கு நாடு. இந்நாட்டைப் பிறசேரரும் ஆட்சி புரிந்தமை "கொங்கர் கோ" (பதிற் 88: 19) என வருதலான் அறியப்படும். வேல்கெழுதானையொடு சென்று கொங்கர் நாட்டை அகப்படுத்தியமையால் "கொங்கர் நாடகப்படுத்த, வேல்கெழுதானைத் தோன்றல்" என்றார். அகப்படுத்த–அகப்படுத்திய. "என் அறிவகப் படுத்தே" **கலி** 57: 24. சிறப்புப்பற்றி வேற்படையே கூறினாராயினும், "மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின், மொழியா ததனையும் முட்டின்றி முடித்தல்" (தொல் செய். 110) என்னும் உத்தியால் வில் வாள் முதலிய ஏனைப் படைகளையும் கொள்க. நாடகப் படுத்த ஆற்றலும் தானையுமுடைமையாற் சேரனுக்குப் பகைவர் அஞ்சுதலின் 'வெருவரு தோன்றல்' என்றார். தோன்றல் அண்மைவிளி.

17—27. மாமுதலிய நால்வகைப் படையுடன் சென்று அகப்பா எறிந்த குட்டுவ என்க.

உளைப்பொலிந்த மா, இழைப்பொலிந்த களிறு, வம்பு பரந்த தேர் என்றதனால் சேரன் படைத்தகையுடன் பாடுபெறச் சென்றமைகூறினர். குதிரையைப் பொலிவுசெய்யும் அணிகளுள் உளை சிறத்தலின் 'உளைப் பொலிந்த மா' என்றார். "விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மா" (நற் 270) எனப் பிறருங் கூறுதல் காண்க. இழை, நெற்றிப்பட்டம் முதலி யன. "விழுச் சூழிய விளங்கோடைய......வினை நவின்ற பேரோர்யானை" (மது ரைக் 43-7) என வருதல் காண்க. வம்பு – தேர்ச் சீலை. அமர்க்கு–அமரை. உருபு மயக்கம். எதிர்தல்–ஏற்றுக்கொள்ளல். "போரெதிர்ந்து வந்த, வலம்படு தானை வேந்தர்" (புற 116: 17-8) என்புழிப் 'போரெதிர்ந்து - போரேற்று' என அதன் உரைகாரர் உரைத்தலுங் காண்க. அமர்க்கெதிர்ந்த மறவர் உளம் பொருந்திப் போருடற்றுதற்கேற்ற விருப்புடையராகலின் அவரைப் 'புகன் மறவர்' என்றார். மறவரொடு, ஒடு எண்ணொடு. இதனை மா முதலிய மூன்றுடனும் கூட்டுக. மறவர் என்றது காலாட்படையை. மா முதலிய வற்றையும் அவற்றுடைய படைமேற்கொள்க, மறவரொடு (20) எறிந்த (26) குட்டுவ (27) என முடிக்க.

கடிமிளையினையும் குண்டுகிடங்கினையும் நெடுமதிலினையும் நிரைபதணத் தினையுமுடைய அகப்பா என்க.

துஞ்சுமரம் என்றது மதிற்கோபுர வாயிலில் தூங்கும் கணைய மரங்களை. துவன்றிய என்றார், அவை ஒன்றோடொன்று நெருங்கத் தூக்கப்பட்டமை யின். துவன்றிய வாயில் என இயையும். பறந்தலை என்றது ஓங்குநிலைவாயி லின் முன் அமைந்த வெளியை. இடமகன்ற பெரிய வெளியாகலின் அதனை 'மலரகன் பறந்தலை' என்றார். மலரகன் என்பதில் மலர்ச்சி அகலுதலை விசே டித்து நின்றது. "உயர்ந்தோங்கிய நிரைப்புதவின்" (மதுரைக் 65) என்புழி உயர்ச்சி ஓங்குதலை விசேடித்து நின்றாற்போல. பறந்தலையையுடைய வாயில் என்க. ஓங்குநிலை வாயில்–கோபுரவாயில். ஓங்கின நிலையையுடைய கோபுரத்தை ஓங்குநிலையென்றார்; ஆகுபெயர். மதிலுக்குக் கோபுரவாயிலுண்மை, "எயின் முகப் படுத்தல் யாவது...... குழூஉ நிலைப் புதவிற் கதவுமெய் காணின் .... தூங்கலோகா வாங்கு நின் களிறே" (பதிற் 53: 13-21) என்புழிக் 'குழூஉநிலைப் புதவென்றது பலநிலமாகச் செய்த கோபுரவாயிலென்றவாறு' எனப் பழைய வுரைகாரர் உரைத்தலானுமறியப்படும். ஓங்குநிலைவாயிற் றூங்குபு தகைத்த ஐயவி எனக் கூட்டுக. தூங்குபு என்பதனைத் தூங்கவெனத் திரித்துக் கால வழுவமைதியெனக் கொள்க. ஐயவியென்றது கதவிற்குக் காவலாகப் புறவா யிலிலே தூக்கப்படும் துலாமரத்தை. அதுதான் பகைவரது விசையையுடைய வில்லானும் துளையுருவ எய்யமுடியாது அதன் விசையை மாளப்பண்ணிய மிக்க கனத்தையுடைமையால் 'வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவி' என்றார். மாட்டிய சீரையுடைய ஐயவி என்க. சீர்-கனம். "சீருஞ் செம்மையு மொப்ப வருகெறிந்து" நெடுநல் 118. 'துஞ்சுமரந் துவன்றிய ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த ஐயவி' என்றாராயினும் துஞ்சுமரந் துவன்றியதும் ஐயவி தகைத்ததுமாகிய வாயிலையுடைய ஓங்குநிலை என்பது கருத்தாகக் கொள்க.

"துஞ்சுமரக் குழாஅந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணு வைவவி தூக்கிய மதில
நல்லெழி னெடும் புதவு" பதிற் 16: 3-5.

என்பதனுலுமறிக. தோட்டி முண்முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து அதனுள் ஆழ்ந்த அகழி புறஞ்சூழ்ந்த உயர்ந்த மதிலாதலின் 'கடிமிளைக் குண்டு கிடங்கின், நெடுமதில்' என்ருர். பதணம்-மதிலுண் மேடை. "பரிய மகப்பா பதணமூன்றும், உரிய மதிலுண் உயர்மே டைக்கே" என்பது திவா கரம். துஞ்சுமரம் முதலிய பொறிகளாலும், கடிமிளை முதலியவற்ருலும் தலைமையமைந்த மதிலாகலின் 'அண்ணலம் அகப்பா' என்ருர். பகைவரது அகப்பாவின் நலங்கள் எல்லாம் எடுத்துரைத்தார் அதனை அழித்த குட்டுவ னின் அருந்திறலைப் புலப்படுத்தற்பொருட்டு.

"மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா வெறிந்த வருந்திற லாயினும்" 28: 143-4.

எனச் சிலப்பதிகாரத்தும் வருதல் காண்க. எறிதல்-அழித்தல். பு. வெ. மா. 209 உரை. எயில் கோடற்கு உழிஞை சூடல் மரபாகலின் 'உழிஞைக் குட்டுவ' என்ருர்.

"முடிமிசை யுழிஞை சூடி யொன்னூர்
கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று" பு. வெ. மா. 95.

என வருதல் காண்க. 'உழிஞை-கொற்ருன்; அது குடநாட்டார் வழக்கு' என் பர் புறநானூற்றுரைகாரர். (புற 50 உரை). குட்டுவன் உழிஞையைப் பொன்னுற் செய்தணிந்தமையின் 'பொன்புனை யுழிஞை' என்ருர். புறத் திணைப் பூக்களைப் பொன்னுற் செய்தணிதல், "பொன்புனை யுழிஞை சூடி" (பு. வெ. மா. 98) எனவும், "பொலம்பூந் தும்பை" (புற 2: 14) எனவும் வருவனவற்ருலுமறியப்படும். அகப்பா எறிந்தமையின் 'வெல்போர்க் குட் டுவ' என்ருர்.

28—38. நீ சிறினையாகலின், புனல் செறுங்குநரும் அம்பழிக்குநரும் ஒலித் தலை விழவின் மலியும் நாடுகெழு தண்பணை, ஞாயிறுகோடா நன்பகலமை யத்து நரி கூமுறை பயிற்றக் கூகை குழறுகுரற் பாணிக்குப் பேய்மகள் வழங் கும் பெரும்பாழாகும் என்க.

பெருகிவரும் யாற்றுப் புதுப்புனல் கரையையுடைத்தலின் அதனை அடைக்க ஆட்களை வரும்படி முழக்கிய பறையின் ஒலியாற் கரையைக் கட் டிப் புனலை அடைப்பாரைப் 'போர்த்தெறிந்த பறையாற் புனல் செறுக்குந ரும்' என்ருர். இதனை,

"வரைச்சிறை யுடைத்ததை வையை வையைத்
திரைச்சிறை யுடைத்தன்று கரைச்சிறை யறைகெனு
முரைச்சிறைப் பறையெழ வூரொலித் தன்று" பரி 6: 12-4.

என்பதனுலும், 'திரைச்சிறை யுடைத்தன்று கரைச்சிறை யறைகெனும்' என்பதற்கு 'வையையின் திரையாகிய சிறகு கரையாகிய காவலையுடைத்தது;

அஃதடைக்க ஆளேறுதற்குப் பறையறைகெனும்' என்ற உரையானும் தெளியலாம். நாக் கடிப்பாக அறையும் *வாய்ப்பறையை விலக்கித் தோல் போர்த்த பறை என்று கோடற் பொருட்டுப் 'போர்த் தெறிந்த பறை' என்றார். போர்க்களப் பறையினதுகண் பகைவர் அம்பாற் கிழிவதுபோலச் செய்தியைத் தெரிவிக்க அடிக்கப்படும் பறையின்கண் இடையே கிழிவதின்மையின் 'போர்த்து' என்பதற்குப் 'புதுத்தோல் போர்த்து' எனல் பொருந்தாதென்க. செறுத்தல்—அடைத்தல். புற 7: 12 உரை.

துருத்தி முதலிய கருவிகளையுடையராய் மகளிரும் மைந்தரும் நீர்விளையாட்யாட்டயரும் யாறு போர்க்களம் போன்று விளங்குதலினாலும் ஆண்டு எழுகின்ற ஆரவாரம் போர்க்கள ஆரவாரத்திலும் மிக்கமையாலும் 'நீர்த் தரு பூசலி னம்பழிக்குநரும்' என்றார்.

"ஏரணி யணியி னிளையரு மினியரும்
ஈரணி யணியி னிகன்மிக நவின்று
தணிபுன லாடுந் தகைமிகு போர்க்கண்" பரி 6: 27-9.

எனவும்,

"சீரர வச்சிலம் பேந்துமென் சீறடி
யாரர வக்கழ லாடவ ரோடும்
போரர வக்களம் போன்றுபொன் னூற்புனல்
நீரர வம்விளைத் தார்நக ரில்லார்" சீவக 914.

எனவும் வருவன காண்க. நீர் என்றது யாற்றினை. பூசல்—ஆரவாரம். அம்பு என்றது அம்பு முதலிய கருவிகளைக்கொண்டு செய்யும் போர்க்கண் எழும் பூசலை. ஒலித்தலை விழவு - பலவகை ஒலிகளைத் தன்னிடத்தேகொண்ட நீர் விழவு.

"புகுவோ ரரவமும் போவோ ரரவமும்
தொகுவோ ரரவமுந் தொடர்ந்துகை தழீஇ
நடந்தியன் மறுகி னகுவோ ரரவமும்
...... ................ ..............
பாடலொ டியைந்த பல்லோ ரரவமும்
ஆடலொ டியைந்த வணிநகை யரவமும்
யாற்றொலி யரவமொ டின்னவை பெருகிக்
கூற்றொலி கேளாக் கொள்கைத் தாகி
..........................................
நீராட் டரவ நிகழுமா லினிதென்" பெருங் (1) 41: 109–135.

எனப் பிரண்டும் வருதல் காண்க, விழாவின்கண் மக்கள் மிக்காற் போலப் புனல் செறுக்குநரும் அம்பழிக்குநரும் அவ்வவ்விடங்களில் மிகுதலின் 'விழவின் மலியும்' என்றார்.

---

* வாய்ப்பறை: "நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்" சிலப்: 14: 29; "நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்" மணி 25: 51; வாய்ப்பறை யறைந்து வாழ்த்துப்பல கூறி" பெருங் (4)7: 118.

"தழங்குரற் பம்பையிற் சாற்றி நாடெலா
முழங்குதீம் புனலக மூரிய மொய்த்தவே" சீவக 40.

என்பது ஈண்டைக் கேற்ப அறியற்பாலது. இதனால் பகைவர் நாட்டு நீர் வளமும் செல்வ மிகுதியும் கூறினார். மலியும் தண்பணை எனக் கூட்டுக. இனி, மலியும் நாடு எனக் கூட்டினும் அமையும். நாடு என்றது பகைவர் நாட்டை. அந்நாடு நீர்வளத்தாலும் அரசியற் செம்மையாலும் இடையறுத புதுவருவாயுடைமையால் 'யாணர் நாடு' என்றார். யாணர்—செல்வமுமாம். தண்பணை—மருதநிலம். குட்டுவன் பகைவரைச் சீறியமையால் அவர் நாட்டு மருதநிலம் அழிதல் ஒருதலையாகலின் 'நாடுகெழு தண்பணை, சீறினையாகலின்... பாழாகும்" என்றார். பகைவரின் மருத நிலத்தை அழிவுசெய்தல்,

' இழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
.............................
பாழா யினநின் பகைவர் தேஎம்" மதுரைக் 154-76.

என்பதனாலுமறிக.

குடதிசை மாய்ந்து குணமுதற் றோன்றிப் பாயிருள் அகற்றும் பயங்கெழு பண்பின் ஞாயிறு என்க. இருள் அகல்தற்கு ஞாயிற்றின் தோற்றம் ஏதுவாகலின் குடதிசை மாய்தலை முன்னும் குணமுதற் றோன்றலைப் பின்னும் கூறினார். §'குணதிசை' என்னாது 'குணமுதல்' என்றார், ஞாயிறு கீழ்த்திசை அடிவானத்தில் எழுதரும்போதே இருளையும் அகற்றுதலின். தோன்றி இருள் அகற்றும் எனக் கூட்டித் தோன்றாநின்று இருளை அகற்றும் என உரைக்க. 'இருட்டகத்து விளக்குக் கொண்டு புக்கால் விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்கு வந்தபின்னரும் இருள் நீங்காது; விளக்கு வருதலும் இருணீக்கமும் உடனே நிகழும்' என **இறையனார் அகப்பொருளுரை**யில் (இறை. சூ 2 உரை) வருதல் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. பாயிருள் —ஞாயிறு குடதிசை மாய்தலால் உலகிற் பரந்த இருள். குணமுதற் றோன்றி நன்றாகிய ஒளியைப் பரப்பித் தீதாகிய இருளை நீக்குதலின் 'பயங்கெழு பண்பின் ஞாயிறு' என்றார்,

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பருதி" **பெரும்பாண் 1-2.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. இருள் பரவுமாறு குடதிசை மாயும் ஞாயிற்றைப் பயங்கெழு ஞாயிறு என்றது என்னையெனின், ஞாயிறு குடதிசை மாய்தலால் இருளைத் தோற்றுவித்து இரவுப்பொழுதை உண்டாக்கி உயிர்களுக்கு உறக்கமளித்து அயர்வு அகற்றி வாழ்நாள் நீட்சிக்கு ஏதுவாக அமைதல்பற்றி என்க.

ஞாயிறு கோடா நன்பகல் என்றது ஞாயிறு மேற்றிசைக்கண் சாயப் பெறாத உச்சிப் பொழுதை. 'கோடா' என்றது உச்சிப் பொழுதையும், 'நல்' என்பது அதன் இயல்பையும் விளக்கி நின்றன. நரி கூவுதலும் கூகை குழறு

§ " குணதிசைக் கோணத், தீடமை பீடிகை பாடுபெற விருந்த" பெருங் (2) 3: 27-.8

தலும் பேய்மகள் வழங்குதலுமாகிய இரவில் நிகழ்தற்குரிய நிகழ்ச்சிகள் நன்பகலிலும் நிகழும்படி பகைவர் நிலம் மக்களின்றாகப் பெரும்பாழாகுமென்பர். 'நன்பகலமையத்து நரிகூமுறை பயிற்றிக் கூகைகுழறுகுரற் பாணிக், கருங்கட் பேய்மகள் வழங்கும் பெரும்பாழாகும்' என்றார்.

"கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்
.............................................
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான்" பட்டினப் 259-70.

எனப் பிறரும் கூறுதல் காண்க. குட்டுவன் மருதநிலத்தைப் பாழாகும்படி அழித்தலின் மக்கள் இயங்கிய வழிகள் அருவழிகளாகப் போதலின், அவற்றில் திரியும் குறுநரிகளைக் 'கவலைவெண் நரி' என்றார். கவலை – அருவழி. அக 72: 16 பழையவுரை. கவர்ந்த வழியுமாம். கூகையின் குழறு குரலைப் பாணி என்றதற்கேற்ப நரியின் கூவுதலைப் பேய்மகளின் ஆடற்கேற்ற முழவாகக் கொள்க.

"வெள்வா யோரி முழவாக விழிந்தா ரீமம் விறகாக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கி னிழல்போ னுடங்கிப் பேயாட" சீவக309.

எனப் பிறரும் கூறுதல் காண்க. நரி சத்தமிடுதலைக் கூவுதல் என்றல் மரபு.

"குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு" சிலப் 10: 235.

"நீண்முக நரியின் றீவிளிக் கூவும்" மணிமேகலை 6: 74.

என வருவன காண்க, பலகாற் கூவுதலின் 'கூமுறை பயிற்றி' என்றார். கூ-கூவுதல். "விளைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவும்" புற 44: 8. பயிற்றி–பலகாற் செய்து. அதனைத் திரித்துப் பயிற்ற வழங்கும் எனக் கூட்டுக. குழறு குரல்–கூப்பிடுகின்ற குரல், பாணி–தாளம். "சிலதியர் பாடற் பாணி" பெருங (1) 33: 24-5. கூகை கால ஒழுங்கமைய விட்டுவிட்டுக் குழறுதலின், குழறு குரலைப் 'பாணி' என்றார். கருங்கண்–செந்நிறத்ததாய்க் கண்டார்க்கு அச்சத்தைச் செய்யும் கொடிய கண். "கொள்ளிகொண் டிரண்டே முழையிற் புகிற், குன்று தோன்றுவ போல விழிப்பன" (கலிங் 138) எனப் பிறரும் கூறுதல் காண்க. கருமை-கொடுமையென்னும்பொருட்டாதல் கருங்கழல்-கொடிய கழல் என நச்சினார்க்கினியர் உரைத்தலானுமறிக. (சீவக 1732 உரை) கருங்கட் பேய்கள் என்றாராயினும் "உலறிய கதுப்பு பிறம்பற் பேழ்வாய்" முதலியனவுங் கொள்க. வழங்குதல்–ஆடுதல். "அரவழங்கும் பெருந்தெய்வத்து"(பதிற் 51:13) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. முழவு முதலிய இன்னியங்கள் ஒலிக்க மகளிர் ஆடுதலையுடைய நாடுகெழு தண்பணை, நரி கூமுறை பயிற்றக் கூகை குழறுகுரற் பாணிக்குப் பேய்மகள் வழங்கும் பாழாகும் என்ற புலவரின் கற்பனைத் திறம் மிகவும் வியத்தற்பாலதொன்றாகும். அழியதாம் பெரும் பாழாகும் என மாறிக் கூட்டுக. பாழான இடத்தைக் கண்டு மக்கள் இரங்கல்,

"இன்றோ வன்றோ தொன்றோர் காலே
நல்லம னழிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத் திரங்க
மாணா மாட்சிய மாண்டன பலவே" பதிற் 19: 24-7

என்பதனாலறிக.

## பழையவுரை.

2. அச்சம்—பகைவர்க்கு அஞ்சுதல். அன்பு—பொருண்மேலன்பு. 13 சிரறு சிலவூறிய வென்றது பல்லூற்றொழியச் சில்லூற்றாக ஊறிய வென்றவாறு. சிரறுதல்—சிதறுதல். 14. கயிறு குறு முகவையென்றது தன்னால் நீர் வாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே நின்று வாங்கப்படும் முகவையென்றவாறு. இச்சிறப்பானே இதற்குக் **கயிறு குறு முகவை** என்று பெயராயிற்று. 22. தூங்குபு என்பதனைத் தூங்கவெனத் திரித்துக் காலவழுவமைதியெனக் கொள்க. தகைத்தல்—கட்டுதல். 23. வில்விசைமாட்டிய விழுச்சீர் ஐயவி என்றது விசையையுடைய வில்லானும் துளையுருவ எய்யமுடியாது மிக்க கனத்தையுடைய ஐயவித்துலாமென்றவாறு. 37. கருங்கண்—கொடிய கண். வழங்குதல்—ஆடுதல்.

உரவோரும்பல் (11) தோன்றல் (16) குட்டுவ (27) நீ சிறினையாதலின், நாடுகெழு தண்பணை (31) அளியதாம் பெரும் பாழாகும் (38) எனக் கூட்டி **வினைமுடிபு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் **வென்றிச் சிறப்புக்** கூறியவாறாயிற்று.

சிறினையாதலின் நாடுகெழு தண்பணை பாழாகுமென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் **வஞ்சித்துறைப் பாடாணாயிற்று.**

'உளைப்பொலிந்த மா' (17) என்பது முதலாய நான்கடியும், 'கடிமிளை' (24) என்பது முதலாய இரண்டடியும் வஞ்சியடியால் வந்தமையால் **வஞ்சித் தூக்கு**மாயிற்று.

20. 'புகல்' என அடியிடையும், 'ஓடு' என அடியின் இறுதியும் வந்தன **கூன்.**

## ஒப்புமைப்பகுதி.

7. **பிறர் பிறர்:** "பிறர் பிறர் அறிதல் யாவது" **நற்** 331: 11; "பிறர் பிறர் கூற" **புற** 150: 24; "பிறர் பிறர் சீரெலாந் தூற்றி" **நீதிநெறி** 20.

9. **அமர்துணை:** **குறுந்** 215: 6; 237: 1; **ஐங்** 64: 1, **கலி** 66: 9; **அக** 23: 8; 385: 15.

11. **உரவோரும்பல்:** "கொற்றத் திருவி னுரவோ ரும்பல்" **பதிற்** 90: 24; "திரைதரு மரபி னுரவோ ரும்பல்" **பெரும்பாண்** 31. ஒருதா மாகிய வுரவோ ரும்பல்" **புற** 18: 4.

13: **சிலநீர்:** **கலி** 11: 8; 34: 3; **சீவக** 2344; 2540.

15. **ஆகெழுகொங்கர்:** "கொங்கர், படுமணி யாயம்" **அக** 79: 5-6.

*12—15.* "வேட்டச் சிறார் அகன்கட் கேணிப், பயநிரைக் கெடுத்த மணிநீர்ப் பத்தர்" **நற்** *92: 5-6;* "கல்லாக் கோவலர் கோலிற் றோண்டிய, வானீர்ப் பத்தல்" **ஐங்** *304: 1-2.* "படுமணி யினநிரை உணீஇய கோவலர், விடுநில முடைத்த கலுழ்கட் கூவல்" "கடற்றடை மருங்கின் கணிச்சியிற் குழித்த, உடைக்கண் நீடமை யூறலுண்ட, பாடின் றெண்மணிப் பயங்கெழு பெருநிரை" **அக** *321: 7-8; 399: 6-8.*

*16.* **வேல்கெழுதானை:** **நற்** *387: 8;* **அக** *322 8;* **புற** *37: 8 6; 336-5;* **பு. வெ. மா.** *131.* **சீவக** *554:* **சிலப்** *27: 13.*

*17.* **உளைப்பொலிந்தமா:** பதிற்: *20: 14* ஒப்புமைப்பகுதி பார்க்க.

*18.* **இழைப்பொலிந்த களிறு:** **பதிற்** *62: 2;* **அக** *208: 7; 326: 9; 346:9;* **புற** *153: 2;* **பெருங்** *(1) 34: 37.*

*20.* **வீரர் போரை விரும்பல்:** "பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்" "ஆய்ந்து தெரிந்த புகன்மறவரொடு" "முனைபுகல் புகவின் மாறு மைந்தரொடு" **பதிற்** *30: 41; 69: 8; 84: 17;* "மண்டமர் நசையொடு கண் படை பெறாஅ" **முல்லை** *67;* "ஒன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்" **மது ரைக்** *726.* "போர்வேட் டெழுந்த மன்னர்" "செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணாடவர்" **அக** *144: 14; 157: 4;* "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" "உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக், கேவா னாகலிற் சாவேம் யா மென, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" "பொதுவிற் றூங்கும் விசி யுறு தண்ணுமை, வளிபொரு தெண்கண் கேட்பின், அதுபோ ரென்னு மன் னையு முளனே" "செருப்புகன் மறவர்" "வாள்வடு விளங்கிய சென்னிச், செரு வெங் குருசில்" **புற** *31: 9; 68: 11-3; 89: 7-9; 174: 12; 321: 9-10;* "அமர் வேட்டுக் கலித்த பெரும்படை மறவர்க்கு" **சிலப்** *26: 48-9.*

*17—20.* "கடுஞ் சினத்த கொல்களிறுங், கதழ்பரிய கலிமாவு, நெடுங் கொடிய நிமிர்தேரு, நெஞ்சுடைய புகன்மறவருமென" "ஒளிறுவாண் மறவ ருங் களிறு மாவும்" **புற** *55: 7-8; 227: 4;* "கவுளழி கடாத்த வேழம், போர் வினை யிவுளித் திண்டேர் புனைமயிர்ப் புரவி காலாள்" **சீவக** *433;* "ஒளிறு வாண் மறவருந் தேரு மாவுங், களிறுஞ் சூழ்தர" **மணி** *1: 68-9.*

*22.* **ஓங்குநிலை வாயில்:** "குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயில்" **நெடுநல்** *88.*

*23.* **வில்விசை:** "வில்விசை யுமிழ்ந்த வைம்முள் ளம்பின்" **பதிற்** *33: 8.*

*21—3.* பதிற் *16: 2-4.* ஒப்புமைப்பகுதி பார்க்க.

*24—5.* பதிற் *20: 17-8* ஒப்புமைப்பகுதி பார்க்க.

*26.* **அகப்பா எறிந்தது:** "அகப்பா வெறிந்து பகற்றீ வேட்டு" பதிற் 3ம் பதி *3.*

*32.* **"குடதிசை குணமுதல்:** குடதிசை நின்று குணமுதற் செலினும்" **புற** *386: 21.*

33. பாயிரு ளகற்றும் ஞாயிறு: "பாயிரு ணீங்கப் பல்கதிர் பரப்பி, ஞாயிறு குணமுதற் றோன்றி யாஅங்கு" பதிற் 59: 5-6; "பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு, ஞாயிறு" மலை டு 84-5; "ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள் சீக்குஞ் சுடரே போல்" "பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோல்" கலி 100: 1; 148: 22; "இருளற, விசும்புடன் விளங்கும் விரைசெலல் திகிரிக், கடுங்கதிர்" பகல்செய் பல்கதிர்ப் பருதியஞ் செல்வன்" அக 53: 1-3; 229: 1: 'மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல, வீண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅ, துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு" "அங்கண் விசும்பி னிருளகற் றும், வெங்கதிர்ச் செல்வன்" "மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய. விருளு முண்டோ ஞாயிறு சினவின்" புற 25: 1-3; 56: 22-3; 90: 4-5; "வெய்யவன் கதிர்களென்னும் விளங்கெளித் தடக்கை நீட்டி, மையிருட் போர்வை நீக்கி" சீவக 1406.

34. நன்பகல்: முருகு 130; பொருந 46; கலி 74: 10; 98: 18; அக 125: 20; 327: 2 சீவக 1596; சிலப் 18: 16; 22: 30.

35. கவலை வெண்ணரி: "கவலைக் கணநரி யினனொடு" அக 375: 5 6:

36. கழல்கட் கூகை: "கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்க" முருகு 49.

கூகை குழறல்: "குன்றக் கூகை குழறினும்" குறுந் 153: 1; "மன்றம ராஅத்த கூகை குழறினும்" அக் 158: 13; "வெருவக் குழறிய விழிக்கட் கூகை" பெருங் (3) 22: 151.

34-6. நண்பகலிற் கூகை குழறல்: "வளைவாய்க் கூகை நன்பகற் குழற வும்" பட்டினப் 268. "பகலுங் கூவுங் கூகையொடு" "வாய்வன் காக்கை கூகை யொடு கூடிப், பகலுங் கூவு மகலு ளாங்கண்" புற 356: 2; 362: 17-8; "பேஎ ரகநாட்டு, நன்பகலுங் கூகை நகும்" பு. வெ. மா. 39.

37. "கருங்கட் பேய்மகள்: கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க" பதிற் 30: 36.

37-8. பேய்மகள் வழங்கும் பாழாதல்: "பேய்மகளிர் பெயர் பாட...... பாழாயினநின் பகைவர் தேஎம்" மதுரைக் 163-76. "பிணந்தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும்.....பெரும்பாழ் செய்து மமையான்" பட்டினப் 260-70.

அரியதாம்: பதிற் 19: 25 ஒப்புமைப்பகுதி.

## 3. தகைந்த காஞ்சி

(23) அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து
நிலம்பை தற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பைய ராங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்
பொன்செய புனையிழை யொலிப்பப் பெரிதுவந்து
நெஞ்சுமலி யுவகைய ருண்டுமலிந் தாடச்
சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ
நின்னயந்து வருவேம் கண்டனம் புன்மிக்கு
வழங்குந ரற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவி னழிந்த வாற்ற வேறுபுணர்ந்
தண்ணன் மரையா வமர்ந்தினி துறையும்
விண்ணுயர் வைப்பின காடா யினநின்
மைந்துமலி பெரும்புக ழறியார் மலைந்த
போரெதிர் வேந்தர் தாரழிந் தொராலின்
மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்
மணன்மலி பெருந்துறைத் தகைந்த காஞ்சியொடு
முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகரை
நந்து நாரையொடு செவ்வரி யுகளும்
கழனி வாயிற் பழனப் படப்பை
அழன்மருள் பூவின் றாமரை வளைமகள்
குறாஅது மலர்ந்த வாம்பல்
அறாஅ யாணரவ ரகன்றலை நாடே.

துறை—வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம்—ஒழுகு வண்ணம்.
தூக்கு—செந்தூக்கு.
பெயர்—தகைந்த காஞ்சி (19).

*1—10. அலந்தலை உன்னத்து அங்கவடு பொருந்தி—காய்ந்த தலையினையுடைய உன்னமரத்தின் கிளையின் அகமாகப் பொருந்தி, சிதடி கரைய—சிள்வீடு என்னும் வண்டுகள் கரையும்படி, பெரு வறம் கூர்ந்து—பெரிய வற்கடம் மிகுந்து, நிலம் பைது அற்ற—நிலம் பசுமை அற்ற, புலம் கெடு காலையும்—விளைநிலங்கள் விளைவின்றிக்கெட்டகாலத்தும், வாங்குபு தகைத்த கலப்பையர்—இழுத்*

துக்கட்டிய வாச்சிய முட்டுக்களையுடைய பையையுடையராய், ஆங்கண் மன்றம் போந்து - தாம் சென்ற ஊரிடத்து மன்றிலே சென்று, மறுகு சிறைபாடும் வயிரிய மாக்கள்-தெருவின் இருபுறத்துமுள்ள வீட்டு வரிசையின் பக்கமாகப் பாடிச்செல்லும் கூத்தர், கடுபசி நீங்க - தமது மிக்க பசி நீங்குமாறு, நெஞ்சு மலி உவகையர் உண்டு - நெஞ்சிலே மிகுந்த மகிழ்ச்சியினையுடையராய் உண்டு, மலிந்து ஆட - மகிழ்ச்சிமிக்கு ஆடுதலைச் செய்ய, பொன்செய் புனை இழை ஒலிப்ப - பொன்னாற் செய்யப்பட்ட புனைந்த ஆபரணங்கள் விளங்க, பெரிது உவந்து-மிக விரும்பி, சிறு மகிழானும் பெருகலம் வீசும்-சிறிய மகிழ்ச்சியுடைய காலத்தும் பேரணிகலங்களை வழங்கும், போர் அடு தானை-போரிற் பகைவரைக் கொல்லுகின்ற தானையையுடைய, பொலம் தார் குட்டுவ-பொன்னாற் செய்த மாலையினையுடைய குட்டுவ,

15-25. நின் மைந்து மலி பெரும்புகழ் அறியார் மலைந்த-நினது வலியால் மிகுகின்ற பெரிய வென்றிப் புகழினை அறியாராய் நின்னுடனே பொருத, போர் எதிர் வேந்தர் - போரை ஏற்ற வேந்தர், தார் அழிந்து ஓராலின் - தூசிப் படை கெட்டொழிய நீங்குதலால், மருது இமிழ்ந்து ஓங்கிய-மருத மரங்கள் புட்கள் ஒலிக்குமாறு உயர்ந்த, நளி இரு பரப்பின் - குளிர்ந்த பெரிய பரப்பினையுடைய, மணல் மலி பெருந்துறை - மணல் மிகுந்த பெரிய துறைக்கண், ததைந்த காஞ்சியொடு - சிதைவுபட்டுக்கிடக்கின்ற காஞ்சி மரங்களோடு, முருக்கு தாழ்பு எழிலிய - முருக்கமரங்கள் தாழப்பெற்று அதனால் அழகு பெற்ற, நெருப்பு உறழ் அடைகரை - நெருப்பையொத்த நீரடையும் கரையினையும், நந்து நாரையொடு செவ்வரி உகழும் - சங்குபோலும் வெள்ளிய நாரைகளுடனே செவ்வரி நாரைகள் தாவும், கழனி வாயில்-கழனி வாயிலையும், பழனம் படப்பை-நீர்நிலைச் செறுவையும் தோட்டத்தையும், அழல் மருள் பூவின் தாமரை - நெருப்பை ஒத்த பூவினையுடைய தாமரையினையும், வளை மகள் குறுஅது மலர்ந்த ஆம்பல் - விளையாட்டு மகளிர் பறிக்காமையால் மலர்ந்த ஆம்பலினையும், அறுஅ யாணர் - இடையறாத புது வருவாயினையுமுடைய அவர் அகல் தலை நாடு - அப்பகைவரது அகன்ற இடத்தையுடைய நாடுகள்,

11—15. வழங்குநர் அற்றென மருங்குகெட தூர்ந்து-வழிச்செல்வோர் அற்றதாக இடங்கள் கெடும்படி தூர்வடைந்து, புல் மிக்கு - அறுகு முதலிய புல் மிகுந்து, பெரு கவின் அழிந்த ஆற்ற - பெரிய அழகு அழிந்த வழிகளையுடையனவாய், அண்ணல் மரை ஆ - தலைமையையுடைய மரையாக்கள், ஏறு புணர்ந்து அமர்ந்து இனிது உறையும்-ஏறுகளுடனே கூடி விரும்பி இனிதாக உறையும், விண் உயர் வைப்பின காடாயின-மரங்கள் விண்ணிலே செல வோங்கிய இடத்தையுடைய காடுகளாயின, நின் நயந்து வருவேம் கண்டனம்-நின்னைக் காணவிரும்பி வருகின்ற யாங்கள் அதனைக் கண்டேம்.

முடிபு: குட்டுவ, போரெதிர் வேந்தர் தாரழிந்தோராலின் அவர் அகன்றலை நாடு காடாயின; அதனை நின்னயந்து வருவேம் கண்டனம் என்க.

ஆ—ரை. 1—10. பெருவளங் கூர்ந்து புலங்கெடு காலையும் மன்றம் போந்து மறுகு சிறைபாடும் வயிரிய மாக்கள் கடும்பசி நீங்க உண்டு மலிந்தாடப் பெருங்கலம் வீசும் குட்டுவ என்க.

கடுங் கதிர் தெறுதலின் பெருவறங் கூர்தலாற் காய்ந்த தலையினையுடைய உன்னத்தை 'அலந்தலை உன்னம்' என்றார். அலந்ததலை, அலந்தலையென விகாரம், உன்னம்-உன்னமரம். "உன்ன மரத்த துன்னருங் கவலை" புற 3: 23. பெருவறம் கூர்தலால் நிலம் பசுமையற்றுப் போதலின், ஈர நிலத்திலிருக்கும் சில்வீடு, உன்னத்துக் கவடு பொருந்திக் கரைவனவாயின. "தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின் .. சில்வீடு கறங்கும் சிறியிலை வேலத்து" (அக 89: 1-6) என வருதல் காண்க. அங்கவடு பொருந்தி - கவட்டின் பொரிந்த பட்டைகளின் அகமாகப் பொருந்தி, "கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய, சிறியிலை வேலம்" (பதிற் 58: 13–4) எனவும், "உலவை யோமை யொல்குநிலை யொடுங்கிச், சிள்வீடு கறங்குஞ் சேய்நாட் டத்தம்" (நற் 252) எனவும் வருவன காண்க. கவடு-கணுவுமாம். சிதடி-சிள்வீடு என்னும் வண்டு, சிதடி ஆர்த்தலைக் கரைதல் என்றல் "சிதடி கரையுந் திரிந்து" (திணை. நூற் 83) என்புழியுங் காண்க. கூர்தல்-மிகுதல். நிலம் பைதற்றகாலை எனக் கூட்டுக. பெருவறங் கூர்தலால் நிலமேயன்றி நீர்ச்செறிவுடைய விளைபுலங்களும் பைதறக் காய்தலால் விளைவின்றிக் கெடுதலின், 'பெருவறங் கூர்ந்து நிலம் பைதற்ற புலங்கெடு காலையும்' என்றார். புலம்-வயல். காலை-காலம். புலங்கெடு காலையும் (3) மன்றம் போந்து மறுகுசிறை பாடும் (5) வயிரிய மாக்கள் எனக் கூட்டுக, "கடுந்திறல் வேனில்......கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும், புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண" (பெரும்பாண் 3-22) எனப் பிறண்டும் வருதல் காண்க.

வயிரிய மாக்கள் ஆடல் பாடல்களுக் கேற்ற வாச்சிய முட்டுக்களைப் பையி லிட்டு இழுத்துக் கட்டிச் சுமந்து செல்லுதலின் 'வாங்குபு தகைத்த கலப்பையர்' என்றார்.

"கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" மலைபடு 12–3,

"தலைப்புணர்த் தசைத்த பஃறொகைக் கலப்பையர்" அக 301: 22,

என வருவன காண்க. வாங்குதல்-இழுத்தல், "குடவாய்க் கொடிப் பின்னல் வாங்கித் தளரும்......குறுமாக்கள்" கலி 83: 9-10. தகைத்தல்-கட்டுதல். வாங்குபு தகைத்த பையாதலின் கலம் என்றது பிறகலங்களுடன் பையிலிட்டு வலித்துக்கட்டுதற்கு அமையாத யாழ் ஒழிந்த முழவு முதலிய பிற கலங்களை யென்க.

"புணர்புரி நரம்பின் றீந்தொடை பழுநிய
வணரமை நல்யா ழினையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர்" பதிற் 41: 1-5.
"காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை" புற 206: 10.

என வருவன காண்க. கலப்பை-வாச்சிய முட்டுக்களையுடைய பை. மலைபடு 13 நச். கலப்பையராய்ப் போந்து (5) என்க. சுரம்பல கடந்து செல்லும்

வயிரியர் ஊண்பெறுதல் முதலியன ஏதுவாக ஊர்மன்றிற் செல்லுதலின் 'ஆங்கண் மன்றம் போந்து' என்றார். "மன்றில் வதியும் சேட்புலப் பரிசிலர்" (மலைபடு 492) எனவும், "மன்றத்துக்......கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்கு" (புற 34: 12-4) எனவும் வருவன காண்க. ஆங்கண் - ஊரிடம். மன்றம்- ஊர்க்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடி. முருகு 226 நச். வயிரியமாக்கள், ஊரிடத்து வீதியின் இருபுறத்துமுள்ள வீட்டு வரிசைகளின் பக்கமாகப் பாடிச் செல்லுதலின் "மறுகுசிறை பாடும் வயிரிய மாக்கள்" என்றார். "வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ, மன்ற நண்ணி மறுகுசிறை பாடும்" (பதிற் 29: 8-9) என்பர் மேலும்.

"பாணன் கைபது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டி னிம்மென விமிரு
மேர்தரு தெருவின்" நற் 30: 2-4.

"நன்ன ராளர் கூடுகொ ளின்னியம்
தேரூர் தெருவில் ததும்பும்
ஊர்" அகநா 189: 13-5.

என்பனவும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. கடும்பசி-பலநாள் உணவின்மையால் உண்டாகிய மிக்க பசி. பசிநீங்க உண்டு எனக் கூட்டுக. கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சத்து வயிரிய மாக்கள், குட்டுவன் அளித்த உணவினைப் பெறுதலால் நெஞ்சிலே மிகுந்த மகிழ்ச்சியுடையராய் உண்டலின் 'நெஞ்சு மலி யுவகையர் உண்டு' என்றார். மலிந்து என்றது கடும்பசியால் உழந்த பழங்கண் வீழ்தலால் உளதாகிய மகிழ்ச்சி மிக்கு என்றவாறு. மறுகு சிறை பாடும் வயிரியமாக்கள் ஆட- என்றதனால் அவர்கள் ஆடல் பாடல்களில் வல்லராதல் அறியப்படும். புனையிழை என்றது சேரன் அணிந்த தொடி முதலிய ஆபரணங்களை. அவை கலம் வீசும்போது விட்டு விளங்கலின் 'ஒலிப்ப' என்றார். "மார்பி லணி யாரம், யக்ஷர நிலத்திரவி அஞ்ச வொளி விஞ்ச......கடிதெழுந்தான்" (கம்ப. கையடை 4) எனக் கம்பர் கூறுதல் ஈண்டறியற்பாலது. ஒலிப்ப - விளங்க. "உதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப" என்புழி ஒலிப்ப-விளங்க என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தலுங் காண்க. (கலி 81: 31 உரை) மனம் வருந்திக் கொடுப்போரு முண்மையின் அவர்போலன்றிக் குட்டுவன் மனத்தான் மிகவிரும்பிக் கொடுத்தலின் 'பெரிதுவந்து' என்றார். ஆட உவந்து வீசும் எனக் கூட்டுக. சிறுமகிழானும் என்றது வயிரிய மாக்கள் ஆடலால் எழுகின்ற பெருமகிழ்ச்சியினன்றிச் சிறு மகிழ்ச்சியினும் என்றவாறு. சிறுமகிழானும் என்பதற்குச் சிறிய கள்ளுண்டுமகிழ்ச்சி பெற்ற காலத்தும்' என்று உரைப்பாருமுளர். கள்ளுண்ட மகிழ்ச்சியால் ஈதல் யார்க்கும் எளிதாகலின் அவ்வாறு உரைத்தல் சிறப்பின்றாம் என்க. கள்ளுண்டு மகிழாது ஈதலே சிறந்த கொடையாதல்,

"நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கு மெளிதே தேரீ தல்லே
தொலையா நல்லிசை விளங்கு மலையன்

மகிழா தீந்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே" புற. 123.

எனச் சான்றோர் கூறுமாற்றானு மறிக. சிறுமகிழானும், உம்மை உயர்வு சிறப்பு. பெருங்கலம் என்றது விலைமதித்தற்கரிய பொன்னரிமாலை முத்து மாலை முதலியனவற்றை. வீசும் என்றார் பெருங் கொடையாதலின். "ஈதல் விசல் இசைத்த னீட்டல்.....பெருங் கொடை" எனப் பிங்கலந்தையில்(7: 371) வருதல் காண்க. வீசும் குட்டுவ என்க.

*11—25.* நின் மைந்து மலி பெரும்புகழை அறியாராய் மலைந்த பகைவேந்தர் தார் அழிந்து நீங்குதலால், பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு முருக்குத் தாழ்பு எழிலிய அடைகரையினையும் நந்து நாரையொடு செவ்வரி உகழும் கழனிவாயிலினையும் பழனத்தினையும் படப்பையினையும் தாமரையினையும் குவளையினையும் நீங்காயாணரையுமுடைய அவர் அகன்றலை நாடுகள் பெருங்கவின் அழிந்த ஆற்றவாய், மரையா ஏறு புணர்ந்து இனிது உறையும் விண்ணுயர் வைப்பின காடாயின; அதனை நின்னயந்து வருவேம் கண்டனம் என்க.

மைந்து - வலி. "மைந்து பொருளாக வந்த வேந்தனை" தொல். புறகு 15. அரசர்க்குச் சிறந்த மறப்புகழ் மற்றைப் புகழினும் மிக்க புகழாதலின் அதனைப் 'பெரும்புகழ்' என்றார். மைந்தினால் மறப்புகழ் மிகுதல் "மறப்புகழ் நிறைந்த மைந்தினோன்" (புற 290: 6) என்பதனாலுமறியப்படும். சேரன் பெரும்புகழைப் பகைவேந்தர் முற்பட அறிந்திருப்பரேல் மலையாதொழிவர் என்பார், 'பெரும்புகழ் அறியார் மலைந்த வேந்தர்' என்றார். மலைதல்-மாறுபடுதலுமாம். தம்பெருவலி காரணமாகப் போர்செய்தலை மேற்கொள்ளும் வேந்தராதலின் 'போரெதிர் வேந்தர்' என்றார். போர் எதிர்தல்--போர் செய்தலை மேற்கொள்ளல். கலி 89: 5 நச். அத்தகைய பெருவலி சான்ற பகைவேந்தர் போரிலே தம் தூசிப்படை யழிந்து நீங்குதலின் 'தார் அழிந்தோராலின்' என்றார் தார்-தூசிப்படை. ஓரால்-நீங்குதல். "நீடுபசியொரால் வேண்டின்" பொருந 62 ஓராலின் (17) அவர் அகன்றலை நாடு (25) காடாயின என முடிக்க.

இளி நாரை முதலிய புட்கள் தங்கி ஒலிக்குமாறு மருதமரம் ஓங்கி வளர்ந்திருக்கின்ற பெருந் துறையை 'மருதிமிழ்ந் தோங்கிய பெருந்துறை' என்றார். 'இமிழ்ந்து' என்பது மருதமரத்தின் ஓங்கத்தின் பெருமையைப் புலப்படுத்தி நின்றது. மருதமரத்தில் புட்கள் தங்கி ஒலித்தல் "இமிழ் மருதின்" (பதிற் 13: 7) என்பதனாலுமறியப்படும். இமிழ்ந்து - இமிழ. எச்சத்திரிபு. அன்றி, 'இமிழ்ந்து' என்னும் இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் தொழிலொடு நிகழ்ந்தது எனினுமாம். மருது முதலிய மரங்கள் ஓங்கி நிற்றலாற் குளிர்ச்சியுடைய பெரிய பரப்பினையுடைய பெருந்துறையாகலின் 'நளியிரும் பரப்பின் பெருந்துறை' என்றார். "மரம் பிறங்கிய நளிச் சிலம்பில்" (புற 136: 12) எனப் பிறரும் கூறுதல் காண்க. நளி என்பதற்கு மரங்கள்

செறிந்த என்றுரைப்பினும் அமையும். மணன்மலி பெருந்துறை யென்றது யாற்றின் கடுவிசைப் பெரும்புனலாற் கொண்டுவந்திட்ட மணல்மிக்க பெருந் துறையென்றவாறு. "வருபுனல் வையை வார்மண லகன்றுறை" எனவும், "கணைவிசைக் கடுநீர்க், காவிரிப் பேரியாற் றயிர்கொண் டீண்டி, எக்க ரிட்ட குப்பை வெண்மணல்" எனவும் (அக 36: 9; 181: 11-3) வருவன காண்க. பெருந்துறையென்றது யாற்றில் நீராடும் பெருந்துறையை. "காவிரிப், பல ராடு பெருந்துறை" (குறுந் 258) என வருதல் காண்க. பெருந்துறைக் காஞ்சி எனக் கூட்டுக. "காஞ்சித்துறை" (கலி 74: 4) என வருதல் காண்க.

ததைந்த காஞ்சியென்றது விளையாட்டு மகளிர் பலரும் தளிரும் முறியும் தாதுவும் கோடலாற் சிதைவுபட்டுக் கிடக்கின்ற காஞ்சியென்றவாறு. இச் சிறப்பானே இச்செய்யுளுக்குத் ததைந்த காஞ்சி என்று பெயராயிற்று.

மகளிர் காஞ்சியின் தளிர் முதலியவற்றைக் கொய்தல் "கொய்குழை யகை காஞ்சி" என்பதனாலும் 'மகளிர் கொய்யும் தழை தளிர்க்கின்ற காஞ்சி' என்ற அப்பகுதியுரையினாலும் (கலி 74: 5) அறியப்படும். ததைதல்-சிதை தல். "சமந்ததைந்த வேல்" பதிற் 70: 3. காஞ்சி-காஞ்சிமரம். "காஞ்சி நீழற் றமர் வளம் பாடி" அக 286: 4. இதனை எடுத்துக் கூறினர் பகைவர் நாட் டின் நலந்தோன்ற. "காஞ்சி நல்லூர" (பு. வெ. மா. 312) எனவும், "காஞ்சித் துறையணி நல்லூர" (கலி 74: 5) எனவும் சான்றோர் கூறுதல் காண்க. காஞ்சியொடு முருக்குத் தாழ்பு எழிலிய் அடைகரையென்க. ஒடு – எண்ணொடு. தாழ்பு என்றது செயப்பாட்டு வினையெச்சப் பொருட்டாக நின்றது. இனித் தாழ எனத் திரிப்பினும் அமையும். எழிலிய அடைகரை–காஞ்சியும் முருக் கும் பூத்துக் கிடத்தலால் அழகு பெற்ற அடைகரை. நெருப்புறழ் அடைகரை என்றது முருக்கின் செந்நிற மலர்கள் விழ்ந்து கிடத்தலால் நெருப்பை ஒத்த அடைகரையென்றவாறு. முருக்கின் பூ நெருப்பை ஒத்ததென்பது,

"கருநனை யவிழ்ந்த வூழுறு முருக்கின்
எரிமருள் பூஞ்சினை" அக 41: 2-3.

"நனைமுதிர் முருக்கின் சினைசேர் பெருங்கல்
காய்சினக் கடுவளி யெடுத்தலின் வெங்காட்டு
அழல்பொழி யானையி னையெனத் தோன்றும்" அக 233: 5–7.

"பொங்கழன் முருக்கி னொண்குரல்" அக 277: 17.

என வருவனவற்றிற் காண்க. ததைந்த காஞ்சியொடு முருக்குத் தாழ்பெழி லிய நெருப்புறழ் அடைகரை யென்றதனால் காஞ்சியும் முருக்கும் ஓரே காலத் திற் பூத்தலறியப்படும். அது இளவேனிற் காலமென்பது,

"குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்லிணர்ப்
பொற்றகை நுண்டா தூறைப்பத் தொக்குடன்
குப்பை வார்மணல் எக்கர்த் துஞ்சும்
யாணர் வேனின் மன்" அக 341: 9–12.

"பாசரும் பீன்ற செம்முகை முருக்கினப்
போதவிழலரி கொழுதித் தாதருந்
தந்தளிர் மாஅத் தலங்கன் மீமிசைச்
செங்க ணிருங்குயி லயவரக் கூஉம்
இன்னிள வேனிலும்" அக 229: 16–20.

என வருவனவற்றானுமறியப்படும்.

நந்து நாரை, உம்மைத் தொகை. நந்து—சங்கு. "நந்து பணிலம் வளை நாகு சுரிமுகம், கம்பு கோடு சங்கெனப் படுமே" என்பது திவாகரம். உகழ்தல் வினை சங்கினுக் கின்மையின் நந்து நாரை என்பதற்குச் சங்குகளும் நாரைகளும் எனவுரைத்தல் அமையாது. நாரையொடு செவ்வரி உகழும் என்றதனால், செவ்வரி என்றது செவ்வரி நாரையை. "பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை" (புற 351: 9) எனப் பிறுண்டும் வருதல் காண்க. செவ்வரி, நாரையின் இறகில் உண்டு என்பது,

"கவிரித ழன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக்கு" குறுந் 103: 2-3.

"காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி" ஐங் 156: 2-3.

"சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்" ஐந். எழு 68.

என வருவனவற்றாலறியப்படும். 'பெரிய நாரை சிறகு சிவந்திருத்தலானும்' என்னும் (கலி 126: 3–4 நச் விசேட) உரைப்பகுதியால் செவ்வரிநாரை பெரிய நாரை என்பது அறியப்படும். உகழும்— தாவும் நெடுநல் 92 நச். கழனி வாயில் வழியாக ஓடும் நீரில் வரும் மீனைப் பிடித்துத் தின்னும்பொருட்டு நாரையும் செவ்வரியும் உகழ்வனவாயின. "வயமலர் கழனி வாயிற் பொய்கைக் கயலார் நாரை" (புற 354: 4-4) என வருதல் காண்க. பழனம்-நீர்நிலைச்செறு. சிலப் 10: 113 அடி நல். 'நீர்நிலம்' சீவக 2902 நச். படப்பை—தோட்டம். "பழனப் படப்பைப் புனனாடு" என்புழிப் படப்பை—தோட்டம் என நச்சினார்க்கினியர் உரைத்தல் காண்க (சீவக 1934 உரை)

பூவின் தாமரை: முதலுக்கேற்ற அடை. வளைமகள் குறுஅது மலர்ந்த ஆம்பல் என்றது விளையாட்டு மகளிரால் பறிக்கப்படாமல் மலர்ந்த ஆம்பல் என்றவாறு. வளைமகளிர்—விளையாட்டு மகளிராதல், 'வளையோர்—வளையணிந்த விளையாட்டு மகளிர்' என்ற புறப்பாட்டுரையானும் அறிக. (புற 242: 1 உரை) குறுஅது என்பது குற்று என்பதன் எதிர்மறை. குற்றல்-பறித்தல். "நீர்தரு மகளிர் குற்ற குவளையும்" (புற 42: 16) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. யாணர்—செல்வ வருவாய் எனினுமமையும். அவர் என்றது போரெதிர் வேந்தரை.

நாட்டில் மக்களின்றுய் இயங்குவாரின்மையின் 'வழங்குநரற்றென' என்றார். மருங்கு-இடம். 'வானுற நிவந்த மேனிலை மருங்கில்" நெடுநல் 60. பக்கருமாம். தூர்ந்து புல்மிக்கு என மாறிக் கூட்டுக. வழங்குநரற்றமையின் புல் மிகுவதாயிற்று. பெருங்கவின் அழிந்த ஆறு பொன்னுடை நியமத்தா

னும் மல்லன் மனைகளானும் இயங்குவாரானும் உளதாகிய அழகு அழிந்த வழி. ஆற்ற காடாயின எனக் கூட்டுக. ஏறு-மரையேறு. புணர்ந்து உறையும் என முடிக்க. ஏறு புணர்ந்து மரையா இனிதுறையும் என்றதனால் காட்டின் செறிவும் விண்ணுயர் வைப்பின என்றதனால் உயர்ச்சியும் கூறினர். "மரையா வுகளும் மரம்பயில் சோலை" (கைந்நிலை 6) எனப் பிறரும் கூறுதல் காண்க. "பெற்றமு மெருமையு மரையு மாவே' (தொல் மரபு 60) என்றதனால் மரையா என்றார். "மென்னடை மரையா" (குறுந் 321: 5) "தூங்குநடை மரையா" (அக 3: 7) "கன்றுடை மரையா" (புற 168: 9) எனப் பிறருங் கூறுதல் காண்க. மணன் மலி பெருந்துறை முதலியவற்றையுடைய பெருவளம் சான்ற பகைவர் நாடு சேரலால் அழிந்து காடாயின என்பதே ஆசிரியர் கருத்தாகலின் 'விண்ணுயர் வைப்பின காடாயின' என்பதற்கு விண்ணிலே பொருந்துமாறுயர்ந்த மாடங்கள் பொருந்திய ஊர்கள் காடுகளாயின எனல் பொருந்தாதென்க. பழையவுரைகாரரும், அகன்றலை நாடு காடாயின என்றே முடிபு செய்தனர். வைப்பு என்பது இடம் என்னும் பொருட்டாதல், "யாணர் வைப்பிற் கானம்" (நற் 292) "அருஞ்சுர வைப்பிற் கானம்" (குறுந் 154) என வரூஉஞ் செய்யுட்பகுதிகளிற் காண்க. "கல் பிறங்கு வைப்பிற் கடறு" (பதிற் 53: 4) என்புழி வைப்பு-இடம் எனப் பழையவுரைகாரர் உரைத்தலுங் காண்க. அழிந்த நாடுகள் பலவாதலின் 'காடாயின' என்றார். அதனை நின்னயந்து வருவேம் கண்டனம் என ஒருசொல் வருவித்து முடிக்க. நின்னயந்து-பரிசில் காரணமாக நின்னைக் காணவிரும்பி. "வள்ளியை யென்றலிற் காண்குவந் திசினே" (பதிற் 54:1) என வருதல் காண்க.

## ஒப்புமைப்பகுதி.

1. அலந்தலை: பதிற் 39: 12; நற் 394: 2; அக 111: 5; 187: 11; 385: 9; புற 325: 11;

1—2. "கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய, சிறியிலை வேலம்" பதிற் 58: 13-4; "சிள்வீடு கறங்கும் சிறியிலை வேலத்து" "சில்வீ டார்க்கும் ......ஓதி" "வறன்மரம் பொருந்திய சில்வீடு......ஆர்க்குஞ் சுரனிறந்து" அக 89: 6; 14: 52-3; 303: 17-8.

4. கலப்பையர்: பதிற் 15: 26 ஒப்பு.

5—6. மன்றம் படர்ந்து மறுகுசிறை புக்கு ...வாழ்த்தும் அகவலன்" பதிற் 43: 26-8.

பொன்செய் புனையிழை: "பொலம்புனை யவிரிழை" முருகு 18; "பொன்செய் புனையிழை" குறுந் 21: 21; "பொலம்புனை யவிரிழை" பரி 16: 6.

8. நெஞ்சுமலி யுவகையர்: "நெஞ்சுமலி யுவகையர் வியன்களம் வாழ்த்த" பதிற் 40: 26.

10. போரடுதானை: பதிற் 16: 16. ஒப்பு.

பொலந்தார்க் குட்டுவ: "புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்" புற 343: 9.

மு. *"போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ"* பதிற் 43: 11.

12. பெருங்கவின்: *"பெருங்கவின் தொலைந்த நின்"* குறுந் 253: 3.

14. அமர்ந்தினிது: *"அமர்ந்தினிது நோக்கி"* மலைபடு 560; முகத்தான் *"அமர்ந்தினிது நோக்கி"* குறள் 93.

16. மைந்துமலிபெரும்புகழ்: *"படைதொலை பறியா மைந்துமலி பெரும் புகழ்"* பெரும்பாண் 398.

பெரும்புகழ் அறியாது மலைதல்: பதிற் 15: 14 ஒப்பு.

17. போரெதிர்வேந்தர்: பதிற் 33: 12; புற 84: 3.

18—9. மருதோங்கிய பெருந்துறை: பதிற் 27: 6. குறுந் 258: 3; ஐங் 31: 3; 33: 2; 75: 3. சிலப் 14: 72.

22. பழனப்படப்பை: *"கழனியும் பொய்கையும் பழனப் படப்பையும்"* பெருங் (1) 46: 282.

23. தாமரைப் பூவிற்கு நெருப்பு: பதிற் 19: 20 ஒப்பு.

அருஅ யாணர்: பதிற் 60: 8; 71: 1; பொருந 1; மதுரைக் 210; புற 375: 9-10.

அவர் அகன்றலை நாடு: *"வெம்மையரி துநின் னகன்றலை நாடே"* பதிற் 28: 14; *"பெரும்புனற் படப்பையவ ரகன்றலை நாடே"* புற 98: 20.

15—25. நாடுகாடாயின: *"நாடெனும் பேர் காடாக"* மதுரைக் 156.

## 4. சீர்சால் வெள்ளி

(24) நெடுவயி ரொளிறு மின்னுப் பரந்தாங்குப்
புலியுறை கழித்த புலவுவா யெஃகம்
ஏவ லாடவர் வலனுயர்த் தேந்தி
ஆரரண் கடந்த தாரருந் தகைப்பிற்
பீடுகோண் மாலைப் பெரும்படைத் தலைவ
ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்தல்
ஈத லேற்றலென் றாறுபுரிந் தொழுகும்
அறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி
ஞால நின்வழி யொழுகப் பாடல் சான்று
நாடுடன் விளங்கு நாடா நல்லிசைத்
திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ
குலையிழி பறியாச் சாபத்து வயவர்
அம்புகளை வறியாத் தூங்குதுளங் கிருக்கை
இடாஅ வேணி யியலறைக் குருசில்
நீர்நிலந் தீவளி விசும்போ டைந்தும்
அளந்துகடை யறியினு மளப்பருங் குரையைநின்

வளம்வீங்கு பெருக்க மினிதுகண் டிகுமே
உண்மருந் தின்மரும் வரைகோ ளறியாது
குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றே
றடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்
எஃகுறச் சிவந்த வூனத் தியாவரும்
கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி
வயங்குகதிர் விரிந்து வானகஞ் சுடர்வர
வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழுதோ டாநிய நிற்பக்
கலிழுங் கருவியோடு கையுற வணங்கி
மன்னுயிர் புரைஇய வலனேர் பிரங்கும்
கொண்டற் றண்டளிக் கமஞ்சூன் மாமழை
காரெதிர் பருவ மறப்பினும்
பேரா யாணர்த்தால் வாழ்கநின் வளனே.

துறை—இயன்மொழி வாழ்த்து.
வண்ணம்—ஒழுகுவண்ணம்
தூக்கு—செந்தூக்கு.
பெயர்—சீர்சால் வெள்ளி (24)

*1—5.* நெடு வயின் ஒளிறு மின்னு பரந்தாங்கு-நெடிய ஆகாயத்தினிடத்து விளங்கும் மின்னல் பரந்தாற்போல, புலி உறை கழித்த – புலித்தோலாற்செய்த உறையினின்று நீக்கிய, புலவுவாய் எஃகம்-புலானாறும் வாயையுடைய வேலை, ஏவல் ஆடவர் வலன் உயர்த்து ஏந்தி-நினது ஏவலராய வீரர் தம் வலக்கையில் உயர்த்து விளங்க எடுத்து, ஆர் அரண் கடந்த தார் அரு தகைப்பில் – பகைவருடைய அரிய அரணங்களை வென்று கொண்ட தார்ப்படைக்கு அழித்தற்கரிய மாற்றார்படை வகுப்பிலே, பீடு கொள் மாலை பெரும்படை தலைவ-வென்றி செய்து பெருமைகொள்ளும் இயல்பையுடைய பெரிய படைக்குத் தலைவ!

*6—11.* ஓதல்-வேதத்தை ஓதல், வேட்டல்-யாகஞ் செய்தல், அவை பிறர்ச் செய்தல்-அவையிரண்டையும் பிறரைச் செய்வித்தல், ஈதல்-கொடுத்தல், ஏற்றல்-கொள்ளத்தகும் பொருளைக் கொள்ளுதல், என்று ஆறு புரிந்து ஒழுகும்-என்று சொல்லப்பட்ட ஆறு தொழில்களையும் செய்து ஒழுகும், அறம்புரி அந்தணர்-அறத்தை விரும்பிய அந்தணரிடத்து, வழிமொழிந்து ஒழுகி-வழிபாடு சொல்லி நடந்து, ஞாலம் நின்வழி ஒழுக – ஞாலத்திலுள்ளார் நின் ஏவல் கேட்டு நடப்ப, பாடல் சான்று - புகழ்தல் அமைந்து, நாடு உடன் விளங்கும்–நாடு முழுவதும் பரந்து விளங்கும், நாடா நல்லிசை - ஐயுற்ற ஆராயப்படாத உலகறிந்த நல்ல புகழினையுடைய, திருந்திய இயல் மொழி - திருந்திய இயல்பினையுடைய மொழியினையுடைய, திருந்து இழை கணவ - திருந்திய இழையையுடையாட்குக் கணவ,

*12—4.* குலை இழிவு அறியா சாபத்து வயவர் - நாணியை இறக்குதலை அறியாத வில்லையுடைய வீரர், அம்பு களைபு அறியா - போர்வேட்கையான் எப்பொழுதும் கையினின்றும் அம்பைக் களைதல் அறியாத, தூங்கு துளங்கு இருக்கை-படை இடம்படாது செறிந்து துளங்குகின்ற இருப்புக்களையுடைய, இடா ஏணி - அளவிடப்படாத எல்லையையுடைய, இயல் அறை குருசில்-பாசறைக்குள்ள இயல்பையுடைய பாசறையையுடைய தலைவ!

*15—6.* நீர் நிலம் தீ வளி விசும்போடு ஐந்தும் - நீரும் நிலமும் நெருப்பும் காற்றும் ஆகாயமுமாகிய ஐந்தினையும், அளந்து கடை அறியினும்—அளந்து முடிவு அறிந்தாலும், அளப்பரும் குரையை—பெருமை அளந்தறிதற்கரியை.

*16—30.* நின் வளம் வீங்கு பெருக்கம்—நின் செல்வம் மிக்க பெருமையை, இனிது கண்டிகும் - இனிது கண்டேம்; அஃது எவ்வாறு இருந்ததெனில், உண்மரும் தின்மரும் வரை கோள் அறியாது—உண்பாரையும் தின்பாரையும் வரைந்துகொள்ளுதலை அறியாமல் இடுகின்ற, குரைதொடி மழுகிய உலக்கை வயின் தோறு - ஒலித்தலையுடைய பூண் மழுகிய உலக்கையையுடைய இடங்கள்தோறும், அடை சேம்பு எழுந்த — சேம்பின் இலையைப்போல எழுந்த, ஆடு உறு மடாவின்-அடுதல் பொருந்திய மடாவின், எஃகு உற சிவந்த ஊனத்து —அரிவாள் படுதலால் இரத்தத்தாற் சிவந்த இறைச்சிகளையுடைய, யாவரும் கண்டு மதிமருளும் வாடாசொன்றி-யாவரும் கண்டு மதி மருளதற்குக் காரணமாகிய குறையாத சோறு, வானகம் சுடர்வர வயங்கு கதிர் விரிந்து-வானிடம் விளங்கும்படி விளங்குகின்ற கதிர் விரிந்து, வறிது வடக்கு இறைஞ்சிய சீர் சால் வெள்ளி - சிறிது வட திசைக்கண் தாழ்ந்த புகழமைந்த வெள்ளி பயம் கெழு பொழுதொடு ஆநியம் நிற்ப - மழைக்குப் பயன்படும் மற்றக் கோட்களுடனே தான் நிற்கும் நாளிலே நிற்க, கலிழும் கருவியொடு - உயிர், கள் அஞ்சிமனம் கலங்குதற்குக் காரணமான மின்னு முழக்கு முதலியவற்றின் தொகுதியொடு, கை உற வணங்கி-பக்க வானத்திற் பொருந்தத் தாழ்ந்து, மன் உயிர் புரைஇய-நிலைபெற்ற உயிர்களைப் புரத்தற்பொருட்டு, வலன் ஏர்பு இரங்கும்—வலமாக எழுந்து ஒலியுண்டாகப் பெய்யும், கொண்டல் தண் தளி கம சூல் மா மழை - நீரை முகந்துகொள்ளுதலையுடைய தண்ணிய துளியாகிய நிறைந்த் சூலினையுடைய பெரிய முகில், கார் எதிர் பவரும் மறப்பினும்—மழையை ஏற்றுக்கொள்ளும் கார்ப் பருவத்தே பெய்தலை மறந்தாலும், பேரா யாணர்த்து - நீங்காத புதுவருவாயை யுடையது. நின் வளன் வாழ்க — இப்பெற்றிப்பட்ட நின் வளம் வாழ்க.

முடிபு. பெரும்படைத் தலைவ, திருந்திழை கணவ, குருசில், நீர்முதலைந்தினையும் அளந்து முடிவறியினும் பெருமை அளத்தற்கரியை. நின் செல்வ மிக்க பெருமை இனிது கண்டேம். அஃது எவ்வாறு இருந்ததெனின், வாடாச் சொன்றி மழை காரெதிர் பருவம் மறப்பினும் பேரா யாணர்த்து; அப்பெற்றிப்பட்ட நின்வளம் வாழ்க என்க.

ஆ—ரை. 1—5. மிக்க உயரத்திலிருத்தலின் ஆகாயம் 'நெடுவயின்' எனப்பட்டது. நெடுவயின் ஒளிறும் மின்னு என்க. மின்னு-மின். "கொடி விடு பிருளிய மின்னுச் செய் விளக்கத்து" கலி 8: 6. மின்னுப் பரந்தாங்கு எஃகம் ஏந்தி என்க. "கூர்நுனை வேலு மின்னின் விளங்கும்" "மின்னு நிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவேல்" புற 42: 4; 57: 8. என வருவன காண்க. வேலைப் புலித்தோலாற் செய்த உறையிலிட்டு வைத்தலின் புலியுறை கழித்த எஃகம் என்றார். "திண்பிணி யெஃகம் புலியுறை கழிப்ப" (பதிற் 19: 4) என வருதல் காண்க. புலவு வாய் எஃகம் - பகைவரைக் குத்துதலாற் புலால் நாறும் வாயையுடைய வேல். இதனால் ஆடவர் பகைவரைப் பொருதுவென்றமை கூறிர். எஃகம்-வேல். பெரும்பாண் 119 நச். ஆடவர் - வீரர். அவர் அரசன் ஏவல்வழி நிற்றல் "வடிநவி லம்பின் ஏவலாடவர்" (அக 215: 10) என்பதனாலுமறிக. 'வேலை வலக்கையின் ஏந்தல்' "எஃகுடை வலத்தன்" "புனைமாண் எஃகம் வலவயின் ஏந்தி" (அக 102: 11; 215: 4) என வருவன வற்றாலுமறியப்படும். 'மின்னுப் பரந்தாங்கு' என்பதற்கு ஏற்ப, ஏந்தி என்பதற்குப்பரந்து விளங்க ஏந்தி எனவுரைக்க. ஏந்தியென்னும் சினைவினையைக் கடந்த என்னும் முதல் வினையொடு முடிக்க. ஆரரண்-மதில் கிடங்குகளானும் பொறிகளானும் புறத்தாரால் கோடற்கரிய அரண். அத்தகைய அரண்களை வென்றுகொண்ட வலிசான்ற தூசிப்படை என்பார் 'ஆரரண் கடந்த தார்' என்றார். சேரனது தூசிப் படையின் ஆற்றலை எடுத்துரைத்தது அப்படையால் அழித்தற்கரிய மாற்றார் படை வகுப்பின் பெருவலி தோன்றற்பொருட்டு. தகைப்பு என்றது மாற்றார் படை வகுப்பை. இதனைத் 'தாரருந் தகைப்பு-ஒழுங்குடைய மாற்றாரால் குலைத்தற்கரிய படைவகுப்பு' என்னும் (பதிற் 66:10) உரையானும் அறியலாம். சேரன் பெரும்படை, அத்தகைய பெருவலிசான்ற படைவகுப்பில் வென்றிசெய்து பெருமைகொள்ளுதலை இயல்பாக வுடைமையின் 'அருந்தகைப்பிற் பீடுகொண் மாலைப் பெரும்படை' என்றார். பீடு-பெருமை. மாலை - இயல்பு. "மாலை இயல்பே" என்பது **தொல்காப்பியம்.** (உரி 17) பெரும்படை வென்றிசெய்து பெருமை கொள்ளும் இயல்புடைமைக்கு சேரன் தலைமைதாங்குதலே ஏதுவென்பது தோன்றப் 'பெரும்படைத் தலைவ' என்றார்.

6—11. அந்தணர் வழிமொழிந் தொழுகி ஞாலநின்வழியொழுகப் பாடல் சான்று நாடுடன் விளங்கும் நல்லிசையையுடைய சேர என்க.

ஓதல் முதலிய ஆறுபுரிந்தொழுகும் அந்தணர் என்க. அதனால் அந்தணர் 'அறுதொழிலோர்' என்றும் கூறப்படுவர். ஓதல்-வேதத்தை ஓதல். "ஓத லந்தணர் வேதம் பாட" என்றார். மதுரைக்காஞ்சியினும். வேட்டலாவது: ஐந்தீயாயினும் முத்தீயாயினும் உலகியற்றீயாயினும் ஒன்றுபற்றி மங்கல மரபினாற் கொடைச் சிறப்புத் தோன்ற அவி முதலியவற்றை மந்திர விதியாற் கொடுத்துச்செய்யும் செய்தி. அவை பிறர்ச்செய்தலாவன: ஓதுவித்தலும் வேட்பித்தலும். **ஓதுவித்தலாவது:** கொள்வோ னுணர்வுவகையறிந்து அவன் கொளவரக் கொடுக்கும் ஈவோன்றன்மையும் ஈதலியற்கையுமாம். **வேட்பித்தலாவது:** வேள்வியாசிரியர்க்கோதிய இலக்கணமெல்லாம் உடையனாய் மாணாக்

கற்கு அவன்செய்த வேள்விகளாற் பெறும் பயனைத் தலைப்படுவித்தலை வல்ல ஞதல் **ஈதலாவது:** வேள்வியாசானும் அவற்குத் துணையாயினரும் ஆண்டுவந்தோரும் இன்புறுமாற்றான் வேளாண்மையைச் செய்தல். **ஏற்றலாவது:** கொள்ளத்தகும் பொருள்களை அறிந்துகொள்ளுதல். அறம்புரி - அறஞ் செய்தலை விரும்பிய எனினுமாம். அந்தணர்க்கு என நான்காவது விரிக்க. 'வழி மொழிந்து -வழிபாடு சொல்லி' **புற** *8: 1* உரை. ஒழுகி-ஒழுக. ஞால நின்வழி யொழுக வென்றது தீத்தொழிலைப் போக்கி நடுவு நிலைமையைச் செய்தலானே நின் ஆளுகைக்குட்பட்ட நிலத்து மக்கள் யாவரும் ஒருபெற்றிப்பட நின் ஏவல் கேட்டு நடப்ப என்றவாறு. குன்று மலை காடு நாடு என்னும் இடங்களி லுள்ளார் யாவரும் அடங்க 'ஞாலம்' என்றார். வழி ஒழுக – ஏவல்வழியே செல்ல எனினுமாம். பாடல் சான்று என்பதற்குப் புலவராற் பாடுதல் முற்றுப்பெற்று என்று உரைப்பினுமமையும். பாடல் சான்றமையின் நல்லிசை நாடுடன் விளங்குவதாயிற்று. நாடா நல்லிசை என்றார் உகறிந்த நல்ல புகளாதலின். நல்லிசை என்றது செங்கோன்மையாலுய புகழை. 'அரசர்க்குப் புகழ்கடாம் நிலைபெறுதல் செங்கோன்மையானும். அச்செங்கோன்மையில்லையாயின் அவர்க்கு அப்புகழ்கடாம் உளவாகா' எனப் **பரிமேலழகர்** உரைத்தல் (**குறள்** 556 உரை) காண்க. திருந்திய இயல்மொழி-பொய் குறளை முதலிய குற்றங்களினீங்கித் திருந்திய இயல்பினையுடைய மொழி. மொழிக்குற்றம் மனக் குற்றம் காரணமாக எழுதலின், திருந்திய இயன்மொழித் திருந்திழை. இயல்பாகவே நற்குணமுடையவள் என்பது பெறப்படும். சேரனைத் 'திருந்திழை கணவ' என்றது நாடுடன் விளங்கும் நாடா நல்லிசைக்குப் பெருந்தேவியும் ஏதுவாதல்பற்றியென்க.

*12—4*. குலையிழிபு அறியாச் சாபத்து வயவர் அம்பு களைவறியாத இருக்கையையுடைய பாசறைக் குருசில் என்க.

இன்னபொழுது போருண்டாம் என்று அறியாதே எப்பொழுதும் நாணி ஏற்றியே கிடக்கும் வில்லைக் 'குலையிழி பறியாச் சாபம்' என்றார். குலை-நாணி. இப்பொருட்டாதலை, 'வில்குலை யறுத்து-வில்லின் நாணியை யறுத்து' எனப் **பழையவுரைகாரர்** உரைத்தலானுமறிக. (**பதிற்** *79: 11* உரை) இனிக் குலை என்பதற்கு வில்லின் நாணைப் பூட்டி இறுக்குதற்கு அதன் இருதலையினும் இடப்படும் குதை என்று உரைப்பினுமமையும். ''குலையே வில்லி னிருதலைக் குதையே'' என்பது **பிங்கலந்தை** (**பிங்** *6: 447*) தூங்குதல் – செறிதல். ''இருடுங்கு சோலை யிலங்குநீர் வெற்ப'' **கலி** 505. * துளங்கா விருக்கையும் உண்மையின் அதனை விலக்குதற்குத் 'துளங்கிருக்கை' என்றார். துளங்கிருக்கை என்றது கூடாரங்களை. ''கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை'' என **முல்லைப் பாட்டில்** (*40*) வருதல் காண்க. ஏணி-எல்லை. ''நளியிரு முந்நீ ரேணி யாக'' **புற** *35: 1*. இயல் என்றது பாசறைக்குள்ள வியல்பை' இதனை,

''கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட

* ''துளங்கா விருக்கை, மல்லற் பேரூர்'' பெரும்பாண் 253: 4.

> விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
> படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" முல்லை 24: 8.
>
> "மரங்கொல் மழகளிறு முழங்கும் பாசறை" பதிற் 16: 8.
>
> "உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை" பதிற் 61: 8.

என வருஉஞ் செய்யுட்பகுதிகளாலு முணர்க. பாசறை அறையெனத் தலைக் குறைந்தது. குருசில், அண்மை விளி.

15—6. நீர் முதல் ஐந்திணையும் அளந்து முடிவறியினும் பெருமை அளந் தறிதற் கரியை என்க.

நீர் முதலிய பூதங்கள் ஐந்தும் அளப்பரியனவாதலின் சேரன் பெருமைக்கு அவற்றை எடுத்துக் கூறினர். "நிலநீர் வளி விசும் பென்ற நான்கின், அளப்பரி யையே" (பதிற் 14: 1–2) எனப் பிறருங் கூறுதல் காண்க. நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்னும் முறைபற்றிப் பூதங்களைக் கூறுதலை,

> "நீரு நிலனுந் தீயும் வளியு
> மாக விசும்போ டைந்துடன்" 453-4.

என்னும் மதுரைக்காஞ்சியினும் காண்க. நிலம் நீர் தீ வளி விசும்பு என ஒன்று ஒன்றனுள் அடங்குமுறையாற் கூறுதல் செய்யாது மயங்கக் கூறியது என்னை யெனின், பூதங்கள் ஐந்துங் கலக்குங்கால் மயங்கிநிற்கு மென்றற்கு அவ்வாறு கூறினர் என்க. விசும்போடு, ஓடு எண்ணொடு. இதனை நீர் முதலியவற்றோ டுங் கூட்டுக. பூதங்கள் ஐந்தாகலின் உம்மை கொடுத்தார். கடை–முடிவு. 'செல்வங் கடைகொள" (கலி 61: 2) என்புழியும் இப்பொருட் டாதல் காண்க. அறியினும் என்ற உம்மை அளந்து கடையறிதற்கு அருமை தோன்ற நின்றது. குரை–அசைநிலை. "பல்குரைத் துன்பங்கள் சென்றுபடும்" (குறள் 1043) என்புழிப் போல. இப்பகுதியாற் சேரன் பெருமை கூறினர்.

16—30. நின் வளம் வீங்கு பெருக்கம் இனிது கண்டேம். அஃது எவ் வாறு இருந்ததெனின், உண்மாரையும் தின்மாரையும் வரைகோளறியாமல் இடுகின்ற சொன்றி, மழை காரெதிர் பருவம் மறப்பினும் பேராயாணர்த்து; அப்பெற்றித்தாய நின்வளன் வாழ்க என்க.

உண்மரும் தின்மரும் வரைகோளறியாமல் இடுகின்ற சொன்றி, காரெதிர் பருவமறப்பினும் பேராயாணர்த்தாதல் சேரன் செல்வ மிக்க பெருமையை இனிதுபுலப்படுத்தலின் 'நின்வளம் வீங்கு பெருக்கம்இனிது கண்டிகும்' என்றார்.

> "சாறயர்ந் தன்ன மிடாச் சொன்றி
> வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப" குறிஞ்சி 201–2.

என்பது ஈண்டைக்கேற்ப அறிதற்பாலது. உண்மாரும், தின்மாரும் என்பன குறுகி நின்றன. "புலனுழு துண்மார் புன்கணஞ்சி" (புற 46: 3) எனப் பிறண்டும் வருதல் காண்க. உண்மாரையும் தின்மாரையும் என்னும் இரண் டாவது *விகாரத்தால் தொக்கது. வரைகோள் - தடைசெய்தல். எல்லையறி

* உயர்திணையிடத்து ஒழியாது வரவேண்டுமென்பது, "உயர்திணை மருங்கி னொழியாது வருதலும்" (தொல். தொகை மரபு 15: 8) என்பதனுலறிக.

யப்படுதலுமாம், வரைகோள் அறியாமல் இடுகின்ற சொன்றி என ஒரு சொல் வருவித்து முடிக்க. ''யாவர்க்கும் வரைகோ ளறியாச் சொன்றி'' (குறுந் 233) என வருதல் காண்க. அறியாது என்பதனை அறியாமல் எனத் திரிக்க. உண் மரும் தின்மரும் அளவு வரைந்து கொள்ளுதலை அறியாது யாவரும் கண்டு மதி மருளும் சொன்றி எனினுமாம். தொடி - உலக்கையின் பூண். வருவார்க் கெல்லாம் நாடொறும் சோறு இடுதற்கு வேண்டிய நெல்லைக் குற்றுதலின் உலக்கையின் தொடி மழுகியது. ''இருங்கா முலக்கை யிருப்புமுகந் தேய்த்த, அவைப்பு மாணரிசி'' (சிறுபாண் 193-4) என வருதல் காண்க. உலக்கை வயின்றோறு ஆடுறு மடா எனக் கூட்டி அட்டிற் சாலையின் இடங் கள்தோறும் அரிசி குற்றப்படுதலும், மடாவில் சமையல் செய்யப்படுதலுங் கொள்க. வயின்—இடம். தொறு—இடப்பன்மைப் பொருளில் வந்த இடைச் சொல். சேம்பு அடை எழுந்த மடா என மாறிக் கூட்டி நிலத்தில் முளைத் திருக்கும் சேம்பின் இலையைப்போலப்பரந்துஉயர்ந்தெழுந்தமடாஎனக்கொள்க. 'அடைச்சேம் பெழுந்த' என்றதல்லது போல வென்றதில்லையாலோவெனின் உவமந் தொக்குநின்றதெனக் கொள்க. என்னை?

> ''வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
> வினையின் றொகையே பண்பின் றொகையே
> யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
> றவ்வா றென்ப தொகைமொழி நிலையே'' தொல். எச்ச 16.

என்றோதினமையின். 'எஃகுறச் சிவந்த ஊனத்துச்......சொன்றி' என மேல் வருதலின் சேம்பெழுந்த மடா என்பதற்குச் சேம்பின் தண்டையும் கிழங்கை யும் வேகவைத்தலின் அவை மேலே எழுகின்ற மிடா எனல் பொருந்தாதென்க. 'அடர்ச்செம்பெழுந்த' என்பது பாடமாயின் தகடாகிய செம்பால் உயர்த்துச் செய்யப்பட்ட எனவுரைக்க. ''செப்பி னியிரம் மிடா'' (சீவக 692) என வரு தல் காண்க. பச்சிறைச்சியாகலின் 'எஃகுறச் சிவந்த வூனம்' என்றார். எஃகு-அரிவாள். உற—பட. படுதல் ஈண்டு அறுத்தல். ஊனத்துச்சொன்றி எனக் கூட்டுக. ''மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு'' (பதிற் 12: 17) என வருதல் காண்க. யாவரும் என்றது வறியவர்களேயன்றிச் செல்வர்க ளும் என்றவாறு. உம்மை, உயர்வு சிறப்பு. மருளும்—வியக்கும். மருட்கை—சொன்றியின் பெருமைகாரணமாகத் தோன்றிய மருட்கை.

> ''புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
> மதிமை சாலா மருட்கை நான்கே''. மெய்ப் 7.

என்பது **தொல்காப்பியம்**. வாடாச் சொன்றி என்றார் வறகடமுற்றகாலத்தும் குறைவுபடாச் சொன்றியாகலின். வாடா-குறையாத. ''வாடாத வென்றிமிகு சச்சந்தன் என்பான்'' ( சீவக7 ) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

சொன்றி-சோறு. ''சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி'' (பெரும் பாண் 13) ''புன்புல வரகின் சொன்றி'' (புற 197-12) எனவருவன காண்க. சொன்றி (22) பேராயாணர்த்து (30) எனக் கூட்டுக,

வறிது வடக்கிறைஞ்சிய வெள்ளி பயங்கெழு பொழுதொடு ஆசியநிற்பக் கருவியொடு கையுற வணங்கி இரங்கும் மழை என்க. வானகஞ் சுடர்வரக் கதிர்விரிந்து வயங்கு வெள்ளி என மாறிக் கூட்டுக. "சூழ்கதிர் வான் விளக்கும் வெள்ளி சுடர் விரிய" (பு வெ. மா. 204) "விரிகதிர் வெள்ளி" (சிலப் 10: 102) "வயங்கு வெண்மீன்" (பட்டினப் 1) எனப் பிறண்டும் வருவன காண்க. மழைக்கோளாகிய வெள்ளி மழை பெய்தற்கேதுவாகச் சிறிது வடக்கே சாய்ந்து நிற்குமாறு தோன்ற 'வறிதுவடக் கிறைஞ்சிய வெள்ளி' என்றார். வெள்ளி தெற்கே நின்றால் மழையின்றாதல், "வயங்கு வெண்மீன் திசை திரிந்து தெற்கேகினும்......புயன்மாறி வான் பொய்ப்பினும்" (பட்டினப் 1-2) "தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்......பெயர்பிழைப் பறியா" (புற 117: 2-7) என வருவனவற்றாலுமறியப்படும். மழைக்குக் காரணமாகிப் புகழமைந்த வெள்ளியாதலின் 'சீர்சால் வெள்ளி' என்றார். "வசையில் புகழ் வயங்கு வெண்மீன்" (பட்டினப் 1) என ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் கூறுதல் காண்க.

'வறிது வடக் கிறைஞ்சிய' என்னும் அடைச்சிறப்பான் இச்செய்யுளுக்குச் **சீர்சால்வெள்ளி** என்று பெயராயிற்று.

பயங்கெழு பொழுது என்றது மழைக்குப் பயன்படும் புதன் சனி செவ்வாய் என்னும் கோள்களை. வெள்ளி பயங்கெழு பொழுதொடு மழைபெய்தற்குரிய நாளில் நிற்றலின் 'ஆசியம் நிற்ப' என்றார். ஆசியம்—நாள். பிங்கலந்தை 2: 191. நாள்: சுவாதி முதலியன. கலிழுங் கருவியொடு - மக்களும் பிற விலங்கு முதலியனவும் மனம் கலங்குதற்குக் காரணமாகிய மின்னும் இடியும் முழக்குமாகிய இவற்றின் தொகுதியொடு. கருவி—தொகுதி. வானம் நாற்றிசையினும் தாழ்ந்து பரத்தலின் 'கையுற வணங்கி' என்றார். புரைஇய இரங்கும் எனக் கூட்டுக. இரங்கும் என்பதற்கு இரங்கிப் பெய்யும் என ஒரு சொல் வருவித்துரைக்க. கொண்டல் மாமழை எனக் கூட்டி நீரை முகந்து கொள்ளுதலையுடைய கரியமேகம் என வுரைக்க. "கடன் முகந்த கமஞ்சூன் மாமழை (நற் 99: 6) "கடன் முகந்துகொண்ட கமஞ்சூல் மாமழை" (அகம்43:1) "கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி" (கார் 33) என வருவன காண்க. கொண்டல்—கொள்ளுதல் என்னும் பொருளது. இனிக் கீழ்காற்றான் வரும் பெரிய முகில் என்று உரைப்பினுமமையும். தளி—துளி. தளியாகிய சூல் என்க. காரெதிர்பருவம் என்றது கார்ப்பருவத்தை. மறப்பினும் என்ற உம்மை எதிர்மறைப் பொருளது. மழை பருவம் மறப்பினும் வருவார்க்கெல்லாம் சோற்றை ஆக்கி இடுதலின் 'சொன்றி பேரா யாணர்த்து' என்றார். ஆல்—அசை. மழை பருவம் பொய்த்து விளைவு குன்றியகாலத்தும் பலர்க்கும் பயன்படும் சேரன் வளன் நெடுங்காலம் நின்று நிலவுக என்பார் 'வாழ்க நின் வளனே' என்றார். இப்பகுதியாற் சேரன் கொடைச்சிறப்புக் கூறினார்.

இது சேரன் தன்மையினைக் கூறி வாழ்த்தினமையான் **இயன்மொழி வாழ்த்தா**யிற்று.

## பழையவுரை.

4—5. தாரருந் தகைப்பிற் பீடுகொண் மாலைப் பெரும்படையென்றது தார்ப்படைக்கு அழித்தற்கரிய மாற்றார் படைவகுப்பிலே வென்றி செய்து பெருமைகொள்ளும் இயல்பையுடைய அணியாய் நிற்கும் பெரும்படையென்றவாறு. 6. அவைபிறர்ச் செய்த வெண்புழிப் பிறரையெனவிரியும் இரண்டாவதனை அவை செய்தலென நின்ற செய்தலென்னும் தொழிலைப் போந்த பொருளாற் செய்வித்தலென்னும் தொழிலாக்கி அதனொடு முடிக்க. 12. குலையிழிபு அறியாச் சாபமென்றது போர்வேட்கையான் இன்னபொழுது போருண்டாமென்று அறியாதே எப்பொழுதும் நாணியேற்றியே கிடக்கும் வில்லென்றவாறு. 13. அம்பு களைவறியா வென்றது போர்வேட்கையான் எப்பொழுதும் கையினின்றும் அம்பைக் களைதலறியா வென்றவாறு. தூங்கு துளங்கு இருக்கையென்றது படை இடம்படாது செறிந்து துளங்குகின்ற இருப்பென்றவாறு. 14. இடா ஏணி—அளவிடப்படாத எல்லை. இயலென்றது பாசறைக்குள்ள வியல்பை. பாசறை அறையெனத் தலைக்குறைந்தது. 18. உண்மாரும் தின்மாருமென்பன குறுகி நின்றன; உண்மாரையும் தின்மாரையுமென்னும் இரண்டாவது விகாரத்தால் தொக்கது. அறியாதென்பதனை அறியாமலெனத் திரிக்க. 24-5. வறிது வடக்கு இறைஞ்சிய சீர்சால் வெள்ளி பயம் கெழுபொழுதோடு ஆநியம் நிற்பவென்றது சிறிது வடக்கிறைஞ்சின புகழானமைந்த வெள்ளி மழைக்குப் பயன்படும் மற்றைக் கோட்களுடனே தான் நிற்குநாளிலே நிற்கவென்றவாறு. பொழுதென்றது அதற்கு அடியாகியகோளை. வறிது வடக்கிறைஞ்சியவென்னும் அடைச்சிறப்பான் இதற்கு '**சீர்சால் வெள்ளி**' என்று பெயராயிற்று.

பெரும்படைத் தலைவ (5), திருந்திழை கணவ (11), குருசில் (14), நீர் நிலமுதலைந்தினையும் (15) அளந்துமுடிவறியினும் பெருமை அளந்தறிதற்கரியை; (16) நின் செல்வம்மிக்க பெருமை இனிது கண்டேம். (17) அஃது எவ்வாறிருந்ததென்னின், வாடாச் சொன்றி (22) மழை (28) காரெதிர் பருவ மறப்பினும் (29) பேராயாணர்த்து; அப்பெற்றிப்பட்ட நின் வளம் வாழ்க என **வினைமுடிவு** செய்க.

இதனாற் சொல்லியது] அவன் **பெருமையும் கொடைச்சிறப்பும்** கூறி வாழ்த்தியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

2. **புலியுறைபொலிகள்:** பதிற் 19: 4 ஒப்புமைப்பகுதி.

**புலவுவாய் எஃகம்:** "வைந்நுதி மழுகிய புலவுவா யெஃகம்" **பெரும்பாண்** 119.

**வேலுக்குமின்** "கண்ணொளி ரெஃகிற் கடிய மின்னி" **பரி** 22: 7; "ஆரிருளகற்றிய, மின்னொளி ரெஃகம்" "செல்சமத்துயர்த்த, அடுபுகழெஃகம் போலக் கொடிபட மின்னி" **அக** 272: 4-5; 312: 12-4. "மழை மின்னென விமைக்கும் வேலை" **சீவக** 283.

2. **ஏவலாடவர்:** "வடிநவி லம்பின் ஏவலாடவர்" **அக** 215: 10

2–3 எஃகம் வலன் ஏந்தி: "வேலேவல னேந்தி" சீவக 283.

4. "அரண்கடத்தல்: "ஓம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்" "அரண் பல கடந்த முரண்கொள் தானை வழுதி" "ஆரரண் மடந்த...சேந்தன் தந்தை நற் 39 : 9; 150 : 3-4; ஆரரண் கடந்த சீர்கெழு தானை வெல்போர் வேந்த னொடு" ஐங் 459: 3-4; "அரண்பல கடந்த முரண்கொள் தானை, வாடா வேம்பின் வழுதி" "ஒன்னார், ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை, அடுபோர் மிஞிலி" அக 93: 8–9; 181: 3–5; "ஒன்னார், கடிமதி லரண்பல கடந்த, நெடுமா னஞ்சி" புற 92: 4–6.

தாரருந்தகைப்பு: "உறுமுரண் தாங்கிய தாரருந் தகைப்பின்" பதிற் 66: 10.

5. பெரும்படை: பெருங் (2) 19: 226; (3) 1: 14; கம்ப. கரன்வதை123

6–8. "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" தொல். புற சூ 20; "இருமூன் றெய்திய வியன்பினின் வழாஅ... இருபிறப்பாளர்" முருகு177-182. "அறுதொழி லந்தணர்" புற 397: 20; சிலப் 23: 70

8. அறம்புரியந்தணர்: 'அறம்புரி...அந்தணிர்" ஐங் 387; "அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்" புற 93: 7.

வழிமொழிந்து: "உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால்" கலி 22: 1; "மதிக் குடைக்கீழ் வழிமொழிந்து மன்னரெல்லா மறந்துறப்பவும்" "வாணுட் கொளலும் வழிமொழிந்து வந்தடையா" பு. வெ. மா. 56, 97.

வழிமொழிந்தொழுகல்: 'வையங் காவலர் வழிமொழிந் தொழுக" புற 8: 1.

9. பாடல்சான்று: "பாடல் சான்று நீடினை யுறைதலின்" பதிற் 51 : 22 "பாடல் சான்று பல்புகழ் முற்றிய கூடலோடு" பரி 17: 22-3; பாடல் சான்ற நெய்த னெடுவழி" சிறுபாண் 151; "பாடல்சான்ற நன்னாட்டு நடுவண்" மதுரைக் 331.

10. நாடா நல்லிசை: "நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன் "சிறுபாண் 82.

11. திருந்திழை கணவ: பதிற் 14 : 15 ஒப்புமைப் பகுதி.

13. துளங்கிருக்கை: "தசும்பு துளங் கிருக்கை" பதிற் 42 : 11.

14. "இடாஅ வேணி வியலறைக் கொட்ப" "இடாஅ வேணியின் பாசறை யானே" பதிற் 81 : 14; வந்தனென்' 10.

15. "நிலந்தீ நீர்வழி விசும்போடைந்தும்" தொல் மரபு சூ 89. "தீவளி விசும்பு நிலனீ ரைந்தும்" பரி 3: 4; "மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளித்தலைஇய தீயுந், தீமுரணிய நீரு மென்றாங், கைம்பெரும் பூதத்து" புற 2: 1-6.

16. அளந்துகடையறிதல்: "அளந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு" மதுரைக் 697; "அளந்துகடை யறியா வருங்கலஞ் சுமந்து" சிலப் 25 : 33.

அளப்பருங்குரையை: "அனைய அளப்பருங் குரையை" பதிற் 97: 8.

17. இனிது கண்டிகும்: "பலர்புகழ் செல்வ மினி து கண் டிகுமே" பதிற் 11: 20.

19. தொடியுலக்கை: "தொடிமா ணுலக்கை" அக 9: 12; 393: 11.

வயின்ரேறு: "வயின்ரே றின்று தலைக்கு மூதையொடு" நற் 183: 6-1.

22. கண்டுமதி மருளல்: பதிற் 15: 34 ஒப்பு.

20—22. மடாவின் சொன்றி: "சா றயர்ந் தன் ன மிடாஅச் சொன் றி" குறிஞ்சி 201.

24—8. "பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப, விசும்பு மெய்யகல பெயல் புர வெதிர" பதிற் 69: 14-5.

26—8. கருவி மாமழை: பதிற் 17: 11 ஒப்புமைப்,பகுதி.

28. "கொண்டன் மாமழை: "கொண்டன் மாமழை" நற் 150: 1; "விண்டு முன்னிய கொண்டல் மாமழை" அக 235: 5; "கொண்டன் மாமழை பொழிந்த" புற 34: 22.

தண்டளி மாமழை: "கருவி வானந் தண்டளி தலைஇய" பதிற் 31: 15.

கமஞ்சூன் மாமழை: "கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை" முருகு 7; "நிரைத்து நிரைகொண்ட கமஞ்சூன் மாமழை" "மறந்து கடன் முகந்த கமஞ் சூன் மாமழை" "வெஞ்சுடர் கரந்த கமஞ்சூல் வானம்" "முழங்கு கடன் முகந்த கமஞ்சூன் மாமழை" நற் 89: 3; 99: 6; 261: 3; 347: 1. "காலொடு வந்த கமஞ்சூன் மாமழை" குறுந் 158: 3; "காரெதிர்ந் தேற்ற கமஞ்சு லெழிலி" பரி 18: 21; "கடல் முகந்துகொண்ட கமஞ்சூல் மாமழை" அக 43:1.

27—8. மன்னுயிர் புரைஇய இரங்கும் மழை: பதிற் 18: 9–10 ஒப்புமைப் பகுதி.

வலனேர்பிரங்கும் மழை: "பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி" முல்லை 4-5; "பாம்பளைச் செறிய முழங்கி வலனேர்பு, வான்றளி பொழிந்த காண்பின் காலை" "சிறு பல் கருவித் தாகி வலனேர்பு, பெரும்பெய றலைக" நற் 264: 1-2; 328: 6-7; "கடன் முகந்துகொண்ட கமஞ்சூன் மாமழை" சுடர் நிமிர் மின்னொடு வல னேர் பிரங்கி" "மலைமிசைக் குலைஇய வுருகெரு திருவிற், பணைமுழங் கெழிலி பௌவம் வாங்கித், தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ, மாதிரம் புதைப்பப் பொழிதலின்" "மலர்தலை யுலகம் புதைய வலனேர்பு, பழங் கண் கொண்ட கொழும்பல் கொண்மூ" அக 43: 1-2; 84: 1-4; 374: 2–3.

29. காரெதிர் பருவம்: "காரெதிர் பொழுதென" ஐங் 427: 2; புலனணி கொண்ட காரெதிர் காலை" அக 304: 16,

மழை பருவம் பொய்த்தல்: பதிற் 18: 8-10 ஒப்புமைப் பகுதி.

வாழ்கநின் வளன்: "செருப்பல செய்குவை வாழ்க நின் வளனே" "வாழ் கநின் வளனே நின்னுடை வாழ்க்கை" பதிற் 36: 14; 37: 1.

## 5. கானுணங்கு கடுநெறி

(25) மாவாடியபுல ஞாஞ்சிலாடா
கடாஅஞ்சென்னிய கடுங்கண்யானை
இனம்பரந்தபுலம் வளம்பரப்பறியா
நின்படைஞர், சேர்ந்த மன்றங் கழுதை போகி
நீ, உடன்றோர் மன்னெயி றோட்டி வையா
கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்
ஆண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி
முனையகன் பெரும்பா ழாக மன்னிய
உருமுறழ் பிரங்கு முரசிற் பெருமலை
வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற ககைப்பநீ
நெடுந்தே ரோட்டியபிற ரகன்றலை நாடே.

**துறை—வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.**
**வண்ணம்—ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.**
**தூக்கு—செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.**
**பெயர்—கானுணங்கு கடுநெறி (8).**

**ப-ரை:** *10–13. உரும் உறழ்பு இரங்கு முரசின்—உருமேற்றை மாறுபட்டு ஒலிக்கும் முரசினொடு, பெருமலை வரை இழி அருவியின் ஒளிறு கொடி நுடங்க—பெரிய மலையின் பக்கத்தினின்று இழியும் அருவியைப் போல விளங்குகின்ற கொடி அசைய, கடு பரி கதழ் சிறகு அகைப்ப—கடிய குதிரையாகிய விரைவினையுடைய சிறகை விரிக்க, நீ நெடுந்தேர் ஓட்டிய பிறர் அகல் தலை நாடு—நீ நெடிய தேரைச் செலுத்திய பகைவரது அகன்ற இடத்தையுடைய நாடு,*

*1—5. மா ஆடிய புலம் நாஞ்சில் ஆடா—நின் படையிலுள்ள குதிரைகள் சென்று பொருத வயல்கள் பின்பு கலப்பைகள் உழா; கடா சென்னிய கடுங்கண் யானை இனம் பரந்த புலம்-மதத்தையுடைய தலையினையுடைய தறுகண்மையையுடைய யானைக் கூட்டம் பரந்த வயல்கள், வளம் பரப்பு அறியா-பின் செல்வம் பரத்தலை அறியா; நின்படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி-நின் படையாளர் சேர்ந்த மன்றம் கழுதையால் உளப்பட, நீ உடன்றோர் மன் எயில் தோட்டி வையா—நின்னால் வெகுளப்பட்ட அரசர்தம் நகரிகள் பின்பு தமக்கு அரணுகக் காவலாளரை வைக்கப்படா.*

*6—9. கடு கால் ஒற்றலின் சுடர் சிறந்து உருத்து-கடிய காற்று அடித்தலாற் சுவாலை மிக்குத் தோற்றி, பசும் பிசிர் ஒள் அழல் ஆடிய மருங்கின்—பசிய பொறிகளையுடைய ஒள்ளிய காட்டுத்தீ வழங்கிய இடங்களையுடைய, ஆண்டலை வழங்கும் கான் உணங்கு கடுநெறி-ஆண்டலைப்புள் வழங்கு*

கின்ற கானந் தீய்ந்த கடிய வழியினையும், முனை—ஆறலை கள்வர் போர் செய்யும் இடங்களையுமுடைய, அகன் பெரும் பாழாக மன்னிய – அகன்ற பெரிய பாழிடங்களாய் நிலைபெற்றன.

**முடிபு.** நீ தேரோட்டிய பிறர்நாடு அழிந்தவாறு சொல்லின், நாடு நின்மா வழங்கின வயல் பின்பு கலப்பை வழங்கா: நின் யானையினம் பரந்த வயல் பின்பு செல்வம் பரத்தலை அறியா; நின் படையாளர் சேர்ந்த மன்றம் கழுதையால் உழப்பட, நீ வெகுண்ட அரசர்தம் நகரிகள் பின்பு தமக்கு அரணுக் காவலாளர்கள் வைக்கப்படா; இவ்வாறு அழிந்தபடியேயன்றி சிலவிடங்கள் கடுங்கால் ஒற்றலின் அழலாடிய இடங்களையுடைய கானந் தீய்ந்த கடிய வழிகளையும் ஆறலைகள்வர் போர்செய்யும் இடங்களையுமுடைய அகன்ற பாழிடங்களாக நிலைபெற்றன என்க.

ஆ—ரை; 10—3. உருமேற்றைப் போன்று ஒலிக்கும் முரசாதலின் "உருமுறழ் பிரங்கு முரசின்" என்றார். "உருமுறழ் முரசின்" (கலி 104: 79) எனப் பிறரும் கூறுதல் காண்க. முரசினொடு என ஒடு விரித்து அதனைத் தேரோட்டிய(13)என்பதனோடு முடிக்க. முரசு முழங்கப் பகைவர் நாட்டில் செல்லல் "திண்பிணி முரச மிழுமென முழங்கச், சென்றமர் கடத்தல் யாவது" (புற 93: 1-2)என்பதனாலுமறிக. வரை-பக்கமலை."வரைத்தா முருவிப் பொருப்பின்" மதுரைக் 42. அருவியின் நுடங்க எனக் கூட்டுக. "வெல்கொடி, வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்க" (பதிற் 69: 1-2.) "பல்வேறு குழூஉக் கொடி......பெருவரை மருங்கி னருவியி னுடங்க" (மதுரைக் 373: 4) எனப் பிறரும் கூறுதல் காண்க. கொடி என்றது வெல்கொடியை. "வான்றோய் வெல்கொடி தேர் மிசை நுடங்க" (பதிற் 44 2) எனப் பிறரும் கூறுதல் காண்க. கொடி நுடங்கல் தேரினது செலவின் கடுமையால், நுடங்கத்தேரோட்டிய (13) என முடிக்க. தேருங் குதிரையானல்லது செல்லாமையின் செலவு கடிய குதிரையைத் தேரின்விரைந்த சிறகாக்கிக் 'கடும்பரிக் கதழ்சிற கைைப்பத் தேரோட்டிய' என்றார். இனிப், s புட்போல நிலந் தீண்டாத கவித்த குதிரைகள் பூண்ட தேரினது செலவின் கடுமை ஆற்றல் தோன்றப் பறவையாகக் கூறுவான் உபசார வழக்குப்பற்றிச் 'சிறகு அகைப்ப' என்றார் எனக் கோடலுமொன்று. ஈண்டு விரைந்த செலவையுடைய பறவையை ஒப்பத் தேரினைச்செலுத்திய வெனவுரைக்க. "புள்ளியற் காமர் கடுந் திண்டேர்" (கலி 35; 23-4) எனப் பிறருங் கூறுதல்காண்க. பரி-செலவு. விரைந்த செலவின்கண் சிறகு விரைந்து அசைதலின் 'கடும்பரிக் கதழ் சிறகு' என்றார். கதழ்சிறகு பறவைக்கு ஆகுபெயர். கதழ்—விரைவு. * 'தளிர்ப்ப' எனவும் 'மலர்த்த' எனவும் பொருள் பயக்கும். 'அகைப்ப' என்னும் சொல் ஈண்டு உவமவாசகமாக நின்றது. தேரோட்டிய பிறர்நாடு என்க. பகைவர் நாட்டிற்

s குதிரைக்குப்புள்: தொல்கற்பு 53: 4; நற் 78; ஐங் 481; பரி 11: 52; அக 64: 2. சீவக 787; சிலப் 7: 34.

* "மாமுறி ஈன்று மரக்கொம் புகைப்ப" அக 345: 13; அகைத்தல்-வலிய மலர்த்துதலுமாம். தக்க 98. வி. உரை.

தேரைச் செலுத்தல், "வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத், தேர் வளங் கிளைகின் தெவ்வர் தேளத்து' (புற 15: 5-6) எனவருதலானுமறிக. நாடு(13) பெரும்பாழாக மன்னிய (9) என மாறிக் கூட்டுக.

1—5. சேரன் பகைவர் நாட்டிற் படையைச் செலுத்துதலால் அப் படையிலுள்ள குதிரைகள் வழங்கிய அந்நாட்டு வயல்கள், நாட்டில் மக்க ளின்மையால் உழப்படுதலின்மையின் 'மாவாடிய புலனுஞ்சிலாடா' என்றார். "இனந்தோ டகல வூருட னெழுந்து, நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்து நீ, வாழ்தலீயா வளனறு பைதிரம்" (பதிற் 19: 16–8) என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. கடாஅச் சென்னிய யானை என இயையும். "கமழ் கடாஅத் தளறுபட்ட நறுஞ்சென்னிய......வினைநவின்ற பேர் யானை" (மதுரைக் 44–7.) என்றார் பிறரும். கடாஅச் சென்னி என்னும் ஒற்று மெலிந்தது. கடுங் கண்–தறுகண்மை. மலைபடு 325 நச். யானைப்படை பரந்த வயல்கள் வளம் பயவா வகையிற் சிதைந்து போதலின் 'யானை இனம் பரந்த புலம் வளம் பரப்பு அறியா' என்றார். பரப்பு–பரத்தல். நின்படைஞர் என்றதனுல் மாவும் யானையும் சேரன்படையிலுள்ளனவாதல் தெளியப்படும். சேரன் படைவீரர் தாம் சென்ற பகைவர்நாட்டு மன்றுகளை அழித்து வெள்வரகும் கொள்ளும் வித்துதற்பொருட்டு கழுதை ஏரால் உழுதலின், 'நின்படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி' என்றார்.

"கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்" புற 15: 1–3.

"வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழுவ" புற 392: 9–11.

என வருவன ஈண்டறியற்பாலன. மன்றம் - பொதுவிடம். 'ஊர்ப்பொது' புற 128: 1 உரை. போகி என்றதனைப் போகவெனத் திரிக்க

சேரனால் வெகுளப்பட்ட பகையரசர்களின் காவலாளரையுடைய நகரி கள் அவனால் அழிக்கப்பட்டு மக்களின்றாய்ப் பாழாதலின் 'தோட்டி வையா' என்றார். உடன்றோர் - வெகுளப்பட்டோர். புற 97: 17 உரை. நகரிகளை மன் எயில் என்றது எயிலுடைமையும் பிறரால் அழிக்கப்படாமையும் தோன் றற்பொருட்டு என்க. தோட்டி–காவல். "மாறு கொண்டோர் மதிலழிய ஏறுந்தோட்டியு மெறிந்து கொண்டன்று" (பு. வெ. மா.) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க.

6—9. அழல் என்றது காட்டுத் தீயை. வெப்பம் மிக்க காட்டிலே மூங் கிற் கணுக்களைக் கடுங்காற்றுப் பொருந்தித் தாக்குதலால் தோற்றிய அழல் பசிய பொறிகளைச் சிதறிச் சுவாலைமிக்கு வழங்குதலின் "கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப், பசும்பிசி ரொள்ளழ லாடிய" என்றார். கடுங்காலொற் றல் அழல் தோற்றுதற்கும் சுடர்சிறந்து ஆடுதற்கும் ஏதுவாகக் கொள்க.

"தெறுகதி ருலைஇய வேனில் வெங்காட்
டுறுவளி யொலிகழைக் கண்ணுறுபு தீண்டலிற்
பொறிபிதிர் பெடுத்த பொரங்கெழு கூரெரி" அக 153: 8-10

"அலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
கடுவளி யுருத்திய கொடிவிடு கூரெரி அக 47: 4-5.

என வருவன காண்க. கால் – காற்று, சுடர் – தீக்கொழுந்து. பிசிர் – தீப்பொறி. பசும் பிசிர் ஒள்ளழல் – பசும் பிசிராகத் தோன்றிய ஒள்ளழலுமாம். "ஒலிகழை பிழைந்த ஞெலிசொரி யொண்பொறி... வழிசுழற்றுருஅக், காடுகவர் பெருந்தீ யோடுவயி னோடலின்" (அக 39: 6-9) என வருதல் காண்க. மருங்கின் (7) கடுநெறி (8) எனக் கூட்டுக. ஆண்டலை என்பது ஒரு வகைப் பறவை. 'ஆண்டலைப் புள்' என்பர் நச்சினார்க்கினியர். (பட்டினப் 258 உரை) இது ஆண்மகனின் தலைபோன்ற வடிவமுள்ள பறவை என்பது "நீண்ட பலிபீடத்திலரிந்துவைத்த நெடுங்குஞ்சிச் சிரத்தைத்த னினமென்றெண்ணி. யாண்டலைப்பு ளருகணைந்து பார்க்கு மாலோ" (கலிங். கோயில் பாடியது 16) என்பதனாலு மறியப்படும்.

கானுணங்கு கடுநெறியென்றது மழையின்மையாற் கானம் தீந்த கடிய வழியென்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்குக் கானுணங்கு கடுநெறி என்று பெயராயிற்று.

அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக் கைப்பொருள் வவ்வும் களவேர் வாழ்க்கைக் கொடியோராகிய ஆறலைகள்வர் தங்கிப் போர்செய்யும் இடங்கள் பெரும்பாழாக நின்றமையின் 'முனையகன் பெரும்பாழாக மன்னிய' என்றார் முனை – போர்செய்யும் இடம். அக 47: 8 பழையவுரை. போர் எனினுமமையும்.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

தேரோட்டிய பிறர்நாடு இவ்வாறு அழிந்ததென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் வஞ்சித்துறைப்பாடாயிற்று

'மாவாடிய' (1) என்பது முதலாக மூன்றும் வஞ்சியடியாக வந்தமையால் வஞ்சித்தூக்குமாயிற்று.

நின்படைஞர் (4) எனவும் நீ (5) எனவும் அடி முதற்கட் சீரும் அசையும் கூறாய் வந்தன.

## பழையவுரை.

2. கடாச்சென்னியென்னும் ஒற்று மெலிந்தது. 4. கழுதை போகியென்பதனைப் போகவெனத் திரிக்க. 5. தோட்டி–காவல். 7. அழல் – காட்டுத்தீ. 8. கானுணங்கு கடுநெறியென்றது மழையின்மையாற் கானம் தீய்ந்த கடிய வழியென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு, கானுணங்கு கடுநெறி என்று பெயராயிற்று. 9. முனை–ஆறலைகள்வர் செய்யும் போர் 12. செலவின் கடுமை தோன்றப் பறவையாகக் கூறுவான் உபசாரவழக்குப்பற்றிச் சிறகு அகைப்பவென்றானென்க. முரசினொடு (10) என ஒடு விரித்து அதனைத் தேரோட்டிய (13) என்பதனொடு முடிக்க.

நீ (12) தேரோட்டிய பிறர் நாடு (13) அழிந்தவாறு சொல்லின், நாடு நின் மா வழங்கின வயல் பின்பு கலப்பை வழங்கா (1); நின் யானையினம் பரந்த வயல் பின் செல்வம் பரத்தலை யறியா (3); நின் படையாளர் சேர்ந்த மன்றம் கழுதையா லுழப்பட (4) நீ உடன்ற அரசர்தம் நகரிகள் பின்பு தமக்கு அரணுகக் காவலாளரை வைக்கப்படா (5); இவ்வாறு அழிந்தபடியேயன்றிச் சில்லிடங்கள் கடுங்கால் ஒற்றலின் (6) அழலாடிய மருங்கினையுடைய (7) கானுணங்கு கடுநெறியினையும் (8) முனைகளையுமுடைய அகன்ற பெரும்பாழாக நின்றன (9) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

தேரோட்டிய பிறர்நாடு இவ்வாறு அழிந்ததென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் வஞ்சித்துறைப் பாடாணுயிற்று. மாவாடிய (1) என்பது முதலாக மூன்றும் வஞ்சியடியாக வந்தமையால் வஞ்சித்தூக்குமாயிற்று.

நின்படைஞர் (4) எனவும், நீ (5) எனவும் அடிமுதற்கட் சீரும் அசையும் கூனுய் வந்தன.

## ஒப்புமைப்பகுதி.

1. நாஞ்சிலாடா: "களிறுடிய புல நாஞ்சி லாடா" பதிற் 26: 2.

2. கடுங்கண் யானை: "கடுங்கண் வேழத்து" மலைபடு 325; "துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை" நற் 108: 2; "கடுங்கண் யானைக் கானம்" குறுந் 331: 4; "கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி" அக 63: 4; "கடுங்கண்ண கொல்களிற்றால்" புற 14: 1.

1—3 வயலில் தானை: "விளைவயல், வந்திறை கொண்டன்று தானை" பதிற் 40: 5-6; "விளைவயல் வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத், தேர் வழங்கினைநின் றெவ்வர் தேஎத்து" "இரும்பனை யன்ன பெருங்கை யானை, கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும், பெருந்தகை மன்னர்க்கு" புற 154-4; 340: 7-9.

5. உடன்றோர்: "உடன்றோர் உய்தல் யாவது" புற 97: 17.

மன்னெயில்: பதிற் 37: 9; 40: 8; 53: 11; சிறுபாண் 247; பட்டினப் 278; நற் 150: 5; அக 392: 23; சிலப் 27: 225.

மன்னெயி றேட்டி: "ஆரெயிற் றேட்டி வெளவினை" பதிற் 71: 13.

6. கால்ஒற்றல்: "உறுகா லொற்ற வொல்கி" நற் 300: 3; "கடிகாவிற் காலொற்ற வொல்கி" கலி 92: 52; "நிரைகா லொற்றலிற் கல்சேர் புதிரும்" அக 199: 2.

காலொற்றலாற் சுடர்சிறத்தல்: "வளியிடைத், தீயெழுந் தன்ன திறலினர்" முருகு 170–1; "வளிவளர் கூரெரி" ஐங் 395; "கடுவளி யுருத்திய கொடிவிடு கூரெரி" "கால்வாய் கூரெரி" "வளிவளர் கூரெரி" அக 47: 5; 65: 10; 143: 6; "காற்றோ டெரிநிகழ் தன்ன செலவினர்" புற 41: 17.

7. பசும்பிசி ரொள்ளழல்: "பசும்பிசி ரொள்ளழல்" பதிற் 62: 5; "பொறிபிதிர் பெடுத்த பொங்கெழு கூரெரி" அக 153: 10.

6—8. "எரிகவர்ந் துண்ட வென்றாழ் நீளிடை" "முளிவயிற் பிறந்த வளி வளர் கூரெரிச், சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும், இன்னு வருஞ் சுரம்" ஐங் 324; 395. "அலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து, கடுவளியுருத்திய கொடிவிடு கூரெரி......கணக்கலை யகற்றும், வெம்முனை யருஞ் சுரம்" அக 147: 4-8.

8. கடுநெறி: "காடுறு கடுநெறி யாக மன்னிய" பதிற் 26: 11.

9. பெரும்பாழ்: "அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப், பெரும்பாழ் செய்து மமையான்" பட்டினப் 269: 70:

10. உருமுறழ் பிரங்கு முரசு: பதிற் 39: 5-6; 66: 4; 80: 3–4; முருகு 121; குறிஞ்சி: 49-50; நற் 197: 10–2; குறுந் 270: 3-4; 380: 2-3; பரி 4: 19; 22: 4; கலி 104: 79; அக 1: 75: 12-8; 188: 1–3; 312: 10–4; 354. 2. புற 17: 39; 126: 19; 197: 5; 211: 1-6; 350: 4; 366: 1–3; 373: 1; பு.வெ.மா. 121; 202; களவழி 8; 22; திணைமொழிஐம் 23; திணைமாலைநூற் 115; ஐந்ஐம் 4; சீவக 543; சிலப் 26; 195-6.

பெருமலை: மலைபடு 357; குறுந் 96: 1; கலி 45: 4; 103: 19; புற 37: 4.

11. வரைபிழி யருவி: "வரைமிசை யிழிதரு மருவியின்" "வரை மிசையருவியின்" பதிற் 47: 8; 69: 2; "வரைத்தா ழருவிப் பொருப்பின்" மதுரைக் 42; "வரையிழி யருவியின்" குறுந் 106: 2; "வரையிழி வாலருவி" பரி 6: 52;

11. கொடிக்கு அருவி: "வரைமிசை யிழிதரு மருவியின் .....கொடி நுடங்கு தெருவில்" "வான்றோய் வெல்கொடி, வரைமிசை யருவியின் வயின் வயி னுடங்க" பதிற் 47: 3-4; 69: 1-2; "வேறுபஃ றுகிலி னுடங்கி......இழி தரு மருவி" முருகு 296-3:6; "பல்வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇப், பெருவரை மருங்கி னருவியி னுடங்க" மதுரைக்: 373–4; "அவிர் துகில் புரையு மவ் வெள்ளருவி" குறிஞ்சி 55; "மலைநீர், வென்றெழு கொடியிற் றோன்றும்" மலைபடு 581-2; "களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர, ஒளிறுவன விழி தரு முயர்ந்து தோன் றருவி, நேர்கொள் நெடுவரை" "பெருவரை மிழிதரும் நெடுவெள்ளருவி......ஆடுகொடி கடுப்பத் தோன்றும், கோடுயர் வெற்பன்" அக 162: 22-4; 358: 12-5; "அறுவைத், தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத், தண்பல விழிதரு மருவி" புற 154 10-12.

11—3. "கொடிநுடங்குதேர்: "வான்றோய் வெல்கொடி தேர்மிசை நுடங்க" "தேர்மீ மிசை நுடங்கு கொடி" "ஒளிறு கொடி நுடங்கத் தேர் திரிந்து கொட்ப" "நெடுந்தேர் நுடங்குகொடி யவிர்வரப் பொலிந்து' பதிற் 44: 2; 80: 14; 81: 7; 83: 4; "கொடி நுடங்கு மிசைய தேரின ரெனாஅ" "கொடிநுடங்கு மிசைய தேரும்" புற 197: 2; 351: 2.

13. பகைவர் நாட்டில் தேரைச் செலுத்தல்: "வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத், தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்து" புற 15: 5-6.

அகன்றலை நாடு: பதிற் 23; 25 அடிக்குறிப்பு.

## 6. காடுறு கடுநெறி

(26) தேர்பரந்தபுல மேர்பரவா
களிறாடியபுல நாஞ்சிலாடா
மத்துரறியமனை யின்னியமிமிழா
ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்
கோகோ யானே நோதக வருமே
பெயன்மழை புரவின் றாகி வெய்துற்று
வலமின் றம்ம காலையது பண்பெனக்
கண்பனி மலிர்நிறை தாங்கிக் கைபுடையூ
மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூரப்
பீரிவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சிக்
காடுறு கடுநெறி யாக மன்னிய
முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்
உரும்பில் கூற்றத் தன்னநின்
திருந்துதொழில் வயவர் சீறியநாடே.

**இதுவுமது.**
**பெயர்—காடுறு கடுநெறி (11).**

**ப—ரை.** *முருகு உடன்று கறுத்த கலி அழி மூதூர் அன்ன—முருகன் மாறுபட்டு வெகுண்டு அழித்த ஆரவாரம் அழிந்த பழையவூரைப்போன்ற, உரும்பு இல் கூற்றத்து அன்ன – பிறிதொன்றன் கொடுமையில்லாத கூற்றுவனை ஒத்த, நின் திருந்து தொழில் வயவர் சீறிய நாடு-நின்னுடைய திருந்திய போர்த்தொழிலையுடைய வீரர் கோபித்து அழித்த நாடு,*

*1—3. தேர் பரந்த புலம் ஏர் பரவா—தேர் பரந்த வயல்கள் பின்பு உழுதற்கு ஏர் பரவா; களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா - பன்றிகள் உழுத கொல்லைத் தறை பின்பு கலப்பை வழங்கா; மத்து உரறிய மனை இன் இயம் இமிழா-மத்து ஒலிக்கின்ற மனைகள் இனிய இயங்களின் ஒலி கிளரா;*

*4—11. பெயல் மழை புரவு இன்றாகி-பெய்தற்றொழிலையுடைய மேகம் பெய்து புரத்தல் இல்லையாகி, வெய்து உற்று-வெப்பம் உற்று, காலையது பண்பு வலம் இன்று அம்ம என—காலத்தினது தன்மை நமக்கு வெற்றியைத் தருதலின்று; இதனைக் கேட்பாயாக என்றுசொல்லி, கண் பனி மலிர் நிறை தாங்கி—கண்களிலே பனிக்கின்ற மிக்க நீரைத் தாங்கி, கைபுடையூ—கைகளைப் புடைத்து, மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூர - வலி அழிந்த நெஞ்சினை யுடையராய் மக்கள் துன்பத்தை மிக அடைய, பீர் இவர் வேலி பாழ் மனை—பீர்க்கங் கொடி படர்ந்த வேலியையுடைய பாழ்த்த மனைகளையுடைய, நெருஞ்சிக் காடு உறு கடு நெறியாக மன்னிய – நெருஞ்சிக்காடு பொருந்திய கடிய வழியை உடைத்தாக நிலைபெற்றது; ஆங்கு செழுவளம் பண்டுநற்கு அறியு*

நர் நினைப்பின் — அவ்விடத்தின் செழுமையான வளத்தை முன்பு நன்றாகக் கண்டு அறிபவர் நினைப்பின், நோதக வரும்—நெஞ்சு வருந்த வேண்டி வரும். யான் நோகோ—யான் நோகக் கடவேனோ?

**முடிபு.** நின் வயவர் சீறிய நாடு அவ்வயவர் சீறுதற்கு முன்பு இருக்கும் படி சொல்லின், தேர்பரந்த புலம் ஏர் பரவர்; களிறுடிய புலம் நாஞ்சிலாடா; மத்து உரறிய மனை இன்னியம் இமிழா; அவ்வாறு வளவிய நாடு இப் பொழுது நெருஞ்சிக் காடுறு கடுநெறியை உடைத்தாக நிலைபெற்றன. அதன் செழுவளத்தைப் பண்டு நற்கு அறியுநர் நினைப்பின் நோதக வரும்: யான் நோகக் கடவேனு என்க.

**ஆ—ரை.** *1—11.* பகைவர் நாட்டிலே ஒருகால் தேர்பரந்த வயல் அத் தேர் பரந்த மாத்திரையாற் சேறுய்ப் பின்பு உழுதற்கு ஏர் பரவாமையின் 'தேர்பரந்த புலம் ஏர் பரவா' என்றார்.

"காரேறு பொருத கண்ணகன் செறுவில்
உழா நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில்" **பெரும்பாண் 210-2.**

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. தேர் என்றது மாறுபட்டோரது படையிலுள்ள தேரை. வயலில் பகைவர் தேர் பரத்தல்,

"புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்து" **புற 35: 4-6.**

என்பதனாலுமறிக. பரவா: எதிர்மறை வினைமுற்று.

களிறுடிய புலம் என்றது பன்றிகள் உழுத கொல்லைத் தரையை. "கேழ லுழுத கரிபுனக் கொல்லை" (ஐங் எழு 11) எனப் பிறண்டும் வருதல் காண்க. களிறென்றது ஈண்டுப் பன்றியை. "களிறுமேல் கொள்ளவும் காழக நீப்பவும்" என்றார் புறத்தினும். **(புற 41: 9)**

"வேழக் குரித்தே விதந்து களிறென்றல்
கேழற் கண்ணும் கடிவரை யின்றே" தொல். மரபு 34.

என்றதனால் பன்றியைக் களிறு என்றார். கிழங்குகள் இருத்தலால் அவற்றைத் தின்றற்பொருட்டுப் பன்றிகள் கொல்லைத் தறையை உழுதன. "கிழங் ககழ் கேழ லுழுத சிலம்பில்" (ஐங் 270) எனவும், "நிலத்தின் மருப்பின்...... ஏனம்—'கிழங்குகளையகழ்ந்து தின்கையினாலே மண் தின்று தேய்ந்த கொம் பினையும்......உடைத்தாகிய ஏனம்' (மலைபடு 245-7 நச்) எனவும் வருவன காண்க. களிறுடிய மாத்திரையானே கொல்லைத்தறை வித்துதற் கேற்ற புழுதி யாகிப் போதலால் பின்பு கலப்பையால் உழவேண்டாமையின் "களிறுடிய புலம் நாஞ்சிலாடா" என்றார்.

"கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பிற்
றலைவிளை கானவர் கொய்தனர்" **ஐங் 270.**

"................................ காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு

நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்'' புற 168: 2-7.

என வருவன காண்க.

மத்து ஒலிக்கின்ற மனைகள் அம்மத்தொலியின் மிகுதியானே இனிய இயங்களின் ஒலி இளராமையின் 'மத்துரறிய மனை இன்னியம் இமிழா' என்றார். மத்து உரறுதல் தயிர் கடையும் விடியற்காலமாதல்,

''நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
யாம்பி வான்முகை யன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி'' பெரும்பாண் 155-8.

''நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியல்'' நற் 12: 3-4.

என வரூஉஞ் செய்யுட் பகுதிகளால் அறியப்படுதலின் இன்னியம் இமிழும் காலமும் அக்காலமாதல் அறியப்படும். ''பாணர் கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க, விரவுப் புறம்பெற்ற வேம வைகறை'' (புற 398 4-6) என்பது ஈண்டு அறியற்பாலது. புலியினது முழக்கம் போலும் முழக்கத்தையுடைய மத்தாகலின் 'மத்துரறிய' என்றார். உரறுதல்-முழங்குதல். மலைபடு 357 நச் இன்னியம் – யாழ் முதலியன. ''கருங்கோட் டின்னியம்'' (பெரும்பாண் 399) என்றார் பிறரும்.

பகைவர் நாட்டின் செழுவளத்தை முன்பு நன்றாக அறிபவர் நினைப்பின் அவ்வளமெல்லாம் அழிந்து நாடு பாழ்த்தமைக்கு வருந்துவர் என்பார், 'பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின் நோதகு வரும்' என்றார். ஆங்கு என்றது வயவர் சீறிய பகைவர் நாட்டை. ஆங்குச் செழுவளம் எனக் கூட்டுக. பண்டு-அழிதற்கு முன்பு. நற்கு, நன்கென்பதன் விகாரம். 'நினைப்பின்' என்றார் அவ்வளமெல்லாம் அழிந்து இப்பொழுது காண்டற் கருமையின். அறியுநர் நோதகு வருமேனும் அறநெறியால் அழித்தமைக்கு யான் நோகக் கடவேனோ என்பார் 'நோகோ யானே' என்றார். நோகோ என்பதற்கு நோகக்கடவேனோ என்பது பொருளாதல் 'நோகோ யானே - நோகக்கடவேனோ யான்' என்னும் புறப்பாட்டுரையானும் (புற 231: உரை.) தெளிக. நேகோ யான் என்பதற்கு நோவேன் யான் என்று பொருளுரைப்பின் சேரன் வயவர் செழுவளம் சான்ற நாட்டைப் பாழாக்கியமை அறனில் செயல் எனப் பொருள்படுதலின் அவ்வாறுரைத்தல் ஈண்டு அமையாதென்க.

பருவந் தப்பாது பெய்யும் இயல்புடைய மேகம் வயவரால் நாடு அழிந்த பின் பெய்யாதொழிந்தமையின் 'பெயன்மழை புரவின்றாகி' என்றும், அதனால் நாட்டில் ஞாயிற்றின் வெம்மை மிக்கு விளங்குதலின் 'வெய்துற்று' என்றும் கூறினார். மழை-மேகம். அது ஞாலத்தைப் புரத்தலை, ''மண்ணுடை ஞாலம் புரவெதிர்கொண்ட, தண்ணியலெழிலி'' (பதிற் 18: 9-10) எனப் பிறர் கூறுதலானுமறிக. வெய்துற்றுக் கடுநெறியாக மன்னிய என முடிக்க. சுடர் சினந்

திகழும் ஞாயிற்றின் தன்மை உழவு முதலிய தொழில்களைச் செய்து பயன் கோடற்கு உதவாமையின் வலமன்று காலையது பண்பு என்றார். காலை-ஞாயிறு. "காலையன்ன சீர்சால் வாய்மொழி" பதிற் 21: 4. காலமுமாம். அம்ம, கேள் என்னும் குறிப்பின்கண் வந்தது. நாடழிவு கண்டிரங்குதலாற் கண்களில் நீர் மிகுதலின் 'கண்பனி மலிர்நிறை தாங்கி' என்றார். கட்பனி என்னும் ஒற்று மெலிந்தது. கைபுடைத்தல், இரக்கமிகுதியால் என்க. "காணுநர் கைபுடைத் திரங்க, மாணு மாட்சிய மாண்டன பலவே" (பதிற் 19: 26-7) எனப் பிறருங் கூறுதல் காண்க. கைபுடையூ சிறுமைகூர என முடிக்க. நாடு வளமெல்லாம் அழிந்து மழையற்றுப் பாழாகிக் கிடப்பதைக் காண்பார்க்கு மனவலி அழிந்து துன்பம் மிகுதலின் 'மெலிவுடை நெஞ்சினர் சிறுமைகூர, என்றார். சிறுமை-நோய். மலைபடு 314 நச்.

நாட்டில் மக்களின்மையால் மனைகள் பீரிவர் வேலிப் பாழ்மனைகளாயின. "ஊரெழுந் துலறிய பீரெழு முதுபாழ்" "முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீமெழுந்து, மனை பாழ் பட்ட" (அக 167: 10; 374: 1-2) என வருவன காண்க. பெரும்பாழான நாட்டின் வழியிடங்களெல்லாம் நெருஞ்சி அடர்ச்சியாக வளரப்பெற்று, முள்ளுடைமையால் இயங்குதற்கரிய வழிகளானமையின் 'நெருஞ்சிக் காடுறு கடுநெறியாக மன்னிய' என்றார். "சிறுபூ நெருஞ்சியோடறுகை பம்பி, யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும் ...பெரும்பாழ் செய்து" என்றார் பட்டினப்பாலையினும் (பட்டினப் 256-70).

நெருஞ்சியின் அடர்ச்சியை நெருஞ்சிக்காடெனக் கூறிய அடைச்சிறப்பானே இச்செய்யுளுக்குக் காடுறு கடுநெறி என்று பெயராயிற்று.

காடுபெருமை கூறிற்று. "கரும்பியல் காடும்" "ஆய்செநெலகன்ற காடு" "தண்பனி முருக்கப்பட்ட தாமரைக் காடு" (சீவக 54; 55; 1398) எனப் பிறருங் கூறுதல் காண்க. மன்னியது என்பது மன்னிய என நின்றது. பழைய வுரைகாரரும் 'வயவர் சீறிய நாடு......கடுநெறியை உடைத்தாகா நின்றது அதன் செழுவளத்தை' என உரைத்தல் காண்க.

ஆ—ரை. 12—14. முருகன் சூரனொடு மாறுபட்டு ஆரவாரம் அழியும்படி அவன் மூதூரை வெகுண்டழித்தமையின் 'முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்' என்றார். முருகு-தெய்வத் தன்மை; முருகனுக்கு ஆகுபெயர். "முருகுறழப் பகைத்தலைச் சென்று", என்புழி முருகு-முருகன் எனப் பொருளும் 'முருகு-தெய்வத் தன்மை; ஆகுபெயராய் நின்றது' என விசேடவுரையும் நச்சினார்க்கினியர் உரைத்தல் காண்க. (மதுரைக் 181 உரை) முருகன் தெய்வத்தன்மை,

"தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி" முருகு 287-90.

எனத் திருமுருகாற்றுப்படையில் வருதலானுமறியப்படும். கறுத்த என்பதற்குக் கறுத்து அழித்த என ஒருசொல் வருவித்துரைக்க. முருகன் மூதூரை-

அழித்தமை, 'கலியழி மூதூர்' என்றதனாற் பெறப்படும். கலியழி மூதூர் என்றார் முன்பு பலவகைச் செல்வங்களாலும் கலியுடை மூதூராக இருந்தமையின். 'கூற்றத்தன்ன' என்னும் 'அன்ன' என்பதை மூதூரன்ன என அதனுடனும் கூட்டுக. 'மூதூர்போல என உவமவுருபு விரித்து அதனை வயவர் சீறிய என்னும் வினையொடு முடிக்க. இனிப் போலுமென விரித்து வயவர் சீறிய நாடெனும் ஒன்று' என்பர் பழையவுரைகாரர். மூதூரன்ன நாடு எனக் கூட்டுக.

உரும்பு—கொடுமை. "உரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி" என் புழி உரும்பில் என்பதற்குக் 'கொடுமையில்லாத' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. (பெரும்பாண் 447 உரை) 'உரும்பில் கூற்றென்பது பிறிதொன்றால் நலிவுபட்டு மனக்கொதிப்பில்லாத கூற்றமென்றவாறு; *உரும்பென்னும் ஒற்று மெலிந்தது' என்பர் பழையவுரைகாரர். சேரன் வயவர் பகைவரை நலிவதன்றி அவரால் நலிவுறாமை தோன்றக் கூற்றை 'உரும்பில் கூற்று' என்றார். கூற்றத்தன்ன வயவர் எனக்கூட்டுக.

"குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார்" பு. வெ. மா. 10.

"ஆயிரத் தைவர் காவற் காளையர்
மாயிரு ஞாலத்து மன்னுயி ருண்ணும்
கூற்றெனத் தொடர" பெருங் (1) 47: 87-9.

என வருவன காண்க. சேரனைப்போலவே அவன் வயவரும் திருந்திய போர்த்தொழிலுடையராகலின் 'நின் திருந்துதொழில் வயவர்' என்றார். நின் என்றது சேரனை. திருந்துதொழில் என்றது ஒத்தபடையெடாதோனையும் படையிழந்தோனையும் அடிபிறக்கிட்டோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையும் போரின்கண் கொல்லாது விடுதல் போல்வன. வயவர் பகைவர் நாட்டைச் சீறியழித்தமை, அறநெறியின்பாற்பட்டமை தோன்ற வயவரைத் 'திருந்து தொழில் வயவர்' என்றார். வயவர் சீறியநாடு மூதூரைப்போல அழிந்தமையின் 'மூதூர்......வயவர் சீறிய நாடு' என்றார்.

இதனாற் சொல்லியது அவன் **வென்றிச் சிறப்புக்** கூறியவாறாயிற்று.

நின் வயவர் சீறிய நாடு இவ்வாறு அழிந்ததென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் **வஞ்சித் துறைப் பாடாணாயிற்று**.

தேஎர்பரந்த(1) என்பது முதலாக மூன்றடி வஞ்சியடியாய் வந்தமையால் **வஞ்சித்தூக்குமாயிற்று**. ஆங்கு (4) என்பது அடிமுதற்கூன்.

## பழையவுரை.

1. தேர்பரந்த புலம் ஏர்பரவாவென்றது ஒருகால் தேர்பரந்த வயல் அத்தேர் பரந்த மாத்திரையாற் சேறாய்ப் பின்பு உழுதற்கு ஏர் பரவா என்றவாறு. 2. களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடாவென்றது பன்றிகள் உழுத கொல்லைத்தறை அவை உழுத மாத்திரையானே புழுதியாகிப் பின்பு கலப்பை வழங்காவென்றவாறு. 3. மத்து உரறிய மனை இன்னியம் இமிழாவென்றது

* உருப்பு-வெப்பம் 'உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை" சிறுபாண் 174.

மத்து ஒலிக்கின்ற மணிகள் அம் மத்தொலியின் மிகுதியானே இனிய இயங்களின் ஒலிகிளரா வென்றவாறு. 8. கட்பனியென்னும் ஒற்று மெலிந்தது; 10-11. நெருஞ்சியின் அடர்ச்சியை நெருஞ்சிக்காடெனக் கூறிய அடைச்சிறப்பான் இதற்கு, காடுறு கடுநெறி என்று பெயராயிற்று. மூதூர் போல (12) என உவமவுருபு விரித்து, அதனை வயவர் சீறிய (14) என்னும் வினையொடு முடிக்க. இனிப்போலுமென விரித்து வயவர் சீறிய நாடெனலும் ஒன்று. இனி மூதூர்க்கூற்றமென கூட்டிக் கூற்றுவன் கொடுமை மிகுதி கூறலுமொன்று. 13 உரும்பின் கூற்றென்பது பிறிதொன்றால் நலிவுபட்டு மனக்கொதிப்பில்லாத கூற்றமென்றவாறு. உருப்பென்னும் ஒற்று மெலிந்தது;

நின் (13) வயவர் சீறிய நாடு அவ்வயவர் சீறுதற்கு முன்பு இருக்கும்படி சொல்லின் (14) தேர் பரந்தபுலம் ஏர்பரவா (1); களிறுடிய புலம் நாஞ்சிலாடா (2); மத்து உரறிய மனை இன்னியம் இமிழா(3); அவ்வாறு வளவியது இப்பொழுது காடுறு கடுநெறியை உடைத்தாகா நின்றது (11) அதன் செழுவளத்தைப் பண்டுநற்கறியுநர் நினைப்பின் (4) நோதக வரும்; நோவேன் யான் (5) என மாறிக்கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

நின்வயவர் சீறியநாடு இவ்வாறு அழிந்ததென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் வஞ்சித்துறைப்பாடாணுயிற்று

தேர்பரந்த (1) என்பது முதலாக மூன்றடி வஞ்சியடியாக வந்தமையால் வஞ்சித்தூக்குமாயிற்று. ஆங்கு (4) என்பது அடிமுதற்கூன்.

## ஒப்புமைப்பகுதி

2. நாஞ்சிலாடா: பதிற் 25: 1. ஒப்பு.

3. இன்னியம்: "இமிழிசை யருவியொ டின்னியங் கறங்க" முருகு 240; "அரிக்கூடின்னியம்" மதுரைக் 612; "இன்னியம் கறங்க" நற் 322: 11; கூடு கொ ளின்னியம்" அக 189: 14; புற 153 11.

4. நற்கறியுநர்: பதிற் 84: 10; குறுந் 170: 5; 267: 8; கலி 25: 27, 42: 6; புற 35: 30; 224: 5.

பண்டுநற்கறியுநர்: "பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்" மலைபடு 392.

5. நோகோ யானே: நற் 26: 1; 108: 9; 185: 12; 257: 10; 312: 1; 394: 9; குறுந் 131: 6; 178: 7; 212: 5; ஐங் 107: 205; 472; அக 137: 16: 143: 16; 153: 1; 270: 15; 321: 14; புற 16: 9; 270: 7.

5. பெயன்மழை: "பெயன்மழைத் தடக்கை" சிறுபாண் 124; "பெயன் மழை துறந்த புலம்புறு கடத்து" "மின்னுச் செய் கருவிய பெயன்மழை" குறுந் 174. 1; 205: 1;

8. கண்பனி: நற் 197: 3; குறுந் 86: 1; 348: 4; 365: 1-6; ஐங் 37: 2; 160: 4; 266: 4; 471: 2; கலி 3: 3; 10: 13; அக 143: 16: 16; 351: 11-2.

மழை புரத்தல்: பதிற் 18: 9-10. ஒப்பு.

**கைபுடையூ:** *"கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க"* **பதிற்** *30: 36;* *"உயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ"* **மலைபடு** *204.*

*10.* **பாழ்மனை நெருஞ்சி:** *"பாழூர் நெருஞ்சி"* **புற** *155: 4.*

*13.* **உரும்பில் சுற்றம்:** *"உரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி"* **பெரும்பாண்** *447; "உயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்து"* **மலைபடு** *550.*

*14.* **திருந்துதொழில்:** *"திருந்துதொழி லந்தணர்"* **பெருங்** *(4) 2: 13.*

*12—4.* **சீற்றந்நிற்த முருகன்:** *"முருகற் சீற்றத் துருகெழு குருசில்"* **பொருந** *131; "முருக னன்ன சீற்றத்துக் கடுந்திற லெந்தை"* **அக** *158: 16-7; "முருகற் சீற்றத் துருகெழு குருசில்"* **புற** *16: 12.*

---

## 7. தொடர்ந்த குவளை.

**(27)** சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலிற்
றொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி
அலர்ந்த வாம்ப லகமடி வையர்
சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரிய லார்கைய ரினிதுகூ டியவர்
துறைநணி மருத மேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற்
பழனக் காவிற் பசுமயி லாலும்
பொய்கை வாயிற் புனல்பொரு புதவின்
நெய்தன் மரபி னிரைக்கட் செறுவின்
வல்வா யுருளி கதுமென மண்ட
அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப
நல்லெருது முயலு மளறுபோகு விழுமத்துச்
சாகாட் டாளர் கம்பலை யல்லது
பூசலறியா நன்னாட்
டியாண ரறாஅக் காமரு கவினே.

**துறை—செந்துறைப் பாடாண்பாட்டு.**
**வண்ணம்—ஒழுகுவண்ணம்.**
**தூக்கு—செந்தூக்கு.**
**பெயர்—தொடர்ந்த குவளை (2).**

**ப—ரை:** *எல்வளை மகளிர்—ஒளியினையுடைய வளையினை அணிந்த மகளிர், தொடர்ந்த குவளை தூநெறி அடைச்சி—இடையறாது தொடர்ந்து வரும் குவளையின் தூய புறவிதழொடித்த பூவினைக் கூந்தலிற் செருகி, அலர்ந்த ஆம்பல் அக மடிவையர்—மலர்ந்த ஆம்பற் பூவின் அகவிதழாற் செய்த தழையை*

அணிந்தவராய், தெறுமார் தெள்விளி இசைப்பின்–வயற்புள்ளைக் கடியவேண்டித் தெளிந்த ஓசையை இசைத்தால், சுரியல் சென்னி–கடைகுழன்ற மயிரினையுடைய தலையினையும், பூ செய் கண்ணி–பூவாற் செய்த கண்ணியினையுமுடைய, அரியல் ஆர்கையர்–கள்ளினை உண்டலையுடையராகிய, இனிது கூடு இயவர்–இனிதாகிய இசையைத் தம்மிடத்தே கூடிய வாச்சியங்களையுடையோர் தங்கும், துறை நணி மருதம் ஏறி–நீர்த்துறைக்கு அணித்தாகநிற்கும் மருதமரத்தில் ஏறி, பழனம் காவில் பசுமயில் ஆலும் – வயலையடுத்துள்ள சோலையில் தங்கும் பசியமயில் ஆரவாரிக்கும், பொய்கை வாயில்–பொய்கையின் நீர்வருதற்குரிய வாய்த்தலையையும், புனல் பொரு புதவின்–அதன்கண் நீர்வந்து மோதுகின்ற கதவினையும், நெய்தல் மரபின்–நெய்தல் இடையறுது பூக்கும் மரபினையும், நிரை கள் செறுவின்–நிரைத்த வண்டினையுமுடைய வயலில், வல் வாய் உருளி - சகடத்தின் வலிய வாயையுடைய உருளை, அள்ளல் பட்டு கதுமென மண்ட–சேற்றிலே அழுந்திக்கடுக நெருங்க, துள்ளுபு துரப்ப –சகடத்தினைத் துள்ளிச் செலுத்துதலானே, நல் எருது முயலும் அளறு போகு விழுமத்து–நல்ல எருதுகள் சேற்றைக் கழியப்போகின்ற காலத்து வருத்தத்தின்கண், சாகாட்டாளர் கம்பலை அல்லது-சகடத்தினை ஓட்டுவோரது ஓசையல்லது, பூசல் அறியா நல் நாட்டு–போர் ஆரவாரத்தினை அறியாத நல்ல நாட்டின், யாணர் அறாஅ காமரு கவின் - புது வருவாய் நீங்காத விருப்ப மருவின அழகு, நீ சிவந்தனை நோக்கலின்–நீ வெகுண்டு பார்த்ததனுல், மன்ற சிவந்தது–நிச்சயமாக அழிந்தது.

**முடிபு:** நன்னாட்டுக் காமரு கவின் நீ சிவந்தனை நோக்கலின் சிவந்தது என்க.

**ஆ—ரை:** கவின் என்பதன் பயனிலையான சிதைந்தது என்பதனை முற்கூறினார் பொருள்வலி தோன்றற்கு. இவ்வாறு பயனிலையை முன்னும் எழுவாயைப் பின்னும் வைத்துச் செய்யுள் செய்யும் மரபு **முல்லைப்பாட்டு நெடுநல்வாடை** முதலிய சங்கச் செய்யுள்களிற் காணலாம். பகைவர் நாட்டுக் கவின் முற்றாக அழிந்தமையின் 'சிதைந்தது மன்ற' என்றார். மன்ற–அறுதியாக என்பர் **நச்சினார்க்கினியர்.** (மலைபடு 66 உரை) இச்சொல் தோற்றப்பொருள் தருதல் "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" (**தொல்.** இடை 17)என்பதனுலுமறிக. சிவந்தனை–முற்றெச்சம்.

மகளிர் குவளைநெறியை அடைச்சி ஆம்பல் மடிவையராய்த் தெறுமார் தெள்விளி இசைப்பின் துறைநணி மருதம் ஏறிக் காவிற் பசுமயில் ஆலும் நாடு என்க.

எல்-ஒளி. 'எல்வளையென எல்லென்பது இலங்குதற்கண் வந்தவாறு' என்றார் **சேனாவரையர்** (தொல். இடை சூ 21 உரை). வளை என்றது சங்கு வளையை. "கோடீ ரிலங்கு வளை" (குறுந் 11: 1) "கோடீ ரெல்வளை" (ஐங் 185: 3) என வருவன காண்க. மகளிர் என்றது விளைவயற் படுபுள்ளோப்பும் உழவர் மகளிரை,

"முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த
தடந்தா ணாரை யிரிய வயிரைக்

கொழுமீ னார்கைய மரந்தொறுங் குழாஅலின்
வெண்கை மகளிர் வெண்குரு கோப்பும்" பதிற் 29: 3-6.

என வருதல் காண்க.

தொடர்ந்த குவளையென்றது ஆண்டுகள்தோறும் இட்டு ஆக்கவேண்டாது தொண்டு இட்டதே ஈடாக எவ்வாண்டிற்கும் தொடர்ந்துவரும் குவளையென்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்குத் தொடர்ந்த குவளை என்று பெயராயிற்று.

குவளை — நீலோற்பலம். இதனைக் "காமரு குவளைக் கழுநீர் மாமலர்" (சிலப் 4: 40) எனக் கழுநீரின் வேறாகக் குவளையைக் கூறுதலினாலும் தெளியலாம். செங்கழுநீர் எனக் கொள்ளினுமமையும். "குண்டுசுனை பூத்த குவளை" (புற 116: 1) என்புழிக் குவளை என்பதற்குச் 'செங்கழுநீர்' என அதன் உரைகாரர் உரைத்தலுங் காண்க. நெறி-புறவிதழொடித்த பூ. இதனைக் "குவளைக் கூம்பவிழ் முழுநெறி" என்புழி 'முழுநெறி-புறவிதழொடித்த முழுப்பூ' எனப் புறப்பாட்டுரைகாரர் உரைத்தலானுமறிக. (புற 116: 1-2 உரை). அடைச்சி-செருகி. சீவக 1397 நச். சிலப் 14: 77 அடி நல். மகளிர் குவளைத் தூநெறியை அடைச்சியது கூந்தலில் என்பது.

"மல்ல லறைய மலிர்சுனைக் குவளைத்
தேம்பா யொண்பூ நறும்பல வடைச்சிய
கூந்தல்" அக 308: 11-3.

"கண்ணே ரிதழ தண்ணறுங் குவளைக்
குறுந்தொட ரடைச்சிய நறும்பல் கூழை" அக 358: 5-6.

என வருவனவற்றானும் அறிக. இனிக் 'குவளைத் தூநெறி *அடைச்சி' என்பதற்குக் குவளைத்தூநெறியாலாய தழையை உடுத்து என உரைத்தலமையாதோவெனின், மகளிர் தழையணிதல் 'ஆம்பல் அகமடிவையர்' என மேல் கூறப்படுதலின் அமையாதென்க. மடிவை - தழை. இதனை "அகலு ளாங்கணம்பகை மடிவைக், குறுந்தொடி மகளிர்' (அக 226: 3-4) என்புழி 'இப்பாட்டினுள் மடிவை யென்றது தழையை' என அதன் பழையவுரைகாரர் உரைத்தலானும் தெளிக. ஆம்பற் பூவால் தழை செய்தல் "கழனி யாம்பன் முழுநெறிப் பைந்தழை" (அக 156: 9) என்பதனானுமறியப்படும். மடிவையர் என்றதனால் எல்வளை மகளிர் இளைய விளையாட்டு மகளிராவர் என்பது பெறப்படும்.

"தழையுங் கோதையு மிழையு மென்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடு
மடமொழி யாயத் தவர்" கலி 102 5-7.

"அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளைய மாகத் தழையா யினவே" புற 248: 1-2.

---

* அடைச்சி என்பது உடுத்து எனவும் பொருள் படுதல், "நெடுந் தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி" (மதுரை) 688 என்பதன் உரையால் அறிக.

என வருவன காண்க. மடிவையர் (3) என்பதனை வினையெச்ச முற்றாக்கி அதனைத் தெள்விளி யிசைப்பின் (7) என்னும் வினையொடு முடிக்க.

சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி இயவர் எனவும், அரியலார் கையராகிய இயவர் எனவும் இனிது கூடு இயவர் எனவும் தனித்தனி கூட்டுக. இயவர் என்றது வாச்சியக்காரராகிய கூத்தர் பாணரை. இயவர்—வாச்சியக்காரர் என்றார் நச்சினார்க்கினியரும். (மதுரைக் 304 உரை) இயவரின் தலைமயிர் கடைகுழன்றிருத்தல்பற்றிச் 'சுரியலஞ்சென்னி'' என்றார்.

"எரியகைந் தன்ன வேடி ருமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி" பொருந 159-60.

"புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்
பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப்
பாண்முற் றுகநின் னுண்மகி ழிருக்கை" புற 29: 3–5.

என வருவன காண்க. சுரியல்-கடை குழன்ற மயிர். 'சுரி - கடை குழன்ற' பொருந 160 நச். கண்ணி – தலையிலணியும் மாலை. இயவர் கண்ணி சூடல்.

"குவியிணர் எருக்கின் ததர்பூங் கண்ணி
ஆடூஉச் சென்னி தகைப்ப..............
.......................................
இரும்பே ரொக்கற் கோடிய ரிறந்த" அக 301: 11-.23

"பாணர் சென்னியும் வண்டுசென் றாதா" புற 244: 1.

என வருவனவற்றாலுமறியப்படும். இயவர் கள்ளை உண்ணும் வழக்கமுடையராதல்பற்றி 'அரிய லார்கையர்' என்றார். "வயிரியர், உண்டெனத் தவாக் கள்ளின்" (பதிற் 43: 34-5) எனவும், "பாணர் மண்டை நிறையப் பெய்மார், வாக்கவுக்க தேக்கட் டேறல்" (புற 115: 2-3) எனவும் வருவன காண்க. அரியல் -கள், ஆர்கை-உண்டல். இனிது கூடு-சுருதியோடு இனிதுகூடுகின்ற எனினுமாம். கூடு என்பதனை இயவர் என்பதில் நின்ற இயம் என்பதனோடு முடிக்க. இயவர் துறை என்க.

"எருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்" மலைபடு 469-70.

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. மகளிர் தெள்விளி இசைப்பக் காவிற் பசுமயில் துறைநணி மருதமேறி ஆலுதலின் 'துறைநணி மருதமேறிக் காவிற் பசுமயில் ஆலும்' என்றார்.

"செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை
செறிவளை மகளி ரோப்பலிற் பறந்தெழுந்து
துறைநணி மருதத் திறுக்கு மூரொடு" புற 344: 1-3.

"கழனி யுழவர் கலிசிறந் தெடுத்த
கறங்கிசை வெரீஇப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம் பொலியவந் திறுக்கும்" அக 266: 17-9.

என வருவன காண்க. நீர்த்துறைக்கு அணித்தாக மருதமரம் நிற்ற

லின் 'துறைநணி மருது' என்றார். "முடமுதிர் மருதத்துப் பெருந்துறை" (ஐங் 31: 3) என்றார் பிறரும். தெள்விளி—தெளிந்த ஓசை. "ஆம்பலந் தீங் குழற் றெள்விளி" (குறிஞ்சி 221-2.) என்றார் பிறரும். ஈண்டு இயங்களின் தெள்விளியை. "கழனி யுழவர் தண்ணுமை யிசைப்பின்" (பதிற் 90: 41) என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது தெள்விளி என்பதற்கு மகளிரின் தெளிந்த சொற்கள் எனினுமமையும் பழனம்—நீர்நிலைச் செறு. காவிற் பசு மயில்—காவில் தங்கும் பசியமயில். "அணிபொறி மஞ்ஞை யாடுஞ்சோலை" (அக 242: 4) "பயில்பூஞ் சோலை மயில்" (புற 116: 10) என வருவன காண்க. பசுமயில் என்றது தோகை மயிலை. ஆலும்—ஆரவாரிக்கும். பெரும்பாண்330நச்.

பொய்கை வாயிலினையும் புனல்பொரு புதவினையும் நெய்தல் மரபினை யும் நிரைக்கள்ளினையுமுடைய செறு என்க.

பொய்கைவாயில் என்றது பொய்கைப் புனல் வயலுக்குச் செல்லும் பொருட்டு அதன்முன்னே படுத்த வாய்த்தலையை. இதனைப் 'புனல்வாயில்' என்றும் கூறுவர். பொய்கை வயற்கணுள்ளது. "தேங்கமழ் பொய்கை யகவயல்" (ஐந்எழு 45) என்றார் பிறரும். வாய்த்தலைக்கிட்ட கதவில் பொய்கைப் புனல் வந்து மோதுதலின் 'புனல்பொரு புதவின்' என்றார். வாய்த்தலைக்கண் கதவு அமைத்தல், "காவிரிப் புது நீர் கடுவரல் வாய்த்தலை, ஓவிந்து" (சிலப் 10: 108-9) என்புழி, 'வாய்த்தலை ஓவிறந்து – வாய்த்தலைக்கிட்ட கதவின்மீ தெழுந்து' என்ற அடியார்க்கு நல்லார் உரையானுமறிக. நீர்க்குறைவின்மையால் நெய்தல் இடையறுது பூத்தலின் 'நெய்தன் மரபின்' என்றார். ஆம்பல் நெய் தல் முதலிய பூக்கள் இடையறுது பூத்தலால் அவற்றின் தேனை உண்டற்குத் திரளான வண்டுகள் வயற்கண் எக்காலத்து முண்மையான் 'நிரைக்கட் செறு' என்றார்.

> "கட்கமழு நறுநெய்தல்
> வள்ளித ழவிழ்நீல
> மெல்லிலை யரியாம்பலொடு
> வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை" மதுரைக் 250- 3.

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. கள் என்றது வண்டை. "கட்பட ரோதி" (அக 39: 14) என்புழிக் 'கள்—வண்டு' என அதன் பழையவுரைகாரர் உரைத்தலுங் காண்க. "கள்ளின மார்த்துண்ணும் வண்கொன்றையோன்" என்னும் திருக்கோவையார் உரையில் 'கள்ளென்பது வண்டினுளொருசாதி யென்பாருமுளர்' எனப் பேராசிரியர் உரைத்தலும் ஈண்டு அறியற்பாலது. நிரைக்கட் செறு என்றதனுல் வயல் நீர்வளமுடைத்தாதல் பெறப்படும். "போதார் வண்டூதும் புனல் வயல்" (ஐந். ஐம் 22) என்றார் பிறரும்.

வல்வாயுருளி (11) அள்ளற்பட்டு (12) மண்ட (11) எனக் கூட்டுக. வாய் என்றது உருளியின் பட்டத்தை. அது தான் நிலத்தைப் பிளந்து செல்லுத லின் 'வல்வாய்' என்றார். "சுரம்பல கடவும் கரைவாய்ப் பருதி, ஊர்பாட் டெண்ணில் பைந்தலை துமிய" (பதிற் 46: 8-9) என வருதல் காண்க. அள் ளற் படுதலின் உருளி கதுமென மண்டுவதாயிற்று. அள்ளற்பட்டு மண்டிய

சகடத்தினை எருதுகள் முயன்று இழுத்தற்பொருட்டு சாகாட்டாளர் துள்ளிச் செலுத்துதலின் 'துள்ளுபு துரப்ப' என்றார். துரப்ப - செலுத்த, சிலப் 10: 4 உரை. துரப்புதற்கேற்ப எருது முயலுதலின் 'நல்லெருது' என்றார். முயலுதல்-வலியைச் செலுத்தி மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழ்ந்தும் வாங்குதல். முயலும் விழுமம் எனக் கூட்டுக. சேற்றைக் கழியப்போகின்ற காலத்து எருதுகள் வருந்துதலின் 'அளறு போகு விழுமத்து' என்றார்.

''மாமூ தள்ளல் வருந்திய சாகாட்டு
எவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி'' அக 140: 12-4.

எனப் பிறரும் கூறுதல் காண்க. விழுமத்தின்கண் எருதுகளை ஊக்குதற்குச் சாகாட்டாளர் பேராரவாரஞ் செய்தலின் 'சாகாட்டாளர் கம்பலை' என்றார்.

''அள்ளற் றங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே'' 259- 60.

என்றார் மதுரைக்காஞ்சியினும். அளறுபோகு விழுமத்துச் சாகாட்டாளர் ஆரவாரமல்லது பகைவர் போரால் உண்டாகும் ஆரவாரத்தினை அறியாத புனல் நாடாதலின் 'சாகாட்டாளர் கம்பலை யல்லது பூசலறியா நன்னாடு' என்றார்.

''தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில் பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்'' கலி 67: 3-5.

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. நாட்டில் புதுவருவாய் இடையறாது நிகழ்தலின் 'யாணரறாஅ' என்றார். கண்டார் யாவராலும் விரும்பத்தக்க அழகுடைமையின் 'காமருநகரின்' என்றார். காமரு - விரும்பத்தக்க. 'காமரு விகாரம்; மருவும் ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டு மகரம் சந்தியாற் கெட்டது' என நச்சினார்க்கினியரும் (கலி 45: 19 உரை), 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம் வருமென்பதாயிற்று' என அடியார்க்குநல்லாரும் (சிலப் 4: 40 உரை) எழுதிய உரைப்பகுதிகள் ஈண்டறியற்பாலன.

இதனாற்சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## பழையவுரை.

2. தொடர்ந்த குவளை — ஆண்டுகடோறும் இட்டு ஆக்கவேண்டாது தொண்டு இட்டதே ஈடாக எவ்வாண்டிற்கும் இடையறாது தொடர்ந்து வருமென்றவாறு. இச் சிறப்பானே இதற்கு தொடர்ந்த குவளை என்று பெயராயிற்று. மடிவையரென்பதனை (3) வினையெச்சமுற்றாக்கி அதனைத் தெள்விளியிசைப்பின் (7) என்னும் வினையொடு முடிக்க. மகளிர் (7) தெறுமார் (6) இசைப்பின் (7) காவிற் பசுமயில் ஆலும் (8) என்றது வயலிற் புகுந்து உழக்காதிருத்தற்பொருட்டு அவ்வயற்புள்ளோப்பும் உழவர் மகளிர் அதனைக் கடியவேண்டித் தெள்விளியிசைப்பின் இயவர் இயங்களின் ஒலி கேட்ட பழக்கத்தானே தன்னைக் கடிகின்ற ஒலியையும் அவற்றின் ஒலியாகக் கருதி மயில் ஆலுமென்றவாறு. (10) செய்தல் மரபின் நிரைகட் செறு

வென்றது நெய்தல் இடையருது பூக்கும் மரபினையும் நிரைத்த வண்டினையுமுடைய செறுவென்றவாறு. கள்ளென்பது வண்டு. வல்வா யுருளி (11) அள்ளற்பட்டு (12) மண்ட (11) எனக் கூட்டுக. (12) துள்ளுபு துரப்ப வென்றது சாகாட்டாளர் துள்ளித் துரக்கையாலே யென்றவாறு. (13) அளறு போகு விழுமமென்றது அளற்றைக் கழியப்போகின்றகாலத்து வருத்தமென்றவாறு.

நன்னாட்டுக் (15) கவின் (16) நீ சிவந்தனை நோக்கலின் சிதைந்தது (1) என **வினைமுடிபு** செய்க.

இதனாற்சொல்லியது அவன் **வென்றிச்சிறப்புக்** கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

2. **குவளைத்தூநெறி**: "கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை" **சிலப்** 2: 4.

**குவளை அடைச்சி**: "குறுஞ்சுனைக் குவளை யடைச்சி" **நற்** 204: 3; "குவளைத் தேம்பா யொண்பூ நறும்பல வடைச்சிய கூந்தல்" **அக** 308 11: 3; "தாழ் நீர்க் குவளையும், கண்ணவிழ் நெய்தலுங் கதுப்புற வடைச்சி" **சிலப்** 14: 76-7.

3. **மகளிர் தழையுடையணிதல்**: **முருகு** 201-5; **குறிஞ்சி** 102; **நற்** 8: 2-3; 96: 7-8; 123: 6-7; 204 1-2; 320: 3-4; 368 3-4; 390: 4-5; **குறுந்** 125: 3; 159: 1-2; 214-3-4; 293 5-7; 294: 5-6; 295: 2; 333: 3; 342: 5; 345: 4; **ஐங்** 15; 72; 73; 147; 191; 201; 211; 291; **கலி** 125: 12; **அக** 20. 9-10; 59: 5; 70: 12; 156: 8-10. 176. 14-5; 188: 12-3; 201: 6-7; 226: 3-4; 230: 3-5; 275: 16-7; 320: 3; 331; 5; 348: 9; 383: 8; 390: 6-7; **புற** 61; 1; 116: 1-2; 248: 1-2; 271: 2-4; 340: 1-2; 341 1-3; **திணைஐம்** 40; **ஐந்ஐம்** 14; **சீவக** 1499; **பெருங்** (2) 20: 87.

5. **அரிய லார்கையர்**: "அரிய லார்கையர் வினைமகிழ் தூங்க" **அக** 184: 14; "அரிய லார்கைய ருண்டினி துவக்கும்" **புற** 391 6.

**இயவர்**: **பதிற்** 17: 7 ஒப்பு.

6. **துறைநணிமருது**: "துறைநணி மருதத்து" **புற** 243: 6.

7. **எல்வளை மகளிர்**: "இறையே ரெல்வளைக் குறுமகள்" **நற்** 167: 10; "வணங்கிறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்" **குறுந்** 364 5; "எல்வளைக் குறுமகள்" **ஐங்** 257: 2; "எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து" **புற** 24: 9; "எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப" "எல்வளை மகளிர் ஏந்திய விளக்கம்" **சிலப்** 4: 19; 28: 53;

**மகளிர் தெள்விளி**: "வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடை பயிற்றிக் கிள்ளை யோப்பியும்......இருந்தனமாக" **குறிஞ்சி** 100-6.

**மயிலாலுதல்**: **நற்** 251: 1-3; 357: 6; **ஐங்** 250; 291; 298; 371; **கலி** 27: 13; 36: 2.

9. **புனல்பொரு புதவு**: "புனல்பொரு புதவி னுறந்தை" **அக** 237: 14;

10. **நெய்தற்செறு**: "இருஞ்சேற் றகல் வயல்.....கட்கமழ் நெய்தலூதி" **முருகு** 72-3; "நீர்ச்செறுவி ணீனெய்தல்" **பட்டினப்** 11; "வண்டு மூசு னெய்த

*னெல்லிடை மலரும், அரியலங் கழனி"* நற் 190: 5-6; *" தண்ணறு நெய்தற் றளையவிழ் வான்பூ, வெண்ணெ லரிநர் மாற்றின ரறுக்கும்"* ஐங் 190: 1-2.

**நிரைக்கட் செறு:** *"நேர்கட் செறுவின்"* நற் 400: 2; *"வண்டார் வயலுள்"* பு. வெ. மா. 165.

*12.* **அள்ளற்பட்டு:** *"பகைக்கூ ழள்ளற் பட்டு"* புற 185: 5.

13. **நல்லெருது:** *"நல்லெருது நடைவளம் வைத்தென"* நற் 315: 4.

*11—4.* *"உமணர்..... கணநிரை கிளர்க்கு நெடுநெறிச் சகட, மணன் மடுத்துரறு மோசை"* நற் 4: 7-10; *"ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கு, முரனுடை நோன் பகட்டு" "அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய, பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய, வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும், பெருமிதப் பகட்டுக்கு"* புற 60: 8-9; 90: 6-9; *"குண்டுதுறை யிடுமணற் கோடுற வழுந்திய, பண்டிதுறை யேற்றும் பகட்டிணைபோல"* பெருங் (1) 53: 53-4; *"மடுத்து வாயெல்லாம் பகடன்னுன்"* குறள் 624.

*61.* **யாணரருஅ:** *"யாண ரருஅ வைப்பின்" "யாண ரருஅ வியன் மலை"* புற 63:14; 116: 14.

---

## 8. உருத்துவரு மலிர் நிறை.

(28) திருவுடைத் தம்ம பெருவிறற் பகைவர்
பைங்கண் யானைப் புணர்நிரை துமிய
உரந்துரந் தெறிந்த கறையடிக் கழற்காற்
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப
இளையினிது தந்து விளைவுமுட் டுறுது
புலம்பா வுறையு ணீதொழி லாற்றலின்
விடுநிலக் கரம்பை விடரளை நிறையக்
கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை யிழிதரு நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇயர்
உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே.

**துறை—நாடு வாழ்த்து.**
**வண்ணமும் தூக்கும் அது.**
**பெயர்—உருத்துவரு மலிர் நிறை. (12)**

**ப—ரை.** *பெரு விறல் பகைவர்-முன்பு பெரிய வெற்றியையுடைய பகைவரது, பைங்கண் யானை புணர் நிரை துமிய -பசிய கண்களையுடைய யானை*

யினது தம்மிற்சேர்ந்த நிரை துணிய, உரம் துரந்து எறிந்த-வலியாற் செலுத்தி எறிந்த, கறை அடி கழல் கால் - குருதிக் கறை பொருந்திஅடியினையும் வீரக் கழலணிந்த காலினையுமுடைய, கடுமா மறவர்—கடிதாச் செல்லும் குதிரையை யுடைய வீரர், கதழ் தொடை மறப்ப-போரில்லாமையால் விரைந்து அம்பு தொடுத்தல் மறக்கும்படி, இளை இனிது தந்து-நாடு காவலை இனிதாகத் தந்து, விளைவு முட்டுறாது - விளைவில் முட்டுறாமல், புலம்பா உறையுள் தொழில் நீ ஆற்றலின்-குடிமக்கள் வருந்தாதிருக்கும் தொழிலை நீ செய்தலால், கோடை நீட - கோடைக்காலம் நீடுகையாலே, குன்றம் புல்லென அருவி அற்ற பெரு வறல் காலையும்-குன்றுகள் பொலிவழியும்படி அருவிகள் அற்றுப்போன பெரிய வரட்சிக்காலத்தும், விடு நில கரம்பை விடர் அளை நிறைய - பயிர் செய்யாது விடப்பட்ட நிலமாகிய கரம்பை வயல்களிற் கமர்வாய் நீர்நிறை யும்படி, சீர் உடை வியன் புலம்-அழகினையுடைய அகன்ற வயல்களில், வாய் பரந்து மிகீஇயர் – இடத்திலே பரந்து நீர்தான் தன்னை மிகுக்க வேண்டி, நிவந்து கரை இழிதரும் நனந்தலை பேரியாற்று-உயர்ந்து கரையினின்று வீழ் கின்ற அகன்ற இடத்தையுடைய பேரியாற்று, உவலை சூடி உருத்து வரு மலிர் நிறை–தழைகளைச் சூடித் தோற்றிவரும் மிக்க வெள்ளத்தின், செந்நீர் பூசல் அல்லது–சிவந்த நீரினுலுண்டாகும் ஆரவாரமல்லது, வெம்மை அரிது–பகை வெம்மையாலுண்டாகும் ஆரவாரம் இல்லை. ஆதலால், நின் அகன் தலை நாடு–நினது அகன்ற இடத்தையுடைய நாடு, திரு உடைத்து-திருவினையுடையது.

**முடிபு:** பகைவரது யானைப் புணர்நிரை துமிய எறிந்த மறவர் கதழ் தொடை மறக்கும்படி நாடுகாவலை இனிது தந்து விளைவில் முட்டுறாமல் புலம்பாவுறையுட் டொழிலை நீ ஆற்றலின் அருவியற்ற பெருவறற்காலையும் பேரியாற்று மலிர் நிறைச் செந்நீர்ப் பூசலல்லது வெம்மையரிது; ஆதலால் நின் நாடு திருவுடைத்து என்க.

**ஆ—ரை:** முன்பு வீரம் மிக்காரோடு புரிந்த நல்லமரிற் பெற்ற பெரிய வெற்றியையுடைய பகைவராதலின் 'பெருவிறற் பகைவர்' என்றார். ''வென்றிக் களிற்றை விரைதாரவன் வென்றவாறும்'' என்புழி 'வென்றிக் களிறு-முன்பு வெற்றியையுடைய களிறு' என நச்சினார்க்கினியர் உரைத் தலுங் காண்க. (சீவக 14 உரை) பெருவிறல்-பெரிய வெற்றி, குறிஞ்சி 199 நச். பகைவர் வெற்றியை எடுத்துரைத்தது ஆற்றல் சான்ற அப்பகைவரின் யானைப் படையை எறிந்த சேரன் மறவரது பேராற்றலை இனிது புலப்படுத்த வேண்டி. சேரன் படைவீரர் பகைவர் படையிலுள்ள காலாள் முதலியவற் றைத் தரமல்லவென்று கழித்து யானையை எறிந்தமையின் 'யானைப் புணர் நிரை துமிய எறிந்த' என்றார்.

''தாங்குநர், தடக்கை யானைத் தொடிக்கோடு துமிக்கும்
எஃகுடை வலத்தர்நின் படைவழி வாழ்நர்'' பதிற் 51: 29: 30.

எனப் பிறரும் கூறுதல் காண்க. படைக்கண் யானைகள் சேர்ந்து வரிசையா கச் சேறலின் ''யானைப் புணர் நிரை'' என்றார். புணர் நிரை-இடைவிடாது வருகின்ற நிரையுமாம். யானைப் புணர் நிரையை வலியாற் செலுத்தி எறிந்த

வழியன்றித் துமித்தல் அரிதாகலின் 'யானைப் புணர் நிரை துமிய உரந் துரந் தெறிந்த' என்றார். துமிய—துணிய. முருகு 307 நச். 'உரந் துரந்து—வலியாற் செலுத்தி', அக 7: 14 பழையவுரை. எறிந்த—வேலால் எறிந்த. "களிறெறிந்து முரிந்த கதுவா யெஃகின்" (பதிற் 45: 4) என்றார் பிறரும். வெட்டிய எனினுமமையும். எறிந்த கடுமா மறவர் எனக் கூட்டுக.

> "ஆய்மயிர்க் கவரிப் பாய்மா மேல்கொண்டு
> காழெஃகம் பிடித்தெறிந்து" பதிற் 90: 36-7.

எனப் பிறரும் கூறுதல் காண்க. கறையடி—களத்தில் நின்று பொருதலாற் குருதிக்கறை பொருந்திய அடி. அடி—பாதம். "ஒண்செஞ் சீறடிக் கணைக்கால்" முருகு 13-4. யானைநிரையை எறிந்த வெற்றியாற் காலில் கழலணிந்த மறவராதலின் 'கழற்கான் மறவர்' என்றார். கழல்-ஆடவர் வெற்றியால் காலில் அணியும் அணி. "ஆடவர் கொடை வீரத்தா லணிவது கழலென்றாமே" என்பது திவாகரம். கடுமா மறவர் என்றது குதிரைமேல் வீரரை. இம்மறவர் போரில்லாமையால் விரைந்து அம்பு தொடுத்தலை மறக்கும்படி சேரன் நாடு காவலை இனிது தந்தமையின் 'மறவர் கதழ் தொடை மறப்ப இளையினிது தந்து' என்றார். 'உரந்துரந் தெறிந்த மறவர் கதழ்தொடை மறப்ப' என்றதனால் மறவர் எஃகம் வில் முதலிய படைகளைத் தாங்கிப் பொரும் பெரு வீரர் என்பது அறியப்படும்.

> "குந்தமே யயில்வாள் குனிசிலை மூன்றுங் குறைவில்லார்
> கூற்றொடும் பொருவார்" சீவக 2156.

எனப் பிறண்டும் வருதல் காண்க. இளை—காவல். சிலப் 12: 24. அரும்பத. தலைக்காவல் என்பர் திவாகரர். இனிது தந்து—முட்டின்றித் தந்து. சேரன் ஆட்சிச் சிறப்பால் விளைவு குன்றாமையின் 'விளைவு முட்டுறாது' என்றார். "பெரும்பல் யாணர்க் கூலங்கெழும......பவ்வே விரும்பொறை நின் கோல் செம்மையின்" (பதிற் 89: 7-9) எனப் பிறரும் கூறுதல் காண்க. 'மறவர் தொடை மறப்ப இளை இனிது தந்து விளைவு முட்டுறாது' என்னும் பகுதியொடு,

> "முனைதரு பூசல் கனவினு மறியாது
> புலிபுறங் காக்குங் குருளை போல
> மெலிவில் செங்கோ னீபுறங் காப்பப்
> பெருவிறல் யாணர்த் தாகி" புற 42: 9-12.

என்பது ஒப்புநோக்கற் பாலது. விளைவில் முட்டுறாமல் எனத் திரித்துத் தொழிலாற்றலின் என்னும் வினையொடு முடிக்க. போரின்றாமாறு சேரன் நாடு காவலை இனிது தருதலால் குடிமக்கள் பகைவரால் கலங்கிப் பதிப் பெயராது வருத்தமின்றித் தம் இருப்பிடங்களில் வாழ்தலின், அவ்வாறு புரக்குந் தொழிலைப் 'புலம்பாவுறைட் டொழில்' என்றார்.

> "வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
> வாழ்வோர் போகிய பேரூர்" நற் 153: 8-9.

"பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென
அதுகைவிட் டகன்றொரீஇக் காக்கிற்பான் குடைநீழற்
பதிபடர்ந் திறைகொள்ளும் குடிபோல" கலி 78: 4-6.

எனு வருவன காண்க. புலம்பு - வருத்தம். "பதிவயற் றீர்ந்த நும், புலம்புசேணகல" மலைபடு 411-2. உறையுள் - இருப்பிடம். தொழிலாற்றலின் வெம்மை அரிது என முடிக்க.

கோடை நீடலால் அருவியற்ற பெருவறற் காலையும் கரம்பை விடரளை நிறையும்படி சீருடை வியன்புலம் வாய்பரந்து மிசைஇயர் நிவந்து கரையிழி தரும் பேரியாறு என்க.

கோடை-கோடைக் காலம் இக்காலம் மிக்க வெப்பமுடைத்தாதல்,

"பல்வளம் பகர் பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் சொரிதலிற்
றணிவில் வெங்கோடைக்கு" கலி 20: 1 3.

என்பதனானுமறியப்படும். கோடு நீடுகையால் எய்திய பெருவறற் காலத்துக் குன்றுகள் பொலிவழியும்படி அருவிகள் அற்றுப் போதலின் 'கோடை நீடக் குன்றம் புல்லென அருவியற்ற பெருவறற் காலையும்' என்றார்.

"விளங்குபக லுதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்
அருவி யான்ற பெருவரை மருங்கில்" அக 91: 1-3.

என வருதல் காண்க. 'குன்றம் புல்லென அருவி யற்ற' என்றார் குன்றுகள் அருவி இழிதலால் முன்பு பொலிவுபெற்றமையின்.

"இலங்குதா ழருவியோ டணிகொண்ட நின்மலை" கலி 46: 25.

"மணிவரை மருங்கி னருவி போல
வணிவரம் பறுத்த" கலி 103: 10-11.

என வருவன காண்க. குன்றம்-சிறுமலை. "குன்று மலை காடுநாடு" புற 17: 3; மலை எனினு மமையும். காலை-காலம்.

விடுநிலம்-நீரேறுமையால் பயிர் செய்யாது விடப்பட்ட நிலம். விடுநிலமாகிய கரம்பை என்க. கரம்பை-தரிசு நிலம்.

"இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ றாடி" பெரும்பாண் 91-3.

என்றார் பிறரும். வெயில் வெம்மையால் கரம்பை வயல்களிடத்துண்டாகிய கமர்வாயைக் 'கரம்பை விடரளை' என்றார்.

"கடுங்கதிர் எறித்த விடுவாய்" அக 53: 3.

"கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலிற் பயங்கரந்து மாறி
விடுவாய் பட்ட வியன்கண் மாநிலம்" அக 164: 1-3.

என வருவன காண்க. பேரியாற்று நீரினல் அகற்சியையுடைய வயல் நெல்

லும் கரும்பும் முதலாயின விளைதலால் அழகு பெறுதலின் 'சீருடை வியன் புலம்' என்ருர். கரம்பை விடரளை நிறையும்படி புலத்தே வாய்பரந்து மிகீ இயர் நிவந்து கரையிழிதரும் பேரியாறு என்க. இதனுல் அருவிகள் அற்றுப்போதலால் யாறு பெருக்கற்ற பெருவறற் காலத்தும், நீர் ஏருத மேட்டு நிலத்து நீர் ஏறும்படி பேரியாறு பெருக்கு மிக்குச் செல்லுதல் கூறினுர்.

''அருவி யற்ற பெருவறற் காலையும்
அருஞ்செலற் பேரியாற்று'' **பதிற் 43: 14-5.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. பேரியாற்று மலிர்நிறைச் செந்நீர் எனக் கூட்டுக.

உவலை சூடி உருத்துவரு மலிர் நிறை என்றது தழைகளைச் சூடித் தோற்றி வரும் வெள்ளமென்றவாறு; தன்னை வயல் பொறுக்குமாறு காணவென்று போர் வேட்டு வருவாரைப்போலுமென்று கூறிய சிறப்பானே இச்செய்யுளுக்கு **உருத்துவரு மலிர்நிறை** என்று பெயராயிற்று.

உவலை-தழை. ''பாசிலைத் தொடுத்த உவலைக் கண்ணி'' புற 54: 10. பெருக்கின் மிகுதியால் பேரியாற்று நீர் மரச்சினைகளைத் தோய்ந்து தழைகளைச் சுமந்து வருதலின் 'உவலை சூடி' என்ருர். ''மாந்தீந் தளிரொடு வாழையிலை மயக்கி... போந்தது வையைப் புனல்'' எனப் **பரிபாடலில்** (பரி 10: 6-8) வருதல் ஈண்டறியற்பாலது.

''கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகந் திலக நறுங்கா ழார
முதிர்பூம் பரப்பி னொழுகுபுன லொழித்து
மதுகர ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை'' **சிலப் 25: 17-22.**

என்ருர் சிலப்பதிகாரத்தும். உருத்து வரும்-உவலை சூடலாற்போர் வேட்டு வருவாரைப் போலத் தோற்றி வரும். உருத்தல்-தோற்றல். ''அணங்கென வுருத்த சுணங்கணி யாகத்து'' **பொருந 35.**

''நிலம்பொறை யொராஅநீர் ஞெமரவந் தீண்டி
உரவுத்திரை கடுகிய வுருத்தெழு வெள்ளம்'' **பதிற் 72: 9-10.**

என்புழி உருத்தெழு வெள்ளம் என்பதற்குக் 'கோபித்தெழு வெள்ளம்' என உரைத்தலின் உருத்துவரு மலிர்நிறை என்பதற்குக் கோபித்தெழு வெள்ளம் எனப் பொருளுரைத்தல் அமையாதோவெனின், ஆண்டு எழும் வெள்ளம் 'துஞ்ச லுறூஉம் பகல்புகு மாலை'யாகிய ஊழிமுடிவிலெழும் வெள்ளமாதலின் அவ்வாறுரைத்தார். ஈண்டு அஃதன்மையின் அவ்வாறு உரைத்தல் அமையாதென்க. செந்நீர் என்ருர் புதுப் புனல் கலங்கி வருதலாற் சிவந்து தோன்றலின். பூசல் என்பதற்குச் சிவந்த நீரினுலுண்டாகும் ஆரவாரமும் வெள்ளம்கண்ட உழவராலும் நீர்விளையாட்டயர்வாராலும் உண்டாகும் ஆரவாரமும் கொள்க.

''உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி'' **சிலப் 7-4.**

என இளங்கோவடிகள் கூறுதல் ஈண்டைக்கேற்ப அறிதற்பாலது. சேரன் காக்கின்ற நாட்டிற் செந்நீர்ப் பூசலல்லது பகைவராலுண்டாகும் போர்ப் பூசல் இல்லையென்பார் அந்நீர்ப்பூசலைப் பகைவர் பூசல்போற் ரேன்றுமாறு 'உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறைச் செந்நீர்ப் பூசல்' என்ருர்.

"தண்புனற் பூச லல்லது நொந்து
களைக வாழி வளவ வென்று
தூணைதரு பூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப" புற 42: 7-11.

எனப் பிறண்டும் வருதல் ஈண்டறியற்பாலது. வெம்மை – பகைவராலுண்டாகும் கொடுமை. செந்நீர்ப்பூசலல்லது என்றதற்கேற்ப வெம்மையரிது என்பதற்கு வெம்மையாலுளதாகும் பூசல் அரிது எனவுரைக்க. அரிது-இன்மை மேற்று. "மனக்கவலை மாற்றலரிது" (குறள் 7) என்புழிப் போல. போரின்மையாலும் பேரியாறு பெருவறற்காலத்தும் கரையிழிந் தோடலால் அறாஅயாணருடைமையாலும் நின் அகன்றலைநாடு திருவுடைத்து என்ருர். திரு–கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். அம்ம–அதன் காரணத்தைக் கேட்பாயாக என்றவாறு.

## பழையவுரை.

3. கறையடியென்றது குருதிக்கறையினையுடைய அடியென்றவாறு. 4-5. மறவர் கதழ்தொடை மறப்ப இளை இனிது தந்தென்றது நின் வீரர் போரில்லாமையால் விரைந்து அம்புதொடுத்தலை மறக்கும்படி நாடுகாவலை இனிதாகத் தந்தென்றவாறு. இளை–காவல். வினைவில் முட்டுறுமலெனத் திரிக்க. 6. புலம்பாவுறையுட் டொழிலெனை மாறிக் கூட்டுக. 7. கரம்பை விடரளை நிறையவென்றது முன்பு நீரேருத கரம்பை வயல்களிற் கமர்வாய் நீர்நிறையவென்றவாறு. விடரளை நிறைய (7) வாய்பரந்து மிகீஇயர் (11) என முடிக்க. கோடை நீடுகையாலே குன்றம் புல்லெனும்படி (8) அருவியற்ற காலை (9) எனக் கூட்டியுரைக்க. 11 வாய் பரந்து மிகீஇயரென்றது இடத்திலே பரந்து நீர்தான் தன்னை மிகுக்க வேண்டியென்றவாறு. 12. உவலை சூடி உருத்து வரும் மலிர்நிறை யென்றது தழைகளைச் சூடித் தோற்றிவரும் வெள்ளமென்றவாறு. தன்னை வயல் பொறுக்குமாறு காணவென்று போர்வேட்டு வருவாரைப் போலுமென்று கூறிய இச் சிறப்பானே இதற்கு உருத்துவரு மலிர்நிறை என்று பெயராயிற்று.

வாய்பரந்து மிகீஇயர் (11) உருத்து (12) கரையிழிதரும் நனந்தலைப் பேரியாற்று (10) மலிர் நிறைச் (12) செந்நீர் (13) என மாறிக் கூட்டுக.

பெருவறற்காலையும் (9) நின் அகன்றலை நாடு (14) புலம்பாவுறையுட் டொழிலை நீ ஆற்றலின் (6) திருவுடைத்து (1) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனுற் சொல்லியது அவன் நாடுகாத்தற்சிறப்புக் கூறியவாருயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. பெருவிறல்: "வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி" மலைபடு 493; "பெருவிறல் வேந்தன்" பொருந (1) 39: 40.

2. பைங்கண்யானை: நற் 41: 1; 43: 9; 287: 2; குறுந் 333: 2; அக 85: 7; 91: 5; 102: 8-9; 125: 7-8; 187: 18; பெருங் (1) 45: 41; (1) 56: 267.

யானைப் புணர்நிரை: "கருங்களிற் றியானைப் புணர்நிரை" பதிற் 3ம் பதி6.

3. கறையடி: அக 142: 9; புற 39: 1-2; 135: 12; 323: 6;

3—4. கழற்கால் மறவர்: பதிற் 19: 3 அடிக்குறிப்பு.

4 கடுமா: பதிற் 49: 4; 81: 6; நற் 91: 11; 149: 6; குறுந் 250: 4; 336: 4, புற 378: 4.

2—4. யானைநிரை எறிந்த மறவர்: "களிறெறிந்து பெயர்தல் காளைக் குக் கடனே" புற 312: 6; "எற்றி வயவ ரெறிய நுதல் பிளந்து, நெய்தோர்ப் புனலுள் நிவந்த களிற் றுடம்பு" களவழி 23.

7. விடுநிலம்: "விடுநில முடைத்த கலுழ்கட் கூவல்" அக 331: 8; "களிறு நீருடிய விடுநில மருங்கின்" புற 325: 1;

கரம்பை: "வெள்வர குழுத கொள்ளுடைக் கரம்பை" பதிற் 75: 11; "நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்" புற 302: 7.

8. கோடை நீட: 'கோடை நீடலின்' அக 377: 1.

8—9. குன்றம் அருவி அற்ற: "செவ்வரை யருவி யான்ற" நற் 137:4-5.

10. "தொல்கரை, பொருதிரை நிவப்பின் வரும்யா றஞ்சுவல்" "கங்கை யம் பேரியாற்றுக் கரையிறந் திழிதருஞ், சிறையடு கடும்புனல்" நற் 114: 7-8; 369: 9-10.

8—10. "கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்..... மணியன்ன நீர் கடற்படரும்" "வளமழை மாறிய வென்றூழ்க் காலை, மன்பதையெல் லாஞ் சென்றுணக் கங்கைக், கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்கு" புற 137: 7-11; 161: 5-7.

11. "புதுவறங் கூர்ந்த செறுவிற் றண்ணென, மலிபுனல் பரத்தந் தாஅங், கினிதே" நற் 230: 8-10.

12. உவலை சூடி: "உவலை சூடிய தலையர்" அக 291: 13.

மலிர்நிறை: பதிற் 50: 5; குறுந் 99: 4; ஐங் 15; 42; 72; அக 166: 14-5; 341: 4.

14. அகன்றலைநாடு: பதிற் 23: 25 ஒப்பு.

## 9. வெண்கை மகளிர்.

(29) அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த
தடந்தா ணாரை யிரிய வயிரைக்
கொழுமீ னார்கைய மரந்தொறுங் குழாஅலின்
வெண்கை மகளிர் வெண்குரு கோப்பும்
அழியா விழவி னிழியாத் திவவின்
வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ
மன்ற நண்ணி மறுகுசிறை பாடும்
அகன்கண் வைப்பி னாடும னளிய
விரவுவேறு கூலமொடு குருதி வேட்ட
மயிர்புதை மாக்கண் கடிய கழற
அமர்கோ ணேரிகந் தாரெயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பி றானை பரவா வூங்கே.

துறை-வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்-வெண்கை மகளிர். (6)

ப—ரை. வேறு கூலமொடு விரவு குருதி வேட்ட—வேறுபட்ட தானியங்களோடு கலந்த குருதிப் பலியை விரும்பிய, மயிர் புதை மாகண் மயிர் சீவாத தோல் போர்த்த பெரியகண்களையுடைய முரசம், கடிய கழற—பகைவர்க்கு அச்சந்தருவனவாய் முழங்க. அமர் கோள் நேர் இகந்து—போரைக் கொள்ளுதலில் ஒப்புமை நீங்கி, ஆர் எயில் கடக்கும்—அரிய அரணை எதிர்நின்று வென்று கைக்கொள்ளும், பெரு பல் யானை குட்டுவன்—பெரிய பலவாகிய யானைகளையுடைய குட்டுவனுடைய, வரம்பு இல் தானை பரவா ஊங்கு—எல்லையில்லாத படை பரவிச் சென்றழிப்பதற்கு முன்பு, அவல் எறிந்த உலக்கை வாழை சேர்த்தி—அவலை இடித்த உலக்கையை வாழையில் சார்த்திவிட்டு, வளை கை மகளிர் வள்ளை கொய்யும்—வளையலையணிந்த கையினையுடைய மகளிர் வள்ளையைக் கொய்யும், முடந்தை நெல்லின் விளைவயல் பரந்த—வளைந்து முடமான நெல்லினையுடைய விளைகின்ற வயல்களிற் பரந்த, தட தாள் நாரை இரிய—நீண்ட கால்களையுடைய நாரைகள் நீங்க, அயிரை கொழு மீன் ஆர்கைய—அயிரையாகிய கொழுவிய மீனை உண்டலையுடையனவாய், மரம் தொறு குழாஅலின்—மரங்கள்தோறும் கூடியிருத்தலின், வெண்கை மகளிர் வெண் குருகு ஒப்பும்—வெண்கையையுடைய இளைய மகளிர் வெள்ளிய பறவைகளை ஒப்புதலையுடையவாய், அழியா விழவின்—என்றும் நீங்காத விழவினையும்,

இழியாதிவவின்–இறங்காத வார்க்கட்டினையுடைய யாழினையுமுடையவாய், வயிரிய மாக்கள் பண் அமைத்து எழீஇ–கூத்தர் யாழில் பண்ணைப் பொருத்தப்பண்ணி வாசித்து, மன்றம் நண்ணி - ஊர் மன்றத்தை அடைந்து, மறுகு சிறை பாடும் - வீதியின் பக்கமாயுள்ள வீட்டு வரிசையின் பக்கமாய்ப் பாடிச் செல்லும், அகன் கண் வைப்பின் நாடு–அகன்ற இடத்தையுடைய ஊர்களையுடைய நாடு, மன் அழிய - இப்பெற்றியெல்லாம் அழிந்து கண்டார் இரங்கத்தக்கனவாயின.

**முடிபு:** குட்டுவன் வரம்பில் தானை பரவா ஊங்கு முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த நாரை இரிய வெண்கை மகளிர் வெண்குரு கோப்புதலையுடையவாய் அழியாத விழவினையும் இழியாத திவவினையுமுடையவாய் வயிரிய மாக்கள் பண்ணமைத்து எழீஇ மன்ற நண்ணி மறுகுசிறை பாடும் இப்பெற்றிப்பட்ட சிறப்பையுடைய அகன்கண் வைப்பின் நாடு குட்டுவன் தானை பரந்தபின் இப்பெற்றியெல்லாம் அழிந்து கண்டார் இரங்கத்தக்கனவாயின என்க.

**ஆ—ரை.** கழனிக்கண் விளைந்த நெல்லின் கதிர்களை முறித்து மகளிர் பாசவலை இடித்த உலக்கையை 'அவலெறிந்த வுலக்கை' என்றார்.

> "கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்
> பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
> பாசவ லிடிக்கும் இருங்கா ழுலக்கை" **அக** *141: 16-8.*

என்றார் பிறரும். எறிதல்-இடித்தல். பெரும்பாண் *225* நச். குட்டுவன் தானை பரந்த நாடு புதுவருவாயருத ஊர்களையுடைத்தாதல் தோன்ற மகளிர் அவலெறிதலை எடுத்துக் கூறினர்.

> "......... ...... ..................கழனி
> யாம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
> பாசவல் முக்கித் தண்புனற் பாயும்
> யாண ரறாஅ வைப்பின்" **புற** *63: 11-4.*

எனப் பிறருங் கூறுதல் காண்க. அவலெறிந்த இடத்தே வாழை நிற்றலின் மகளிர் அவலெறிந்த உலக்கையை வாழையிற் சேர்த்துவாராயினர். "பாசவ லிடிப்பவ ருலக்கை வாழைப் பல் பழம், ஆசினிவருக்கைமா தடிந்து" என்றார் **சிந்தாமணியிலும்.** (சீவக *68*) இளைய மகளிராதலின் 'வளைக்கை மகளிர் என்றார். 'வளையோர்-வளையணிந்த இளைய மகளிர்' எனப் **புறநானூற்றுரைகாரர்** உரைத்தலுங் காண்க. (**புற** *242: 1* உரை)அம்மகளிர் அவலெறிந்த உலக்கை வாழையிற் சார்த்திவிட்டு வயற்கண் வள்ளையைப் பறித்தலின் 'அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி வளைக்கை மகளிர் வள்ளைகொய்யும்' என்றார்.

> "பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
> ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
> ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்" **குறுந்** *238: 1-3.*

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. வள்ளை - வள்ளைக் கொடி. "அந்தூம்பு வள்ளை யழற்கொடி" **அக** *376: 14.* வள்ளை கொய்யும் வயல் என்க.

வள்ளை வயற்கண் வளர்தல், ''மயங்குவள்ளை......பெருந்தண் பணை'' ''செறுவின் வள்ளை'' (அக 16: 13-6; 399: 6) என வருவனவற்றுலுமறியப்படும்.

நென்முற்றி வளைந்து கிடக்கும் வயலிடத்தே நிற்கும் நீரிலுள்ள அயிரை முதலிய மீன்களைக் கவர்ந்துண்ணும்பொருட்டு நாரைகள் வயலில் எங்கும் பரந்திருத்தலின் 'முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த நாரை' என்றார்:

''தடந்தா ணாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனி'' பதிற் 32: 12-3.

எனப் பிறருங் கூறுதல் காண்க. முடந்தை நெல் - கதிர்க்கனத்தாலே வளைந்து முடமான நெல். ''முடந்தை வரகின்'' (அக 284: 3) என்றார் பிறரும். முடந்தை பெயர்த் திரிசொல். நெல்லின் வயல் எனக் கூட்டுக. அதனை விளை வயல் என்றது நெல் முதலியன என்றும் விளைகின்ற வயலாதல்பற்றி, மீன் ஆர்கையவாய் மரந்தொறுங் கூடிய குருகை மகளிர் ஒப்பிய ஒலியால் வயற் பரந்த நாரைகள் இரிதலின் 'நாரை இரிய மீன் ஆர்கைய மரந்தொறுங் குழாலின் மகளிர் வெண்குரு கோப்பும்' என்றார். இரிய - கெடும்படியாக மலைபடு 202 நச். இரிய ஒப்பும் என முடிக்க. அயிரை-வயலிலுள்ள அயிரை. அயிரையாகிய கொழுமீன் என்க. கொழுமீன் – கொழுவிய மீன். மதுரைக் 320 நச்.

கொழுமீனார்கைய வென்றது வெண்கை மகளிர் ஒப்புதலின் அஞ்சாது வெண்குருகுகள் அயிரைக்கொழுமீனை ஆர்கையவாய் என்றவாறு இச்சிறப்பானே இச்செய்யுளுக்கு **வெண்கை மகளிர்** என்று பெயராயிற்று.

வெண்கை-ஒப்புதற்குரிய கருவிகள் இல்லாத கை. வெண்மை, இன்மைப் பொருட்டு. வெண்கையென்பதற்கு வெண்சங்கணிந்தகை என்பாருமுளர். இனி அடுகை முதலாகிய தொழில் செய்யாத கையென்பாருமுளர்' என்பர் பழைய வுரைகாரர். மரம் - மருது காஞ்சி முதலியன. அவை இடந்தொறும் நிற்றலின் 'மரந்தொறுங் குழாலின்' என்றார். குழுவலின் என்பது குழாலின் என நின்றது. வெண் குருகு - கரிய காலையும் வெண்ணிறத்தையுமுடைய ஒரு பறவை. ''கழனிக், கருங்கால் வெண்குருகு'' (நற் 4: 10-11) என்றார் பிறரும். இனி, நாரை அயிரைக் கொழுமீன் ஆர்கைய மரந்தொறுங் குழாஅலின் மகளிர் வெண்குருகு இரிய ஒப்பும் எனக் கூட்டி *நாரைகள் அயிரைக்கொழு மீனை ஆர்கையவாய் மரங்கள்தோறும் குழுவலின் மகளிர் அவ்வெள்ளிய குருகுகளை இரிய ஒப்பும்' என வெண்குருகு என்பதைச் சுட்டுப் பொருள தாக்கி உரைத்தலுமொன்று. ஒப்பும் (6) நாடு (10) எனக் கூட்டுக.

பலவகை வளங்களும் பொருந்திய நாட்டில் விழா இடையறாது நிகழ்தலின் 'அழியா விழவின்' என்றும், யாழ் என்றும் ஒலித்தலின் 'இழியாத் திவவின்' என்றும் கூறினார்.

---

* நாரை அயிரை உண்டல் ''நாரை ....அயிரை யாரிரைக் கணவங் தாங்கு'' ''நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்'' குறுங் 128: 1-3; 166: 2. ''அன்றிலு நாரையுந் துன்றுபு கெழீஇ - அயிரையும் பிறவு மல்கிரை யமைத்து'' பெருங் (1) 51: 71-3.

"வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்"-பதிற் 15: 17-8.

எனப் பிறரும் கூறுதல் காண்க. திவவு-நரம்பு துவக்கும் வார்க்கட்டு. 'திவவின்-வார்க்கட்டினையும்; இது நரம்பு துவக்கப்படுவது' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. (பொருந 15 உரை) †'ஓங்கிரு மருப்பின், மாயோன் முன்கை யாய்தொடி கடுக்குங், கண்கூடிருக்கைத் திண்பிணித் திவ' வாதலின் 'இழியாத் திவவின்' என்றார். "பிணிகொள் யாழ்" எனப் **பரிபாடலில்** (பரி. மாநிலம்) வருதலும் ஈண்டு அறியற்பாலது. திவவையுடைய யாழ் ஈண்டுத் திவவு எனப்பட்டது; ஆகுபெயர். தலைமைபற்றி யாழினைக் கூறினாராயினும் முழவு முரசு முதலியன ஒலித்தலும் கொள்க. விழவினையும் திவவினையுமுடைய (7) நாடு (10) எனக் கூட்டுக. திவவின் வயிரிய மாக்கள் எனக் கூட்டி யாழினையுடைய வயிரியமாக்கள் எனக் கோடலமையாதோவெனின், அழியாவிழவு நாட்டினுக்கு அடையாதல் போல இழியாத் திவவும் அதனுக்கே அடையாதல் 'அழியா விழவி னிழியாத் திவவின்' என்றதனால் புலப்படுதலினாலும் வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇப் பாடும் என்றதனால் அவர்கள் யாழினையுடையராதல் பெறப்படுதலினாலும் அவ்வாறு கோடல் அமையாதென்க. 'அழியாத விழவினையும் இழியாத திவவினையுமுடையவாய் வயிரியமாக்கள் எழீஇ மன்ற நண்ணி மறுகுசிறை பாடும்...... நாடு எனப் **பழையவுரைகாரரும்** திவவினை நாட்டினுக்கே அடையாக்கியுரைத்தல் காண்க.

வயிரிய மாக்கள்-கூத்தர். §'பண்ணமையா யாழின் கீழ்ப் பாடல் பெரிதின்னா' வாகலின் 'பண்ணமைத்து' என்றார், எழீஇ-வாசித்து "இல்லினெழீஇய யாழ்தழீஇ" (**கலி** 70: 22) என்புழி எழீஇய-வாசித்த என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமை காண்க. இனி எழீஇ-இசையை எழுப்பி எனினுமாம். "எண்வகையா லிசை யெழீஇ" **சிலப்** 7: 8. எழீஇ மறுகுசிறை பாடும் என முடிக்க. பாடும் வைப்பினாடு என்க. பகைவர் நாடு அகன்ற பல ஊர்களையுடையமையால் 'அகன்கண் வைப்பி னாடு' என்றார். வைப்பு-ஊர், மன், ஒழியிசை.

வேறு கூலம்-பலியிடற்குரிய வேறுபட்ட பண்டங்கள். அவை செந்தினை வெள்ளரிசி முதலியன. இக் கூலங்களோடு கலந்த குருதிப்பலியை விரும்பிய முரசமாதலின் 'விரவுவேறு கூலமொடு குருதி வேட்ட மாக்கண்' என்றார்.

"உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசங் கண்பெயர்த்து" பதிற் 19: 6-7.

எனப் பிறாண்டும் வருதல் காண்க. முரசு குருதிப் பலியை விரும்பல். "குருதி வேட்கை...முரசம்"(**புற** 50: 5)என்பதனானு மறியப்படும். முரசுறை தெய்வத்தின் பலிவேட்கை முரசின்மேலேற்றப்பட்டது. மாக்கண்ணையுடைய முரசு மாக்கண் எனப்பட்டது. மாக்கண்-பெரிய கண். **மதுரைக்** 733 நச். கொல்

† பொருந 13-5. § இன்னா 32.

றேற்றினது செவ்வித்தோலை மயிர் சீவாது போர்த்த முரசாதலின் 'மயிர் புதை மாக்கண்' என்றார்.

"கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரசம்" மதுரைக் 732-3.

என்றார் பிறரும். சேரனது வீரமுரசின் ஒலி பகைவர்க்கு அச்சத்தைச் செய்தலின் 'கடிய' என்றார். 'வலம்படு வியன்பணையென்றது பகைவர் வெருவியோடமுழங்கி அரசனுக்கு வென்றி தன்பாலே பட நின்ற முரசம்" (பதிற் 17: 5 பழையவுரை) என வருதல் காண்க. கடிய என்ற பன்மையால் தோடு கொண் முரசமாதல் அறியப்படும். அறியாதெதிர்ந்த நும்மைப் பொருதழிப்பேன் என்னும் அரசன் குறிப்பை இடித்துரைப்பதுபோல் ஒலித்தலின் 'கழற' என்றார். "போர்ப்புறு தண்ணுமை யார்ப்பெழுந்துநுவல" (பதிற் 84: 15) எனப் பிறரும் கூறுதல் காண்க. கழறல்-இடித்துரைத்தல். "கடிய கழற லோம்பு மதி" குறுந் 296: 6. கழற ஆரெயில் கடக்கும் என முடிக்க.

"அரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
வண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய
வஞ்சமந் ததையத் தாக்கி" புற 126: 19-21.

எனப் பிறரும் கூறுதல் காண்க.

அமர்கோள் நேர் இகந்து என்றது போர் செய்தலில் மேம்பட்டு என்றபடி. போரில் மேம்படாது ஒப்பப்பொருதவழி பகைவர் மதிலைக் கடத்தல் அரிதாகலின் 'நேர் இகந்து கடக்கும்' என்றார். இனி, இகந்து என்றதனை இகப்ப எனத் திரித்து, மேல் போரை விரும்பி ஏற்றுக்கொள்ளுதலில் ஒப்புமை நீங்க எயிலைக் கடக்கும் எனினுமாம். நேர்-ஒப்பு. ஆரெயில்-இனை கிடங்குகளாலும் பொறிகளாலும் கொள்ளுதற்கரிய அரண்.

"கடிமிளைக் குண்டு கிடங்கின்
நெடுமதி னிலைஞாயில்
அம்புடை யாரெயில்" பதிற் 20: 17-9.

எனப் பிறரும் கூறுதல் காண்க. கடக்கும் குட்டுவன் என்க. இவன் படையிலுள்ள யானைகள் வரை மருளும் உயர் தோன்றலவாதலின் 'பெரும்' என்றும், மிகப் பலவாதலின் 'பல்' என்றும் அடைகொடுத்துக் கூறினர். குட்டுவன் பல்யானைகளையுடையான் என்பது "களிங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி, இருகட லீரு மொருபக லாடி" எனப் பதிகத்து வருதலானுமறியப்படும். பகைவர் தானை வரம்புடைய தானையாகக் குட்டுவன் தானை வரம்பில்லாத வெள்ளம்போலும் பெரும்படையாகலின் 'வரம்பில் தானை' என்றார். "புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்" (பதிற் 33: 6) எனப் பிறரும் கூறுதல் காண்க. வரம்பு-எல்லை. அத்தானை பகைவர் நாட்டைப் பரந்து அழித்தமையின் 'பரவாவூங்கு' என்றார். தானை பரத்தல் "யானை இனம் பரந்த புலம்" "தேர் பரந்த புலம்" (பதிற் 25: 2-3; 26: 1) என வருவனவற்றானுமறியப்படும். ஊங்கு என்னும் இடைச்சொல் காலப்பொருளில் வந்தது. "உணர்ந்தேன் மன்ற வவருணரா வூங்கே" (குறுந் 297: 7) என்புழிப் போல.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

வரம்பிருனை பரவா வூங்கெனை எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் வஞ்சித்துறைப் பாடாணுயிற்று.

## மேற்கோள்

''பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே'' (தொல் புற சூ 25) என்னும் சூத்திரவுரையில் இச்செய்யுளை எடுத்துக் காட்டி 'இதில் இமையவரம்பன் றம்பி பல்யானைச்செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனுர் துறக்கம் வேண்டினுரென்பது குறிப்புவகையாற் கொள்ளவைத்தலின் இது வஞ்சிப் பொருள்வந்த பாடாணுயிற்று' என்றுர் நச்சினூர்க்கினியர்.

## பழையவுரை.

3. முடந்தை நெல்லென்றது கதிர்க்கனத்தாலே வளைந்து முடமான நெல்லென்றவாறு. முடந்தையென்பது பெயர்த்திரிசொல். இனிப் பழவழக்கென்பதுமொன்று. 5. கொழுமீன் ஆர்கைய வென்றது......6 இச்சிறப்பானே இதற்கு வெண்கை மகளிர் என்று பெயராயிற்று. இனி வெண்சங்கணிந்த கையென்பாருமுளர்; இனி அடுகை முதலாகிய தொழில் செய்யாத கையென்பாருமுளர். 7. திவவையுடைய யாழ் திவவெனப்பட்டது.

குட்டுவன் வரம்பில் தானை பரந்த இப்பொழுது அழிந்துகிடக்கின்ற இந்நாடுகள் குட்டுவன் (14) வரம்பில்தானை பரவாவூங்கு (15) முடந்தை நெல்லின் விளைவயற்பரந்த (3) நாரையிரிய (4) வெண்கை மகளிர் வெண்குருகோப்புதலையுடையவாய் (6) அழியாத விழவினையும் இழியாத திவவினையுமுடையவாய் (7) வயிரிய மாக்கள் எழீஇ (8) மன்ற நண்ணி மறுகுசிறைபாடும் (9) இப்பெற்றிப்பட்ட சிறப்பையுடைய அகன்கண் வைப்பினுடு இப்பெற்றியெல்லாமழிந்து கண்டார்க்கு அழித்தலையுடைய (10) என வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

வரம்பிருனை பரவா வூங்கெனை எடுத்துச்செலவினை மேலிட்டுக் கூறினமையால் வஞ்சித்துறைப் பாடாணுயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

1. அவலெறிந்தவுலக்கை: 'அவலெறி யுலக்கை'' பெரும்பாண் 226.

2. வளைக்கைமகளிர்: ''வளைக்கைக் கிணைமகள்'' சிறுபாண் 136. ''வளைக்கை மகடூஉ பெரும்பாண் 304; ''வளைக்கை விறலி'' 135: 4.

2—3. வள்ளைவயல்: ''செறுவின் வள்ளை'' புற 399: 6.

3—4. முடந்தை நெல்: ''முடங்கு புறச் செந்நெல்'' அக 303: 12.

விளைவயல்: பதிற் 40: 5; 73: 6; மதுரைக் 173; புற 15: 4; பழமொழி 353.

தடந்தாள் நாரை: ''கூறுவற் றுழந்த தடந்தா ணுரை'' பதிற் 51: 4; ''உடங்கிரை தேருந் தடந்தா ணுரை'' ''தோடமை தூவித் தடந்தா ணுரை'' நற் 91: 4; 178 2; ''தடந்தாணுரை யிருக்கு மெக்கர்'' குறுந் 349: 2; ''தண்ணுமை வெரீஇய தடந்தா ணுரை'' அக 40: 14.

**வயலில் நாரை:** *"கழனி நாரை"* **நற்** *180: 2.*

*5.* **கொழுமீன்:** *"கொழுமீன் குறைய வொதுங்கி"* **சிறுபாண்** *41; "கொழுமீன் குறைய"* **மதுரைக்** *320; "கொழுமீன் உணங்கல்" "கொழுமீன் வல்சி"* **அக** *20: 2; 110: 17.*

**கொழுமீனார்கை:** *"கொழுமீ ஞார்கைச் செழுநகர் நிறைந்த" "கொழுமீ ஞார்கைச் செழுநகர் செலீஇய"* **நற்** *127: 4; 159: 4.*

**வெண்குருகு:** **நற்** *4: 11; 54: 4; 67: 3; 183: 9; 199: 2;* **குறுந்** *113; 303; 325; 381;* **அக** *13. 23; 176: 9.*

*5—6.* **மீனார்கைய வெண்குருகு:** *"இனமீ ஞார்ந்த வெண்குருகு"* **நற்** *183: 9.*

*6.* **மகளிர் குருகோப்பல்:** *"ஓரை மகளிர் ஓதை வெரீஇயெழுந், தாரலார்கை யஞ்சிறைத் தொழுதி......உயர்ந்த போரி ளெலிநல் லூரன்"* **கலி** *75: 4-9; "நினக் கெவன் அரியமோ யாமே......படுபுள் ளோப்புதும்" "குறுந்தொடி மகளிர்......கரந்தையஞ் செறுவின் வெண்குரு கோப்பும்"* **அக** *80: 4-6; 226: 4-6.*

*7.* **அழியா விழவு:** *"அழியா விழவி னஞ்சுவரு மூதூர்"* **அக** *115: 1.*

*8.* **பண்ணமைத்து:** *"விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்து"* **மலைபடு** *2.*

*8—9.* **பதிற்** *23: 5-6.* ஒப்புமைப்பகுதி.

*10.* **வைப்பினாடு:** *"அகன்கண் வைப்பி னாடுகிழ வோனே"* **பதிற்** *59: 19;*

*11.* **விரவுவேறு கூலம்:** *"பரதவர் தந்த பல்வேறு கூலம்"* **மதுரைக்** *317.*

*11—2.* **குருதி வேட்ட மாக்கண்:** *"குருதி வேட்கை முரசு"* **மணி** *1: 30-1;*

*12.* **மயிர்புதை மாக்கண்:** *"மயிர்க்கண் முரசின்"* **நற்** *93: 11; "மயிர்க்கண் முரச முழங்க"* **பு. வெ. மா.** *171; "மயிர்க்கண் முரசொடு"* **சிலப்** *26: 196.*

*13.* **ஆரெயில் கடத்தல்:** *"உருகெழு மன்னர் ஆரெயில் கடந்து"* **புற** *392: 6;*

*12—3.* **முரசுமுழங்கப் பொருதல்:** **பதிற்** *41: 19; 43: 9; 84: 15-6;* **மதுரைக்** *732-5;* **நற்** *395: 4-5;* **ஐங்** *426; 450;* **பரி** *22: 3-4;* **அக** *246: 10-11; 251: 8-10; 354: 2-3;* **புற** *36: 11-3; 93: 1-2; 126: 19-21; 158: 1-2; 197: 5-6; 288: 4-5;* **பு. வெ. மா.** *149; 161;* **சீவக** *2246;*

**பெரும்பல் யானை:** *"தேனிறை கொள்ளு மிரும்பல் யானை"* *17: 35.*

**யானையையுடைய அரசர்:** **பதிற்** *15: 23* ஒப்புமைப் பகுதி.

**வரம்பில் தானை:** *"புலங்கெட நெரிதரும் வலம்பில் வெள்ளம்"* **பதிற்** *33: 6; "வரம்பி ருனை" "வரம்பில் படையே"* **புற** *16: 9; 22: 30.*

## 10 புகன்றவாயம்

(30) இணர்ததை ஞாழற் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளும்
அல்குறு கான லோங்குமண லடைகரை
தாழடும்பு மலைந்த புணரிவளை ஞரல
இலங்குநீர் முத்தமொடு வார்துகி ரெடுக்கும்
தண்கடற் படப்பை மென்பா லனவும்
காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமா னூனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புல வைப்பும்
கால மன்றியுங் கரும்பறுத் தொழியா
தரிகா லவித்துப் பலபூ விழவிற்
றேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்
முழவிமிழ் மூதூர் விழவுக்காணூஉப் பெயரும்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்
ஏன லுழவர் வரகுமீ திட்ட
கான்மிகு குளவிய வன்புசே ரிருக்கை
மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
அரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்
டொண்ணுதன் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்
பணைகெழு வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
கடலவுங் காட்டவு மரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கு மந்திரத்

# 30 ஆம் பாட்டு

தருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
எறும்பு மூசா விறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
ஓடாப் பூட்கை யோண்பொறிக் கழற்கால்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநில னதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்
கடுஞ்சின வேந்தேநின் றழங்குரன் முரசே.

**துறை-பெருஞ்சோற்றுநிலை.**
**வண்ணமும் தூக்கும் அது.**
**பெயர்-புகன்றவாயம் (19).**

**ப—ரை. 1—8.** *இணர் ததை ஞாழல் கரை கெழு பெருதுறை - பூங்கொத்து நெருங்கின ஞாழலையுடைய கரைபொருந்திய பெரிய துறையையுடைய, மணி கலத்தன்ன-நீலமணியாலே செய்த பாத்திரம் போன்ற, மா இதழ் நெய்தல்-கரிய இதழ்களையுடைய நெய்தலினது, பசு அடை பனி கழி துழைஇ-பசிய இலையினையுடைய குளிர்ந்த கழியை மீன்பிடித்துண்ணும் பொருட்டுத் துழாவி, புன்னை வால் இணர் படுசினை-புன்னையின் வெள்ளிய பூங்கொத்துகளையுடைய தாழ்ந்த சினைகளில், குருகு இறைகொள்ளும்-குருகுகள் தங்குதல் கொள்ளும், அல்குறு கானல் ஓங்குமணல் அடைகரை-மக்கள் தங்குதற்குரிய கடற்கரைச் சோலையையுடைய உயர்ந்த மணலையுடைய அடைகரைக்கண்ணே, தாழ் அடும்பு மலைந்த புணரி வளை ஞரல-தாழ்ந்த அடப்பங்கொடியுடனே மோதிய திரையாலே துவண்ட வருத்தத்தாலே சங்குகள் ஈனுகைக்கு மெய் வருந்திக் கதற, இலங்கு நீர் முத்தமொடு வார் துகிர் எடுக்கும்-வளை நரலக் கேட்டோர் விளங்குகின்ற ஒளியையுடைய முத்துடனே நீண்ட பவளத்தையும் எடுக்கும், தண் கடல் படப்பை மென்பாலனவும்-குளிர்ந்த கடற்பக்கத்தினையுடைய நெய்தனிலத்தூர்களும்,*

**9—13.** *காந்தள் அம் கண்ணி கொலை வில் வேட்டுவர் - காந்தளினது அழகிய கண்ணியினையும் கொலைத்தொழிலையுடைய வில்லினையுமுடைய வேட்டுவர், செங்கோடு ஆமான் ஊனொடு-செவ்விய கொம்பினையுடைய ஆமானினது இறைச்சியொடு, காட்ட மதன் உடை வேழத்து வெண்கோடு கொண்டு -காட்டிலுள்ள வலியினையுடைய யானையினது வெள்ளிய கொம்பினையும் கொண்டுசென்று, பொன்னுடை நியமத்து பிழி நொடை கொடுக்கும்-செல்வத்தையுடைய கடைத்தெருவிலே கள்ளின் விலையாகக் கொடுக்கும், குன்று தலைமணந்த புன் புல வைப்பும் - குன்றுகள் இடந்தொறுமுள்ள குறிஞ்சி நிலத்துவூர்களும்,*

*14—21.* காலம் அன்றியும் கரும்பு அறுத்து ஒழியாது - அறுக்கும் காலமன்றாகவும் கரும்பு அறுத்து முடியாமல், அரிகால் அவித்து - அரிகாற் சூட்டை அவியச்செய்து, பல பூ விழவின் - பல பூக்களால் கடவுளை வழிபடும் விழாவையுடைய, தேன் பாய் மருதம் முதல் பட கொன்று - தேன் பரக்கும் மருத மரத்தின் அடி வீழும்படி மோதி அழித்து, வெள் தலை செம்புனல் பரந்து - வெள்ளிய தலையையுடைய சிவந்த புது வெள்ளம் பரக்க, வாய் மிகுக்கும் - நிறைந்து விஞ்சி வழியும், பல சூழ் பதப்பர் பரிய - பல வைக்கோற் புரியாலும் சூழப்பட்ட மணற் கோட்டை கரைந்து கெட, சிறை கொள் பூசலில் புகன்ற ஆயம் - அப்பெரு வெள்ளத்தினை அணைசெய்து முடித்த விருப்பத்தையுடைய மக்கட் டொகுதி, மூதூர் முழவு இமிழ் விழவு காணூஉ பெயரும் - பழைய ஊரிடத்தே நிகழும் முழவு முழங்கும் திருவிழாவினைக் கண்டு மீண்டு செல்லும், செழு பல் வைப்பின் பழன பாலும் - வளவிய பல ஊர்களையுடைய மருதநிலப் பகுதியும்,

*22—25.* ஏனல் உழவர் - தினைப்புனத்தை உழுது பயிரிடும் குன்றவர், வரகு மீது இட்ட - வரகு வைக்கோலாலே வேய்ந்த, கான் மிகு குளவிய - நறு நாற்ற மிக்க காட்டு மல்லிகையையுடைய, வன்பு சேர் இருக்கை - வன்மை பொருந்திய இருக்கைக்களில், மென் தினை நுவணை முறை முறை பகுக்கும் - மெல்லிய தினைப் பிண்டியை விருந்தினர்க்கு முறை முறையாகப் பகுத்துண்ணும், புன் புலம் தழீஇய - புல்லிய நிலங்களைத் தழுவிய, புறவு அணி வைப்பும் - காடு சூழ்ந்த முல்லை நிலத்தூர்களும்,

*26—29.* பல் பூ செம்மல் காடு - பலவகைப் பூக்களின் வாடலையுடைய காடு, பயம் மாறி - பயன்படுந் தன்மை திரிந்து, அரக்கத்து அன்ன நுண் மணல் கோடு கொண்டு - செவ்வரக்கினை ஒத்த நுண்ணிய மணலையுடைய கோட்டைத் தன்னிடத்தே கொண்டு, ஒள் நுதல் மகளிர் கழலொடு மறுகும் - ஒள்ளிய நுதலினையுடைய மகளிர் கழலையுடயை தலைமகனோடு உடன் போம், விண் உயர்ந்து ஓங்கிய கடற்றவும் - மரங்கள் விண்ணிலே உயர்ந்து வளர்ந்த காடுகளையுடைய முல்லை நிலத்தூர்களும், பிறவும் - பல நிலப் பண்புடைய இடங்களும் ஆகிய நிலங்களிலுள்ள மக்களும்,

*30—9.* பணை கெழு வேந்தரும் வேளிரும் - வெற்றி முரசு பொருந்தின முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும், ஒன்று மொழிந்து - தம்மில் ஒத்த வார்த்தையைச் சொல்லி, கடலவும் காட்டவும் அரண் வலியார் நடுங்க, - கடலிலுள்ளனவும் காட்டிலுள்ளனவுமாகிய அரண்களால் வலிபெறாராய் நடுங்கும்படி, முரண்மிகு கடுகுரல் விசும்பு அடைபு அதிர - மாறுபாட்டை மிகுவிக்கின்ற கடிய முழக்கம் விசும்படைந்து அதிரும்படி, கடுசினம் கடாஅய் - கடிய சினத்தைச் செலுத்தி, முழங்கு மந்திரத்து - முழங்க உச்சரிக்கப்படும் மந்திரத்தால், அரு திறல் மரபின் கடவுள் பேணியர் - அரிய திறல் பொருந்திய முறைமையினையுடைய முரசுறை கடவுளை வழிபடும் பொருட்டு, கருகண் பேய் மகள் கைபுடையூ நடுங்க - கொடிய கண்ணையுடைய பேயாகிய மகள் கைகளைப் புடைத்து நடுங்க, உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறல் பிண்டம் -

முரசுறை கடவுளை வழிபடுவோன் ஏந்திய பெறுதற்கரிய பிண்டத்தினையும், எறும்பு மூசா இறும்பூது மரபின்–எறும்பு மொய்க்காத வியப்பைத் தரும் முறைமையினையுடைய, நெய்த்தோர் தூய நிறை மகிழ் இரு பலி–குருதியைத் தூவிய நிறைந்த கள்ளினையுடைய பெரிய பலியினையும், கரு கண் காக்கையொடு பருந்து இருந்து ஆர–கரிய கண்களையுடைய காக்கையும் பருந்தும் உண்ணு நிற்க,

40—44 ஓடா பூட்கை–புறங்கொடாத மேற்கோளினையும், ஒள் பொறி கழல் கால்–தாங்கள் செய்த அரிய போர்த்தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழலணிந்த காலினையுமுடைய, பெரு சமம் ததைந்த–பகைவர் செய்யும் பெரிய போர் சிதையும்படி செய்யும், செரு புகல் மறவர்–போரை விரும்பும் மறவரது, உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு – உருமுக் குரல்போலும் நிலன் அதிர்க்கும் குரலோடு, கொளை புணர்ந்து–கோட்பாடு பொருந்தி, பெரு சோறு உகுத்தற்கு எறியும்–போர் வீரர்க்கு மிக்க சோற்றைக் கொடுத்தற்கு எறியப்படா நின்றது, கடு சின வேந்தே–மிக்க சினத்தையுடைய வேந்தே, நின் தழங்கு குரல் முரசு – நின்றொலிக்கின்ற குரலினையுடைய வீர முரசு.

**முடிபு**: மென்பாலனவும் புன்புல வைப்பும் பழனப்பாலும் புறவணி வைப்பும் கடற்றவுமாகிய ஐவகை நிலத்து மக்களும் பிறவும் அந்நிலத்து வேந்தரும் வேளிரும் தங்களிலே ஒன்று மொழிந்து அரண்வலியாராய் நடுங்கா நிற்கும்படி கடுங்குரல் விசும்படைந்து அதிரும்படி கடுஞ்சினத்தைக் கடாவிப், பேய்மகள் கைபுடையூஉ நடுங்க உயர்ந்தோன் ஏந்திய பிண்டத்தினையும், எறும்பு மூசா மரபின் நெய்த்தோர் தூய நிறைமகிழ் இரும்பலியினையும் கருங்கட் காக்கையொடு பருந்திருந்து ஆரா நிற்கச் செருப்புகன் மறவரது குரலோடே கொளை புணர்ந்து பெருஞ்சோறு உகுத்தற்கு எறியப்படா நின்றது கடுஞ்சின வேந்தே நின் முரசு என்க.

**ஆ—ரை.** 1—8. பூங்கொத்து நெருங்கிக் கிடக்கும் ஞாழலாதலின் 'இணர் ததை ஞாழல்' என்றார். ததைதல்–நெருங்குதல். 'இணர் ததை தண் காவின்–பூங்கொத்து நெருங்கின குளிர்ந்த நிழலிலே' என **நச்சினார்க்கினியர்** பொருளுரைத்தமை காண்க. (கலி 69: 16 உரை) இனி, இணர் ததை ஞாழல் என்பதற்கு விளையாட்டு மகளிர்பூ முதலியவற்றைக் கோடலாற் பூங்கொத்துச் சிதைவுபட்டுக் கிடக்கின்ற ஞாழல் எனினுமாம். "ததைந்த காஞ்சி" (பதிற் 23: 19) என்பது ஈண்டு அறியற்பாலது. பெருந்துறையின்கரைக்கண் ஞாழல் மிகுதியாக நிற்றலின், 'ஞாழற் கரைகெழு பெருந்துறை' என்றார். பெருந்துறையையுடைய (1) தண்கடற் படப்பை (8) எனக் கூட்டுக.

"கமழுந் தாழைக் கானலம் பெருந்துறைத்
தண்கடற் படப்பை" **பதிற்** 55: 5-6.

எனப் பிறரும் கூறுதல் காண்க.

மணிக்கலத்தன்ன (2) கழி (3) எனக் கூட்டி, நெய்தற் பூவின் கருமையாலும் அதன் பாசடைக் கருமையாலும் மணிக்கலம் போன்ற கழியெனவுரைக்க.

"மணி மரு ளிருங்கழி" (கலி 125: 5) 'நீலமணி போலும் கழி' (சிறுபாண் 153 நச்) என வருவன காண்க. கருநெய்தலாதலின் 'மாயிதழ் நெய்தல்' என்றார். "இருங்கழி, மணியேர் நெய்தன் மாமலர்" (நற் 78: 1-2) 'நெய்தல் கருமை விரிந்தன—நெய்தல் கருமைதான் வடிவுகொண்டதென்னும்படி விரிந்தன' (மலைபடு 126 நச்) என வருவன காண்க. கழி - உப்பங் கழி. அது பாசடையுடைமையாலும் கடற்கரைச்சோலையை யடுத்திருத்தலினாலும் குளிர்ந்திருத்தலின் 'பனிக்கழி' என்றார். 'இனமீ னிருங்கழி' யாதலின் குருகுகள் அதிலுள்ள மீன்களைப் பற்றி உண்டற்குக் கழியிடத்தைத் துழாவிப் புன்னையின் வெள்ளிய பூங்கொத்துக்களையுடைய தாழ்ந்த சினைகளில் தங்குதலின், 'பனிக்கழி துழைஇப், புன்னை வாலிணர்ப் படுசினை குருகிறை கொள்ளும்' என்றார்.

> "கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குருகு
> அடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
> உடைதிரை யொலியிற் றுஞ்சுந் துறைவ" குறுந் 303: 1-3.
>
> "புலவுநா றிருங்கழி துழைஇப் பலவுடன்
> புள்ளிறை கொண்ட முள்ளுடை நெடுங்கோட்டுத்
> தாழை மணந்து ஞாழலொடு கெழீஇ" அக 180: 10-2.

என வருவன ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. துழைஇ இறைகொள்ளும் என முடிக்க. புன்னை வெண்ணிற மலர்களைக் கொத்தாகப் பூத்தல்.

> "புன்னை, நீலத் தன்ன பாசிலை யகந்தொறும்
> வெள்ளி யன்ன விளங்கிணர் நாப்பண்" நற் 249 1-3.

என்பதனாலுமறியப்படும். அடை கரைக்கணின்ற புன்னையின் கொம்பு நிலந் தோயுமாறு தாழ்ந்திருத்தலின் 'புன்னைப் படுசினை' என்றார். "குவவு மணலடைகரை, நின்ற புன்னை நிலந்தோய் படுசினை" "ஓங்கல் வெண்மணற் றாழ்ந்த புன்னை" (குறுந் 236, 311) என வருவன காண்க. படுசினை - பெரிய கொம்புகள் எனினுமமையும். கழி துழைஇ இறை கொள்ளும் என்றதனால் குருகு என்றது கழியைத் துழாவும் காக்கை நாரை அன்னம் முதலிய பறவைகளை.

> "சேயிறா வெறிந்த சிறுவெண் காக்கை
> பாயிரும் பனிக்கழி துழைஇ" நற் 31: 2-3.
>
> "இருங்கழி துழைஇய வீர்ம்புற நாரை" நற் 127: 1.
>
> "நெடுங்கழி துழைஇய குறுங்கா லன்னம்" அக 320: 8.

எனப் பிறண்டும் வருவன காண்க. இவை புன்னையில் தங்குதல்,

> "பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
> கருங்கோட்டுப் புன்னை தங்குந் துறைவற்கு" ஐங் 161.
>
> "புன்னை, யலங்குசினை யிருந்த அஞ்சிறை நாரை" அக 296: 1-2.
>
> "கன்னியம் புன்னைமே லன்னங்காள்" யாப். விளக்க 60மேற்.

என வருவனவற்றிற் காண்க. இனிக் குருகு என்பதற்கு குருகென்னும் பறவை என்று உரைப்பினுமமையும். 'குருகு நரல-குருகென்னும் பறவைகூப்பிடும்படி'

என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. (மதுரைக் 268 உரை) இறை கொள்ளும் அடைகரை என்க. "குருகு அடைகரைத் தாழைக் குழீஇ" (குறுந் 303) எனப் பிறருங் கூறுதல் காண்க.

அல்குறு கானல் – மக்கள் தங்குதற்குரிய கானல். "தண்கடற் சேர்ப்ப.....புன்னையங் கானற் பகல்வந் தீமே" (அக 80: 4-13) "புன்னையங்கான விருந்தேமாப் பொய்த்தெம்மைச் சொன்னலங் கூறி நலமுண்ட சேர்ப்பனை" (கைந்நிலை 54) 'ஒரு ஞான்று புன்னையங் கானலுள் ஆம்; ஒரு ஞான்று கைதையங் கானலுள் ஆம் நெய்தனிலமாயின்' (இறை சூ. 20 உரை) என வருவன காண்க. இனிப் பறவை முதலியன தங்கும் கானல் எனினுமமையும். 'அல்குறு' என்றதனால் கானல் செறிவுடைத்தாதல் அறியப்படும். கானலையுடைய அடைகரை என்க. 'மணல் உயர்ந்த அடைகரை' யாதலின் "ஓங்குமணலடைகரை" என்றார். "குன்றத் தன்ன குவவுமணலடைகரை" (குறுந் 236: 3) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஓங்குமணல் – கடலூதையால் உயர்ந்த மணல். "பெருங்கடற் பரப்பில்.....ஊதையீட்டிய வுயர்மணலடைகரை" (அக 260: 1-9) என்றார் பிறரும். தாழ் அடும்பு – கடற்றிரையினாலும் ஊதையினாலும் கொண்டுவந்திட்ட மணலிற் தாழ்ந்த அடும்பு. கரையில் தங்கிய அடும்புமாம். தாழ்தல்-தங்குதல். இப்பொருட்டாதல். "நெறிதாழிருங் கூந்தல்" (கலி 97: 28) என்புழிக் காண்க. கரையில் தாழ்ந்த அடும்பில் அலை வந்து மோதுதலின் 'தாழடும்பு மலைந்த புணரி' என்றார். அடும்பு–அடப்பங் கொடி. மலைதல்–பொருதல்

புணரி வளை ஞரலவென்றது கடல்கொண்டுவந்த சூற்சங்கு திரையிலே துவண்ட வருத்தத்தாலே ஈனுகைக்கு மெய்வருந்திக் கதற என்றவாறு.

"மோது திரையால் மொத்துண்டு போந்தசைந்த
முரல்வாய்ச் சங்கம்" சிலப் 7-5.

"பொங்கு திரை யுந்தைப்பப் போந்தொழிந்த-சங்கு
நரன்றுயிர்த்த நித்திலம்" திணைநூற் 49.

"புரிவளை யலறிப் பூசலிட் டீன்ற பொழிகதிர் நித்திலம்" சீவக 2103.

என வருவன காண்க. ஞரல, நரல; நரல–கதற அக 13: 23 பழையவுரை. சங்கு நரலும் ஒலி பாணர் விளரிசை போன்றதென்பது.

"விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும்" நற் 172: 7-8.

என்பதனாலறிக.

முத்தமொடு வார்துகிர் எடுக்குமென்றது அடைகரைக்கண் நின்றோரில் வளை நரலக் கேட்டார் அம்முத்தெடுக்கவென்று வந்து முத்தையன்றி அதனோடு கடற்றிரையால் ஒதுக்கப்பட்ட பவளத்தையும் எடுக்குமென்றவாறு. கடல் முத்தம் பிற முத்துக்களிலும் மிகுந்த ஒளியுடைமையின் 'இலங்குநீர் முத்தம்' என்றார்.

"முழங்கு கடல் தந்த விளங்குகதிர் முத்தம்" மதுரைக் 315.

"வலம்புரி யுழுத வார்மண லடைகரை
யிலங்குகதிர் முத்த மிருள்கெட விமைக்கும்" **ஐங் 193.**

"இவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தம்" **திணைமொழிஐம் 45.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. நீர்-நீர்மை; ஒளி. "நெடுநீர் வார்குழை" (நெடுநல் 139) என்றார் பிறரும். 'இலங்குநீர்' என்றதனைத் துகிருக்கும் அடையாக்கி 'விளங்குகின்ற ஒளியையுடைய பவளம்' என உரைப்பினும் அமையும். "இலங்கொளிப் பவளமும்" என்றார் கதையினும். (பெருங் (2) 4: 114) முத்தைப்போலத் திரட்சியின்றிப் பவளம் நீட்சியுடைமையால் 'வார்துகிர்' என்றார். வார்–நீட்சி. "வார்தல் போகல் லொழுகல் மூன்றும், நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள்" என்பது **தொல்காப்பியம்.** (உரி 21) துகிர் - பவளம். **பிங் 6: 114.** படப்பை - பக்கம். *நெய்தலும் மருதமும் மென்புலம் எனப்படுதலின் நெய்தலைத் 'தண்கடற் படப்பை மென்பால்' என்றார். இதனால் **நெய்தல் நிலம்** கூறினார்.

*9—13.* வேட்டுவர் ஆமான் ஊனொடு வேழத்துக் கோட்டை நியமத்துப் பிழியின் நொடையாகக் கொடுக்கும் குன்றுதலை மணந்த புன்புல வைப்பு என்க.

காந்தளங் கண்ணியையும் கொலை வில்லையுமுடைய வேட்டுவர் என்க. "கொலைவேற் கோடற் கண்ணிக் குறவர்" என்றார் **புறத்தினும். (புற 157: 7).** காந்தள் என்றது செங்காந்தளை. "சுடர்ப்பூங் காந்தள். (முருகு 43) "மலைச் செங் காந்தள்" (**நற் 173**) என வருவன காண்க. காந்தள் குறிஞ்சி நிலத்துப் பூவாகலின் அந்நிலத்து வேட்டுவர் அப்பூவாலான கண்ணியை அணிந்தனர். முல்லைநிலத்துக் கோவலர் அந்நிலத்துப் பூவாகிய முல்லைக் கண்ணியை அணிதலை "முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்" (**பதிற் 21: 20**) எனக் கூறுதல் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. அம், சாரியையுமாம். கொலை வில்–விலங்குகள் முதலியவற்றைக் கொல்லும் வில். ஆமான் ஊனையும் வேழவெண் கோட்டையும் வேட்டுவர் வில்லினாற் கொன்று பெற்றமைதோன்றக் 'கொலை வில் வேட்டுவர்' என்றார்.

"இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்திக் கோல்தெரிந்து
வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி
இகலடு முன்பின் வெண்கோடு கொண்டு" **அக 172: 6-9.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. வலிய விலங்குகளையும் எளிதினில் வேட்டையாடும் வேட்டுவரின் ஆற்றல் தோன்றச் 'செங்கோட் டாமான்' என்றும் 'மதனுடை வேழம்' என்றும் கூறினார். வேழத்தினைக் 'காட்ட வேழம்' என்று விதந்து கூறியதனால் ஆமானை வேட்டுவர் குன்றத்து ஆமான் எனக் கொள்க. "ஆமான் சுரக்கு மணிமலை" (**ஐந். எழு 4**) "ஆமா வுகளு மணிவரை" (**பழமொழி 282**) என வருவன காண்க. ஆமா கோடுடைய தென்பது, "கொடுங்கோட் டாமான்" (**புற 323: 11**) என்பதனாலுமறிக. வேழத்து வெண்கோடு என்பதற்கு ஏற்ப ஆமான் ஊன் என்பதற்கு 'ஆமான் செவ்வூன்' எனக்

* 'மென்புலம் - மருதமும் நெய்தலும்' புற 42: 17-8 உரை.

கொள்க. ஓடு, எண்ணொடு. மதன், மனவெழுச்சியுமாம். வெண்கோடு, இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர். "வெண்டிங்கள்" (புற 38) என்பதுபோல. வேட்டுவர் § ஆமான் ஊனையும் வேழவெண் கோட்டையும் தாம் பெறும் கள்ளின் விலையாகக் கொடுத்தலின் 'ஆமா னூனொடு வேழத்து வெண்கோடு கொண்டு பிழிநொடை கொடுக்கும்' என்றார். யானைக் கோட்டைக் கள்ளின் விலையாகக் கொடுத்தலை,

"வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கு மாவணம் புக்குடன்
அருங்க ணொடைமை தீர்ந்தபின்" பதிற் 68: 9–11.

"அரிய லாட்டிய ரல்குமனை வரைப்பின்
மகிழ்நொடை பெறாஅ ராகி நனைகவுட்
கானயானை வெண்கோடு சுட்டி" அக 245: 9–11.

என்பவற்றானு மறிக. கொண்டு என்பதற்குக் கொண்டு சென்று என ஒரு சொல் வருவித்து அதனைக் கொடுக்கும் என்னும் வினையொடு முடிக்க. இனி, ஊனொடு வெண் கோட்டைப் பிழிகொண்டு நொடை கொடுக்கும் என மாறிக் கூட்டி உரைப்பினுமமையும் நிதியந் துஞ்சும் நியமமாகலின் 'பொன்னுடை நியமம்' என்றார். அது நாட்டு மூதூர்க்கணுள்ளது. "இரு பெருநியமத்து....பழ விறன் மூதூர்" (மலைபடு 480-7) என வருதல் காண்க. நியமம் - அங்காடித் தெரு. ஆங்குக் கட்கடையிருத்தலின் 'நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்' என்றார். "கட்கொடி நுடங்கு மாவணம்" (பதிற் 68: 10) எனவும், நெடுங் கொடி நுடங்கு நறவுமலி மறுகில்" (அக 126 10) எனவும் வருவன காண்க.

பிளி–கள். "பிணர்ப் பெண்ணைப் பிழி மாந்தியும்" பட்டினப் 89. நொடை–விலை. பெரும்பாண் 141 நச். கொடுக்கும் (12) வைப்பு (13) என்க. தலை மணந்த – இடந்தொறுமுள்ள எனினுமாம். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாகலின் 'குன்றுதலை மணந்த புன்புல வைப்பு' என்றார். இதனாற் குறிஞ்சிநிலங்கூறினார்.

14—21. காலமன்றியும் கரும்பறுத் தொழியாது அரிகாலவித்துப் பலபூ விழவின் மருதமுதல்படக் கொன்று வெண்டலைச் செம்புனல் பரந்து வாய் மிகுக்கும் பதப்பர் பரிய அவ்வெள்ளத்தினைச் சிறைசெய்து முடித்த ஆயம் மூதூர் விழாவைக் கண்டு பெயரும் செழும்பல் வைப்பிற் பழனப்பால் என்க.

வெண்டலைச் செம்புனல் பரந்து வாய்மிகுக்கும் நீர்வளத்தால் கழனிக்கண் காலமன்றாகவும் முற்றி விளையும் கரும்பு அறுத்து ஒழியாமையின் 'காலமன்றியுங் கரும்பறுத் தொழியாது' என்றார். "காலமன்றியு மரம்

§ ஒரு பொருளின் விலையாகப் பிறபொருளைக் கொடுக்கும் வழக்கம்: "நாளாத் தந்து நறவுநொடை தொலைச்சி" "நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள், எருமை நல்லான் கருநாகு பெறூஉம்" (பெரும்பாண் 141; 164-5) "பாண்மகள், இனமீன் சொரிந்து பன்னெற் பெறூஉம் யாணரூர" (ஐங் 49) 'பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி, நாரரி நறவுமனை மகிழ்நொடைக் கூட்டும், பேரிசைக் கொற்கை" (அக 296: 8-10) என வருபவற்றாலுமறிக.

பயன் கொடுத்தலின்'' (மலைபடு 134) ''காலமன்றியு மரம் பயன் பகரும், யாண ரறாஅ வியன்மலை'' (புற 116: 3-4) என வருவன ஈண்டு அறியற்பாலன. காலமன்றியும் என்றது எக்காலமும் என்றபடி. ''காலமன்றியும், கூலங் குவித்த கூல வீதியும்'' (சிலப் 14: 201-1) என்புழிக் காலமன்றியும் - எக்காலமும் என அடியார்க்குநல்லார் உரைத்தலுங் காண்க. ஒழியாது என்றதனை ஒழியாமல் எனத் திரித்துப் புனல் பரந்து (17) என்னும் வினையொடு முடிக்க. செம்புனல் வயலிற் பரந்து நெல்லின் அரிகாற் சூட்டை அவியச் செய்தலின் 'அரிகால் அவித்து' என்றார்.

''அகவய விளைநெல் அரிகாற் சூடு
தொகுபுனல் பரந்தெனத் துடிபட வொருசார்'' பரி 7-27-8.

என வருதல் காண்க. அரிகால் என்பதற்கு கரும்பின் அரிகால் எனவுரைத்தல் அமையாதோவெனின், கரும்பு அறுக்கப்படுதலும் நெல் அரியப்படுதலு முடைமையின் அமையாதென்க. ''அறைக்கரும்பி னரி நெல்லின்''(பொருந193) எனச் சான்றோர் கூறுதல் காண்க.

பலபூ விழவு என்றது தாமரை ஆம்பல் முதலிய பலபூக்களால் தெய்வத்தை வழிபடும் விழவு என்றவாறு. நெல்லினுக்கு இன்றியமையாத நீரைத் தரும் எழிலிக்கும் மருதநிலத்திற்கும் தெய்வம் இந்திரனுதலாலும், மருதநிலத்தே இந்திரனுக்கு விழாச் செய்தல் 'மருதநிலத்திற்குத் † தெய்வமாக...... இமையோர்க்கும் இன்குரலெழிலிக்கும் இறைவனாகிய இந்திரனை ஆண்டையோர் விழவு செய்து அழைத்தலின்' (தொல். அக சூ 5 நச்) என்பதனாலும் அவ்விழாவைப் பூக்களைக்கொண்டு செய்தல்'' ''இந்திர விழவிற் பூவி னன்ன'' (ஐங் 62) என்பதனாலும் அறியப்படுதலின் பல்பூ விழவு இந்திரனைக் குறித்துச் செய்யப்படும் விழவு என்பது தெளியப்படும். 'கரும்புஅறுத்து ஒழியாது அரிகாலவித்துப் பலபூ விழவின்' என்பதற்கு 'கரும்பு அறுத்து ஒழியாமையால் அரிதாளை அழித்து அவ்விடத்துத் தம் தெய்வத்திற் செய்யும் பலபூக்களையுடைய விழாவினையும்' என்று உரைப்பாருமுளர். விழாவின் (15) வைப்பு (21) என முடிக்க.

நீர்க் குறைவின்மையால் நிரம்பப் பூத்துத் தேர் பரக்கும் மருதாகலின் 'தேம்பாய் மருது' என்றார். மருது என்றது யாற்றின் கரைக்கண் நிற்கும் மருதினை. ''கரைசேர் மருதம்'' (ஐங் 74) என்றார் பிறரும். கடுத்து வரும் செம்புனல் அதனை அடியோடு வீழும்படி மோதுதலின் 'மருத முதல்படக் கொன்று' என்றார்.

''நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய்
விடியல் வந்த பெருநீர்க் காவிரி'' அக 226: 9-10.

எனப் பிறரும் கூறுதல் காண்க. யாற்றுப் புதுப்புனல் செந்நிறமுடைத்தாய்ப் பொங்கு நுரை சுமந்து வருதலின் 'வெண்டலைச் செம்புனல்' என்றார். ''வரை

† இந்திரனைத் தெய்வம் என்றல் ''வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்தமை, தெய்வத்திற் றேற்றித் தெளிக்கு'' (கலி 98: 31-2) என்பதனாலும் 'இந்நிலத்திற்கு உரிய தெய்வம் இந்திரன்' என்ற இப்பகுதி (நச்) விசேடவுரையினாலும் அறிக.

புரை யுருவி னுரைபல சுமந்து......வையை வரவு'' "நெய்குடை தயிரி னுரை யொடும் பிறவொடும், எவ்வயி னுனு மீதுமீ திழியும்'' (பரி 7: 41-50; 16: 34-5) என் வருவன காண்க. செம்புனல் என்றது செம்புனலையுடைய யாற்றினை. "தெண்கடன் முன்னிய வெண்டலைச் செம்புனல்'' (பதிற் 87: 3) என்புழிப் போல.

புனல் பரந்து என்றதனைப் பரக்கவெனத் திரிக்க. வாய்மிகுக்கும் பதப்பர் எனக் கூட்டிப் புனல் பரக்கையாலே நீர் நிறைந்து வழியும் பதப்பர் என வுரைக்க. "நிவந்து கரையிழிதரு நனந்தலைப் பேரியாற்று'' (பதிற் 28: 10) என்பது ஈண்டறியற்பாலது. பதப்பர்-வெள்ளத்தைத் தடுக்க இடும் மணற் கோட்டை. அதுதான் நீரால் எளிதிற் கரையாதவாறு பல வைக்கோற் புரியாலும் சூழப்பட்டமையின் 'பலசூழ் பதப்பர்' என்றார். அது மிக்கு வழியும் நீராற் கரைதலின் 'பதப்பர் பரிய' என்றார். பரிய-கெட. "பந்தம் பரியப் பரிமேற் கொண்டான்'' திருவாசகம். (திரு அம்மானை 3) அவித்து (15) கொன்று (16) பரக்க (17) வாய் மிகுக்கும் (17) வெள்ளம் (18) என்க.

புகன்ற ஆயமென்றது முன்பு மணலணைக்கு நில்லாத பெருவெள்ளத்தினை அணைசெய்து முடித்த விருப்பத்தையுடைய ஆயமென்றவாறு. இச் சிறப்புப்பற்றி இச்செய்யுளுக்குப் **புகன்ற வாயம்** என்று பெயராயிற்று.

ஆயம்-மக்கள் தொகுதி. "கலிகொ ளாய மலிபுதொகு பெடுத்த, வஞ் சுடர் நெடுங்கொடி'' அக 11: 4 5. முழவிமிழ் விழவு, மூதூர் விழவு எனத் தனித்தனி கூட்டுக. சேய்மைக் கண்ணுள்ளாரும் கேட்கும்படி முழங்குதலின் முழவினை எடுத்துக் கூறினர்.

"முழவிமிழ் மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகில்'' மதுரைக் 327-8.

"முழவுகண் புலரா விழவுடை யாங்கண்'' நற் 220: 6.

"முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்'' அக 206-11.

எனப் பிறரும் அதனை எடுத்துக் கூறுதல் காண்க. முழவிமிழ்தல் கூறினுராயினும் விழாவின்கண் குழல் யாழ் முரசு முதலியன ஒலித்தலுங் கொள்க. பழனப் பாலினுள்ள மூதூரின் செல்வச் சிறப்புத் தோன்ற விழா நிகழ்தலை எடுத்துக் கூறினர். மக்கள் சென்று விழாவைக் கண்டு மகிழ்தல்,

"ஊரே, ஒலிவரு சும்மையொடு மலிதொகு பீண்டிக்
கலிகெழு மறுகின் விழவய ரும்மே'' நற் 348: 3-4.

"பழவிறன் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுட னயர வருகதில் லம்ம'' அக 141: 10-11.

என்பவற்றாலுமறிக. பெயரும் - தம் துஞ்சுபதிக்குப் பெயரும். "அலங்கற் செல்வன் சேவடி பரவி, நெஞ்சுமலி யுவகையர் துஞ்சு பதிப் பெயர'' (பதிற் 31: 10-11) என வருதல் காண்க. மருதநிலம் வளவிய பல ஊர்களைத் தன்னகத்துக் கொண்டமையின் "செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்'' என்றார். பழனம் - மருத நிலம். மலைபடு 454 நச். இதனால் மருதநிலம் கூறினர்.

22—5 ஏனலுழவர் வன்புசேர் இருக்கைக்கண் தினை நுவணையை விருந்தினர்க்குப் பகுத்துண்ணும் புன்புலந் தழீஇய புறவணி வைப்பு என்க.

முல்லை நிலத்தவர் தினைப்புனத்தை உழுது பைந்தினையை விதைத்துப் பயன்கொள்பவராதலின் 'ஏனலுழவர்' என்றார். முல்லை நிலத்தே தினை விளைவித்தல்,

"சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகின் இருங்குரல் புலர
..........................................
முல்லை சான்ற புறணிவந் தொருசார்" (மதுரைக் 271-275)

எனவும், 'மகளிர், கிளிகடி மேவலர் புறவுதொறு நுவலப், பல்பய னிலைஇய கடறு' என்பதற்குக் 'கிளிகடி மகளிர்......கிளிகடி தொழிலை மேவுதலையுடையராய்ப் **புறவின் புனங்கடோறும்** கிளிகடி பாடலை நுவலப் பல பயன்களும் நிலைபெற்ற **முல்லைநிலம்**' (**பதிற் 78: 5-7 பழையவுரை**) எனவும் வருவனவற்றாலுமறியப்படும். ஏனல்-தினைப்புனம். (**கலி 39-7** நச்) உழவர் பகுர்க்கும் எனக் கூட்டுக.

வரகுமீதிட்ட இருக்கை, கான்மிகு குளவிய இருக்கை, வன்புசேர் இருக்கை எனத் தனித்தனி கூட்டுக. புன்புலத்தே வரகு விளைந்தலின் அதன் வைக்கோலால் வேய்ந்த இருக்கையை 'வரகுமீதிட்ட இருக்கை' என்றார். குடியிருப்புக்களை வரகு வைக்கோலால் வேய்தல்,

"பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்" (**பெரும்பாண் 190-1**)

என்பதனாலும், 'கருவை வேய்ந்த கவின்குடி' என்பதற்கு 'வரகு வைக்கோலாலே வேய்ந்த அழகினையுடைய குடியிருப்பு' என்னும் உரையானும் அறியலாம். கான்-நறுநாற்றம். **திருக்கோவை 126** பேர். மிகுந்த நறுநாற்றமுடைமையாற் காட்டு முல்லை களையப்படாது இருக்கைக்கண் வளருமாறு தோன்றக் குளவியைக் 'கான்மிகு குளவி' என்றார். இனிக் கடுப்புடைப் பறவையாகிய குளவியை நீக்குதற்குக் 'கான்மிகு குளவி' என்றார் எனினுமமையும். குளவி-காட்டு மல்லிகை. **முருகு 191** நச். விலங்குகள் முதலியவற்றினின்று காத்தற்கேற்ற வலிசேர்ந்த இருக்கையாதலின் 'வன்புசேர் இருக்கை' என்றார். இனி, வலிய நாரினாற் கழிகள் சேர்ந்த இருக்கையாதல் பற்றி அவ்வாறுரைத்தார் எனினுமமையும்.

"அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பை" **மலைபடு 438-9.**

என வருதல் காண்க. இருக்கை-குடியிருப்பு. **பெரும்பாண் 242** நச்.

ஏனலுழவர் தம் இருக்கைக்கண் வருவார்க்கெல்லாம் தினைப் பிண்டியை அடைவே அடை பகுத்தளித்தலின் 'மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்' என்றார். மென்மை, நுவணையின் மென்மை.

"விசையங் கொழித்த பூழி யன்ன
உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை" **மலைபடு 444-5.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. நுவணை-தினைப்பிண்டி. "நுவணை தினைமா" பிங் 6: 12. பகுக்கும் வைப்பு என்க. புன்புலம்-புல்லிய நிலம். "வித்திவா னேக்கும் புன்புலம்" என்றார் புறத்தினும். (புற 18: 24) காடுசூழ்ந்த வைப் பாதலின் 'புறவணி வைப்பு' என்றார். புறவணி-காடு சூழ்ந்து. மதுரைக் 215 நச். இனிப் புறவணி வைப்பு என்பதற்கு முல்லைநிலத்து ஊர்களும் எனினு மமையும். புறவணி என்பது முல்லைத் திணையின் பெயராதல் "புறவும் புறம்பணை புறவணி முல்லை" என்னும் பிங்கலந்தையாலறிக. (பிங் 4: 89) இதனால் முல்லைநிலம் கூறினார்.

26-9. காடு பயமாறி நுண்மணற்கோடு கொண்டு ஒண்ணுதன் மகளிர் கழலொடு மறுகும் கடறு என்க.

காடு தளிர்த்துப் பூத்துப் பொலிவுற நின்றமை தோன்றப் 'பல்பூஞ் செம்மற் காடு' என்றார். பல்பூ என்றது கோட்டவும் கொடியவுமாகிய பல வகைப்பட்ட பூக்களை.

> "கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
> பல்பூ மிடைந்த" பெரும்பாண் 174-5.
> "கோட்டவுங் கொடியவும் பூப்பல பழுனி
> மெல்லிய வினிவை கண்டிகு
> மல்ல லாகிய மணங்கமழ் புறவே" ஐங் 414.

என வருவன காண்க. பூக்களின் வாடல் எவ்வாயும் பரந்து கிடத்தலின் 'செம்மற்காடு' என்றார். செம்மல்-பூவாடல். சிறுபாண் 5 நச். அத்தகைய காடு ஞாயிற்றின் வெம்மைமிகுதியால் பயந்துறந்து பாலையானமை தோன் றக் 'காடுபயமாறி' என்றார்.

> "வான மூர்ந்த வயங்கொளி மண்டிலம்
> நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்
> டிலையில மலர்ந்த முகையி லிலவம் அக 11: 1-3.

என்பதனாலும் காடு பாலையாதலறியப்படும். "முல்லையுங் குறிஞ்சியு முறை மையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப் பாலையென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப் 11: 64-6) என்பது ஈண்டறியற்பாலது. செந்நிலக் காடு பயமாறியதனால் செவ்வரக்குப்போன்ற நுண்மணற் குன்றுகளே விளங் கித்தோன்றலின் 'அரக்கத்தன்ன நுண்மணற் கோடு கொண்டு' என்றார். "அரக்குருக்கன்ன செந்நிலம்" (பொருந 43) என்றார் பிறரும் அத்து: சாரியை அச்சுரத்தே அழகிய பருவமகளிர் தலைமகனொடு புணர்ந்துடன் போதலின் 'ஒண்ணுதன் மகளிர் கழலொடு மறுகும்' என்றார்.

> "புள்ளொலிக் கமர்த்த கண்ணள் வெள்வேற்
> றிருந்துகழற் காளையொ டருஞ்சுரங் கழிவோள்" ஐங் 382.
> "அன்னை யறியி னிவணுறை வாழ்க்கை
> எனக்கெளி தாக வில்லெனக் கழற்கால்

மின்னொளிர் நெடுவேல் இளையோன் முன்னுறப்
பன்மலை யருஞ்சுரம் போகிய தனக்கு'' அக 203: 8-9.

என வருவன காண்க. அழகும் இளநலமுமுடைய மகளிரென்பார் 'ஒண்ணுதன் மகளிர்' என்றார். 'கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதன் மகளிர்' என இறையனாரகப்பொருளுரையில் (சூத் 2 உரை) வருதல் காண்க. அழகினை நுதன்மேலிட்டுக் கூறுதலை 'நன்னுதல் விறலியர்' (பதிற் 47: 9) என்பதற்குரைத்த பழையவுரையானுமறிக. கழல் என்றது கழற்காலையுடைய தலைமகனை. 'மணற்கோடு கொண்டு மகளிர் கழலொடு மறுகும்' என்பதற்கு 'மணற்கோட்டைக் கழலாடுதற்கு இடமாகக் கொண்டு மகளிர் கழற்சிக்காயொடு திரியும்' என்று உரைப்பாருமுளர். இனிக் கழலொடு மறுகும் என்பதற்குக் காடுபயமாறியமையின் வெம்மைக்கு ஆற்றாது, செருப்பணியாத மகளிரும் 'காலிற் செருப்பணிந்து திரியும்' எனினுமமையும். கழல் என்பதற்கு ஈண்டுச் செருப்பு என்று நச்சினார்க்கினியரும் பொருள் கொண்டனர் ன்பது, "கழலிற் செந்தாமரை யடிகள் புல்லி" (சீவக 1648) என்பதற்குச் 'செருப்புப்போலே அடிகளைப் புல்லி' எனவுரைத்து "ஒண்ணுதன் மகளிர் கழலொடு மறுகும் விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும்" என்றார் பிறரும் என இப்பகுதியை மேற்கோளாகக் காட்டிய வாற்றா னறியப்படும். உயர் மரங்களாதலின் 'விண்ணுயர்ந்தோங்கிய' என்றார். ஈண்டுக் கடறு—சுரம். இப்பொருட்டாதல் "இருங்கடறு வளைஇய குன்றத் தன்ன" (புற 140: 7) என்புழிக் கடறு என்பதற்குச் 'சுரம்' என அதன் உரைகாரர் உரைத்தலானுமறிக. கடறு - காடு என்பாரு முளர். ஐவகை நிலங்களில் முல்லை நிலம் "புன்புலந் தழீஇய புறவணி வைப்பு" (25) என முற் கூறப்பட்டமையின் ஈண்டு அவ்வாறுரைத்தல் அமையாதென்க. இதனாற் பாலைநிலம் கூறினார்.

பிறவுமென்றது அவ்வாறு ஒருநிலமாகச் சொல்லப்படாத பலநிலப் பண்புமுடைய இடங்களுமென்றவாறு. மென்பால் முதலாக முன்பு எண்ணி நின்ற நிலங்களெல்லாம் ஆகுபெயரான் அந்நிலத்து வாழ்வார் மேலனவாகக் கொள்க.

வெற்றி முரசினையுடைய முடிவேந்தரும் சேரன்முரசொலி கேட்டு நடுதல் தோன்றப் 'பணைகெழு வேந்தர்' என்றார். பணை - வெற்றி முரசு. மதுரைக் 234 நச். வேந்தர் என்றது சேரனுக்குப் பகைவராகிய சோழ பாண்டியரை. வேளிர் என்றது அவர்க்குத் துணைவராகப் போந்த குறுநில மன்னரை. வேந்தரும் வேளிரும் ஒன்று கூடிச் சேரரை எதிர்ந்தமை,

"வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅ ராயின்'' பதிற் 75: 4-5.

"வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்ற மெய்திய பெரியோர் மருக'' பதிற் 88: 13-4.

என்பவற்றாலு மறிக. சேரனொடு பொருதற்கு அவர்கள் ஒன்று கூடிச் சூழ்ச்சி செய்த காலத் தம்முண் மாறுபாடின்றி ஒருவர் துணிந்ததே காரியமாக அனைவரும் துணிந்து சொல்லியமையால் 'ஒன்று மொழிந்து' என்றார். ஒன்று

மொழி—தம்மில் ஒத்த வார்த்தை' என்பர் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர். (சிலப் 29 உரைப்பட்டு உரை) பாண்டியனும் சோழனும் கடலினையும் காட்டினையும் அரணாகக் கொண்ட இடங்களில் அரண்களை அமைத்தமையின் 'கடலவும் காட்டவும் அரண்' என்றார். அவ்வரண்களைப் பாதுகாப்பாகக் கொண்டும் அவர்கள் வலிபெறாராய்ச் சேரன் முரசொலிகேட்டு அஞ்சி நடுங்குதலின் 'அரண் வலியார் நடுங்க' என்றார்.

"தொன்மருங் கறுத்த லஞ்சி யரண்கொண்டு
துஞ்சா வேந்தரும்" பதிற் 81; 35-6.

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. "அச்சமுடையார்க் கரணில்லை" என்றார் திருவள்ளுவரும். (குறள் 634.)

முரசின் கடுங்குரல் வீரர் உள்ளத்தே மாறுபாட்டை மிகுவித்தலின் 'முரண்மிகு கடுங்குரல்' என்றும் அக் கடுங்குரல் விண்ணிடத்தே சென்று அதிர்தலின் 'விசும்படைபு அதிர' என்றும் கூறினர். "தழங்கு குரன்முரசம், அகலிரு விசும்பி னாகத் ததிர" (பதிற் 68:3-4) என்றார் பிறரும். அதிரக் (32) கடுஞ்சினங் கடாஅய் (33) எறியும் (43) முரசு (44) எனக் கூட்டுக.

மந்திரம் மானசம் உபாஞ்சு என்னும் முறைகளாற் செபிக்கப்படாது வாசகமுறையாகக்கொண்டு உரக்க உச்சரிக்கப்படுதலின் 'முழங்கு மந்திரத்து' என்றார். மந்திரத்தான் என உருபு விரித்து அதனைப் பேணியர் (34) என் பதனோடு முடிக்க. கடவுள் என்றது முரசுறை கடவுளை. அக்கடவுள் அரசனுக்கு வெற்றியைத் தரும் ஆற்றலுடைத்தாதல் தோன்ற 'அருந்திறன் மரபிற் கடவுள்' என்றார். அருந்திறல் - மலைத்தற்கரிய வலி எனினுமமையும். மரபு—மேம்பாடுமாம்.

கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க (36) உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறற் பிண்டம் (25) எறும்பு மூசா இறும்பூது மரபின் (38) நெய்த்தோர் தூய நிறைமகிழ் இரும்பலி (37) கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார (39) எனக் கூட்டுக.

முரசுறை கடவுளை மந்திரத்தாற் பேணுதற்குரிய மேம்பாடுடையோனாகலின் வழிபடுவோனை 'உயர்ந்தோன்' என்றார். பெறலரும் பிண்டம் என மாறிக் கூட்டுக. பிண்டம்—பிண்டித்து வைத்த உணவு; என்றது சோற்றுத் திரளையை. கண்டார்க்கு அச்சத்தைச் செய்யும் பேய்மகளும் அப் பலியைக் கொள்ளமாட்டாமல் அஞ்சிக் கைகொட்டி நடுங்குதலின் 'கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க' என்றார். உலறிய கதுப்பு, பிறழ்பல், பேழ்வாய் முதலியவற்றையுடைய பேய்மகளின் அஞ்சுவரு தோற்றத்தைக் கண்மேலிட்டுக் 'கருங்கட் பேய்மகள்' என்றார். நெய்த்தோர் தூய பலி எனக்கூட்டிக் கொழு விடையின் குருதி தூவிய பலி எனவுரைக்க. "கூலமுற்றிய, உருவச் செந்தினை குருதியொடு தூஉய், மண்ணுறு முரசங் கண்பெயர்த்து"(பதிற் 19: 5-7) எனப் பிறரும் கூறுதல் காண்க. நிறைந்த கள்ளையுடைய பலியாகலின் 'நிறை மகிழ் இரும்பலி' என்றார்.

"கள்ளுங் கண்ணியுங் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட் குளப்பட வோச்சி" அக 156: 13-5.

எனப் பிறரும் கூறுதல் காண்க. கடவுளுக்கு இடும் உணவைப் பலி என்றல் மரபு. குருதி, கள் என்பவற்றில் மொய்க்கும் எறும்பு அவற்றுடன் கூடிய பலிக்கண் அஞ்சிச் செல்லாமையின் 'எறும்பு மூசா' என்றார்.

"சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" முருகு 43-4.

"நறுவிரை தெளித்த நாறிணர் மாலைப்
பொறிவரி யினவண் டூதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்" அக 166: 5-7.

என்பன ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. அப்பலியில் எறும்பு சொல்லா தொழிதல் வியப்பைப் பயத்தலின் 'இறும்பூது மரபின்' என்றார். இறும்பூது மரபிற் (38) பலி (37) எனக் கூட்டுக.

பேய்மகளும் எறும்பும் அஞ்சிச் செல்லாத அப்பலிகளைக் காக்கையொடு பருந்திருந்து ஆர என்றது அம்முரசுறை கடவுள் தன் அருளாலே போர் வென்றி விளைவது அறிவித்தற்கு நிமித்தமாகக் காக்கையும் பருந்தும் இருந்து ஆர என்றவாறு. பலிபெறுதற்குக் காக்கை சிறந்ததாகலின் 'காக்கையொடு' என் ஒடுக்கொடுத்தோதினர். "காக்கையது பலியே" (குறுந் 210) "சிறுகருங் காக்கை......நின்கிளையோ டாரப், பச்சூன் பெய்த பைந்நிண வல்சி, பொலம் புனை கலத்திற் றருகுவென்" (ஐங் 391) "ஒண்ணிணப் பலி ஒக்குவன், மாக் குணங் களஞ்சாற் பொலியுங் நலச்சேட்டைக் குலக் கொடியே" (திருக்கோவை 235) என வருவன காண்க. கருங்கட் காக்கை என்றதற்கு ஏற்ப $ வளை வாய்ப் பருந்து எனக் கொள்க. இனி, எறும்பு மூசா மரபிற் காக்கையொடு பருந்திருந் தார எனக் கூட்டி அப்பலிகள் எறும்பும் மூசா மரபினும் காக்கை யொடு பருந்திருந்து ஆர என உரைப்பினும் அமையும்.

ஓடாப் பூட்கையினையும் கழற்காலினையுமுடைய, பெருஞ்சமந் ததைந்த செருப்புகல் மறவர் என்க.

அமர்க்கண் அடியொதுங்கிப் பிற்பெயராது எதிர் நின்று பொரூஉம் தறு கண்மையை உடைய மறவராதலின் 'ஓடாப் பூட்கை மறவர்' என்றார். ஓடாப் பூட்கை என்பதற்குக் 'கெடாத வலி' 'ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோள்' என்ற உரைகளும் பொருந்தும். பொறி ஒண்கழற்கால் எனக் கூட்டித் தாங் கள் செய்த அரிய போர்த்தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற் கால் எனக்கொள்க. கழலில் போர்த்தொழில்களைப் பொறித்தல் மரபாதல், 'ஒண்பொறிக் கழற்காலென்றது தாங்கள் செய்த அரிய போர்த்தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்காலென்றவாறு' என்னும் பழையவுரை யானும் (பதிற் 34: 2 உரை) அறிக. பெருஞ்சமந் ததைந்த மறவர் என்ப' தற்கு பெரியபூசலைச் சிதற வெட்டிய மறவர் எனினுமமையும். போர்த்

$ "வளைவாய்ப் பருந்திருந் துயவும்" புற 3: 22.

தொழிலை மேலும் விரும்பும் மறவராதலின் 'செருப்புகன் மறவர்' என்றார். மறவர் (41) குரல் (42) எனக் கூட்டுக. ஆகுபெயரான் † உருமுநில னதிர்க்குங் குரலோடு ஒத்த மறவர் குரலை 'உருமுநில னதிர்க்குங் குரல்' என்றானாகக் கொள்க. 'உருமுக் குரல் யானை-உருமுக் குரல்போலும் குரலையுடைய யானை' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. (சீவக 7 உரை) நிலனதிர்தல் கூறவே உருமின் மிக்க வொலியென்றாயிற்று. குரல் உருமுக்குரல் போலு தல், "உருமிடித் தன்ன குரலினர்" (முருகு 172) "அதிர்வான் முழக்குச் செல் ......உறழும்......செறல் வயின் மொழி" (பரி 13: 44-5) எனவருவனவற்றானு மறியப்படும். கொளை-கோட்பாடு. "கொடுங் குழாய் தெளியெனக் கொண் டதன் கொளையன்றோ" கலி 132. 17.

பெருஞ்சோறு உகுத்தல் என்பது அரசன் தன் படையாளர்க்குப் பெரு விருந்து செய்தலை. எவ்வி என்பான் தன் படையாளர்க்குப் பெருஞ் சோறு வழங்கியமை,

"யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூ ராங்கட்
கள்ளுடைப் பெருஞ்சோற் றெல்லிமிழ்ந் தன்ன
கவ்வை யாகின்றாற் பெரிதே" (அக 266: 10-5.)

என அகப்பாட்டினும், சேரன் செங்குட்டுவன் பெருஞ்சோறு வழங்கினமை.

"அரும்படைத் தானை யமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து" (26: 48-9)

எனச் சிலப்பதிகாரத்தும் வருபவற்றானு மறியப்படும். பெருஞ்சோறு உகுத் தல் தமிழ் வேந்தர் மரபாதல், "பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்" எனத் தொல்காப்பியம் கூறுதலானும் அறியப்படும். (தொல். புற. சூ. 8.) பெருஞ் சோறு உகுத்தற்கு முரசு எறிதல்,

"இயவர் புகழ எறிமுர சார்ப்பக்
குயவரி வேங்கை யனைய — வயவர்
பெறுமுறையாற் பிண்டங்கோ ளேவினன் பேணா
ரிறுமுறையா லெண்ணி யிறை" பு. வெ. மா. 58.

என்பதனானுமறிக. எறியும் என்னும் செய்யுமென் முற்று செயப்பாட்டு வினைமுற்றாய் நிகழ்காலத்தில் வந்தது. குட்டுவன் கடுஞ்சினம், 'அகப்பா வெறிந்து பகற்றீ வேட்டு' (3ம் பதி) என்பதனானுமறியப்படும். தழங்கு குரல்-முழங்கு குரல். "இடியுமிழ் தழங்கு குரல்" மலைபடு 310.

பெருஞ்சோற்று நிலை வஞ்சித்திணைக்குரிய துறையாயினும் பாலைக்கௌ தமனார் தாமும் மனைவியும் சுவர்க்கம் புகவேண்டும் குறிப்பாற் பாடியதாக லின் வஞ்சித்துறைவந்த பாடாண் திணையாயிற்று.

---

† உருமின் குரலால் நிலனதிர்தல் "நிலநெஞ்சுட்க வோவாது சிலைத்தாங்கு, ஆர்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள்" (அக 139: 4-5) என்பதனானுமறிக.

இது வீரரும் தலைவரும் பகைவர் நிலத்தைத் தருவரென்று அவர்க்குப் பெருஞ் சோற்று விருந்து கொடுத்ததாகலின் அவன் வென்றிச் சிறப்புக் கூறிய பெருஞ்சோற்றுநிலை யாயிற்று.

## பழையவுரை.

2. மணிக்கலமென்றது நீலமணியாலே செய்த பாத்திரம். மணிக்கலத் தன்ன (3) கழியெனக்கூட்டி நெய்தற் பூவின் கருமையானும் அதன் பாசடைக் கருமையானும் மணிக்கலம் போன்ற கழியெனவுரைக்க. 5. கானலென்றது தன்னிடத்து வந்து இரைகொள்ளுவதற்குக் குருகு தாங்கி வாழும் கானலென்றவாறு. 6. புணரி வளை ஞரலவென்றது கடல் கொண்டுவந்த சங்கு திரையிலே துவண்ட வருத்தத்தாலே ஈனுகைக்கு மெய்வருந்திக் கதறவென்ற வாறு. 7. முத்தமொடு வார்துகிரெடுக்குமென்றது கரை நின்றோரில் (6) வளை நரலக் கேட்டார், அம்முத்தெடுக்கவென்று வந்து முத்தையன்றி அதனோடு பவளத்தையுமெடுக்குமென்றவாறு. பலபூ விழவினையுடைய (15) வைப்பு (21) எனக் கூட்டுக. 17. புனல் பரந்தென்றதனைப் பரக்கவெனத் திரிக்க. 18. பலசூழ் பதப்பரென்றது பலபுரியாலும் சூழப்பட்ட மணற்கோட்டையென்ற வாறு. 19. புகன்ற ஆயமென்றது முன்பு மணலணைக்கு நில்லாத பெருவெள் ளத்தினை அணைசெய்து முடித்த விருப்பத்தையுடைய ஆயமென்றவாறு. இச் சிறப்புப்பற்றி இதற்கு, 'புகன்றவாயம்' என்று பெயராயிற்று. 27-8 மணற் கோடு கொண்டென்றது மணற்கோட்டைக் கழலாடுதற்கிடமாகக் கொண் டென்றவாறு. இனிக் (28) கழலென்றதனைக் கழலையுடைய தலைமகன் காலாக்கி அக்காலொடு தலைமகளிர் புணர்ந்துடன் போமென்பாருமுளர். 29. பிறவு மென்றது அவ்வாறு ஒருநிலமாகச் சொல்லப்படாத பல நிலப் பண்புமுடைய இடங்களுமென்றவாறு. முன்பு எண்ணி நின்ற நிலங்களெல்லாம் ஆகுபெய ரான் அந்நிலத்து வாழ்வார்மேலனவாகக் கொள்க. 30 ஒன்று மொழிந்தென் றது ஒருவர் துணிந்ததே காரியமாக அனைவரும் துணிந்து சொல்லியென்ற வாறு. (33) கடுஞ்சினங் கடாஅய் (43) எறியும் முரசென முடிக்க. 33. முழங்கு மந்திரமென்றது முழங்க உச்சரிக்கப்படு மந்திரமென்றவாறு. மந்திரத்தானென உருபு விரித்து அதனைப் (34) பேணிய ரென்பதனோடு முடிக்க. 34. கடவுளென்றது முரசுறை கடவுளை. கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க (36) உயர்ந்தோ னேந்திய அரும்பெறற் பிண்டம் (35) எறும்பு மூசா இறும்பூது மரபின் (38) நெய்த்தோர் தூஉய நிறைமகிழிரும் பலி (37) கருங்கட் காக்கையொடு பருந்திருந்தார (39) எனக் கூட்டுக. இறும்பூது மரபிற் (38) பலி (37) என மாறிக் கூட்டுக. பேய்மகளும் (36) எறும்பும் அஞ்சிச் செல்லாத (38) பலிகளைக் (37) காக்கையொடு பருந்திருந் தார (39) என்றது அம்முரசுறை கடவுள் தன் ஆணையால் தன் பலிகளை மேல் தன்னருளாலே போர்வென்றி விளைவித்தற்கு நிமித்தமாகக் காக்கை யும் பருந்துமிருந்து ஆரவென்றவாறு. இவ்விடத்துக்குப் பிறவாறு கூட்டி யுரைப்பாருமுளர். 41. பெருஞ்சமந்ததைந்த செருவென்றது பகைவர் செய்யும் போர் சிதையும்படி செய்யும் போரென்றவாறு. 41-2 மறவர் குரலெனக் கூட்டுக. ஆகுபெயரான், உருமுநிலனதிர்க்கும் குரலோடு ஒத்த மறவர் குரலை உருமுநில னதிர்க்குங் குரலென்றாகக் கொள்க. 43-4. எறியுமுரசென்க.

மென்பால் (8) முதலாகக் கடறுசுருக எண்ணப்பட்ட ஐவகை நிலத்து மக்களும் பிறவும் (29) அந்நிலத்து வேந்தரும் வேளிரும் தங்களிலே ஒன்று மொழிந்து (30) அரண்வலியாதே நடுங்கா நிற்கும்படி (31) கடுங்குரல் விசும்படைந்து அதிரும்படி (32) கடுஞ்சினத்தைக் கடாவிப் (33) பேய்மகள் கைபுடையூஉ நடுங்க (36) உயர்ந்தோனேந்திய பிண்டத்தினையும் (35) எறும்பு மூசா மரபின் (38) நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலியினையும் (37) கருங்கட் காக்கையொடு பருந்திருந்து ஆராநிற்கச் (39) செருப்புகன் மறவரது (41) குரலோடே கோட்பாடு பொருந்திப் (42) பெருஞ்சோறு உகுத்தற்கு எறியப்படா நின்றது (43) நின்முரசு (44) என **வினைமுடிபு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் **வெற்றிச்சிறப்புக்** கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. **இணர்ததை:** "இணர்ததையும் பூங்கானல்" **சிலப்** 7: 31.

**இணர் ஞாழல்:** "குவியிணர் ஞாழல்" **பதிற்** 51: 5; ஞாழலஞ்சினைத் தாழிணர்" "சிறுவீ ஞாழற் றேன்றேய் யொள்ளிணர்" **நற்** 106: 7; 191: 1; "எக்கர் ஞாழ லிறங்கிணர்ப் படுசினை" "எக்கர் ஞாழ லிணர்படு பொதும்பர்" "ஞாழ லரும்புமுதி ரவிழிணர்" "பொன்னிணர் ஞாழல்" **ஐங்** 142; 144; 146; 169; "ஞாழன் முதிரிணர் கொண்டு" "தெரியிணர் ஞாழலும்" **கலி** 56: 2; 127: 1.

**ஞாழற் பெருந்துறை:** "சிறுவீ ஞாழற் றுறை" "குமரி ஞாழ, றெண்டிரை......துறை" "சிறுவீ ஞாழற் பெருங்கடற் சேர்ப்பனை" **நற்** 31: 5; 54: 9-11; 74: 5; "சிறுவீ ஞாழல்......துறையணிந் தன்று" **குறுந்** 50: 1-3; "எக்கர் ஞாழல்......துறைவனை" "எக்கர் ஞாழற் புள்ளிமிழகன்றுறை" **ஐங்** 141; 142; 143.

2. **மணிக்கலம்:** "மணிக்கல னிறைந்த மணநாறு தேறல்" **புற** 397: 10;

**மணிக்கலத் தன்ன:** "மணிக்கலத் தன்ன, இட்டுவாய்ச்சுனை" **குறுந்** 193: 1-2.

2—3. **நெய்தற்பாசடை:** "சிறுபா சடைய செப்பூர் நெய்தல்" "சிறுபாசடைய நெய்தல்" "நெய்தற் பாசடை" "பாசடைக் கலித்த கணைக்கா னெய்தல்" "பாசடை நெய்தல்" **நற்** 23: 7; 27: 11; 47: 3; 138: 6; 287: 5; "பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்" **குறுந்** 9: 4; "பாசடைக் கலித்த கணைக்கா னெய்தல்" **அக** 70: 11.

**நெய்தற் கழி:** "மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்" **பதிற்** 64: 16; "கழிசேர் மருங்கிற்......சிறுபாசடைய நெய்தல்" "இருங்கழி, மணியேர் நெய்தன் மாமலர்" "நெய்தல்......இருங்கழி" "ஓங்குகழிக் குற்ற......கமழ்நறு நெய்தல்" **நற்** 27; 9–11; 78: 1-2; 239: 6-8; 283: 1-2; "நெய்தல்......இருங்கழி" **குறுந்** 9: 4-5; "இருங்கழி நெய்தல்" "கொடுங்கழி நெய்தலும்" "நெய்த லிருங்கழி" **ஐங்** 170; 183; 184; "கழிப்பூத்த, நெய்தல்" "இருங்கழி நெய்தல்" **கலி** 74: 1-2. 145: 39. "இருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்" "நெய்தன் மாக்கழி" **அக** 170: 4; 240: 3; "மாக்கழி மலர்ந்த னெய்தலானும்" **புற** 48: 3; "மணிநிற நெய்த லிருங்கழி" **ஐந்எழு** 60.

3. பாசடைப் பனிக்கழி துழைஇ: "பாசடை மயக்கிப் பனிக்கழி துழவும்" குறுந் 246: 2-3.

2—3. நெய்தலும் புன்னையும்: "புன்னை யலங்கு சினையிருந்த வஞ்சினை நாரை......நெய்தற் கதிரொடு நயக்கும்" குறுந் 296: 1-4.

3—4. புன்னையில் குருகு இறைகொள்ளல்: "இறவருந்திய வினநாரை, பூம் புன்னைச் சினைச் சேர்ப்பின்" பொருந 204-5; "புன்னைக் கடுஞ்சூல் வெண் குருகு" நற் 31: 10; "சிறுவெண் காக்கை......புன்னையம் பூஞ்சினை சேச்குந் துறைவ" ஐங் 169; "முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப், புள்ளிறை கூரும் மெல்லம் புலம்ப" "மீனார் குருகின் மென்பறைத் தொழுதி, குவை யிரும் புன்னைக் குடம்பை சேர" "புன்னையங் கானல்......வம்ப நாரை யினனொலித் தன்ன" அக 10: 3–4; 40: 3–4; 100: 13–4.

கழிதுழைஇப் புள் மரத்தில் தங்குதல்: "நெய்த லிருங்கழி நெய்த னீக்கி, மீனுண் குருகினங் கான லல்குங், கடலணிந் தன்றவ சூரே" ஐங் 184; "புலவு நா றிருங்கழி துழைஇப் பலவுடன், புள்ளிறை கொண்ட......தாழை" அக 180: 10-2.

மணலடைகரை: நற் 11: 6; 27: 3; 35: 1; 243: 2; குறுந் 175: 2; 236: 316-4; ஐங் 115; 193; அக 10: 11; 34: 7; 60: 9; 130: 4; 280: 3; புற 366: 21; சிலப் 14: 73.

மணலடைகரை அடும்பு: பதிற் 51: 6-7; பட்டினப் 64 நச். நற் 145: 1-2; 254: 2; 272: 3; குறுந் 248; 349; கலி 132: 16; அக 80: 7-8; 320: 9; தொல். களவு சூ. 20 நச். மேற்.

புணரிவளை: "தண்கடல் வளையினும்" ஐங் 106: 3.

வளை நரல: "வால்வளை நரல" முருகு 120; "வளை நரல" மதுரைக் 185; நற் 172: 8; பு. வெ. மா. 108.

புணரிவளை முத்தம்: சிறுபாண் 57; ஐங் 105; கலி 9: 15-6; 85: 12; 105: 4-5; அக 13: 1; 130: 9; 280: 11-2; புற 58: 11; 377: 17; நாலடி 224; நான்மணி 4; ஐந்ஐம் 46; 48; ஐந்எழுபது 61; திணைநூற் 38; 48; சீவக 2190; 2441; 2558; 2652; 3143; சிலப் 27244.

7—8. "வாரித் தரள நகைசெய்து வண்செம் பவளவாய் மலர்ந்து, சேரிப் பரதவர் வலைமுன்றிற், றிரையுலாவு கடற்சேர்ப்ப" சிலப் 7: 38.

9. காந்தளங் கண்ணி "காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்" பதிற் 81: 22; "காந்தட், பெருந்தண் கண்ணி" முருகு 43-4; "மலைச்செங் காந்தட் கண்ணி" நற் 173: 2.

கொலைவில்: "கொலைவிற் புருவத்து" பொருந 26; "திருவில் லல்லது கொலைவில் லறியார்" புற 20: 10.

10. ஆமான்: "ஆமான் சூட்டின்" சிறுபாண் 177; "ஆமான்போல் நக்கி" நாலடி 377; "ஆமான் வழங்கும் ஆரிடை யத்தம்" ஐந்எழு 32.

10—11. ஆமான், யானை: "புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்" குறிஞ்சி 253; "மடநடை யாமான் கயமுனிக் குழவி" மலைபடு 500.

*11.* **வேழத்து வெண்கோடுகொண்டு:** *"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு" "யானை......வெண்கோடு கொண்டு" "யானை வெண்கோடு கொண்டு"* **அக** *61: 9; 172: 8-9; 282: 3.*

*12.* **பொன்னுடை நியமம்:** **பதிற்** *15: 19* அடிக்.

*13.* **குன்றுதலை மணந்த:** *"குன்றுதலை மணந்து குழூஉக்கடலுடுத்த"* **பதிற்** *31: 1;* *"குன்றுதலை மணந்த கானம்"* **குறுந்** *281: 5;* *"குறியவும் நெடியவுங் குன்றுதலை மணந்த"* **அக** *233: 11;* *"குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்த"* **புற** *357: 1.*

**புன்புலம்:** *"புன்புலம் வித்தும்"* **பதிற்** *58: 15;* *"புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சி"* **குறுந்** *202: 1;* *புன்புலம் தழீஇய பொறை முதற் சிறுகுடி"* **அக** *284: 7;* *வித்திவா னோக்கும் புன்புலம்" "புன்புல வரகின்" "பெயல் பிழைப் பறியாப் புன்புலத் ததுவே"* **புற** *18: 24; 34: 9; 117: 7.*

**புன்புல வைப்பு:** *"புன்புல வைப்பினெஞ் சிறுநல் லூரே"* **அக** *394: 16.*

*15.* **அரிகால்:** **பொருந.** *இறுதிவெண்பா 1: 2;* **நற்** *210: 1;* **அக்** *41: 6;* **புற** *322: 3.*

**மென்றினை நுவணை:** *"மென்றினை நுவணை யுண்டு"* **ஐங்** *285.*

**முறைமுறை:** **நெடுநல்** *177.* **புற** *29: 23* **முத்.** *18: 1;* **வில்லி.** **குரு** *குல 96.*

**புன்புலந் தழீஇய:** *"புன்புலந் தழீஇய பொறைமுதற் சிறுகுடி"* **அக** *284: 7.*

*27.* **அரக்கத்தன்ன:** *"அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழி"* **அக** *14:1;*
**மணற்கோடு:** *"அடும்பிவர் மணற்கோடு"* **குறுந்** *248: 5;* *"இடுமணனெடுங் கோட்டை"* **கலி** *135: 4.*

**ஒண்ணுதன் மகளிர்:** **பதிற்** *57: 13;* **நற்** *283: 1;* **அக** *344: 4;* **புற** *25: 12:*

*30.* **பணைகெழு வேந்தர்:** *"பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்"* **மதுரைக்** *234;* *"பணைகெழு வேந்தர்"* **அக** *278: 2;* *"பணைகெழு வேந்தரை"* **புற** *119: 6.*

**வேந்தரும் வேளிரும்:** *"வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து" "வேந்தரும் வேளிரும் பின்வந்து பணிய"* **பதிற்** *75: 4; 88: 13;* *"இருபெரு வேந்தரொடு வேளிர் சாய"* **மதுரைக்** *55.*

**வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிதல்:** *"வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்று மொழிந்து"* **பதிற்** *49: 7.*

*32.* **முரண்மிகு:** *"முரண்மிகு திருமணி"* **முருகு** *84.*

*33—4.* **மந்திரத்தால் கடவுட் பேணல்:** *"மாலொடு நான்முகன் இந்திரன் மந்திரத்தால் வணங்க"* **தே. சுந்.** *திருநின்றியூர் 9.*

*34—4.* *"அருந்திறன் மரபிற் கடவுள் காப்ப"* **அக** *372: 1. (பி-ம்)*

**கடவுட்பேணியர்:** **பதிற்** *21: 5.* **ஒப்பு.**

*36.* கருங்கட் பேய்மகள்: பதிற் *22: 37* ஒப்பு.

கைபுடையூஉ: பதிற் *26: 8* ஒப்பு.

*37.* நெய்த்தோர்: நற் *2: 4-5;* ஐங் *335: 2;* களவழி *23; 37;* சீவக *2255*

*34—7.* கடவுட்குப் பலி: பதிற் *79: 16-8;* நற் *358: 6;* அக *166: 7;* மணி *6: 60.*

*37—9.* காக்கைபலி ஆர்தல்: பொருந *183-4.* நற் *281: 1; 343: 5;* குறுந் *210: 6.*

*40.* ஓடாப் பூட்கை: *"ஓடாப் பூட்கை......விரிநூ லறுவையர்" "பிறக்கடி யொதுங்காப் பூட்கை யொள்வாள், ஓடிவி றெவ்வர்"* பதிற் *34: 2-3. 80: 8-9; "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி"* முருகு *247; "ஓடாப் பூட்கை யுறந் தையும்"* சிறுபாண் *83; "ஓடாப் பூட்கை வேந்தன்"* அக *100: 8; "ஓடாப் பூட்கை யுரவோன் மருக" "ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே" "ஓடாப் பூட்கை விடலை"* புற *126: 4; 165: 15; 295: 8.*

*40—41.* ஒண்பொறிக் கழற்கால் மறவர்: பதிற் *19; 3* ஒப்பு.

*41.* சமந்ததைதல்: *"முரசுடைப் பெருஞ்சமந் ததைய" "வேலுடைக் குழூஉச் சமந் ததைய நூறி" "சமந் ததைந்த வேல்" "களிறுடைப் பெருஞ் சமந் ததைய"* பதிற் *34: 10; 66: 5; 70: 3; 76: 1; "அருஞ்சமந் ததைய நூறி" "அருஞ்சமந் ததையத் தாக்கி"* புற *93; 14; 126: 21;*

செருப்புகன்மறவர்: *"ஒன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்"* மதுரைக் *726; "செருப்புகன் மறவர் செல்புறங் கண்ட"* புற *174: 12.*

*42.* உருமுக்குரல்: சீவக *980; 1685; 2206; 2318; 2372;* கலிங் *114;* கம்ப. *விராதன் 18; துந்துபி 9.*

கொளை புணர்ந்து: *"கொளைபுணர் சீர்வல்ல, நல்லியாழ்ப் பாணர்"* சிலப் *12. 'இளமா'*

*43.* பெருஞ்சோறு: *"புகர்வை யரிசிப் பொம்மற் பெருஞ்சோறு" "விடக் குடைப் பெருஞ்சோறு"* நற் *60: 5; 281: 6; "பெருஞ்சோற் றமலை நிற்ப" "உதியஞ் சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை"* அக *86: 2; 233: 9; "பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" "பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த" "பெருஞ்சோற் றுனு நனிபல கலத்தன் மன்னே" "வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்"* புற *2: 16; 220: 1; 235: 5. 261: 3. "பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை"* சிலப் *23: 55.*

*44.* கடுஞ்சினவேந்து: பதிற் *12: 3* ஒப்பு.

தழங்கு குரல் முரசு: *"கடுஞ்சிலை கடவுந் தழங்கு குரன் முரசம்"* பதிற் *68: 5; "தழங்கு குரன், மயிர்க்கண் முரசின்"* நற் *93: 10-1; "தழங்கு குரன் முரசங் காலை யியம்ப"* ஐங் *448: 1;* பி-ம் *"தழங்கு குரன் முரசமொடு"* அக *24: 15.*

## பதிகம்

இமைய வரம்பன் றம்பி யமைவர
உம்பற் காட்டைத் தன்கோ னிறீஇ
அகப்பா வெறிந்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்
கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
இருகட னீரு மொருபக லாடி
அயிரை பரைஇ யாற்றல்சால் முன்போ
டொடுங்கா நல்லிசை யுயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனார் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவனைப்
பாலைக் கௌதமனார் பாடினார் பத்துப் பாட்டு.

**அவை தாம்:** *அடுநெய்யாவுதி, கயிறுகுறு முகவை, ததைந்த காஞ்சி, சீர்சால் வெள்ளி, கானுணங்குகடுநெறி, காடுறுகடுநெறி, தொடர்ந்த குவளை, உருத்துவரு மலிர்நிறை, வெண்கை மகளிர், புகன்றவாயம்.* **இவை பாட்டின்பதிகம்.**

**பாடிப்பெற்ற பரிசில்:** *'நீ வேண்டியது கொண்மின்' என 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்.*

*இமையவரம்பன் றம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன்* **இருபத்தையாண்டு** *வீற்றிருந்தான்.*

**ப—ரை.** இமையவரம்பன் தம்பி - *இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி,* உம்பல் காட்டை தன்கோல் அமைவர நிறீஇ-*உம்பற்காடு என்னும் ஊரைத் தன் செங்கோற் கீழே அமைந்து வர நிறுத்தி,* அகப்பா எறிந்து பகல்தீ வேட்டு - *அகப்பாவென்னும் அரணை அழித்து அற்றைப் பகலே அவ்வூரைத் தீயின்வாய்ப் பெய்து,* மதி உறழ் மரபின் முதியரை - *தன் அறிவோடு மாறுபட்டுப் பகைவர் பக்கமாகும் முறைமையுடைய முதியரை,* கண் அகல் வைப்பின் மண் வகுத்து ஈத்து தழீஇ-*இடமகன்ற ஊர்களையுடைய தன் நாட்டைப் பகுத்துக்கொடுத்துத் தழீஇக் கொண்டு,* கரு களிறு யானை புணர் நிரை நீட்டி - *வலிய களிற்று யானையினது தம்மிற் கூடின வரிசையை நீட்டி நிரைத்து,* இரு கடல் நீரும் ஒரு பகல் ஆடி - *தன்னதாய மேல்கடலும் தன்னுடாக்கிய நாட்டின் கீழ்கடலுமாகிய இருகடல் நீரும் ஒருபகலிலே வரும்படி அழைப்பித்து ஆடி,* அயிரை பரைஇ-*அயிரை என்னும் மலையில் வாழும் கொற்றவைக் கடவுளை வழிபட்டு,* ஒடுங்கா நல் இசை - *கெடாத நல்லிசையையும்,* உயர்ந்த கேள்வி-*மேம்பட்ட கேள்வியையுமுடைய,* நெடும்பார தாயனார் முந்துற-*தன் புரோகிதராகிய* **நெடும்பாரதாயனார்** *தனக்கு முன்னே துறந்து*

காடுபோக, ஆற்றல் சால் முன்போடு காடு போந்த - அதுகண்டு தானும் துறவுள்ளம் பிறந்து துறவறத்தை ஆற்றுதற்குப் பொருந்திய வலியோடு துறந்து காட்டிலே போன, பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடினார் - பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் சேரவேந்தனைப் **பாலைக்கௌதமனார்** என்னும் புலவர் பாடினார் என்க.

**முடிபு:** உம்பற்காட்டைத் தன்கோனிறீஇ அகப்பா வெறிந்து பகற்றீ வேட்டு மண்வகுத்தீத்து முதியரைத் தழீஇ இருகடல் நீரும் ஒருபகலாடி அயிரை பரைஇ நெடும்பாரதாயனார் முந்துற ஆற்றல்சால் முன்போடு காடு போந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார் பாடினார் என்க.

**ஆ—ரை:** இமையவரம்பன் தம்பி (1) பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடினார் பத்துப்பாட்டு என இயையும். 'இமையவரம்பன் றம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் துறக்கம் வேண்டினாரென்பது குறிப்பு வகையாற் கொள்ள வைத்தலின்' எனத் தொல் **காப்பியவுரையில்** (புறத் சூ 25) நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. இமையவரம்பன் என்றது நெடுஞ்சேரலாதனை. அவன் முன்னோர்,

> "மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
> இன்னிசை முரசி னுதியஞ் சேரற்கு
> வெளியன் வேண்மா னல்லினி யீன்றமகன்
> ..............................................
> இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதனை"

என இரண்டாம் பதிகத்துக் கூறப்பட்டமையின் ஈண்டு அம்முன்னோரைக் கூறாது இமையவரம்பன் றம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்றார். அமைவர (1) நிறீஇ (2) எனக் கூட்டுக. உம்பற்காடு சேரநாட்டிலுள்ளது. அது வருவாயையுடைய பல ஊர்களைத் தன்னகத்துக் கொண்டது என்பது "உம்பற்காட்டு ஐந்நூறூர்" (இரண்டாம் பதிகம்) எனவும் 'உம்பற் காட்டு வாரியையும்' (ஐந்தாம் பதிகம்) எனவும் வருவனவற்றாலறியப்படும். இது யானைகளை மிகுதியாகவுடைமையால் இப்பெயர் பெற்றதுபோலும்.

> "பெருங்களிற் றினநிரை கைதொழூஉப் பெயரும்
> இஞ்சுனைப் பலவின் றொழுதி யும்பற்
> பெருங்காடு" அக 357: 8-10.

என வருதல் ஈண்டு அறியற்பாலது. உம்பல்-யானை. "யானைக் கமரரும்பல்" திருவள்ளுவமாலை. பிறரின் கீழ் பட்ட அவ்விடத்தைத் தன்னுடாக்கியமையின் 'உம்பற் காட்டைத் தன்கோனிறீஇ' என்றார்.

அகப்பா என்பது காவற்காட்டினையும் ஆழமாகிய அகழியினையும் நெடுமதிலினையும் மதிலுண் மேடையினையும் வாயிற் கோபுரத்தினையும் ஐயவி முதலிய வாயிற் பொறிகளையும் உடைய ஒரு பேரரண். இதனை,

> "ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
> வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவிக்

கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதி னிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா" பதிற் 22: 21-6.

என்பதனால் அறியலாம். இதனை *உழிஞை சூடி நாற்பெரும் படையொடு சென்று எறிந்தான் என்பது "உழைப்பொலிந்த மா, இழைப்பொலிந்த களிறு, வம்புபரந்த தேர், அமர்க்கெதிர்ந்த புகன் மறவரொடு......அகப்பா வெறிந்த, பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ" (பதிற் 22: 17-27) என்பதனால் அறியப்படும். எறிதல்-அழித்தல். இவ்வரண் சேரனுக்கு உரித்தாக இருந்தமை "குட்டுவன் அகப்பா" (நற் 14: 3-4) என்பதனால் தெரிகிறது. அகப்பா எறிந்த அற்றைப் பகலே அவ்வூரையும் எரியூட்டி அழித்தமையின் 'அகப்பா வெறிந்து பகற்றீ வேட்டு' என்றார். 'அகப்பாவெறிதலைப் பகற்றீ வேட்டற்கு அடையாக்கி யுரைக்க' என்றார் பழையவுரைகாரரும்.

முதியர் என்றது தன்குலத்தில் தனக்கு முதியராய்த் தன்காலத்திலிருந்தோரை. அவர்கள் குட்டுவன் மதியொடு மாறுபட்டுப் பகைவர் பக்கமாகும் முறைமையுடையராயிருந்தமையின் 'மதியுறழ் மரபின் முதியர்' என்றும், அவர்களை அவ்வாறு செல்லாது தன் நாட்டைப் பகுத்துக் கொடுத்து தழீஇக் கொண்டமையின் 'முதியரைத் தழீஇ .....மண்வகுத் தீத்து' என்றும் கூறினார். 'முதியரை மதியுறழ் மரபிற் றழீஇ மண்வகுத் தீத்தெனகூட்டித் தன் குலத்தில் தனக்கு முதியாரை மதியோடொத்த தன் தண்ணளியால் தழீஇக் கொண்டு அவர்க்குத் தன்னாட்டைப் பகுத்துக்கொடுத்தென உரைக்க' என்பர் பழையவுரைகாரர். மண் என்றது சேரற்குரிய நாட்டை. "மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்" கலி 31: 9. அது இடமகன்றதும் பலவூர்களைத் தன்னகத்துக் கொண்டதுமாகிய நாடாதலின் 'கண்ணகன் வைப்பின் மண்' என்றார்.

கருங் களிறு—வலிய களிறு. கருமை - வலிமை. "கருங்கைக் கொல்லன்-வலிய கையையுடைய கொல்லன்' புற 21: 7 உரை. பெரியகளிறுமாம். கருமைக்குப் பெருமை பொருளாதல் "கருவளி முழங்கும்" (சீவக 2296) என்புழிக்காண்க. இருகடல் என்றது தன்னதாய மேல்கடலும், பிறநாட்டதாய்ப் பின்புதான் பொருதுகொண்டு தன்னுடாக்கிய நாட்டிற் கீழ்கடலுமென்றவாறு. இதனால் குட்டுவன் சோழ நாட்டை வென்று கைக்கொண்டு மேல் கீழ் கடல்களுக்கிடைப்பட்ட பெருநிலப் பரப்பை ஒரு குடைக்கீழ் ஆண்டமை பெறப்படும். சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை,

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடல் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந" புற 2: 9-11.

என முரஞ்சியூர் முடிநாகராயர் பாராட்டிக் கூறியிருத்தல் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. அவ்விரு முந்நீரும் ஒருபகலிலே வரும்படி யானைகளை நிரைத்து அழைப்பித்து இச்சேரன் ஆடினமையின் 'யானைப் புணர் நிரை நீட்டி இரு

* அரண்கோடற்கு உழிஞைசூடிச் சேறல் மரபு: "முடிமிசை யுழிஞை சூடி யொன்னார், கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று" பு. வெ. மா. 95.

கடனீரும் ஒருபகலாடி' என்றார். இச் செய்தியை "இருகட னீரும் ஆடினோ ருயினும்" எனச் சிலப்பதிகாரத்தும் (சிலப் 28: 146) கூறப்படுதல் காண்க. நீராடற்குரிய நீரை யானையில் எடுப்பித்தல்.

"விரைத்தலை மாலை சூட்டி மின்னனு ரங்கை சேப்ப
அரைத்தசாந் தணிந்த கோட்ட வாயிரத்தெட்டு வேழம்
நிரைத்தன மண்ணு நீர்க்கு" சீவக 2414.

"மண்ணுநீர் சுமக்கற்குப் பண்ணுமுறை பிழையாக்
கோல யானை நாலிரண்டு மிகையா" பெருங் (2) 2: 202-3.

என வருவனவற்றானு மறிக. நீட்டி என்பதற்கு நீட்டி அழைப்பித்து என ஒரு சொல் வருவித்துரைக்க. ஆடி என்ற வினையைப் பரைஇ என்பதனோடு முடிக்க. அயிரை-சேரநாட்டுள்ளதொரு மலை. "நேருயர் நெடுவரை யயிரை" "அயிரை நெடுவரை" (பதிற் 21: 29; 70: 26) என வருவன காண்க. 'பரைஇ' என்ற வினையினால் அயிரை என்றது அதன்கணுள்ள கொற்றவையை உணர்த்திற்று. இதனை,

'அயிரை பரைஇயென்றது தன்னாட்டு அயிரையென்னும்
மலையில் வாழும் கொற்றவைக் கடவுளைத் தன்குலத்துள்
ளார் செய்துவரும் வழிபாடு கெடாமல் தானும் வழிபட்டு'

எனவும் (பதிற் 3-ஆம் பதிக உரை)

"அஞ்சுவரு மரபிற், கடவு ளயிரை" என்புழி 'கடவுளென்றது அவனால் இவ்வாறு வழிபடும் கொற்றவையை. அயிரை: அக்கொற்றவை உறைவ தொருமலை' (பதிற் 79: 18 உரை.) எனவும் பழையவுரைகாரர் உரைத்தலா லும் அறியலாம்.

ஆற்றல் சால் முன்பு என்றது துறவறத்தை மேற்கொண்டு அந்நெறி யில் வழுவாது நிற்றற்கு அமைந்த மன வலியை. ஆற்றல்-செய்தல். "நன் றாற்ற லுள்ளும் தவறுண்டு" குறள் 469. ஈண்டுத் துறவறத்தைமேற்கொண்டு ஒழுகுதலை. முன்பொடு (8) காடுபோந்த (10) எனக் கூட்டுக. ஓடுங்கா நல்லிசையையும் உயர்ந்த கேள்வியையும் உடைய நெடும்பாரதாயனார் என்க. "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புற 53: 12) எனப் பிறரும் கபி லரைக் கூறுதல் காண்க. உயர்ந்த நூற் கேள்வியையுடைய அந்தணராதலின் 'உயர்ந்த கேள்வி நெடும்பார தாயனார்' என்றார். "கேள்வி அந்தணர்" எனப் பெரும்பாணாற்றுப்படையில் (பெரும்பாண் 315) வருதல் ஈண்டு அறியற் பாலது. பிராமண வருணத்தில் உயர்ந்த பாரத்துவாச கோத்திரத்திற் பிறந் தவராதலின் 'நெடும்பாரதாயனார்' என்றார். தன் புரோகிதராகிய நெடும்பார தாயனார் தனக்குமுன்னே துறந்து காடுபோக அதுகண்டு தானும் துறவுள் ளம் பிறந்து இச்சேரன் காட்டிலே போனமையின் 'நெடும்பாரதாயனார் முந்துறக் காடுபோந்த பல்யானைச் செல்கெழு குட்டுவன்' என்றார்.

## பழையவுரை.

3. இதன் பதிகத்துஅகப்பாவெறிதலைப் பகற்றீ வேட்டற்கு அடையாக்கி யுரைக்க. 4-5. முதியரை மதியுறழ் மரபிற் றழீஇ மண்வகுத்தீத்தெனக் கூட்டித் தன்குலத்தில் தனக்கு முதியாரை மதியோடொத்த தன் தண்ணளியால் தழீஇக்கொண்டு அவர்க்குத் தன்னுட்டைப் பகுத்துக் கொடுத்தெனவுரைக்க. 7. இருகடலுமென்றது தன்னதாய மேல்கடலும் பிறநாட்டதாய்ப் பின்பு தான் பொருதுகொண்டு தன்னுடாக்கிய நாட்டிற் கீழ்கடலுமென்றவாறு. 6-7. கருங்களிற்றியானைப் புணர் நிரை நீட்டி இருகடனீரு மொருபகலாடி யென்றது அவ்விரு முந்நீரும் ஒருபகலிலே வரும்படி யானைகளை நிரைத்து அழைப்பித்து ஆடியென்றவாறு. 8 அயிரை பரைஇயென்றது தன்னுட்டு அயிரையென்னும் மலையில் வாழும் கொற்றவைக் கடவுளைத் தன்குலத்துள்ளார் செய்துவரும் வழிபாடு கெடாமல் தானும் வழிபட்டென்றவாறு. ஆற்றல் சான் முன்போடு (8) காடுபோந்த (10) எனக் கூட்டுக. 10. நெடும்பாரதாயனுர் முந்துறக் காடுபோந்தவென்றது தன்புரோகிதராகிய நெடும்பாரதாயனுர் தனக்கு முன்னே துறந்து காடுபோக அதுகண்டு தானும் துறவுள்ளம் பிறந்து துறந்து காட்டிலே போனவென்றவாறு.

## ஒப்புமைப் பகுதி.

2. **தன்கோனிறீஇ:** பதிற் பதிகம் 2: 6.

3. **அகப்பாவெறிந்து:** பதிற் 22: 26 ஒப்பு.

5. **கண்ணகன் வைப்பு:** "கண்ணகன் வைப்பி னுடு மூரும்" நற் 377: 2; "கண்ணகன் வைப்பின் மண்ணக மடந்தை' சிலப் 5: 3.

6. **கருங்களிறு:** "கருங்களிறு காரதிரும்" பு. வெ. மா. 289.

**களிற்று யானை:** "இருங்களிற் றியானை" "கொல்களிற்றியானை" "பெருங் களிற் றியானை" "வான்மருப்பிற் களிற்றியானை" பதிற் 35: 3; 46: 10; 71: 21; 80: 1; "சினப்போ, ரினக்களிற் றியானை" புற 290: 1-2; "பல்களிற் றியானை" பெருங் (2) 2: 45.

**யானைநிரை:** ' இருங்களிற் றினநிரை" "யானைப் பெருநிரை" அக 21:26; 333: 12; "இருங்களிற் றினநிரை" பெருங் (2) 13: 148.

**யானைப் புணர் நிரை:** பதிற் 28: 2 ஒப்பு.

7. **ஒருபகல்:** "ஒருபகல் முரசொடு, வெண்குடை யகப்படுத்து" அக 36: 20-1.

6—7. **நீராடற்குரிய நீரை யானையில் எடுப்பித்தல்:** சீவக 623; 2431.

8. **அயிரை பரைஇ:** "உருகெழு மரபி னயிரை பரைஇ" "உருகெழு மரபி னயிரை பரவியும்" பதிற் 88: 12; 90:19.

9. **ஒடுங்கா நல்லிசை:** பதிற் 14: 21 ஒப்பு.

9—10. **கேள்வி நெடும்பார தாயனுர்:** "கேள்வி. அந்தணர்" பதிற் 64:4-5; "கேள்வித், திறத்திற் றிரிவில்லா வந்தணர்" பரி. 'வானுரெழிலி 19: 20.

# நான்காம் பத்து

## 1. கமழ்குரற் றுழாய்

(31) குன்றுதலை மணந்து குழூஉக்கட லுடுத்த
மண்கெழு ஞாலத்து மாந்த ரோராங்குக்
கைசுமந் தலறும் பூசன் மாதிரத்து
நால்வேறு நனந்தலை யொருங்கெழுந் தொலிப்பத்
தெள்ளுயர் வடிமணி யெறியுநர் கல்லென
உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டுது பொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅய்
அலங்கற் செல்வன் சேவடி பரவி
நெஞ்சுமலி யுவகையர் துஞ்சுபதிப் பெயர
மணிநிற மையிரு ளகல நிலாவிரிபு
கோடுகூடு மதிய மியலுற் றாங்குத்
துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்
டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு
கருவி வானந் தண்டளி தலைஇய
வடதெற்கு விலங்கி விலகுதலைத் தெழிலிய
பனிவார் விண்டு விறல்வரை யற்றே
கடவு ளஞ்சி வானத் திழைத்த
தூங்கெயிற் கதவங் காவல் கொண்ட
எழூஉநிவந் தன்ன பரேரெறுழ் முழவுத்தோள்
வெண்டிரை முந்நீர் வளைஇய வுலகத்து
வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்ட னனையைம னீயே வண்டுபட
ஒலிந்த கூந்த லறஞ்சால் கற்பிற்
குழைக்கு விளக்காகிய வொண்ணுதற் பொன்னின்
இழைக்குவிளக் காகிய வவ்வாங் குந்தி
விசும்புவழங்கு மகளி ருள்ளுஞ் சிறந்த
செம்மீ னனையணின் றொன்னகர்ச் செல்வி
நிலனதிர் பிரங்கல வாகி வலனேர்பு
வியன்பணை முழங்கும் வேன்மூ சழுவத்
தடங்கிய புடையற் பொலங்கழ ஞோன்றாள்
ஒடுங்காத் தெவ்வ ருக்கறக் கடைஇப்

புறக்கோடை யெறியார்நின் மறப்படை கொள்ளுநர்
நகைவர்க் கரண மாகிப் பகைவர்க்குச்
சூர்நிகழ் தற்றுநின் றூனை
போர்மிகு குருசினீ மாண்டனை பலவே.

**துறை—செந்துறைப் பாடாண்பாட்டு.**
**வண்ணம்-ஒழுகு வண்ணம்.**
**தூக்கு—செந்தூக்கு.**
**பெயர்—கமழ்குரற் றுழாய் (8).**

**ப—ரை: 1—17.** குன்று தலை மணந்து-குன்றுகள் தன்னிடத்தே நெருங்கப் பெற்று, குழூஉ கடல் உடுத்த-பலபொருளும் திரளுதலையுடைய கடலை ஆடையாக உடுத்த, மண்கெழு ஞாலத்து மாந்தர் — அணுக்கள் பொருந்திய பூமியிலுள்ள மக்கள், ஓராங்கு கை சுமந்து அலறும் பூசல்-ஒருபெற்றிப் படக் கைகளைத் தலைக்குமேலே ஏந்தித் தம் குறையைக் கூறி வேண்டிக் கதறும் ஆரவாரம், நால் வேறு மாதிரத்து நன தலை-நான்காய் வேறுபட்ட திசைகளின் அகன்ற இடங்களில், ஒருங்கு எழுந்து ஒலிப்ப - ஒன்றாகத் திரண்டு எழுந்து ஒலிக்க, தெள் உயர் வடி மணி எறியுநர் கல்லென - தெளிந்த ஓசையையுடைய உயர்ந்த வடித்த மணியை அடிப்பவர் அம்மணியை எறிந்து ஆரவாரிப்ப, உண்ணு பைஞ்ஞிலம் பனி துறை மண்ணி-வரம் வேண்டி உண்ணாது கிடந்த மக்கட்டொகுதி குளிர்ச்சியையுடைய நீர்த்துறையிலே தீர்த்தமாடி, வண்டு ஊது பொலி தார்-வண்டுகள் ஊதுகின்ற அழகிய மார்பின் மாலையினையும், திரு ஞெமர் அகலத்து — திருமகள் பரந்த மார்பினையும், கண் பொரு திகிரி-நோக்கினார் கண்களை வெறியோடப்பண்ணும் ஆழிப்படையினையும், கமழ் குரல் துழாஅய் அலங்கல் செல்வன்—நறுமணம் கமழும் பூங்கொத்துக்களையுடைய துளசியால் தொடுத்த மாலையினையுமுடைய திருமாலின், சே அடி பரவி-சிவந்த திருவடியைப் புகழ்ந்து வணங்கி, நெஞ்சு மலி உவகையர் துஞ்சுபதி பெயர-வரம்பெற்று நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியுடையராய்த் தாம் தாம் துஞ்சுபதிகளிலே பெயரும்படி, மணி நிற மை இருள் அகல-நீலமணியின் நிறத்தையுடைய கரிய இருள் நீங்கும்படி, நிலா விரிபு கோடுகூடு மதியம் இயலுற்றுங்கு-நிலா விரிந்து கோடு கூடுதலையுடைய உவாமதியம் வானத்திலே சென்றாற்போல, துளங்கு குடி விழு திணை திருத்தி-பகைவரால் தளர்ந்த தன் குடிகளையும் சீரிய குடிகளையும் பண்டுபோல நிலைநிறுத்தி, முரசு கொண்டு-முரசின் பயன் கொண்டு, ஆண் கடன் இறுத்த - ஒருகுடியிற் பிறந்த ஆண்மகன் செய்யவேண்டிய கடன்களெல்லாம் செய்து முடித்த, நின் பூண் கிளர் வியன் மார்பு — நினது பேரணிகலங்கள் விட்டு விளங்குகின்ற அகற்சியையுடைய மார்பு, கருவி வானம் தண் தளி தலைஇய — மின் முதலிய தொகுதியையுடைய மேகம் குளிர்ந்த துளிகளைச் சொரிந்த, வட தெற்கு விலங்கி-வடக்குத் தெற்குத் திசைகளுக்கிடையேகுறுக்கிட்டு நின்று, விலகு தலைத்து-விளங்குகின்ற சிகரங்களையுடைத்தாகி, எழிலிய-அழகு பெற்ற, பனி வார் விண்டு-பனி ஒழுகும் மலையாகிய, விறல் வரை அற்று-வெற்றியினையுடைய இமயமலையை ஒப்பதாகும்.

18—20. பரு ஏர் எறும் முழவு தோள்—பருத்த அழகினையுடையவாகிய வலியினையுடைய முழவுபோலும் தோள்கள், கடவுள் அஞ்சி-தேவரை அஞ்சி, வானத்து இழைத்த—ஆகாயத்தில் அவுணர்கள் அமைத்த, தூங்கு எயில் கதவம் காவல் கொண்ட — தூங்குகின்ற மதிலின் கதவத்தைக் காத்தல்கொண்ட, எழூஉ நிவந்த அன்ன—கணைய மரம் மேலே எழுந்தாற்போன்றன.

21—3 நீயே - நீதான், வெண்திரை முந்நீர் வளைஇய உலகத்து-வெள்ளிய திரையினையுடைய கடல் சூழ்ந்த உலகத்தில், வண் புகழ் நிறுத்த-பெரிய புகழை நிறுத்திய, வகை சால் செல்வத்து - கூறுபாடமைந்த செல்வத்தினையுமுடைய, வண்டன் அனைய மன்-வண்டன் என்பவனைப் பெரிதும் ஒப்பை;

23—8. வண்டுபட ஒலிந்த கூந்தல் - வண்டுகள் படும்படி தழைத்த கூந்தலினையும், அறம் சால் கற்பின் — அறம் பொருந்திய கற்பினையும், குழைக்கு விளக்காகிய ஒள் நுதல்—காதணிக்கு விளக்கம் அளிப்பதாகிய ஒள்ளிய நெற்றியினையும், அ வாங்கு உந்தி-அழகிய வளைந்த கொப்பூழினையும் பொன்னின் இழைக்கு விளக்காகிய—பொன்னாலாகிய அணிகளுக்கு விளக்கம் அளிப்பதாகிய மேனியினையுமுடைய, தொல் நகர் நின் செல்வி—பழைய நகரிடத்தேயுள்ள நின் பெருந்தேவி, விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த செம்மீன் அனையள் — ஆகாயத்தே இயங்குகின்ற மகளிருள்ளே சிறந்தவளான அருந்ததியை ஒப்பாள்.

29—33. வியன் பணை—அகன்ற முரசுகள், நிலன் அதிர்பு இரங்கலவாகி - நிலம் அதிர முழங்காதனவாகி, வலன் ஏர்பு முழங்கும் — வெற்றி தோன்றி முழங்கும். வேல் மூசு அழுவத்து-வேற்படைகள் நெருங்கிய போர்க்களத்தில். அடங்கிய புடையல் - விரியாது அடங்கிய பனந் தாரினையும், பொலம் கழல் நோன் தாள்—பொன்னாற் செய்த வீரக்கழல் புனைந்த வலிய தாளினையுமுடைய, நின் மறம் படை கொள்ளுநர் — நின் வீரத்தினையுடைய படையைக் கொள்ளும் தலைவர், ஒடுங்கா தெவ்வர் ஊக்கு அற கடைஇ-மடிந்திராத பகைவரின் மனவெழுச்சி நீங்கும்படி படைகளைச் செலுத்தி, புறக்கொடை எறியார் - அதனால் அவர் கெட்டோடிய வழி முதுகுப்புறத்துப் படைக்கலங்களை எறியார்.

34—6. நின் தானை - நினது தானை, நகைவர்க்கு அரணமாகி-நின்பால் அன்புடையார்க்குப் பாதுகாப்பாகி, பகைவர்க்கு சூர் நிகழ்ந்தற்று—பகைவர்க்குத் தெய்வம்பற்றி வருத்தினாற் போல்வது; போர்மிகு குருசில்-போர்த்தொழிலில் மேம்பட்டுத் தோன்றும் தலைவனே, நீ பல மாண்டனை—நீ பலவும் மாட்சிமைப்பட்டனை.

முடிபு: நின்மார்பு பனிவார் விண்டு விறல்வரை யற்று; நின் தோள்கள் எழூஉ நிவந்தன்ன; நீதான் வண்டன் என்பவனை அனையை; நின் செல்வி செம்மீன் அனையள்; நின் மறப்படை கொள்ளுநர் புறக்கொடை எறியார்; நின்தானை நகைவர்க்கு அரணமாகிப் பகைவர்க்குச் சூர் நிகழ்ந்தற்று; அவ்வாற்றால் குருசில் நீ பலவும் மாட்சிமைப்பட்டனை என முடிபு செய்க.

ஆ—ரை. 1-17. மாந்தர் அலறும் பூசல் மாதிரத்து நனந்தலையில் ஒருங் கெழுந்து ஒலிப்ப மணி எறியுர் கல்லென உண்ணுப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணித் துழாய் அலங்கற் செல்வன் சேவடி பரவி நெஞ்சுமலி உவகைய ராய்த் துஞ்சுபதிப்பெயரக் கோடுகூடு மதியம் இயலுற்றுருங்குத் துளங்குகுடி திருத்தி முரசுகொண்டு ஆண்கடன் இறுத்த நின் வியன் மார்பு பனிவார் விண்டு விறல்வரை அற்று என்க.

ஞாலம் என்றது ஈண்டுச் சேரநாட்டை. அது குறியவும் நெடியவுமாகிய குன்றுகள் பல தன்னிடத்தே நெருங்கப்பெற்ற நாடாதலின் 'குன்றுதலை மணந்து' என்றும், மேல்பால் கடல்சூழ்ந்த நாடாதலின் 'கடலுடுத்த' என் றும் கூறினர். தலைமணந்த: தலை—இடம். இனி, தலை என்பதை அசைநிலை யாக்கி 'குன்றுதலை மணந்து—குன்றுகள் நெருங்கப்பெற்று' எனினுமமையும். குழூஉக்கடல்—சங்கு முத்து பவளம் முதலிய பலபொருளும் திரளுதலையுடைய கடல். "முந்நீர்ப் பிறந்த பவளத்தொடு சங்கு முத்தும்" (சீவக5) என்றுர் பிறரும். "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதற்கு 'அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும்; தன்னியல்பு குறைதலாவது: நீர்வாழுயிர் கள் பிறவாமையும் மணிமுதலாயின படாமையுமாம்.' என்ற பரிமேலழகர். உரையும் (குறள்7) ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. சேர நாட்டைச்சூழ்ந்த கடல் முத்து முதலியன உடைத்தாதல், "புணரிவளை ஞரல இலங்குநீர் முத்த மொடு வார்துகிரெடுக்கும், தண்கடற் படப்பை மென்பா லனவும்" (பதிற் 30; 6-8) என்பதனுலுமறிக. மாநில மடந்தைக்குக் கடல் ஆடையென்னும் நினைவினுயக் 'கடலுடுத்த' என உடைத்தொழிலாற் கூறினர். "அலைநீ ராடை மலைமுலை யாகத், தாரப்பே ரியாற்று மாரிக் கூந்தற், கண்ணகன் வைப்பின் மண்ணக மடந்தை" (சிலப் 5 1-3) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஞாலத்து மாந்தர் எல்லோரும் வந்தமை தோன்ற 'மண்கெழு ஞாலத்து மாந் தர்' என்றுர். மண்—அணு புற 2: 1 உரை. மண் என்னும் ணகாரப் புள்ளி யீற்றுச்சொல்லின் முன் கெழுவென்னும் சாரியை வருதல்,

"லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன்
னும்முங் கெழுவு முளப்படப் பிறவு
மன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னன" தொல். குற்றியலுக. 76.

என்னும் சூத்திரத்து 'அன்னமரபின் மொழியிடை' என்பதனுற் கொள்க. மாந்தர் யாவரும் ஒருபெற்றிப்படக் கைகளைத் தலைமேல் ஏந்தி நெஞ்சு நெக்குருக நினைந்து அலறுதலின் 'மாந்தர் ஓராங்கு கைசுமந்து அலறும்' என்றுர். 'ஓராங்கு-ஒருபெற்றிப்பட' புற 235: 15 உரை. ஓராங்கு அலறும் எனக் கூட்டுக. பூசல் ஒருங்கெழுந்து நால்வேறு மாதிரத்து நனந்தலை ஒலிப்ப என மாறிக் கூட்டுக. நால்வேறு மாதிரம் - வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என நான்காய் வேறுபட்ட திசை. பூசல் (3) ஒலிப்ப (4) பரவி (9) என முடிக்க. தெளிந்த ஓசையையுடைய உயர்ந்த மணியாதலின் 'தெள்

னுயர் வடிமணி' என்றார். வடிமணி-வடித்த மணி. பட்டினப் 232 நச்; பரி 17: 1 பரிமேல் மணி எறியுநர் கல்லென என்றது மணியை அடிப்பவர் தீர்த்தமாடுவோர் ஆடுதற்கு இது முகுத்தம்' என்று அறிந்து ஆடுதற் பொருட்டு மணியை எறிந்து ஆரவாரிப்ப என்றவாறு. எறியுநர்-வினைப் பெயர். இனி எறியுநர் என்றதனை வினையெச்ச முற்றாக்கி உண்ணுப்பைஞ் ஞிலம் மணியை எறிந்து தீர்த்தமாடுகின்றார்களாகக் கொள்ளலுமொன்று. பொன்னாற் செய்த நந்து நண்டு இறவு வாளை என்பவற்றை நீரிலிட்டுத் தீர்த்தமாடுதல் பண்டைநாள் மரபு இதனை,

"நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
வித்தி யலையில் விளைக பொலிகென்பார்" பரி 10: 85-6.

"நாணு ளுறையு நறுஞ்சாந்துங் கோதையும்
பூத்த புகையு மவியும் புலராமை
மறுஅற்க வான மலிதந்து நீத்தம்
வருஅற்க வையை நினக்கு" பரி 16: 52-5.

என்னும் பரிபாடற் பகுதிகளானும் அறிக. கல்லென-கல்லென்றும் ஓசை யுண்டாக.

உண்ணுப் பைஞ்ஞிலம் என்றது திருமால் கோயிலுள் வரம்வேண்டி உண்ணாது கிடந்து மக்கட்டொகுதியை. உண்ணாது நோன்பிருத்தல், "நன் பகற், பலவுடன் கழித்த வுண்டியர்" என்னும் திருமுருகாற்றுப்படையினும் காண்க. (முருகு 130-1) மண்ணி-மூழ்கி. புற 79: 1 உரை; 'குளித்து' சிலப் 28: 145 அரும்பத.

வண்டூது தாரினையும், திருஞெமர் அகலத்தினையும், கண்பொரு திகிரியினை யும் அலங்கலினையுமுடைய செல்வன் என்க. பூவானியன்ற மாலையாதல் தோன்ற 'வண்டூது தார்' என்றார். பொலிதார்-திருமாலின் மார்பிற் பொலி யுந் தார்.

'நேர்கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
போரடங் ககலம் பொருந்திய தார்போல்
திருவில் தேஎத்துக் குலைஇ" அக 175: 15-7.

என வருதல் காண்க. தாரைத் திருவினுக்கு அடை என்பாருமுளர். திருமகள் வீற்றிருக்கப்பெற்ற மார்பாதலின் 'திருஞெமர் அகலம்' என்றார். இதனை,

"திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை" பரி 1: 8.

"திருமறு மார்பநீ யருள வேண்டும்" 1: 36.

"மாயவன் மார்பிற் றிருப்போல்" கலி 145: 64.

என்னும் செய்யுட்பகுதிகளாலும் "பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப"— 'நிறந்தாற் பொன்போலத் தோன்றிய புகழப்படும் மறுவையுடைய மார்ப; திருமகளாதலால் புனைமறு என்றார்' (பரி 4: 59 பரிமேல்) எனவும், "திருமறு மார்பின் முந்நீர் வண்ணன்" - 'திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலும் நிறத்தையுடையவன்' (பெரும்பாண் 29-30 நச்) எனவும் வரும் உரைப்பகுதிகளாலும் அறிக.

பேரொளியையுடைய திகிரியாதலின் 'கண்பொரு திகிரி' என்றார்.

"இருவேறு மண்டிலத் திலக்கம் போல
நேமியும் வளையு மேந்திய கையால்" பரி 13: 8-9.

"விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
.........................................
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
.........................................
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்" சிலப் 11: 43.

"மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரமொக்கும்" நான்மணி. கடவுள்.

"அளவி லொளிகள் அலரா நிற்கும் படை" திருக்கோவை 180.

எனச் சான்றோர் கூறுதல் காண்க. திகிரி திருமாலின் வலத்திருக்கரத்தி லுள்ளது. இதனை, "பொன்னணி நேமி வலங்கொண்டேந்திய, மன்னுயிர் முதல்வனை" (பரி 1: 52-3)எனவும் 'பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந், தகைபெறு தாமரைக் கையினேந்தி'–பகையை வருத்தும் ஆழியையும் சங்கையும் அழகிய தாமரைக் கையி னகத்தே வலனு மிடனுமேந்தி' (சிலப் 11: 47-8 அடி நல்) எனவும் வருவனவற்றா லறியப்படும்.

கமழ் குரற் றுழாய் என்றது நாறுகின்ற பூங்கொத்துக்களையுடைய துழாய் என்றவாறு. "நக்கலங் துழாய் நாறிணர்க் கண்ணியை" (பரி 4: 58) "மருவாருந் துழாய்" (கம்ப. விராதன் வதை 58) எனப் பிறரும் கூறுதல் காண்க.

நாறுத பூவுடையதனை மிக நாறுவதொன்றுபோலச் சாதிபற்றிச் சொன்ன சொற்சிறப்பான் இச் செய்யுளுக்குக் **கமழ்குரற்றுழாய்** என்று பெயராயிற்று.

குரல்–கொத்து. 'கதிர்' எனினுமமையும். அலங்கல்–மாலை. திருக்கோவை 24 பேர். துழாயின் பூக்கள் மிகச் சிறியனவாகக் கதிரின்கண் அமைந்திருத்தலின் அக்கதிர்களை ஈரிலை பொருந்தக் கிள்ளி மாலை தொடுத்தலின் 'குரல் துழாய் அலங்கல்' என்றார். அலங்கல் திருமாலின் திருமுடியினும் திருமார்பினும் அணியப்பட்டது. "பூத்தண் துழாய் முடியாய்" (திருவாய்மொழி 7: 63) "நறுந்தார்த் துழாஅய் மேவன் மார்பினோய்" (பரி 13: 59-60) என வருவன காண்க. செல்வன் என்றது திருவனந்தபுரத்துத் திருமாலை. "புள்ளணி நீள்கொடிச் செல்வனும்" என்றார் திருமுருகாற்றுப்படையினும்.

திருமாலின் திருமேனி கருமைநிற முடைத்தாயினும் திருவடி செம்மைத்தாகலின் 'செல்வன் சேவடி' என்றார். "வள்ளிதழ்த் தாமரை அடியுங் கையுங் கண்ணும் வாயும்" என்றார் பரிபாடலினும். (பரி: 50-1) மறுபிறப் பறுக்கும் சேவடியாதலின் மக்கள் அதனைப் பரவுவாராயினர்.

"மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடி
மாஅ யோயே" பரி 3: 1-3.

என வருதல் காண்க. நெஞ்சுமலி உவகையர் என்றது வரம்பெற்று நெஞ்சு மலிந்த உவகையராய். என்றபடி துழாய்ச் செல்வன் சேவடியைப் பரவுதற் பொருட்டு வெவ்வேறு ஊர்களிலிருந்துவந்த மக்கட்டொகுதி தாம் தாம் துஞ்சுகின்ற பதிகளுக்கு மீண்டு செல்லுதலின் 'துஞ்சுபதிப் பெயர' என்றார்' பதிப்பெயரவென்னும் எச்சத்தினை மதியம் இயலுற்றாங்கு (12) என்னும் வினையொடு முடிக்க.

மையிருளகலக் (11) கோடு கூடு மதியம் இயலுற்றாங்கு(12) துளங்கு குடி திருத்தி (13) எனக் கூட்டிக் கரிய இருள் அகல முழுமதி செல்வது போல பகைவராலுண்டாகிய துன்பம் நீங்க அறிவு நிரம்பிய சேரன் தோன்றி நாட்டினை ஆட்சிபுரிந்து பகைவரால் தளர்ந்த குடிகளைப் பண்டுபோல நிலை நிறுத்தி எனவுரைக்க. இருளைத் துன்பத்தினுக்கும் கோடுகூடுமதியினைச் சேர னுக்கும் உவமையாகக் கொள்க.

> "............நெடியோய் திங்கள்
> நாணிறை மதியத் தனையை யிருள்
> யாவண தோநின் னிழல்வாழ் வோர்க்கே" புற 102: 6: 8.

என்பதும் 'உயர்ந்தோய் நீ திங்களாகிய நாள் நிறைந்த மதியத்தை ஒப்பை; நின் நிழற்கண் வாழுமவர்களுக்குத் துன்பமாகிய இருள் எவ்விடத்துள்ளது' என்னும் அப்பகுதியுரையும் ஈண்டறியற்பாலன.

மிகச் செறிந்த இருளாதல் தோன்ற 'மணிநிறமையிருள்' என்றார். மணி என்றது நீல மணியை. மை-கருமை. மையீரோதி மடமொழியோயே" (கலி 150: 23) என்புழிப்போல. "கோடு கூடு மதியம்-இரண்டு பங்கும் வந்து பொருந்திய மதியம், புற 67: 4 உரை. இனி, வளைவு தன்னிடத்தில் முழுவதும் கூடிய மதியம்' எனினுமமையும். கோடு-வளைவு. கலி 142: 4 உரை. கோடு கூடு மதியினை 'நாண் முதிர் மதியம்' என்பர் மாங்குடி மருதனார். (மதுரைக் 548). இயல் உற்று ஆங்கு-நடத்தலைச் சேர்ந்தாற்போல; என்றது சென் றாற்போல என்றபடி.

துளங்குகுடி விழுத்திணை திருத்தியென்றது தான் பிறத்தற்கு முன்னே பகையரசரால் தளர்ந்த குடிகளையும் சேரர் பெருங்குடியையும் தளர்வு நீக்கி நிலைபெறுவித்து என்றவாறு. துளங்குகுடி திருத்தியமை,

> "துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்" பதிற் 37: 7.
> "துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றிக்
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்" பதிற் 4-ம் பதி.

என வருவனவற்றானுமறியப்படும். குடி-இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர் எனக் கொள்ளினுமமையும். விழுத் திணை-சிறிய குடி புற 159 27 உரை. அரசர் பெருங்குடியாகலின் 'விழுத் திணை' என்றார். குமணன் பிறந்த குடியை "விறற் புகழ், வசையில் விழுத் திணைப் பிறந்த. இசைமேந் தோன்றல்" (புற 159: 26-8) என்புழி விழுத் திணையென பெருஞ்சித்திரனார் என்னும் நல்லிசைப் புலவர் கூறுதல் காண்க.

முரசுகொண்டு என்றது பகைவராற் பெருந் தலைவராயுள்ளார் கெட்டமையாற் சிலகாலத்துப் * பயன்கொள்வாரின்மையிற் பண்ணழிந்து கிடந்த பழமுரசினைத் தான் தோன்றி அதன் அழிவு தீர்த்து வென்றியாகிய அதன் பயன் கொண்டு என்றவாறு. முரசு வென்றிக்கேதுவாதல் "வலம்படு வியன்பணை" (பதிற் 17: 5) என்பதனாலும் 'போர் செய்து வருந்தாமற் பகைவர் வெருவியோட முழங்கி அரசனுக்கு வென்றி தன்பாலே படநின்ற முரசென்றவாறு' என்னும் அப்பகுதிப் பழையவுரையானும் அறியப்படும். இனி முரசு கொண்டு என்பதற்குப் பகைவரைக் களத்தே வென்று அவர் முரசினைக் கைக்கொண்டு என்றுரைப்பினுமமையும். "அரைசுபட வமருழக்கி, முரசுகொண்டு" என மதுரைக்காஞ்சியில் (128-5) வருதல் காண்க. முரசு கொள்ளுதற்கு துளங்கு குடி விழுத்திணை திருத்தியமையும் ஏதுவாதல் பற்றித் 'துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்டு' என்றார். "துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும்" (பதிற் 37-7) என வருதல் காண்க.

ஆண்கடன் இறுத்தவென்றது துளங்கு குடி விழுத்திணை திருத்துதல், முரசு கொள்ளுதல் முதலிய செயல்களால் அரசர் பெருங்குடியிற் பிறந்த ஓர் ஆண்மகன் செய்யவேண்டிய கடன்களெல்லாம் செய்துமுடித்தவென்றவாறு. 'ஆண்மக்களாயுள்ளார் தம் கீழ்வாரைக் காத்தற்பொருட்டு அவர்க்கு அவர் செய்யும் கடன்களெல்லாம் செய்து முடித்த' என்பர் பழையவுரைகாரர். 'துஞ்சுபதிப் பெயர (10) ஆண்கடனிறுத்த (14) என முடித்து வழி ஆறலைகள்வர் முதலாய ஏதங்களின்றித் தாம் தாம் துஞ்சுபதிகளிலே பெயரும்படி தன் ஆண்மைக் கடனை இறுத்தவென்று உரைப்பாருமுளர். ஈண்டு,

"அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்" பெரும்பாண் 39-41.

என்பது அறியற்பாலது இச்செயல்களுக்கெல்லாம் அவன் மார்பின் வலியே துவாகலின் 'ஆண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன் மார்பு' என்றார். பூண்-முத்தாரம். பதக்கம் முதலிய பேரணிகலங்கள் "ஆரந் தாழ்ந்த வணிகிளர் மார்பின்......வழுதி" (புற 59:1-2) எனவும். "திருமணி பொருத திகழ்விடு பசும்பொன், வயங்குகதிர் வயிரமோ டுறழ்ந்து பூண் சுடர்வர" (பதிற் 16: 15-6) எனவும் வருவன காண்க.

வானம் தண்டளி தலைஇயதும் வடதெற்கு விலங்கி விலகுதலைத் தெழிவியதுமாகிய பனிவார் விண்டுவாகிய விறல்வரையென்க.

இமய மலையில் வானம் மின்னு முழக்கு முதலாகிய தொகுதியுடன் மழையைப் பொழிதலின் 'கருவி வானம் தண்டளி தலைஇய விறல்வரை' யென்றார்.

"இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும்" (புற 34: 21-3)

* "விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம், பொறுக்குநரின்மையி னிருந்து விழிந் தனவே" (புற 63) என்பது ஈண்டறியற்பாலது.

எனப் பிறரும் கூறுதல் காண்க. கருவி வானம்-மின்னும் இடியு முதலாகிய தொகுதியையுடைய மழை. கருவி-தொகுதி. "கருவி தொகுதி" என்பது **தொல்காப்பியம்** (உரி 58). இனி, உலகம் இடையறுது நடத்தற்குத் துணைக் காரணமாகிய வானம் எனினுமமையும். தளி-துளி. "தளிமழை பொழியும் தண்பரங் குன்றில்" **மதுரைக் 263**. தலைஇய - பெய்த. **மலைபடு 1** நச். இமய மலை வடக்குத் தெற்குத் திசைகளினிடையே கிழக்கு மேற்காகக் குறுக்கிட்டுக் கிடத்தலின் 'வட தெற்கு விலங்கி' என்றார். விலங்குதல்-குறுக்கிட்டுக் கிடத்தல். குறிஞ்சி 99 நச். விலங்கி விலகுதலையென்க. ஒளிவிட்டு விளங்கும் சிகரங்களையுடைமையால் 'விலகு தலைத்து' என்றார். "பொற்கோட் டிமையம்" (புற 2: 24) எனவும் "மின்னுமிழ் வைரக்கோட்டு விளங்கொளி யிமையம்" (சீவக 2417) எனவும் வருவன காண்க. தலைத்து, குறிப்பு முற்றெச்சம். கீழ்ப்பாகத்தே பரந்த பசிய மரங்களினாலும் மேல்பாகத்தே பரந்த வெள்ளிய பனியினாலும் இடையறு திழியும் அருவியினாலும் பிறவற்றாலும் அழகு பொருந்திய மலையாதலின் 'எழிலிய வரை' என்றார். மேற்பாகத்தே பனியாறு ஒழுகாநிற்கும் மலையாதலின் 'பனிவார் விண்டு' என்றார். "பனிவார் சிமையம்" (மதுரைக் 148) என வருதல் காண்க. விண்டு-மலை. "பெய்து புறந் தந்து பொங்கலாடி, விண்டு சேர்ந்த வெண்மழை போல" **பதிற் 55: 14-5**. பனிவார் விண்டுவாகிய விறல்வரை என இருபெயரொட்டு. தன் பெருமையால் பிற மலைகளை வென்ற வெற்றியையுடைய மலையாதலின் இமய மலையை 'விறல் வரை' என்றார். நின்மார்பு (14) பனிவார் விண்டு விறல்வரையற்று (16) என முடிக்க. மார்புக்கு இமைய மலையை உவமை கூறுதலை "பனிவரை மார்பன்" (சிறுபாண் 240) "பொன்வரையன்ன பொருவி லாகத்து" (பெருங் (2)10-5) என வருவனவற்றாலுமறிக.

**18-20.** கடவுள்-தேவர். "வானத்து நிலைபெறு கடவுளும்" **பதிற் 21: 14-5**. கடவுளை அஞ்சியென இரண்டாவது விரிக்க. பகையஞ்சி - பாவத்தையஞ்சி எனப் **பரிமேலழகர்** உரைத்தலுங் காண்க. (குறள் 44 உரை) இனிக் கடவுளின் அஞ்சியென ஐந்தாவது விரிப்பினும் அமையும்.

> "அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
> எச்ச மிலவே பொருள்வயி னான" **தொல்.** வேற் மயங் 14-17.

என்பவாகலின். கடவுளுக்கு அஞ்சி வானத்துத் தூங்கெயிலை இழைத்தவர் அவுணர் என்பது "திறல் விளங் கவுணர் தூங்கெயில்" (தொல். களவு. சூ. 11 நச்மேற்) என்பதனால் அறியப்படும். தோள், 'தூங்கெயிற் கதவங் காவல் கொண்ட எழூஉ நிவந் தன்ன' என்க. "நனந்தலை யருப்பத்துக் கதவங் காக்குங் கணையெழு வன்ன, நிலம் பெறு திணி தோள்" (பதிற் 45: 9-11) எனப் பிறரும் கூறுதல் காண்க. எழு-கதவின் உட்புறத்தே குறுக்காகப் போடப் படும் கணைய மரம். இது யானை இடித்தழியாதவாறு கதவத்திற்குக் காவலாயமைதலின் கதவங் காவல் கொண்ட எழூஉ' என்றார். "காப்புடைய வெழூ" "எழூஉத் தாங்கிய கதவு" (புற 14: 2; 97-8) எனப் பிறரும் கூறுதல் காண்க. நிவந்தன்ன முற்று. பருத்த அழகினையுடையனவாகிய வலியினையுடைய

திரண்ட தோளாதலின் "பரேரெறும் முழவுத்தோள்" என்றார். எறும்-வலி. "எறும் வலியாகும்" என்பது தொல்காப்பியம். (உரி 92.) முழவுத் தோள்-முழவுபோலத் திரண்ட தோள். "முழவெனத் திரண்ட திண்டோண் மூரிவெஞ் சிலையினானும்" (சீவக 368) எனப் பிறரும் கூறுதல் காண்க.

'வண்டனனையைமனீயே' என்றதனால் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் இம் முடியுடைப் பெருவேந்தனுக்கு உவமை கூறுதற்கேற்ற பெருஞ்சிறப்பு வாய்ந்தவன் வண்டன் என்பது உணரப்படும். "உயர்ந்த தன் மேற்றே யுள்ளுங்காலை" என்பது தொல்காப்பியம். (உவம 3) இவன் அழியாப் பெரும் புகழையும் பலவகைச் செல்வங்களையுமுடையவனாய் விளங் கினமையின், "வெண்டிரை முந்நீர் வளைஇய வுலகத்து, வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து. வண்டன்" என்றார். வண்புகழ்-கொடை வீரம் முத லியவற்றானாய பெரிய புகழ். "இடையில் வண்புகழ்க் கொடைமையானும்" (தொல் புற 21: 19) எனப் பிறரும் கூறுதல் காண்க. வண்புகழ் - பெரிய புகழ் என நச்சினார்க்கினியரும் (முருகு 106 உரை) 'வளவிய புகழ்' என இளம்பூரணரும் (தொல். செய் 75 உரை) உரைப்பர். 'கொடைப் புகழ்' எனினுமமையும் அப்புகழ் உலகம் முழுவதும் பரந்த பெரும்புகழாதல் தோன்ற'வெண்டிரை முந்நீர் வளைஇய வுலகத்து, வண்புகழ்' என்றார். "ஞால நாறு நலங்கெழு நல்லிசை" (அகம் 181: 15) என்றார் பிறரும். முந்நீர்-நிலத் தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலையுடைய நீர். ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீர் ஆகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றா மாகலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதிய நீரெனின் "நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாதென்க. பெருங்கடலாதல் தோன்ற 'வெண்டிரை முந்நீர்' என்றார். "விரிதிரைப் பெருங்கடல்" (குறுந் 101) எனப் பிறரும்கூறு தல் காண்க. தமிழ்நாடு வடதிசையொழிந்த மூன்று திசைகளும் கடலாற் சூழப்பட்டமையின் 'முந்நீர் வளைஇய வுலகம்' என்றது தமிழ்நாடு எனக் கொள்ளல் அமையும். 'வடக்கின்கண் வேங்கடமலையும் தெற்கின்கட் குமரிக் கடலும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் ஒழிந்த கடல்களுமே தமிழ்நாட்டிற் கெல்லையென்று கூறுபடுத்த'......என அடியார்க்கு நல்லார் உரைத்தலும் காண்க. (சிலப் 8: 1-2 உரை). நிறுத்த வண்டன் என்க. வகை சால் செல்வம் என்றது வண்புகழை நிறுத்துதற்கு அடியாகிய பொருள் கல்வி முதலாகிய கூறுபாடமைந்த செல்வத்தை. 'வண்டனனையை மனீயே' என்றதனால் நார்முடிச் சேரலும் வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வமுடை யான் என்பது உணரப்படும்.

23-8. கூந்தலினையும் கற்பினையும் நுதலினையும் உந்தியினையுமுடைய தொன்னகர்ச் செல்வி செம்மீன் அனையள் என்க.

மயிற்கலாவம் போலத் தழைத்த நெடிய கூந்தலாதலின் 'ஓலித்த கூந் தல்' என்றார். "கலிமயில் கலாவத் தன்ன விவள், ஒலிமென் கூந்தல்"

(குறுந் 265) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஒலிந்த - தழைத்த. "ஒலிந்த பகன்றை" மதுரைக் 261. இயல்பானே நறுநாற்றமுடைய கூந்தல் என்பது தோன்ற 'வண்டுபட வொலிந்த கூந்தல்' என்றார். "வண்டுபடு நாற்றத் திருள்புரை கூந்தல்" என்றார் நற்றிணையிலும் (270). வண்டு நறுநாற்றத்திலே படும் என்பது 'மதுவுண்டு மகிழ்கின்ற வண்டு காள் மதுவுண்டு தேக்கிடுகின்ற தேன்காள் என்க. இவை நன்மணத்தே செல்லும்' (சீவக 392 நச்) என்பதனாலறிக. அறஞ்சால் கற்பு - அறக் கற்பு. காதிலணிந்த மகரக்குழை விளக்கமுறுதற்குக் காரணமாகிய அழகு கெழுமிய ஒண்ணுதலாதலின் 'குழைக்கு விளக்காகிய வொண்ணுதல்' என்றார். "குழை விளங் காய்நுதல்" (குறுந் 37: 4 பி-ம்)எனப்பிறருண்டும் வருதல் காண்க. குழை —மகரக்குழை. பொன்னின் இழைக்கு விளக்காகிய (26) செல்வி (28) எனக் கூட்டிப் பொன்னாலாகிய அணிகலங்களுக்கு விளக்கம் அளிப்பவளாகிய செல்வி எனக் கொள்க. 'இழைகிளர் இளமுலை — பூண்கள் விளங்குதற்குக் காரண மாகிய முலை' என நச்சினார்க்கினியர் உரைத்தல் (சீவக 195 உரை) ஈண் டறியற்பாலது. அணிகலங்களெல்லாம் பொன்னாற் செய்யப்பட்டமையின் 'பொன்னின் இழைக்கு' என்றார். அழகிய வளைந்த கொப்பூழாதலின் 'அவ்வாங் குந்தி' என்றார்.

"அசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீர்" குறிஞ்சி 140-1.

"அவ்வாங் குந்தி யமைத்தோளாய்" அக 390: 10.

எனப் பிறருங் கூறுதல் காண்க. அவ்வாங் குந்தி என்பதற்கு அழகிய உட் குழிந்த கொப்பூழ் எனினுமமையும். "நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப் பூழ்" (பொருந 37) எனவும் "வலஞ்சுழி யமை கொப்பூழ் கங்கையின் சுழி யலைக்கும்" (சீவக 172) எனவும் வருவன காண்க.

விசும்பு வழங்கு மகளிர் என்றது ஆகாயத்தில் விண்மீன் வடி வில் திரிதரும் தேவமகளிரை. அம்மகளிருள்ளும் சிறந்த செம்மீன் என்றது தெய்வக் கற்புடைய $அருந்துதியை. "கடவுளொருமீன் சாலினி" எனப் பரிபாடலினும் (5: 44) "வானத் தணங்கருங் கடவுள்" என அகநானூற்றி லும் (16: 18) அவளைச் சான்றோர் கூறுதல் காண்க. சேரன் பெருந்தேவி அருந்துதி போலும் சிறந்த கற்புடையளாதலின் "செம்மீ னனையள்நின் தொன்னகர்ச் செல்வி" என்றார். "வட மீன்போற் றொழுதேத்த வயங்கிய கற்பினாள்" (கலி 2: 21) என்றார் பிறரும். நின் செல்வி என இயையும். சேர குலத்தரசர் இடையறவு படாது வாழ்ந்து வருகின்ற பழைய நகராதலின் 'தொன்னகர்' என்றார். நகர்-கோயில்; அரண்மனை. நார்முடிச் சேரலின் பெருந்தேவி அத்தொன்னகர்க்கண் வாழ்தலின் அத்தேவியைத் 'தொன்னகர்ச் செல்வி' என்றார். செல்வி—இல்வாழ்க்கைச் செல்வத்தையுடையவள். "செல்வி

$ அருந்ததியை அருந்துதியென்றல் "அருந்துதி காணுமளவுஞ் சிலம்ப னருந் தவ ழயே" என்னுந் திருக்கோவையாரிற் (300) காண்க.

சீர் நகர்க்கென், வருந்தேரிதன்முன் வழங்கேல்'' என்னும் திருக்கோவையார் (329) உரையில் 'செல்வி-'இல்வாழ்க்கைச் செல்வத்தையுடையவள்' எனப் பேராசிரியர் உரைத்தமை காண்க. செல்வமாயிருப்பவள் எனினுமாம்.

*29–36.* போர்க்குச் செல்லுங்கால் நிலன் அதிர முழங்கிய போர் முரசுகள் களத்தே நிலனதிர முழங்காவாய் வெற்றி தோன்றி முழங்கலின் 'நிலனதிர் பிரங்கலவாகி வலனேர்பு, வியன்பணை முழங்கும் அழுவத்து' என்றார். நிலனதிர வெனத் திரிக்க. இரங்கலவென்பது ''நுடங்கல'' (கலி 45: 8) என்பதுபோ னின்றது. பணை பலவாதலின் இரங்கல எனப் பன்மையாற் கூறினர், ''தோடு கொண் முரசங் கண்கிழிந் தனவே'' (புற 238: 8) எனப் பிறரும் கூறுதல் காண்க. வலனேர்பு-வெற்றி தோன்றி' முல்லை 91 நச். இனி, 'வலத்தில் எழுந்து' எனினுமாம். அகன்ற கண்ணையுடைய பெருமுரசாதலின் 'வியன்பணை' என்றார். பணைமுழங்கும் அழுவம் எனக் கூட்டுக. அழுவம் என்றது போர்க்களப் பரப்பை. வேற்படைகள் நெருங்கிய போர்க்களப் பரப்பாதலின் 'வேன்மூ சழுவம்' என்றார். ''வேலீண் டழுவத்து'' (பதிற் 84:6) எனவும் ''ஒளிறுவே லழுவம்'' (அக 81: 12) எனவும் வருவன காண்க.

புடையலினையும் கழறோன்றுளினையும் உடைய (31) நின் படைகொள்ளுநர் (33) எனக் கூட்டுக. புடையல் என்றது பனந் தார். ''இரும்பனம் புடையல்'' என்றார் புறத்,நினும் (99: 5). வளரிளம் போந்தை யுச்சிக் கொண்ட ஊசிவெண்டோட்டாற் செய்த தாராதலின் 'அடங்கிய புடையல்' என்றார். சேரனின் அடையாள மாலையாகிய புடையலினை அவன் படைத் தலைவரும் அணிந்திருத்தலின் 'புடையற் படை கொள்ளுநர்' என்றார். ''இரும்பனம் புடைய லீகை வான்கழல்......அன்னோர் பெரும'' (பதிற் 42: 1-6) எனப் பிறுண்டும் வருதல் காண்க. ''ஆடவர் கொடை வீரத்தால் அணிவது கழ லென்றுமே'' (திவா) என்பவாகலின் 'கழ றோன் றுளினையுடைய படை கொள்ளுநர்' முன்பு செய்த போரில் வெற்றிபெற்ற வீரராவர். கழலைப் பொன் னாற் செய்து அணிதல், ''பொலங்கழற் கான்மேற் புனைவு'' (பு. வெ. மா. 246) என்புழிக் காண்க மடிந்திராத பகைவர் தம் ஊக்கம் துரப்பச் சேர னுடன் பொருதற்கெழுந்தமை தோன்ற 'ஓடுங்காத் தெவ்வர்' என்றார். ஓடுங்கா - மடிந்திராத கலி 40: 26 நச் அவர்க்குப் போர்செய்தற்கணுள்ள ஊக்கம் நீங்குமாறு படை கொள்ளுநர் படைக்கலங்களைச் செலுத்தலின் 'ஊக்கறக் கடைஇ' என்றும், அத்தெவ்வர் புறங்கொடுத்தவழி அவர்மேற் படைக்கலங்களைச் செலுத்தாத மறப்பண்புடையராகலின் 'புறக்கொடை யெறியார்' என்றும் கூறினர். வீரர்க்குப் புறக்கொடையெறியாமை சிறந்த பண்பாதல்,

> ''பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
> லூராண்மை மற்றத னெஃகு'' குறள் 773.

என்பதனாலுமறிக. புறக்கொடை எறியாது நிற்கும் பண்பைத் 'தழிஞ்சி' யென்னும் துறைப்பாற் படுத்து.

> ''அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
> கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று'' பு. வெ. மா. 55.

என்று அதன் இலக்கணங் கூறுவர் புறப்பொருண் வெண்பாமாலையாசிரியர். படை கொள்ளுநர் – தானை கொள்வார். என்றது படைத் தலைவரை. படைக்குத் தலைவருண்மை,

"அரும்படைத் தானை யமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்கு" சிலப் 26: 48-9.

"நிலமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்" குறள் 770.

என வருவனவற்றாலுமறியப்படும்.

34—5. தானையென்றது நால்வகைப் படையை. அத்தானை இடையூறு வராமல் அரண்போல நகைவரைப் பாதுகாத்தலின் 'நகைவர்க் கரணமாகி' என்றார். "வெரீஇய வேந்தர்க் கரணமாகிய வெருவரு புனற்றார்" (பதிற் 50: 10-11) என வருதல் காண்க. கொடுந்தெய்வம் பற்றினாரை மிக வருத்துதல் போலச் சேரன் தானை பகைவரை மிகவருத்துதலின், "பகைவர்க்குச், சூர்நிகழ்ந் தற்று நின் தானை" என்றார். "நிரைய வெள்ளம்" (பதிற் 15: 4) "நிரையத் தானை" (சிலப்: • 7) என்பன ஈண்டறியற்பாலன. சூர் – கொடுந்தெய்வம். குறிஞ்சி 225 நச். குருசில், அண்மை விளி. உடல் வலியாலும் புகழாலும் பலவகைச் செல்வங்களினாலும் கற்புடை மனைவியாலும் படைத் தலைவராலும் படையாலும் நார்முடிச்சேரல் மாட்சிமைப் பட்டமையின் 'மாண்டனை பலவே' என்றார்.

இதனாற் சொல்லியது அவற்குள்ள மாட்சிமையெல்லாம் எடுத்து உடன் புகழ்ந்தவாறாயிற்று.

## பழையவுரை.

ஒலிப்பப் (4) பரவி (9) என முடிக்க. 5-6. மணியெறிதலை உண்ணாப் பைஞ்ஞிலத்தின் தொழிலாக்கி, அவர்கள் மணியை யெறிந்து தீர்த்தமாடுகின்றார்களாகக் கொள்க. (6) உண்ணாப் பைஞ்ஞிலமென்றது அத் திருமால் கோயிலுள் வரம்வேண்டி உண்ணாது கிடந்த மக்கட்டொகுதி யென்றவாறு. எறியுநரென்றது வினையெச்சமுற்று. இனி எறியுநரென்பதனைத் தொழிற்பெயராக்கி, மணியையெறிவார், தீர்த்தமாடுவோர் ஆடுதற்கு இது முகுத்தமென்று அறிந்து வருதற்பொருட்டு அம்மணியை யெறிந்து ஆரவாரிப்பவென்றுரைப்பாரும் உளர். 8. கமழ்குரற்றுழாயென்றது நாறுகின்ற பூங்கொத்துக்களையுடைய துழாயென்றவாறு. நாறுத பூவுடையதனை மிக நாறுவதொன்றுபோலச் சாதிபற்றிச் சொன்ன சொற்சிறப்பான் இதற்கு, கமழ் குரற்றுழாய் என்று பெயராயிற்று. 9. செல்வனென்றது திருவனந்தபுரத்துத் திருமாலை. 10. பதிப் பெயரவென்னும் எச்சத்தினை மதியம் இயலுற்ருங்கு (12) என்னும் வினையொடு முடிக்க. உண்ணாப் பைஞ்ஞிலம் (6) நெஞ்சுமலியுவகையராய்த் தாம் தாம் துஞ்சுபதிகளிலே பெயரும்படி (10) மையிருளகலக் (11) கோடு கூடு மதியம் இயலுற்ருங்குத் (12) துளங்கு குடி விழுத்திணை திருத்தி (13) எனக் கூட்டி, உண்ணாது வரங்கிடந்த மக்கட்டொகுதி வரம்பெற்று நெஞ்சுமலிந்த உவகையராய்த் தாம்தாம் துஞ்சுபதி

களிலே பெயரும்படி இருள் அகல விரிந்து கோடு கூடுதலையுடைய உவா மதியம்....... இனி, துஞ்சுபதிப் பெயர (10) என்னுமெச்சத்தினை ஆண்கடனிறுத்த (14) என்னும் வினையொடு முடித்து, வழி ஆறலைகள்வர் முதலாய ஏதகளின்றித் தாம்தாம் துஞ்சுபதிகளிலே பெயரும்படி தன் ஆண்மைக் கடனையிறுத்தவென்று உரைப்பாருமுளர். 13. முரசுகொண்டென்றது சில காலத்துப் பயன்கொள்வாரின்மையிற் பண்ணழிந்துகிடந்த பழமுரசினைத் தான் தோன்றி அதன் அழிவு தீர்த்து அதன்பயன் கொண்டென்றவாறு. 14. ஆண்கடனிறுத்தவென்றது ஆண்மக்களாயுள்ளார் தங்கீழ் வாழ்வாரைக் காத்தற்பொருட்டு அவர்க்கு அவர் செய்யும் கடன்களெல்லாம் செய்து முடித்த வென்றவாறு. 16. விலங்கியென்றதனை விலங்க வெனத் திரிக்க. 17. பனிவார் விண்டுவாகிய விறல்வரையென இருபெயரொட்டு, கூந்தலினையும் கற்பினையும் (24) நுதலினையும் (25) உந்தியினையும் (26) உடைய தொன்னகர்ச் செல்வி (28) என மாறிக் கூட்டுக. 28. செம்மீன் - அருந்ததி 29. நிலனதிரவெனத் திரிக்க. 31. புடையலென்றது பனந்தார். புடையலினையும் கழலேனொருளினையுடைய (31) நின்படை கொள்ளுநர் (33) என மாறிக் கூட்டுக. (33) ஈண்டுப் படைகொள்ளுநரென்றது படைத்தலைவரையென்றவாறு.

நின் மார்பு (14) பனிவார் விண்டு விறல்வரையற்று (17); நின்றேள் கள் எழூஉநிவந்தன்ன (20); நீதான் வண்டனென்பவனை அனையை (23); நின் செல்வி செம்மீனனையள் (28); நின் மறப்படை கொள்ளுநர் புறக்கொடையெறியார் (33,; நின்றானை (35) நகைவர்க்கு அரணமாகிப் பகைவர்க்குச் (34) சூர் நிகழ்ந்தற்று (35); அவ்வாற்றாற் குருசில், நீ பலவும் மாட்சிமைப் பட்டனை (36) என வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது, அவற்குள்ள மாட்சிமையெல்லாம் எடுத்து உடன் புகழ்ந்தவாறாயிற்று.

## ஒப்புமைப் பகுதி.

1. குன்றுதலை மணந்து: பதிற் 30: 13 ஒப்பு.

1—2. கடலுடுத்த ஞாலம்: 'கடலக வரைப்பி னிப்பொழில்'பதிற் 14: 19.

2. மண்கெழு ஞாலம்: "இம்மண்கெழு ஞாலம்" பதிற் 69: 12; மண்டிணி கிடக்கை" அக 379: 6; "மண்டிணிந்த நிலனும்" புற 2: 1; "மண்டிணி ஞாலத்து"பு. வெ. மா. 35; "மண்டிணி ஞாலம்" சிலப் 26: 42.

ஓராங்கு: நற் 176: 9; குறுந் 38: 5; 257: 1; கலி: 50. 7; அக 15: 17; 39: 10; 65: 8; 235: 15; புற 235: 15; 304: 5; 326: 11; 370: 2.

3—4. மாதிரத்து நனந்தலை: "மாதிர நனந்தலை" நற் 347: 2.

4. நால்வேறு நனந்தலை: "நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த" பதிற் 69: 16.

5. வடிமணி: பதிற் 20: 11 ஒப்பு.

6. **பனித்துறை:** பதிற் *48: 4; 76: 12;* மதுரைக் *586;* நற் *58: 10;* ஐங் *172: 2; 174: 1; 192: 2;* கலி *127: 14;* அக *187: 21; 240: 8; 366: 6;* புற *235: 18;* சிலப்: *23: 10.*

7. **தார் அகலம்:** *"மார்புமலி பைந்தார்"* பதிற்: *11: 17.*

**வண்டுதுதார் அகலம்:** *"படுவண் டார்க்கும் பைந்தார் மார்பின்"* நற் *173: 8; "தாரொடு வண்டிமிருந் தாமவரை மார்ப"* பு. வெ: மா. *327.*

**திருஞெமர் அகலம்:** *"திருஞெமர் அகலத்துச் செங்கோல் வேந்தே"* சிலப் *28: 157.*

*7—9.* **திருஞெமர் அகலத்துச் செல்வன்:** *"திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை" "திருமறு மார்பநீ யருளல் வேண்டும்" "செய்யோள் சேர்ந்தநின் மாசி லகலம்"* பரி *1: 8; 1: 36; 2: 31; 4: 59; "மாயவன் மார்பிற் றிருபோல்"* கலி *145: 64; "வைய மளந்தான்றன் மார்பிற்றிரு"* சிலப் *17:* 'எடுத்து' *"மாயவன் மார்பிற் றிருமகள் போல"* பெருங் *(2) 1: 36.*

**கண்பொரல்:** *"கண்பொரக் கதிர்தெற" "கண்பொரு திமைக்கும் திண் மணி"* அக *81: 6-7; 282: 5; "கண்பொர விளங்குநின் விண்பொரு வியன் குடை"* புற *35: 19.*

*8—9.* **திகிரிச் செல்வன்:** *"தண்ணளி கொண்ட வணங்குடை நேமிமால்" "செருமிகு திகிரிச் செல்வ"* பரி *13: 6; 13: 58; "பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய, வாடுகொள் நேமியான்"* கலி *105: 71-2; "ஆழியான் தன் னிறம்போல்" 'மாயவன்றன் ......ஆழிபோல்'* திணைமாலைநூற் *96: 97; "வெல்கதிர் நேமிய வண்புகழ் மால்" "பொன்னணி திகிரியஞ் செல்வன்"* சீவக *220; 1203; "அருமறை முதல்வனை யாழிமாயனை"* வில்லி. வாரணு*1.*

**துழாய்ச் செல்வன்:** *"மண்மிசை யவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப் புண்மிசைக் கொடியோனும்" "துளவஞ் சூடிய வறிதுயி லோனும்" "எரி நகை யிடையிடு பிழைத்த நறுந்தார்ப், புரிமலர்த் துழாஅய் மேவன் மார்பினோய்" "நாறிணர்த் துழாயோன்"* பரி *8: 1-2; 13. 29; 13: 59-60; 15: 15; "தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே"* இனியவை கடவுள். *"வண்டுழாய் மாலையை மாயவன்மே லிட்டு'* சிலப் *17:* 'எடுத்துக்காட்டு' *"கண்ண னவன் இவன் மாறன் கமழ்துழாய்க் கண்ணி யவற்கிவற்கு வேம்புதார்" "புனலுடார் கோமானும் பூந்துழாய் மாலும்"* தொல். உவம சூ *32* மேற். *"நறுந்துழா யலங்கலான்"* கம்ப கைகேசி *71.*

*10.* **பதிப்பெயர்தல்:** *"இளையவர் பதிப்பெயரும் அருஞ்சுரம்"* அக *269:13.*

*12.* **கோடுகூடு மதியம்;** *"கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்"* புற *67: 4.*

*11—2.* **கோடுகூடு மதியம் நிலாவிரிபு:** *"குணமுதல் ஞெண்முதிர் மதியந்தோன்றி நிலாவிரிபு"* மதுரைக் *547-8.*

*13.* **துளங்குகுடி திருத்தல்:** *"துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்"* பதிற் *32: 7.*

**விழுத்தொடை:** *"விழுத்திணைச் சிறந்த, வாளின் வாழ்நர்"* **புற** *24: 28-9.*

*14.* **ஆண்கடன்:** *"ஆண்கடனுடைமையிற் பாண்கடனாற்றிய"* **புற** *201: 14.* *"ஆண்கடனுமாற்றை யாயுங்கால்"* **திணைநூற்** *82.* *"ஆண்கடனகற லதுநோன் றெருழுகுதல்"* **பெருங்** *(3) 7-7.*

**பூண்கிளர்மார்பு:** பதிற் *16: 16-7* ஒப்பு.

**வியன்மார்பு:** **பதிற்** *80: 5;* **நற்** *322: 8;* **ஐங்** *220: 3;* **கலி** *80: 24; 86: 33; 93: 2; 93: 30;* **ஐந் ஐம்** *29;* சிலப் *18: 38.*

*15.* மு. *"கருவி வானந் தண்டளி சொரிந்தென"* **பதிற்** *76: 10.*

**கருவி வானம்:** **பதிற்** *17: 11* ஒப்பு.

**தண்டளி:** பதிற் *24: 28* ஒப்பு.

**தலைஇய:** *"தலைப்பெய றலைஇய"* முரு 9; *"திருமழை தலைஇய"* **மலைபடு** *1.* *"அழிதுளி தலைஇய"* குறுந் *35: 4;* *"துளிதலைத் தலைஇய"* **அக** *4: 6.*

*17.* **விண்டு:** *"விண்டு சேர்ந்த வெண்மழை"* **பதிற்** *55: 15;* *"தென்புல மருங்கின் விண்டு நிறைய"* **மதுரைக்** *202.*

**பனிவார் விண்டு:** *"பனிபடு நெடுவரை"* **புற** *6: 1.*

**விறல்வரை:** பரி *18: 23;* அக *8: 6; 20: 5; 44: 7; 45: 7; 53: 7;* **அக** *179: 1;* **புற** *151: 2; 336: 8;* **நாலடி** *348;* **திணைமொழி** *7.*

*15—7* **தளிதலைஇய விறல்வரை:** *"புகையிற் பொங்கி வியல்விசும்பு புகந்து, பனியூர் அழற்கொடி கடுப்பத் தோன்றும், இமயச் செவ்வரை"* **அக** *265: 1-3;* *"இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக், கொண்டன் மாமழை பொழிந்த, நுண்பஃ றுளியினும்"* **புற** *34: 21-3.*

*14-7.* **மார்புக்கு இமயம்:** *"பனிவரை மார்பன்"* **சிறுபாண்** *240;* *"பனிவரை மார்பன் தனியனுகி"* *"பொன்வரை யன்ன பொருவி லாகத்து"* **பெருங்** *(1) 54: 131; (2) 10: 5.*

**பூண்கிளர் மார்பிற்கு வரை:** *"எரிகொடி கவைஇய செவ்வரை போலச் சுடர்ப்பூண் விளங்கு மேந்தெழி லகலம்"* **ஐங்** *353: 1-2.*

**தூங்கெயில்:** *"ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந் தூங்கெயில்"* **சிறுபாண்** *80-1;* *"ஒன்னு ருட்குந் துன்னருங் கடுந்திறற், றூங்கெயில்"* **புற** *39: 5-6;* *"விறல் விசும்பிற் றூங்கு மெயிலும்"* **பழமொழி** *155;* *"தூங்கெயின் மூன்றெறிந்த சோழர்கா ணம்மானை"* **சிலப்** *29:* *"வீங்கு நீர்"* *"தூங்கெயி லெறிந்த தொடிதோட் செம்பியன்"* **மணி** *1-4;* *"தேங்கு தூங்கெயில்"* **கலிங்க.** *இராச 17;* *"கூடார்தம், தூங்கு மெயி லெறிந்த சோழனும்"* **விக்கிரமசோழ னுலா** *8-9;*

*19—20.* **கதவங் காவல்கொண்ட எழூஉ:** *"எழூஉப் புறந் தரீஇப் பொன் பிணிப் பலகைக், குழூஉநிலைப் புதவிற் கதவு"* **பதிற்** *53: 15-6;* *"எழுவிட் டமைத்த திண்ணிலைக் கதவின்"* **புற** *341: 4.*

20. தோளுக்கு எழு: "எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்" "எழுவுறழ் திணிதோ ளெழுவர்" சிறுபாண் 49: 112 "எழுவுறழ் திணிதோ ளியறேர்ச் செழியன்" அக 209: 4. "எழுசமங்கடந்த வெழுவுறழ் திணிதோள்" "எழுவுறழ் திணிதோள்" "எழுமரங் கடக்கும் தாடோய் தடக்கை" புற 31: 11; 61: 16; 90: 10; "எழுவுறழ் திணிதோள் வேந்தன்" பு. வெ. மா 143. "எழுவளர்ந் தனைய திண்டோ ளிளையவர்" சீவக 2905. "எழுவுறழ் திணிதோள்" பெருங் (1) 47: 109.

பரேரெறுழ்: "பரேரெறுழ்த் தடக்கை" அக 148: 1.

எறுழ்ந்தோள்: "எறுழ்த்தோட்......தெவ்வர்" பதிற் 80: 7-9. "வாளுடை யெறுழ்த்தோள்" அக 21: 16.

பரேரெறுழ் தோள்: "படலைக் கண்ணிப் பரேரெறுழ் திணிதோள்" பெரும்பாண் 60; "பரேரெறுழ்த் திணிதோள்" நெடுநல் 31.

முழவுத்தோள்: மதுரைக் 99; பரி 5: 11; அக 61: 15; 386: 6; புற 50: 12; 88: 6; பு. வெ. மா. 114; 159. சீவக 368; 785; 1593; 1519: 1981.

21. வெண்டிரை முந்நீர்: "வெண்டிரைப் பரப்பில்" பெரும்பாண் 457 "கடலி வெண்டலைப் புணரி" குறுந் 144: 1-2; "வெண்டிரை வாலெக்கர் வாய் சூழும்" கலி 124: 3-4; "வெண்டலைப் புணரிக் குடகடல்" 'குடகடல் வெண் டலைப் புணரி" "வெண்டலைப் புணரி" புற 2: 10; 31: 13-4; 55-18.

முந்நீர் வளைஇய வுலகம்: பதிற் 19: 19 ஒப்பு.

22. வண்புகழ்: "உரைசால் வண்புகழ்" அக 303: 10.

21—2. உலகில் புகழை நிறுத்தல்: பதிற்: 14: 21 ஒப்பு.

23—4. கூந்தலில் வண்டுபடல்: பதிற் 14: 14 ஒப்பு

24. ஒலிந்த கூந்தல்: குறிஞ்சி 2; நற் 6: 10; 141: 12; 197: 6; 260: 8; 295: 2; குறுந் 225 6-7; கலி 64 6; புற 109: 16; 146: 9; 306: 3.

26. அவ்வாங்குந்தி: "அவ்வாங் குந்தி யஞ்சொற் பாண்மகள்" அக 126: 9; "வளைந்து வாங்கு நுசுப்பின் அவ்வாங் குந்திக், கற்புடை மடந்தை" புற 383: 12: 3.

28. கற்புடை மகளிர்க்கு அருந்ததி: 'காமர் கடவுளு மாளுங் கற்பிற் சேணுறு நறுநுதற் சேயிழை" "வாழ்நாளறியும் வயங்கு சுடர் நோக்கத்து, மீனொடு புரையுங் கற்பின், வாணுதலரிவை" பதிற் 65: 9-10; 86: 18-20. "பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ் சிறுமீன், புரையுங்கற்பி னறு நுதல், வளைக்கை மகடூஉ" பெரும்பாண் 302-4; அந்ததி யனைய கற்பிற் ......ருயே" ஐங் 442: 4-5; "வடமீன் புரையுங் கற்பின் மடமொழி யரிவை" புற 122: 4; அருந்ததிக் கற்பினாள் தோளும்" திரிகடுகம் 1-5; பொருந்திய வுலகினுட் புகழ்கண் கூடிய, வருந்ததி யகற்றிய வாசில் கற்பினுய்" சீவக 327; "தீதிலா வடமீனின் திறமிவ டிறமென்றும்" "வடமீன் கற்பின் மனை யுறை மகளிர்" சிலப் 1: 27; 5: 229.

30 வியன்பணை: பதிற் 17: 5 ஒப்பு.

30. போர்க்களத்தில் பணைமுழங்கல்: "முரசுடைப் பெருஞ்சமத் தரசு படக் கடந்து" "முரசுடைப் பெருஞ்சமம்" "போர்ப்புறு தண்ணுமை யார்ப் பெழுந்து நுவல, நோய்த்தொழின் மலைந்த வேலீண் டழுவத்து" பதிற் 14: 19; 43: 9; 84: 15-6; "மாக்கண் முரச மோவில கறங்க......பெருநல் யானை போர்க்களத் தொழிய" மதுரைக் 733-5; "நெடுந்தேர்க் குட்டுவன், வேந்தடு களத்தின் முரசதிர்ந் தன்ன" நற் 395: 4-5; "முரசுபா டதிரவேவி, யரசுபடக் கடக்கு மருஞ்சமத் தானே" "முரசுமா றிரட்டு மருந்தொழிற் பகைதணிந்து" ஐங் 426, 450; "அரசுபடக் கடந்த வாஞைச் சீற்றத்தவன், முரசதிர்பவை போன்" பரி 22: 3-4; "சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின், இமிழிசை முரசம் பொருகளத் தொழிய" "இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத், தெம்முனை சிதைத்த ஞான்றை" "இடியுமிழ் முரசம் பொருகளத் தியம்ப, வென்றுகொடி யெடுத்தனன் வேந்தனும்" அக 246: 10-11: 251: 9-10: 354: 2-3; "சிலைத்தார் முரசங் கறங்க, மலைத்தனை" "திண்பிணி முரச மிழு மென முழங்கச், சென்றமர் கடத்தல் யாவது" "அரவெறி யுருமின் முர செழுந் தியம்ப......அருஞ்சமந் ததையத் தாக்கி" "முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு, மரசுடன் பொருத வண்ணல்" "உருமுரற் றன்ன வுட்குவரு முரசமொடு, செருமேம் படூஉம் வென்றியரைஅ" "திண்பிணி முரச மிடைப் புலத் திரங்க, வாரமர் மயங்கிய ஞாட்பில்" புற 36: 12-3; 93: 1-2; 126: 19-21; 158: 1-2; 197: 5-6; 288: 4-5.

வென்முரசமுழவம். வேலீண் டழுவத்து" பதிற் 84: 16; ஒளிறுவே லழுவத்து" நற் 349: 7; "ஒளிறுவே லழுவம்" அக 81: 12; பு. வெ. மா. 155;

31. நோன்றாள்: பதிற். பதிகம் 2: 12 ஒப்பு.

கழல் தாள்: பதிற் 19: 3.

புடையலும் கழலும்: "மாயிரும் புடையன் மாக்கழல் புனைந்து" "இரும் பனம் புடைய வீகை வான்கழல்" "இரும்பனம் புடைய வீகை வான்கழல்" "இரும்பனம் புடையலொடு வான்கழல் சிவப்ப" "புண்ணுடை யெறுழ்த் தோட் புடையலங் கழற்கால்" பதிற் 37: 8; 42: 1; 57: 2; 80: 7; "புடை யலங் கழற்கால்" அக 295: 13; "ஈகையங் கழற்கா லிரும்பனம் புடையல்" புற 99: 5.

33. புறக்கொடை: 'புறக்கொடையைப் பெற்ற வலிய அரசன்' புற 11: 10–1 உரை. "பொருபடை மன்னர் நுங்கள் புறக்கொடை கண்டு" "புல் லிய கொடையை வென்று புறக்கொடை காணுமன்றே" சீவக 773; 1430.

மறப்படை: "மறப்படை நுவலு மரிக்குரற் றண்ணுமை. புற 270: 8; "மறப்படை நோன்ஞள் வத்தவர் பெருமகன்" "மடப்படை மன்னன்" பெருங் (1) 58: 2; (2) 18: 117.

34. நகைவர்: "நகைவ ராரா நன்கலஞ் சிதறி" பதிற் 43: 20.

நகைவர் பகைவர்: "பகைவ ராரப் பழங்க ணருளி, நகைவ ராரா நன் கலஞ் சிதறி பதிற் 37: 3-4; "பகைவர் புகழ்ந்த வாண்மை, நகைவர்க்குத் தாவின் றுதவும் பண்பின்" புற: 373: 35-6.

36. "மாண்டனை பலவே போர்மிகு குருசினீ" பதிற் 32: 1.

## கழையமல் கழனி.

(32) மாண்டனை பலவே போர்மிகு குருசினீ
மாதிரம் விளக்குஞ் சால்புஞ் செம்மையும்
முத்துடை மருப்பின் மழகளிறு பிளிற
மிக்கெழு கடுந்தார் துய்த்தலைச் சென்று
துப்புத்துவர் போகப் பெருங்கிளை யுவப்ப
ஈத்தான் றாஅ விடனுடை வளனும்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்
எல்லா மெண்ணி னிடுகழங்கு தபுந
கோன்ஞென்று மருண்டனெ னடுபோர்க் கோற்றவ
நெடுமிடல் சாயக் கொடுமிடல் றுமியப்
பெருமலை யானையொடு புலங்கெட விறுத்துத்
தடந்தா ணாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையு ணாடகப் படுத்து
வையா மாலையர் வசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுத லிறும்பூதாற் பெரிதே.

இதுவுமது.
பெயர்-கழையமல் கழனி (13)

ப—ரை. *1—8.* *போர் மிகு குருசில் - போர்த் தொழிலில் மேம்பட்டுத் தோன்றும் தலைவனே, நீ பல மாண்டனை - நீ பல குணங்களும் மாட்சிமைப் பட்டனை; மாதிரம் விளக்கும் சால்பும் செம்மையும் – திசைகளை விளங்கச் செய்யும் நற்குணங்களின் அமைதியும் நடுவுநிலைமையும், முத்து உடை மருப்பின் மழ களிறு பிளிற-முத்தையுடையவாகிய கொம்புகளையுடைய இளைய களிறுகள் பிளிறு நிற்க, மிக்கு எழு கடு தார்—போரில் வேட்கை மிக்கு எழுகின்ற கடிய தூசிப்படை, துய் தலை சென்று – பகைவரது நுகர்ச்சிக் குரிய நாட்டினிடத்தே சென்று, துப்பு துவர் போக - வலியின்கண் முற்றுக உயர்ந்து நிற்கவும், பெரு கிளை உவப்ப – பாணர் முதலிய இரவலரின் பெரிய சுற்றம் உவப்பவும், ஈத்து ஆன்று ஆறு இடன் உடை வளனும் - கொடுத் தலிலே அமைந்தும் குறைதல் அமையாத வளமுடைய செல்வமும், துளங்கு குடி திருத்திய வலம் படு வென்றியும் - தளர்ந்த குடிகளைத் திருத்திய மேன் மேலும் பலபோர் வென்றியுண்டாதற்குக் காரணமாகிய வென்றியும் முதலாகிய, எல்லாம் எண்ணின் இடு கழங்கு தபுந–எல்லாக் குணங்களும் எண்ணப் புகின் அவை எண்ணுதற்கு இடப்படும் கழற்சிக் காயும் எண்ணழிதற்குக் காரணமான எல்லையவாயிருக்கும்.*

*9—17.* அடுபோர் கொற்றவ—பகைவரைக் கொல்லும் போர்த் தொழிலில் வெற்றியையுடையவனே, ஒன்று கொன் மருண்டனென் – பல குணங்களில் ஒன்றைப் பெரிதும் யான் வியந்தேன்; அப்பலவற்றுள்ளும் வியப்பான குணம் யாதெனின், நெடுமிடல் சாய – அஞ்சியென்னும் தலைவன் கெட, கொடுமிடல் துமிய - கொடிய வலியாற் செய்யும் போர் கெட, பெருமலை யானையொடு புலம் கெட இறுத்து-பெரிய மலைபோன்ற யானைப்படையொடு அவர் நாடு கெடும்படி மேற்சென்று தங்கி, தட தாள் நாரை படிந்து இரை கவரும்-நெடிய காலையுடைய நாரை தங்கி இரையைக் கவர்ந்துண்ணும், முடந்தை நெல்லின் கழை அமல் கழனி–கதிர்க் கனத்தாலே வளைந்து முடமான நெல்லினது மூங்கில்போலும் தாள்கள் நெருங்கிய கழனிகளையுடைய, பிழையா விளையுள் நாடு அகப்படுத்து–தவறுத விளைதலையுடைய நாட்டைப் பகைவர் செய்த குற்றத்திற்குத் தண்டமாக அகப்படுத்திக்கொண்டு, வையா மாலையர் – ஒரு தன்மையில் வைத்து எண்ணப்படாத இயல்பையுடையவராகிய. வசையுநர் கறுத்த பகைவர் தேஎத்தாயினும் - தங்கள் பகைவர்களை வெகுண்டிருந்தலை தொழிலாகவுடைய பகைவரிடத்தாயினும், நீ சினவாயாகுதல் பெரிது இறும்பூது-நீ சினவாதொழிகின்ற பொறை எமக்குப் பெரிதும் வியப்பாகாநின்றது.

முடிபு: போர் மிகு குருசில், நீ பல குணங்களும் மாட்சிமைப்பட்டன; சால்பும் செம்மையும் ஈத்தமைதலும் வென்றியும் முதலாகிய அப்பல குணங்களும் எண்ணப் புகின் இடுகழங்கு தபும் எல்லையவாயிருக்கும்; கொற்றவ அப்பல குணங்களிலும் ஒன்றைக் கொன்னே யான் வியந்தேன்; அப்பலவற்றுள்ளும் வியப்பான குணம் யாதெனின், பகைவர் செய்த குற்றத்திற்குத் தண்டமாக அவர் நாட்டை அகப்படுத்திக்கொண்டு வையா மாலையராகிய வசையுநர்க் கறுத்த அப் பகைவரிடத்தாயினும் நீ சினவாதொழிகின்ற பொறை எமக்குப் பெரிதும் வியப்பாகா நின்றது என்க.

ஆ—ரை: *1—8.* நார்முடிச் சேரல் பல குணங்களும் மாட்சிமைப் பட்டமையை 'மாண்டன பலவே' என முதற்கட் தொகுத்துக் கூறியது, அப் பல குணங்களிலும் சிறந்து நிற்கும் பொறையை மேல் விதந்து கூறுதலின். சேரல் போர்த்தொழிலிற் பகைவரினும் மிக மேம்பாடுற்று விளங்கினனுதலின் 'போர்மிகு குருசில்' என்றுர். "அரைசுபடக் கடக்கு மாற்றற். புரைசான் மைந்த" (பதிற் 34: 11–2) என மேல் வருதலுங் காண்க. மாண்டன –மாட்சிமைப் பட்டன. மாண்-மாட்சிமை. பல என்றது சால்பும் செம்மையும் முதலாகிய பல குணங்களை. மாதிரம் விளக்கும் சால்பும், மாதிரம் விளக்கும் செம்மையும் எனத் தனித்தனி கூட்டுக. சேரலின் சால்பினுலும் செம்மையினுலும் பசி பிணி முதலியவற்றினீங்கி வசியும் வளனும் சுரக்கப்பெற்று நாடு முழுதும் சிறந்து விளங்குதலின் 'மாதிரம் விளக்கும் சால்பும் செம்மையும்' என்றுர்.

"நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த
இலங்குகதிர்த் திகிரி முந்திசி னேரே" பதிற் 69: 16-7.

"குழவியைப் பார்த்துறாஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதலின் செம்மையிற் றரவாய்த்த" கலி 99: 4-5.

என வருவன காண்க. சால்பு-குணங்களின் அமைதி. இனிப் பல குணங்களின் நிறைவு எனினுமமையும். சான்றவர்-பல குணங்களானு நிறைந்தவர், எனப் பரிமேலழகர் உரைத்தலுங் காண்க. (குறள் 990 உரை) சேரன், அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் குணங்களையுடையனாகலின் 'சால்பும்' என்றார்.

"அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்" குறள் 983.

என்றார் திருவள்ளுவரும். சேரன் செம்மையுடையவனுதலாலும் அஃது அன்பு முதலிய ஐந்தனுள் அடங்காமையானும் செம்மையை வேறு கூறினார். செம்மை - நடுவுநிலைமை. கலி 99: 6 நச். நெறியின் வழீஇயினாரை அந்நெறி நிறுத்தற்பொருட்டுத் தண்டஞ்செய்யும் அரசனுக்குச் சமன்செய்து சீர் தூக்கும் கோல்போலமைந்து ஒருபாற்கோடாது ஒப்பநாடி யத்தக வொறுத்தல் கடனாதலின், சேரனின் அத்தகைய நடுவுநிலைமையைச் 'செம்மை என்றார்.

"செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகி" மதுரைக் 490-1.
"தெரிகோன் ஞெமன் போல வொருதிறம்
பற்ற லியரோ நிற்றிறஞ் சிறக்க" புற 6 9-10.

என வருவன ஈண்டறியற்பாலன.

களிறு பிளிற எழுகின்ற கடிய தார் துய்த்தலைச் சென்று துப்புத் துவர் போகவும் பெருங்கிளை உவப்பவும் ஈத்தான்று ஆறு இடனுடை வளன் என்க.

முத்தையுடைய முதிர்ந்த கொம்புடைய இளைய களிறுதல் தோன்ற 'முத்துடை மருப்பின் மழகளிறு' என்றார். "முத்துப்பட முற்றிய, வுயர் மருப்பேந்திய வரைமருள் நோன்பகடு" (புற 161: 16-7) எனப் பிறரும் கூறுதல் காண்க. களிறு பிளிற எழுந் தார் என்றது படையிலுள்ள களிறுகள் போர்வேட்கையால் கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்திப் பிளிறாநிற்க எழுகின்ற தார் என்றவாறு. போர்வேட்கை மிக்கு மிக விரைந்து செல்லும் தூசிப்படையாகலின் 'மிக்கெழு கடுந் தார்' என்றார். தார்-தூசிப் படை. "தார் தாங்கிச் செல்வது தானை" குறள் 767. துய் என்றது மக்கள் துய்த்தற்குரிய பகைவர் நாட்டை. தலைச்சென்று – இடத்தே சென்று' மதுரைக் 181 நச். தார் துய்த்தலைச்சென்று துப்புத்துவர் போக ஈத்து எனக் கூட்டி தூசிப்படை பகைவர் நாட்டினிடத்தே சென்று போரின்கண் வலியில் முற்றுக உயர்ந்து நிற்கும்படி கொடுத்து எனவுரைக்க. அரசன் பொருளை நிரம்பக் கொடுத்தலால் அவன் படையிலுள்ள வீரர்கள் மனமகிழ்ந்து தம்வலியெல்லாந் தோன்றப் பொருதனர் என்க. துப்பு-வலி. துவர-முற்ற. "துப்

புரவில்லார் துவரத் துறவாமை" (குறள் 1050) என்புழியும் இப்பொருட் டாதல் காண்க. பெருங்கிளை உவப்ப ஈத்து என்றது கூத்தர் பாணர் முதலிய இரவலரின் பொருளின்மையால் வருந்தும் பெரிய சுற்றம் மனமகிழும்படி நிரம்பக் கொடுத்து என்றவாறு. கிளை—சுற்றம். கூத்தர் பாணர் பெருங்கிளையுடையராதல், 'கோடியர் தலைவ......நின்னிரும்பே ரொக்கலொடு" (பொருந 57–61) "கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும் புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"(பெரும்பாண் 21-2 என வருவனவற்றானுமறிக. 'இரவலர் உவப்ப' என்னாது 'பெருங்கிளை யுவப்ப' என்றது சேரனது ஈகையின் மிகுதி தோன்றற் கென்க. ஈத்து என்னாது ஈத்தான்று என்றார், எக்காலத்தும் கொடுத்தலின். கொடுத்தும் குறைதலமையாத செல்வமாதலின் 'ஈத்தான்றானா இடனுடை வளனும்' என்றார் "பாடுநர், கொளக் கொளக் குறையாச் செல்வத்து' (பதிற் 8212) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஆனா-குறைதலமையாத. 'இடனுடை வளனும்' என்புழி வளன் என்றது செல்வத்தை. "செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு" (கலி 25: 19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இனி, "இடனின்றி யிரந்தோர்க் கீயாமை யிழிவென" (கலி 1: 19) என்புழி இடன் என்பது செல்வம் என்னும் பொருட்டாய் வருதலின் 'இடனுடை வளன்' என்பதற்குச் செல்வத்தின் மிகுதியும் எனப் பொருளுரைத்தலமையாதோவெனின், 'மாதிரம் விளக்கும் சால்பும் செம்மையும்......வலம்படு வென்றியும்' என எண்ணப்படுவனவற்றை உம்மை கொடுத்துக்கூறுகின்றாராகலின் இடனுடை வளனும் என்புழியும் வளன் என்பதே எண்ணப்படு பொருளாதலின் அமையாதென்க. இடன், மிகுதிப் பொருட்டாக வருதல் "இடனுடை வரைப்பின்" (பொருந 65) என்புழிக் காண்க. களிறு பிளிற (3) எழு கடுந்தார் சென்று (4) போக பெருங்கிளை உவப்ப (5) ஈத்து ஆன்று ஆனா இடனுடை வளன் (6) என்க. 'ஈத்தான்றானா இடனுடை வளன்' என்றாராயினும் இடனுடை வளனை ஈத்தமை தலை கருத்தாகக் கொள்க.

துளங்குகுடியென்றது தன்னால் துளக்கமுற்ற பகைவர் நாட்டுக் குடிகளை. திருத்துதல்—தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தல் இறையொழிதல் முதலிய செயல்களால் பண்டுபோல நிலைநிறுத்தல். அதனை வலம்படு வென்றியென்றது மேலும் பல போர்வென்றி படுதற்கு ஏதுவாகிய வென்றியாதல் பற்றி. எல்லாம் என்றது சால்பும் செம்மையும் முதலாகிய குணங்களை. அப்பல குணங்களும் எண்ணப் புகின் எண்ணுதற்கு இடப்படும் கழங்கு போதாமைக்குக் காரணமாகும் எல்லையவாயிருத்தலின் 'எல்லாமெண்ணி னிடுகழங்கு தபுந' என்றார், கழங்கினால் அளவிடுதல் "பரந்தாடு கழங்கழி மன்" (பதிற் 15: 5)என்பதனானுமறியப்படும். தபுதல்-அழிதல். ஈண்டுக் குணங்களின் மிகுதியாற் போதாவாதல். தபுந-வினைப்பெயர்த் திரிசொல்.

9—17. ஒன்றுகொன் மருண்டனென் என மாறிக்கூட்டுக. ஒன்று என்றது வையா மாலையராகிய வசையுநர்க்கறுத்த பகைவரிடத்தாயினும் சினவாதொழிகின்ற பொறையை. பல குணங்களையும் வியந்தேனாயினும் நின் பொறையை மிகவியந்தேன் என்பார் 'கொன்னொன்று மருண்டனென்' என்

ருர். இனிக் கிடந்தவாறே கூட்டிப் பெரிதாயிருப்பதொரு குணத்தை வியந்தேன் எனினுமமையும். "கொன்னொன்று இளக்குவல்" (மதுரைக் 207) எனப் பிறரும் கூறுதல் காண்க. கொன் என்னும் இடைச்சொல் பெருமை என்னும் பொருட்டாய் நின்றது. பகைவரைக்கொல்லும் போர்த்தொழிலையுடைய கொற்றவன்பாற் கடுஞ்சினம் தோன்றுவதன்றி மிக்க பொறை தோன்றுதல் மிக்க வியப்பாதலின் 'கொன்னொன்று மருண்டனென் அடுபோர்க் கொற்றவ' என்ருர்.

நெடுமிடல் சாயவும் அவன் கொடிய வலியாற் செய்யும் போர் சிதையவும் நார் முடிச்சேரல் வலிமிக்க யானைப்படையொடு பகைப்புலம் கெடும்படி மேற்சென்று தங்குதலின் 'நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமிய யானையொடு புலங்கெட விறுத்து' என்ருர். நெடுமிடல்-அஞ்சியின் இயற்பெயர். கொடுமிடல் என்புழி மிடல்-வலி. "அடங்காதார் மிடல் சாய" பு. வெ. மா 111. கொடுமிடல் - தம்மொடு எதிர்ந்தார்க்குக் கொடிய துன்பத்தைச் செய்யும் வலி. ஈண்டு "நிரைய வெள்ளம்" (பதிற் 15: 4) "நிரையத் தானை" (சிலப் 26: 37) என்பன அறியற்பாலன. ஈண்டு மிடல் என்றது மிடலாற் செய்யப்படும் போரினை. மலைபோன்ற பெரிய யானையைப் 'பெருமலை யானை' என்ருர். 'குன்றத் தன்னதோர் பெருங்களிறு" (புற 140: 7-8) என்ருர் பிறரும். புலங்கெடல் எரியூட்டல் முதலிய செயல்களால் என்க. "நாடுகெட வெரிபரப்பி" (மதுரைக் 126) எனப் பிருண்டும் வருதல் காண்க. 'யானையொடு புலங்கெட விறுத்து' என்றதனால் புலங்கெடல் படையானைகளால் எனக்கொள்ளினுமமையும். "யானை புக்க புலம்போலத், தானுமுண்ணு துலகமுங் கெடுமே" (புற 184: 10-11) எனப் பிறரும் கூறுதல் காண்க.

நென் முற்றுங் காலத்து வயலில் நிற்கும் நீரிலுள்ள மீன் முதலியவற்றை நாரைகள் படிந்து கவர்ந்துண்ணுதலின் 'நாரை படிந்திரை கவரும், முடந்தை நெல்லின் கழனி' என்ருர். "முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த, தடந்தாணாரை" (பதிற் 29: 3-4) என வருதல் காண்க. தடந்தாள் – வளைவினையுடைய கால் எனினுமமையும். படிந்து என்றது வரம்பு முதலியவற்றில் தங்கியிருந்து என்றபடி. இரை–அயிரை முதலியன. கவரும் கழனி என்க. முடந்தையாகிய கழையென்க. நெல்லின் கழை-நெல்லினது கழை.

நெற்றாளை அதன் பருமையாலே மூங்கிலோடு ஒப்புமைபற்றிக் கழையென்று பெயர் கொடுத்த சிறப்பானே இச் செய்யுளுக்குக் கழையமல் கழனி என்று பெயராயிற்று.

கழை-மூங்கில். இனி, "கரும்பு மூங்கிலும் புனர்தமுங் கழையெனல்" எனப் பிங்கலந்தையில் (10: 294) வருதலின் கழை என்பதற்கு கரும்பு எனக் கொள்ளினு மமையும். நெல்–கரும்புபோற் ருேன்றல், "செங்நெலே கன்னல் காட்ட" (வில்லி நிரைமீட்சி 106) "கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன"(பெரியபுரா. நாட்டுச் 15)'கழைபோல் வளர் நெல்-கரும்புபோல் வளரப்பட்ட நெல்; கழை-கரும்பு. (தஞ்சைவாணன் கோவையுரை) என வருவனவற்ருனு மறியப்படும். நெல் பலவாகக் கிளைத்தெழுதலால் அவற்றின் தாள்கள் நெருங்கின வயலாதலின் 'கழையமல் கழனி' என்ருர். 'அமல்

-நெருங்கல்" தொல். புற. சூ. 14 இளம்பூரணர். கழனியையுடைய நாடு என்க. காலந் தப்பாமற் பெய்கின்ற மழையால் தவறாத விளைதலையுடைய நாடாதலின் 'பிழையா விளையுள் நாடு' என்றார். "மழையொழுக்கறாப் பிழையா விளையுள்" என்றார் மதுரைக்காஞ்சியினும். (507). இதனால் பகைவர் நாட்டு வளங் கூறினார். அகப்படுத்தல் - கைக்கொள்ளல். இறுத்து (11) அகப்படுத்து (14) என முடிக்க.

வையா மாலையராகிய பகைவர்; வசையுநர்க் கறுத்த பகைவர் எனத் தனித்தனி கூட்டுக. வையாமாலையரென்றது ஒரு தன்மையில் வைத்து எண்ணப்படாத இயல்பையுடையார் என்றவாறு. 'ஒன்றில் வகைப்படாத இயல்பையுடையார்' என்பர் பழையவுரைகாரர். மாலை-இயல்பு. "மாலை யியல்பே" என்பது தொல்காப்பியம் (உரி 16) வசையுநர்க் கறுத்த பகைவர் என்றது தங்கள் பகைவரோடு செற்றங் கொண்டாடாது ஒழிந்திருக்கவேண்டு மளவினும் ஒழியாது அவர்களை அக்கடப்பாடின்றி வெகுண்டிருத்தலே தொழிலாகவுடைய பகைவரென்றவாறு. வசையுநர் - வசைசொல்லுதலை யுடையவர். என்றது பகைவரை. வசை-குற்றம். வசையுநர் என்றது பெயர்த்திரி சொல். இனிக் ககரவொற்றின்றி 'வசையுநர் கறுத்த' என்பது பாடமாயின் வினையெச்ச வினைக்குறிப்புமுற்றுத் திரிசொல்லாக்கி வசை சொல்லுதலை யுடையராய் வெகுண்ட பகைவர் எனவுரைக்க. நெடுமிடல் என்பானும் அத்தகைய வியல்புடைய னாகலின் அவன்போன்ற பகைவரை 'வையாமாலையர் வசையுநர்க் கறுத்த பகைவர்' என்றார். அத்தகையராகிய சினங்கொள்ளுதற்குரிய பகைவரிடத்தும் அவர்செய்த குற்றத்திற்குத் தண்டமாக அவர் நாட்டை அகப்படுத்திக்கொண்டு சினவாதொழிகின்ற பொறை எமக்குப் பெரிதும் வியப்பாகா நின்றது என்பார், 'நாடகப்படுத்து, வையா மாலையர் வசையுநர்க் கறுத்த பகைவர் தேஎத்தாயினும், சினவா யாகுதல் இறும்பூதாற் பெரிதே' என்றார். இறும்பூது-வியப்பு. பரி 4: 4 பரிமேல்; 'அதிசயம்' மதுரைக் 487 நச். ஆல்-அசை.

இதனாற் சொல்லியது அவற்குள்ள பல குணங்களையும் உடனெண்ணிப் புகழ்ந்து அவற்றுட் பொறையுடைமையைமிகுத்துப் புகழ்ந்தவாறாயிற்று.

## பழையவுரை.

8. இடுகழங்கு தபுநவென்றது இடுகழங்கும் அலகு தபுதற்குக் காரணமாக இருப்பன வென்றவாறு. தபுநவென்றது பெயர்த் திரிசொல். 10 கெடுமிடல் - அஞ்சி இயற்பெயராம். கொடுமிடல்; மிடல் - வலி; என்றது வலியாற் செய்யப்படும் போரினை. 13. முடமாகிய கழையென இருபெயரொட்டு. நெல்லின் கழை நெல்லினது கழை. நெற்றாளை அதன் பருமையாலே மூங்கிலோடு ஒப்புமைபற்றிக் கழையென்று பெயர் கொடுத்த சிறப்பான் இதற்கு, கழையமல் கழனி என்று பெயராயிற்று. 15 வையாமாலையரென்றது ஒன்றில் வகைபடாத இயல்பையுடையாரென்றவாறு. 15-6. வசையுநர்க் கறுத்த பகைவரென்றது தங்கள் பகைவரொடு செற்றம் கொண்டாடாது ஒழிந்

திருக்கவேண்டுமெனவினும் ஒழியாது அவர்களை அக்கடப்பாடன்றி வெகுண்டிருத்தலே தொழிலாகவுடைய பகைவரென்றவாறு. வசையுநர் – பகைவர்; வசையுநரென்றது பெயர்த்திரிசொல். இனிக் ககரவொற்றின்றி 'வசையுநர் கறுத்த' என்பது பாடமாயின், அதனை வினையெச்ச வினைக்குறிப்பு முற்றுத் திரிசொல்லாக்கி, வசைசொல்லுதலுடையவராய் வெகுண்ட பகைவரென்று உரைப்பாருமுளர்.

குருசில், நீ பல குணங்களுமாட்சிமைப்பட்டனை (8); அப்பல குணங்களும் எண்ணப் புகின், இடுகழங்கு தபும் எல்லையவாயி நக்கும் (8); கொற்றவ, பல குணத்தினும் ஒன்றைக் கொன்னே யான் வியந்தேன் (9); அப்பலவற்றுள்ளும் வியப்பான குணம் யாதெனின் பகைவர் செய்த குற்றத்திற்கு தண்டமாக அவர் நாட்டை அகப்படுத்திக் கொண்டு (14) வையாமாலையராகிய வசையுநர்க்கறுத்த (15) அப்பகைவரிடத்தாயினும் நீ (16) சினவாதொழிகின்ற பொறை எமக்குப் பெரிதும் வியப்பாகா நின்றது (17) என வினைமுடிவு செய்க.

இதனாற் சொல்லியது அவற்குள்ள பல குணங்களையும் உடனெண்ணிப் புகழ்ந்து அவற்றுட் பொறையுடைமையை மிகுத்துப் புகழ்ந்தவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. பதிற் 31: 36 ஒப்பு.

2. சால்பும் செம்மையும்: "சால்பும் செம்மையு முளப்படப் பிறவும்" "வண்மையுஞ் சால்பும் அறனும்" பதிற் 74: 19; 82: 14; "சால்புஞ் செம்மையுமுடையை யாதலின்" நற் 196: 4.

3. முத்துடைமருப்பின் மழகளிறு: "பெருங்களிற்று, முத்துடை வான்கோடு" முருகு 304-5: "யானை முத்தார் மருப்பின்" குறிஞ்சி 35: 6; "யானை முத்துடை மருப்பின்" மலைபடு 517: 8; "செங்கோட், டொலிபன் முத்த மார்ப்ப......மடப்பிடி தழீஇய தடக்கை வேழம்" நற் 202: 1-4; 'முத்து நிறைந்த யானைக் கொம்பில்' கலி 40: 4 நச் "யானை வெண்கோடு கொண்டு ......அகழ்வோன்...... வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க......முத்தமொடு" அக 282: 3–7; சிறுகண் யானை வெண்கோடு பயந்த, வொளிதிகழ் முத்தம்" புற 170: 10-11; ' முத்துடை வான்கோடு" தொல். உவம சூ 15 பேர் மேற். "முத்துடைக் கோட்ட களிறு" களவழிநாற் 37. "முத்துடை வான்மருப்பு" சீவக 83.

மழகளிறு: பதிற் 12: 12 ஒப்பு.

களிறு பிளிறுதல்: "வயக்களிறு......வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்" பதிற் 41: 7: 13; "கார்ப்பெய லுருமிற் பிளிறி......மையல் வேழ மடங்கலின்" குறிஞ்சி 162: 5; 'மதம் மிக்க வாரணம் அக்குரற்கு மாறுமாறுகப் பிளிறுதலானும்' பரி 8: 20 பரிமேல். "பெருமத யானையொடு பிடியினம் பிளிற்றும்" பெருங் (1) 51: 78.

**வலம்படு வென்றி:** *"வலம்படு வென்றி வாய்வாட் சோழர்" "வலம் படு வென்றியொடு சிலம்பகஞ் சிலம்ப"* **அக** *213: 21; 389: 22; "வலம்படு கொற்றம்"* **சிலப்** *25: 92.*

*9.* **கொன்னொன்று:** *"கொன்னொன்று கிளக்குவல் அடுபோ ரண்ணல்"* **மதுரைக்** *207; "கொன்னொன்று கூறுவன்" கொன்னொன்று கூறுவல் வாழி யர்"* **நற்** *233: 5-6; 266: 6-7.*

**அடுபோர்க் கொற்றவ:** *"அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ" "நின் னயந்து வந்தனென் அடுபோர்க் கொற்றவ"* **பதிற்** *42: 8; 55: 2; "அடு போர் வேந்தர்"* **மதுரைக்** *318; "அவையு நீயே யடுபோரண்ணல்"* **பரி** *13. 15; "அடுபோர்ச் சோழர்" "அடுபோர்ச் செழியன்"* **அக** *93: 4; 149: 13.*

**கொடுமிடல்:** *"கொடுமிடல் நாஞ்சிலான்"* **கலி** *36: 1.*

**பெருமலை யானை:** *"மலையுறழ் யானை" "களிற்றியானை, மாமலையிற் கணங்கொண்டு"* **பதிற்** *69: 1; 80: 1-2; "குன்றுறழ் யானை"* **பெரும்பாண்** *352; "வரைமருளு முயர் தோன்றல வினைநவின்ற பேர் யானை"* **மதுரைக்** *46-7; "உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய ...தாரொடு பொலிந்த வினை நவில் யானை" "வரைமருள் வேழம்"* **மலைபடு** *225: 7; 572; "வரைபோல் யானை"* **நற்** *390: 9; "புகர்முக வேழ மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉநின், குன்றுகெழு நன்னாட்டு"* **ஐங்** *239: 1-3; "மங்குன் மழைமுழங் கிய விறல்வரையாற் .....கொடிமின்னால் .....ஒண்சுட ரோடைக் களிறேய்க்கு நின் குன்றத்து" "வரைபல புரை யுயர்கயிறணி பயிரொழின், மணியணி யானை"* **பரி** *18: 23-7; 'மாநிலம்' 68-9; "தண்ணறுங் கோங்க மலர்ந்த வரை யெல்லாம், பொன்னணி யானைபோற் றோன்றுமே" "வரைபுரை செலவின், வயங்கெழில் யானை" "பிடிதுஞ்சு வன்ன வறை"* **கலி** *42: 16-7. 43: 21-2; 108: 40; "பிடிமிடை களிற்றிற் றோன்றுங், குறுநெடுந் துணைய குன்றமும்" "முத்தம் வரைமுதல் சிதறியவைபோல் யானைப், புகர்முகம் பொருத புதுநீ ராலி" "மலைமருள் யானை" "பிடிமடிந் தன்ன கன்மிசை" "நனைமுதிர் முருக் கின் சினைசேர் பெருங்கல் .....அழல்பொழி யானையி னையெனத் தோன்றும்" "பிடிமடிந் தன்ன குறும்பொறை" "வரைபுரை களிற்றொடு* **அக** *99: 13-4; 108: 2-4; 177: 15; 178: 6; 223: 5-7; 269: 6; 303: 9; "மலையெனத், தேனிறை கொள்ளும் இரும்பல் யானை" "வரைபோல......மைந்து மலிந்த மழகளிறு" "வரை புரையு மழகளிற்றின்" "நின் யானையு மலையிற் றோன்றும்" "மாப்புகை மலைசூழ், மஞ்சின் மழகளி றணியும்" "குன்றத் தன்ன களிறு"* **புற** *17: 34-5; 22: 5-8; 38: 1; 42: 1-2; 103: 6-7; 125: 9;*

**புலங்கெட:** *"புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்"* **பதிற்** *33: 6.*

12—3. **பதிற்** *29: 3-4.* ஒப்பு.

*13.* **கழையமல் கழனி:** *"கரும்பமல் கழனிய நாடு"* **பதிற்** *50: 3.*

*14.* **பிழையாவிளையுள்:** *"பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப, மழைபிணித் தாண்ட மன்னவன்"* **சிலப்** *11: 28-9; "மழைவளந் தருதலின் மன்னுயிரோங்கிப், பிழையா விளையுளும் பெருகிய தன்றே"* **மணி** *11: 90-1.*

**பிழையா விளையுளுடு:** "மழைவீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையு ளுடாயிற்று" சிலப் உரைபெறு.

*15—6.* **கறுத்த பகைவர்:** "கறுத்த தெவ்வர்" **பதிற் 39: 4.**

*17.* **இறும்பூதாற் பெரிது:** இறம்பூதாற் பெரிதே கொடித்தே ரண்ணல்" **பதிற் 33: 1.**

## வரம்பில் வெள்ளம்

(33) இரும்பூதாற் பேரிதே கோடித்தே ரண்ணல்
வடிமணி யணைத்த பணைமரு ணோன்றாட்
கடிமரத்தாற் களிறணைத்து
நெடுநீர துறைகலங்க
மூழ்த்திறுத்த வியன்றானையோடு
புலங்கெட நெரிதரும் வரப்பில் வெள்ளம்
வாண்மதி லாக வேன்மிளை யுயர்த்து
வில்விசை யுமிழ்ந்த வைம்முள் ளம்பிற்
செவ்வா யெஃகம் வளைஇய வகழிற்
காரிடி யுருமி னுரறு முரசிற்
கால்வழங் காரெயில் கருதிற்
போரெதிர் வேந்த ரோரூஉப நின்னே.

**துறை—வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.**
**வண்ணம்-ஒழுகு வண்ணம்**
**தூக்கு— செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.**
**பெயர்—வரம்பில்வெள்ளம்(6).**

**ப—ரை:** **1—6.** கொடி தேர் அண்ணல் - கொடியினையுடைத்தாகிய தேரினையுடைய தலைவனே, பெரிது இறும்பூது-இது பெரிதும் வியப்பாக இருந்தது;வடிமணி அணைத்த-வடித்த மணியைப் பக்கத்திலே சேர்த்தின, பணை மருள் நோன்தாள் களிறு—முரசென்று மருளும் வலிய கால்களையுடைய யானைகளை, கடி மரத்தால் அணைத்து - பகைவருடைய காவன்மரத்திற் கட்டி, நெடு நீர துறை கலங்க—ஆழமாகிய நீரையுடைய நீர்நிலைகளின் துறைகள் கலங்கும்படி, மூழ்த்து இறுத்த வியன்தானையொடு - மொய்த்துப் பகைவர் நாட்டு எல்லையின் முற்பாடு சென்றுவிட்ட தூசிப் பெரும்படையொடு, புலம் கெட நெரிதரும் வரம்பு இல் வெள்ளம் - இடமில்லையாக நெருங்கிச் செல்லும் கரையில்லாத படை வெள்ளம்.

*7—12.* வாள் மதிலாக - வாட்படைகள் மதிலாக, வேல் மிளை உயர்த்து—வேற்படைகளைக் காவற்காடாக உயர்த்த, வில்விசை உமிழ்ந்த அம்பின் வைமுள்—வில்லின் விசை கான்ற அம்பாகிய கூரிய முள்ளினையும், செ வாய் எஃகம் வளைஇய அகழியின் – முனைமுகத்திற் செல்லாது ஒழிந்த கூர்வேற்

கருவிகளாகிய சூழ்ந்த அகழியையும், உரறு முரசின் கார் இடி உருமின்-முழங்குகின்ற முரசுகளாகிய மேகத்தினின்று இடிக்கும் இடியேற்றினையு முடைய, கால் வழங்கு ஆர் எயில் கருதின் - காலால் நடக்கின்ற வெல்லுதற் கரிய அரணுதலைக் கருதின், போர் எதிர் வேந்தர்-நின்னொடு போர் எதிர்ந்த வேந்தர்' நின்னை ஒரு உப - பொரமாட்டாது நின்னை நீங்குவர்.

முடிபு: அண்ணல், இது பெரிதும் இறும்பூதாயிருந்தது; யாதெனின் வரம்பில் வெள்ளம் கால்வழங்கா ரெயிலாதலைக் கருதின் நின்னொடு போர ரெதிர்ந்த வேந்தர் பொரமாட்டாது நின்னை நீங்குவர்; இஃது அதுவென்க.

ஆ—ரை: 1—6. யானைகளைப் பகைவருடைய காவன் மரத்திற் பிணித் துத் துறை கலங்குமாறு பகைவர் நாட்டுட் சென்று இறுத்த வியன்றானை யொடு புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம் என்க.

இறும்பூதால்: ஆல், அசை. சேரல் முடியுடைப் பெருவேந்தனுகலின் 'கொடித்தே ரண்ணல்' என்றார். 'கொடித்தேர் வேந்தரும் குறுநில மன் னரு முதலாகவுடையோர்' என அடியார்க்கு நல்லார் உரைத்தலுங் காண்க. (சிலப் 3: 13 உரை). முடிவேந்தர்க்கு கொடித்தேரை அடையாக்கியுரைத்தல் "கொடித்தேர்ப் பொறைய" (பதிற் 73. 11) "கொடித்தேர்ச் செழியன்" (புற 24: 23) எனவருவனவற்றானு மறிக. அண்ணல், அண்மை விளி.

கயிற்றாற் பிணித்தலைச் செய்த வடிமணியைப் பக்கத்தே கொண்ட களிறாதலின், 'வடிமணியணைத்த களிறு' என்றார். "கயிறு பிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற், பெருங்கை யானை" (புற 3: 10-11) எனப் பிறரும் கூறுதல் காண்க. வடிமணி – வடித்த மணி பட்டினப் 232 நச். அணைத்த– சேர்த்தின. முருகு 200 நச். போர் யானைகளுக்கு மணியணைத்தல், "வடிமணி யிரட்டும், கடாஅ யானைக் கணநிரை யலற......மாநிலங் கடந்து" (பதிற் 20: 11-2) "படுமணி யிரட்டும் பாவடிப் பிணைத்தா, ணெடுநல் யானையுந் தேரு மாவும்" (புற 72: 3-4) என வருவனவற்றானு மறியப்படும். வடிமணியணைத்த எனக் களிறு பண்ணுதலமைந்தமை கூறியதனாற் படை, படைத்தகையொடு பாடுபெறச் சென்றமை பெறப்படும். வரைமருள் நோன் பகடாதல் தோன்ற அதன் கால்களைப் 'பணைமருள் நோன்றாள்' என்றார். களிற்றின் காலுக்குப் பணையை உவமை கூறுதலை, "பணைமரு ணோன்றாள்......நாகம்" (நெடுநல் 115-7) "பணைமரு ணெடுந்தாட் பல்பிணர்த் தடக்கைப், புகர் முகம்" (புற 371: 19-20) என வருவனவற்றானு மறிக. பணை–முரசு, நெடு நல் 115 நச். முரசின் விசேடம் எனக்கொள்ளினு மமையும்.

> "குணில்பொரக் குளிறின முரசம் வெள்வளை
> பணைபரந் தார்த்தன பம்பை வெம்பின" சீவக 2222.

என்புழி முரசின் வேறாகப் பணை கூறப்பட்டிருத்தலும் 'பணை - முரசின் விசேடம்' என நச்சினார்க்கினியர் உரையெழுதியிருத்தலும் ஈண்டறியற்பா லன. 'பெரும்பறை' என்பர் பரிமேலழகர். (பரி 7: 16 உரை) மருள்–உவம வுருபு. நோன்றாட் களிறு எனக் கூட்டுக. களிறு வியன்றானைக்கணுள்ளது.

கடிமரம்-காவன் மரம். "பலர் மொசிந்தோம்பிய திரள்பூங் கடம்பின்" (பதிற் 11: 12) எனக் காவன் மரம் கூறப்படுதல் காண்க. ஈண்டுக் கடிமரம் என்றது பகைவருடைய காவன் மரத்தினை. அதனில் சேரன் களிற்றைப் பிணித்தலின் 'கடிமரத்தாற் களிறணைத்து' என்றார். பகைவருடைய காவன் மரத்தில் அரசர் தமது யானையைக் கட்டுதல் மரபு. இதனை,

"கடிமரந் தடிதல் லோம்புநின்
னெடுநல் யானைக் கந்தாற் றாவே" புற 57: 10-11.

"ஒளிறுமுகத் தேந்திய வீங்குதொடி மருப்பிற்
களிறு கடிமரஞ் சேரா" புற 336: 3-4.

என வருவனவற்றானு மறியலாம். மரத்தால், மரத்தில். உருபு மயக்கம். "கந்திற் பிணிப்பர் களிற்றை" (நால் மணி 12) என்றார் பிறரும்.

நெடுநீர துறைகலங்க வென்றது களிறுகளைப் படிவித்தலானும் கரைகளை யுடைத்தலானும், பகைவருடைய ஆழமான நீரையுடைய குளம் முதலிய நீர் நிலைகளின் துறை கலக்கமடைய வென்றவாறு. "ஒளிறு மருப்பிற் களிறவர, காப்புடைய கயம் படியினை" "கடிதுறைநீர்க் களிறு படீஇ...... புலங்கெட விறுக்கும் வரம்பி லானை" (புற 15: 9-10; 16: 6-9) எனவும்,

"கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்
பெரும்புனல் வாய்திறந்த பின்னுஞ்—சுரும்பின்
றொகைமலிந்த தண்குவளைத் தாமலர்த் தாரான்
பகைமெலியப் பாசறையு ளான்". பு. வெ. மா. 56.

எனவும் வருவன காண்க. 'நெடுநீர' என்புழி நெடுமை ஆழத்தின் மேற்று. "நெடுநீர நிறை கயத்து" (புற 386: 1) என்புழிப்போல. மூழ்த்தல்-மொய்த்தல். இறுத்த – 'சென்று விட்ட' கலி 13: 1 நச். 'வரம்பில் வெள்ளம்' எனப் பேரணிப் பெரும் படை மேல் கூறப்படுதலின் வியன்றானையென்றது தூசிப் பெரும்படையை. வரம்பில் வெள்ளம் இடமில்லையாக நெரிதருதலின் 'புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்' என்றார். "புலங்கெட விறுக்கும் வரம்பி லானை" (புற 16: 9) எனப் பிறரும் கூறுதல் காண்க. புலங்கெட-இடமில்லையாக. புற 16: 9 உரை வரம்பில் வெள்ளம் என்றது வியன்றானையொடு (5) கூடிப் பகைவர் நாட்டுள்ளுச் சென்றுவிடும் பேரணிப் பெரும் படையை.

கரையையுடைய கடலை வரம்புடைய வெள்ள மென்றாக்கி இதனை வரம்பில் வெள்ளமென்று கூறிய சிறப்பான் இச்செய்யுளுக்கு வரம்பில் வெள்ளம் என்று பெயராயிற்று.

படையை வெள்ளம் என்றல் "நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்" (பதிற் 15: 4) "வெள்ளத்தானை" (அக 346: 21) என வருவனவற்றானுமறிக. அணைத்து (2) கலங்க (4) மூழ்த்து இறுத்த தானையொடு (5) கெட நெரிதரும் வெள்ளம் (6) என்க.

7—10. வான்மதிலாக வேல் காவற் காடாக உயர்த்த வில்விசை உமி

ழ்ந்த அம்பாகிய வைம்முள்ளினையும் செவ்வாய் எஃகமாகிய வளை இய அகழி யினையுமுடைய ஆரெயில் என்க.

சேரன்படைவெள்ளம் ஆரெயில் போன்றமையின் அப்படையிலுள்ள வாள் வேல் அம்பு செவ்வாயெஃகம் என்னும் போர்க் கருவிகளை எயிலின் உறுப்புக்களாகிய மதில் மிளை வைம்முள் அகழ் என்பனவாக உருவகஞ் செய் தார்.

வீரர் ஏந்திய வாட்படை கடத்தற்கரிதாகச் சூழ்ந்து செல்லுதலின் 'வாண்மதிலாக' என்றார். "வேனிரை வாண்மதில்" என்றார் தேவரும். (சீவக 1846). பலவாக உயர்த்திய நெடிய வேல்கள் காவற்காடு போன்றமை யின் 'வேன்மிளை உயர்த்து' என்றார். உயர்த்து—உயர்த்த. எச்சத்திரிபு. 'உயர்த்தென்பதனை உயர்த்தவெனத் திரித்து அதனை எஃகம் வளைஇய என் பதனோடு முடிக்கவென்பர் பழைய வுரைகாரர். வேற்படையொடு துவன்றிய விற்படையிலமைந்த கூரிய அம்புகள் காவற்காட்டிலமைந்த கூரிய முட்கள் போன்றமையின் 'வில்விசையுமிழ்ந்த வைம்முள்ளம்பின்' என்றார். வில்விசை யுமிழ்ந்த அம்பின் எனக் கூட்டுக. "வில்லுமிழ் கடுங்கணை" (மலைபடு 226) "விசைப்புறு வல்வில் வீங்குநாணுகைத்த கணை" (புற 369: 8) என வருவன காண்க. விசைவில் உமிழ்ந்த எனக் கூட்டி விசையையுடைய வில்லுமிழ்ந்த என்றுரைப்பினும் அமையும். படை வெள்ளம் தாங்கிச் செல்லும் படை களையே உருவகஞ்செய்கின்றாராதலின் உமிழும் என்பது உமிழ்ந்த எனத் திரிந்து நின்றது. 'வைம்முள்ளம்பின்' என்றாராயினும் அம்பின் வைம்முள் என்பதுவே கருத்தாகக் கொள்க. செவ்வாயெஃகம் என்றது முனைமுகத்திற் செல்லாது ஒழிந்த சேமப்படைக்கலங்களாகிய கூர்வேற் கருவிகளை. அவை சூழ்ந்து செல்லுதலின் 'எஃகம் வளைஇய அகழ்' என்றார். அகழ் மதிலைச் சூழ்ந்து கிடத்தலின் 'வளைஇய வகழ்' என்றார். வளைஇய — சூழ்ந்த. "கொடுங்கழி வளைஇய குன்றுபோலெக்கர்" (கலி 127: 6) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. அகழ்—கிடங்கு அகழின் (9) ஆரெயில் (11) எனக் கூட்டுக.

வாண்மதிலாக வேன்மிளை யுயர்த்து என்றதற்கு ஏற்பக் 'காரிடியுருமி னுரறு முரசின்' என்பதனை, உரறு முரசின் காரிடி உருமின் என மாறிக் கூட்டி முழங்குகின்ற முரசங்களாகிய மேகங்களினின்று இடிக்கும் இடியேற் றினையும் எனக்கொள்க. முழங்கு முரசு என்றது படைக்கண் முழங்கும் முரசினை. "திண்பிணி முரச மிழுமென முழங்கச், சென்றமர் கடத்தல்" "முர செழுந் திரங்கு தானையொடு தலைச்சென்று" (புற 93: 1–2; 211: 5) என வரு வன காண்க.

மற்றைய அரண்களெல்லாம் நிலையாயிருப்பனவாக நின்படை வெள்ளம் நடந்து திரியும் அரண்போல்வது என்பார் 'கால்வழங்காரெயில்' என்றார். 'வெள்ளமென மகரவொற்றுக் கெடாமையான் இருபெயரொட்டுப் பண்புத் தொகையன்றி ஒருபொருளாக வெள்ளம் ஆரெயில் என்னும் இருபெயர் நின்றதாக்கிக் கொள்க, என்பர் பழையவுரைகாரர்.

படைவெள்ளத்தை ஆரெயில் என்றது அரசன் றனக்கு ஆரெயில்போல அரணாக நிற்றலினென்க. "வேந்தர்க் கரணமாகிய வெருவரு புனற்றூர்" (பதிற் 50: 10-11) எனவும் "நகைவர்க் கரணமாகிப் பகைவர்க்குச் சூர்நிகழ்ந் தற்றுநின் றானை" (பதிற் 30: 34-5) எனவும் வருவனவற்றால் படை அரணாய் நிற்றல் அறியப்படும். ஆரெயில் என்றது மிளை கிடங்கு நெடுமதில் முதலியவற்றோடு கூடிய முழுமுதலரணை. இதனை,

> "கடிமிளைக் குண்டு கிடங்கின்
> நெடுமதி னிலைஞாயில்
> அம்புடை யாரெயில்" பதிற் 20: 17–9.

என வருதலானுமறிக. கருதின் என்றது வரம்பில் வெள்ளம், கால் வழங்காரெயிலா தலைப் போரெதிர் வேந்தர் கருதின் என்றவாறு. இனி, வரம்பில் வெள்ளம் வாள்மதிலாகவேல்மிளை உயர்த்துக் கால்வழங்கு ஆரெயிலா தலைக்கருதின் எனினுமாம். போர் செய்யக் கருதின் என்பதற்கு கால்வழங்கா ரெயில் எனச் சொல்லப்பட்ட நின்படை கருதின் எனக்கொள்ளலமையாதோ வெனின் படை வெள்ளம் போர் கருதிப் புறப்பட்டமை, அணைத்துக் கலங்க மூழ்த்திறுத்த தானையொடு புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம் என்றதனாற் போதருதலின் அதனை மீண்டும் கூற வேண்டாமையின் அமையாதென்க. கால்வழங்காரெயில் என்பதனைக் காற்றலலது வழங்கா ஆரெயில் என்று பகைவர் மதிலாக்கி அதனை வரம்பில் வெள்ளம் கொள்ளக் கருதின் என்று உரைப்பாருமுளர். போர் எதிர்தல்–போரையேற்றல். "போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே" (புற 84) என்புழி 'போரெதிர்ந்து – போரையேற்று' என அதன் உரையாசிரியர் உரைத்தல் காண்க. வேந்தர் பலர் தம்முட் கூடி நார்முடிச் சேரலொடு போரெதிர்ந்தமையின் "போரெதிர் வேந்தர்" என்றார். "போரெதிர்ந் தேற்றார்"–தம்முட் கூடிப் போரையேற்ற அவுணரது' எனப் **பரிமேலழகர்** உரைத்தலுங் காண்க. (பரி 18: 1 உரை) ஒரூஉப - நீங்குவர், ஒரூஉ-நீங்கு கலி87: 1 நச்.

இதனாற் சொல்லியது **வென்றிச் சிறப்புக்** கூறியவாறாயிற்று.

இது அணைத்து கலங்க மூழ்த்திறுத்த தானையொடு புலங்கெட நெரிதரும் வெள்ளமென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் இயங்கு படையரவம் என்னும் **வஞ்சித்துறைவந்த குறிப்புவகைப் பாடாண்பாட்டு.**

கடிமரத்தான் (3) என்றது முதலாக மூன்றடி வஞ்சியடியாக வந்தமையான் **வஞ்சித்தூக்குமாயிற்று.**

## பழையவுரை.

**2—3.** நோன்றாட் களிறெனை மாறிக் கூட்டுக. **5.** வியன்றானையென்றது பகைவர் நாட்டெல்லையின் முற்பாடு சென்றுவிட்ட தூசிப் பெரும் படையை. **6** வரம்பில் வெள்ளமென்றது அதனோடு கூடி நாட்டுள்ளுச் சென்றுவிடும் பேரணிப் பெரும்படையை. கரையையுடைய கடலை வரம் புடைய வெள்ளமென்றாக்கி இதனை வரம்பில் வெள்ளமென்று கூறிய சிறப்

பான், இதற்கு 'வரம்பில் வெள்ளம்' என்று பெயராயிற்று. . வெள்ளமென மகரவொற்றுக் கெடாமையான் இருபெயரொட்டுப் பண்புத்தொகையன்றி ஒருபொருளாக இருபெயர் நின்றதாக்கிக் கொள்க.

*6—11.* படைவெள்ளத்தை ஆரெயிலென்றது அரசன்றனக்கு ஆரெயில் போல அரணாய் நிற்றலினெனக்கொள்க. இனிக் கால்வழங்காரெயிலெனக் காற்றல்லது வழங்கா ஆரெயிலென்று பகைவர் மதிலாக்கி, அதனை வரம்பில் வெள்ளம் கொள்ளக்கருதினென்று உரைப்பாருமுளர். 7. உயர்த்தெனபதனை உயர்த்தவெனத் திரித்து, அதனை எஃகம் வளைஇய (9)வென்பதனோடு முடிக்க செவ்வாயெஃகம் வளைஇய அகழினையும் (9) வில்விசையுமிழ்ந்த அம்பாகிய வைம்முள்ளினையுடைய (8) ஆரெயில் (11) எனமாறிக் கூட்டுக. செவ்வாயெஃகமென்றது முனைமுகத்திற் செல்லாதொழிந்த கூர்வேற் கருவிகளையெனக் கொள்க. இனி, வாள் மதிலாகவென்று வைத்துப் பின்னை ஆர் எயிலென்றது வாண்மதிலைச் சூழ்தலையுடைய ஆராகிய எயிலினையெனக் கொள்க; ஈண்டு ஆராவது காலாள்வழங்கிச் செல்கின்ற படையின் திரட்சி. இனி, வரம்பில் வெள்ளமானது வாள்மதிலாக வேல்மிளை உயர்த்துக் கால்வழங்கு ஆர்எயிலாதலைக் கருதினென்றலும் ஒன்று.

அண்ணல், இது பெரிதும் இறும்பூதாயிருந்தது (1); யாதெனின், வரம்பில் வெள்ளம் (6) கால்வழங்கா ரெயிலெனச் சொல்லப்பட்ட நின்படை போர் செய்யக் கருதின் (11) நின்னோடு போரெதிர்ந்த வேந்தர் பொரமாட்டாது நின்னை நீங்குவர் (12); இஃது அதுவென **வினைமுடிபு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் **வென்றிச்சிறப்புக்** கூறியவாறாயிற்று.

வரம்பில் வெள்ளம் கருதினென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையான் **வஞ்சித்துறைப்பாடாணாயிற்று.**

கடிமரத்தான் (3) என்றது முதலாக மூன்றடி வஞ்சியடியாக வந்தமையான் **வஞ்சித்தூக்குமாயிற்று.**

## ஒப்புமைப்பகுதி.

*1.* **இறும்பூதாற் பெரிதே:** பதிற் *32: 17* ஒப்பு.

**கொடித்தேர்:** பதிற் *34: 5; 80: 14; 81: 7;* பரி *17: 45:* கலி *99: 7;* புற *55: 8; 197; 2; 351: 2;* சீவக *2145; 2175; 2283;* சிலப் *22: 109; 22: 152.*

**கொடித்தேரண்ணல்:** "குடவர் கோவே கொடித்தே ரண்ணல்" பதிற் *55: 9;* "கொடித்தேர்ச் செழியன்" அக *36: 13;* கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய" "கொடித்தேர், நும்மோ ரன்ன வேந்தர்க்கு" "கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்" புற *24: 23; 45: 7-8; 367: 14;* "கொடித் தேர்ச் செம்பியன்" களவழி *23.*

*2.* **வடிமணி:** பதிற் *20: 11* ஒப்பு.

*2—3.* **மணியணைத்த களிறு:** பதிற் *20: 11-2* ஒப்பு.

**யானையின்காலுக்குப்பணை:** "பணைத்தாள் அண்ணல் யானை" சிறுபாண்

199-200; "பணைத்தாள் யானை" அக 373: 3; "பணைத்தாள் யானையும்" "பணைமரு ணெடுந்தாட் பல்பிணர்த் தடக்கைப், புகார் முகம்" புற 351: 1; 371: 1920.

**பணைமருணோன்றாட் களிறு:** "பணைமரு ணோன்றாள், இகன்மீக் கூறுமேந் தெழில் வரிநுதற், பொருதொழி நாகம்'' நெடுநல் 115: 7.

3. **கடிமரத்தில் களிறணைத்தல்:** "நின்னூர்க், கடிமரம் வருந்தத் தந்தி யாம் பிணித்த, நெடுநல் யானையெம் பரிசில்" "களிறணைப்பக் கலங்கின காசு" புற 162: 4-6; 345: 1.

4. **நெடுநீர:** "நெடுநீர நிறை கயத்து" புற 386: 1.

5. **வியன்றானை:** "விரிகடல் வியன்றானை" மதுரைக் 180.

6. **வரம்பில் வெள்ளம்:** "வாழிய பெருமநின் வரம்பில் படையே" புற 22: 30.

**நெரிதரு:** "இடனில நெரிதரு நெடுங்கதிர்ப் பல்சூட்டு" அக 236: 5.

**புலங்கெடநெரிதரு வெள்ளம்:** "வேந்துடைத் தானை முனைகெட நெரிதர" புற 330: 1;

7. **வேன்மிளை:** "எஃகூன்றி" பட்டினப் 78; "மாலைவே னாட்டு வேலி யாகும்" குறுந் 245: 4; "வேன்மிடைந்த வேலியும்" சீவக 279.

8. **வில்விசை:** பதிற் 22: 23 ஒப்பு.

**வில்விசையுமிழ்ந்த அம்பு:** "விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி" சீவக 435; "விற்பழுத் துமிழும் வெய்யகணை" கூர்ம. இராமவனம் புகு 56.

**செவ்வாயெஃகர்:** பதிற் 11: 7 ஒப்பு.

10. **காரிடி:** "கருவிக் காரிடி யிரீஇய" "கடிதிடி யுருமொடு கதழுறை சிதறி" அக 139: 18; 162: 5; "காரெதிர் உருமின்" புற 361: 1.

**முரசொலிக்கு உரும்:** பதிற் 25: 10 ஒப்பு.

10—11. **முரசுடைய படை:** "இன்னிசை யிமிழ்முர சியம்பக் கடிப்பி கூஉப், புண்டோ ளாடவர் போர்முகத் திறுப்ப" "கடல்போற் றானைக் கடுங்குரன் முரசம்" "கடுங்குரன் முரசமொடு......நீர் துனைந் தன்ன செலவின், நிலந்திரைப் பன்ன தானையோய்" பதிற் 40: 3-4; 69: 3; 'இருங்கண்' 5 - 10; "முரசு முழங்கு தானை" பொருந 54; "முரசு முழங்குதானை மூவர்" பெரும்பாண் 33; "முரசு முழங்குதானை மூவருள்ளும்" "தந்தை தம்மூ ராங்கட், டெண்கிணை கறங்கச் சென் றாண்டட் டனனே" "முரசெழுந் திரங்கு தானை" "முரசுமுழங்கு தானைநு மரசு மோம்புமின்" "பிணிமுர சிரங்கும் பீடுகெழு தானை": புற 35: 4; 78: 11-2; 211: 5; 301:5; 388. 14; "வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க, வெள்வாட் டானை யுருத்தெழுந் தன்று" "வார்முரச மார்க்குங் கடற்றானை" "இடிமுரசத் தானை" பு. வெ. மா. 37; 103; 202. "பணைமுழங்கு போர்த்தானை" களவழி 40; "பிளிறு வார்முரசத் தானை" சீவக 2613; "முரசு முழங்கு தானை" பெருங்(4)13: 227.

12. **பேரெதிர் வேந்தர்:** பதிற் 23: 17 ஒப்பு.

**ஒருஉப நின்னை:** "ஒருஉப நின்னை யொருபெரு வேந்தே" பதிற் 34: 1,

## ஒண்பொறிக் கழற்கால்

(34) ஒரூஉப நின்னை யொருபெரு வேந்தே
ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற்கால்
இருநிலந் தோயும் விரிநூ லறுவையர்
செவ்வுளைய மாவூர்ந்து
நெடுங்கொடிய தேர்மிசையும்
ஓடை விளங்கு முருகெழு புகர்நுதற்
பொன்னணி யானை முரண்சே ரெருத்தினும்
மன்னிலத் தமைந்த ...... ... .........
மாறா மைந்தர் மாறுநிலை தேய
முரைசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழ
அரைசுபடக் கடக்கு மாற்றற்
புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே.

துறை—துர்ப்பையரவம்.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்—ஒண்பொறிக் கழற்கால் (2).

ப—ரை. ஒரு பொரு வேந்தே—ஒப்பற்ற பெரிய அரசனே, செ உளைய மா ஊர்ந்து—சிவந்த தலையாட்டம் அணிந்த குதிரையின்மேல் ஏறி, நெடு கொடிய தேர் மிசையும் - நெடிய கொடியினையுடைய தேரின் மேலும், ஓடை விளங்கும் உருகெழு புகர் நுதல்—பட்டம் விளங்குகின்ற கண்டார் உட்குதல் பொருந்தும் புகரையுடைய நுதலினையுடைய, பொன் அணி யானை முரண் சேர் எருத்தினும்—பொன்னாற் செய்த இழைகளை அணிந்த யானையின் வலிசேர்ந்த பிடரினும் இவர்ந்து பொருதற்கு வரும், மன் நிலத்து அமைந்த—நிலைபெற்ற பூமியிற் பொருந்திய, மாறா மைந்தர் மாறு நிலை தேய - முதுகிடாத வலியையுடைய வீரர் எதிராக நிற்கும் நிலை அழியும்படி, முரசு உடை பெரு சமம் ததைய—முரசு ஒலிக்கின்ற பெரிய போர் சிதறும்படி, ஆர்ப்பு எழ—வீரர்களின் ஆரவாரமுண்டாக, அரைசு பட கடக்கும் ஆற்றல்—வேந்தர் பட எதிர் நின்று வெல்லும் ஆற்றலையுடைய, புரை சால் மைந்த—உயர்ச்சியமைந்த வலியினையுடையோய், நீ ஓம்பல் மாறு—அவ்வாற்றலிடத்து வரும் குறைகளை நீயே பாதுகாத்துச் செய்தலால், ஓடா பூட்கை—புறங்கொடாத மேற்கோளினையும், ஒள் பொறி கழல் கால்—தாங்கள் செய்த போர்த் தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழலையணிந்த காலினையுமுடைய, இரு நிலம் தோயும் விரி நூல் அறுவையர்—பெரிய நிலத்தே பொருந்தும் விரிந்த நூலானியன்ற ஆடையினையுமுடைய பகையரசர், நின்னை ஒரூப—பொரமாட்டாது நின்னை நீங்குவர்.

முடிபு: ஒரு பெரு வேந்தே, மாவூர்ந்து அரைசுபடக் கடக்கும் ஆற்றலையுடைய புரைசான் மைந்த, அவ்வாற்றலிடத்து வரும் குறைகளுக்குப்

பிறரையேவாது அவற்றை நீயே பாதுகாத்துச் செய்தலால் அறுவையர் நின்னை ஒரூஉப என்க.

**ஆ—ரை.** ஒரூஉப என்ற பயனிலைக்கு அறுவையர் என்பது எழுவாயாகும். அரைசு படக் கடக்கும் ஆற்றல் முதலியவற்றால் ஒப்பற்ற பெரு வேந்தனாதலின் 'ஒருபெரு வேந்தே' என்றார்.

"பிறர்க்குநீ வாயி னல்லது நினக்குப்
பிறருவம மாகா வொருபெரு வேந்தே" **பதிற் 73: 2-3.**

எனப் பிறரும் கூறுதல் காண்க.

ஓடாப் பூட்கையினையும் ஒண்பொறிக் கழற்காலினையுமுடைய விரிநூல் அறுவையர் என இயையும். 'ஓடாப் பூட்கை' என்றதனாற் பகைவரின் தறுகண்மையும் 'ஒண்பொறிக் கழற்கால்' என்றதனால் முன்பு பகைவரைப் பொருது வென்றமையும், 'இருநிலந்தோயும் அறுவையர்' என்றதனால் பெருமிதமுடைமையும் கூறினார். இத்தகைய ஆற்றலுடைய பகைவரும் பொரமாட்டாது நீங்குதற்கேதுவாகிய பேராற்றலுடையான் நார்முடிச் சேரல் என்பதுதோன்ற பகைவேந்தராகிய அறுவையரின் ஓடாப்பூட்கை முதலியவற்றை எடுத்துக் கூறினார். ஓடாப்பூட்கை-புறங்கொடாத மேற்கோள் என்பர் **புறநானூற்றுரை**காரர். (**புற 165: 10** உரை) 'கெடாதவலி' எனவும் (**முருகு 247** உரை) 'ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோள்' எனவும் (**சிறுபாண் 83** உரை) பொருளுரைப்பர் **நச்சினார்க்கினியர்.**

ஒண்பொறிக் கழற்காலென்றது தாங்கள் செய்த அரிய போர்த் தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்காலென்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்கு **ஒண்பொறிக்கழற்கால்** என்று பெயராயிற்று.

தம் பெருமிதந் தோன்ற நிலத்திற் பொருந்தவுடுத்த ஆடையராதலின் 'இருநிலந்தோயும் அறுவையர்' என்றார். "மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்" எனவும் (**முருகு 214**) "நிலந்தோய் புடுத்த நெடுநுண் ணுடையர்" எனவும் (**பெருங் (1) 32: 64**) வருவன காண்க. கண்ணகன் ஞாலமாதலின் '**இருநிலம்**' என்றார். இனிப் பெருநில வேந்தராதல் தோன்ற அவ்வாறு கூறினார் எனினுமமையும். தோய்தல்-பொருந்துதல். நிலந்தோயுமாறு அகற்சியையுடைய ஆடையாதல் தோன்ற 'விரிநூலறுவை' என்றார். அறுவை - ஆடை. "நறுமடி செறிந்த வறுவை வீதியும்" (**சிலப் 14: 207**) என்றார் பிறரும்.

மாவூர்ந்து (4) அரைசுபடக் கடக்கு மாற்றற் (11) புரைசான் மைந்த (12) எனக் கூட்டுக. மாவூர்ந்து பொருதல் "ஆய்மயிர்க் கவரிப் பாய்மா மேல்கொண்டு, காழெஃகம் பிடித்தெறிந்து, விழுமத்திற் புகலும் பெயரா வாண்மைக், காஞ்சி சான்ற வயவர் பெரும" (**பதிற் 90: 36-9**) "மான்மேல், எள்ளுநர்ச் செருக்குங் காளை" (**புற 303: 2-3**) என வருவனவற்றாலுமறிக. உளை-தலையாட்டம். இது பிடரிமயிரின் வேறுதல். "பன்மயிர்க் கொய்சுவன், மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை......குதிரை" (**கலி 96: 8-9**) என்பதனாலறிக.

உளை குதிரைக்குச் சூட்டல். "பரியுடை நன்மா விரியுளை சூட்டி" (பதிற் 65: 2) என்பதனலறியப்படும். வெள்ளுளையை நீக்குதற்குச் 'செவ்வுளை' என்றார். மாறுமைந்தர் ஊர்வன 'தேர்மிசையும்' (5) 'யானை முரண்சே ரெருத்தினும்' (7) என உம்மை கொடுத்து ஓதப்படுதலின் மாவூர்தல் சேரன் வினையாகும்.

'நெடுங்கொடிய தேர்' 'ஓடைவிளங்கு முருகெழு புகர்நுதற், பொன்னணியானை' என வருவனவற்றால் பகைவர் படைத்தகையுடன் பொருதற் கெழுந்தமை பெறப்படும். ஓடை விளங்கும் நுதல் உருகெழு புகர் நுதல் எனத் தனித்தனி கூட்டுக. வரையென மருளுமாறு உயர்ந்த தோற்றத்தினையுடைய யானையின் புள்ளிகளமைந்த நுதல் கண்டார்க்கு அச்சத்தை விளைத்தலின் 'உருகெழு புகர்நுதல் என்றார். புகர் நுதல், யானையின் உத்தம இலக்கணம். பொன்னணி யானை என்பதற்குப் பொற்படையணிந்த யானை என்றுரைப்பினுமமையும்.

"தண்ணறுங் கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யானைபோற் றோன்றுமே" கலி 42: 16-7.

"பாடிப் பெற்ற பொன்னணி யானை" புற 177: 3.

என வருவன காண்க. எருத்தினும் வந்த என ஒருசொல் வருவித்து மைந்தர்(9) என்பதனோடு முடிக்க.

போரின்கண் பகைவர்க்கு அஞ்சி முதுகிடாத வலியையுடைய வீரராதலின் 'மாறு மைந்தர்' என்றார். இவர் பகைவர் படையிலுள்ள வீரராவர் மைந்தர் மாறுநிலை தேயப் பெருஞ்சமந் ததைய ஆர்ப்பெழ அரைசு படக் கடக்கும் ஆற்றற் புரைசான் மைந்த என்க. முரசு முழங்கப் பொருதலின் 'முரசுடைச் சமம்' என்றார். மறம் மிக்க வீரரொடு செய்யும் பெரும் போராகலின் 'பெருஞ்சமம்' என்றார். ததைய – சிதைய. ஆர்ப்பெழக் கடக்கும் எனக்கூட்டி வென்றியால் தன் வீரரிடை ஆரவாரம் எழப் பகை வேந்தரை வெல்லும் எனவுரைக்க "அட்ட மள்ள ரார்ப்பிசை" (குறுந் 34) "ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்து" (பெரும்பாண் 419) என வருவன காண்க. 'அரைசு படக் கடக்குமாற்றல்' என்றதனல் சேரன் பகைவரைப் பொருது வென்றிகோடல் கூறினர். முரசு, அரசு என்பன முரைசு, அரைசு என நின்றன. "முரைசு மூன்றாள்பவர்" (கலி 132: 4) "அரைசுபடக் கடக்கும்" (புற 211: 6) எனப் பிறண்டும் வருவன காண்க. சேரன் அரைசு படக் கடத்தற்கேதுவாகிய மிக்க வலியுடையனதல் 'புரைசான்மைந்த' என்பதனற் பெறப்படுதலின் ஆற்றல் என்றது வினைசெய்யும் ஆற்றலை புரை– உயர்ச்சி. மாறு, ஏதுப்பொருள் படுவதோரிடைச் சொல்.

இதனற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

மாற்றார் நாடுகோடல் முதலாயினவன்றி மைந்து பொருளாக வந்த வீரரை வென்றி கோடலே கூறினமையால் துறை தும்பையாய், ஒருஉபவெனப் படையெழுச்சி மாத்திரமேகூறினமையான் அதனுள் அரவமாயிற்று.

'செவ்வுளைய' (4) என்பது முதலாக இரண்டும் வஞ்சியடியாய் வந்தமையான் வஞ்சித்தூக்குமாயிற்று.

## பழையவுரை.

ஒருஉப (1) அறுவையர் (3) என முடிக்க. 2. ஒண்பொறிக் கழற்காலென்றது தாங்கள் செய்த அரிய போர்த்தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்காலென்றவாறு. இச்சிறப்பான் இதற்கு ஒண்பொறிக் கழற்கால் என்று பெயராயிற்று.

வேந்தே (1) மாவூர்ந்து (4) அரைசுபடக் கடக்கும் ஆற்றலையுடைய(11) புரைசான் மைந்த, அவ்வாற்றலிடத்து வரும் குறைகளுக்குப் பிறரை ஏவாது அவற்றை நீயே பாதுகாத்துச் செய்தலால் (12) ஒருஉப (1) அறுவையர் (3) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

* மாற்றார் நாடுகோடல் முதலாயினவன்றி வென்றிகோடலே கூறினமையால் துறை தும்பையாய், ஒருஉபவெனப் படையெழுச்சி மாத்திரமே கூறினமையான் அதனுள் அரசவாகையுமாயிற்று.

'செவ்வுளைய' (4) என்பது முதலாக இரண்டும் வஞ்சியடியாய் வந்தமையான் வஞ்சித்தூக்குமாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. ஒருஉப நின்னை: பதிற் 33: 12 ஒப்பு.

2. மு. பதிற் 30: 40 ஒப்பு.

3. இருநிலம்: தொல். புற சூ 16: 3. பெரும்பாண் 29; குறிஞ்சி 163; கலி 134: 10; புற 14 18; 282: 1-2.

அறுவையர்: "இருகோட் டறுவையர்" நெடுநல் 35; 'வண்ணவறுவையர்" மணி 28: 53.

4. செவ்வுளைய மா: "செவ்வுளைக் கலிமா" பதிற் 38: 7.

5. கொடித்தேர் பதிற் 33: 1 ஒப்பு

6—7. ஓடைவிளங்கும் யானை: பதிற் 11: 17-8 ஒப்பு.

புகர்நுதல் யானை: "புகர்நுதல்......களிறே" "புகர்நுதற், பெருங்களிறியானை" பதிற் 53 18-21; 71: 20-1; "யானைப் புகர்முகம்" குறுந் 284: 1; "மறமிகு வேழந்தன்......புகர்நுதல்" கலி 53: 3-4; "பெருங்கை வேழத்துப் புகர் நுதல்" அக 272 1-2; "செம் புகர் நெற்றித்தாகி .....நாகம்" சீவக 700.

7. யானை எருத்திற் செல்லல்' பதிற் 11: 19 ஒப்பு.

9. மு. "மாறு மைந்தர் மாறுநிலை தேய" பதிற் 'வந்தனென்' 7.

மாறு மைந்தர்: பதிற் 19: 2 ஒப்பு.

10. மு. "முரசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழ" பதிற் 43: 9.

பெருஞ்சமம். "பெருஞ்சமத் தண்ணல் யானை யணிந்த" புற 326: 13-4.

முரசுடைப் பெருஞ்சமம்: பதிற் 31: 30 ஒப்பு.

சமந் ததைய: பதிற் 30: 41 ஒப்பு.

---

* மாற்றார் நாடுகோடல் கூறின் வஞ்சியாய் விடும், "எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த னஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே" என்பது தொல்காப்பியம். (புறத் சூ 7).

*10—11.* ஆர்ப்பெழக் கடத்தல்: *"ஒன்னாத் தெவ்வ ருலேவிடத் தார்த்து"* பெரும்பாண் *419.* *"ஒன்னாத் தெவ்வ ருலேவிடத் தார்த்தென"* மலேபடு *386.* *"அட்ட மள்ள ரார்ப்பிசை" "வில்கெழு தானே விச்சியர் பெருமகன், வேந்த ரொடு பொருத ஞான்றை......கலிகெழு குறும்பூ ரார்ப்பினும்" "பசும்பூட் பாண்டியன் வினைவலதிகன், களிறொடு பட்ட ஞான்றை, ஒளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே"* குறுந் *34: 5; 328: 5-8; 393: 4-6;* *"கொன்றுகளம் வேட்ட ஞான்றை, வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே" "கடன் மருள் பெரும்படை கலங்கத் தாக்கி, இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர், ஓடு புறங்கண்ட ஞான்றை, ஆடுகொள் வியன்களத் தார்ப்பினும் பெரிதே" "எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன், நேராரெழுவ ரடிப்படக் கிடந்த, ஆலங் கானத் தார்ப்பினும் பெரிதென" "பதினொரு வேளிரொடு வேந்தர் சாய மொய்வலி யறுத்த ஞான்றைத், தொய்யா வழுந்தூர் ஆர்ப் பினும் பெரிதே" "வாடாப் பூவிற் கொங்க ரோட்டி, நாடுபல தந்த பசும் பூட் பாண்டியன், பொன்மலி நெடுநகர்க் கூடலாடிய, இன்னிசை யார்ப்பி னும் பெரிதே"* அகம் *36: 22–3; 116: 16–9; 209: 4-6; 246: 12-4; 253: 4-7;* *'வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்து"* புற *35: 24*

*11.* அரைசு படக் கடத்தல்: *"மன்பதை மருள வரசுபடக் கடந்து"* பதிற் *42: 16;* *"அரசுபட வமருழக்கி"* மதுரைக் *128;* *"அரசுபடக் கடக்கு மருஞ்சமத் தானே"* ஐங் *426;* *"அரசுபடக் கடந்த வானுச் சீற்றத்தவன்"* பரி *22: 3;* *"அரைசுபடக் கடந்தட்டு"* கலி *105: 1;* *"அரைசுபட வமருழக்கி"* *'அரைசுபடக் கடக்கு முரைசா ஞென்றல்"* புற *26: 7; 211–6.*

*12.* மு. *"புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே"* பதிற் *35: 1.*

---

## மெய்யாடு பறந்தலே

(35) புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே
உரைசான் றனவாற் பெருமைநின் வென்றி
இருங்களிற் றியானே யிலங்குவான் மருப்பொடு
நெடுத்தேர்த் திகிரி தாய வியன்களத்
தளகு டைச் சேவற் கிளேபுகா வாரத்
தலேதுமிந் தெஞ்சிய மெய்யாடு பறந்தலே
அந்தி மாலே விசும்புகண் டன்ன
செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்துப்
பேஎ யாடும் வெல்போர்
வீயா யாணர் நின்வயி னுனே.

துறை—வாகைத்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம்—அது.
தூக்கு—செந்தூக்கு.
பெயர்—மெய்யாடு பறந்தலே (6).

**ப—ரை:** புரை சால் மைந்த – உயர்ச்சியமைந்த வலியினையுடையோய், நீ ஓம்பல் மாறு-நின்படை அழிவுபடாமை நீ ஓம்புவினை செய்தமையானே, நின் வென்றி பெருமை-நின் வென்றிகளின் பெருமைகள், இரு களிறு யானை இலங்கு வான் மருப்பொடு – பெரிய களிற்று யானைகளின் விளங்குகின்ற வெள்ளிய கொம்புகளோடு, நெடு தேர் திகிரி தாய வியன் களத்து-நெடிய தேர்களின் சக்கரங்கள் பரந்த அகன்ற போர்க்களத்தின், அளகு உடை சேவல் கிளை புகா ஆர-பெடையோடு கூடின பருந்தின் சேவலினது இனம் தசையாகிய உணவை உண்ண, தலை துமிந்து எஞ்சிய மெய் ஆடு பறந்தலை –தலை வெட்டப்பட எஞ்சி நின்ற குறையுடல் எழுந்து ஆடுகின்ற உட்களத்தினது, அந்தி மாலை விசும்புகண்டன்ன – அந்திமாலைப் பொழுதின்கண் ஆகாயத்தைக் கண்டாற்போன்ற செ சுடர் கொண்ட குருதி மன்றத்து-சிவந்த ஒளியைக் கொண்ட இரத்தத்தையுடைய நடு விடத்தே,பேஎய் ஆடும் வெல் போர் – பேய் ஆடுதற்குக் காரணமான வெல்லும் போராகிய, வீயா யாணர் நின்வயின் – இடையறாது வருகின்ற செல்வத்தையுடைய நின்னிடத்தே, உரை சான்றன – புகழ்ச்சியமைந்தன.

**முடிவு:** புரைசான் மைந்த, நின்படை அழிவுபடாமை நீ ஓம்புவினை செய்தமையானே நின் வென்றிகளின் பெருமை பிறரிடத்தின்றி நின்னிடத்தே புகழ்ச்சியடைந்தன என முடிவு செய்க.

**ஆ-ரை:** பகைவரை வெல்லுதற்கேற்ற உயர்ச்சியமைந்த வலியினையுடையனாகலின் சேரனைப் 'புரைசான் மைந்த' என்றார். 'நீ ஓம்பன்மாறே' என்றதனால் சேரன் படையை அழிவுபடச்செய்யும் ஆற்றலுடையவர் பகைவர் என்பது பெறப்படும். பகைவரால் தன்படை அழிவுபடாமற் சேரன் சான்றோர் மெய்ம்மறையாய் நின்று ஓம்புவினைசெய்து வென்றி கோடலால் அவன் பெற்ற வென்றிகளின் பெருமை அவனிடத்தே புகழ்ச்சியமைதலின் ''நீ ஓம்பன்மாறே, உரைசான்றனவாற் பெருமை நின் வென்றி நின்வயினானே' என்றார். உரை– புகழ். ''ஒற்று முரைசான்ற நூலும்'' (குறள் 581) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஆல், அசை 'உரைசான்றன' என்ற பன்மையால் வென்றி பலவாதலறியப்படும். பெருமை நின் வென்றி எனக் கிடந்தவாறே கூட்டி கிடந்தவாறே கூட்டி பெருமையையுடைய நின் வென்றிகள் என்றுரைப்பினுமமையும்.

யானை மருப்பொடு தேர்த்திகிரி தாய வியன்களத்தில் அளகுடைச் சேவற்கிளை புகாவாரத் தலைதுமிந் தெஞ்சிய மெய் ஆடுகின்ற பறந்தலையின் குருதிமன்றத்தில் பேஎய் ஆடுதற்குக் காரணமான வெல்போர் என்க.

வியன்களம் என்றது ஒன்றான போர்க்களப் பரப்பை. போரின் கடுமையால் பெரியகளிற்று யானைகளும் நெடிய தேர்களும் மிக அழிந்தமையால் அவற்றின் மருப்புக்களும் திகிரிகளும் அவ் வியன்களத்தே பரந்து கிடத்தலின் 'யானைமருப்பொடு தேர்த்திகிரி தாய வியன்களம்' என்றார். குன்றத்தன்ன களிற்றியானைகளாதலின் 'இருங்களிற்றியானை' என்றார். யானையின் வெள்ளிய கொம்புகள் விளக்கமுடைமையின் 'இலங்கு வான் மருப்பு' என்

ரூர். "இலங்கு மருப்பிற் களிறு" (மதுரைக் 102) எனவும், "யானை, யிலங்கு வான் மருப்பின்" (புற 287; 5-6) எனவும் வருவன காண்க. தறுகண்மை மிக்க வீரர் களிறுகளை வெட்டுதலினாலும் அவற்றின் கொம்புகளைத் துணித்தலினாலும் மருப்புகள் களத்தே பரந்தன. "யானைத் தூம்புடைத் தடக்கை, வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள, வெறிந்து களம் படுத்த வேந்துவாள் வலத்தர்" (புற 19: 9-12) எனவும் "தடக்கை யானைத் தொடிக்கோடு துமிக்கும், எஃகுடை வலத்தர் நின் படைவழி வாழ்நர்" (பதிற் 51: 29-30) எனவும் வருவன காண்க. ஒடு, எண்ணொடு. தேர்கள் ஒன்றுடனொன்று மோதுதலினாலும் அவற்றை வீரர்களும் யானைகளும் அழித்தலினாலும் திகிரி களத்தே பரந்தன. "உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப், பரிதி சுமந்தெழுந்த யானை" (களவழிநாற் 4) என வருதல் காண்க.

அவ்வியன் களத்தே யானைகளேயன்றிக் குதிரைகளும் வீரர்களும் பட்டமையால் அவற்றின் பிணங்களைப் பெடையொடு கூடின பருந்தின் சேவலினது இனம் உண்டலின் "வியன்களத், தளகுடைச் சேவற் கிளைபுகா வார" என்றார். 'அளகு' என்னும் பெண்பாற்பெயர் கோழி கூகை மயில் என்பவற்றின் பெடைக்கே வழங்கும் மரபு.

> "கோழி கூகை யாயிரண் டல்லவை
> சூழுங் காலை யளகென லமையா" மரபு சூ 55.
>
> "அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே" மரபு சூ 56.

எனவரூஉந் தொல்காப்பியச் சூத்திரங்களால் அறியப்படுதலின் அளகுடைச் சேவல், கோழி முதலியவற்றின் சேவல்களுள் ஒன்றாகத் துணியப்படுமாயினும் 'வியன்களத் தளகுடைச் சேவற்கிளை புகாவார' என்றமையால் களத்தே பிண னுண்ணும் பெடையொடு கூடின பருந்தின் சேவலெனக் கொள்ளப்படுவதாயிற்று.

> "மாவு மாக்களும் படுபிண முணீஇயர்
> பொறித்த போலும் புள்ளி யெருத்திற்
> புன்புற வெருவைப் பெடைபுணர் சேவல்
> குடுமி யெழாலொடு கொண்டுகிழக் கிழிய" பதிற் 36: 7-10.
>
> "...................................பருந்து பட
> வேத்தமர்க் கடந்த வென்றி நெடுவேல்" அக 27: 14-5.
>
> "வாரமர் மயங்கிய ஞாட்பின் ...........
> ............................... ...........
> குருதியொடு துயல்வரு மார்பின்
> முயக்கிடை யீயாது மொய்த்தன பருந்தே" புற 288: 4-9.

என வருவனகாண்க. புகா—உணவு. "உண்குவ மல்லேம் புகா" பதிற் 58: 7.

பறந்தலை—போர்க்களம். "பருவூர்ப் பறந்தலை, இருபெரு வேந்தரும் பொருது களத்தொழிய" அக 96: 14-5. ஈண்டுப் பறந்தலையென்றது வியன் களத்தின் உட்களத்தை. அவ்விடத்தே வீரர்கள் நின்று பொருதமை

யால் வாள்முதலிய போர்க் கருவிகளால் தலைவெட்டப்பட எஞ்சி நின்ற குறையுடல் எழுந்தாடுதலின் 'தலைதுமிந் தெஞ்சிய மெய்யாடு பறந்தலை' என்றார்.

குறையுடலெழுந்தாடுவது அநேக மாயிரம் பேர் பட்ட வழியன்றே; அவ் வாற்றாற் பலர்பட்டமை தோன்றக் கூறிய சிறப்பான் இச் செய்யுளுக்கு **மெய்யாடு பறந்தலை** என்று பெயராயிற்று.

§ 'குறையுடலெழுந்தாடுவது ஒரு பெயருடையார் பலர்பட்ட வழி யன்றே' என்பர் பழையவுரைகாரர். துமிந்து, எச்சத்திரிபு. ''உரற்கால் யானை யொடித்துண்டெஞ்சிய யாஅ'' (குறுந் 232) என்புழிப்போல. மன்று என்றது அவ்வுட்களத்தின் நடுவை. அது போர்க்களத்தின் நடுவணதாய்ப் பேய்கள் தங்குதலால் ‡மன்று போறலின் மன்றெனப்பட்டது. களத்திற்பட்ட யானை முதலியவற்றின் உடல்களினின்று பெருகும் குருதி படிதலாற் சிவந்த ஒளியைக்கொண்ட மன்றம் அந்திமாலையிற் றோன்றும் செவ்வானத்தை ஒத்த லின்'' அந்திமாலை விசும்புகண் டன்ன, செஞ்சுடர் கொண்டகுருதி மன்றத்து'' என்றார். போர்க்களத்திற்குச் செவ்வானம் உவமையாதலை,

''புண்ணுமிழ் குருதி போர்த்த பொருகளம் போன்று தோன்றி
யண்ணலங் கதிரு மத்த மடைந்து செவ்வான்கொ ளந்தி'' **சீவக. 1733.**

என்னும் **சிந்தாமணியிலும்** காண்க. பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன, குருதியா றுவதுகொல் குன்றார்'' (பு. வெ. மா 70) என்பதும் ஈண்டைக் கேற்ப அறியற்பாலது. யானை இலங்குவான் மருப்புப் பரந்த வியன் களத்து மன்றமாதலின், அந்தி மாலை விசும்பில் இலங்கும் பிறையை அம்மருப்புக்கு உவமையாகக் கொள்க.

''அடக்கரும் வேழத் தடக்கை வீழவும்
................ ........ ..... ..............
நுதிமுக வெண்கோடு முதலற வெறிதலிற்
செக்கர்க் குளிக்கும் வெண்பிறை போல
உட்குவரு குருதியு ளுடன்பல வீழவும்'' **பெருங் (3) 20. 46-54.**

எனக் **கொங்குவேளிருர்** கூறுதல் காண்க. குருதி சுடருடைத்தாதல்,

''போர்வேட் டெழுந்த மன்னர் கையதை
கூர்வாட் குவிமுகஞ் சிதைய நூறி
மானடி மருங்கிற் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயி னிமைப்ப'' **அக 144: 14-7.**

என்பதனாலுமறிக.

---

§ பலர்படுதலால குறையுடல் ஆடுதல், ''ஆடுவ கவந்தமொன் றொண் ணாயிரம் வீடிய பொழுதெனும் பனுவல் மெய்யதேல்'' (கம்ப அதிகாயன் 112) ''ஆனையா யிரந் தேர்பதி னாயிர மடர்பரி யொருகோடி, சேனைகாவல ராயிரம் பேர்படிற் கவந்த மொன் றெழுந் தாடும்'' (கம்ப. மூலபலவதைப 22?) ''அநேக மாயிரம் பேர் படக் கவந்தமொன்றாடும்'' (வில்லி 14ம் போர்) எனவருவனவற்றாலு மறியப்படும்.

§ ''பேரொத்த வாயிரம்பேர் மடிந்தாற் பிறக்குங் கவந்தம்'' பிள்ளைப்பெருமா ளையங்கார்.

‡ மன்று—ஊர்க்கு நடுவாய் எல் ாரு மிருக்கும் மரத்தடி முருகு 226 நச்.

மன்றத்துப் பேஎ யாடும் வெல்போர் என்றது மன்றத்தின்கண் பேய்கள் பிணங்களை நிரம்பவுண்டு † வெம்பசி தீர்ந்த மகிழ்ச்சியால் ஆடுதற்குக் காரணமான வெல்போர் என்றவாறு.

"உருவெழு கூளிய ருண்டுமகிழ்ந் தாடக்
குருதிச் செம்புன லொழுகச்
செருப்பல செய்குவை" பதிற் 36: 12-4.

"பிணக்கோட்ட களிற்றுக்குழும்பின்
நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
அஞ்சுவந்த போர்க்களத்தான்" மதுரைக் 24-8.

என வருவன காண்க. இதனால் மன்றத்துப் பிணம் பிறங்குமாறு சேரன் வெல்போர் செய்தமை கூறினார். சேரன் பகைவரொடு நாளும் செய்கின்ற போரில் இடையறாத வென்றியே எய்துதலின் 'வெல்போர் வியா யாணர்நின் வயின்' என்றார்.

"ஒளிறுவாண் மறவருங் களிறு மாவுங்
குருதியங் குரூஉப்புனற் பொருகளத் தொழிய
நாளு மானான் கடந்தட்டு" புற 227: 4-6.

எனப் பிறண்டும் வருதல் காண்க. சேரவேந்தர் மற்றெல்லாச் செல்வங்களிலும் போரில் எய்தும் வென்றியை மிக்க செல்வமாகக் கருதினராதலின் 'வெல்போரை யாணர்' என்றார். வெல்போராகிய யாணர் என்க. யாணர்—செல்வம். வெல்போர் செல்வமாதல் "அமரோர்த் தட்ட செல்வம்" (அக 144: 8) எனச் சான்றோர் கூறுதலானுமறிக.

இதனாற் சொல்லியது அவன் **வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.**

உரைசான்றன நின் வென்றியெனக் கூறினமையான் **வாகைத்துறைப் பாடாணாயிற்று.**

## பழையவுரை.

**வியன்களமென்றது** ஒன்றுன போர்க்களப் பரப்பை. 5 அளகுடைச் சேவலென்றது பெடையொடு கூடின பருந்தின் சேவலை. 6 பறந்தலையென்றது அப்பெரும் பரப்பின் உட்களத்தை. குறையுடலெழுந்தாடுவது ஒரு பெயருடையார் பலர் பட்ட வழியன்றே; அவ்வாற்றாற் பலர் பட்டமை தோன்றக் கூறிய சிறப்பான் இதற்கு **மெய்யாடுபறந்தலை** என்று பெயராயிற்று'

† பேய்கள் வெம்பசியுடையவாதல் "பெரு நெடும்பசி பெய்கல மாவன" "வெந்த விரும்பிற் புகும் புனல்போல் வெந்தீப் பசியால் வெந்தெரியும், இதவிடப் பை நாத் தேய்க்கில் இக்கூழெல்லாஞ் சுவருதோ" (கலிங் 135, 552) "ஈரல் சுருள் முளிபேய்கள்" (தக்கயாக 58) என வருவனவற்றாலுமறிக.

8 மன்றென்றது அவ்வுட்களத்தின் நடுவை. அது மன்றுபோறலின் மன்றெனப்பட்டது. 9–10. வெல்போர் வீயா யாணரென்றது வெல்போராகிய இடையறுது வருகின்ற செல்வமென்றவாறு. ஆன், அசை.

மைந்த, நின்படை அழிவுபடாமை நீ ஓம்புவினை செய்தமையானே (1) நின் வென்றிகளின் பெருமை (2) பிறரிடத்தன்றி நின்னிடத்தே (10) புகழ்ச்சியமைந்தன (2) என வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

உரைசான்றன நின் வென்றியெனக் கூறினமையான் வாகைத்துறைப் பாடாணாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. பதிற்: 34: 12 ஒப்பு.

3. இருங்களிற்றியானை: "இருங்களிற் றினநிரை யேந்தல்" குறுந் 180: 2; "இருங்களிற் றினநிரை" அக 214: 3; "இருங்களிற் றியானை" பெருங் (3) 22: 200.

யானை இலங்குவான் மருப்பு: "இலங்கு மருப்பிற் களிறு" மதுரைக் 102; "இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்" மலைபடு 297; "இலங்கொளி மருப்பிற் கைம்மா" கலி 23: 1; "இலங்கொளி மருப்பிற் களிறு" பரி 13: 36; "ஒளிறு மருப்பிற் களிறு" "ஒளிறுமருப் பேந்திய செம்மற் களிறு" "அண்ணல் யானை, இலங்குவான் மருப்பின்" "இலங்கு மருப் பியானை" "ஒளிறேந்து மருப்பிற் களிறு" "ஒளிறுமுகத் தேந்திய வீங்குதொடி மருப்பிற், களிறு" புற 15: 9; 205: 13-4; 287: 5-6; 303: 9; 335: 10; 336: 3–4.

4. நெடுந்தேர்: பதிற் 25: 13 பெரும்பாண் 416; மதுரைக் 659.

வியன்களம்: "இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து" அக 174: 1; "இரப்போ ரிரங்கு மின்னு வியன்களத்து" "வெந்திறல் வியன் களம் பொலிகென் றேத்தி" புற 368: 12; 370: 19.

5. புகா: பதிற் 58: 7; 90: 26; குறுந் 232: 3; 253: 6; 258: 5; ஐந். எழு. 29.

6. தலைநுமிதல்: "திருந்துவாள் வயவ ரருந்தலை துமித்த, படுபுலாக் கமழு ஞாட்பில்" அக 89: 13-4; "அமரிடைத் தலைதுமித்து" கம்ப. மந்திர 82.

பறந்தலை: குறுந் 393: 3; அக 125: 19; 208: 6; புற 19: 16; 25: 6; 35: 23; 66: 6; 237: 13; 270: 11; 373: 19.

களத்திற் கவந்த மாடல்: "குறைத்தலைப்படு பிண னெதிரப் போர் பழித்து" புற 371: 14;

7. "வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச், செக்கரன்ன சிவந்து" மதுரைக் 431–2.

கண்டன்ன: பதிற் 16: 2 நெடுநல் 108.

7—8. போர்க்களத்துக்கு அந்தி வான்: "செவ்வாய், அந்திவானத்தாடு மழை கடுப்ப, வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப" பெரும்பாண் 412-4; "நெய்த்தோர்ப் புனலு ணிவந்தகளிற் றுடம்பு, செக்கர்கொள் வானிற் கருங் கொண்மூப் போன்றவே" களவழி 23.

8—9. களத்தில் பேயாடல்: "ஒன்னார், ணிணங்கொள் பேழ்வாய மிழல் போ னுடங்கிக், கணங்கொள் பேயாடுங் களித்து" பு. வெ. மா. 145; "பின் றேர்க் குரவைப் பேயாடு பறந்தலை" சிலப் 26: 241.

6—9. களத்தில் கவந்தமும் பேயும் ஆடல்: "அமர்க்க ணமைந்த வவிர் நிணப் பரப்பில் .....தலைதுமிந் தெஞ்சிய வாண்மலி யூபமொடு, உருவில் பேய் மகள் கவலை கவற்ற" பதிற் 67: 8-11; "உவந்து பேய்க்கணமாடவும் ஓரி கொள்ளை கொண்டுண்ணவும், கவந்தமெங்கணு மாடவும் .....சிவந்த சீவக சாமிகண் புருவ மும்முரி முரிந்தவே" சீவக 2310; "எறிபிண மிடறிய குறை யுடற் கவந்தம், பறைக்கட் பேய்மகள் பாணிக் காடப், பிணஞ்சுமந் தொழு கிய நிணம்படு குருதியிற், கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத்தாட......கடும் படை மாக்களைக் கொன்று களம் குவித்து" சிலப் 25: 207-12; "ஆடினகவந்த பந்தம், ஆடின வலகை மேன்மேல், ஆடின பதாகை யோங்கி, யாடின பறவை யம்மா" கம்ப. கும்பகர்ண 173.

9. வெல்போர்: பதிற் 11: 14 49: 7; 63: 12; 79: 12; மதுரைக் 151.

10. வீயா யாணர்: "வீயா யாணர் வளங்கெழு பாகத்து" பெரும்பாண் 367.

மு. "வீயா யாணர் நின்வயி னானே" பதிற் 36: 1.

---

### வாண்மயங்கு கடுந்தார்.

(36) வீயா யாணர் நின்வயி னானே
தாவா தாகு மலிபெறு வயவே
மல்ல லுள்ளமொடு வம்பமர்க் கடந்து
செருமிகு முன்பின் மறவரொடு தலைச்சென்று
பனைதடி புனத்திற் கைதடிபு பலவுடன்
யானை பட்ட வாண்மயங்கு கடுந்தார்
மாவு மாக்களும் படுபிண முணீஇயர்
பொறித்த போலும் புள்ளி யெருத்திற்
புன்புற வெருவைப் பெடைபுணர் சேவல்
குடுமி யெழாலொடு கொண்டுகிழக் கிழிய
நிலமிழி நிவப்பி னீணிரை பலசுமந்
துருவெழு கூளிய ருண்டுமகிழ்ந் தாடக்

குருதிச் செம்புன லொழுகச்
செருப்பல செய்குவை வாழ்கநின் வளனே.

துறை—களவழி.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்—வாண்மயங்கு கடுந்தார் (6).

ப—ரை: செருமிகு முன்பின் மறவரொடு தலைச்சென்று-போர்த்தொழிலில் மிகுகின்ற வலியையுடைய வீரரொடு மேற்சென்று, மல்லல் உள்ளமொடு வம்பு அமர் கடந்து-வளத்தையுடைய மனவெழுச்சியொடு பகைவர் புதிதாகப் பகைத்துச் செய்யும் போரினை எதிர்நின்று வென்று, பனைதடி புனத்தின் கை தடிபு-பனைமரங்கள் வெட்டப்பட்டுக் கிடக்கும் புனத்தினைப் போல துதிக்கைகள் வெட்டப்பட்டு, யானை பல உடன்பட்ட—யானைகள் பலவும் ஒருங்கே இறந்துபட்ட, வாள் மயங்கு கடு தார்-இரண்டு படையில் வாள்களும் தம்மில் தெரியாமல் மயங்குகின்ற கடிய தூசிப்படையி லுள்ள, மாவும் மாக்களும் படு பிணம் உணீஇயர்-விலங்குகளும் வீரர்களும் பட்ட பிணத்தை உண்ணும்பொருட்டு, பொறித்த போலும் புள்ளி எருத்தின்-எழுதினாற்போன்ற புள்ளிகளையுடைய கழுத்தினையும், புன் புறம் எருவை-புற்கென்ற புறத்தினையுமுடைய எருவையின், பெடை புணர் சேவல்-பெடையுடன் கூடிய சேவல், குடுமி எழாலொடு கொண்டு கிழக்கு இழிய-உச்சிக்கொண்டையையுடைய புல்லூறு என்னும் பறவையை உடன்கொண்டு கீழே இறங்க, நிலம் இழி நிவப்பின் நீள்நிரை பல-நிலம் பாரத்தாற் தாழ்தற்குக் காரணமான உயர்ச்சியையுடையயுடைய நீண்ட பிண வரிசைகள் பலவற்றை, உரு எழு கூளியர் உண்டு மகிழ்ந்து சுமந்து ஆட-அச்சம் தோன்றுதற்குக் காரணமாகிய பேய்கள் உண்டு களித்துச் சுமந்து ஆட, குருதி செபுனல் ஒழுக-குருதியாகிய சிவந்த நீர் ஓட, செரு பல செய்குவை-போர்கள் பலவற்றைச் செய்குவாய்; மலி பெறு வயவு—அதனாலே மலிதல் பெற்ற நினது வலி, வீயா யாணர் நின்வயினான்—வெல்போராகிய இடையறாது வருகின்ற செல்வத்தினையுடைய நின்னிடத்துளதாதலால், தாவாதாகும்-கேடுபடாததாயிருந்தது. நின் வளம் வாழ்க-நின் போர் வளம் வாழ்க.

முடிபு: மறவரொடு தலைச்சென்று உள்ளமொடு வம்பமர்க் கடந்து செருப்பல செய்குவை; அதனானே நினது வலி வீயாயாணர் நின்வயின் உளதாதலால் கேடுபடாததாயிருந்தது. அதன்மேலும் இதற்கு அடியாகிய நின் போர்வளம் வாழ்க என்க.

ஆ—ரை: 1—2. மலிபெறு வயவு (2) நின்வயினானே (1) தாவாதாகும் (1) என மாறிக் கூட்டுக. வீயா யாணர் என்றது வெல்போராகிய இடையறாது வருகின்ற செல்வத்தை. "வெல் போர், வீயாயாணர் நின்வயினானே" (பதிற் 35: 9-10) என வந்தமை காண்க. தாவாது-கெடாது. 'தாவா விருப்பொடு-கெடாத விருப்பத்தோடே' கலி 81: 36 நச். மலிபெறு வயவு—அமர்க் கடந்து செருப்பல செய்தலால் மலிதல்பெற்ற வயவு. வய என்னும் அகரவிற்று உரிச்சொல் ஈறு விகாரப்பட்டு வயவு என நின்றது. "வயவுப்பிடி முழந்தாள் கடுப்ப" (மலைபடு 127) என்புழிப்போல,

3—4 செருமிகு முன்பு என்பதற்குப் போரில் மேம்படுதற்குக் காரணமாகிய வலி எனினுமமையும். முன்பின் மறவர் என்க. மறவரொடு தலைச்சென்று (4) வம்பமர்க் கடந்து (3) என மாறிக் கூட்டுக. "தானையொடு தலைச்சென்று அரைசுபடக் கடக்கு முரைசா ரேன்றல்" (புற 211: 5-6.) எனப் பிறரும் கூறுதல் காண்க. தலைச்சென்று - மேற்சென்று. புற 211: 5 உரை. 'இடத்தே சென்று' எனினுமாம். செருமிகு முன்பின் மறவரொடு செலினும், மிக்க மனவெழுச்சியும் போர்வென்றிக்கேதுவாகலின் 'மல்லலுள்ளமொடு அமர்க்கடந்து' என்றார். "உரன்மலி யுள்ளமொடு முனைபா முாக, வருங்குறும் பெறிந்த .... நன்னன்" (அக 349. 6-8) எனப் பிறரும் கூறுதல் காண்க. மல்லல்-வளன். உள்ளம் – மனவெழுச்சி பரி 2: 36 பரிமேல். மனவெழுச்சிக்கு வளனாவது அதன் மிகுதி. வம்பமர் என்றது முன்பு செய்து வருகின்ற போரன்றிப் பகைவர் புதிதாகப் பகைத்துச் செய்யும் போரினை. வம்பு - புதுமை. அமர்க்கடந்து (3) செருப்பல செய்குவை (14) எனக் கூட்டிப் போரினை வென்று அதனானும் அமையாது மேலும் பல போர்களைச் செய்குவை எனவுரைக்க. "அட்டானானே குட்டுவன்" (பதிற் 47–1) என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது

5—14. பிணமுணீஇயர் (7) எருவைப் பெடை புணர் சேவல்(9) எமாலொடு கொண்டு கிழக்கிழிய (10) நீணிரை பலவற்றைக் (11) கூளியர் உண்டு மகிழ்ந்து (12) சுமந்து (11) ஆட (12) குருதிச் செம்புனல் ஒழுகச் (13) செருப்பல செய்குவை (14) என்க.

யானையின் திரண்டு நீண்ட கரிய துதிக்கை பனை போறலின் துதிக்கைகள் தடியப்பட்டுக் கிடக்கும் இடத்தினுக்குப் பனைதடி புனத்தினை உவமித்து 'பனைதடி புனத்திற் கைதடிபு' என்றார். "பனைத்திர ளன்ன பரேரெறுழ்த் தடக்கை......யானை" (அக 148: 1-3) "வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்பக், களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை" (புற (35: 22-3) என வருவனகாண்க. வீரர் யானையின் துதிக்கையைத் தடிதலை,

"ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செ யாடவர்" நெடுநல் 168-70.

'அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
வெறிந்து களம் படுத்த வேந்துவான் வலத்தர்" புற 19: 9–12.

என வருவனவற்றானுமறிக. 'கைதடிபு பலவுடன் யானைபட்ட' என்றதனால் தடியப்பட்ட துதிக்கைகள் பலவாதல் அறியப்படும். தடிந்தமை வாளினால் என்க. தடிபு (5) யானைபட்ட தார் (6) என இயையும்.

வாள் மயங்குதலாவது இரண்டு படையில் வாளும் தம்மில் தெரியாமல் மயங்குதல். இச் சிறப்பான் இச் செய்யுளுக்கு 'வாண்மயங் கடுந்தார்' என்று பெயராயிற்று.

மயங்குதல் – தம்மிற் கலத்தல் புற 178. 7 உரை. தார் – தூசிப் படை. கடுமை–பொருகின்ற விரைவின் கடுமை. தாரிலுள்ள மாவும் மாக்களும் என்க. மா என்றது யானை குதிரை என்னும் விலங்குகளை. 'மாவினுனும் -யானையுங் குதிரையுமாகிய மாவினுனும்' தொல். புற 21: 14 நச். மாக்கள் என்றது வீரரை. படுதல்-வீழ்தல். பிணமுணீஇயர் (7) கிழக்கு இழிய (10) எனக் கூட்டுக. புள்ளி எருத்தினையும் புன்புறத்தினையுமுடைய எருவைப் பெடைபுணர் சேவல் என்க. எருத்திற் புள்ளி எழுதினாற் போல அழகுற அமைந்திருத்தலின் 'பொறித்த போலும் புள்ளி யெருத்தின்' என்றார். பொறித்தல்-எழுதுதல் "தொய்யில் பொறித்த வனமுலையாய்" கலி 117. 4.

'எருவை-தலைவெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து. கழுகெனினுமமையும்' என்பர் புறநானூற்றுரைகாரர். (புற 64: 4 உரை) "பெருந்தலை யெருவையொடு பருந்து வந்திருக்கும், அருஞ்சுரம்" (அக 97: 7-8) எனப் பருந்தின் வேறாக எருவை கூறப்படுதலினாலும், "பவனை யுவணஞ் சகுந்தம் புரண்டம் எருவை சரங்கமும் கழுகென விசைப்பர்" எனப் பிங்கலந்தையில் (8: 13) வருதலினாலும் எருவை, கழுகு எனத் துணியப்படினும் "பொறித்த போலும் புள்ளி யெருத்திற் புன்புற வெருவை" என்றமையால் ஈண்டு எருவை யென்றது பருந்தின் ஒருசாதியை என்க. 'எருவை – பருந்தின் ஒருசாதி' என அகநானூற்றுப் பழையவுரைகாரரும் உரைத்தல் காண்க. (அக 3: 5 உரை) பிணமுண்ணும் பொருட்டு எருவைச் சேவல் பெடையொடு சேறலின் 'எருவைப் பெடை புணர் சேவல்' என்றார்.

எழால்-புல்லூறு என்னும் பறவை. இதனைச், "சிறுபுன் புறவொடு சிற்றெழால் சீறும், நெறியரு நீள் சுரத்து" (திணைமொழி ஐம் 15) என்பதன் உரையில் 'எழால்–புல்லூறு' என அதன் பழையவுரைகாரர் உரைத்தலானுமறியப்படும். அது ஊனுண்டல்,

> "வங்காக் கடந்த செங்காற் பேடை
> எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது
> குழலிசைக் குரல குன்றுபல வகவும்" குறுந் 151.

என்பதனாலுமறியப்படும் 'எழால் சேவலாதலின் 'குடுமியெழால்' என்றார். "குடுமி நெற்றி நெடுமரச் சேவல்" (அக 87-5) எனப் பிறருங் கூறுதல் காண்க. நிலத்திற் கிடக்கின்ற பிணத்தினை உண்ணும் பொருட்டு ஆகாயத்தில் பறக்கும் எருவை எழாலொடு கீழே இறங்குதலின் 'எருவைச் சேவல் எழாலொடு கிழக்கிழிய' என்றார். கிழக்கு - கீழ். இப்பொருட்டாதல், "பொன் செய் வள்ளத்துப் பால்கிழக்கிருப்ப" (நற் 297) 'செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை, காணிற் கிழக்காந் தலை" (குறள் 488) என்பனவற்றிலுங் காண்க. 'கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்' (தொல் உவம சூ. 5) என்பதன் விசேடவுரையில் 'கிழக்கிடு பொருளென்பது கீழ்ப் படுக்கப்படும் பொருள். "கிளை இய குரலே கிழக்குவீழ்ந் தனவே" (குறுந் 337) என்புழிக் கிழக்குவீழ்ந்தன என்பவாகலின்' எனப் பேராசிரியர் உரைத்தலும் ஈண்டறியற்பாலது. 'கிழக்கென்றது கீழான பள்ளங்களை' என்பர் பழையவுரைகாரர். *

---

* இழிபு கிழக்கு படுகா பள்ளம்'' திவாகரம்.

நிலம் பாரத்தால் தாழ்தற்குக் காரணமான உயர்ச்சியையுடைய நீண்ட பிணவரிசைகளை 'நிலமிழி நிவப்பின் நீணிரை' என்றார்.

''விட்டன தோமரம் பட்டன பாய்மாத்
துணிந்தன தடக்கை குனிந்தன குஞ்சரம்
அற்றன பைந்தலை யிற்றன பல்கொடி
சோர்ந்தன பல்குடர் வார்ந்தன குருதி
குழிந்தது போர்க்களம்'' பெருங் (3) 27: 110-4,

என வருதல் காண்க. இழிதல்-தாழ்தல். நிவப்பு-உயர்ச்சி. ''வரை புரை நிவப்பின் வான்றோ யிஞ்சி'' மலைபடு 92. நிவப்பின் நிரை என்க. நிரை சுமந்து ஆட எனக் கூட்டி நிரையிலுள்ள குடர் முதலியவற்றைச் சுமந்து ஆட வெனவுரைக்க ''குடர்த்தலை மாலைசூடி...உருகெழு பேய்மகள் அயர'' (புற 371: 23-6) எனப் பிறருங் கூறுதல் காண்க. இனி, நிரை சுமந்து (11) குருதிச் செம்புனல் ஒழுக (13) எனக் கூட்டிப் பிணவரிசைகள் பலவற்றைச் சுமந்து குருதிச்செம்புனல் ஒழுக எனக்கோடலு மொன்று. ''பிணஞ் சுமந் தொழுகிய நிணம்படு குருதியில்'' (சிலப் 26: 209) என்பது ஈண்டறி யற்பாலது. கூளியர் – பேய்கள். கூளி-பேய். திருக்கோவை 151 பேர். சுழல் விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கு முதலியவற்றையுடைய பேய்களைக் கண் டார்க்கு உட்குதல் எழுலின் 'உருவெழு கூளியர்' என்றார். ''சார்ந்தோர் துட்கெனும், பேஎ யுருவம்'' என்றார் கதையினும். (பெருங் (2) 8: 110-1) உண்டு மகிழ்ந்தாட என்பதனாற் செங்களம் வேட்டமை கூறினார். களத்தே பட்ட மாவினதும் மாக்களினதும் உடல்களினின்று பெருகும் குருதி, மழை நாட் புனல்போலப் பரந்து ஒழுகலின் 'குருதிச் செம்புனல் ஒழுக' என்றார்.

''நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலி னவற்பரந் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து'' பதிற் 49: 11-3.

''செந்நில மருங்கிற் செஞ்சால் சிதைய
மரஞ்சுமந் திழிதருங் கடும்புனல் கடுப்பக்
குருதிச் செம்புனல் போர்க்களம் புதைப்ப'' பெருங் (1) 46: 67-9)

என வருவன காண்க. செம்புனல் ஒழுகச், செருப்பல செய்குவை என்க. ''குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச் செருப்பல செய்து செங்களம் வேட்டு...வலம்படு வென்றிக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலை' என இதன் பதிகத்து (4–ம் பதி 10-3) வருதல் காண்க. சேரலின் போர்வளன் இவ்வுல கத்தோர் ஆக்கத்திற் கேதுவாகலின் 'வாழ்கநின் வளனே' என்றார்.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

மிகுதி வகையால் சேரன் தன்போர்க்களச் சிறப்புக் கூறினமையின் துறை களவழியாயிற்று.

## பழையவுரை.

தலைச்சென்று (4) வம்பமர்க் கடந்து (3) என மாறிக் கூட்டுக. வம்பம ரென்றது முன்பு செய்து வருகின்ற போரன்றிப் பகைவர் புதிதாகப் பகைத்

துச் செய்யும் போரினை. 6. வாள்மயங்குதலாவது இரண்டு படையில் வாளும் தம்மில் தெரியாமல் மயங்குதல். இச்சிறப்பான் இதற்கு வாண்மயங்கு கடுந் தார் என்று பெயராயிற்று. 10. கிழக்கென்றது கீழான பள்ளங்களை.

உள்ளமொடு வயம்பமர்க் கடந்து (3) செருப்பல செய்குவை (14); அதனானே நினது வலி (2) நின்னிடத்துக் (1) கேடுபடாததாயிருந்தது (2); அதன் மேலும் இதற்கு அடியாகிய நின் போர்வளம் வாழ்க (14) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

மிகுதிவகையால் தன் போர்க்களச் சிறப்புக் கூறினமையின் துறை களவழியாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. பதிற் 35. 10 ஒப்பு.

3. மல்ல லுள்ளம்: "மல்ல லுள்ளமொடு மாசற விளங்கிய" பதிற் 7ம் பதி 11.

4. செருமிகு முன்பு: "செருமிகு முன்பின், முன்னோர்" புற 362: 6-7.

தலைச் சென்று: பதிற் 20: 3 ஒப்புமைப் பகுதி பார்க்க.

5–6. யானையின்துதிக்கைக்குப் பனை: "பனைத்திர ளன்ன பரேரெறுழ்த் தடக்கை......யானை" "வேனில் வெளிற்றுப் பனைபோலக் கையெடுத், தியானைப்பெருநிரை வானம் பயிரும்" அக 148: 1-3; 333: 11-2; "வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்பக், களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை" "பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய, ...நோன்பகடு" "இரும்பனை யன்ன பெருங்கை யானை" புற 35: 22-3; 161: 16-7; 340: 7; "பனைக்கை யானை" சீவக 2194; "மடற்பனை யிடைத்துணி கடுப்பப் பல்லூழ், அடக்கரும் வேழத் தடக்கை வீழவும்" பெருங் (3) 20: 45-6; "உருப்பனை யன்ன கைக்களிறு" "பனைவளர் கைம்மா" திருக்கோவை 137: 154.

யானையின் கையைத் தடிதல்: முல்லை 69-72: நெடுநல் 169-71; புற 19: 9–12; களவழி 13; சீவக 282.

6. வாண் மயங்குதல்: "ஒள்வாண் மயங்கமர் வீழ்ந்தென" "களிறு கண் கூடிய வாண்மயங்கு ஞாட்பின்" அக 208: 9; 322: 7; "வாண்மயங்கு மண்டமருள் இனியவை 34.

7. மாவு மாக்களும்: "மாவு மாக்களு மையறி வினவே" தொல். மரபு சூ. 32.

8. மு. "பொறித்த போலும் புள்ளியெருத்தின்" பதிற் 39: 10.

8—9. "பொறித்த போலும் வானிற வெருத்தின், அணிந்த போலுஞ் செஞ்செவி யெருவை" "நுண்பொறி யணிந்த வெருத்திற் கூர்முட், செங்காற் சேவல்" அக 193: 5-6. 387: 11-2.

*9.* எருவைச் சேவல்: நற் *298: 4-5;* அக *51: 6; 161: 6-7; 215: 12-3; 297: 17-8; 375: 8-9; 381: 10.*

*7—9.* எருவை பிணமுண்ணல்: ஐங் *335: 2-3;* அக *51: 4-6; 77:9-11; 111: 12; 161-5-6; 215: 12-3; 375-7-8;* புற *64: 3-4; 370: 26-7; 373: 37-9;* பு. வெ. மா. *207;* களவழி *20.*

*10.* எழால்: *"நிழலுறு நனந்தலை யெழாலேறு குறித்த"* அக *103: 1.*

*13.* குருதிப்புனல்: பதிற் *49: 11-2;* புற *227: 5; 368: 10;* களவழி *23;* பு. வெ. மா. *77, 136;* பெருங் *(1) 46: 36;* கலிங் *118.*

*14.* செருப்பல செய்குவை: *"குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச், செருப்பல செய்து" "வெருவரு தானைகொடு செருப்பல கடந்து" "காஞ்சி சான்ற செருப்பல செய்து"* பதிற் *4-ம் பதி 10-11; 7-ம் பதி 5. 84: 19.*

வாழ்கநின் வளன்: *"வாழ்கநின் வளனே நின்னுடை வாழ்க்கை"* பதிற் *37: 1.*

## வலம்படு வென்றி

(37) வாழ்கநின் வளனே நின்னுடை வாழ்க்கை
வாய்மொழி வாயர் நின்புக ழேத்தப்
பகைவ ராரப் பழங்க ணருளி
நகைவ ரார நன்கலஞ் சிதறி
ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்
வான்றோய் நல்லிசை யுலகமொ டுயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்
மாயிரும் புடையன் மாக்கழல் புனைந்து
மன்னெயி லெறிந்து மறவர்த் தரீஇத்
தொன்னிலைச் சிறப்பி னின்னிழல் வாழ்நர்க்குக்
கோடற வைத்த கோடாக் கொள்கையும்
நன்றுபெரி துடையையா னீயே
வெந்திறல் வேந்தேயிவ் வுலகத் தோர்க்கே.

துறை: செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்—வலம்படு வென்றி (7).

ப—ரை: *வாய் மொழி வாயர் நின் புகழ் ஏத்த-மெய்ம் மொழியினைக் கூறுகின்ற வாயையுடைய சான்றோர் நின்னுடைய புகழைப் பாட, பகைவர் ஆர பழங்கண் அருளி - பகைவர் நுகரும்படி துன்பத்தை அளித்து, நகைவர் ஆர நல்கலம் சிதறி-பாணர் முதலியோர் நிறையப் பெறும்படி நல்ல பேரணிகலங்களைக் கொடுத்து, ஆன்று அவிந்து அடங்கிய செயிர் தீர் செம்மால்-நற்*

குணங்களால் அமைந்து பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம் புலனும் அடங்கிய குற்றம் தீர்ந்த தலைவனே, வான் தோய் நல்லிசை –வானத்தை அளாவிய நல்லபுகழ், உலகமொடு உயிர்ப்ப - உலகம் உள்ள ளவும் அழியாமல் நிற்ப, துளங்கு குடி திருத்திய- வறுமை முதலியவற்றால் தளர்ந்த குடிகளைத் திருத்திய, வலம்படு வென்றியும்-மேன்மேலும் பல போர் வென்றிபடுதற்குக் காரணமான வென்றியும், மா இரு புடையல்– கரிய பெரிய பனந்தோட்டாலாகிய மாலையினையும், மாகழல் புனைந்து- பெரிய வீரக் கழலினையும் அணிந்து, மன் எயில் எறிந்து - பகைவரின் நிலை பெற்ற அரண்களை அழித்து, மறவர் தரீஇ - அவற்றில் வாழும் மறவர் களைப் பிடித்துக் கொணர்ந்து, தொல் நிலை சிறப்பின் நின் நிழல் வாழ் நர்க்கு - பழைதான நிலைமைச் சிறப்பினையுடைய நின் நிழலில் வாழும் வீரர்க்கு, கோடு அற வைத்த கோடா கொள்கையும் - கொடுமை அறும் படி வைத்த பிறழாக் கொள்கையும், நன்று பெரிது உடைமையால் – நீ மிகப் பெரிதுடையையாயிராநின்றாய் ஆதலால், வெம் திறல் வேந்தே– வெவ்விய திறலையுடைய வேந்தே, இவ்வுலகத்தோர்க்கு – இவ்வுலகத்தோர் ஆக்கத்தின் பொருட்டு, நின் வளன் நின்னுடை வயழ்க்கை வாழ்க - நின் னுடைய செல்வமும் நின்னுடைய வாழ்நாளும் வாழ்வனவாக.

**முடிபு:** செம்மால், துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும், மன் னெயில்களை எறிந்து அவற்றில் வாழும் மறவர்களைப் பிடித்துக் கொணர்ந்து பழைதான நிலைமைச் சிறப்பினையுடைய நின்னிழலில் வாழும் வீரர்க்குக் கொடுமை அறும்படி வைத்த பிறழாக் கொள்கையும் நீ மிகப் பெரிதுடையை யாயிராநின்றாய்; ஆதலால் வேந்தே, இவ்வுலகத்தோர் ஆக்கத்தின் பொருட்டு நின்னுடைய செல்வமும் நின்னுடைய வாழ்நாளும் வாழ்வனவாக என்க.

**ஆ-ரை:** துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும் கோடாக் கொள் கையுமுடைய சேரனின் செல்வமும் வாழ்நாளும் பிறர்க்குப் பயன் படுவன வாகலின் அவன் செல்வத்தையும் அவனையும் 'வாழ்க நின் வளனே நின் னுடை வாழ்க்கை..... இவ்வுலகத்தோர்க்கே' என வாழ்த்தினர்.

> "கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி
> ..............................................
> காரெதிர் பருவ மறப்பினும்
> பேரா யாணர்த்தால் வாழ்கநின் வளனே" **பதிற் 24: 22-30.**

எனவும்,

> "மன்னுக பெரும நீயே .............
> ..........................................
> சாத னீங்க வெமக்கீத் தனையே" **புற 91: 7-11.**

எனவும் பிறர்க்குப் பயன்படும் அரசர் வளனையும் அவர் வாழ்நாளையும் பிறரும் வாழ்த்துதல் காண்க. இச்சேரனின் வளன் பிறர்க்குப் பயன்படு தல், "பெருங்கிளை யுவப்ப், ஈத்தான் றாஉ விடனுடை வளனும்" (பதிற் 32: 5-6) என்பதனாலு மறியப்படும்.

வாய்மொழி வாயர் என்றது எக்காலத்தும் மெய்ம்மொழியினைக் கூறுகின்ற புலவர்களை. "பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச், செய்யா கூறிக் கிளத்த, லெய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" (புற 148: 5-7) என வன்பரணர் என்னும் புலவர் கூறுதல் காண்க. "வாய்மொழிக் கபிலன்" (அக 78) என்றார் நக்கீரரும். சேரன் விழுப்புகழுடையானாதலின் அப்புகழைப் புலவர் பாடுவாராயினர்.

'சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே" புற 160: 30.

'புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை" புற 228: 7.

என வருவன காண்க. புகழ் என்றது வென்றியும் கொடையும் ஏதுவாக வரும் புகழை. ஏத்த-பாட. ஏத்துகு-பாடுவேன் கலி 40: 9 நச்.

பகைவ ராரப் பழங்க ணருளி நகைவ ரார நன்கலஞ் சிதறி யென்றது தன்னொடு மாறுபட்டெழுந்த பகைவேந்தர் வருந்தும்படு துன்பத்தைப் போரின்கட் செய்து அவரை வென்று பெற்ற அணிகலங்களைப் பாணர் முதலியோர் பெறும்படி கொடுத்து என்றவாறு.

"பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியும்" மலைபடு 71-2.

"உலைந்த வொக்கல் பாடுநர் செலினே
யுரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
யருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்" அக 349: 5-8.

"பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி" புற 6: 14-6.

என வருவன காண்க. பழங்கண் - துன்பம் 'புன்கண்' அக 19: 18. பழைய வுரை. 'அருளி' என்றார் தான் வருந்தாமற் பகைவர்க்குத் துன்பத்தைக் கொடுத்தலின். நகைவர் என்றது மகிழ்ச்சிக்குக் காரணமான பாணர் கூத்தர் விறலியர் முதலாயினோரை. நகை-மகிழ்ச்சி. பொருந 85 நச். 'நன்கலஞ் சிதறி' யென்றார் பகைவரிடத்துப் பெற்ற நல்ல பேரணிகலங்களைத் தனக்குப் பாதுகாவாமல் நகைவர்க்குப் பலவாகக் கொடுத்தலின். இதனாற் சேரனின் வென்றிச் சிறப்பும் கொடைச் சிறப்பும் கூறினார்.

ஆன்று என்றது அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை முதலிய நற்குணங்களால் அமைந்து என்றவாறு. அவிந்து என்றது நான்மறை முதல்வர் முதலாகிய பணியவேண்டு முயர்ந்தோரிடத்துப் பணிந்து என்றவாறு.

"இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே" புற 6: 19-20.

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே" பதிற் 63: 1.

என வருவன காண்க. அடங்கிய - ஐம்புலனும் அடங்கிய. இனி, 'ஆன்ற

வின் தடங்கிய' என்பதற்குக் கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றிற் செல்லும் அறிவு அவிந்து மன மொழி மெய்களான் அடங்கிய வெனினு மமையும். இதனாற் சேரன் சான்றோனாயிருந்தமை கூறினர். "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்" (புற 191: 6-7) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஆன்றவிந்தடங்கிய சேரன் மனமொழி மெய்களின் குற்றத்தினீங்கியோனாதலின் 'செயிர் தீர்' என்றும், அதனாற் றலைமையெய்தினோனாகலின் 'செம்மால்' என்றும் கூறினர். செயிர்-குற்றம். "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" புற 3-6. செம்மல் என்னும் லகரவீற்றுப் பெயர் ஈற்றயலெழுத்து நீண்டுச் செம்மால் என விளியேற்றது.

"எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்" தொல். விளி 27.

என்பவாகலின்.

ஏத்த (2) அருளிச்(3) சிதறி (4) அடங்கிய செம்மால் (5) என்க.

பெரும்புகழாதலின் 'வான்றோய் நல்லிசை' என்றார். "வான்றோய் பெரும் புகழ் வத்தவ ரிறைவற்கு" (பெருங் (3) 24: 3) எனப் பிறரும் கூறுதல் காண்க. நல்லிசை என்றது வலம்படு வென்றியும் கோடாக் கொள்கையும் காரணமாக வரும்புகழை நிலைக்களனாகிய உலகம் நிலைபெறுந் துணையும் புகழும் அழியாது நிற்றலின் 'நல்லிசை உலக மொடுயிர்ப்ப' என்றார். "தொலையா நல் லிசை யுலகமொடு நிற்ப" (மலை..டு 70) என்றார் பிறரும். துளக்கமுற்ற குடிகளைத் திருத்துதலும் அரசனுக்கு வென்றிச் செயலாதலின் 'துளங்கு குடி திருத்திய வென்றியும்' என்றார். துளங்கு குடி-நிலைகலங்கிய குடி எனினுமாம்.

வலம்படு வென்றி யென்றது மேன்மேலும் பல போர் வென்றி படுதற்கு அடியாகிய வென்றியென்றவாறு. இச்சிறப்பானே இச் செய்யுளுக்கு **வலம்படு வென்றி** என்று பெயராயிற்று.

புடையலிலையும் கழலிலையும் புனைந்து எயிலெறிந்து மறவர்த் தரீஇ நின்னிழல் வாழ்நர்க்குக் கோடற வைத்த கோடாக் கொள்கை என்க.

சேரற்கு அடையாளப்பூ பனந்தோடாகலின் 'மாயிரும் புடையல் புனைந்து' என்றார். "வானவன் போரெதிரிற் போந்தையாம் பூ" (பு. வெ. மா 240) என்றார் பிறரும். புடையல் என்றது பனம் புடையலை. "இரும்பனம் புடையல்" (பதிற் 42: 1) எனப் பிறரும் கூறுதல் காண்க. அரசர் போர்க்குச் செல்லும்போது அடையாளப் பூவிலையும் கழலிலையும் புனைந்து செல்லல்,

"கிண்கிணி களைந்தகா லொண்கழ லொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்" புற 77: 1-5.

என்பதனாலுமறிக பிறரால் அழிக்கப்படாமையின் நிலைபெற்ற பகைவேந்தர் அரண்களைச் சேரன் அழித்தமை தோன்ற 'மன்னெயி லெறிந்து' என்

ரூர். மன்னெயில் என்பதற்கு பகைவேந்தர் வாழும் அரண் எனினுமமை யும் மறவர் என்றது அம்மன்னெயில்களில் வாழும் மறவர்களை. தரீஇ (9) வைத்த கொள்கை (11) என இயையும். நின்னிழல் என்றது சேரன் போர் நிழலை. "கார்முடிச் சேரனின் போர்நிழற் புகன்றே" (பதிற் 39: 17) என வருதல் காண்க. அதனைத் தொன்னிலைச் சிறப்பின் நின்னிழல் என்றது பழை தான நிலைமையையுடைய வென்றியையுடைமையால் என்க. "வெல்போர், வீயா யாணர் நின்வயின்" (பதிற் 35: 9-10) என்பது ஈண்டறியற்பாலது. நின் னிழல் வாழ்நர் என்றது சேரன் போர் நிழலில் வாழும் மறவரை. "போர் நிழற் புகன்ற சுற்றமொடு" (பதிற் 40: 1) எனப் படைத்தலைவரைக் கூறுதல் காண்க. பகைவேந்தர் எயில்களில் வாழும் மறவரால் நிழல் வாழ்நர்க்கு உண்டாகும் கொடுமை அம்மறவரைப் பிடித்துக் கொணர்ந்து வைத்தகொள் கையால் நீங்குதலின் 'கோடற வைத்த கொள்கை' என்றூர். கோடு-கொடுமை. அறத்திற் பிறழாக் கொள்கையாதலின் 'கோடாக் கொள்கை' என்றூர். வலம்படு வென்றியும் கோடாக் கொள்கையும் மிகப் பெரிதுடைமையால் 'நன்றுபெரிதுடையையால்' என்றூர். நன்று-பெரிது. "நன்று பெரிதாகும்" என்பது தொல்காப்பியம். (உரி சூ 47). நன்று பெரிது - மிகப் பெரிது. பகைவரைப் போரின்கண் விரைந்தழித்து வென்றிகொள்ளும் வெவ்விய திறலுடைமையாற் சேரனை 'வெந்திறல் வேந்தே' என்றூர். "உறலுறு குருதி செருக்களம் புலவக், கொன்றமர்க் கடந்த வெந்திறற் றடக்கை" (பதிற் 86: 1-2) எனப் பிறரும் கூறுதல் காண்க. இவ்வுலகத்தோர்க்கு – இவ்வுலகத் தோர் ஆக்கத்தின் பொருட்டு. "நீ வாழிய ரிவ்வுலகத்தோர்க்கென"' (பதிற் 15. 24) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இதனாற் சொல்லியது அவற்குள்ள குணங்களெல்லாம் எடுத்துப் புகழ்ந்து அவன் செல்வத்தையும் அவனையும் வாழ்த்தியவாருயிற்று.

## பழையவுரை

7. வலம்படு வென்றியென்றது மேன்மேலும் பல போர்வென்றி படு தற்கு அடியாகிய வென்றியென்றவாறு. இச்சிறப்பான் இதற்கு வலம்படு வென்றி என்று பெயராயிற்று.

செம்மால் (5) துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும் (7) மன் னெயில்களை எறிந்து அவற்றில் வாழும் மறவர்களைப் பிடித்துக்கொண்டு (9) பழைதான நிலைமைச் சிறப்பினையுடைய நின்னிழலில் வாழும் வீரர்க்குக் (10) கொடுமை அறும்படி வைத்த பிறழாக் கொள்கையும் (11) நீ மிகப் பெரி துடையையாயிரா நின்ருய் (12); ஆதலால் வேந்தே இவ்வுலகத்தோர் ஆக்கத் தின் பொருட்டு (13) நின் செல்வமும் நின் வாழ்நாளும் வாழ்வனவாக (1) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவற்குள்ள குணங்களையெல்லாம் எடுத்துப் புகழ்ந்து அவன் செல்வத்தையும் அவனையும் வாழ்த்தியவாருயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. வாழ்க நின்வளன்: பதிற் 36: 14 ஒப்பு. "உரைசெலச் சிறக்கவவன் பாடல்சால் வளனே" புற 396: 31.

2. "சான்றோர்......புகன்று புகழ்ந்தசையா நல்லிசை" பதிற் 82: 13-5; "புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை" புற 228: 7.

4. "நகைவ ரார நன்கலஞ் சிதறி" பதிற் 43: 20,

நகைவர்: "நகைவர்க்குத், தாவின் றுதவும் பண்பிற்......களங்கிழவோயே" புற 373. 35-9.

நன்கலஞ் சிதறல்: "கலஞ்செலச் சுரத்த லல்லது" "இரவலர் புன்கண் டீர நாடொறும், உரைசா னன்கலம் வரைவில வீசி" "சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை" "நன்கல னீயு நகைசா லிருக்கை" பதிற் 44: 5; 54: 7-8; 87: 1; 'வந்தனென்' 3. "நலஞ்சான்ற கலஞ் சிதறும், பல்குட்டுவர் வெல்கோவே" மதுரைக் 104-5; "கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்" மலைபடு 577; "நன்கலந் தருஉம் வயவர் பெருமகன்" "களிற்றொடு, நன்கல னீயும் நாண்மகி ழிருக்கை" "நசையின் வாழ்நர்க்கு நன்கலஞ் சுரக்கும்,......பிட்டன்" "கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கை" "புலங் கந் தாக விரவலர் செலினே, வரைபுரை களிற்றொடு நன்கல னீயும், உரைசால் வண்புகழ்ப் பாரி" "பாண ரார்ப்பப் பலகல மூதவி, நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்" அக 69: 17; 76: 3-4 143: 11-2; 213: 20; 303: 8-10; 331: 11-2; "பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில், வலிய வாகுநின் றுடோய் தடக்கை" 'இரவலர்க் கருங்கல மருகா தீயா" "மார்பிற் பூண்ட வயங்குகா ழார, மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்" "கேடின்று நல்கு பாடுநர் கடும்பென, வரிதுபெறு பொலங்கல மெளிதினின் வீசி" "பசித்த வொக்கற் பழங்கண் வீட, வீறுசா னல்கல நல்குமதி பெரும" "நாளும், நிரைசா னன்கல னல்கி, யுரைசெலச் சிறக்க" "அருங்கல நல்கி யோனே" புற 14: 10-11; 56: 17; 150: 20-1; 160: 10-11; 389; 14-5; 396: 29-31; 397: 18.

5. ஆன்றவிந் தடங்கிய: "ஆன்றவிந்த சான்றோருள்" இன்னா 18.

செயிர்தீர்: புற 3: 6; தொல். களவு சூ 22: 2; பெருங் (1) 46: 77.

செம்மால்: "மறவோர் செம்மால்" புற 366: 6.

6. வான்றோய் நல்லிசை: "விண்பொரு புகழ்" புற 11: 6; "வானந் தோய் புகழான் மலிவெய்தினான்" சீவக 161.

நல்லிசை யுலகமொ டுயிர்ப்ப: "இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப" மலைபடு 541.

7. வலம்படு வென்றி: பதிற் 32: 7 ஒப்பு.

8. புடையலும் கழலும்: பதிற் 31: 31 ஒப்பு.

9. மன்னெயில்: பதிற் 25: 5 ஒப்பு.

மன்னெயி லெறிந்து: "பகைவர் கடிமதி லெறிந்து" பெரும்பாண் 450-1; "நெடுமதி லெறிந்து" பு. வெ. மா. 209.

10. வாழ்நர்க்கு: "நசையின் வாழ்நர்க்கு" அக 143 11.

13. வெந்திறல்: "ஞாயி றன்ன வெந்திற லாண்மையும்" "வெந்திறற் கூற்றம்". புற 55: 13; 238: 10.

---

## பரிசிலர் வெறுக்கை.

(38) உலகத் தோரே பலர்மற் செல்வர்
எல்லா ருள்ளுநின் நல்லிசை மிகுமே
வளந்தலை மயங்கிய பைதிரந் திருத்திய
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
எயின்முகஞ் சிதையத் தோட்டி யேவலிற்
றோட்டி தந்த தொடிமருப் பியானைச்
செவ்வுளைக் கலிமா வீகை வான்கழற்
செயலமை கண்ணிச் சேரலர் வேந்தே
பரிசிலர் வெறுக்கை பாணர் நாளவை
வாணுதல் கணவ மள்ள ரேறே
மையற விளங்கிய வடுவாழ் மார்பின்
வசையில் செல்வ வான வரம்ப
இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்
பகுத்தூண் டொகுத்த வாண்மைப்
பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே.

இதுவுமது.
பெயர்—பரிசிலர் வெறுக்கை (9).

ப—ரை: 3—4. வளம் தலைமயங்கிய பைதிரம் திருத்திய - பலவகைப் பட்ட வளங்களும் தம்மிற் கலந்த நாட்டைத் திருத்திய, களங்காய் கண்ணி நார் முடி சேரல்-களங்காயாற் செய்த கண்ணியினையும் நாராற் செய்த முடியினையுமுடைய சேரல்,

5—8. எயில் முகம் சிதைய தோட்டி ஏவலின் - பகைவரின் எயில் வாயிற் கதவம் சிதையும்படி அங்குசத்தையுடைய பாகன் ஏவுதலினால், தோட்டி தந்த தொடி மருப்பு யானை - நாடு காவலை நினக்குத் தந்த தொடி யணிந்த மருப்பினையுடைய யானையையும், செ உளை கலி மா - சிவந்த தலை யாட்டத்தினையுடைய மனஞ் செருக்கிய குதிரையையும், ஈகை வான் கழல்-

பொன்றுற் செய்த நன்றாகிய வீரக்கழலினையும், செயல் அமை கண்ணி-தாம் செய்யும் போர்ச் செயலுக்குத் தக அமைந்த கண்ணியினையுமுடைய, சேரலர் வேந்தே - சேரநாட்டுப் படைவீரரையுமுடைய அரசே,

9—22. பரிசிலர் வெறுக்கை-பரிசிலர் வாழ்வே, பாணர் நாள் அவை-பாணர் இருக்கும் நாளோலக்கமே, வாள்நுதல் கணவ-ஒளி பொருந்திய நுதலினையுடைய பெருந்தேவிக்குக் கணவ, மள்ளர் ஏறே-போர் வீரருள் ஆண் சிங்கம் போல்பவனே, மை அற விளங்கிய வடு ஆழ் மார்பின்-குற்றமின்றாக விளங்கிய வடுக்கள் ஆழ்ந்த மார்பினையுடைய, வசை இல் செல்வ-குற்றமில்லாத வீரச் செல்வத்தினையுடையவனே, வான வரம்ப-வான வரம்பனே,

13—6. இனியவை பெறினே தனி தனி நுகர்கேம்-இனிய பொருள்களைப் பெற்றால் தனித்தனி நுகருவேம், தருக என விழையா - அவற்றைத் தருவாயாக என்று விரும்பிக் கேட்டற்கு முன்னே, தா இல் நெஞ்சத்து-வருத்தமில்லாத நெஞ்சத்தால், பகுத்து ஊண் தொகுத்த ஆண்மை-பிறர்க்குப் பகுத்துண்ணும் உணவைத் தொகுத்து அளித்த ஆண்மையானே, பிறர்க்கு என வாழ்திநீ ஆகன்மாறு-பிறர்க்கென வாழ்திநீ யாகலான்,

1—2. உலகத்தோர் செல்வர் பலர் மன்—உலகத்தோரில் செல்வமுடையோர் பலர் உளர்; நின்னைப்போல அவர் நல்லிசை பெற்றிலர்; எல்லாருள்ளும் நின் நல்லிசை மிகும்-அவர்கள் எல்லாருள்ளும் நினது நல்ல புகழ் மேம்பட்டுத் தோன்றும்.

முடிபு: சேரல், சேரலர் வேந்தே, பரிசிலர் வெறுக்கை, பாணர் நாளவை வாணுதல் கணவ, மள்ளரேறே, வசையில் செல்வ, வானவரம்ப, பகுத்தூண் தொகுத்த ஆண்மையானே பிறர்க்கென வாழ்தி நீயாகலான் உலகத்தாரில் செல்வர் பலர் மன்; அவர்கள் எல்லாருள்ளும் நின் நல்லிசை மிகும் என்க.

ஆரை: 1—2. உலகத்தோர் செல்வர் பலர் மன் எனக் கூட்டுக. "இலர் பலர்" (குறள் 270) எனத் திருவள்ளுவர் கூற, இப்பத்தின் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் நல்லிசைப் புலவர் 'செல்வர் பலர்' எனக் கூறியதென்னையெனின், நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை பண்ணப்பணைத்த பெருஞ்செல்வமாதலின் உலகத்து அறிவுடையார் சிலராக அறிவிலாதார் பலராதல்பற்றி ஆசிரியர் திருவள்ளுவனார் 'இலர் பலர்' என்றார். ஈண்டு இப்பத்தின் ஆசிரியர் அறிவுடைமைபற்றிக் கூறாது செல்வமுடைமை பற்றிக் கூறுகின்றாராதலின் இச்சேரன் காலத்தில் அரசரும் பிறருமாகிய செல்வர் பலர் வாழ்ந்தமைபற்றிச் 'செல்வர் பலர்' என்றார். என்க மன், ஒழியிசை. அச் செல்வர் பலரும் தமக்கும் பிறர்க்குமென வாழ இச்சேரன் பிறர்க்கென வாழ்தலால் இவன் புகழ் மற்றெல்லார் புகழினும் மேம்பட்டு விளங்கலின் 'எல்லாருள்ளுநின் நல்லிசை மிகுமே' என்றார். அச் செல்வர் பலரின் கொடையினும் நின் கொடை சிறத்தலால் அவர் கொடைப்புகழினும் நின் கொடைப் புகழ் மேம்பட்டுத் தோன்றும் என்பார் 'எல்லருள்ளும் நின் நல்லிசை மிகுமே' என்றார்.

3—4. சேரனுக்குரிய நாடு தந்தை வழியில் வந்தமையின் அதனைப் 'பைதிரம்' என்றார். பைதிரம் என்பது பைத்ரம் என்னும் வடமொழித் திரிபு. இது பிதிர்வழியில் வந்தது என்னும் பொருட்டு. பலவகைச் செல்வங்களும் தம்மிற்கலந்துள்ள நாடாதலின் 'வளந்தலை மயங்கிய பைதிரம்' என்றார்.

"கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு" பதிற் 15: 16-7.

என்பது ஈண்டறியற்பாலது. வளந்தலை மயங்கிய – செல்வந் தலை தெரியாத பட்டினப் 195 நச். பகையரசரால் அழிந்த நாட்டை நார்முடிச் சேரல் பண்டு போல் நிலைநிறுத்தியமையின் 'பைதிரந் திருத்திய.....சேரல்' என்றார். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்பது இவ்வரசன் பெயர். இதனை

"வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்" அக 199: 21-2.

எனவும், 'களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடினார் பத்துப் பாட்டு' (4ம் பதி 13) எனவும் வருவனவற்றானுமறியலாம். தான் முடிசூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும் உதவாமையிற் களங்காயாற் கண்ணியும் நாரால் முடியும் செய்து அணிந்துகொண்ட காரணத்தால் இச் சேரனுக்கு இப் பெயர் வழங்கலாயிற்று. கண்ணி – தலையிற் சூடும் மாலை. "பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" முருகு 44. நார்முடியின் இயல்பை,

"இலங்குமணி மிடைந்த பசும்பொற் படலத்
தவிரிழை தைஇ மின்னுமிழ் பிலங்கச்
சீர்மிகு முத்தந் தைஇய
நார்முடி" பதிற் 39: 14-7.

என வருதலானறிக. சேரல், அண்மை விளி.

5—8. யானையினையும் மாவினையும் கழலினையும் கண்ணியினையு முடைய சேரலர் வேந்து என்க.

சேரன் தன்னொடு மாறுபட்ட வேந்தனின் ஆரெயில் முற்றியகாலை பாகனின் ஏவுதலாற் சேரன் படையிலுள்ள வினைநவின்ற போர்யானை தொடியணிந்த தன் மருப்பால் எயின் முகத்தை இடித்துச் சிதைப்ப அது வாயிலாகப் படையொடு உட்சென்ற சேரன் பகைவேந்தனைப் பொருது வென்று அவன் நாட்டைக் கைக்கொண்டு காத்தலின் 'எயின் முகம் சிதையத் தோட்டி யேவலின், தோட்டி தந்த தொடிமருப் பியானை......வேந்தே' என்றார். எயின் முகமென்றது மதிற் கோபுர வாயிலை. இதனை,

"எயின்முகப் படுத்தல் யாவது......
..........................................
குழூஉநிலைப் புதவின் கதவுமெய் காணின்
தாங்கலாகா வாங்குநின் களிறே" பதிற் 53: 12-21.

என்பதனாலும்,

"வயிரமணித் தாழ்கதவு வாயின்முக மாக
வயிரக்கிடங் காடைமதிற் கன்னியது கவினே" (சீவக 105)

என்பதனாலும் 'முலையினையும் கூந்தலினையும் ஆடையினையுமுடைய மதிற் கன்னி கதவினையுடைய நாலுவாயிலும் நாலுமுகமாகக் கவினிடத்தாயிற் றென்க' என்னும் அப் பகுதி (நச்) உரையானும் தெளியலாம். இனிக் கோபுரம் எனக் கொள்ளினும் அமையும். 'திகழ்மணிக் கோபுரந் திங்கண் வாண் முகம், சிகழிகை நெடுங்கொடி செல்விக் கென்பவே'' (சீவக 1444) எனப் பிறரும் கூறுதல் காண்க. 'சிதைய' என்றதனால் எயின்முகம் என்றது ஈண்டு மதில் வாயிற் கதவத்தை என்க. அதனை யானை சிதைத்தல்,

"பூணு வையவி தூக்கிய மதில
நல்லெழி னெடும்புதவு முருக்கிக் கொல்லுபு
ஏன மாகிய நுனிமுரி மருப்பிற்
.......................................
மரங்கொன் மழகளிறு முழங்கும் பாசறை'' பதிற் 16: 4-8.

என்பதனலறிக. பகையரசன் மதிற் கதவத்தை அடைத்து அகத்திருந்தமையின் எயின்முகஞ் சிதையத் தோட்டி ஏவுவானாயினன். அகத்தோன் எயிற் கதவு அடைத்திருத்தல் "திறவா தடைத்த திண்ணிலைக் கதவி, னீண்மதி லொரு சிறை யொடுங்குதல்'' (புற 44: 14-5) என்பதனாலுமறிக. தோட்டி யேவலின் என்புழித் தோட்டியென்பது ஆகுபெயராய்த் தோட்டியுடைய பாகனை உணர்த்திற்று. 'தோட்டியுடையானைத் தோட்டி' என் ஆகுபெயராயிற்று, (தொல். வேற்றுமைமயங் 33 தெய்வச்) என்பது ஈண்டறியற்பாலது. தோட்டி தந்த என்றதனால் பாகன் ஏவுதலின்படி யானை எயின் முகத்தைச் சிதைத்தமை பெறப்படும். தோட்டி—காவல். "நீயுடன்றோர் மன்னெயில் தோட்டி வையா'' பதிற் 25: 5. தந்த யானை என இயையும்.

உளை முதலியன அணியப்பெற்றதும் மனஞ் செருக்கியதுமாகிய குதிரை யாதலின் 'செவ்வுளைக் கலிமா' என்றார். செவ்வுளை - செம்மைநிற மூட்டப் பட்ட உளை. உளைக்கு நிறமூட்டல் "ஊட்டுளை'' (பொருந 164) என்பத னாலுமறிக. கலி—மனச்செருக்கு. கலி. 75: 16 நச். 'மனவெழுச்சி' பு. வெ. மா. 356 உரை. ஈகை - பொன் வீரக் கழல் பொன்னாற் செய்யப்படுதல் "ஈகை யங்கழல் - பொன்னாற் செய்யப்பட்ட வீரக்கழல்'' என்னும் புறப்பாட்டுரையா னும் (99; 5 உரை) அறிக.

செயலமை கண்ணியென்றது தாம் செய்யக் கருதிய வெட்சி வஞ்சி உழிஞை முதலிய போர்ச் செயல்களுக்கு ஏற்ப வெட்சி வஞ்சி உழிஞை முதலிய பூக்களான் இயன்ற கண்ணியென்றவாறு. போர்ச்செயல்களுக்கு ஏற்ப வேறுவேறான கண்ணியைச் சூடுதல் 'குவியற் கண்ணி-வெட்சி முதல் வாகையீறாய போர்க்கண்ணி யெல்லாங் குவிதலையுடைய கண்ணியென்க, (பதிற் 21: 24 உரை) எனவும், "கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" என் புழிக் 'கண்ணி கண்ணுதல் - தாங்கள் சூடிய போர்க் கண்ணிக்கு ஏற்ப வினை செய்யக் கருதுதல்' (பதிற் 54: 8 உரை) எனவும் வரும் உரைப்பகுதிகளா

னும் அறிக. 'வெட்சித் திணையாவது களவின்கண் நிரைகொள்ளும் ஒழுக்கம்; இதற்கு அப்பூச் சூடுதல் உரித்தென்று கொள்க' (புற சூ நச்) எனவும், 'வஞ்சியென்றது ஒருவர்மேலொருவர் மேற்சேறலை இதற்கு வஞ்சி சூடிச் சேறல் உலகியல்' (புற சூ 6 நச்) எனவும் வரும் **தொல்காப்பியவுரைப் பகுதிகள்** ஈண்டறியற்பாலன. கண்ணியென்றார், போர்ப்பூக்கள் முடிமிசை சூடப் படுதலின்.

9—12. பரிசிலர் வெறுக்கையென்றது பரிசிலர் வாழ்வென்றவாறு; இச் சிறப்பான் இச் செய்யுளுக்குப் **பரிசிலர் வெறுக்கை** என்று பெயராயிற்று.

பரிசிலர் - இரந்து வந்தோர். முருகு 273 நச். அவர் பாணர் கூத்தர் முதலியோர். 'பரிசில் வாழ்க்கைப் பரிசிலர்—பிறர் கையில் ஏற்ற பொருளால் இல்வாழ்க்கை நடத்துதலையுடைய பாணர் கூத்தர் முதலியோர்' என **நச்சினார்க்கினியர்** பொருளுரைத்தவாறு காண்க. (சிறுபாண் 218 உரை) இனி, ''பாணர் நாளவை'' எனப் பாணர் மேல் கூறப்படுதலின் ஈண்டுப் பரிசிலர் என்றது கூத்தர் எனக் கொள்ளினுமமையும். ''பாணர் பாடுநர் பரிசில ராங்கவர்'' (புற 135: 12) என்புழிப் 'பரிசிலர்-கூத்தர்' என அதன் உரையாசிரியர் பொருளுரைத்தமை காண்க. பரிசிலர் வாழ்வுக்கு வேண்டும் செல்வத்தை அளித்தலின் 'பரிசிலர் வெறுக்கை' என்று சேரனுக்குப் பெயராயிற்று. ''பாணர்க், ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோன், எங்கோ வளவன்'' ''வயிரியர் இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே'' (புற 34: 14-6; 164: 12-3) என வருவன காண்க. நாளவை – நாளோலக்கம், ''பாண ரார்ப்பப் பலகல முதவி, நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்'' (அக 331: 10-11) எனப் பிறரும் கூறுதல் காண்க. பாணர் நாளவையுடைமையாற் பாணர் நாளவையென்றும் அவற்குப் பெயராயிற்று. பெருந்தேவியின் எழினலமும் சேரனின் ஒழுக்கச் சிறப்பும் தோன்ற 'வாணுதல் கணவ' என்றார். மள்ளர் – வீரர். ஏறு—இடபமுமாம்.

போரில் ஆழ்ந்துபடு புண்ணால் உண்டாகிய வடு நன்கு விளங்குதலின் 'மையற விளங்கிய வடு' என்றார். மை - குற்றம். ''மையறு மண்டிலம்'' கலி 141: 2. வடுவாழ் மார்பு என்றது களத்திற் பகைவரது படையை விலக்கி எதிர்நின்று பொருதலால் அவர்வேல் முதலிய போர்க் கருவிகளால் உண்டான வடுவழுந்திய மார்பு என்றவாறு.

> ''நீயே, யமர்காணி னவர்கடந்தவர்
> படைவிலக்கி யெதிர்நிற்றலின்
> வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
> கேள்விக் கினியை கட்கின் னாயே'' புற 167: 1-4.

என வருதல் காண்க. வடுவாழ்—வடுவழுந்தின, முருகு 78 நச். புறங்காட்டலாகிய குற்றத்தினீங்கி எதிர் நின்று பொருதலாற் பெற்ற வென்றிச் செல்வத்தினையுடையனாகலின் சேரனை 'வசையில் செல்வ' என்றார். வான வரம்பன் என்னும் பெயர் விளிக்கண் வானவரம்ப என நின்றது. ''வான வரம்பனெனப்'' (பதிற் 58: 12) எனவும் ''வான வரம்பனெனப் பேரினிது விளக்கி'' (பதிற் 6ம் பதி 6) எனவும் வருவன காண்க.

*13—6.* 'இனியவை பெறினே தனிதனி நுகர்கேம் தருகு' என விளைவதற்கு முன்னே ஊண் தொகுத்தளித்த ஆண்மையானே பிறர்க்கென வாழ்தியென்க.

சேரன் தன்பால் வருநர்க்கு இனிய பொருள்களையே அளித்தலின் 'இனியவை பெறினே' என்றும், ஒன்றையொன்றொவ்வா வெவ்வேறு இனிமையுடைய அந்நுகர் பொருள்களைத் தனித்தனியே நுகர்தலின் 'தனிதனி நுகர்கேம்' என்றும் கூறினார். தனித்தனி என்பது எதுகை நோக்கி மிகாதாயிற்று. தருகென விழையாத் (14) தொகுத்த(15) எனக் கூட்டித் தருகென்று விரும்பிக் கேட்டற்கு முன்னே குறிப்பறிந்து தொகுத்த எனக் கொள்க.

"நின்னசை வேட்கையி னிரவலர் வருவரது
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே" புற 3: 24-6.

எனப் பிறரும் கூறுதல் காண்க. மனம் வருந்தாமற் கொடுத்தலின் 'தாவினெஞ்சத்துத் தொகுத்த' என்றார். "பாடிவருநர்க், கின்முகங் கரவா துவந்துநீ யளித்த" (புற 130: 3-4) எனப் பிறரும் கூறுதல் காண்க. தா – வருத்தம். "தாவே வலியு வருத்தமு மாகும்" என்பது தொல்காப்பியம் (உரி 48). உணவைப் பகுத்துண்ணும் இயல்புபற்றிப் 'பகுத்தூண்' என்றார். "பாத்தூண் மரீஇயவனை" என்றார் திருவள்ளுவரும் (குறள் 227). உண்டி முதற்றே உணவின்பிண்ட மாதலானும், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராதலானும் சேரன் ஊணைத் தொகுத்தளிப்பானாயினன். தொகுத்தளித்துப் பிறர்க்கு உதவியாற்றலும் ஆண்மையாதலின் 'பகுத்தூண் தொகுத்த வாண்மை' என்றார். "சேர்ந்தோர்க்கு, உறுமிடத் துய்க்கு முதவி யாண்மையும்" (அக 231: 1–2) என்றார் பிறரும். பிறர்க்கென வாழ்தி – நின்பொருட்டன்றிப் பிறர் பொருட்டு வாழ்கின்றாய். மாறென்பது ஏதுப்பொருள் படுவதோர் இடைச்சொல்.

இதனாற் சொல்லியது அவன் **கொடைச்சிறப்புக் கூறியவாறாயிற்று.**

## பழையவுரை.

4. களங்காய்க் கண்ணி நார்முடி யென்றது களங்காயாற் செய்த கண்ணியும் நாராற்செய்த முடியுமென்றவாறு. தான் முடிசூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும் உதவாமையிற் களங்காயால் கண்ணியும் நாரால் முடியும் செய்து கொள்ளப்பட்டனவென்றவாறு.
9. பரிசிலர் வெறுக்கையென்றது பரிசிலர் வாழ்வென்றவாறு. இச் சிறப்பான் இதற்கு **பரிசிலர் வெறுக்கை** என்று பெயராயிற்று. நாளவையுடைமையாற் பாணர் நாளவை யென்றும் அவற்குப் பெயராயிற்று.

சேரல் (4) சேரலர் வேந்தே (8) பரிசிலர் வெறுக்கை பாணர் நாளவை (9) வாணுதல் கணவ மள்ளரேறே (10) வசையில் செல்வ, வான வரம்ப 12) செல்வர் உலகத்தார் பலர் மன் (1) அச் செல்வத்தாரெல்லாம் பெற்றது ஈதெனத் தாவில் நெஞ்சத்துப் (14) பகுத்தூண் தொகுத்த ஆண்மை

யானே (15) பிறர்க்கென வாழ்தி நீயாகலான் (16) அவர்களெல்லாருள்ளும் நின் நல்லிசை மிகும் (2) எனக்கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் கொடைச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. உலகத்தோர்: பதிற் 37: 13 ஒப்பு.

2. நல்லிசை: பதிற் 14: 21 ஒப்பு.

3. வளந்தலை மயங்கிய: "வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்" பட்டினப் 193; "வளந்தலை மயங்கிய பொன்னகர்" மணி 28: 67-8.

பைதிரம்: பதிற் 19: 18 ஒப்பு.

4. நார்முடிச் சேரல்: "சீர்மிகு முத்தம் தைஇய, நார்முடிச் சேரல்" "தார்மிகு மைந்தி னார்முடிச் சேரல்" பதிற் 39: 17; 40: 16.

5—6. யானை எயின்முகஞ் சிதைத்தல்: பதிற் 16: 4-8.

6. தொடிமருப்பியானை: பதிற் 15: 22-3.

7. செவ்வுளைமா: பதிற் 34: 4 ஒப்பு.

கலிமா: "உளையவிர் கலிமா" பதிற் 42: 15; பருமருங் களையாப் பாய் பரிக் கலிமா" நெடுநல் 179; "கலிமா கடைஇ" "படுமணிக் கலிமா" "விசும்பு கடப் பன்ன பொலம்படை கலிமா" நற் 150: 7; 235. 9; 361: 3; "பாணி பிழையா மாண் வினைக் கலிமா" அக 360: 11; "கதழ்பரிய கலிமாவும்" "பொலம்படைக் கலிமா" "காலியற் கலிமா" புற 55: 7; 116: 19; 229: 21; "புல்லுண் கலிமாவும்" கார்நாற் 22.

வான்கழல்: "வான்கழல் சிவப்ப" "வலம்படு வான்கழல்" பதிற் 57: 2; 70: 11;

ஈகை வான்கழல்: "இரும்பனம் புடைய லீகை வான்கழல்" பதிற் 42: 1; "இயலணிப் பொலிந்த வீகை வான்கழல்" குறிஞ்சி 125.

9. பரிசிலர் வெறுக்கை: பதிற் 15: 21 ஒப்பு.

நாளவை: "வண் மகிழ் நாளவை" நற் 167: 3; "தித்தன் வெளிய னுறந்தை நாளவை" "நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்" அக 226: 14; 331: 12; "செம் மனவை" புற 54: 3.

பாணர் நாளவை: "பாண்முற்றுகநின் நாண்மகி ழிருக்கை" புற 29: 5;

10. வாணுதல் கணவ: "மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" முருகு 6; "மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்" புற 314: 1.

12. வானவரம்ப: "வானவரம்பன் வெளியத் தன்ன" "வான வரம்பன் நன்னாட்டும்பர்" அக 359: 6; 389: 16; "வான வரம்பனை நீயோ பெரும" புற 2: 12.

16. மு. "பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே" பதிற் 39: 1.

## ஏவல் வியன்பணை

(39) பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே
எமக்கிலென் ஞர்நின் மறங்கூறு குழாத்தர்
துப்புத்துறை போகிய வெப்புடைத் தும்பைக்
கறுத்த தெவ்வர் கடிமுனை யலற
எடுத்தேறிந் திரங்கு மேயல் வியன்பணை
உருமென வதிர்பட்டு முழங்கிச் செருமிக்
கடங்கா ராரரண் வாடாச் செல்லும்
கால னனைய கடுஞ்சின முன்ப
வாலிதின், நூலி னிழையா நுண்மயி ரிழைய
பொறித்த போலும் புள்ளி யெருத்திற்
புன்புறப் புறவின் கணநிரை யலற
அலந்தலை வேலத் துலவை யஞ்சினைச்
சிலம்பி கோலிய வலங்கற் போர்வையின்
இலங்குமணி மிடைந்த பசும்பொற் படலத்
தவிரிழை தைஇ மின்னுமிழ் பிலங்கச்
சீர்மிகு முத்தந் தைஇய
நார்முடிச் சேரனின் போர்நிழற் புகன்றே.

துறை—வாகை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்—ஏவல் வியன்பணை (5).

ப—ரை: *3—8.* துப்பு துறை போகிய - வலியின் கூறுபாடுகளெல்லாம் முடியப்போன, வெப்புடை தும்பை-வெம்மையையுடைய தும்பை மாலையைச் சூடிய, கறுத்த தெவ்வர் கடி முனை அலற - வெகுண்டெழுந்த பகைவர் அச்சத்தையுடைய போரின்கண் அலறும்படி, எடுத்து எறிந்து இரங்கும்-கடிப்பினை எடுத்து அடிக்க ஒலிக்கும், ஏவல் வியன் பணை - படையைக் கடிமுனைக்கண் ஏவுதலையுடைய பெரிய முரசு, உரும் என அதிர்பட்டு முழங்கி - இடியைப்போல அதிர்ந்து முழங்க, செரு மிக்கு - போர்த்தொழிலில் மேம்பட்டு, அடங்கார் ஆர் அரண் வாட செல்லும் - பகைவரது அரிய அரண் அழியும்படி மேற்செல்லும், காலன் அனைய கடு சின முன்ப - கூற்றுவனைப் போன்ற மிக்க சினத்தினையும் வலியினையும் உடையோய்,

*9—17.* பொறித்த போலும் புள்ளி எருத்தின் - எழுதினாற் போன்ற புள்ளிகளையுடைய கழுத்தினையும், புன் புறம் புறவின் கணம் நிரை அலற-புற்கென்ற புறத்தினையுமுடைய புருத்திரளின் ஒழுங்குகள் வலையெனக் கருதி அலறும்படி, அலந்தலை வேலத்து உலவையஞ்சினை - காய்ந்த தலையினையுடைய வேலமரத்தினது உலர்ந்த சிறுகொம்பினையுடைய பெருங்கொம்பில், வாலிதின் — வெண்மையாக, நூலின் இழையா நுண் மயிர் இழைய - நூலால்

இழைக்கப்படாத நுண்ணிய மயிரைப்போன்ற இழைகளையுடைய, சிலம்பி கோலிய அலங்கல் போர்வையின் - சிலந்தி வலைத்துச் செய்த அசைதலையுடைய வலையை முத்தாற் சூழுமாறுபோல, இலங்கு மணி மிடைந்த பசுபொன் படலத்து – விளங்குகின்ற மணிகளை விளிம்பிலே நெருங்க அழுத்திய பசிய பொற்றகட்டாற் செய்த கூட்டினையுடைய, அவிர் இழை தைஇ– விளங்கின் நூலாலே கோத்து, மின் உமிழ்பு இலங்க – ஒளியைக் கான்று விளங்கும்படி, சீர்மிகு முத்தம் தைஇய-சிறப்பு மிக்க முத்து வடங்களைச் சூழ்ந்த, நார் முடி சேரல்–நாராற் செய்த முடியினையுடைய சேரலே,

1—2. நீ பிறர்க்கு என வாழ்தி ஆகன்மாறு – நீ பிறர்க்கென வாழ்தியாகலான், நின் மறம்கூறு குழாத்தர்-நின்னுடைய வீரச் செயலினை எடுத்துச் சொல்லும் படைக் குழாத்திலுள்ள நின் வீரரும், நின் போர் நிழல் புகன்று (17)–நின் போராகிய நிழலை என்றும் உளவாக வேண்டுமென்று விரும்பி, எமக்கு இல் என்னார் – தம்பால் இரந்து சென்றோர்க்கு எம்மிடத்து இல்லையென்று மறார்.

**முடிபு:** முன்ப சேரல் நீ பிறர்க்கென வாழ்தியாகலான் நின் மறங்கூறு குழாத்தர் நின் போர் நிழற் புகன்று எமக்கு இல்லையென்னார் என்க.

**ஆ—ரை:** 1—2. நீ பிறர்க்கென வாழ்தியாகலான் நின் மறம் கூறு குழாத்தர் எமக்கில்லென்னார் என்க. "நின் படைகொண் மாக்கள்...... வருநர்க். குதவியாற்று நண்பிற் பண்புடை, யூழிற்றாக நின் செய்கை" (புற 29: 17–22) என்பது ஈண்டறியற்பாலது. எமக்கில் லென்னார் நின் மறங் கூறு குழாத்தர்' என்றதனாற், பிறர்க்கென வாழ்தியென்பதற்கு நீ நின்பால் இரந்து வந்தோர்க்கு எமக்கு இல்லையென்று மறாது ஈந்து பிறர்க்கென வாழ்தி யெனக் கொள்க. சேரன் ஈந்து பிறர்க்கென வாழ்ந்தமை,

"தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்
பகுத்தூண் தொகுத்த வாண்மைப்
பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே" பதிற் 38: 14–6.

என்பதனாலுமறியப்படும். எமக்கில்லென்னார் என்பதற்கு எம்மிடத்து இல்லையென்று மறார் எனக்கொள்க. "இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்" (குறள் 223) என்பதற்கு 'யான் இது பொழுது பொருளுடையே னல்லேனெனக் கரப்பார் சொல்லும் இழிவரவைச் சொல்லாது கொடுத்தலென வும் உரைப்பாருமுளர்' என்று பரிமேலழகர் உரைத்தல் ஈண்டு சிந்திக்கத் தக்கது. எமக்கென்பது வேற்றுமை மயக்கம். "தில்லைச் சூழ் பொழிற்கே" (திருக்கோவை 167) என்புழிப்போல. இனி, எமக்கில்லென்னார்' என்பதற் குத் தம்மிடத்து இரந்துசென்ற எமக்கு இல்லையென்று மறார் எனப் பரிசிலர் கூற்றாகக் கொள்ளினும் அமையும். இல் – இல்லை. "இல்லா கியரோ காலை மாலை" புற 232:1.

பகைவீரர் நின்ற அணியிலே சென்று அவ்வணியைக் குலைத்தல், தனது படை கெட்டவிடத்து தான்சென்று பகைவரைப் பொறுத்தல் முதலாகிய

சேரனின் மறச் செயல்களை அவன் படைவீரர் எடுத்துப் புகழ்ந்துரைத்த லின் அவரை 'நின்மறம் கூறு குழாத்தர்' என்றார்.

"ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்த" **சிறுபாண் 211-2.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. குழாமென்றது படைக்குழா மாதலின், குழாத் தர் படைக் குழாத்திற் படைவீரர்களாவர். 'படைக் குழாத்திற் படைத்தலை வர்' என்பர் **பழையவுரைகாரர்.** படைவீரர் கொடை கூறவே படைத்தலை வரும் கொடையுடையராதல் பெறப்படும்.

3—8. தெவ்வர் கடிமுனைக்கண் அலறுமாறு வியன்பணை முழங்கச் செருமிக்கு அடங்கார் ஆரரண் வாடச் செல்லும் காலனனைய கடுஞ்சின முன்ப என்க.

துப்புத்துறை போகிய தெவ்வர் எனவும் தும்பைத் தெவ்வர் எனவும், கறுத்த தெவ்வர் எனவும் தனித்தனி கூட்டுக. வலியின் கூறுபாடுகளெல்லாம் முற்றவும் கடைபோகிய தெவ்வர் அவ்வலியே பொருளாகப் பொருதற் கெழுந்தமையின் 'துப்புத்துறை போகிய தெவ்வர்' என்றார். துப்பு-வலி.

"உறுபுலித் துப்பி னேவியர் பெருமகன்" **சிறுபாண் 122.**

"முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்" **குறுந் 312: 2.**

"கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்குங் காலை" **புற 54: 8-9.**

என வருவனவற்றிலும் இப்பொருட்டாதல் காண்க. இனித் துப்புத் துறை என்பதற்குப் போர்த்துறை எனினுமமையும்.

சேரனொடு பொருதற்கெழுந்த பகைவர் போர்ப்பூவாகிய தும்பையைச் சூடினமையின் 'தும்பைத் தெவ்வர்' என்றார். அதிரப்பொருதல் தும்பையா தலின் போரின் வெம்மையைத் தும்பையின்மேலேற்றி 'வெப்புடைத் தும்பை' என்றார். சேரனொடு பொருதற்குத் தெவ்வர் வெகுண்டெழுந்தமையின் 'கறுத்த தெவ்வர்' என்றார். "துப்புத்துறை போகிய வெப்புடைத் தும்பைக், கறுத்த தெவ்வர்" எனப் பகைவரைக் கூறியது அவர் கடிமுனைக்கண் அலறும்படி செருவின்கண் மேம்படும் சேரனின் பேராற்றல் புலப்படும்பொருட்டென்க. கடி-அச்சம். "அருங்கடி வேலன்" **மதுரைக் 611.** முனை-போர். **பதிற் 25: 9.** பழையவுரை. போர்க்களமுமாம். எடுத்தெறியவெனத் திரிக்க.

ஏவல்வியன்பணையென்றது எடுத்தவினை முடிந்ததெனாது மேன்மேலும் படையைக் கடிமுனைக்கண் ஏவுதலையுடைய முரசென்றவாறு. இச் சிறப்பான் இச் செய்யுளுக்கு **ஏவல்வியன்பணை** என்று பெயராயிற்று.

பணைபடையை ஏவுதல், "எடுத்தே றேய கடிப்புடை வியன்கண்" "எடுத்தே றேய கடிப்புடை யதிரும், போர்ப்புறு முரசம்" (**பதிற் 41: 23; 84: 1-2**), என வருவனவற்றானுமறியப்படும். அகன்ற கண்ணையுடைய பெரிய முரசாதலின் 'வியன்பணை' என்றார். "வலம்படு வியன்பணை" (**பதிற் 17: 5**) எனப் பிறரும் கூறுதல் காண்க.

கடிப்பினால் எடுத்து எறிய வியன்பணை இடியைப்போலப் பேரொலியாக ஒலித்தலின் 'வியன்பணை உருமென முழங்கி' என்றார்.

> ''எடுத்தெறிந்த விறன் முரசம்
> கார்மழையிற் கடிதுமுழங்க'' பதிற் 80: 3-4.

எனப் பிறரும் கூறுதல் காண்க. குறுந்தடியால் அடிக்குந்தொறும் முரசு கண்ணதிர்ந்து ஒலித்தலின் 'அதிர்பட்டு முழங்கி' என்றார். ''கடிப்புடை யதிரும், போர்ப்புறு முரசங் கண்ணதிர்ந் தாங்கு'' (பதிற் 84: 1-2) எனப் பிறாண்டும் வருதல் காண்க. முழங்கவெனத் திரிக்க. சேரன் போர்த்தொழிலில் மிக்கு நடத்தலின் 'செருமிக்கு' என்றார். 'செருமிக்கு – வஞ்சி முதலிய போர்த்தொழிலில் மிக்கு நடத்தலானே' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. (மலைபடு 356 உரை).

கடுஞ்சினமும் மிக்க வலியுமுடைய சேரன் மேற்சென்று பகைவர் அரண்களை அழித்தலின் ''அடங்கா ராரண் வாடச் செல்லும்.......கடுஞ்சின முன்ப'' என்றார். ''அடங்கார் – தன் ஆணைக்கீழ் அடங்கி நடவாத பகைவர். ''அடங்கார் அடக்கிய அண்ணல்'' என்றார் கதையிலும். (பெருங் (2) 19: 15). ஆர்அரண்–கடிமிளை குண்டு கிடங்கு நெடுமதில் நிரை ஞாயில் முதலியவற்றை யுடைமையால் அணுகுதற்கரிய அரண். வாட–கெட. பு. வெ. மா. 150 உரை. செல்லும் (7) முன்ப (8) என்க.

காலன்–கூற்றுவன். ''காலனென்னுங் கண்ணிலி யுய்ப்ப, மேலோ ருலக மெய்தினன்'' புற 240: 5-6. சேரன் கூற்றுவனையொத்த விலக்குதற் கரிய மிக்க சினமும், வலியுமுடையனாதலின் ''காலனனைய கடுஞ்சின முன்ப'' என்றார். ''கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்'' (புற 56: 11) எனவும்,'' கூற்றத் தன்ன மாற்றரு முன்பின்'' (புற 362: 7) எனவும் வருவன காண்க.

9—17. புறவின் கணநிரை அலற வேலத்து உலவை யஞ்சினைச் சிலம்பி கோலிய போர்வையின் முத்தந் தைஇய பசும்பொற் படலத்து நார்முடி என்க.

வாலிதின் (9) சிலம்பி கோலிய போர்வை (13) என இயையும். வாலிதின்—வெள்ளிதாக. ''வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை'' மலைபடு 101. சிலம்பி நூல் வெண்மையாதலின் அதனால் இயன்ற வலையும் வெண்மையாகத் தோன்றலின் ''வாலிதின் கோலிய போர்வை'' என்றார். சிலம்பி நூல் வெண்மையாதல், ''சிலம்பி வானூல்'' (பெரும்பாண் 236) ''சிலம்பி வானூல் வலந்தன தூங்க'' (நெடுநல் 59) என வருவனவற்றாலும் அறியப்படும். சிலம்பி வலை நூலால் இழைக்கப்பட்டதுபோற் தோன்றினும் அதனால் இழைக்கப் படாமையின் 'நூலின் இழையா' என்றும், சிலம்பியின் நுண்ணிய மயிர் போலும் நூலால் இழைக்கப்பட்டமையின் 'நுண்மயிர் இழைய' என்றும் போர்வைக்கு அடை கொடுத்துக் கூறினார்.

புறவின் கழுத்தில் ஓவியன் எழுதினாற்போலப் புள்ளிகள் அழகுற அமைந்திருத்தலின் "பொறித்த போலும் புள்ளி யெருத்தின்" என்றார். *மனை யுறை புறவினை நீக்குதற்குப் 'புள்ளி யெருத்தின்' என்றார். கானப்புறு புள்ளி யெருத்தினை யுடைத்தாதல்,

"பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை
பொறிகாற் கள்ளி விரிகா யங்கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பிற் கானம்" குறுந் 154.

என்பதனாலுமறியப்படும். புறவினுக்குப் புறம் புற்கென்றிருத்தலின் 'புன்புறப் புறவு' என்றார். "புன்புறப் பெடையொடு பயிரி யின்புற, விமைக்க ணேதா கின்றோ" (குறுந் 285) எனப் பிறருங் கூறுதல் காண்க. கணநிரை—நிரை ளின் ஒழுங்குகள். மதுரைக் 744 நச்.

வேலமரத்தின் சினையில் சிலம்பி கோலிய போர்வை வேட்டுவன் கட்டிய வலைபோற் றோன்றுதலின் அதனைப் புறவின் கணநிரை கண்டு அஞ்சி அல றுதலின், புறவின் கணநிரை யலற வேலத் துலவை யஞ்சினைச், சிலம்பி கோலிய போர்வை' என்றார்.

"இலையொழித் துலறிய புன்றலை யுலவை
வலைவலந் தனைய வாகப் பலவுடன்
சிலம்பி சூழ்ந்த புலங்கெடு வைப்பின்" அக 293: 1-3.

என்பதனாற் சிலம்பியின் போர்வை கட்டப்பட்ட வலைபோன்றதென்பதும்,

"கொலைவல் வேட்டுவன் வலைபரிந்து போகிய
கானப் புறவின் சேவல் வாய்நூற்
சிலம்பி யஞ்சினை வெரூஉம்
அலங்க லுலவையங் காடு" நற் 189: 7-10.

என்பதனாற் புறவு அதனைக் கண்டு அஞ்சுதலும் அறியலாம்

மழையின்மையால் இலைகள் உதிர்ந்து வாடிய உச்சியையுடைய வேல மரமாதல் தோன்ற, 'அலந்தலை வேலம்' என்றார். அலந்ததலை. அலந்தலையென விகாரப்பட்டது. "அலந்தலை யுன்னத்து" (பதிற் 23: 1) "அலந்தலை ஞெமை யத்து" (அக 111: 5) எனப் பிறாண்டும் வருவன காண்க. உலவை யென்றது உலந்த சிறு கொம்புகளை. "இலை தீந்த வுலவை" கலி 11: 10. சினை என்றது பெருங் கொம்பினை.

"பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை" குறுந் 79: 2-3.

என உலவையின் வேறாகச் சினையைக் கூறுதல் காண்க. வேலத்து உலவை யஞ்சினை கோலிய என்றாராயினும் வேலமரத்துச் சினையின் உலவையிற் கோலிய என்பது பொருளாகக் கொள்க. "புன்றலை யுலவை... சிலம்பி சூழ்ந்த" (அக 293: 1-3) எனப் பிறரும் கூறுதல் காண்க. சிலம்பி தன் வாய் நூலால்

* "மனையுறை புறவின் செங்காற் சேவல்" நெடுநல் 45;

வளைத்துச் செய்த வலையாதலின் "சிலம்பி கோலிய போர்வை" என்றார். கோலுதல்—வளைத்தல். "நெடுங்காழ்க் கண்டங் கோலி" முல்லை 44. காற்றினால் அசைகின்ற போர்வையாதலின் 'அலங்கற் போர்வை' என்றார்.

"அலந்தலை ஞெமையத்து வலந்த சிலம்பி
ஓடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர" அக 111: 5-6.

எனப் பிறண்டும் வருதல் காண்க.

போர்வை-போர்க்கப்படும் துகில். "மன்பதை யெல்லா மடிந்த விருங் கங்குல். அந்துகிற் போர்வை யணிபெறத் தைஇ" கலி 65: 3-4. உலவை யஞ்சினையை மூடிக்கிடக்கும் சிலம்பி வலை போர்வை போறலின் 'போர்வை' என்றார். "மணி மலர்ந்த பவளக் கொம்பு முழுமெய்யும், சிலம்பி வலந்தது போற் போர்வை போர்த்துச் செல்ல லுற்றான்" (சீவக 340) எனத் தேவர் கூறுதலுங் காண்க.

"துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கின்" பெரும்பாண் 235-6.

"அலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவள மேய்க்கும்" ஞங். 'உள்ளார்'

எனச் சிலம்பி வலைக்குத் துகிலை உவமை கூறியிருத்தலும் ஈண்டறியற்பாலது.

போர்வையின் (13) முத்தந் தைஇய (16) எனக் கூட்டி அப்போர்வையை முத்தாற் சூழுமாறு போலப் பொற்றகட்டாற் செய்த கூட்டினைச் செறிந்த நார்முடியின் பொல்லாங்கு குறைதற்கு முத்துவடங்களைச் சூழ்ந்தவெனக் கொள்க. இன் ஒப்புப்பொருட்டு. ஒளிகான்று விளங்கும் சிறந்த மணியாதலின் 'இலங்குமணி' என்றார். மிடைதல்-நெருங்குதல். சிறந்த பொன்னுதல் தோன்றப் 'பசும்பொன்' என்றார். பொன்னுக்குப் பசுமையாவது நெகிழ்ச்சி. "தாவி னன்பொன்" (அக 212: 1) எனப் பிறரும் கூறுதல் காண்க. பொற்படலம் என்றது பொற்றகட்டாற் செய்த கூட்டினை. பசும்பொற் படலத்து (14) நார்முடி (17) என்க. அவிரிழை யென்றது விளங்குகின்ற பட்டு நூலினை. அதனால் முத்தைக் கோத்தமையின் 'அவிரிழை தைஇ' என்றார். ஒளிகான்று விளங்கும் சிறந்த முத்துவடங்களைச் சூழ்ந்தமையின் "மின்னுமிழ் பிலங்கச், சீர்மிகு முத்தக் தைஇ, என்றார். மின்-ஒளி. "மின்னவிர் ஓடை" (நெடுநல் 168) சீர்மிகு முத்தந் தைஇய நார்முடி என்க. நார் என்றது வெள்ளி என்புழிப்போல, முத்தந் தைஇய நார்முடி என்க. நார் என்றது வெள்ளி நரை. "வெள்ளி நாராற் பூப்பெற்றிசினே" (புற 11: 17) என பிறண்டும் வருதல் காண்க.

விளிம்பிலே மணியழுத்திய பசிய பொற்றகட்டாற் செய்த கூட்டின் மேற் புறத்தே வெள்ளிதாக நுண்ணிய மயிர் போலும் இழையினாற் சிலம்பி கோலிய போர்வையைப் போல நாராற் பின்னப்பட்டு அப்போர்வையை முத்தாற் சூழுமாறுபோல அக்கூட்டினைச் செறிந்த நார்முடியின் பொல்லாங்கு குறைதற்கு விளங்கின நூலாலே கோத்த முத்துவடங்கள் சூழ்ந்த நார் முடியினை அணிந்த சேரல் என்க. சேரல், அண்மை விளி.

போரை நிழல் என்றது அப்போர் மறவரது ஆக்கத்திற்குக் காரணமாதலின், புகன்று - விரும்பி. சேரனின் போர்நிழலை என்றும் உளவாக வேண்டுமென்று மறவர் விரும்பியது தமது கொடைக்குச் சேரன் வென்றி ஏதுவாதல் பற்றி.

இதனாற் சொல்லியது அவன் கொடைச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

அம்மறவரது கொடைக்குக் காரணம் அவன் வென்றியாகலின் துறை **வாகையாயிற்று.**

## பழையவுரை.

2. எமக்கிலென்னார் நின் மறங்கூறு குழாத்தரென்றது நின் படைக் குழாத்திற் படைத்தலைவர் நீ பிறர்க்கென வாழ்தியாகையால் அவரும் தம் பால் இரந்து சென்றார்க்கு எமக்கு இல்லையென்று மறாரென்றவாறு. 5 எடுத்தெறியவெனத் திரிக்க. ஏவல் வியன்பணை யென்றது எடுத்தவினை முடிந்ததனாது மேன்மேலும் படையைக் கடிமுனைக்கண் ஏவுதலையுடைய முரசென்றவாறு. இச்சிறப்பான் இதற்கு ஏவல் வியன்பணை என்று பெயராயிற்று. 9. இழைய போர்வை (13) எனக் கூட்டுக. 11. புறவின் கணநிரையலறுதல் அப் போர்வையை வலையெனக் கருதி யலறுதல். 12. உலவையஞ் சினை யென்றது உலந்த சிறு கொம்பினையுடைய பெருங் கொம்பினை. 14. இலங்கு மணிமிடைந்த பசும்பொற் படலமென்றது விளிம்புமணி யழுத்திய பொற்றகட்டாற் செய்த கூட்டினை. 15. அவிரிழை தைஇ யென்றது விளங்கின நூலாலே முத்தைக்கோத் தென்றவாறு. போர்வையின் (13) முத்தந் தைஇய (16) பசும்பொற் படலத்து (14) நார்முடி (17) என்று மாறிக் கூட்டுக. 17. நின் போராகிய நிழலை என்றும் உளவாக வேண்டுமென்று விரும்பி யென்றவாறு. போரை நிழலென்றது அப்போர் மறவரது ஆக்கத்திற்குக் காரணமாகலின்.

முன்ப (8) சேரல் (17) நீ பிறர்க்கென வாழ்தியாகலான் (1) நின் மறங் கூறு குழாத்தர் (2) நின் போர் நிழற் புகன்று (17) எமக்கு இல்லையென்னார்(2) எனக் கூட்டி **வினை முடிபு** செய்க.

இனி, இதற்குப் பிறவாறு கூட்டி வேறுபொருள் உரைப்பாருமுளர். இதனாற் சொல்லியது அவன் கொடைச்சிறப்பும் அவன் வென்றிச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

அம்மறவரது கொடைக்குக் காரணம் அவன் வென்றியாகலின் **துறை வாகையாயிற்று.**

## ஒப்புமைப்பகுதி

1. **பதிற்** 38: 16 ஒப்பு.

2. **அரசன் வீரத்தை மறவர் புகழ்தல்:** "ஒன்றுரோட்டிய செருப்புகன் மறவர், வாள்வலம் புணர்ந்தநின் றாள்வலம் வாழ்த்த" **மதுரைக்** 726-7; "வாளின்

வாழ்நர் தாள்வலம் வாழ்த்த'' புற 24: 29; ''வாய்வாண் மறவரும் வாள்வல னேத்த'' சிலப் 26 77.

3. துப்புத் துறை போகிய: பதிற் 14: 6 ஒப்பு.

3—4. தும்பைத் தெவ்வர்: பதிற் 14: 8 ஒப்பு.

5. வியன்பணை: பதிற் 17: 5 ஒப்பு.

ஏவல் வியன்பணை: ''எடுத்தே றேய......போர்ப்புறு முரசம்'' பதிற் 84: 1-2. ''முரசுபா டதிரவேஎி, யரசுபடக் கடக்கும்'' ஐங் 426: 3-4.

எடுத்தெறிந் திரங்கும் பணை: ''எடுத்தெறிந்த விறன் முரசம்'' பதிற் 80: 3.

5—6. பணை யொலிக்கு உரும்: ''உரந்தலைக் கொண்ட வுருமிடி முரச மொடு'' முருகு 121; உருமுறழ் முரசின்'' கலி 104: 79; ''அரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப'' ''உருமுறற் றன்ன வுட்குவரு முரசமொடு'' ''படுமழை யுருமி னிரங்கு முரசின்'' ''விழுக்கடிப் பறைந்த முழுக்குரன் முரசம்...... அரவெறி யுருமி னுரறுபு சிலைப்ப'' ''உருமிசை முரச முழக்கென விசைப்ப'' புற 126: 19; 197: 5; 350: 4; 373: 1; ''373: 1; ''உருமி னிடி முர்சார்ப்ப'' முத்தொள்; ''உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து, மயிர்க்கண் முரசொடு சிலப் 26. 195-6; ''உருமிடித் தன்ன வென்றி முரசம்'' பெருங் (1) 37: 197-8.

7. ஆரரண்: ''ஆரரண் கடந்த......சேந்தன்'' நற் 190: 2-3; ''ஆரரண் கடந்த சீர்கெழு தானை'' ஐங் 459: 3; ''ஆரெயில் கடந்து'' புற 392: 6.

8. பதிற் 14 10 ஒப்பு.

10. மு. பதிற் 36. 8.

11. புன்புறம்: ''புன்புறச் சேவல்'' மலைபடு 147; ''புன்புறப் பெடை யொடு'' குறுந் 285: 5; ''சேவல்......புன்புறப் பெடையொடு வதியும்'' புற 318: 4-8.

கணநிரை யலற: ''கடாஅ யானைக் கணநிரை யலற'' பதிற் 20: 12.

அலந்தலை: பதிற் 23: 1. ஒப்பு.

உலவை: ''உலவை யோமை'' நற் 252: 1; ''பொரிதா ளோமை...... அலங்க லுலவை'' குறுந் 79: 2-3; ''புல்லென் னுலவைக், குறுங்கா லிற்றி'' அக 57: 5-6.

12—3. ''அலந்தலை ஞெமையூத் தலந்த சிலம்பி'' ''சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்றல், அலங்க லுலவை'' அக 111: 5; 199: 5-6.

17. நார்முடிச்சேரல்: பதிற் 38: 4 ஒப்பு.

போர்நிழல்: ''போர்நிழற் புகன்ற சுற்றமொடு'' பதிற் 40: 1.

## நாடுகா ணவிர்சுடர்

(40) போர்நிழற் புகன்ற சுற்றமொ டூர்முகத்
திறாஅ லியரோ பெருமநின் றானை
இன்னிசை யிமிழ்முர சியம்பக் கடிப்பிகூஉப்
புண்டோ ளாடவர் போர்முகத் திறுப்பக்
காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல்
வந்திறை கொண்டன்று தானை யந்திற்
களைநர் யாரினிப் பிறரெனப் பேணி
மன்னெயின் மறவ ரொலியவிந் தடங்க
ஒன்னார் தேயப் பூமலைந் துரைஇ
வெண்டோடு நிரைஇய வேந்துடை யருஞ்சமம்
கொன்றுபுறம் பெற்று மன்பதை நிரப்பி
வென்றி யாடிய தொடித்தோண் மீகை
எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுத றடிந்த
தார்மிகு மைந்தி னார்முடிச் சேரல்
புன்கா லுன்னஞ் சாயத் தெண்கண்
வறிதுகூட் டரிய விரவலர்த் தடுப்பத்
தான்றர வுண்ட நனைநறவு மகிழ்ந்து
நீரிமிழ் சிலம்பி னேரி யோனே
செல்லா யோதில் சில்வளை விறலி
மலர்ந்த வேங்கையின் வயங்கிழை அணிந்து
மெல்லியன் மகளி ரெழினலஞ் சிறப்பப்
பாணர் பைம்பூ மலைய விளையர்
இன்களி வழாஅ மென்சொ லமர்ந்து
நெஞ்சுமலி யுவகையர் வியன்களம் வாழ்த்தத்
தோட்டி நீவாது தொடிசேர்பு நின்று
பாக ரேவலி னொண்பொறி பிசிரக்
காடுதலைக் கொண்ட நாடுகா ணவிர்சுடர்
அழல்விடுபு மரீஇய மைந்திற்
றொழில்புகல் யானை நல்குவன் பலவே.

துறை—விறலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்—நாடுகா ணவிர்சுடர் (29)

ப—ரை: *1—20* இன் இசை இமிழ் முரசு கடிப்பு இகூஉ இயம்ப– இனிய ஓசையாக முழங்கும் முரசு குறுந் தடியால் அறையப் பெற்று ஒலிக்க, புண்தோள் ஆடவர் போர்முகத்து இறுப்ப – எப்பொழுதும் பொருதலாற் புண்ணையுடைய தோளினையுடைய படைவீரர் போரிடத்தே வந்து தங்க, காய்த்த கரந்தை மா கொடி விளைவயல் – காய்த்த கரந்தையின் கரிய கொடியையுடைய விளைகின்ற வயலில், வந்து இறைகொண்டன்று தானை - வந்து தங்குதல் கொண்டது தூசிப்படை. இனி களைநர் பிறர் யார் – இனி நம் துயரத்தைத் தீர்ப்பவர் நின்னையன்றிப் பிறர் யாருளர்; பெரும நின் தானை– பெருமானே நினது படை, போர் நிழல் புகன்ற சுற்றமொடு – போராகிய என்றும் உளவாகவேண்டுமென்று விரும்பிய படைத் தலைவரோடு, ஊர் முகத்து இறாஅலியர் என பேணி–படை பொருமிடத்துத் தங்காதொழிக எனச் சொல்லி வழிபட்டு, மன் எயில் மறவர் ஒலி அவிந்து அடங்க – பகைவரது நிலைபெற்ற அரண்களிலுள்ள மறவர் போராரவாரங் குறைந்து அடங்கவும், ஒன்னார் தேய–மன்னெயின் மறவரல்லாத பகைவர் அழியவும், வெண்தோடு நிரைஇய பூ மலைந்து – வெள்ளிய பனந்தோட்டை நிரைத்த தும்பைப் பூவைச் சூடி, உரைஇ – போர் செய்தற்குப் புடை பெயர்ந்து உலாவி, மன்பதை நிரப்பி–தன் படையை அவ்வேந்தர் நாட்டுத் தன் ஆணையாலே நிரப்பி, வேந்து உடை அருசமம் கொன்று – வேந்தருடைய பொறுத்தற்கரிய போரை, அழித்து, புறம் பெற்று–அவ்வேந்தரின் புறக்கொடையைப் பெற்று, வென்றி ஆடிய தொடி தோள் மீ கை – வென்றியாடுதற்குக் கருவியாகிய வீரவளை அணிந்த தோளையுடைய மேலெடுத்த கையினையும், எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து – பகைவரது எழுமுடியானுஞ் செய்த ஆரம் பொருந்திய திருமகள் தங்கிய பரந்த மார்பினையும், பொன்னம் கண்ணி பொலம் தேர் நன்னன்–பொன்னாற் செய்த கண்ணியும் பொன்னாற் செய்த தேருமுடைய நன்னனது, சுடர்வீ வாகை கடிமுதல் தடிந்த – ஒளிவிடும் பூக்களையுடைய வாகை மரத்தினது காவலையுடைய அடிமரத்தை வெட்டிய, தார்மிகு மைந்தின் – தூசிப்படையினிடத்தே மிக்குச் செல்லும் வலியினையுமுடைய, நார்முடி சேரல்–நாரால் செய்த முடியினையுடைய சேரல், புன் கால் உன்னம் சாய – தன்னொடு பொரக் கருதுவார் நிமித்தம் பார்த்தவழி பொலிவற்ற அடியினையுடைய உன்ன மரம் கரிந்து காட்ட, தெண் கண் வறிந்து கூட்டு அரியல் இரவலர் தடுப்ப – தெளிந்த இடந்தையுடைய களிப்பு விறக்கவிடும் பண்டங்கள் அளவே கூட்டின கள் இரவலரை வேற்றிடம் செல்லவொட்டாமல் தடுப்ப, தான் தர உண்ட நனை நறவு மகிழ்ந்து – தான் ஏவலர் தர உண்ட பூ வரும்பினின்றும் உண்டான மதுவினால் மகிழ்ந்து, நீர் இமிழ் சிலம்பின் நேரியோன் – அருவி நீர் ஒலிக்கின்ற பக்க மலையையுடைய நேரிமலையிலுள்ளான்.

*21—31.* இளையர் இன் களி வழாஅ மென் சொல் அமர்ந்து – சிறுவர் இனிய களிப்பு வழுவாத மென்சொல்லைப் பொருந்தி, நெஞ்சு மலி உவகையர் வியன் களம் வாழ்த்த – நெஞ்சில் மிக்க உவகையுடையராய் அகன்ற போர்க்களத்தை வாழ்த்த, மெல் இயல் மகளிர் – மெல்லிய இயல்பையுடைய விறலியர், மலர்ந்த வேங்கையின் வயங்கு இழை அணிந்து எழில் நலம்

சிறப்ப-பூக்கள் மலர்ந்து நின்ற வேங்கையினையொப்ப விளங்குகின்ற பூணினை அணிந்து அழகின் நலத்தில் மிக, பாணர் பை பூ மலைய-பாணர் பசிய பொன்னாற் செய்த தாமரைப் பூவைச் சூட, தோட்டி நீவாது-தோட்டியைக் கடவாமல், தொடி சேர்பு நின்று – பூணைப் பொருந்தி நின்று, ஒண் பொறி பிசிர–ஒள்ளிய தீப்பொறி சிதற, காடு தலைக்கொண்ட–காட்டினிடத்தே எழுந்த, நாடு காண் அவிர் சுடர் அழல் விடுபு-நாடெல்லாம் நின்று காணும்படி நின்று எரிகின்ற விளங்கின சுடர்போலும் சீற்றத் தீயை விட்டும், பாகர் ஏவலின் மரீஇய – பாகர் ஏவலொடு பொருந்திய, மைந்தின் தொழில் புகல் யானை பல நல்குவன்–வலியினையுடைய போர்த்தொழிலை விரும்பும் யானைகள் பலவற்றை அளிப்பான்; சில்வளை விறலி செல்லாய் – சிலவாகிய வளையையணிந்த விறலியே செல்வாயாக.

முடிபு: சேரல் நேரியோன்; இளையர் களம் வாழ்த்த மகளிர் மலர்ந்த வேங்கையின் இழையணிந்து நலஞ் சிறப்ப பாணர் பைம்பூ மலைய யானைகள் பலவற்றை நல்குவான்; ஆனபின்பு விறலி நீ செல்லாயோ என்க.

ஆ—ரை. மன்னெயின் மறவர் ஒலியவிந்து அடங்க ஒன்னார் தேய பூ மலைந்து உரைஇ மன்பதை நிரப்பி வேந்துடை அருஞ்சமம் கொன்று புறம் பெற்று வென்றியாடிய மீகையினையும் எழுமுடி கெழீஇய அகலத்தினையும் நன்னன் வாகைமுதல் தடிந்த மைந்தினையுமுடைய நார் முடிச் சேரல் என்க.

ஆடவர் போர்முகத் திறுப்ப (4) வயலிலே (5) வந்து இறைகொண்டன்று தானை (6); களைநர் யார் இனிப்பிறர் (7); பெரும, நின்றானை (2) சுற்றமொடு ஊர் முகத்து(1) இறுவியர் (2) எனச் சொல்லிப் பேணி(7) மன்னெயின் மறவர் ஒலியவிந்து அடங்க(8) என மாறிக் கூட்டுக.

போர்நிழற் புகன்ற சுற்றமென்றது படைத்தலைவரை. "உரைசெல வெறுத்த வவன் நீங்காச் சுற்றமொடு" (மலைபடு 376) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஊர்முகமென்றது படைபொரும் இடத்தை. இறுவியர்-வினைத் திரிசொல். இறுத்தல் – தங்குதல். ஓ அசை. தானை என்றது வயலில் இறைகொண்ட தானையொடு கூடிச் செல்லும் பேரணிப் பெரும்படையை.

"மூழ்த்திறுத்த வியன்றானையொடு
புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்" பதிற் 33: 5-6.

என வந்தமை காண்க. இடியென முழங்கினும் வீரமுரசின் ஒலி இன்னொலியாக இருத்தல் பற்றி 'இன்னிசை யிமிழ் முரசு' என்றார். "இன்னிசை முரசின்" (நற் 197: 10) எனப் பிறரும் கூறுதல் காண்க. 'முரசு கடிப்ப கூஉ இயம்ப' என மாறிக் கூட்டுக. "இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்க" (அக 25: 1-9) எனப் பிறரும் கூறுதல் காண்க. கடிப்பு – முரசு அடிக்குங் குறுந்தடி. இகுத்தல்-அறைதல். புற 158: 1 உரை. முரசு இயம்ப ஆடவர் போர்முகத்து இறுப்ப எனக் கூட்டுக. "முரசெழுந்திரங்கு தானையொடு தலைச் சென்று" (புற 211: 5) எனப் பிறண்டும் வருதல் காண்க. 'முரசியம்பக் கடிப்பி கூஉ, ஆடவர் போர் முகத்து இறுப்ப' எனக் கிடந்தவாறே கூட்டி கடிப்

பினல் இருந்தலை ஆடவர் வினையாகக் கோடல் அமையாதோவெனின், புண்டோளாடவர் என்றதனால் ஆடவர் படைவீரர் என்பது பெறப்படுதலின் அமையாதென்க. படையிடத்து முரசு அறைவார் இயவராதல்,

"மண்ணுறு முரசங் கண்பெயர்த் தியவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோ ளோச்ச
அவ்வினை மேவலை யாகலின்" பதிற் 19: 7-10

என்பதனாலுமறிக.

புண்டோள்—எப்பொழுதும் பொருதலாற் புண்ணையுடைய தோள். "புண்ணுடை யெறுழ்த்தோ ளென்றது எப்பொழுதும் பொருது புண்ணுறாத வலிய தோளென்றவாறு' எனப் பழையவுரைகாரர் உரைத்தல் காண்க. (பதிற் 80: 7 உரை). ஆடவர்—வீரர். "களிறு களம் படுத்த பெருஞ்செ யாடவர்" நெடுநல் 171. முற்படச் செல்லும் இப்படை வீரர் போரிடத்து வந்து தங்கத் தானை வயலில் தங்குதல் கொண்டமையின் 'ஆடவர் போர்முகத்து இறுப்ப ......வயல் வந்திறைகொண்டன்று தானை' என்றார். வயல் என்றது பகைவர் நாட்டு வயலை. அதன்கண் பகைவர் சென்று இறுத்தலின்மையாற் கரந்தைக் கொடி பூத்துக் காய்த்துக் கிடந்தமை தோன்றக் 'காய்த்த கரந்தை மாக் கொடி வயல்' என்றார். விளைவயலிற் கரந்தை வளர்தல் "கரந்தையஞ் செறு" (ஐங் 26) "கரந்தையஞ் செறுவின்" (அக 226: 6) என வருவனவற்றானு மறிக. விளைவயல் – நென் முதலியன விளைகின்ற வயல். "முடந்தை நெல்லின் விளைவயல்" பதிற் 29: 3. இறை கொள்ளல்—தங்கல். கொண்டன்று – கொண்டது. "நின்றன்று" (நெடுநல் 60) என்பதுபோல. அந்தில், அசைநிலை.

"அந்திலாங்க வசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகு மியற்கைத் தென்ப" இடை 19.

என்பது தொல்காப்பியம். பேணி (7) அடங்க (8) என இயையும். மன்னெயின் மறவர் – பகைவரான் அழிக்கப்படாமையின் நிலைபெற்ற எயிலில் வாழும் மறவர். "மன்னெயி லெறிந்து மறவர்த் தரீஇ" (பதிற் 37: 9) என்பதனாலும் எயிலில் மறவர் வாழ்தலறியப்படும். போர் எனக் கேட்ட மாத்திரத்தே உண்டாகிய மகிழ்ச்சியால் ஆரவாரித்த மன்னெயின் மறவர் சேரனின் படைப் பெருமை கண்ட அளவானே ஆரவாரித்தல் குறைந்து அடங்குதலின் 'மன்னெயின் மறவர் ஒலியவிந் தடங்க' என்றார். அவிதல்-குறைதல். "திரைபா டவிந்த முந்நீர்" பரி 4: 6. ஒன்னார் என்றது முன் சொன்ன மன்னெயின் மறவரல்லாத பகைவரை. வெண்டோடு நிரைஇய (10) பூ மலைந்து (9) என மாறிக் கூட்டுக. வெண்டோடு என்றது பனந் தோட்டை. "போந்தை வெண்டோடு" (பதிற் 51: 31) எனவும் "இரும்பனை வெண்டோடு" (புற 45: 1) எனவும் வருவன காண்க. தோடு என்றார் பனை புல்லினத்தைச் சேர்ந்ததாகலின். "தோடே மடலே யோலையென்று ......புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்" என்பது தொல்காப்பியம். (மரபு 86) பூவென்றது தும்பைப் பூவை. சேரற்கு அடையாளப்பூ பனந்தோடாகலின் அதனைப் புறத்

திணைப் பூவாகிய தும்பையொடு வரிசையாக அமையத் தொடுத்துச் சேரன் அணிவானாயினன். "போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை" (சிலப் 26: 219) என வருதல் காண்க. மலைந்து-சூடி. "வற ளடும்பின் மலர் மலைந் தும்" பட்டினப் 65. உரைஇ-உலாவி. மதுரைக் 378 நச். போர் செய்தற்குப் புடைபெயர்ந் துலாவல் 'போர்க்குரைஇ – போர்செய்தற்குப் புடைபெயர்ந் துலாவி' என்னும் புறநானூற்றுரையானுமறிக. (புற 97: 1 உரை) "வணங்க லறியா ருடன்றெழுந் துரைஇ" (பதிற் 84: 14) எனப் பிறரும் கூறுதல் காண்க. மறமொத்த வேந்தரொடு செய்கின்ற பொறுத்தற்கரிய போராதலின் 'வேந் துடை யருஞ்சமம்' என்றார். 'அருஞ்சமம்–பொறுத்தற்கரிய பூசல்' புற 126: 21 உரை. சேரன் அருஞ்சமத்தை அழித்தகாலை அவன் போர்வெம்மைக் காற் றாது பகைவேந்தர் புறங்கொடுத்தோடினமையின் 'அருஞ்சமம் கொன்று புறம் பெற்று' என்றார். மன்பதை என்றது ஈண்டுப் படையை. "மன்பதை பெயர வரசுகளத் தொழிய" (பதிற் 77: 3) எனப் பிறரும் கூறுதல் காண்க. சேரன் தன்படையைப் பகைவேந்தர் நாட்டில் நிரப்பியமை. "நெடுநீர துறை கலங்க, மூழ்த்திறுத்த வியன்றானையொடு, புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்" (பதிற்33: 4–6) என்பதனானுமறிக.

"வென்றியாடிய வென்னும் பெயரெச்சத்திற்கு மீகையென்னும் பெய ரினை அவன்றான் வென்றியாடுதற்குக் கருவியாகிய கையெனக் கருவிப்பெய ராக்குக. மீகை வெற்றிக் களிப்பாலே களத்தே துணங்கையாடற்கண் மேலெ டுத்த கை.

"நிலம்பெறு திணிதோ ளுயர வோச்சிப்
பிணம்பிறங் கழுவத்துத் துணங்கை யாடி" பதிற் 45: 11-2.

"மன்பதை பெயர வரசுகளத் தொழியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றாடு துணங்கை" பதிற் 77: 3-4.

என வருவன காண்க. தொடி–வீரவளை. வீரர் தோளிற் றொடியணிதல், "விழுத்தொடி சுடர்வரத், தோள்பிணி மீகையர் புகல் சிறந்து நாளும்" (பதிற் 81: 10-11) எனவும் "தொடியணிதோ ளாடவர் தும்பை புனைய" (பு. வெ. மா. 24.1)எனவும் வருவனவற்றானுமறிக.

இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதன் அணிந்த எழுமுடியாரத்தை இச் சேரனும் அணிந்திருந்தமையின் "எழுமுடி கெழீஇய அகலத்து......நார் முடிச் சேரல்" என்றார். முன்னோர் அணிகலனைப் பின்னோர் அணிதல் "மலர்ந்தேந் தகலத்துத் தொன்றுபடு பூணொடு" (குறிஞ்சி 121-2) என்பதனானுமறிக. இனி இவன் குலத்து முன்னோன் செய்கையை இவன்மேல் ஏற்றிக் கூறினர் எனினு மமையும்.

"பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை
திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை
.......... .......... ....................
குலவுவேற் சேரன்" சிலப் 23: 55-62.

என உதியஞ்சேரலாதன் பெருஞ்சோறளித்த செய்கையை அவன் பின்னோன் மேலேற்றிச் சிலப்பதிகாரம் கூறுதல் காண்க.

பொன்னங் கண்ணியும் பொலந்தேருமுடைய நன்னன் என்க. கண்ணி-போர்ப் பூ. மதுரைக் 596 நச். தலையிற் சூடுதல் பற்றிப் போர்ப்பூவைக் கண்ணி யென்றார். "முடிமிசை யுழிஞை சூடி யொன்னார், கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று" (பு. வெ. மா. 95) எனப் பிறரும் கூறுதல் காண்க. நன்னன் போர்ப் பூக்களைப் பொன்னாற் செய்து அணிந்தமையின் 'பொன்னங் கண்ணி நன்னன்' என்றார். போர்ப் பூக்களைப் பொன்னாற்செய்தணிதல், "பொன்புனை யுழிஞை"(பதிற் 22; 27) 'பொலம்பூந் தும்பை" (மதுரைக் 737) என வருவனவற்றாலுமறிக. பொலந்தேர் – பொற்றேர். அரசர் பொற்றேர் உடையராதல்,

"பொலந்தேர் மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ" புற 4: 14-6,

எனச் சோழன் உருவப் பஃறே ரிளஞ்சேட் சென்னியைப் பரணர் பாடிய வாற்றானுமறிக. நன்னன் வாகை எனக் கூட்டுக. "சுடர்வீ வாகை நன்னன்" (பதிற் 88: 10) எனப் பிறாண்டும் வருதல் காண்க. வாகை நன்னனது காவல் மரம். அது பிறராற் றடியப்படாது பூத்து நிற்றல் தோன்றச் 'சுடர்வீ வாகை' என்றார் நார்முடிச் சேரல் காவல் பொருந்திய அதனை அடியோடு தடிந்தமையின் 'வாகைக் கடிமுதல் தடிந்த சேரல்' என்றார். இதனை,

"உருள்பூங் கடம்பின் பெருவாயி னன்னனை
நிலைச்செருவி னாற்றலை யறுத் தவன்
பொன்படு வாகை முழுமுத றடிந்து" (4ஆம் பதி)

என இதன் பதிகத்து வருதலானுமறிக.

'செல்லாயோதில் சில்வளை விறலி' என விறலியை நார்முடிச்சேரலிடத்து ஆற்றுப்படுத்துகின்றவர் வேண்டியவெல்லாந் தருதற்குப் பகைவனை வென்று கொண்ட பொருள்வளமுடையான் அவன் என்பது தோன்ற 'நன்னன் வாகை முதல் தடிந்த சேரல்,' என அவன் வென்றியைக் கூறுவாராயினர்.

"குருதி பனிற்றும் புலவுக்களத் தோனே
துணங்கை யாடிய வலம்படு கோமான்
மெல்லிய வகுந்திற் சீறடி யொதுங்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி" பதிற் 57: 3-6.

எனப் பிறரும் கூறுதல் காண்க. தார்-தூசிப்படை. இனி, தார் - ஒழுங்கு எனக்கொண்டு தார்மிகு மைந்தின் சேரல் என்பதற்கு மாற்றாரது ஒழுங்கு பட்ட படைவகுப்பில் மிகுகின்ற வலியையுடைய சேரல் எனினுமமையும். "தாரருந் தகைப்பிற், பீடுகொண் மாலைப் பெரும்படைத் தலைவ" (பதிற். 24: 4-5) எனப் பிறாண்டும் வருதல் காண்க.

17—20. உன்னம் என்பது மரம். இதனை "அலந்தலை யுன்னத்து" "பொன்னி னன்ன பூவிற் சிறியிலை......உன்னத்து" (பதிற் 23: 1; 61:5-6) "உன்ன மரத்துத் துன்னருங் கவலை" (புற 3: 23) என வருவனவற்றாலுமறிக. தம் கருத்தை அறியும் மரமாதலின் உன்னம் எனப்பட்டது. உன்னம்–கருத்து. "உன்னங் கொள்கையொ டுளங்கரந் துறையும், அன்னை சொல்லும் உய்கம்" (அக 65: 1-2) ச் சான்றோர் கூறுதல் காண்க. புல்லிய அடியினையுடைமையால் 'புன்கா லுன்னம்' என்றார். "புன்கா லுன்னத்து" (பதிற் 61: 6) எனப் பிறரும் கூறுதல் காண்க. பொரக்கருதிய அரசர் இதனில் நிமித்தம் பார்த்தல் "உன்னஞ் சேர்த்தி" – நிமித்தம் பார்க்கும் மரத்தொடு கூட்டி" (பு. வெ. மா. 243 உரை) என்பதனாலும் அறியப்படும். இது நிமித்தம் பார்த்த வழி வென்றியுண்டாயின் குழைந்தும் இன்றாயின் கரிந்தும் காட்டும் என்பது.

"முன்னங் குழையவுங் கோடெலா மொய்தளிரீன்
றுன்னங் குழையொலித் தோங்குவாய்—மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து" தொல். புற 5 நச் மேற்.

"துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க—மன்னரு
மீடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை" பு. வெ. மா. 243.

என்னும் செய்யுட்களானும், 'வேந்தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வென்றி கொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம்வேந்தற்கு ஆக்கமுளதெனின் அக்கோடு பொதுளுகவெனவும் பகைவேந்தற்குக் கேடு உளதெனின் அக்கோடு படுவதாக வெனவும் நிமித்தம் கோடல்' என நச்சினார்க்கினியரும், 'உன்னமென்பது மரம்; அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும் வாராக்காலம் குழைந்தும் நிற்கும்' என இளம்பூரணரும் உரைத்த தொல்காப்பியவுரைப் பகுதிகளானும் (தொல். புற சூத் 5 உரை) அறிக. நார்முடிச்சேரல் தன்பகைவரை வென்றி கோடற்கேற்ற பேராற்றலொடு இருத்தலின் அவனொடு பொரக் கருதுவார் நிமித்தம் பார்த்தவழி அவர்க்கு வென்றியின்மையின் உன்னம் கரிந்து காட்டலின் 'உன்னஞ் சாய' என்றார்.

தெண்கண் அரியல் எனக்கூட்டி உண்பார்க்கு வார்த்தற்பொருட்டுத் தசும்பினிடத்தே நிறைந்து கிடத்தலின் தெளிந்த இடத்தையுடைய அரியல் எனவுரைக்க. வறிதுகூட்டு அரியல் என்றது களிப்பு மிறக்கவிடும் பண்டங்கள் பெருகக் கூட்டிற் களிப்பு மிகுமென்று அவை அளவே கூட்டின அரியல் என்றவாறு. பெருகக் கூட்டும் பண்டத்தை நோக்க அளவே கூட்டும் பண்டம் சிறிதாகலின் 'வறிது கூட்டு' என்றார். வறிது–சிறிது. அரிக்கப்படுதலின் கள்ளை 'அரியல்' என்றார். "அரிய லாருந்து" (புற 395: 8) எனப் பிறரும்கூறுதல் காண்க அரியலை உண்டு மகிழ்ந்த இரவலர் மேலும் அதனை உண்ணவிரும்பி ஆண்டுத் தங்குதலை 'அரியல் இரவலர்த் தடுப்ப' என்றார்.

"கொய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசில்
இரவலர்த் தடுத்த வாயில்" புற 250 1-2.

என்பது ஈண்டறியற்பாலது. இரவலர்-பரிசிலர். புற 128: 2 உரை. தான் என்றது சேரலை. தரவுண்ட—மகளிர் தர உண்ட.

"யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற" புற 56: 18-21.

எனப் பிறரும் கூறுதல் காண்க. 'தானென்பதனைச் சேரல்தான் எனக் கூட்டித் தரவுண்ட வென்பதனை வரையாது கொடுத்தற்பொருட்டு உண்டவென வுரைக்க' என்பர் பழையவுரைகாரர்.

"நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கு மெளிதே தேரீ தல்லே" புற 123: 1–2.

என்பது ஈண்டு அறியற்பாலது.

"நாரரி தேறன் மாந்தி மகிழ்சிறந்
திரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்" புற 367: 7-9.

என ஔவையார் கூறியிருத்தலும் காண்க. நனை - அரும்பு.

தன் *நெடுமையால் அருவிநீர் ஒலிக்கும் பக்கமலையையுடைய நேரிமலையை 'நீரிமிழ் சிலம்பின் நேரி' என்றார். நேரி நெடுவரையாதல் "பாடுசா னெடுவரைக், கல்லுயர் நேரி" (பதிற் 67: 21-2) "நேரி நெடுவரை" (இறைமேற் 143) என வருவனவற்றாலுமறிக. விறலியைச் சேரல்பால் ஆற்றுப்படுத்தின்றவர் அவன் இருக்குமிடம் இது என்பார் 'நேரியோன்' என்றார். ஆற்றுப்படைக்கண் தலைவன் இருக்குமிடம் கூறல்.

"இகல்வினை மேவலன் தண்டாது வீசும்
செல்லா மோதில் பாண்மகள் காணியர்
.................................................
துவ்வா நறவின் சாயினத் தானே" பதிற் 60: 2–12.

"ஈங்கெவன் செய்தியோ பாண.........
.................................................
உறந்தை யோனே குரிசில்
பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே" புற 68: 4–19.

"ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞ
னின்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல" புற 180: 7-9.

என வரூஉஞ் செய்யுட்பகுதிகளினும் காண்க.

---

* "அருவி தாழ்ந்த நெடுவரை" புற 198: 1.

செல்லாயோ-செல்வாயாக. "செல்லாயோநின் முள்ளெயி றுண்கென" நற் 134: 8. 'செல்லாமோ' என்பது பாடமாயின் போவோமல்லேமோ என வுரைக்க. தில். ஒழியிசை.

மலர்ந்த * வேங்கை பொன்போன்ற மலர்களை எம்மருங்கும் உடைத்தாகி அழகிற் சிறத்தல்போல மகளிரும் தலைமார்பு முதலிய உறுப்புக்களில் இழை அணிந்து நலஞ்சிறக்குமாறு நார்முடிச் சேரல் பொன்னிழைகளை அளித்தலின் 'மலர்ந்த வேங்கையின் வயங்கிழை யணிந்து மகளிர் நலஞ்சிறப்ப' என்றார். இழைக்கு வேங்கைமலர் உவமையாதல்,

"எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றோன்று நாட" ஐங் 294: 1-2.

"ஐதாக நெறித்தன்ன வறலவிர் நீளம்பா
லணிநகை யிடையிட்ட வீகையங் கண்ணிபோற்
பிணிநெகி ழலர்வேங்கை விரிந்தபூ வெறிகொள" கலி 32: 3-5.

"பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்துகட் டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரு மிழைகளைந் தனரே" புற 224: 15-7.

என வருவனவற்றினுங் காண்க. இன், ஒப்புப்பொருட்டு. மலர்ந்த வேங்கையின் என்றதனால் வயங்கிழை என்றது பசும் பொன்னாற் செய்து ஒளிதிகழும் பலவகை அணிகளை. "பசும்பொ னவிரிழை பைய நிழற்ற" (ஐங் 74: 2) எனப் பிறரும் கூறுதல் காண்க. அரசர் விறலியர்க்குப் பொன்னிழை அளித்தல்,

"புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய" பெரும்பாண் 485-6.

என்பதனாலுமறிக. மெல்லியன் மகளிர் என்றது மென்மைத் தன்மையைத் தமக்கு இயல்பாகவுடைய மகளிர் என்றவாறு. மகளிரென்றது ஈண்டு விறலியரை. அவரின் இயற்கை எழினலம் இழையணிதலாற் சிறத்தலின் 'இழையணிந்து நலஞ்சிறப்ப' என்றார். "இழையணி வனப்பி னின்னகை மகளிர்" (பொருந 85) "மெய்வளம் பூத்த விழைதகு பொன்னணி" (பரி 18: 19) என வருவனவற்றாலும் இழையணிதலால் நலம் சிறத்தலறிக. விறலியர் எழினலமுடையார் என்பது,

"சுடர்நுதன் மடநோக்கின்
வாணகை யிலங்கெயிற்
றமிழ்துபொதி துவர்வா யசைநடை விறலியர்" பதிற் 51: 19-21.

---

* வேங்கைமலர் பொன்போன்றதென்பது, "பொன்னிணர் வேங்கைப் பூஞ்சினை" "அரும்புவா யவிழ்ந்த கருங்கால் வேங்கைப், பொன்மருள் நறுவீ" "வேங்கைப், பொன்மருள் புதுப்பூ" "வேங்கை தந்த வெற்பணி நன்னாட், பொன்னி னன்ன பூஞ்சினை துழைஇ" நற் 151, 257, 384, 396: "வேங்கைச் சேணெடும் பொங்கர்ப் பொன்னேர் புதுமலர்" "பொன்னென மலர்ந்த வேங்கை" "மன்ற வேங்கை மணிநாட் பூத்த, மணியே ரரும்பின் பொன்வீ" அக 52: 2-3; 183: 8-9; 232 7-8; "பொனனிணர் வேங்கை கமழும்" ஐங் எழுபது 6. "பொன்வேங்கை" திருக்கோவை 138.

"வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத்தோள்
ஏந்தெழின் மழைக்கண் வனைந்துவர விளமுலைப்
பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்
மின்னிழை விறலியர்" பதிற் 54: 3-6.

என வருவனவற்றாலுமறிக. எழினலம்–அழகின் நலம்.

"..............................ஒண்ணுதல்
நறுமலர்க் காண்வருங் குறும்பல் கூந்தல்
மாழை நோக்கிற் காழியல் வனமுலை
எஃகுடை யெழில்நலத் தொருத்தி" அக 116; 6–9.

என எழில் நலத்தைப் பரணர் கூறுதல் காண்க. எழிலாகிய நலமுமாம். எழினலம் என்பதற்கு 'அழகையுடைய நலம்' என்பர் நச்சினார்க்கினியர். (கலி 77: 12 உரை).

சேரல் பரிசிற்பொருட்டாக வரும் பாணர்க்குப் பசிய பொன்னாற் செய்த தாமரைப் பூவை வழங்கலின் 'பாணர் பைம்பூ மலைய' என்றார். அரசர் விறலியர்க்கு இழையும் பாணர்க்குப் பொற்றாமரையும் வழங்கல்,

"பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
யொண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டி"பதிற் 48: 1–2.

"தலைவன் தாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய" மலைபடு 569–70

என வருவனவற்றாலு மறிக.

இளையர் களம் வாழ்த்த எனக் கூட்டிப் பாணரில் இளையர் போர்க்களத்தை வாழ்த்த எனவுரைக்க. "களம் வாழ்த்தும், அகவலன்" (பதிற் 43: 27-8) என வருதல் காண்க. இசை பயின்ற இளையர் சொல் மென்சொல்லாதலினாலும் அச்சொல் இனிய மகிழ்ச்சியைப் பயத்தலினாலும் 'இன்களி வழாஅ மென்சொ லமர்ந்து' என்றார். "மென்மொழி மேவலர் இன்னரம் புளர" (முருகு 142) எனவும், "மென்சொற் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த" (பதிற் 15: 26) எனவும் வருவன காண்க. களி – களிப்பு. கலி 97: 26 நச். வழாஅ–வழுவாத. வழாஅமை–வழுவாமை. கலி 2 17 நச் நெஞ்சுமலி யுவகை –போர்க்களப் பொருள்களைப் பெறலாம் என்னும் கருத்தால் நெஞ்சில் மலிந்த உவகை. களம் வாழ்த்த-போர்க்களரியிடத்து வளவிய செல்வத்தை வாழ்த்த.

"செங்களத்துச் செழுஞ்செல்வம்
வெண்டுறையாழ்ப் பாணர் விளம்பின்று" பு. வெ. மா. 207.

என வருதல் காண்க. இது களவழிவாழ்த்து என்று கூறப்படும்.

தோட்டி நீவாது நின்று, காடுதலைக்கொண்ட சுடர்போலும் அழல் விட்டும் பாகரேவலொடு மரீஇய தொழில் புகல் யானை என்க.

கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தித் தோட்டியைக் கடக்க வருங்காலத்தும் யானை அதனைக் கடவாது நிற்றலின் 'தோட்டி நீவாது நின்று'

என்றூர். "தேம்பாய் கடாத்தொடு..... தோட்டிநீவி......தாங்கலாகா வாங்கு நின் களிறே" (பதிற் 53: 17-21) "எழின் மருப் பெழில் வேழ மிகுதரு கடாத்தாற், றெழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்கு" (கலி 138: 1-2) என வருவனவற்றாலும் மதமிக்க யானை தோட்டியை நீவல் அறியப் படும். "குவிமுட் கருவியுங் கோணமுங் கூர்நுனைக், கவைமுட் கருவியுங்"(மணி 18: 163-4) என யானையை அடக்குதற்குரியனவாகக் கூறப்படும் கருவிகளுள் தோட்டி சிறத்தலின் அதனை விதந்து கூறினர். நீவல் - பாகன் தோட்டிக்கு அடங்காது கடத்தல். தொடி–மருப்பில் அணியும் பூண். "யானை மருப்பின் இரும்புசெய்தொடியின் அக 26: 6-7. காடுதலைக்கொண்ட சுடர் எனக் கூட் டுக. சுடர் என்றது காட்டுத் தீயை. "காடுபடு தீயின்" (ஐங் 367) "கான்படு தீயின்" (பு. வெ. மா 55) என வருவன காண்க. வெம்மை மிக்க காட்டிலே கடியகாற்று மூங்கிற் கணுக்களைப் பொருந்தித் தாக்கலால் எழுந்த தீ ஒள்ளிய தீப்பொறிகளைச் சிதறி எழுதலின் "ஒண்பொறி பிசிரக். காடுதலைக் கொண்ட சுடர்" என்றூர்.

"தெறுகதி ருலைஇய வேனில் வெங்காட்
டுறுவளி யொலிகழைக் கண்ணுறுபு தீண்டலிற்
பொறிபிதிர் பெடுத்த பொங்கெழு கூரெரி" அக 153 8-10.

எனப் பிறரும் கூறுதல் காண்க.

நாடுகாண் அவிர்சுடர் என்றது நாடெல்லாம் நின்று காணும்படி நின்று எரிகின்ற விளங்கின சுடர் என்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்கு 'நாடுகாணவிர்சுடர்' என்று பெயராயிற்று.

காட்டுத்தீ மிகவுயர்ந்து எரிதல். "மேக்கெழுபு, முளியரிற் பிறந்த வளி வளர் கூரெரிச், சுடர்நிமிர் நெடுங்கொடி"(அக 113. 5-7) "வெற்பகச் சோலை யின் வேய்வளர் தீச்சென்று விண்ணினின்ற, கற்பகச் சோலை கதுவுங்கனூட" (திருக்கோவை 168) என வருவனவற்றாலுமறிக. பெருந்தீயாகலின் "அவிர் சுடர்" என்றூர். "வன்றொடர் மூங்கிற் றந்த வயங்கு வெந்தீ (கம்ப. கரன் வதை 66) என்றூர் கம்பரும்.

சுடர் அழல் என்றதனைச் சுடர்போலும் அழல் என உவமைத் தொகை யாக்கி அழலை அந்த யானையின் சீற்றத்தீ யாக்குக. "அழறிகழ் கதத்த யானை" (சீவக 2220) என்றூர் பிறரும். மரீஇய வென்றது அவ்வாறு அழல் விட்டும் பாகர் ஏவலொடு மரீஇய வென்றவாறு. மரீஇய யானை மைந்தின் யானை தொழில் புகல் யானை எனத் தனித்தனி இயைக்க. சுடர்போலும் அழல்விட் டும் பாகர் ஏவலொடு மரீஇயமை வலியின்மையாற்போலும் என ஐயுறுமைப் பொருட்டு 'மைந்தின் யானை' என்றூர். மைந்து–வலி. மைந்து பொருளாக வந்த வேந்தனை" தொல். புற15. புகல்–விருப்பம். "தலைநா ளன்ன புகலொடு' மதுரைக் 565.

## பழையவுரை

1. போர்நிழற் புகன்ற சுற்றமென்றது படைத்தலைவரை. ஊர்முகமென் றதுபடைபொருமிடத்தை. ஆடவர் போர்முகத்திறுப்ப (4) வயலிலே (5)வந்து இறைகொண்டன்று தானை (6) கனைநர் யார் இனிப்பிறர் (7); பெரும. நின்

றுனை (2) சுற்றமொடு ஊர்முகத்து (1) இறுவியர் (2) எனச் சொல்லிப் பேணி (7) என மாறிக் கூட்டுக. 9. ஒன்னுரென்றது முன் சொன்ன மன்னெயின் மறவர் (8) அல்லாத பகைவரை. வெண்டோடு நிரைஇய (10) பூமலைந்து (9) என மாறிக் கூட்டுக. 11. மன்பதை நிரப்பியென்றது தன் படையை அவ் வேந்தர் நாட்டுத் தன் ஆணையானே நிரப்பியென்றவாறு. 12. வென்றியாடிய வென்னும் பெயரெச்சத்திற்கு மீகையென்னும் பெயரினை அவன்றுன் வென்றியாடுதற்குக் கருவியாகிய கையெனக் கருவிப்பெயராக்குக. மீகை -மேலெடுத்தகை. 14. பொன்னங்கண்ணியும் பொலந்தேரும் நன்னற்கு அடையாக்குக. 17. உன்னம் சாயவென்றது தன்னெடு பொரக் கருதுவார் நிமித்தம் பார்த்தவழி அவர்க்கு வென்றியின்மையிற் கரிந்துகாட்ட வென்றவாறு. 18. வறிதுகூட்டு அரியலென்றது களிப்பு விறக்கவிடும் பண்டங்கள் பெருகக் கூட்டிற் களிப்பு மிகுமென்று அவை அளவே கூட்டின அரியலென்றவாறு. 19. தானென்பதனைச் சேரல் தான் (6) எனக் கூட்டித் தரவுண்ட வென்பதனை வரையாது கொடுத்தற்பொருட்டு உண்டவென வுரைக்க. இனி இதற்குப்பிறவாது உரைப்பாருமுளர். 27. தோட்டி நீவாமலெனத் திரிக்க. 29. காடு தலைக்கொண்ட சுடரெனக் கூட்டுக. நாடுகாணவிர்சுடரென்றது நாடெல்லாம் நின்றுகாணும்படி நின்று எரிகின்ற விளங்கின சுடரென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு **நாடுகாணவிர்சுடர்** என்று பெயராயிற்று. 29-30 சுடரழலென்றதனைச் சுடர்போலும் அழலென உவமைத்தொகையாக்கி அழலை அந்த யானையின் சீற்றத்தீ யாக்குக. மரீஇய வென்றது அவ்வாறு அழல்விட்டும் பாகரேவலொடு மரீஇய வென்றவாறு.

சேரல் (16) தான் (19) நேரியோன் (20); இளையர் (24) களம் வாழ்த்த (26) மகளிர் (23) மலர்ந்த வேங்கையின் இழையணிந்து (22) நலஞ் சிறப்ப (23) பாணர் பூ மலைய (24) யானையைப் பல நல்குவான் (31); ஆனபின்பு விறலி நீ செல்லாயோ (21) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனுற் சொல்லியது அவன் **கொடைச்சிறப்புக்** கூறியவாறுயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. **போர்நிழல்:** பதிற் *39: 17.*

3. **இன்னிசை முரசு:** பதிற் *2* ஆம் பதி *2.*

இமிழ் முரசு: "இமிழிசை முரசின்" "இமிழிசை முரசம்" அக *227: (4); 246: 11;* "இமிழ்குரன் முரசின்" புற *99: 9.*

5. **கரந்தை:** "செம்பூங் கரந்தை" அக *269: 11;* "நறும்பூங் கரந்தை" புற *261: 13;*

**விளைவயல்:** பதிற் *29: 3* ஒப்பு.

5—6. **வயலிற் றுனை:** பதிற் *25: 1-3* ஒப்பு.

8. **மன்னெயில்:** பதிற் *25: 5* ஒப்பு.

9. **ஒன்னுர் தேய:** பதிற் *20: 10* ஒப்பு.

உரைஇ: "ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇ" "ஓடிவி றெவ்வ ரெதிர் நின் றுரைஇ" "உடன்றெழுந் துரைஇ" பதிற் 71: 9; 80: 9; 84: 14.

9—10. பனந்தோட்டைப் பிறபூக்களொடு தொடுத்தல்: "வெண்டோட் டசைத்த வொண்பூங் குவளையர்" "போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த, கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்ப" "நாறிணர்க் கொன்றை வெண்போழ் கண்ணியர்" "தண்பனம் போந்தைக், குவி முகி ழூசி வெண்டோடு கொண்டு, தீஞ்சுனை நீர்மலர் மலைந்து" பதிற் 58: 2; 66: 14-5; 67: 13; 70: 6-8; "கொம்மைப் போந்தைக் குடுமி வெண்டோட், டத்த வேம்பி னமலை வான் பூச், சுரியா ருளைத்தலை பொலியச் சூடி" குறுந் 281: 2-4: "வளரிளம் போந் தை, யுச்சிக்கொண்ட வூசிவெண் டோட்டு, வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்......சூடி" "வேங்கை யொள்ளிணர் நறுவீப், போந்தையந் தோட் டிற் புனைந்தனர் தொடுத்து" புற 100: 3-6; 265 3-4.

அருஞ்சமம்: பதிற் 71: 20; அக 46: 12; 77: 17; 149: 12; 188: 5; புற 72: 8; 139: 14; 284: 5; 309: 2; 312: 5; 326: 13; 397: 26.

11. மன்பதை: பதிற் 42: 16; 72: 5; 77: 3; 84: 7; புற 68: 10; 71: 17; 161: 6; 210: 1; 356: 8; சிலப் 20: 76.

12. தொடித்தோட்கை: "தொடித்தோட்கை துடுப்பாக" மதுரைக் 34.

13. பதிற் 14: 11 ஒப்பு.

14. பொலந்தேர்: "பொலந்தேர்ப் பொறைய" "பொலந்தேர்க் குருசில்" பதிற் 84: 6; 88: 20.

பொலந்தேர் நன்னன்: "பொலந்தேர், நன்னன் மருக னன்றியும் புற 151: 7-8.

15. சுடர்வீ: "சுடர்வீ வேங்கை" பதிற் 41: 8.

பகைவரது காவல் மரத்தைத் தடிதல்: பதிற் 11: 12-3 ஒப்பு.

இரவலர்க்கு மதுவழங்கல்: பதிற் 42: 11-3; 43· 34-6; 65:16-7; பொருந 156- 8; புற 224: 2-3; 390: 14-23. 392: 15-8; 398: 21-3.

19. நனைநறவு: பதிற் 12: 18 ஒப்பு.

நறவு மகிழ்ந்து: "குறைவின்று பருகி நறவு மகிழ்ந்து" மலைபடு 172; "தீந்தேற னறவு மகிழ்ந்து" புற 396: 8.

நீரிமிழ் சிலம்பு: "அருவி சிலம்பகத் திரட்ட" மதுரைக் 299; "அருவி யார்க்கு மயந்திகழ் சிலம்பின்" நற் 365: 7; "நெடுவெள் ளருவி......முழவிற் றதும்பிச், சிலம்பி னிளிதரும்" குறுந் 78: 1-3, "அருவி யார்க்கும் பெரு வரைச் சிலம்பின்" "அருவி யார்க்கு மயந்திகழ் சிலம்பில்" அக 168: 8; 262: 14; "நுடங்கருவி யார்த்திழியு நோக்கருஞ் சாரல்" பு. வெ. மா. 310.

21. சில்வளை விறலி: "சில்வளை விறலி செல்குவை யாயின்" பதிற் 78: 3; "சில்வளை விறலியும்" "சில்வளை விறலி" புற 60: 5; 103: 4; "சில்வளைக்கைச் செவ்வாய் விறலி" பு. வெ. மா. 219.

*22.* **மலர்ந்த வேங்கை:** *"மலர்ந்த கருங்கால் வேங்கை"* **நற்** *112: 2*, *"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை"* **குறுந்** *26: 1*; *"மலர்ந்த வேங்கையை யதுவெனவுணர்ந்து"* **கலி** *49: 5-6*; *"மலர்ந்த அரும்புமுதிர் வேங்கை" "மல ர்ந்த வேங்கை" "பொன்னென, மலர்ந்த வேங்கை"* **அக** *105: 1; 147: 1-2; 188: 8-9*; *"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை"* **புற** *202: 18.*

**வயங்கிழை யணிந்து:** *"வள்ளி மருங்குல் வயங்கிழையணிய"* **புற** *316: 9.*

**மெல்லியன் மகளிர்:** **பதிற்** *78: 5.* **சிறுபாண்** *30-1.* **நெடுநல்** *151*; **நற்** *142: 10-1*; **குறுந்** *70: 5; 137: 1, 229: 5-6;*

*22—3.* **மகளிர் இழையணிதல்:** **பதிற்** *12: 23* ஒப்பு.

*24.* **பாணர் பூமலேதல்:** *"பாண்மகனும்மே, எனவாங், கொள்ளழல் புரிந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே" "பாணர் தாமரை மலே யவும்" "அழல் புரிந்த வடர்தாமரை... ..பாறுமயி ரிருந்தலே பொலியச் சூடிப் பாண்முற்றுகநின் னுண்மகிழிருக்கை" "பாண......ஆடும் வண்டிமிராத் தாமரை, சூடா யாத லதனினு மிலேயே" "பாணர் சென்னி பொலியத் தைஇ, வாடாத் தாமரை சூட்டிய .. ..உரவோன் மருக" "வாடாத்தாமரை சூட்டுவ னினக்கே" "பாணன் சென்னிக் கேணி பூவா, வெரிமரு டாமரைப் பெருமலர் தயங்க"* **புற** *11: 15-7; 12: 1; 29: 1-5; 69: 4-21; 126: 3-4; 319: 15; 364: 2-3.*

*26.* **நெஞ்சுமலியு வகையர்:** **பதிற்** *23 8.*

**வியன்களம்:** **அக** *174: 1; 368: 12; 370: 19.*

*27—31.* **தொடியணிந்தயானே:** **பதிற்** *15: 22-3* ஒப்பு.

*26—31.* **பரிசிலர்க்கு யானே நல்கல்:** *"பெற்ருரே பரிசிலர் களிறே" "களிற்ருெடு......நல்கு மென்ப"* **பதிற்** *47: 2; 66: 7-9*; *"பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத், தன்னறி யளவையிற் றரத்தர"* **பொருந** *126 :7*; *"சிறுகண் யானேயொடு பெருந்தே ரெய்தி, யாமவ ணின்றும் வருதும்"* **சிறு பாண்** *142-3*; *"வயக்களிறு முகந்துகொண், டியாமவ ணின்றும் வருதும்"* **பெரும்பாண்** *27-8*; *"பாண ருவப்பக் களிறுபல தரீஇ"* **மதுரைக்** *219*; *"வரை மருள் வேழம்......மழை சுரந் தன்ன வீகை நல்கி"* **மலேபடு** *572: 80*; *"இரவ லர் வரூஉ மளவை யண்டிரன், புரவெதிர்ந்து தொகுத்த யானேபோல"* **நற்** *237: 7-8*, *"தேருங் களிறுங்......வந்த புலவர்க், களியொடு கைதூவலே"* **கலி** *50: 15-7*; *"களிறு வீசு வண்மகிழ்ப், பாரத்துத் தலேவன் ஆர நன்னன்" "அக வுநர் வேண்டின்......யானே யீயும் வண்மகிழ், வெளியன் வேண்மா னுஅ யெயி னன்" "வரைபுரை களிற்ருெடு..... ஈயும்......பாரி"* **அக** *152: 11-2; 208: 3-5; 303: 9-10*; *"ஆஅ யண்டிரன்......இரவலர்க் கீத்த யானேயின்" "கொடும்பூ ணுஅய் .....பாடி வருநர்க்கு .....அளித்த, வண்ணல் யானே யெண்ணின்" "நாஞ் சிற் பொருநன்......பெருங்களிறு நல்கியோனே" "நள்ளி......நாடொறு நன் கலங் களிற்ருெடு கொணர்ந்து......பரிசின்முற் றளிப்ப" "இளேயணி யானே யிரப்போர்க் கீயும்..... ஓரி"* **புற** *129: 5-6; 130: 1-5; 140: 1-8; 148: 1-4; 153: 2-4.*

## பதிகம்

ஆராத் திருவிற் சேர லாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் றேவி யீன்ற மகன்முனை
பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்
தூழி ளுகிய வுயர்பெருஞ் சிறப்பிற்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயி னன்னனை
நிலைச் செருவி னாற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுத றடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றிக்
களங்காயக் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக்
காப்பியனார் பாடினார் பத்துப் பாட்டு.

**அவைதாம்:** *கமழ்குரற்றுழாய், கழையமல்கழனி, வரம்பில் வெள்ளம், ஒண்பொறிக் கழற்கால், மெய்யாடு பறந்தலை, வாண்மயங்கு கடுந்தார், வலம்படு வென்றி, பரிசிலர் வெறுக்கை, ஏவல் வியன்பணை, நாடுகாணவிர்சுடர்,* **இவை பாட்டின் பதிகம்.**

**பாடிப்பெற்ற பரிசில்:** *நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகங்கொடுத்தான் அக்கோ.*

*களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்* **இருபத்தையாண்டு** *வீற்றிருந்தான்.*

**ப—ரை:** *1—3.* **ஆரா** *திருவின் சேரலாதற்கு - தொலையாத செல்வத்தினையுடைய சேரலாதன் என்பானுக்கு,* **வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன்—வேளாவிக் கோமான்** *பதுமன் என்பவனுடைய மகள் ஈன்ற மகன்,*

*3—13. முனை பனிப்ப பிறந்து—பகைவர் போர் முனைகள் நடுங்கும்படி பிறந்து, பல் புகழ் வளர்த்து – பலவாகிய புகழ்களை வளரச்செய்து, ஊழின் ஆகிய - தாய முறைமையினால் உண்டான, உயர் பெரு சிறப்பின் – உயர்ந்த பெரிய சிறப்பினையுடைய, பூழி நாட்டை படை எடுத்து தழீஇ—பூழிநாட்டைப் படையொடு மேற்சென்று தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டு, உருள்பூ கடம்பின் பெருவாயில் நன்னனை - தேர் உருள்போலும் பூவினையுடைய கடம்பின் பெருவாயில் என்னும் ஊரையுடைய நன்னன் என்பவனை, நிலை செருவின் ஆற்றலை அறுத்து – நாடோறும் செய்த போரின்கண் வலியைக் கெடுத்து பொன் படு வாகை முழு முதல் தடிந்து – பொன்போன்ற பூக்கள் உண்டாகின்ற வாகை மரத்தின் பெரிய அடியை வெட்டி, குருதி செம்புனல் குஞ்சரம்*

ஈர்ப்ப – குருதியாகிய சிவந்த வெள்ளம் களத்திற்பட்ட யானையின் பிணத்தை இழுத்துச் செல்ல, செரு பல செய்து – போர்கள் பலவற்றைச் செய்து, செங்களம் வேட்டு - குருதியாற் சிவந்த போர்க்களத்தின்கட் களவேள்வி வேட்டு, துளங்கு குடி திருத்திய – தளர்ந்த குடிகளைத் திருத்திய, வலம்படு வென்றி - மேன்மேலும் பல போர்வென்றி படுதற்கு அடியாகிய வென்றியினை யுடைய, களங்காய் கண்ணி நார்முடி சேரலை – களங்காயாற் செய்த கண்ணியினையும் நாராற் செய்த முடியினையுமுடைய சேரலை, காப்பியாற்றுக் காப்பியனார் பாடினார் பத்துப் பாட்டு -காப்பியாற்றுக்காப்பியனார் என்னும் புலவர் புகழ்ந்து பாடினார் பத்துப் பாட்டு.

முடிபு: முனை பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்துப் பூழிநாட்டைத் தழீஇ நன்னனை செருவினுற்றலை யறுத்து அவன் வாகையின் முழுமுதல் தடிந்து செருப்பல செய்து செங்களம் வேட்டுத் துளங்குகுடி திருத்திய வலம் படுவென்றியினையுடைய களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற் றுக் காப்பியனார் பாடினார் பத்துப்பாட்டு என்க.

ஆ—ரை: 1—3. ஆராத்திரு – பிறர்க்குக் கொடுக்கவும் தொலையாத பெரிய செல்வம். ஆரா – தொலையாத. பெரும்பாண் 417 நச். சேரலாதற்கு- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதற்கு; சேரலாதற்கு வேளாவிக் கோமான் பதுமன் றேவி ஈன்ற மகன் (3) களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் (13) என இயையும். பதுமன் தேவி – பதுமன் என்பவனுடைய மகள். தேவி என்னும் சொல் மனைவி என்ற பொருளில் வழங்குவதாயினும் மகள் என்ற பொருளிலும் வழங்கினமை "நெடுஞ்சேரலாதற்கு வேளள், ஆவிக்கோமான் றேவி யீன்ற மகன்" "செல்வக் கடுங்கோவுக்கு, வேளாவிக் கோமான் பதுமன்றேவி யீன்ற மகன்" (பதிற் பதிகம் 6: 1–2; 8: 1-2) என வருவனவற்றாலும் நன்கு புலனும்.

பகைவர் போர்முனைகள் நடுங்குதற்குக் காரணமான பேராற்றலொடு நார்முடிச் சேரல் பிறந்தமையின் 'முனை பனிப்பப் பிறந்து' என்றார். ஆற்றல் முதலிய பண்புகள் பிறக்கும்பொழுதே அமைந்து விடுதல் 'ஏனுதி மோதிரஞ் செறித்த திருவுடையானொருவன் ஏனுதி மோதிரம் செறிக்கும் அத்திரு அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது; அரசுவீற்றிருக்குந் திருவுடையானொருவன் அரசுவீற்றிருக்கும் அத் திரு அவன் அரசு வீற்றிருக்கின்றபொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது' என வரூஉம் இறையனாரகப்பொருளுரையானும் (சூத் 2 உரை) அறிக. முனை–பகைப்புலமுமாம். "முனைகெடச் சென்று முன்சம முருக்கி" (பட்டினப் 238) எனப் பிறரும் கூறுதல் காண்க.

'பல் புகழ் என்றது செருப்பல கடந்ததனாலுண்டாகிய வென்றிப் பல் புகழை. "வென்றிப் பல்புகழ்" (மலைபடு 544) எனப் பிறரும் கூறுதல் காண்க. போரில் வென்றியெய்துந் தோறும் புகழ் வளர்தலின் 'பல்புகழ் வளர்த்து' என்றார். இனிப் பல்புகழ் என்பதற்கு வென்றியும் கொடையும் முதலிய வற் றான் புகழ் எனினுமமையும். "படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை,

நெடுவேள்'' (அக 22: 5-6) என்புழி, 'பல்புகழ் – வென்றியுந் தியாகமு முதலா யினவற்றுனுய புகழ்' என அகநானூற்றுப் பழையவுரைகாரர் உரைத்தலுங் காண்க. ஊழிஞய பூழிநாடு எனக்கூட்டுக. பூழிநாடு இவன் முன்னோர்க்கிருந் தமை பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் ''பூழியர் கோவே'' (பதிற் 21: 23) எனக் கூறுதலினுலும் அறியலாம். ஊழ்-முறைமை. ''உருகெழு தாயம் ஊழி னெய்திய'' மதுரைக் 227. முன்பு நன்னனுற் கொள்ளப்பட்ட பூழிநாட்டை நார்முடிச்சேரல் படையொடு சென்று பொருது வென்று கைப்பற்றினமை யின் 'பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ' என்றுர்.

''பொலம்பூண் நன்னன் பொருகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன'' அக 199: 20-3.

எனக் கல்லாடனுர் கூறுதல் காண்க. உருள்பூ, கடம்பினுக்கு அடை. ''மரா அத் துருள்பூ'' என்றுர் திருமுருகாற்றுப்படையினும். (முருகு 10–11) கடம் பின் பெருவாயில் என்றது அந் நன்னன் ஊரை. நிலைச்செரு என்றது அந் நன்னன் நாடொறுஞ் செய்த போரினை. ஆற்றலை அறுத்து என்றது கொன்று என்றபடி. வாகைப் பெருந்துறை என்னுமிடத்தில் நிகழ்ந்த போரில் நன்னனை நார்முடிச்சேரல் கொன்றுன் என்பது,

''இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்'' அக 199: 19-22.

என்பதனுலுமறியப்படும். நன்னனை ஆற்றலை யறுத்து என்றதனை, ''முதன்மு னைவரிற் கண்ணென் வேற்றுமை, சினைமுதன் வருத றெள்ளி தென்ப'' (தொல். வேற் மயங் 5) என்பதன் கண் 'தெள்ளிது' என்பதனுற் கொள்க. வாகை பொன்போன்ற பூவினைப் பூத்தலின் 'பொன்படு வாகை' என்றுர். ''செம்பொன் வாகை'' (பெருங் (2) 5: 87) எனப் பிறரும் கூறுதல் காண்க. வாகை-நன்னது காவல் மரம். களத்திற்பட்ட மாவினதும் மாக்களினதும் உடல்களினின்றும் பெருகி இழியும் குருதியின் மிகுதி தோன்றக் 'குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்ப' என்றுர். ''வெண்கோட் டிரும்பிணம் குருதியீர்ப்ப......பேரமர்க் கடந்த' (பெருங் பொண் 414-6) எனப் பிறரும் கூறுதல் காண்க. செங்களம்– குருதியாற் சிவந்த களம். ''குருதிச் செங்களம்'' அக 268: 3. களம் வேட்டு– போரிற் பகைவர் படையைக் கொன்று பேய்கட்கு விருந்தூட்டி.

''ஆழியங் கழனி தன்னு ளம்பொடு கணையம் வித்திச்
சூழ்குடர்ப் பிணங்கண் மல்க விளைத்தபின் றெழுதிப் பல்பேய்க்
கூழ்படு குருதிநெய்யி னிறைச்சிச்சோ றூட்டி வென்றி
வீழ்தர வேட்டு நின்றுர்'' (சீவக 757)

எனச் சிந்தாமணியில் வருதல் காண்க. துளங்குகுடி திருத்திய வென் றியை வலம்படு வென்றியென்றது அவ்வென்றி மேன்மேலும் பலபோர்

வென்றிபடுதற்கு அடியாகிய வென்றியாதல் பற்றி. வலம்படுவென்றி என்பதே பாடமாதல்,

"ஈத்தான் ருஞ விடனுடை வளனும்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்" பதிற் 32: 6-7.

"வான்றேய் நல்லிசை யுலகமொ டுயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்" 37: 6-7.

என வந்தனவற்றாலும் தெளிக. 'வளம்படு வென்றி' என்பது பாடமாயின் 'போர்வளம் படுதற்கு அடியாகிய வென்றி' என வுரைக்க.

## பழையவுரை.

இதன் பதிகத்துக் கடம்பின் பெருவாயில் 7) என்றது அந்நன்னன் ஊரை; நிலைச் செரு (8) என்றது அந் நன்னன் நாடோறுஞ் செய்த போரினை.

## ஒப்புமைப்பகுதி.

4. பல்புகழ்: பதிற் 12: 8 ஒப்பு.

7. உருள் பூங் கடம்பு: "பராரை மராஅத், துருள்பூங் கடம்பு" முருகு 10-11; "உருளிணர்க் கடம்பி னெலிதா ரோயே" "உருளிணர்க் கடம்பி னொன்றுபடு கமழ்தார்" பரி 5: 8;21: 11; "உருளிணர்க் கடம்பி னெடுந்தார்க் கண்ணியன்" கல்.

8. நிலைச்செரு: நேரிவாயி னிலைச்செரு வென்று" சிலப் 28: 117.

9. முழுமுத றடிந்து: பதிற் 11: 5 ஒப்பு.

10. குருதிப்புனல் குஞ்சரமீர்த்தல்: "மடங்க வெறிந்து மலையுருட்டு நீர் போற், றடங் கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கும் .....களத்து" "அர சர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு, முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப" களவழி 30: 37; "வேழங்கொண் டொழுகி வெள்ளக், குரைபுனற் குருதி செல்ல" சீவக 2297; "பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியில்" சிலப் 26: 209; "உடலின் மேற்பல காயஞ் சொரிந்து பின்கால், உடல் பதைப்ப வுதி ரத்தே யொழுகும் யானை" கலிங் 474; "உக்கன குருதியம் பெருந்திரை யுருட் டிப், புக்கன கடலிடை நெடுங்கரப் பூட்கை" கம்ப. சம்பு மாலி 39.

11. செருப்பல செய்தல்: பதிற் 36: 14 ஒப்பு.

செங்களம்: பதிற் 19: 5 ஒப்பு.

களம் வேட்டல்: "செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொ ளெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகம்" முருகு 99-100: "அரசு பட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட, அடுதிறலுயர் புகழ் வேந்தே" மதுரைக் 128-30; "எழுவர் நல்வல மடங்க வொருபகன், முரசொடு வெண் குடை யகப்படுத் துரைசெலக், கொன்று களம் வேட்ட ஞான்றை" அக 36: 20-3; "அரைசுபட வமருழக்கி......அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" "புலவுக்களம் பொலிய வேட்டோய்" புற 26: 6-11; 372: 12; "கொங்கர் செங்களம் வேட்டு" சிலப் 29 உரைப்பாட்டு.

12. பதிற் 32: 7 ஒப்பு.

# ஐந்தாம் பத்து

## சுடர்வீ வேங்கை.

(41) புணர்புரி நரம்பின் றீங்தொடை பழுனிய
வணரமை நல்யா ழிளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர்
கைவ லிளையர் கடவுட் பழிச்ச
மறப்புலிக் குழூக்குரல் செத்து வயக்களிறு
வரைசேர் பெழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன்
மாயிருஞ் சென்னி யணிபெற மிலைச்சிச்
சேஎ ருற்ற செல்படை மறவர்
தண்டுடை வலத்தர் போரெதிர்ந் தாங்கு
வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்
மழைபெயன் மாறிய கழைதிரங் கத்தம்
ஒன்றிரண் டலபல கழிந்து திண்டேர்
வசையி னெடுந்தகை காண்குவந் திசினே
தாவ லுய்யுமோ மற்றே தாவாது
வஞ்சின முடித்த வொன்றுமொழி மறவர்
முரசுடைப் பெருஞ்சமத் தரசுபடக் கடந்து
வெவ்வ ரோச்சம் பெருகத் தெவ்வர்
மிளகெறி யுலக்கையி னிருந்தலை யிடித்து
வைகார்ப் பெழுந்த மைபடு பரப்பின்
எடுத்தே றேய கடிப்புடை வியன்கண்
வலம்படு சீர்த்தி யொருங்குட னியைந்து
காலுளைக் கடும்பிசி ருடைய வாலுளைக்
கடும்பரிப் புரவி யூர்ந்தநின்
படுந்திரைப் பனிக்கட லுழந்த தாளே.

**துறை-காட்சி வாழ்த்து.**
**வண்ணம்-ஒழுகு வண்ணம்.**
**தூக்கு-செந்தூக்கு.**
**பெயர்-சுடர்வீ வேங்கை (8).**

ப—ரை: 1-16. புணர் புரி நரம்பின் தீ தொடை பழுநிய - இசை தன்னிடத்தே பொருந்திய முறுக்கின நரம்பின் இனிதாகிய கட்டினையுடைய பண் முற்றுப்பெற்ற, வணர் அமை நல் யாழ்-வளைவு பொருந்திய கோட்டினையுடையநன்றாகிய யாழை, இளையர் பொறுப்ப—இளைய மகளிர் சுமக்க, பண் அமை முழவும்—பண்கள் தன் கண்களிலே அமைந்த மத்தளமும், பதலையும் - ஒருகண் மாக்கிணையும். பிறவும்-கூறாத வாச்சியங்களும், கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கி -மூங்கிற் கணுக்களை அறுத்துச்செய்யப்பட்ட வங்கியத்தோடே கட்டி, காவில் தகைத்த - காவு தடியிலே கட்டிய, துறை கூடு கலப்பையர்-ஆடற்றுறைக்கு வேண்டுவனவெல்லாம் கூடின வாச்சிய முட்டுக்களையுடைய பையையுடையராய், கை வல் இளையர் கடவுள் பழிச்ச—வாச்சியங்களை வாசித்தலை வல்ல இளையவர்கள் முழவு முதலியவற்றை வாசித்துக் கடவுளை வாழ்த்த, மற புலி குழூஉ குரல் செத்து—அதனால் எழுந்த ஒலியைத்தறுகண்மையையுடைய புலிக்கூட்டத்தின் குரல் எனக் கருதி, வய களிறு -வலியினையுடைய யானை, வரை சேர்பு எழுந்த - பக்கமலையைப் பொருந்தி வளர்ந்த, சுடர்வீ வேங்கை-ஒளிபொருந்திய பூக்களையுடைய வேங்கையின், பூ உடை பெரு சினை வாங்கி பிளந்து-பூக்களையுடைய பெரிய கிளையை வளைத்துப் பிளந்து எடுத்து, தன் மா இரு சென்னி அணிபெற மலைச்சி - தனது கரிய பெரிய தலையில் அழகுபெறச் சூடி, சேஎர் உற்ற செல் படை மறவர்-திரளுதல் பொருந்திய பகைவர்மேற் செல்லுதலையுடைய படையிலுள்ள வீரர், தண்டுடை வலத்தர் போர் எதிர்ந் தாங்கு - தண்டாயுதத்தை வலக்கையிலுடையவராய்ப் போரை ஏற்று ஆரவாரித்தாற் போல, வழை அமல் வியன் காடு சிலம்ப பிளிறும் - சுரபுன்னை நெருங்கியுள்ள காடு ஒலிக்கும்படி முழங்கும், மழை பெயல் மாறிய - மழை பெய்தல் நீங்கிய கழை திரங்கு அத்தம் - மூங்கில் உலர்ந்த அருஞ்சுரம், ஒன்று இரண்டு அல பல கழிந்து—ஒன்று இரண்டு அல்லப் பலவற்றைக் கடந்து, திண் தேர் வசை இல் நெடுந்தகை - திண்ணிய தேரினையுடைய குற்றம் இல்லாத நெடுந்தகாய், காண்கு வந்திசின் — நின்னைக் காண்பேனாக வந்தேன்.

17—27. தாவாது வஞ்சினம் முடித்த - வருந்தாது மாற்றார் மண்டலங்களைக்கொண்டு தாம் கூறிய சபதங்களை நிறைவேற்றிய, ஒன்றுமொழி மறவர்-தம் தலைவர் கூறுவதை தாமும் கூறும் ஒன்றாகிய மொழியையுடைய வீரர், தெவ்வர் இரு தலை வெவ்வர் ஓச்சம் பெருக - பகை வெம்மையின் உயர்வு மிக, உலக்கை எறி மிளகின் இடித்து - உலக்கையி -பகைவரின் கரிய தலைகளை, உலக்கை எறி மிளகின் இடித்து - உலக்கையி னாற் குற்றப்பட்ட மிளகினைப்போலச் சிதறும்படி இடித்து, முரசுடை பெரு சமத்து அரசு பட கடந்து - முரசு முழங்குதலையுடைய பெரிய போரின்கண் வேந்தர் இறக்கும்படி எதிர்நின்று வெல்ல, வைகு ஆர்ப்பு எழுந்த மை படு பரப்பின் - இடையறாது தங்கின ஆரவாரம் மிகுந்த கருமை உண்டாகின்ற கடற் பரப்பினைப்போல் முழங்கும், எடுத்து ஏறு ஏய-படைக்கலங்களை எடுத்து எறிதலை ஏவிய, கடி புடை வியன்கண் - குறுந்தடியால் அடிக்கப்படுகின்ற அகன்ற கண்ணையுடைய முரசினால் உண்டான, வலம்படு சீர்த்தி - வெற்றியா

லுண்டாகிய மிக்க புகழ், ஒருங்கு உடன் இயைந்து-கடலுழந்ததனால் உண்டாகிய புகழுடன் இயைய, வால் உளை கடும் பரி புரவி ஊர்ந்த நின் - வெள்ளிய தலையாட்டம் அணிந்த விரைந்த செலவினையுடைய குதிரையை ஊர்ந்த நினது, கால் உழை கடு பிசிர் உடைய - காற்றுனே விடுபடுதலையுடைய மிக்க பிசிராக உடையும்படி, படும் திரை பனிகடல் உழந்த தாள் - ஒலிக்கின்ற அலைகளையுடைய குளிர்ச்சியையுடைய கடலிலே வருந்திய தாள்கள், தாவல் உய்யுமோ – வருத்தத்தினின்று நீங்குமோ.

**முடிபு:** நெடுந்தகை காண்கு வந்தேன்; நின் கடல் உழந்த தாள் தாவல் உய்யுமோ என்க.

**ஆ—ரை: 1—16.** நெடுந்தகை! கைவல் இளையர் கடவுட் பழிச்ச அதனால் எழுந்த ஒலியைப் புலிக் குழுவின் குரலாகக் கருதிக் களிறு வேங்கையின் பூவுடைப் பெருஞ் சினையைப் பிளந்து சென்னி அணி பெற மிலைச்சி மறவர் தண்டுடை வலத்தராய்ப் போர் எதிர்ந்தாங்கு வளையமல் வியன்காடு சிலப்பப் பிளிறும் அத்தம் பல கழிந்து நின்னைக் காண்பேனாக வந்தேன் என்க.

புணர் புரி நரம்பின் யாழ் எனக் கூட்டி இசை தன்னிடத்தே பொருந்திய முறுக்கின நரம்பினையுடைய யாழ் எனவுரைக்க. "ஏழ் புணர் சிறப்பினின்றொடைச் சீறியாழ்" என **மதுரைக்காஞ்சியில் (559)** வருதல் காண்க. இனி மத்தளத்திற் றாளத்தோடே பொருந்திய முறுக்கின நரம்பினையுடைய யாழ் எனினுமமையும். "முழவொடு புணர்ந்த திரிபுரி நரம்பின், றீந்தொடை" (**பட்டினப் 253-4**) என்பது ஈண்டு அறியற்பாலது. புணர்—கூடின எனினுமமையும். 'புரி நரம்பு – முறுக்கின நரம்பு' **சீவக 728** நச். பழுநிய யாழ்-பண் முற்றுப்பெற்ற யாழ். "நைவளம் பழுநிய நயந்தெரி பாலை" **சிறுபாண் 36**. யாழ்க் கோடு வளைந்திருத்தலின் 'வணரமை யாழ்' என்றார்.

"வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்" **மலைபடு 37**.

"வணர் கோட்டுச் சீறியாழ்" **புற 155: 1**.

"வாங்குமருப் பியாழொடு" **புற 281: 2**.

"வாங்கு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்" **புற 285: 3**.

என வருவன காண்க. வணர்-வளைவு. யாழ் கோட்டால் வளைந்ததாயினும் இசையால் இன்பம் பயத்தலின் 'நல்யாழ்' என்றார். இனி, பத்தருங் கோடும் நரம்புமென் றித்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் எனினுமமையும். 'நல் யாழ் –வன்னம் நன்றாகிய யாழ் என்பர் **நச்சினார்க்கினியர்**. (**மதுரைக் 605** உரை).

தூம்பொடு சுருக்குதற்கியலாத புரிநரம்பின் யாழைக் கூத்தரொடு செல்லும் மகளிர் சுமந்து செல்லுதலின் 'யாழ் இளையர் பொறுப்ப' என்றார். மகளிர் வாச்சியங்களைச் சுமந்து செல்லல்,

"ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்த்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன்முத லிருந்த சில்வளை விறலி" **புற 104: 1-4**.

என்பதனாலுமறிக. இளையர் - ஏவலிளையருமாம். "சுவலழுந்தப் பலகாய, சில் லோதிப் பல்லிளைஞருமே" (புற 139: 1-2) என வருதல் காண்க. முழவு-மத்தளம், புற 164: 12 உரை. இடக்கண் இளியாக வலக்கண் குரலாக நடக்கும்படி பண் அமைந்த முழவாதலின் 'பண்ணமை முழவு' என்றார்.

"இடக்க ணிளியா வலக்கண் குரலா
நடப்பது தோலியற் கருவி யாகும்" (மலைபடு 2-3 நச் மேற்.)

என வருதல் காண்க. 'பண்ணமை முழவு - பண்ணுதலமைந்த முழவு' சிலப் 3: 61 அடி நல்.

பதலை என்பது ஒருதலை முகமுடையதொரு தோற்கருவி. "பதலை யொரு கண் பையென வியக்குமின்" (புற 152: 17) என வருதல் காண்க. இது 'ஒரு கண் மாக்கிணை' எனவும் 'ஒருதலை மாக்கிணை' எனவும் வழங்கப்பட்டமை பதலை என்பதற்கு ஒருகண் மாக்கிணையென நச்சினார்க்கினியரும் (மலைபடு 11 உரை) 'ஒருதலைமாக்கிணை' யென புறநானூற்றுரையாசிரியரும் (புற 94: 12 உரை) உரைத்தலானும் அறிக. இது மாத்திரையைச் சொல்லும் தானத்தை யுடையதென்பது. "நொடிதரு பாணிய பதலையும்" மலைபடு 11 என்பதனா லறியப்படும். பிறவும் என்றது ஆகுளி தட்டை எல்லரி முதலிய கூறுந வாச்சியங்களை. இவை சிறுபல்லியங்களாதலின், யாழ் முழவு தூம்பு முதலாயின வற்றை எடுத்துக்கூறி இவற்றைப் பிறவும் என்றதனாற் கொள்ளவைத்தார்.

தூம்பு என்பது வங்கியம் என்னும் வாச்சியம். இது குறுந் தூம்பு நெடுந்தூம்பு என இருவகைப்படும். இதனைக் "குறுநெடுந் தூம்பொடு" (அக 301: 17) என்பதனாலும் அறிக. கண்ணறுத் தியற்றிய தூம்பு என்றது மூங்கிலின் கணுக்களை அறுத்து இயற்றப்பட்ட நெடுந் தூம்பை. இதனைக், "கண்ணிடை விடுத்த......தூம்பின்" என்பதற்குக் 'கண்களின் நடுவே வெளி யாகத் திறந்த......பெருவங்கியத்தோடே' (மலைபடு 6 நச்) எனவும், "கழை வளர் தூம்பின்" என்பதற்கு 'மூங்கிலாகிய இசை வளரும் நெடுவங்கியத் தோடே" (மலைபடு 533 நச்) எனவும் வரூஉம் நச்சினார்க்கினியர் உரைப்பகுதி களானும் அறிக. இது களிற்றினது கைபோலும் வடிவையுடையதென்பது, "கண்விடு தூம்பிற் களிற்றுயிர்" என்பதற்குக் கண் திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை' (புற 152: 15 உரை) எனவும், யானை நெட்டுயிர்ப்புக் கொண்டாற்போலும் ஓசையுடைய தென்பது,

"நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
யியம்புணர் தூம்பி னுயிர்க்கும்" ஐங் 377: 1-2.

"ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க்கும்" அக 111: 8-9.

"செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந் திசைப்ப" அக 301: 16-7.

எனவும் வருவனவற்றாலறியப்படும். இது யாழ் முதலியவற்றுடன் சேர்ந்து இசைத்தல் "இயம்புணர் தூம்பு" (ஐங் 377) என்பதனாலறியப்படும்.

காவில் தகைத்த என்றது காவின் தலையில் தூங்கும் பரிசு கட்டியவென்றவாறு. வாச்சியங்களைக் காவில் இட்டுச் செல்லுதல்,

"ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கி" புற 103: 1-2.

என்பதனாலுமறிக. தமது ஆடற்றுறைக்கு வேண்டுவனவெல்லாம் கூடின கலப்பையராதலின் 'துறைகூடு கலப்பையர்' என்றார். கூத்தர் ஆடற்றுறையுடையராதல்,

"கோடியர் நீர்மை போல முறைமுறை
யாடுநர் கழியுமிவ் வுலகத்து" புற 29: 23-4.

என்பதனாலுமறிக. கலப்பை-வாச்சியமுட்டுக்களையுடைய பை. கலப்பையிர் -வாச்சிய முட்டுக்களையுடைய பையையுடையிராய்' என நச்சினார்க்கினியர் உரைத்தலும் (மலைபடு 13 உரை) காண்க. 'கலப்பை -முட்டு' என்பர் புறநானூற்றுரையாசிரியர் (புற 206: 10 உரை).

கலப்பையைர் என்றது கூத்தரை. யாழையுடைமையாற் கலப்பையர் பாணர் எனக்கோடல் அமையாதோவெனின் அமையாது. என்னை? யாழ் கூத்தரினதும் இசைக் கருவியாகப் "பாடல் முற்றிய பயனுடை யெழாஅற், கோடியர்" (பொருந 56: 7) எனக் கூறப்படுதலின். யாழ் முழவு தூம்பு முதலிய பல்லியங்களுடன் கலப்பையினராய்ச் செல்வோர் கூத்தர் என்பது,

"பல்லியக் கோடியர்" பொருந 125.

"பண்ணமை முழவின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்" புற 164: 11-2.

"திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
........................ ........................
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" மலைபடு 3-13.

"செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவிட்டும்
தேரை யொலியின் மானச் சீரமைத்துச்
சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வன ராடி யொல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறொகைக் கலப்பையர்
இரும்பே ரொக்கற் கோடியர்" அக 301: 16-23.

என வருவனவற்றாலுமறிக. கலப்பையராகிய இளையர் என்க. கைவல் இளையர்-யாழ் முழவு முதலிய வாச்சியங்களை வாசித்தலை வல்ல இளையர். அவரைக்

கைவல் இளையர் என விதந்து கூறியதென்னையெனின் வாச்சியங்களின் ஒலியைப் புலிக்குழூஉவின் குரலாக வயக்களிறு கருதுதற்கு வாசிக்குமுறைமையை அறிந்து கைவன்மையால் வாசித்தமையே ஏதுவாதல் தோன்றற்கென்க.

கடவுட் பழிச்சவென்றது தாம் செல்லும் அரிய வழியில் ஆறலை கள்வராலும் கொடிய விலங்குகளாலும் பிறவற்றாலும் ஏதமுண்டாகாதவாறு காடுறை கடவுளை வாழ்த்த வென்றவாறு. கூத்தர் வழியிற் கடவுளை வாழ்த்திச் செல்லல்,

"இலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை" பொருந 50-2.

"இறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்" மலைபடு 358-60.

என வருவனவற்றாலுமறியப்படும். கடவுட் பழிச்சியபோது முழவு முதலிய வாச்சியக்களை வாசித்தமை 'கடவுட் பழிச்சப் புலிக்குழூஉக் குரல் செத்து' என்பதனாற் பெறப்படும்.

"அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்" பெரும்பாண் 391-2.

"செவ்வழி நல்யாழ் இசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுள் மெய்ந்நிறுத்
தவர்திறஞ் செல்வேன்" அக 14: 15-7.

என வருவன காண்க. முழவின் ஒலி புலியின் குரல்போன்றதென்பது,

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொடு" மலைபடு 1-3.

என முழவொலிக்கு மழை முழக்கினையும்,

"மழைமுழங் கரவங் கேட்ட கழைதின்
மாஅல் யானை புலிசெத்து வெரீஇ
இருங்கல் விடரகஞ் சிலம்பப் பெயரும்" அக 232: 2-4.

என மழை முழக்கினுக்குப் புலிக்குரலினையும் கூறுமாற்றானுமறியப்படும். மறப்புலி—தறுகண்மையையுடைய புலி. 'மறமனை வேங்கை — தறுகண்மைக் கிடமாகிய புலி' எனப் பேராசிரியர் உரைத்தமை காண்க (திருக்கோவை 96 உரை). குரல்—முழக்கம். 'புலிக்குரல் — புலியினது முழக்கம்' பெரும்பாண் 156 நச். செத்து-கருதி. "வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப், பல்காற் பறவை கிளைசெத்தோர்க்கும்" பெரும்பாண் 182-3. கடவுட் பழிச்ச எழுந்த ஒலியைப் புலியின் குரலாகக் கருதிய யானை புலியினது வடிவையொப்பப் பூத்த வேங்கைப் பெருஞ்சினையைப் புலியெனக் கறுவுதல்கொண்டு பிளந்தது.

"..................................வேழம்
இருங்கேழ் வயப்புலி வெரீஇ யயலது
கருங்கால் வேங்கை யூறுபட மறலிப்
பெருஞ்சினந் தணியுங் குன்ற நாடன்" நற் 217: 2-5.

"உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை" கலி 38: 6-7.

"புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப
முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல்" அக 227: 8-9.

என வருவன காண்க. புலியொடு பொருதற்கேற்ற வலியினையுடைய களிறு தலின் 'வயக்களிறு' என்றார். "வரிவயம் பொருத வயக்களிறு" என்றார் புறத்தினும். (புற 100: 7) வய-வலி. "வய வலியாகும்" என்பது தொல்காப்பியம். (உரி 70). பக்க மலையில் வளர்ந்த வேங்கையை "வரை சேர்பு எழுந்த வேங்கை" என்றார். வரை – பக்க மலை. "வரைத்தா ளருவிப் பொருப்பின்' மதுரைக் 42. புதுவதாக மலர்ந்த வேங்கையாதல் தோன்றச் "சுடர்வீ வேங்கை" என்றார். சுடர்வீ என்பதற்குச் சுடர்போலும் வீ எனினும் அமையும். "எரிமருள் வேங்கை" (நற் 216: 6) எனவும்,

"நல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகூது மிதியுலைப் பிதிர்விற் பொங்கிச்
சிறுபன் மின்மினி போலப் பலவுடன்
மணிநிற விரும்புதற் றுவு நாட" அக 202: 5-8.

எனவும் வருவன காண்க.

களிறு தன் சினத்தாற் செய்த செயலுக்கெல்லாம் வேங்கை காரணமாக நின்றமையின் இச் செய்யுளுக்குச் சுடர்வீ வேங்கை என்று பெயராயிற்று.

"கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு, நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை, நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற், கனவிற் கண்டு கதுமென வெரீஇப், புதுவ தாக மலர்ந்த வேங்கையை யதுவென வுணர்ந்தத னணிநல முருக்கி" (கலி 49: 1-6) என்பது ஈண்டைக் கேற்ப அறியற்பாலது. வயக் களிறுதலின் தன் சினத்துக்கேற்ப வேங்கையின் பெருஞ்சினையை வாங்கிப் பிளந்தது. வாங்கி-வளைத்து. "உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினை" குறுந் 10-3. 'தன் சென்னி யணிபெற மிலைச்சி' என்றதனாற் பிளந்து என்பதற் குப் பிளந்து எடுத்து என ஒருசொல் வருவிக்க.

பிளந்து எடுத்த பெருஞ்சினையைப் பூக்கள் தன் சென்னியிற் பொருந்த ஏத்திப் பிளிறுகின்ற களிறு சென்னியிற் போர்ப்பூக்களைச் சூடித் தண்டாயுதத்தைக் கையிலேந்தி போரை ஏற்று ஆரவாரிக்கும் வீரரை ஒத்தலின் 'வயக் களிறு, பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன், மாயிருஞ் சென்னி யணி பெற மிலைச்சி... மறவர், தண்டுடை வலத்தர் போரெதிர்ந் தாங்கு பிளிறும்' என்றார்.

"காய்சினஞ் சிறந்த வாய்புகு கடாத்தொடு
முன்னில் பொருஅது முரணிப் பொன்னிணர்ப்
புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப

முதல்பாய்ந் திட்ட முழவலி யொருத்தல்
செந்நிலப் படுநீ ருடிச் செருமலைந்து
களங்கொள் மள்ளரின் முழங்கு மத்தம்'' அக 227: 6-10.

எனப் பிறுண்டும் வருதல் காண்க. களிற்றுக்கு வீரரும் வேங்கைச் சினைக்குத் தண்டாயுதமும் அதன் பிளிற்றொலிக்கு வீரரின் போரெதிர் ஆரவாரமும் உவமை.. களிற்றுக்கு வீரர் உவமையாதல்,

''காரொடு தொடர்மதக் களிறு சென்றன
வாரொடு தொடுகழன் மன்ன ராமெனா'' மந்தரை 37.

எனக் கம்பராமாயணத்தும் காண்க. வேங்கைச் சினையின் பூக்கள் சென்னியிற் பொருந்துமாறு அதனைப் பிடித்தமையின் 'மிலைச்சி' என்றார் களிற்றின் கரிய பெரிய தலை பொன்மருள் நறுவீயால் அழகு பெறுதலின் ''மாயிருஞ் சென்னி யணிபெற மிலைச்சி'' என்றார். தண்டுடை வலத்தர் என்றதற்கு ஏற்பக் களிறு பிளந்தெடுத்த பெருஞ்சினையைத் துதிக்கையில் ஏந்திச்சென் றமை கொள்க.

சேளுற்ற படை எனக் கூட்டி யானை குதிரை முதலியன சேர்தலுற்ற படை எனக் கொள்க. சேளர் - திரட்சி. ''சேரே திரட்சி'' தொல். உரி 65. செல்படை – பகைவர்மேற் செல்லுதலையுடைய படை. படை மறவர்–படையிடத்து வீரர். வலத்தர்–வினையெச்சவினைக் குறிப்பு முற்று. போரெதிர்தல்–போரை ஏற்றல். ''போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே'' புற 84: 3. 'களிறு பிளிறும்' என்றதனால் போரெதிர்ந்தாங்கு என்பதற்குப் போரையேற்று ஆரவாரித்தாற்போலவெனவுரைக்க. வீரர் போரையேற்று ஆரவாரித்தல் ''போர்க் கெதிர்ந்தவரு மார்த்தார்'' (சீவக 801) என்புழிக் காண்க.

வரைசேர்பெழுந்த வேங்கையைப் பிளந்த களிறு அம்மலைப் பக்கத்தே யுள்ள சுரபுன்னை மரங்கள் நெருங்கிய அகன்ற காட்டிடமெல்லாம் ஒலிக்கும்படி பிளிறிச் செல்லுதலின் 'வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்' என்றார். வழை–சுர புன்னை. குறிஞ்சி 83 நச். அமல்–நெருங்கிய. மலைப்பக்கத்துச் சுரபுன்னை நெருங்கி வளர்தல். ''வழையமை சாரல்'' (மலைபடு 181) ''வரையம லடுக்கத்து'' (குறுந் 260: 6) என வருவவற்றாலுமறிக. சிலம்ப–ஒலிக்கும்படி கலி 38: 8 நச். எதிரொலியுண்டாக எனினுமமையும்.

களிறு செத்துப் (7) பிளந்து (9) மிலைச்சி (10) எதிர்ந்தாங்கு (12) பிளிறும் (13) அத்தம் (14) என்க.

'மழைபெயன் மாறிய கழைதிரங் கத்தம் பலகழிந்து காண்குவந் திசினே' என்றதனால் இரவலன் சேரனைக் காணச்சென்ற காலம் முதுவேனிற் காலமாகும். அக்காலத்தே மழை பெய்தல் நீங்க மூங்கில் உலர்தல், ''இரும்பனை திரங்கப் பெரும்பெய லொழிப்ப......அருவி யற்ற பெருவறற் காலையும்'' (பதிற் 43: 12-4) என்பதனாலுமறிக. அக்காலத்து வள்ளியோரை நினைத்து இரவலர் செல்லல்,

''வேனி னின்ற வெம்பத வழிநாட்
காலுறா யிற்றுக் கதிர் கடாவுறுப்ப
.............................. ................
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்

துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல'' சிறுபாண் 9–40.

''பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனில்
.......................................................
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண'' பெரும்பாண் 1-22.

என வருவனவற்றாலுமறிக.

திரங்கல் – உலர்தல். அத்தம்–அருஞ்சுரம். புற 23: 22 உரை. 'சுரம்' திருக்கோவை 202 பேர். இரவலர் அருஞ்சுரம் கடந்து பரிசில் பெறச் செல்லல், ''வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி......நெடிய வென்னாது சுரம்பல கடந்து, வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை'' (புற 47: 1-6) என்பதனானுமறிக' 'வயக்களிறு புலிசெத்து வேங்கைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து காடு சிலம்பப் பிளிறும் அத்தம்' என்றதனால் வழியினதருமையும், 'மழை பெயன் மாறிய கழைதிரங் கத்தம், என்றதனால் காலத்தருமையும் கூறினர். ஒன்றிரண்டல'பல என்றது சில அல்லப் பல என்றவாறு. ஒன்று இரண்டு பல என்று வழங்குதலை,

''ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பலநாள் வந்து பணிமொழி பயிற்றி'' குறுந் 176: 1-2.

''ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பன்னாட் பயின்று பலரொடு செலினும்'' புற 101: 1–2.

என வருவனவற்றினுங் காண்க. திண்டேர் நெடுந்தகை என இயையும். ஆண்மை கொடை முதலியவற்றிற் குற்றமில்லாத பெருந் தகுதிப்பாடுடையவனாதலின் சேரனை 'வசையில் நெடுந்தகை' என்றார். நெடுந்தகை, அண்மை விளி. வந்திசின் என்புழி இசின் தன்மைக்கண் வந்தது. ''காண்கு வந்திசிற் பெரும'' (புற 17: 33) என்புழிப்போல. ''அவற்றுள், இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந், தகுநிலை யுடைய வென்மனார் புலவர்'' (தொல். இடை 27) என்பது இதற்கு விதி.

17—27. மறவர் தெவ்வரின் இருந்தலை யிடித்து அரசுபடக் கடக்க எடுத்தெறிதலை ஏவிய வியங்கண் வலம்படு சீர்த்தி ஒருங்குடன் இயையக் கடலுழந்த தாள் தாவல் உய்யுமோ என்க.

வஞ்சினம் முடித்த மறவர் ஒன்றுமொழி மறவர் எனத் தனித்தனி கூட்டுக. வஞ்சினம்என்பது இன்ன தன்மைய தொன்றினைச் செய்தலாற்றேனாயின் இன்னவாருகக் கடவேன் எனச் சபதஞ் செய்தல்.

''இன்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்'' புற 24: 8-9.

எனத் தொல்காப்பியம் கூறுதல் காண்க.

''அடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை

யாரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக'' புற 71: 2-6.

என ஒல்லையூர் தந்த **பூதப்பாண்டியனும்,**

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
வென்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக" புற 72: 7-12.

எனப் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியனும்** உரைத்த வஞ்சினவுரைகள் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன.

தாம் கூறிய சபதங்களை வருத்தமின்றி முடித்த ஆண்மைமிக்க வீரராதல் தோன்றத் 'தாவாது வஞ்சினமுடித்த மறவர்' என்றார். வீரர் வஞ்சினம் உரைத்தல்,

"இன்றினிது நுகர்ந்தென மாயி னாளை
மண்புனை யிஞ்சி மதில்கடந் தல்லது
துண்குவ மல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" பதிற் 58: 5-8.

என்பதனாலுமறிக. வஞ்சினம் முடித்தல் பகைவரைப் புறங்கிடச் செய்தல், பொருள் அகப்படுத்தல், அவர் குடை முரசு முடிக்கலன் முதலாயினவற்றைக் கொள்ளல்போல்வன. ஈண்டு வஞ்சினம் முடித்தல் — மாற்றார் மண்டலங்களைக் கொண்டு முடித்தல் என்பர் பழையவுரைகாரர். வருத்தமாகிய குறிப்புணர்த்தும் தாவென்னும் உரிச்சொல் வினைக்கு முதனிலையாய்த் தாவாது என வினையெச்சமறையாய் முடித்தவென்னும் வினையொடு முடிந்தது. ஒன்றுமொழி மறவர் என்பதற்குத் தம் தலைவர் கூறுவதையே தாமும் கூறும் ஒன்றாகிய மொழியையுடைய மறவர் எனினுமமையும். மறவர் என்றது சேரன் படைவீரரை. வெவ்வர் — வெம்மை. "வெம்மையென்னும் பண்பிற்கு வெவ்வரென்பதும் ஓர் வாய்பாடு. ஓச்சம் — உயர்வு.

தெவ்வர் (20) இருந்தலை உலக்கை எறி மிளகின் இடித்து (21) என மாறிக் கூட்டுக. இருந்தலை — கரிய தலை "முடியுடைக் கருந்தலை" என்றார் **பட்டினப் பாலையினும்** (230). வியன்களத்தில் இருந்தலை மிகச் சிறிதாகத் தோன்றலின் தலைக்கு மிளகினை உவமை கூறினார். 'மிளகெறி யுலக்கையின்' என்றதற்கு ஏற்ப இருந்தலை யிடித்து என்பதற்கு இருந்தலையைத் தண்டினால் இடித்து எனக் கொள்க.

இருந்தலை யிடித்து (21) அரசுபடக் கடந்து (19) என முடித்து அதனைக் கடக்கவெனத் திரித்து அதனை எடுத்தேறு (23) என்னும் தொழிற்பெயரொடு

முடிக்க. வைகார்ப்பு - ஒருகாலும் இடையறாது தங்கின ஆரவாரம். "முழங்கு முந்நீர்" (புற 18-1) எனவும் "ஆர்க்குஞ் செறிகடலே" (திருக்கோவை 182) எனவும் வருவன காண்க. வைகுதல்-தங்குதல் "உறையொடு வைகிய போது போல் (கலி 121: 9) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஆர்ப்பு எழுந்த மைபடு பரப்பின் (22) வியன்கண் (23) எனக்கூட்டி அவ்வாரவாரம் காற்றால் மிக்க கடற்பரப்பினைப்போல முழங்கும் முரசு எனக் கொள்க. "கால் கடிப் பாகக் கடலொலித் தாங்கு ... முரசம், அகலிரு விசும்பி னதிர" "கடுங்குரன் முரசம், காலுறு கடலிற் கடிய வுரற" (பதிற் 68: 1-4; 69: 3-4) எனப் பிறரும் கூறுதல் காண்க. எழுதல்-மிகுதல். "வயி ரெழுந் திசைப்ப" முருகு 120. எடுத்தேறேய கடிப்புடை வியன்கண் என்றது தன் குறிப்பினாற் பகைவர்மேற் படைக்கலங்களை எடுத்து எறிதலை ஏவிய கடிப்பினால் புடைக்கப்படுதலையுடைய முரசம் என்றவாறு.

> "எடுத்தே றேய கடிப்புடை யதிரும்
> போர்ப்புறு முரசம்' பதிற் 84: 1-2.

என பிறண்டும் வருதல் காண்க. போரில் படைக்கலங்களை எடுத்தெறிதலை, "எடுத்தெறி ஞாட்பி னிமையான்" (புற 290: 4) என்பதனானுமறிக. ஏறு-எறிதல். ஏவிய ஏய என இடைக் குறைந்து நின்றது. ஏய - ஏவின. புறப்பொருள் வெண்பாமாலை 87 உரை. கடிப்பு என்றது கடியெனக் கடைக் குறைந்தது. வியன் கண் என்பது அகன்ற கண்ணையுடைய வீர முரசிற்கு ஆகுபெயர்.

வியன்கண் வலம்படு சீர்த்தி யொருங்குடன் இயைந்து என்றது முரசினால் உண்டாகிய வென்றியால் உண்டான மிக்க புகழ் கடலுழந்த மிக்க புகழொடு உடன் இயைய என்றவாறு. முரசு வென்றிக்கேதுவாதல் "வலம்படு வியன்பணை" (பதிற் 17: 5) என்பதனானுமறிக. அரசர்க்கு மற்றைப் புகழினும் வென்றியாலுண்டாகும் புகழ் மிக்க புகழாதலின் 'வலம்படு சீர்த்தி' என்றார். "மறம் வீங்கு பல் புகழ்" (பதிற் 12: 8) எனப் பிறரும் கூறுதல் காண்க. சீர்த்தி-மிக்க புகழ். "சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்" (தொல். புற 36: 9) என்புழியும் இப்பொருட்டாயிற்று. "சீர்த்தி மிகுபுகழ்" என்பது தொல்காப்பியம். (உரி 16)'ஒருங்குடனியைந்து-உடனியைந்து' பரி 2: 36 பரிமேல். இயைந்து (24) என்பதனை இயையவெனத் திரித்து உழந்த (27) என்பதனோடு முடிக்க. உளைதல் - விடுபடுதல். பிசிருடைய (25)உழந்த (27) என்பதனோடு முடிக்க. கடலுழத்தற்கு முன்பு செய்த போரிற் குட்டுவன் வெள்ளிய தலையாட்டத்தினை அணிந்ததும் விரைந்த செலவினையுடையதுமாகிய குதிரைமீதிவர்ந்தமையின் 'வாலுளைக் கடும்பரிப் புரவியூர்ந்த நின்' என்றார். "செவ்வுளைய மாவூர்ந்து . . அரசுபடக் கடக்குமாற்றற், புரைசான் மைந்த" (பதிற் 34: 4-12) என வருதல் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. இதனால் கடலுழத்தற்கு முன்பும் தாள்கள் குதியைத் தூண்டி வருந்தியமை கூறினர். "களிறு கடைஇய தாள், மாவுடற்றிய வடிம்பு" (பதிற் 70: 1-2) என வருதல் காண்க. உழந்த-வருந்திய. குட்டுவன் கடலுழந்தமை.

> "கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
> கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ" பதிற் 48: 3-4.

என்பதனுலுமறிக. கடலுழந்த தாள் (27) தாவ லுய்யுமோ (17) என மாறிக் கூட்டுக. தாவென்னும் உரிச்சொல் தொழிற்பெயர்ப்பட்டுத் தாவலென நின்றது. உய்யுமோ என்புழி ஓகாரவிடைச்சொல் பின்னரும் இகல்வினை மேவலை யாகலின் ஒருமுறையாயினும் அஃதொழிந்து வருந்தாதிருக்கவேண்டுமென வினாவுப் பொருளில் வந்தது. என்னை?

"அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த வியல வாயினும்
வினையொடும் பெயரொடு நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே" (தொல். இடை 47)

என்பது புறநடையாகலின். இப்பகுதியான் குட்டுவன் கடல்பிறக்கோட்டிய வென்றியைப் புலப்படுத்தினர்.

இதனாற் சொல்லியது அவன் **வென்றிச்சிறப்புக்** கூறியவாறாயிற்று.

நின் கடலுழந்த தாள் தாவலுய்யுமோ வென்றதனால் துறை **காட்சிவாழ்த்**தாயிற்று.

## பழையவுரை.

5. துறை கூடு கலப்பை—ஆடற்றுறைக்கு வேண்டுவனவெல்லாம் கூடின முட்டு கடவுட் பழிச்ச (6) அத்தம் (14) பலகழிந்து (15) காண்கு வந்திசின் (16) என முடிக்க. 7–8. களிறு தன் சினத்தாற் செய்த செயலுக்கெல்லாம் வேங்கை காரணமாய் நின்றமையான் இதற்கு சுடர்வீ வேங்கை என்று பெயராயிற்று. 17. தாவலுய்யுமோவென்றது வருத்தத்தில் நின்று நீங்குமோ வென்றவாறு. தாவென்னும் உரிச்சொல் தொழிற்பெயர்ப்பட்டுத் தாவலென நின்றது. 18. வஞ்சின முடிந்தல்-மாற்றார் மண்டலங்களைக்கொண்டு முடித்தல். 20. வெம்மையென்னும் பண்பிற்கு வெவ்வரென்பதும் ஓர் வாய்பாடு. தெவ்வர் தலை (31) என மாறிக் கூட்டுக. இருந்தலையிடித்து (21) அரசுபடக் கடந்து (19) எனமுடித்து அதனைக் கடக்கவெனத் திரித்து அதனை எடுத்தேறு (23) என்னும் தொழிற் பெயரொடு முடிக்க. 22. வைகார்ப்பு - ஒருகாலும் இடையறாது தங்கின ஆரவாரம். மைபடு பரப்பு – கடற்பரப்பு. இயைந்து (24) என்பதனை இயையவெனத் திரித்து உழந்த (27) என்பதனோடு முடிக்க. இனி ஊர்ந்த (26) என்பதனோடு முடிப்பினும் அமையும். 25. காலுளையென்றது காற்றுனே உளைதலையுடைய வென்றவாறு உளைதல் - விடுபடுதல்.

நெடுந்தகை, காண்குவந்தேன் (16); நின் (26) கடலுழந்த தாள் (27) தாவலுய்யுமோ (17) எனக் கூட்டி **வினைமுடிபு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் **வென்றிச்சிறப்பு** கூறியவாறாயிற்று.

நின் கடலுழந்த தாள் தாவலுய்யுமோ வென்றதனாற் **காட்சிவாழ்த்தா**யிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. **புணர் புரி நரம்பு:** "வணர் கோட்டுச் சீறியாழ் .....புணர் புரி நரம்பின்" **சிலப் 28: 31-2.**

1—2. **தீந்தொடை யாழ்:** "தீந்தொடைப், பையுள் நல்யாழ்" **அக 314: 11: 2;** "தேளந் தீந்தொடைச் சீறியாழ்" **புற 70: 1.**

தீந்தொடைப் பழுநிய யாழ்: "தீந்தொடை பழுநிய, இடனுடைப் பேரி யாழ்" பதிற் 66: 1-2.

2. நல்யாழ்: "குரல் புணர் நல்யாழ்" மதுரைக் 605; "நல்லியாழ்ப், பண் ணுப் பெயர்த் தன்ன" "நல்யாழ், மருதம் பண்ணி" மலைபடு 450-1; 469-70: "படுமலை நின்ற நல்யாழ்" விரல்கவர்ந் துழந்த கவர்வி னல்யாழ்" நற் 139: 4; 335: 9; "நல்லியாழ்ப் பாண" "கவர்தொடை நல்லியாழிமிழ" பரி 3: 83; 22: 38; "செவ்வழி நல்யாழ்" "பையுள் நல்யாழ்" 'வடியுறு நல்யாழ்" அக 14: 15; 214: 13; 374: 8; 'நல்யா ழாகுழி" "பண்ணமை நரம்பின் பச்சை நல் யாழ்" 'நல்லியாழ் மருப்பின்" புற 64: 1; 164: 11; 242: 2.

3. பண்ணமை முழவு: "பண்ணமை மென்முழா" "பண்ணார் பணைமுழ வம்" சீவக 530; 2967;

5. கலப்பையர்: பதிற் 15: 26 ஒப்பு.

6. கைவ லிளையர்: "கைவல் சீறியாழ் பாண" ஐங் 472: 1.

கடவுட் பழிச்ச: "அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை" மலைபடு 538.

7. மறப்புலி: "மறப்புலிக் குருளை" குறுந் 209: 2; "மறங்கொ ளிரும் புலி" கலி 42: 1; "மறப்புலி... களிறட்டுக் குழூஉம்" "மறப்புலி யுரற" அக 112: 5, 392: 16; "மறப்புலி யுடலின்" "மறப்புலி யுரைத்து" புற 90: 3; 160: 22; "மறப்புலி தன குமாரோ சீவக 752; "மறங்கொ ளிரும்புலி" சிலப் 12: 27.

வயக்களிறு: "வயக்களிறு முகந்து கொண்டு" பெரும்பாண் 27; "வயக் களிறு பார்க்கும் வயப்புலி போல" மதுரைக் 643; "ஏந்து வெண்கோட்டு வயக்களிறு" "வயக்களிறு பொருத வாள்வரி வேங்கை" நற் 205: 4; 255: 4; "வயக்களிற்றுக் கோடு" கலி 41 1-2; "வயக்களிற் றன்ன காளை யொடு" "பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்" "சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு" "இளைபா ராட்டும் கடுநடை வயக்களிறு" அக 55: 4; 78: 4; 121: 6; 218: 1; "வரிவயம் பொருத வயக்களிறு" புற 100: 7.

5—7. களிறு பிற ஓசையைப் புலியோசையாகக் கருதல்: "மழைமுழங் கரவங் கேட்ட கழைதின், மாஅல் யானை புலிசெத்து வெரீஇ, இருங்கல் விடரகஞ் சிலப்பப் பெயரும், பெருங்கல் நாடன்" அக 232: 2-5.

8. மலையில் வேங்கை வளர்தல்: நற் 13: 7; 28: 5-6; 51: 11; 112: 2, 3; 257: 4 7; 259: 1-2; 383: 1; 396: 3; குறுந் 96: 1; 134: 3; 208: 1-2: 241: 4-6; ஐங் 217: 1; 219: 1-3; 276: 5-6; கலி 44: 2-4; 48: 1; அக 85: 9-10; 105: 1; 118: 1-2; 141: 27; 147: 1-2; 16: 20; 201: 1-5; 205: 16-20; 218: 21: 2; 228: 10; 268: 3-5; 272: 17-9; 292: 12-3; 345: 7-8; 349: 9-10; 368: 6; 388: 6-7; திணைமொழிஐம். குறிஞ்சி 8; ஐந்; ஐம் 15; ஐந்எழுபது 6; திணைநூற் 20; 27; கைந்நிலை. குறிஞ்சி 10.

சுடர்வீ: பதிற் 40: 15 ஒப்பு.

*8—9.* வேங்கைப்பூவுடைப் பெருஞ்சினை: *"நெடுந்தாள் வேங்கைப், பூவுடையலங்கு சினை"* குறுந் *134: 3-4;* *"புலிக்கே முற்ற பூவுடைப் பெருஞ் சினை .....கல்சேர் வேங்கை"* அக *141: 25. 7.*

*12.* தண்டுடை வலத்தர்: *"தண்டுசேர் மள்ளரின்"* நற் *260: 3;* *"தண்டுடைக் கையர்"* குறுந் *146: 3.*

போரெதிர்தல். பதிற் *23: 17* ஒப்பு.

*13.* வழையமல்: *"வழையமலடுக்கத்து"* அக *328: 1.*

களிறு பிளிறுதல்: பதிற் *32: 3* ஒப்பு.

*7—13.* களிறு வழையமல் காட்டில் பிளிறுதல்: *"வாழை யோங்கிய வழையமை சிலம்பிற் .. பெருங்களிறு பிளிறும்"* நற் *222: 7-9.*

*14.* கழை திரங்கல்: *"இரும்பணை திரங்க"* பதிற் *43: 12;* *"நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை"* *"கழைதிரங் காரிடை"* குறுந் *331: 1; 396: 7;* *"மூங்கில் விளைமூனை திரங்க"* *"மழைபெயன் மறந்த கழைதிரங் கியவில்"* *"மழைகரக் தொழித்த கழைதிரங் கடுக்கத்து"* அக *241: 6; 245: 5; 347: 10;* *"கழை காய்ந் துலறிய வறங்கூர் நீளிடை"* புற *370: 9;*

*14—5.* அத்தம் பலகழிந்து: *"அத்தம் பல நீந்தி"* ஐந். ஐம் *34.*

*15.* திண்டேர்: பெரும்பாண் *397;* குறுந் *128: 1; 199: 2; 210: 1;* கலி *27: 4; 31: 18; 33: 31; 35: 24; 66: 24-5.*

*16* காண்குவந்திசினே: பதிற் *16: 9* ஒப்பு.

*18.* ஒன்று மொழிதல்: பதிற் *30: 30* ஒப்பு.

*19.* முரசுடைப் பெருஞ்சுமம்: பதிற் *31: 10* ஒப்பு.

அரசுபடக் கடத்தல்: பதிற் *34: 11* ஒப்பு.

*21* இருந்தலை: *"பாறுமயி ரிருந்தலை"* புற *29: 4.*

*24.* ஒருங்குடனியைந்து: *"ஒருங்குட னியைவதாயினும்"* குறுந் *267: 2;*

*25—6.* வாலுளைப் புரவி: *"வாலுளைப் புரவியொடு"* *"பாற்கேழ், வாலுளைப் புரவியொடு"* *"வளைகண் டன்ன வாலுளைப் புரவி"* பெரும்பாண் *27: 319-20; 488;* *"வாலுளைப் பொலிந்த புரவி"* நற் *135: 8.*

*26.* கடும்பரிப் புரவி: *"கடும்பரிப் புரவிக் கைவண் பாரி"* *"கடும்பரிக் குதிரை"* *"நெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி"* *"கடும்பரிப் புரவி நெடுந்தேர்"* அக *78: 22; 148: 7; 187: 6; 352: 12;*

*27.* பனிக்கடல்: பதிற் *45. 22;* முருகு *45;* முல்லை *4;* மதுரைக *629;* பட்டினப் *92;* நற் *67: 8; 91: 3;* பரி *5-1;* கலி *129: 8;* புற *49: 2.*

## தசும்பு துளங்கிருக்கை

(42) இரும்பனம் புடைய லீகை வான்கழல்
மீன்றேர் கோட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
யன்னோர் பெரும நன்னுதல் கணவ
அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ
மைந்துடை நல்லமர்க் கடந்து வலந்தரீஇ
இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கைத்
தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்
ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து
கோடியர் பெருங்கிளை வாழ வாடியல்
உளையவிர் கலிமாப் பொழிந்தவை யெண்ணின்
மன்பதை மருள வரசுபடக் கடந்து
முந்துவினை யெதிர்வரப் பெறுதல் காணியர்
ஒளிறுநிலை யுயர்மருப் பேந்திய களிறூர்ந்து
மான மைந்தரோடு மன்ன ரேத்தநின்
தேரோடு சுற்ற முலகுடன் மூய
மாயிருந் தெண்கடன் மலிதிரைப் பௌவத்து
வெண்டலைக் குரூஉப்பிசி ருடையத்
தண்பல வரூஉம் புணரியற் பலவே.

துறை–செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்–தசும்பு துளங்கிருக்கை (11).

*ப—ரை: 1—8. இரு பனம் புடையல்–பெரிய பனந்தோட்டாலாகிய தாரினையும், ஈகை வான் கழல்–பொன்னாற் செய்யப்பட்ட நன்றாகிய வீரக் கழலினையுமுடைய, மீன் தேர் கொட்பின் பனி கயம் மூழ்கி–இரையின் பொருட்டு மீனை ஆராயும் சுழற்சியால் குளிர்ச்சியையுடைய குளத்திலே மூழ்கி, சிரல் பெயர்ந்தன்ன நெடுவெள் ஊசி–சிரல் எழுகின்ற காலத்து அதன் வாயலகை ஒக்கப் புண்களை இழைகொள்கின்ற காலத்து அப்புண்ணின் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியின், நெடு வசி பரந்த–நெடிய தழும்பு பரந்த, வடு ஆழ் மார்பின்–அப்புண்ணின் வடு அழுந்தின மார்பினையுடைய,*

அம்பு சேர் உடம்பினர் சேர்ந்தோர் அல்லது-அம்பாலாகிய தழும்பு சேர்ந்த உடம்பினராய்த் தம்மோடு வீரமொத்தாரோடல்லது, தும்பை சூடாது மலைந்த மாட்சி-போர் குறித்தார் தம்மோடு தும்பை சூடாமல் மாறுபட்ட மாட்சியையுடைய, அன்னோர் பெரும-அவ்வியல்பினையுடைய வீரர்க்குப் பெருமானே, நல் நுதல் கணவ-நன்றாகிய நெற்றியையுடைய பெருந்தேவிக்குக் கணவ, அண்ணல் யானை அடுபோர் குட்டுவ - தலைமையினையுடைய யானையினையும் பகைவரைக் கொல்லும் போர்த்தொழிலையுமுடைய குட்டுவ,

*9—15.* மைந்துடை நல் அமர் கடந்து - வலியையுடைய நல்ல போரில் பகைவரை வஞ்சியாது எதிர் நின்று கொன்று, வலம் தரீஇ - வெற்றியைத் தந்து, கோடியர் பெரு கிளை வாழ-கூத்தரது பெரிய சுற்றம் வாழும்படி, இஞ்சி வீ விராய பைந்தார் பூட்டி-இஞ்சியிலையும் பூவுமாகப் விரவித் தொடுத்த பசிய மாலையினைக் கழுத்திற் கட்டி, சாந்து புறத்து எறிந்த-சாந்தும் புறத்தே எறிந்த, தசும்பு துளங்கு இருக்கை-தன் களிப்பு மிகுதியால் தசும்பு இருந்து ஆடும்படியான இருக்கைகளிலுள்ள, தீ சேறு விளைந்த மணி நிற மட்டம்-இனிய சுவை முதிர்ந்த நீலமணிபோலும் மட்டத்தினை, ஓம்பா ஈகையின் வண்மகிழ் சுரந்து-பொருளைப் பாதுகாவாது வழங்கும் வண்மை மகிழ்ச்சியால் அளித்து, ஆடு இயல் உளை அவிர் கலி மா பொழிந்தவை எண்ணின் -ஆடும் இயல்பினையுடைய தலையாட்டம் விளங்குகின்ற மனஞ் செருக்கிய குதிரைகளாகிய வழங்கப்பட்ட பொருள்களை எண்ணின்,

*16—23.* மன்பதை மருள அரசுபட கடந்து - மக்கட்பன்மை வியக்கும் படி வேந்தர்பட எதிர்நின்று வென்று, மான மைந்தரொடு மன்னர் ஏத்த-மானத்தையுடைய வீரரோடு மன்னர்கள் புகழ, ஒளிறு நிலை உயர் மருப்பு ஏந்திய களிறு ஊர்ந்து-விளங்கிய நிலையினையுடைய உயர்ந்த கொம்புகளை ஏந்திய யானையின்மேல் இவர்ந்து, முந்து வினை எதிர் வரப்பெறுதல் காணியர் - முற்பட்ட போர்வினையினீங்கித் தம் எதிரே வரப்பெறுதலைக் காணும் பொருட்டு, நின் தேரொடு சுற்றம் உலகு உடன் மூய-நின் தேரும் படைச் சுற்றமும் உயர்ந்தோரும் ஒருங்கு மொய்த்த, மா இரு தெண்கடல் - கரிய பெரிய தெளிந்த கடலாகிய, மலி திரை பௌவத்து-மிக்க திரைகளையுடைய நீர்ப்பரப்பில், வெள் தலை குரூஉ பிசிர் உடைய-வெண்டலைக்கண் நிறமுள்ள பிசிராக உடையும்படி, தண் பல வரூஉம் புணரியில் பல-தண்ணிய பலவாக வரும் திரையினும் பல.

**முடிபு:** பெரும குட்டுவ கணவ கோடியர் பெருங்கிளை வாழ நீ மட்டத்தினைச் சுரந்து மாப்பொழிந்தவை எண்ணின் கடற்பௌவத்து வரும் புணரியிற் பல என்க.

**ஆ—ரை:** *1—8.* புடையலையும் கழலையுமுடைய அன்னோர் (6) என்க. அன்னோர் என்றது சேரன் படைவீரரை. சேரன் அடையாளப் பூ பனந்தோடாகலின் அவன் படைவீரரும் அதனை அணிவாராயினர். "அடங்கிய புடையற்பொலங்கழ லோன்றாள்... நின் மறப்படை கொள்ளுநர்" (பதிற் 31: 31-3)

என வந்தமை காண்க. 'புனம்புடையல்-பனந்தோடாகிய தார் என்பர் புறநானூற்றுரைகாரர் (புற 99: 5 உரை). ஈகை - பொன். வான் கழல் என்பதற்கு அழகிய கழல் என்றுரைப்பினும் அமையும்.

கொட்பு-சுழற்சி. ஈண்டு மீன் உள்ள இடத்தை ஆராய்தற்குச் சிரல் நீர்க்குமேலாக நிலைத்து நின்று பறத்தலை. "அருங்கயம் விரும்பிற் பார்க்கு மணிச்சிறு சிரலை" (சீவக 646) என வருதல் காண்க. கொட்பின் மூழ்கி என இயையும். கயம் – குளம். 'பள்ளம்' புற 137: 5 உரை. 'கயம் மூழ்கிச் சிரல் பெயர்ந் தன்ன என்பது வினையுவமம். அன்ன, உவமவுருபு. நெடிய புண்ணை இழை கொள்ளுதலால் அவ்வூசித் தழும்பு நெடிது பரந்து கிடத்தலின் 'ஊசி, நெடுவசி பரந்த' என்றார். பரந்த வடு என்க. வடுவென்றது அப்புண்ணின் வடு வினை. 'வடு ஆழ் – வடு வழுந்தின' பெரும்பாண் 79 நச். வீரர் போரின்கண் எதிர்நின்று விழுப்புண் பட்டமை தோன்ற 'வடுவாழ் மார்பின்' என்றார். மார்பின் உடம்பினர் என்க. உடம்பினர், முற்றெச்சம். அம்பென்றது அம்பாலாகிய தழும்பினை. அம்புசேர் உடம்பினராய்த் தம்மொடு வீரமொத்தாரொடு தும்பை சூடுவதல்லது போர் குறித்தார் தம்மோடு தும்பை சூடாமல் மாறுபட்ட வீரமாட்சியையுடையராகலின், 'அம்புசேர் உடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது தும்பை சூடா துமலைந்த மாட்சி அன்னோர்' என்றார்.

நன்னுதல் என்றது நன்னுதலினையுடைய பெருந்தேவியை. அண்ணல் யானைக் குட்டுவ அடுபோர்க் குட்டுவ எனத் தனித்தனி கூட்டுக. மைந்து பொருளாக வந்த வேந்தனொடு செய்யும் போராதலின் 'மைந்துடையமர்' என்றும், அறத்தாற் பொருகின்ற போராதலின் 'நல்லமர்' என்றும் கூறினர். "அறத்தின் மண்டிய மறப்போர்" (புற 62: 7) எனப் பிறண்டும் வருதல் காண்க. கடந்து-கொன்று. குட்டுவன் நல்லமரைக் கடத்தலால் வென்றி அவனைச் சார்தலின் 'வலந்தரீஇ' என்றார். வலந்தரீஇ (9) கோடியர் பெருங்கிளை வாழ (14) மட்டம் (11) சுரந்து (12) மாப்பொழிந்தனை எண்ணின் (15) என மாறிக் கூட்டுக.

இஞ்சியிலையும் பூவுமாக விரவித் தொடுத்த மாலையைக் கழுத்திற் கட்டிச் சாந்து புறத்தெறிந்த தசும்பு என்க. மட்டுக் காய்ச்சும்போது அங்ஙனம் செய்தல் மரபுபோலும். மது நுகர்வுழி இடையிடைகறித்து இன்புறுதற் பொருட்டு இஞ்சியும் மோந்து இன்புறுதற்பொருட்டு வீயுமெனின் அவற்றை விரவித் தொடுத்து மாலையாகப் பூட்டாது தனித்தனி வைப்பினும் அமையும். மோந்து கோடற்கு வீயும் சாந்தும் வேண்டுமெனின் மட்டு தீ நாற்றமுடைத்தாம். தீ நாற்றமுடையது தீஞ்சேறு விளைந்ததாகாமையின் அங்ஙனமுரைத்தல் அமையாதென்க.

தசும்பு துளங்கிருக்கையென்றது தன் களிப்பு மிகுதியால் தன்னை உண்டார் உடல்போல அத்தசும்பிருந்து ஆடும்படியான இருப்பென்றவாறு. இச் சிறப்பான் இச்செய்யுளுக்குத் தசும்புதுளங்கிருக்கை என்று பெயராயிற்று.

தசும்பு - மதுவையுடைய இடம். மதுவைக் குடங்களில் வைக்கும் வழக்கம்,

"துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி
யிரும்பா ணொக்கற் கடும்பு புரந்ததூஉம்" புற 224: 2-3.

"தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்" புற 239: 16.

"சேறுபட்ட தசும்பும்" புற 377: 18.

என வருவனவற்றானுமறிக. தசும்பு துளங்குதல் மதுவின் களிப்பு மிகுதியால் என்பது "துளங்கு தசும்பு வாக்கிய......தேறல்" என்பதற்குக் 'களிப்பு மிகுதியால் அசையும் மிடாவினின்றும் வார்த்த..... கட்டெளிவை' என்னும் (மலைபடு 463 நச்) உரையானும் தெளிக. இருக்கை என்றது கோக்காலி எனக் கொள்ளினும் அமையும்.

"நிரம்பகல் பறியா வேறு வேணி
நிறைந்து நொடிதிராத் தசும்பின்" பதிற் 43: 33-4.

என வருதல் காண்க. சேறு-சுவை. "தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற" நெடுநல் 26. தீஞ்சேறு-இனிய செறிவுமாம். "தீஞ்செறி தசும்பு" – 'இனிய செறிவையுடைத்தாகிய மதுவையுடைய குடங்கள்' எனப் புறநானூற்றுரையாசிரியர் உரைத்தல் காண்க. (புற 239: 16 உரை). சேறு விளைந்த மட்டம் மணிநிற மட்டம் எனத் தனித்தனி இயைக்க. மட்டம்-கள். மட்டு என்னும் கள்ளின் பெயர் மட்டம் என அம்முச்சாரியை பெற்று வந்தது. "மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன" (குறுந் 193: 1) எனப் பிறண்டும் வருதல் காண்க. மட்டம் நீலமணியின் நிறமுடைமையால் 'மணிநிற மட்டம்' என்றார். மட்டத்தை ஓம்பாவீகையின் வண்மகிழ் சுரந்து என்க. ஓம்பாவீகை – 'பொருளைப் பாதுகாவாது வழங்கும் வண்மை' புற 8: 4 உரை. 'சீர் தூக்காது கொடுக்கும் கொடை' பு. வெ. மா 164 உரை. குட்டுவன் ஓம்பாவீகையுடையான் என்பது.

"பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற
அரிய வென்னு தோம்பாது வீசி" பதிற் 44: 3-4.

"ஆண்டுநீர்ப் பெற்ற தார மீண்டிவர்
கொள்ளாப் பாடற் கெளிதி னீயும்
கல்லா வாய்மையன்" பதிற் 48: 5-7.

என வருவனவற்றானுமறிக. ஈகையின், இன் தவிர்வழி வந்தது. இனி, 'மணி
நிற மட்டம், ஓம்பாவீகையின் வண்மகிழ் சுரந்து' என்பதற்கு மணிநிற மட்
டத்தினையும் ஓம்பாவீகையால் வளவிய மகிழ்ச்சியினையும் சுரந்து என்றுரைப்
பினுமமையும். 'வண்மகிழ் மட்டத்தை ஓம்பாவீகையிற் சுரந்தென மாறிக் கூட்
டுக. இனி, மணிநிற மட்டத்தினையும் ஓம்பாவீகையினது வளவிய மகிழ்ச்சி
யினையும் சுரந்தென இரண்டாக உரைத்தலுமாம்' என்பர் பழையவுரைகா
ரர். மட்டம் வண்மகிழ் சுரந்து கோடியர் பெருங்கிளை வாழமாப்பொழிந்
தவை யெண்ணின் என்றதனாற் சுரந்தது கோடியர் கிளைக்கு என்க. "வயிரி
யர் உண்டெனத் தவாக் கள்ளின், வண்கை வேந்தே" (பதிற் 43: 34-6) என
மேல் வருதலுங் காண்க சுரந்து என்பதற்கு மறவர்க்கும் களம்பாடும் பொரு
நர் பாணர் முதலியோருக்கும் சுரந்து எனக் கோடல் பொருந்தாதென்க.

சுரந்தது கோடியர் கிளைக்கு என்பதே பழையவுரைகாரர் கருத்துமாதல், 'குட்டுவ கோடியர் கிளை வாழ நீ சுரந்து மாப்பொழிந்தவை எண்ணின்' என அவர் உரைத்தலான் அறியலாம். கோடியர்—கூத்தர். கிளை—சுற்றம். கோடியர் பெருங்கிளையுடையார் என்பது, "கோடியர் தலைவ......நின்னிரும்பே ரொக்க லொடு" (பொருந 57-61) "இரும்பே ரொக்கற் கோடியர்" (அக 301: 8) என வருவனவற்றானுமறிக. 'கிளை வாழ' என்றார் கூத்தர்ச் சுற்றம் வறுமை மிக்கதாகலின். இதனைக் "கோடியர் தலைவ......ஆடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு" (பொருந 57-61) என்பதனானுமறிக. வாழப் பொழிந்தவை என இயையும். குதிரை செல்லுந்தோறும் உளை ஆடுதலின் 'ஆடியல் உளை' என்றார். "அலங்குளைப் புரவி" (புற 2: 13) எனப் பிறரும் கூறுதல் காண்க. உளை முதலியன அணிந்த மனஞ்செருக்கிய போர்க்குதிரைகளாதல் தோன்ற 'உளையவிர் கலிமா' என்றார். இவை அமர்க்கடந்து (9) பெற்றனவாகும். சேரன் போரில் வென்றுபெற்ற குதிரைகளை இரவலர்க்கீதல்,

> "அகவலன் பெறுக மாவே யென்றும்
> இகல்வினை மேவலை யாகலின்" பதிற் 43: 28-9.

என்பதனானுமறிக. மாப்பொழிந்தவை என *வானத்தின் றொழிலாற் கூறினார் சேரன் குதிரைகளை மிகுதியாகக் கொடுத்தலின். மிகுதியாகக் கொடுத்தலைப் பொழிதல் எனல்,

> "இதழ்வனப் புற்ற தோற்றமொ டுயர்ந்த
> மழையினும் பெரும்பயம் பொழிதி" பதிற் 64: 17-8.

எனப் பிறர் கூறுதலானுமறிக. எண்ணல்—நினைத்தல். கணக்கிடுதலுமாம்.

அரசு என்றது கடலை அரணாகக்கொண்டு குறும்பு செய்த பகையரசர்களை. குட்டுவன் பகைவர்க்கு அரணாகிய கடல்வலியை அழித்து அவரை வென்ற பெருவென்றியைக் கண்டு மன்பதை வியத்தலின் 'மன்பதை மருள வரசு படக் கடந்து' என்றார். மன்பதை என்றது சேரன் படையை. "மன்பதை நிரப்பி, வென்றி யாடிய" (பதிற் 40: 11-2) என்றார் பிறரும். பகைவர் நாட்டு மக்களுமாம். அரசுபடக் கடந்து (16) மன்ன ரேத்தக் (19) களிறூர்ந்து (18) எதிர்வரப் பெறுதல் காணியர் (17) என மாறிக் கூட்டுக. 'மான' என்பதனை மன்னர் என்பதனோடுங் கூட்டுக. ஏத்த என்றது கடலுழந்து பெற்ற வென்றியைப் புகழ என்றவாறு. ஒளிறுநிலை மருப்பு எனக் கூட்டுக. "ஒளிறு மருப்பிற் களிறு" புற (15: 9) எனப் பிறரும் கூறுதல் காண்க. இனி, ஒளிறு நிலைக் களிறு எனக்கூட்டி மின்னவிர் ஓடை முதலியவற்றால் விளங் கும் நிலையையுடைய களிறு என்றுரைப்பினுமமையும். 'உயர்மருப் பேந்திய களிறு' என்றது சேரன் பட்டத்து யானையை. பகை வென்ற குட்டுவன் களிற் றில் இவர்ந்து செல்லுதலின் 'களிறூர்ந்து' என்றார். வேந்தர் பகைவரை வென்று களிறூர்தல்,

---

*வானம் பொழிதல்: "பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென" நெடு நல் 2; பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்" சிலப் 23 கட்டுரை 9.

"போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே" பதிற் 11: 16-20.

என்பதனானுமறிக. காணியர் (17) மூய (20) என்க. தேரும் சுற்றமும் உலகும் வினைமுடித்து வரும் சேரனை எதிர்கொள்ளக் கடற்கரைக்கண் நெருங்க மொய்த்தலின் 'மூய' என்றார். சுற்றம் என்றது படையை. "வம்புகளை வறியாச் சுற்றமொடு" (பதிற் 19: 9) என்றார் பிறரும். உலகு என்றது சான்றோரை. மூய கடற் பௌவத்து என்க. மாயிருந் தெண்கடல் என்றது தொன்று முதிர் பௌவமாகிய குட கடலை. மலிதிரை–மிக்க திரை. 'மலிதிரைக் கடன் மண்டு புனலின்' புற 237: 17-8. வெண்டலைப் (22) புணரி (23) எனக் கூட்டினு மமையும் "வெண்டலைப் புணரிக் குடகடல்" (புற 2: 10) எனப் பிறரும் கூறுதல் காண்க. குரூஉ – நிறம். பிசிருடையவென்றது பிசிராகவுடைய வென்றவாறு. பிசிருடைய வரூஉம் புணரி என்றதனாற் கடலழுவம் கடுங்காற்றுடைமை கூறினர். "வரைமருள் புணரி வான்பிசிருடைய வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல் ....மாக்கடல்" (பதிற் 11: 1-3) எனப் பிறரும் கூறுதல் காண்க. மாப்பொழிந்தவை எண்ணின் கடற் பௌவத்து பலவாக வரும் திரையினும் மிகப்பல என்பார் 'பலவரூஉம் புணரியிற் பலவே' என்றார். மிகுதிக்குத் திரையினை உவமை கூறுதல்

"அரூஅ லியரோ தூதே......
................ ........... ........
முழங்கிரு முந்நீர்த் திரையினும் பலவே" அக 338: 15-21.

என்பதனானுமறிக. வெண்டலையோடு உயர்ந்தெழுந்து சுருண்டு நிரையாக வரும் உருவத்தினானும் மிகுதியினாலும் திரைகள் குதிரையை ஒத்தன.

"உடை திரை மா" சீவக 2223.

"குதிரைத் திரள் தரங்கத்திற்கும்" திருக்கோவை 187 பேர்.

"பொலங்கொள் தார்ப்புரவி .....தொடுகடற் றிரையிற் செல்ல" கம்ப. [எழுச்சி 76.

"கனைகடற் றிரை நிரையென......கதழ்பரி கடுகவே" கலிங் 351.

என வருவன ஈண்டறியற்பாலன.

இதனாற் சொல்லியது அவன் கொடைச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் உடன் கூறியவாறாயிற்று.

## பழையவுரை

2—3. கயம் மூழ்கிச் சிரல் பெயர்ந்தன்ன நெடுவெள்ளூசியென்றது கயத்திலே மூழ்கிச் சிரல் எழுகின்ற காலத்து அதன் வாயலகை ஒக்கப் புண்களை இழைகொள்கின்ற காலத்து அப்புண்ணின் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியென்றவாறு. 4. நெடுவசியென்றது அவ்வூசித் தழும்பினை. வடு

வென்றது அப்புண்ணின் வடுவினை. இனி நெடுவெள்ளூசியை நெட்டை என்பதோர் கருவியென்பாருமுளர். 5. அம்பென்றது அம்பாலாகிய தழும்பினை. 5-6. அம்புசேருடம்பினர்ச் சேர்ந்தோரல்லது தும்பை சூடாது மலைந்த மாட்சியென்றது அரசன் வீரரில் அம்புசேருடம்பினராய்த் தம்மோடு வீரமொத்தாரோடல்லாது போர் குறித்தார் தம்மோடு தும்பை சூடாமல் மாறுபட்ட மாட்சியையுடைய வென்றவாறு. 10-11. இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச் சாந்து புறத்து எறிந்தவென்றது மது நுகர்வுழி இடையிடைக் கறித்து இன்புறுதற்பொருட்டு இஞ்சியும் மோந்து இன்புறுதற்பொருட்டுப் பூவுமாக விரவித் தொடுத்த மாலையினைப் பூட்டி அவ்வாறு பயன்கோடற்குச் சாந்தும் புறத்தெறிந்த வென்றவாறு. 11. தசும்பு துளங்கிருக்கையென்றது தன் களிப்பு மிகுதியால் தன்னையுண்டார் உடல்போல அத்தசும்பிருந்து ஆடும்படியான இருப்பென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு **தசும்புதுளங்கிருக்கை** என்று பெயராயிற்று. 12. சேறு-சுவை. 12-3. வண்மகிழ் மட்டத்தை ஓம்பாவீகையிற் சுரந்தென மாறிக் கூட்டுக. இனி, மணிநிற மட்டத்தினையும் ஓம்பாவீகையினது வளவிய மகிழ்ச்சியினையும் சுரந்தென இரண்டாக வுரைத்தலுமாம். மன்னரேத்தக் (19) களிறூர்ந்து (18) என முடித்து அதனைக் களிறூரவெனத் திரித்து மூய (20) என்னும் வினையொடு முடிக்க.

பெரும, கணவ (7) குட்டுவ (8) கோடியர் கிளை வாழ நீ (14 சுரந்து (13) மாப்பொழிந்தவை யெண்ணின் (15) புணரியிற் பல (23) என **வினைமுடிபு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் **கொடைச்சிறப்பும் வென்றிச்சிறப்பும்** உடன் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

**1. புடையலும் கழலும்:** பதிற் 31: 31 ஒப்பு.

**2. பனிக்கயம்:** "பனிக்கயத் தன்ன நீணகர் நின்று" **புற** 378: 7; "தெண்ணீர்ப் பனிக்கயத்து" **சீவக** 1968.

2—3. "நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து, புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச் சிரல்" **சிறுபாண்** 180-1; "புனலாடு மகளிரிட்ட பொலங்குழை, யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தென" **பெரும்பாண்** 312-3

4. "மார்பி, னெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென" **மலைபடு** 302-3.

**வடுவாழ்:** "வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்" **முருகு** 78; "புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து" "தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி" "கொடுவாழ் கதுவிய வடுவாழ் நோன்கை" **பெரும்பாண்** 79; 169; 471; "கோணந் தின்ற வடுவாழ் முகத்த" **மதுரைக்** 592.

4—6. "மண்டமருள், வாளகப் பட்டானை யொவ்வா னெனப் பெயருமீளி மறவனும் போன்ம்" **கலி** 104: 48-50.

7. **அன்னோர் பெரும:** "கொடுமர மறவர் பெரும" **புற** 43: 11.

**நன்னுதல் கணவ:** பதிற் *14: 15* ஒப்பு.

*8* **அண்ணல் யானை:** சிறுபாண் *200;* மதுரைக் *348;* குறிஞ்சி *171;* நற் *194: 5; 273: 6;* குறுந் *260. 6; 343: 2;* ஐங் *466: 2;* அக *61: 9; 115: 13; 208: 4; 251: 15;* புற *93: 13; 126: 20; 130: 5; 287: 5; 326: 14;* பு. வெ. மா. *131.*

**அடுபோர்:** பதிற் *32: 9* ஒப்பு.

**யானை அடுபோர்க் குட்டுவ:** *''அண்ணல் யானை யடுபோர் வேந்தர்''* மதுரைக் *348; ''அண்ணல் யானை யடுபோர்ச் சோழர்'' ''அண்ணல் யானை யடுபோர் வேந்தர்''* அக *96: 13; 373: 16;*

**நல்லமர்:** அக *346: 22;* புற *16 18; 93: 9;* சிலப் *27:29.*

**நல்லமர்க் கடத்தல்:** *''நல்லமர்க் கடந்தநின் செல்லுறழ் தடக்கை'' ''உடைநிலை நல்லமர் கடந்து''* பதிற் *52: 10; 70 9; ''நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்'' ''உயிர் திறம் பெயர நல்லமர்க் கடந்த'' ''ஒளிறுவாள் நல்லமர்க் கடந்த ஞான்றை''* அக *67: 8; 77: 9: 96: 16; ''நல்லமர் கடந்த வெளிதுமன்''* புற *125: 15.*

*11.* **துளங்கிருக்கை:** *''துறை முற்றிய துளங்கிருக்கை''* மதுரைக் *85.*

*12.* **மட்டம்:** *''மட்டப் புகாவிற் குட்டுவ ரேறே''* பதிற் *90: 26.*

*11—3.* **தசும்பின் மதுவை இரவலர்க் கீதல்:** *''துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி, யிரும்பா ணொக்கற் கடும்பு புரந்தஈதூஉம்''* புற *224: 2-3*

*13.* **ஓம்பா ஈகை** *''ஓம்பா ஈகைக், கடந்தடு தானைச் சேரலாதனை'' ''ஓம்பா ஈகை மாவே ளெவ்வி'' ''உள்ளியது சுரக்கு மோம்பா வீகை''* புற *8: 4-5; 24: 18; 323: 4. ''ஓம்பா வீகையும்''* பு. வெ. மா *189.*

*15.* **உளையவிர் மா:** பதிற் *20: 15* ஒப்பு.

**கலிமா:** பதிற் *38: 7* ஒப்பு.

*16.* **அரசுபடக் கடத்தல்:** பதிற் *34: 11* ஒப்பு.

*18.* *''உயர் மருப்பிற்......களிறு''* மதுரைக் *178: 9: ''ஒளிறேந்து மருப்பிற் களிறு''* நற் *284: 9; ''ஒளிறேந்து மருப்பின் களிறு''* அக *112: 6; ''உயர்ந் தேந்து மருப்பிற் கொல்களிறு'' ''ஒளிறுமருப் பேந்திய செம்மற் களிறு'' ''ஒளிறேந்து மருப்பினுங் களிறும்''* புற *159: 22; 205: 13-4; 301: 6.*

**களிறூர்தல்:** *''ஓங்கியல களிறூர்ந் தனன்''* புற *239: 15.*

*20.* **மூய:** *''தாமரை மூய தமனியக் குடனீர்''* பெருங் *(2) 5 104.*

*21.* **தெண்கடல்:** பதிற் *67: 4; 87: 3; 88: 3;* நற் *74: 9; 303: 8; 356:1; 363: 2; 378: 2;* அக *340: 24.*

**திரைப்பௌவம்:** *''படுதிரைப் பௌவத்து'' ''தெண்டிரைப் பௌவத்து''* மணி *7: 33.* பெருங் *(2) 20: 3; (3) 3: 72; ''திரையிநம் பௌவத்து''*

## ஏறாவேணி

(43) கவரி முச்சிக் கார்விரி கூந்தல்
ஊசன் மேவற் சேயிழை மகளிர்
உரல்போற் பெருங்கா லிலங்குவாண் மருப்பிற்
பெருங்கை மதமாப் புகுதரி னவற்றுள்
விருந்தின் வீழ்பிடி யெண்ணுமுறை பெறாஅக்
கடவு ளிலைய கல்லோங்கு நெடுவரை
வடதிசை யெல்லை யிமய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ
இரும்பணை திரங்கப் பெரும்பெய லொளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினந் திகழ
அருவி யற்ற பெருவறற் காலையும்
அருஞ்செலற் பேராற் றிருங்கரை யுடைத்துக்
கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைய
வரைவி லதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்
தார்கலி வானந் தளிசொரிந் தாஅங்
குறுவ ரார வோம்பா துண்டு
நகைவ ரார நன்கலஞ் சிதறி
ஆடுசிறை யறுத்த நரம்புசே ரின்குரற்
பாடு விறலியர் பல்பிடி பெறுக
துய்வீ வாகை நுண்கொடி யுழிஞை
வென்றி மேவ லுருகெழு சிறப்பிற்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகுசிறை புக்குக்
கண்டிர ணுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே யென்றும்
இகல்வினை மேவலை யாகலிற் பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்குகொளை முழவிற்
றொலையாக் கற்பநின் னிலைகண் டிகுமே
நிணஞ்சுடு புகையொடு கனல்சினந் தவிராது
நிரம்பகல் பறியா வேறா வேணி

நிறைந்து நெடிதிராத் தசும்பின் வயிரியர்
உண்டெனத் தவாக் கள்ளின்
வண்கை வேந்தேநின் கலிமகி ழானே.

துறை—இயன்மொழி வாழ்த்து.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்—ஏருவேணி (33).

ப—ரை: *1—11.* கவரி முச்சி கார் விரி கூந்தல் – கவரி மயிர்போலும் கொண்டைமுடியாகிய கருமை விரிந்த கூந்தலினையும், ஊசல் மேவல்–ஊசலை விரும்பி ஆடுதலையும், சேயிழை மகளிர் - செய்ய அணிகலங்களையுமுடைய மகளிர், உரல் போல் பெரு கால் - உரல்போன்ற பெரிய காலையும், இலங்கு வாள் மருப்பின்–விளங்குகின்ற ஒளியையுடைய கொம்பையும், பெரு கை– பெரிய துதிக்கையையுமுடைய, மதமா புகுதரின் – மதத்தையுடைய களிற்று யானைகள் தாம் இருக்கும் இடத்தே புகுந்தால் அவற்றில்–அவற்றினிடையே, விருந்தின் வீழ் பிடி எண்ணுமுறை பெறுஅ - விருந்தாக விரும்புகின்ற பிடிகளை எண்ணுகின்ற முறைகளிற் பெறாத, கடவுள் நிலைய – இறைவன் நிலைபெறுதலையுடைய, கல் ஓங்கு நெடுவரை - கற்கள் ஓங்கிய உயர்ந்த மலையாகிய, வட திசை இமயம் – வடதிசைக்கணுள்ள இமயம், தென்னம் குமரியொடு எல்லையாக - தெற்கின்கணுள்ள குமரியுடன் எல்லையாகவுள்ள, ஆயிடை அரசர் – அவ்விடத்துள்ள அரசரின், முரசுடை பெருசமம் ததைய ஆர்ப்பு எழ - முரசு முழங்கும் பெரிய போர் சிதைதலால் வெற்றியாரவாரம் உண்டாக, சொல் பல நாட்டை தொல் கவின் அழித்த–முன்னே சொல்லப்பட்ட பல நாட்டையும் பழைய அழகு அழியும்படி அழித்த, போர் அடு தானை-மாற்றுரைப் போரின்கட் கொல்லும் தானையினையும், பொலம் தார் குட்டுவ– பொன்னாலியன்ற மாலையினையுமுடைய குட்டுவ,

12—31. இரு பனை திரங்க பெரு பெயல் ஒளிப்ப – பெரிய மூங்கில்கள் உலரும் வண்ணம் பெரிய மழை பெய்யாது ஒளித்தலானும், குன்று வறம் கூர சுடர் சினம் திகழ – குன்றுகள் வறம் கூரும் வண்ணம் ஞாயிறு சினம் திகழ்கையானும், அருவி அற்ற பெரு வறல் காலையும் – அருவிகள் நீரின்றி அற்றுப்போன பெரிய வற்கடகாலத்தும், அருசெலல் பேராற்று இருகரை உடைத்து– அரிய செலவினையுடைய பேராற்றின் பெரிய கரையை நெயிற்று இந்நீர் உடைக்க, கடிஏர் பூட்டுநர் கடுக்கை மலைய–புதிய ஏரைப் பூட்டி உழும் உழவர் கொன்றைப் பூவைச் சூட, வரைவு இல் அதிர் சிலை முழங்கி–எல்லை இல்லாமல் விசும்பு அதிர்தற்குக்காரணமான சிலைத்தலொடு முழங்கி, பெயல் சிறந்து-பெய்தல் மிக்கு, ஆர்கலி வானம் தளி சொரிந்தாங்கு–கடலினின்றெழுந்த மேகம் துளியைச் சொரிந்தாற்போல, உறுவர் ஆர ஓம்பாது உண்டு–தனக்குத் துணையான பெரியோர் நிரம்ப பெறும்படி பொருளைப் பாதுகாவாது வழங்கி அவரோடு சேர்ந்து உண்டு, நகைவர் ஆர நன் கலம் சிதறி - மகிழ்ச்சிக்குக் காரணமான மகளிர் முதலியோர் நிரம்பப் பெறும்படி நல்ல அணிகலங்களைக் கொடுத்து, ஆடு சிறை அறுத்த நரம்பு சேர் இன் குரல் - கின்னரமென்னும் புள்ளின் இசை

யெழுகின்ற சிறகினைத் தோற்பித்த யாழ்நரம்பின் இசையோடு ஒன்றுபட்டுச் சேர்ந்த, இனிய குரலினையுடைய, பாடும் விறலியர் பல்பிடி பெறுக - பாடுதலை யுடைய விறலியர் பலபிடிகளைப் பெறுக என்றும், துய் வீ வாகை நுண் கொடி உழிஞை - துய்யையுடைய பூக்களையுடைய வாகையை முடிவிலேயுடைய நுண் ணிய கொடியாகிய உழிஞையையும், வென்றி வேவல்-வென்றியை விரும்புதலை யும், உருகெழு சிறப்பின் - உட்குப் பொருந்தும் தலைமையினையும், கொண்டி மள்ளர் கொல் களிறு பெறுக - பகைப் புலத்துக் கொள்ளும் கொள்ளையையு முடைய வீரர் கொல்லும் களிற்றைப் பெறுக என்றும், கண்திரள் நுண் தோல் கொண்டு-கணுக்கள் திரண்ட நுண்ணிய மூங்கிற் கோலைக் கையிற் கொண்டு, மன்றம் படர்ந்து-ஊரிடத்து மன்றிலே சென்று, மறுகு சிறைபுக்கு-தெருவின் இருபுறத்துமுள்ள வீட்டு வரிசையின் பக்கமாகச் சென்று பாடும், களம் வாழ்த் தும் அகவலன் மா பெறுக - போர்க்களத்தை வாழ்த்தும் பாடும் பாணன் குதிரைகளைப் பெறுக என்றும், இகல்வினை மேவலையாகலின்-போர் வினையை விரும்பிப் புரிதலையுடையை; ஆதலால் பகைவரும் தாங்காது புகழ்ந்த - பகை வர்களும் மனம் அடங்காமற் புகழ்ந்த. தூங்கு கொளை முழுவின் - மந்த கதியை யுடைய ஆடற்கேற்ற முழவினையுடைய, தொலையா கற்ப-கெடாத கல்வியை யுடையாய்,

31—6. கனல் சினம் தவிராது நிணம் சுடு புகையொடு-நெருப்பின் வெம் மை குறைதலறியாது நிணத்தைச் சுடுதலால் உண்டாகின்ற புகையோடு, நிரம்பு அகல்பு அறியா - நிரம்புதலையும் அகலுதலையும் அறியாத, ஏறு ஏணி - கோக் காலியினிடத்தே, நிறைந்து நெடிது இரா தசும்பின் - உண்பார்க்கு வார்த்த லால் நிறைந்து நெடும்பொழுது இராத குடங்களில் உள்ள, வயிரியர் உண் டெனத் தவா கள்ளின் - கூத்தர் உண்டனராகக் குறையாத கள்ளின், வண்கை வேந்தே - வளவிய கையினையுடைய வேந்தே, நின்கலி மகிழான் - நின் ஆர வாரத்தையுடைய ஓலக்கத்தின்கண்ணே, நின்நிலை கண்டிகும் - நின் செல்வத் தின் பெருமை நிலைகளையெல்லாம் கண்டேம்.

முடிபு: குட்டுவ, தொலையாக் கற்ப, தசும்பிற் கள்ளின் வேந்தே நின் கலிமகிழின்கண்ணே நின்நிலை கண்டேம் என்க.

ஆ—ரை. 1—11. கூந்தலையும் ஊசன்மேவலையுமுடைய சேயிழை மக ளிர் என்க. கவரிபோலும் கூந்தலெனக் கூட்டுக. முச்சி - கொண்டை முடி. 'கொண்டை' எனவும் (புருகு 26 உரை) 'மயிர்முடி' எனவும் (மலைபடு 182 உரைப்பர் நச்சினார்க்கினியர். முச்சியாகிய கூந்தல் என்க. இனி முச்சியினையும் கூந்தலினையுமுடையவென இரண்டாக உரைத்தலுமாம். முற்றும் கருமை விரிந்த கூந்தல் என்பார் 'கார்விரி கூந்தல்' என்றார். மேவல் - விரும்புதல்; பொருந்துதலுமாம். சேயிழை - 'சிவந்த அணி' புற 105: 1 உரை. 'செய்ய ஆபரணம்' புற 198. 3 உரை. மகளிர் என்றது இமயமலைச் சாரலிலுள்ள மகளிரை.

காலினையும் மருப்பினையும் கையினையுமுடைய மதமா என்க. "பெருங் கைத் திண்கோட்டுக் குழைசெவிச் செம்முகமா" (திருக்கோவை 313)எனப் பிறண்டும் வருதல் காண்க.

மலையுறழ் யானையின் கால் உரல்போறலின் ''உரல்போற் பெருங்கால்'' என்றார். ''கறையடிக், குன்றுறழ் யானை'' (பெரும்பாண் 351-2) எனப் பிறரும் கூறுதல் காண்க. இது மெய்யுவமம். விளங்குகின்ற ஒளியையுடைய மருப்பாதலின் 'இலங்குவாண் மருப்பின்'' என்றார் S 'இலங்கு வான் மருப்பின்' என்பது பாடமாயின் விளங்குகின்ற வெள்ளிய மருப்பினையுடையவென வுரைக்க. நீண்டு பருத்த துதிக்கையாதலின் 'பெருங்கை' என்றார். ''இரும்பனை யன்ன பெருங்கை யானை'' (புற 340: 7) எனப் பிறரும் கூறுதல் காண்க. மதமா என்றது களிற்று யானையை. 'புகுதரின்' என்றார். புகும் அருமை நோக்கி. மதமாக்களினிடையே பிடிகளும் புகுதலின்'மதமாப் புகுதரின் அவற்றுள்...வீழ் பிடி எண்ணுமுறை பெறாஅ' என்றார்.

"நாறுயிர் மடப்பிடி தழீஇ வேறுநாட்டு
விழவுப்படர் மன்னரின் முழவெடுத் துயரிக்
களிறதர்ப் படுத்த கல்லுயர் கவாஅன்" அக 189 4-6.

எனப் பிறாண்டும் வருதல் காண்க. விருந்தின் வீழ்பிடி - எண்ணுகின்ற மகளிர்க்கு விருந்தாகி அம்மகளிர் விரும்பிய பிடி. இனிக் காட்டியானைக்கு விருந்தாகிய அவ்வியானைகள் விரும்பும் பார்வைப் பிடியென்பாருமுளர். மகளிர் பிடியினையே எண்ணியது தம் நடையோடொத்த நடையுடைமை பற்றியாகலின் விருந்தின் வீழ்தல் அம்மகளிரது தொழிலேயென்க. மகளிர் பிடியை ஒத்த நடையையுடையராதல் "பிடிமரு ணடையினார்தம் பெருங்கவின் குழையப் புல்லி" (சீவக 2719) என்பதனாலுமறிக. மகளிர் என்னும் எழுவாய் பெறாஅ என்னும் பயனிலை கொண்டது. பிடியது எண்ணென்க. எண்ணு முறையாவது சங்கு பற்ப முன்னிட்ட தொகை. பெறாஅ 5) நெடுவரை, கடவுணிலைய நெடுவரை, கல்லோங்கு நெடுவரை எனத் தனித்தனி கூட்டுக.

இறைவன் வீற்றிருக்கப்பெற்ற கயிலைமலையையுடைய இமயமாதலின், 'கடவு ணிலைய இமயம்' என்றார்.

"இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக" (38: 1-2)

எனக் கலித்தொகையினும் வருதல் காண்க. தெய்வங்களின் நிலைகளையுடைய இமயம் எனினுமமையும். சிகரங்களுயர்ந்த நெடுவரையாதலின் 'கல்லுயர் நெடுவரை' யென்றார். "இமயக் கோடுயர்ந் தன்ன" (புற 214: 11-2)எனப் பிறரும் கூறுதல் காண்க. மிகவுயர்ந்த மலையாதலின் 'நெடுவரை' என்றார். "பனிபடு நெடுவரை" என்றார் புறத்தினும். (புற 6: 1). நெடுவரை என்பதற்குப் பெருமலை என்றுரைப்பினுமமையும்.

கல்லோங்கு நெடுவரையாகிய (6) வடதிசை இமயம் (7) தென்னங் குமரியொடு (8) எல்லையாக (7) என மாறிக் கூட்டுக

"ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை" பதிற் 11: 23-4.

S ''யானை இலங்குவான். மருப்பின்'' புற 287: 5-6.

"தென்குமரி வடபெருங்கற்
குணகுடகட லாவெல்லை'' புற 17: 1-2.

என வருவன காண்க. குமரியொடு என்னும் ஓடு, எண்ணொடு, ஆக உள்ள என ஒரு பெயரெச்சக் குறிப்பு வருவித்து முடித்து அதனை ஆயிடை என்பதனோடு முடிக்க. ஆயிடை யென்றது இமயம் குமரியாகிய அவற்றுக்கு இடை என்றவாறு. அவ்வென்னும் வகரவீற்றுப் பன்மைச் சுட்டுப்பெயர் ஆயிடை யென முடிந்தது. அரசர் சமம் என இயையும். முரசு முழங்கச் செய்கின்ற போராதலின் 'முரசுடைச் சமம்' என்றும், வலிமிக்கார் செய்யும் போராதலின் 'பெருஞ் சமம்' என்றும் கூறினர். பகைவர் நாட்டை அழித்து ஆரவாரம் எழ அவர்போரைச் சிதைத்து வென்றி கோடலின் 'சமம் ததைய ஆர்ப்பெழ...... நாட்டைக் கவிழ்த்த' என்றார். ''நாடுகெட வெரிபரப்பி......அரசுபட வமருழக்கி,முரசுகொண்டு களம்வேட்ட, அடுதிறலுயர் புகழ்வேந்தே"(மதுரைக் 126 30) என வருதல் காண்க. சொல்பல நாடு என்பதற்குச் சான்றோரால் நல்லனவென்று புகழ்ந்து சொல்லப்பட்ட பல நாடு எனினுமமையும். 'ஆயிடை அரசர் நாடெல்லாவற்றையும்' என்பர் பழையவுரைகாரர். பிறரால் அழிக்கப்படாமையின் நாட்டின் தொன்றுதொட்டு வருகின்ற பழைய அழகு, குட்டுவன் சென்றிறுத்துச் செய்யும் போர்ச்செயல்களான் அழிந்தமையின். 'நாட்டைத் தொல்கவி னழித்த குட்டுவ' என்றார். இதனால் நாட்டைக் கவினழியாது காத்த பகைவர் வலியும், அப் பகைவர் நாட்டை அழித்த குட்டுவன் பெருவலியும் நன்கு அறியப்படும். நாட்டைக் கவினழித்தமை எரியூட்டல் முதலிய செயல்களான் என்பது,

''அழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்" பதிற் 15: 7-8.

என்பதனானுமறியப்படும். மாற்றாரைப் போரின்கட் கொல்லும் வலிய படையுடன் சென்று குட்டுவன் நாட்டைக் கவினழித்தமையின் 'நாட்டைத் தொல் கவி னழித்த போரடுதானைக் குட்டுவ' என்றார். குட்டுவன் பொன்னாலியன்ற மாலையை மார்பின்கண் அணிந்தமையின் 'பொலந்தார்க் குட்டுவ' என்றார். ''பொலந்தார் மார்பின் நெடியோன்'' (மதுரைக் 61) எனப் பிறாண்டும் வருதல் காண்க.

12—31. பேராற்றின் இருங்கரை உடைக்க ஏர் பூட்டுநர் கடுக்கை மலைய வானந் தளிசொரிந்தாங்கு நகைவரார நன்கலஞ் சிதறி விறலியர் பிடி பெறுக என்றும் மள்ளர் களிறு பெறுக என்றும் அகவலன் மாப்பெறுக என்றும் இகல்வினை மேவலையாகலின் பகைவரும் தாங்காது புகழ்ந்த கற்ப என்க.

பெரும்பெயல் ஒழித்தலாற் குன்றிலுள்ள பெரிய மூங்கில்கள் வாடுதலின் 'இரும்பணை திரங்கப் பெரும்பெய லொளிப்ப' என்றார். "மழைகரந் தொழித்த கழைதிரங் கடுக்கத்து''(அக347: 10) என வருதல் காண். பணை—மூங்கில். திரங்கல்—உலர்தல். ஞாயிறு வெம்மை மிக்கு விளங்குதலால் அருவிகளற்றும் மரங்கள் முதலியன வாடியும் குன்றுகள் வறுமை மிக்குத் தோன்றலின் ''குன்று

வறங் கூரச் சுடர்சினந் திகழ" என்றார். குன்று—சிறுமலை. "குன்றும் மலையும் பலபின் னொழிய" புற 208: 1. சுடர்—ஞாயிறு. சினம் என்றது வெம்மையை. "கதிர்சினந் தணிந்த கையறு மாலையும்" (குறுந் 387: 2) என்றார் பிறரும். பெயல் ஒளித்தலானும் சுடர்சினம் திகழ்கையானும் அருவி அற்ற என்க. அருவிகள் அற்றுப்போன பெரிய வரட்சிக் காலத்தும் பேராறு நீரறாது செல்லுதலின் 'அருஞ்செலற் பேராறு' என்றார். பேராற்றின் இவ்வியல்பினை,

"அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை யிழிதரும் நனந்தலைப் பேரியாற்று" பதிற் 28: 9–10.

எனப் பிறர் கூறுதலானுமறிக. யாறென்பது ஆறெனா மருவிற்று. "ஆறு கிடந் தன்ன வகனெடுந் தெருவில்" (நெடுநல் 30) எனப் பிறாண்டும் வருதல் காண்க. 'இருங்கரை' என்றார் மழை பெய்தலாற் பேராற்றில் நிவந்துசெல்லும் நீரைத் தாங்கும் பெரிய கரையாதலின். இந் நீரென ஒருபெயர் வருவித்து உடைக்கவெனத் திரிக்க. 'கரையை யுடைத்துத் தளிசொரிந்தாங்கென உடைத்தற்றொழிலை வானத்தின் றொழிலாக்குக' என்பர் பழையவுரைகாரர்.

கடியேர்—புதிய ஏர். என்றது முதற்கட்பூட்டும் ஏரை. ஏர் பூட்டுநர் என்றது உழவரை. கடுக்கை—கொன்றை. "இதழி கடுக்கை தாமங் கொன்றை" என்றார் பிங்கலந்தையினும். (பிங் 9-11). இது கார்காலத்து மலர்தல் "கார் விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்" (அக. கடவுள்) என்பதனாலுமறிக. உழவர் பூக்களைச் சூடிக்கொள்ளும் வழக்கம்,

"கருவி வானம் தண்டளி சொரிந்தெனப்
பல்விதை யுழவிற் சில்லே ராளர்
பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்
சழுவுறு கலிங்கங் கடுப்பச் சூடி" பதிற் 76: 10-3.

என்பதனாலுமறிக.

பருவ வானம் ஓயாது சிலைத்து முழங்குதலின் "விரைவி லதிர்சிலை முழங்கி" என்றார். 'வள்வார் முரசின் குரல்போ லிடித்துராறி......கூர்ந்ததிக் கார்" (ஐந். ஐம் 4) எனப் பிறரும் கூறுதல் காண்க. சிலை முழங்கி யென்றது சிலைத்தலொடு முழங்கி என்றவாறு "வண்ணக் கருவிய வளங்கெழு கமஞ்சூல்...... கடுஞ்சிலை கழறி" (பதிற் 81: 2-4) என்புழி, சிலைகழறி என்பதற்குச் 'சிலையொடு கழறியென ஓடுவிரிக்க' எனப் பழையவுரைகாரர் உரைத்தலுங் காண்க. வானம் முழங்கிப் பெயல் சிறத்தல், "மாமழை இன்னும் பெய்ய முழங்கி" (குறுந் 216) "ஏர்கொள் எழிலி .....முழங்கிப் பெரும்பெயல் தாழ" (திணை ஐம் 26) என வருவனவற்றினுங் காண்க. உரவுக்கடன் முகந்த பருவ வானமாதலின் 'ஆர்கலி வானம்' என்றார். ஆர்கலி—கடல். இப்பொருட்டாதல் "திறந்திரிந்து, ஆர்கலியும் முற்றும் வற்றும்" என்னும் திருக்கோவையாரினும் (213) காண்க. வானம் முழங்கல் 'வரைவி லதிர்சிலை முழங்கி' (12) என முற்கூறப்பட்டமையின் ஆர்கலி வானம் என்பதற்கு நிறைந்த முழக்கத்தையுடைய மேகம் எனவுரைத்தல் ஈண்டுப் பொருந்தாதென்க. தளி என்பதற்கு

மழை எனினுமமையும். "தளிபெறு தண்புலத்து" (கலி 101: 1) என வருதல் காண்க. வானந் தளிசொரிந்தாஅங்கு (18) சிதறி (20) என இயையும். வானம் வரையாமற் கொடுத்தற்கு உவமை.

உறுவர்—மிக்கவர். "உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா" (நாலடி 104) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க ஈண்டு உறுவர் என்றது அரசனுக்குத் துணையான பெரியோரை. உறுவர் ஆர வோம்பாதுண்டு என்பதற்கு உறுவர் நிரம்பப் பெறும்படி ஊட்டித் தாமும் பொருளைப் பாதுகாவாது உண்டு எனினுமமையும். "சுற்ற மருத்தி, யோம்பா துண்டு கூம்பாது வீசி" (புற 47: 4-5) என வருதல் காண்க.

நகைவர் என்றது கூத்தாலும் பாட்டாலும் அரசனுக்கு மகிழ்ச்சியைச் செய்யும் மகளிரை. 'இன்னகை மகளிர்—பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும் அரசனுக்கு இனிய மகிழ்ச்சியைச்செய்யும் மகளிர்' எனவும் (பொருந 85 நச்) 'இன்னகை யாயம்' – இயலிசை நாடகத்தாலும் இனிய மொழிகளாலும் இனிய மகிழ்ச்சியைச் செய்யும் திரள்' (சிறுபாண் 220 நச்) எனவும் வருவன காண்க. மகிழ்ச்சிக் காரணமான பாணர் விறலியர் முதலியோர் எனினுமமையும் நகைவர் நிரம்பப் பெறும்படி பொன்னாற் செய்த நல்ல அணிகலங்களை வழங்குதலின் 'நன்கலஞ் சிதறி' என்றார். குட்டுவன் கலம் வழங்கல்,

"கலஞ்செலச் சுரத்த லல்லது கனவினும்
களைகென வறியாக் கசடி னெஞ்சத்
தாடுநடை யண்ணல்" பதிற் 44: 5-7.

"பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
யொண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டி" பதிற் 48: 1–2.

என வருவனவற்றானுமறிக. உண்டு (19) சிதறி (20) மேவலை (29) என முடிக்க.

ஆடுசிறை—பறக்கும் சிறகு. புற 64: 4 உரை. ஆடுசிறையறுத்த நரம்பு என்பதற்குப் பறிக்கும் சிறையையுடைய கின்னரத்தை இசையாற் றோற்பித்த யாழ் நரம்பு எனினுமமையும். சிறையென்றதை அந்நரம்பின் ஓலியெழாமற் சிறைப்படுத்தி நிற்கும் அதன் குற்றம் என்பாருமுளர். குற்றம் கொடும்புரி மயிர் தும்பு முறுக்கு என்பன. "கொடும்புரி மயிர் தும்பு முறுக்கிவை நான்கும், நடுங்கா மரபிற் பகையென மொழிப"(சீவக 721 நச் மேற்.)என வருதல் காண்க. அந்நரம்பின் இசையொடு ஒன்றுபட்டுச் சேர்ந்த இனிய குரலை 'நரம்பு சேர் இன் குரல்' என்றார். "கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டம்" எனச் சிலப்பதிகாரம் (7: 24) கூறுதலும் ஈண்டறியற்பாலது. யாழ் நரம்பின் இசையும் குரலும் ஒத்தல், "விரல்கவர்ந் தெடுத்தகீத மிடறெனத் தெரித ரேற்றார்" (சீவக 723) என்பதனாலுமறிக. விறலியர் நரம்புசேர் இன்குரலுடையராதல்,

"நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர்" மதுரைக் 217–8.

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்" மலைபடு 534-6.

என வருவனவற்றானுமறிக. ஆடுவிறலியரும் உண்மையின் 'பாடு விறலியர்' என விதந்து கூறினர். "பாடனல் விறலியர்" (பரி 17: 15) "பாடுவல் விறலி யோர்" (புற 152: 13) என வருவன காண்க. இவர் கேட்டார்ப் பிணிக்கும் வகையில் மிக இனிமையாகப் பாடவல்லார் என்பது.

"அமிழ்துபொதி துவர்வா யசைநடை விறலியர்
பாடல் சான்று நீடினை யுறைதலின்" பதிற் 51: 21-2.

என்பதனானுமறியப்படும். * மகளிர் பிடியை ஊர்தலின் 'விறலியர் பிடி பெறுக' என்றான். மகளிர்க்குப் பிடியை வழங்கல்,

"வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடி பரிசின் மான" குறுந் 298: 6-7.

என்பதனானுமறிக. பிடி—பெண்யானை. "பிடியென் பெண்பெயர் யானை மேற்றே" என்பது தொல்காப்பியம். (மரபு51.)

உழிஞையையும் வென்றிமேவலையும் உருகெழு சிறப்பினையும் கொண்டியையுமுடைய மள்ளர் என்க.

துய்வீ—துய்யையுடைய வீ, துய்—ஆர்க்கு மலைபடு 178: நச். 'பஞ்சுநுனை போன்றிருப்பது' குறிஞ்சி 37 நச். § வாகை, வெற்றியின் அடையாளமாகச் சூடப்படுவது. "சூடினுன் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும், பாடினர் வெல் புகழைப் பல்புலவர்" (பு. வெ. மா 155) என வருதல் காண்க. துய்வீ வாகை என்றாராயினும் வாகைத் துய்வீயே அணியப்படுவதாகக் கொள்க. 'வாகை சூடி-வாகைப் பூவைப் புனைந்து' (பு. வெ. மா 155 உரை) என்பது காண்க. உழிஞை கொடியாதல் "நுண் கொடி யுழிஞை" (பதிற் 44: 10) "நெடுங் கொடி யுழிஞை" புற (76: 5) என வருவனவற்றானுமறிக. இது பகைவர் அரணை முற்றுதற்கு அடையாளமாக அணியப்படுவது. "அண்ணலம் பெருங் கோட் டகப்பா வெறிந்த, பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ" (பதிற் 22: 26-7) என வருதல் காண்க. வாகையுழிஞையென்றது வாகையை முடிவிலேயுடைய உழிஞையென்றவாறு. மள்ளர் உழிஞையைச் சூடிப் பகைவர் அரணை வளைத்துக் கைக்கொண்டு வாகைப் பூவைச் சூடுதலின் உழிஞை வாகையை முடிவிலேயுடையதாயிற்று. இனி வாகையும் உழிஞையும்

* மகளிர் பிடியை ஊர்தல், "மடப்பிடி, யனன மனையாரோ டாயா" "பிடிமேலன்னப் பெரும்பெடையனையோர்" (பரி 10: 43-4; 12: 27) "அலர்ந்த வம்பார் மழைக் கண்ணார், பணியாா பண்ணூப்பிடி யூர்ந்து" (சீவக 2699) என்பனவற்றானுமறிக.

§ 'வாகையில் 'கொத்தான் வாகை' என்ற இனத்தின் பூவைச் சூடுதலேபழைய வழக்காதல் "வெண்கண்ணணியுங் கருங்கழலுஞ் செங்கச்சுந் தகைபுனைந் தன்று" (பு வெ. மா 156) என்பதனுரையில் 'வெங்கண்ணணி - கொத்தான் வாகை' என்பதனு லறிக.

என இரண்டாக்கலுமாம். மேவல் – விரும்புதல். பொருந்துதலுமாம். மள்ளர் வென்றியை விரும்பும் தலைமையாற் பகைவர்க்கு உட்குப் பொருந்துதலின் 'உருகெழு சிறப்பின்' என்றார். கொண்டி – கொள்ளை. "கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக" பெரும்பாண் 454.

நுண்கோல் கொண்டு (27) மன்றம் படர்ந்து மறுகுசிறை புக்குக்(26)களம் வாழ்த்தும் (27) அகவலன் (28) என மாறிக் கூட்டுக இன்ன சாதியார் கோல் கொண்டு புறத்துச் சேறல் வேண்டும் என்னும் மரபுப்படி அகவலன் நுண் கோல் கொண்டமையின் 'நுண்கோல் கொண்டு' என்றார். "நுண்கோ லகவு நர்" (அக 152: 4; 208: 3) எனப் பிறரும் கூறுதல் காண்க. கண்டிர நுண் கோல் என்றது கணுக்கள் திரண்ட நுண்ணிய மூங்கிற் கோலாதல் "கண்டிர நீளமை" (அக 331: 6) "கண்டிரள் வேய்" (பெருங் (1) 46: 168) என வரு வனவற்றாலுமறிக.

"இருங்கழை யிறும்பின் ஆய்ந்துகொண் டறுத்த
நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரொடு" அக 97: 9–10.

என வருதலுங் காண்க. கண்டி நுண்கோல் என்ற பாடத்திற்குக் கணுக்களை யுடைய நுண்ணிய கோல் எனவுரைக்க.

சேணிடை வந்த வருத்தம் திரும்படி அகவலன் ஊரிலுள்ள மன்றிலே சென்று பின்பு தெருவின் இருமருங்குமுள்ள வீட்டு வரிசையின் பக்கமாகப் பாடிச் செல்லுதலின் 'மன்றம் போந்து மறுகுசிறை புக்கு' என்றார். புக்கு என்பதற்குப் புக்குப் பாடும் என ஒருசொல் வருவித்து அகவலன் என்பதனோடு முடிக்க.

"மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள்" பதிற் 23: 5-6.

எனப் பிறரும் கூறுதல் காண்க. அகவலன்–பாடும் பாணன். "அகவுநர் நா நவில் பாடல்" (பரி 15: 42-3) "குன்றம் பாடும் நுண்கோ லகவுநர்" (அக 208: 2-3) என வருவன காண்க. குலத்தோ ரெல்லாரையும் அழைத்துப் புகழ்தல் பற்றிப் பாணனுக்கு அகவலன் என்றும் பெயராயிற்று. பாணர் களம் வாழ்த்தல்,

"செங்களத்து விழுச்செல்வம்
வெண்டுறையாழ்ப் பாணர்விளம்பின்று" பு. வெ. மா 207

என்பதனாலுமறிக. மா–குதிரை. "களிறு மன்றே மாவு மன்றே" புற 135: 14. என்றும் என்பதனை பிடிபெறுக (22) களிறு பெறுக (25) என முன்னின்ற வியங்கோட்களுடன் கூட்டுக.

"என்று மெனவு மொடுவுந் தோன்றி
யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே" (இடை 46)

என்பது தொல்காப்பியம். இகல்வினை–போர்வினை. "விறலியர் பிடிபெறுக ......என்றும் இகல்வினை மேவலையாகலின்" (22-9) என்றதனாற் குட்டுவன் போர் வினையில் வெற்றி பெறுதலும், பகைவரை வென்று களத்தே பெற்ற யானை குதிரை முதலியனவற்றை வீரர்க்கும் பரிசிலர்க்கும் நல்குதலும் அறி

யப்படும். மேவலை, முற்று. 'மேவலை யாகலின் – விரும்புதலுடையை; ஆத லான்' என புறநானூற்றுரையாசிரியர் உரைத்தலுங் காண்க. (புற 7: 9 உரை). ஆகலின் என்றது மேற்கொண்ட போர்வினையில் வெற்றிபெறுத லும் வென்று பெற்றவற்றை ஈதலுமுடையையாகலான் என்றவாறு. பகை வரும் தாங்காது புகழ்ந்த என்றது ஆண்மையும் கொடையும் முதலாயின வற்றை 'நொதுமலரும் நட்பினருமன்றிப் பகைவரும் மனமடங்காமற் புகழ்ந்த என்றவாறு. "பகைவரும் புகழ்ந்த வாண்மை" (புற 373: 35) என்றார் பிற ரும். உம்மை, எச்சவும்மை. புகழ்ந்த கற்ப என முடிக்க.

தூங்கு கொளை முழவு என்றது களத்தே மேன்மேலும் கொட்டுகின்ற மந்தகதியையுடைய, பேய்மகளிர் ஆடற்கேற்ற முழவென்றவாறு.

"நிறங்கிளர் குருவிற் பேஎய்ப் பெண்டி
ரெடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்
தறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்" புற 62: 4–7.

எனப் பிறரும் கூறுதல் காண்க. முழவின் என்பதனையும் கற்ப என்பதனோடு முடிக்க. தொலையாக் கற்ப என்றது வென்றி தொலையாமைக்குக் காரணமா கிய படைப்பயிற்சியுடையாயென்றவாறு.

"ஒளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டம ரடுதொறும்" அக 106: 10–11.

"இகலடு கற்பின் மிஞிலியொடு" அக 396: 5.

என வருவன காண்க. பிறிதும் உரைப்ப. நிலையென்றது செல்வத்தின் பெருமை நிலையை.

31–6. கனல் சினந் தவிராது நிணஞ்சுடு புகையொடு என மாறிக்கூட்டுக. சினம் என்றது நெருப்பின் வெம்மையை. "நெருப்புச் சினந் தணிந்த" (புற 125: 6) என்றார் பிறரும். வருவார்க்கு வழங்குதற் பொருட்டு நிணம் எப்பொழு தும் சுடப்படுதலின் 'கனல்சினந் தவிராது' என்றார். நிணஞ்சுடு புகையொடு என்றாராயினும் புகையெழச் சுடுகின்ற நிணத்தொடு என்பது கருத்தாகக் கொள்க. நிணம் என்றது நிணந் தயங்கு கொழுங்குறையை. நிணஞ் சுடுதலாற் புகையெழல்,

"நிணவூன்சுட் டுருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
குருஉக்குய்ப்புகை மழை மங்குலிற்
பரந்துதோன்று வியனகரால்" 755–8.

என்னும் மதுரைக்காஞ்சியினுங் காண்க. இரவலர்க்கு நிணஞ்சுட்டு வழங்கல்,

"பருத்திப் பெண்டின் பனுவ லன்ன
நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை
பரூஉக்கண் மண்டையொ டூழ்மாறு பெயர
வுண்கு வெந்தைநிற் காண்குவந் திசினே" புற 125: 1–4.

என்பதனானுமறிக. புகையொடு (32) கள்ளின் (35) வேந்தே (36) என முடிக்க.

நிரம்பகல் பறியாத் தசும்பு, நிறைந்து நெடிதிராத் தசும்பு என இவையும். தசும்பின் (34) கள் (35) என்க. வருவார்க்கெல்லாம் இடையறாது வார்த்தலாற் கள் தசும்பில் நிரம்பாமையின் 'நிரம்பறியா' என்றும், உண்ண உண்ண மேன்மேலும் கள்ளை நிறைத்தலின் 'அகல்பறியா' வென்றும் கூறினார். நிரம்புதலும் அகலுதலும் ஏறுவேணிக்கின்மையின் 'நிரம்பகல் பறியா வேறுவேணி' எனக் கூட்டிப் பொருள் கோடல் பொருந்தாதென்க. 'நிரம்பகல் பறியா' என்பது தசும்பினுக்கே அடையாதல் 'நிரம்பகல்பறியாத நிறைந்து நெடிதிராத தசும்பு' எனப் பெயரெச்சமறையடுக்காக்குக' எனப் பழையவுரைகாரர் உரைத்தலானும் தெளியப்படும். அகலுதல் – நீங்குதல். "மருளுறு நோயொடு மம்ம ரகல" (கலி 140: 32) என்புழிப்போல.

ஏறுஏணியென்றது கோக்காலி. அதனை ஏறுவேணியென்று வெளிப்படுத்த சிறப்பான் இச்செய்யுளுக்கு **ஏறுவேணி** என்று பெயராயிற்று.

தசும்பினிடத்துக் கள் அகலுதலினும் நிரம்புதல் மிகுதலால் நிறைதலின் 'நிறைந்து' என்றும், உண்பார்க்கு வார்த்தலால் நிறைந்து நெடிதிராமையின் 'நெடிதிரா' என்றும் கூறினார். வயிரியர் உண்டெனத் தவாக்கள் என்றது கள்ளுண்டலில் மிக்கவராகிய கூத்தர் உண்ண வுண்ண அக்குடங்களை மேன்மேலும் நிறைத்தலிற் குறைதலறியாத கள் என்றவாறு. வானம் போல வரையாது வழங்கும் கையாதலின் 'வண்கை' என்றார். கலிமகிழென்றது கலிமகிழையுடைய ஓலக்கத்தை. கலிமகிழானே (36) நின்னிலை கண்டிகும் (31) என மாறிக் கூட்டி வருவார்க்கெல்லாம் நிணத்தையும் கள்ளையும் வழங்கும் நின் ஓலக்கத்தின்கண்ணே நின் செல்வத்தின் பெருமைநிலையெல்லாம் கண்டேம் எனவுரைக்க.

இதனாற் சொல்லியது அவன் **செல்வமகிழ்ச்சி** கூறியவாறாயிற்று.

இது அவன் வென்றிச் சிறப்பும் நாட்டுச் சிறப்பும் கொடைச் சிறப்பும் செல்வ மகிழ்ச்சியும் கூறியவாற்றால் அடுத்தூர்ந்தேத்திய **இயன்மொழிவாழ்த்தாயிற்று.**

## பழையவுரை.

1. முச்சி–கொண்டை முடி. கவரிபோலும் கூந்தலெனக் கூட்டுக. 5. விருந்தின் வீழ்பிடியென்றது எண்ணுகின்ற மகளிர்க்கு விருந்தாகிய அம்மகளிர் விரும்பிய பிடியென்றவாறு. இனிக் காட்டியானைக்கு விருந்தாகிய அவ்வியானைகள் விரும்பும் பார்வைப்பிடியென்பாருமுளர். பிடியினையே எண்ணியது தங்கள் நடையொப்புமை பற்றியென்க. மகளிர் (2) என்னும் எழுவாய் பெறு (5) என்னும் பயனிலை கொண்டது. 5. பிடியது எண்ணென்க. எண்ணுமுறையாவது சங்கு பற்ப முள்ளிட்ட தொகை. கல்லோங்கு நெடுவரையாகிய (6) வடதிசை இமயம் (7) தென்னங் குமரியொடு (8) எல்லையாவென மாறிக் கூட்டுக. எல்லையாகவென்னும் வினையெச்சத்திற்கு இவ்வாறு எல்லையானவென ஒரு பெயரெச்சச் சொல் வருவித்து அப்பெயரெச்சத்திற்கு ஆயிடை (8) என்புழி அவ்வென்னும் வ்கரவீற்றுப் பன்மைச் சுட்டுப் பெயரை முடிபாக்குக. 10. சொல்பல நாடென்றது ஆயிடை அரசர் நாடெல்லாவற்றையும். 12–4. பணை

திரங்கும் வண்ணம் பெயல் ஒளித்தலானும் குன்று வறங்கூரும் வண்ணம் சுடர் சினம் திகழ்கையானும் அருவியற்றவெனக் கூட்டியுரைக்க. 15. அருஞ்செலற் பேராறு–புனல் நிறைந்த ஆறு. யாறென்பது ஆறென மருவிற்று. 15-8. கரையையுடைத்துத் தளி சொரிந்தாங்கென உடைத்தற்றொழிலை வானத்தின் றொழிலாக்குக. இங்ஙனமன்றி ஒரு பெயர் வருவித்து உடைக்கவெனத் திரிக்கவுமாம். 17. சிலைமுழங்கியென்றது சிலைத்தலொடு முழங்கியென்றவாறு. 21. ஆடு சிறையறுத்த நரம்பென்றது கின்னரமென்னும் புள்ளின் இசையெழுகின்ற சிறகினைத் தோற்பித்த யாழ் நரம்பென்றவாறு. இனிச் சிறையென்றதை அந்நரம்பின் ஒலியெழாமற் சிறைப்படுத்தி நிற்கும் அதன் குற்றமென்பாரும் உளர். 23. வாகையுழிஞையென்றது வாகையை முடிவிலேயுடைய உழிஞையென்றவாறு. இனி வாகையும் உழிஞையுமென இரண்டாக்கலுமாம். 25. கொண்டி–கொள்ளை. 27. நுண்கோல் – பிறப்புணர்த்துங் கோல். நரம்பென்பதுமொன்று. 28. அகவலன்-பாடும் பாணன். என்று மென்புழி உம்மையை இசைநிறை யும்மையாக்கி அவ்வென்றென்பதனை முன் எண்ணிநின்ற வியங்கோட்களுடன் கூட்டிப் பின் அதனை இகல்வினை மேவலை (29) என்னும் வினையொடு முடிக்க. இனி, என்று மென்பதனை மூன்னின்ற வியங்கோட்களுடன் கூட்டலுமொன்று. முன்னின்ற உண்டு (19) சிதறி (20) என்னும் எச்சங்களையும் மேவலை (29) என்பதனோடு முடிக்க. 30. தூங்கு கொளை முழவென்றது மந்தகதியையுடைய ஆடற்கேற்ற முழவு. 31. கற்பவென்றது கல்வியுடையாயென்றவாறு. பிறிதும் உரைப்ப. நின்னிலை கண்டிகுமென்றது நின் செல்வத்தின் பெருமைநிலையெல்லாம் கண்டேமென்றவாறு. 32. தவிராதென்றது குறைதலறியாதென்றவாறு. 33. ஏரு ஏணியென்றது கோக்காலி. அதனை ஏருவேணியென்று வெளிப்படுத்த சிறப்பான் இதற்கு ஏருவேணி யென்று பெயராயிற்று. 34. நிறைந்து நெடிதிராவென்றது உண்பார்க்கு வார்த்தலால் நிறைந்து நெடும்பொழுதிராதவென்றவாறு. நிரம்பகல் பறியாத (33) நிறைந்து நெடிதிராத தசும்பு (34) எனப் பெயரெச்சமறையடுக்காக்குக. உண்டெனத் தவாவென்றது உண்ணவுண்ண அக்குடங்களை மேன்மேலும் நிறைத்தலிற் குறையாதவென்றவாறு.

குட்டுவ (11) தொலையாக் கற்ப (31) வேந்தே நின் கலிமகிழின் கண்ணே (36) நின்னிலை கண்டேம் (31) என மாறிக்கூட்டியுரைக்க.

வேந்தேயென்னும் விளி முன்னின்ற விளிகளோடு கூடுதலின் மாறாயிற்று.

இதனாற் சொல்லியது அவன் செல்வ மகிழ்ச்சி கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. முச்சி: "மெல்லிரு முச்சி கவின்பெறக் கட்டி" குறிஞ்சி 104; "நறுமல ரணிந்த நாறிரு முச்சி" மலைபடு 182; "போதவிழ் முச்சி" ஐங் 93: 5; "ஏதிலாண் முச்சி" கலி 81: 30; "வணர்சுரி முச்சி" "பொறிமாண் முச்சி" அக 390: 5; 391: 7; "நறுமல ரவிழ்ந்த நாறிரு முச்சி" சிலப் 22: 122.

1—2. கூந்தன் மகளிர்: பதிற் 18: 6 ஒப்பு.

2. ஊசன்மேவல் மகளிர்: கலி 37: 13-4; 131: 10-13; அக 20: 6; மணி 19: 73.

3—4. யானையின் காலுக்கு உரல்: "உரற்கால் யானை" குறுந் 232: 4; "உரல்போ லடிய வுடம்புயங் கியானை" "உரல்புரை பாவடி......யொருத்தல்" கலி 13: 6; 21: 1-2; "கறையடி மடப்பிடி" அக 83: 3; "கறையடி யானை" புற 39: 1-2;

இலங்குவாண் மருப்பு யானை: "இலங்கு மருப்பிற் களிறு" மதுரைக் 102; "யானை, யிலங்குவான் மருப்பின்" "இலங்குமருப் பியானை" புற 287: 5-6பி-ம்; 303: 9.

வீழ்பிடி: கலி 40: 26; 53: 2-3; 54: 13-4; அக 359. 10; 392: 2.

2—5. மகளிர் விலங்கு முதலியவற்றை எண்ணல்: "குருகொழுக் கெண்ணி, யெல்லை கழிப்பின மாயின்" "மடநோக் காயமொ டுடனுப் பேறி, யெந்தை திமிலிது நுந்தை திமிலென......திண்டிமி லெண்ணுந் தண்கடற் சேர்ப்ப". "மனையிருந்து......பரதவர், திண்டிமில் விளக்க மெண்ணும்" நற் 159: 4-5; 331: 5-8; 372: 10-12; "ஆயமொடு உப்பின் குப்பையேறி யெற் பட, வருதிமி லெண்ணும் துறைவனொடு" அக 190: 1-3; "இன்னகை மகளிர் ..... ஈத்திலைக் குப்பை யேறி யுமண, ருப்பொ யொழுகை யெண்ணுப மாதோ ......வேந்தர், பொலம்படைக் கலிமா வெண்ணுவோரே" புற 116: 3-19.

5. எண்ணுமுறை: "எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்" அக 352: 15.

6. கடவு ணிலைய வரை: "பெருமலை ....பெருந்தெய்வத்து" பதிற் 51: 12: 3; "கடவுண் மால்வரை" சிறுபாண் 205; "கடவு ளோங்கு வரை" அக 348: 8.

கல்லோங்கு வரை: "கல்லுயர் கவாஅன், வெவ்வரை" அக 189: 6-7.

நெடுவரை: "நேருயர் நெடுவரை" பதிற் 21: 29 ஒப்பு.

6—7. நெடுவரையிமயம்: "மழையண் ணுப்ப நீடிய நெடுவரைக், கழை வள ரிமயம்" புற 166: 32-3.

7. வடதிசை யிமயம்: "வடவயி னிவந்தோங்கி உருமுச் சூழ்......சேட் கிமை" பரி 9: 1-3.

7—8. பதிற் 11: 23-4 ஒப்பு.

9. மு. பதிற் 34: 10 ஒப்பு.

பெருஞ்சமந் ததைய: "களிறுடைப் பெருஞ்சமந் ததைய" பரி 76: 1.

சமந்ததைய ஆர்ப்பெழல்: பெரும்பாண் 418; 9; மலைபடு 386; குறுந் 35: 4-5; 328: 5-8; 393: 4-6; அக 36: 21-3; 116: 13-9; 209: 4-6; 246: 12-4; புற 35: 24; 77: 9-12.

10. தொல்கவின்: நற் 283: 4; 350: 4-5; குறுந் 381: 1; கலி 2: 2; 26: 10; குறள் 1235; 1243.

*11.* பதிற் *23: 10* ஒப்பு.

*12.* பனிதிரங்கல்: பதிற் *41: 14* ஒப்பு.

பெரும்பெயல்: முல்லை *6;* மதுரைக் *244;* குறுந் *13: 2; 133: 3; 165: 4; 168: 3;* அக *42: 10;* புற *325: 2.*

*12—4.* "*எல்லை தருநன் பல்கதிர் பரப்பி .... அருவி மாமலை நிழத்தவு ......பெருவறனுகிய பண்பில் காலையும்*" பொருந *233-7;* "*நெடுங்கழை முளிய வேனி னீடிக், கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்*" ஐங் *322 1-2;* "*கன் மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்*" "*செல்கதிர் ஞாயிறு செயிர் சினம் சொரிதலிற், றணிவில் வெங்கோடைக்கு ... விறன்மலை வெம்ப*" கலி *11: 14; 20: 2-5;* "*பல்கதிர் ஞாயிறு, வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின், அருவியான்ற பெருவரை மருங்கில்*" "*வேனில் அத்தத் தாங் கண் வானுலந், தருவி யான்ற வுயர்சிமை மருங்கில்*" "*உயர்மிசை மூங்கில் இளமுளை திரங்கக் காம்பின், கழைநரல் வியலகம் வெம்ப மழை மறந்து, அருவியான்ற வெருவரு நனந்தலை*" '*மழைகரந் தொளித்த கழைதிரங் கடுக் கத்து*" அக *91: 1-3; 185: 9-10; 241: 5–8;* "*அருவி மாறி யஞ்சுவரக் கடு கிப், பெருவறங் கூர்ந்த வேனிற் காலை*' புற *224: 12-3.*

*16.* ஆடவர் கொன்றை சூடல்: "*நாறிணர்க் கொன்றை வெண்போழ் கண்ணியர்*" பதிற் *67: 13.* "*சுடுபொன் னன்ன கொன்றை சூடிக், கடிபுகு வனர்போன் மள்ளரு முடைத்தே*" ஐங் *432: 2-3.*

பெயல் சிறத்தல்: "*சிதரற் பெரும்பெயல் சிறத்தலின்*" மதுரைக் *244.*

*18.* ஆர்கலிவானம்: "*ஆர்கலி வானந் தலைஇய நடுநாள்*" நற் *53: 5.*

*19.* உறூவர்: "*உறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கும்*' புற *381: 23.*

ஓம்பாதுண்டு: "*ஓம்பா துண்டு கூம்பாது வீசி*" புற *47: 5.*

*20.* பதிற் *37: 4* ஒப்பு.

*18—20.* கொடைக்கு வானம்: "*பிடிக்கணஞ் சிதறும் பெயன் மழைத் தடக்கைப், பல்லியக் கோடியர் புரவலன்*" சிறுபாண் *124: 5;* "*வான வண்கை வளங்கெழு செல்வர்*" மதுரைக் *442;* "*தூத்துளி பொழிந்த பொய்யா வானின், வீயாது சுரக்குமவ னுண்மகி ழிருக்கையும்*" "*மழைசுரந் தன்ன வீகை நல்கி*" மலைபடு *75-6; 580;* "*நின் சுரத்தலும் வண்மையு மாரியுள*" "*அவன், வண்மைபோல் வானம் பொழிந்த நீர்*" பரி *4: 27; 22: 7–8;* "*பொழிபெயல் வண்மையான்*" கலி *57: 12;* "*மழைசுரந் தன்ன வீகை*" அக *238: 13;* "*வான நாண வரையாது சென்றோர்க், காணுதியும் கவிகை வண்மை*" "*வானத் தன்ன வண்மையும்*" "*மாரியன்ன வண்மைத், தேர்வே ளாயை*" "*வரையா மரபின் மாரிபோல... பேகன் கொடைமடம் படுவதல்லது*" "*மாரியீகை மறப்போர் மலையனும்*" "*கருவி வானம்போல, வரையாது சுரக்கும் வள்ளி யோய்*" "*மாரியன்ன வண்மையிற் சொரிந்து*" புற *54: 6-7; 55: 15; 133: 6-7; 142: 3-5; 158: 7; 204: 13-4; 397: 16.*

21. ஆடுசிறை: "ஆடுசிறை வரிவண் டோம்பும்" பதிற் 62: 18; "ஆடு சிறை வண்டு" ஐங் 447: 3.

நரம்புசே ரின்குரல்: "நரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு" முருகு 212; "நரம்பார்த் தன்ன தீங்கிளவி யளே" ஐங் 185: 4. "விரல்கவர்ந் தெடுத்தகீதமிடறெனத் தெரித றேற்றார்" "வீணைச் சுகிர்புரி நரம்பு நம்பி யூழ்மணி மிடறு மொன்றாய்" சீவக 723; 728.

21—2. இன் குரல் விறலியர்: "இன்குரல் விறலியர், நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடி" மலைபடு 358-9.

22. பாடுவிறலியர்: "பாடுவல் விறலியோர்" "பாடுவல் விறலி" புற 152: 13; 280: 8.

பிடியைப் பரிசாக வழங்கல்: "பிடிக்கணஞ் சிதறும் பெயன் மழைத் தடக்கை" சிறுபாண் 124 "புன்றலை மடப்பிடி . அமர்வீசு வண்மகிழ் அஞ்சை" "இரும்பிடிப் பரிசிலர் போல" அக 113: 3-4; 311: 1; "புன்றலை மடப்பிடி பரிசிலாகப், பெண்டிரும் தம்பதங் கொடுக்கும்" புற 151: 4-5.

24. உருகெழு சிறப்பு: பதிற் 81: 1. அக 138: 10; புற 60: 11.

25. கொல்களிறு: பதிற் 50: 8; 52. 1; 83: 3; கலி 42: 7; 104: 43-4; புற 14 1; 17: 17; 159: 22; நான்மணி 14; பு. வெ. மா 96; 245.

26. பதிற் 23: 5 ஒப்பு.

27. களம் வாழ்ததல் "வியன்களம் வாழ்த்த" பதிற் 40. 6 ஒப்பு.

28. அகவலனுக்கு மா முதலியன வழங்கல்: "நாளீண்டிய நல்லகவர்க்குத், தேரொடு மாசிதறி" மதுரைக் 223-4; "பாணர், பரிசில் பெற்ற விரியுளை நன்மான்" நற் 185. 3-4; "நுன்னோ லகவுநர் வேண்டின் வெண்கோட், டண்ணல் யானை யீயும் வண்மகிழ், வெளியன் வேண்மா னாஅய்" அக 208: 3-5; "மலைகெழு நாடன் மாவே ளாஅய், களிறுமன் றே மாவுமன்றே" புற 135: 13-4.

29. இகல்வினை மேவல்: "இகல்வினை மேவலன்" பதிற் 60: 2.

28—9. வென்று பெற்றவற்றை இரவலர்க்கீதல்: பதிற் 20. 13 6 ஒப்பு.

31. தொலையாக் கற்ப: "தொலையாக் கற்பநின் றெம்முனையானே" பதிற் 80: 17.

34 வயிரியர்: பதிற் 64: 8; மதுரைக் 628: 750; மலைபடு 164: புற 9: 9; 164. 12.

32—5. "பொலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப், பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர, வைகல் வைகல் கைகவி பருகி" பொருந 156-8; "மகிழ்தரன் மரபின் மட்டேயன்றியு, மமிழ்தன மரபி னூன்றுவை யடிசில், வெள்ளி வெண்கலந் தூட்டல்" "நாட்படு தேறல் .....பொலங்கலத் தளைஇ, யூண்முறை யீத்த லன்றியும்" புற 390: 16-8; 392: 16-8.

36. வண்மை: "வான வண்கை" மதுரைக் 442; "ஓவா தீயு மாரி வண்கை" குறுந் 91: 5; "தேரீயும் வண்கை யவன்" கலி 42: 21; "மாகவா னிகர் வண்கை" சிலப் 1: 24.

கலிமகிழானே: "விழவி னன்னநின் கலிமகி ழானே" பதிற் 61: 18.

## நோய்தபு நோன்றொடை

(44) நிலம்புடைப் பன்னவார்ப் பொடுவிசும்பு துடையூஉ
வான்றோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற
அரிய வென்னா தோம்பாது வீசிக்
கலஞ்செலச் சுரத்த லல்லது கனவினும்
களைகென வறியாக் கசடி னெஞ்சத்
தாடுநடை யண்ணனிற் பாடுமகள் காணியர்
காணிலி யரோநிற் புகழ்ந்த யாக்கை
முழுவலி துஞ்சு நோய்தபு நோன்றொடை
நுண்கொடி யுழிஞை வெல்போ ரறுகை
சேணா ரயினுங் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்
கரண்கடா வுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றுங் குராலம் பறந்தலை
முரசுடைத் தாயத் தரசுபல வோட்டித்
துளங்குநீர் வியலக மாண்டினிது கழிந்த
மன்னர் மறைந்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே.

**துறை—செந்துறைப் பாடாண் பாட்டு.**
**வண்ணமும் தூக்கும் அது.**
**பெயர்—நோய்தபு நோன்றொடை (9).**

ப—ரை: *1—7.* நிலம் புடைப்பன்ன ஆர்ப்பொடு-நிலத்தைப் புடைப்பதுபோன்ற ஆரவாரத்தொடு, விசும்பு துடையூஉ—ஆகாயத்தைத் துடைத்து, வான்தோய் வெல் கொடி—வானைத் தீண்டும் வென்றெடுத்த கொடி, தேர்மிசை நுடங்க—தேரின்மேலே அசைய, அமர் கடந்து பெற்ற—போரை வென்று பெற்ற பொருள்களை, பெரியவாயினும் அரிய என்னாது — பெருமையுடையவாயினும் பெறுதற்கரியனவென்று கருதாது, ஓம்பாது வீசி—பாதுகாவாது பிறர்க்குக் கொடுத்து, கலம் செல சுரத்தல் அல்லது—தான் அணிந்த ஆபரணங்களை இரவலர் துன்பம் நீங்க மாறுமற் கொடுப்பதல்லது, கனவினும் களைகென அறியா—கனவினும் என் துன்பத்தை நீக்குக என்று இரத்தலறியாத, கசடு இல் நெஞ்சத்து—குற்றமில்லாத நெஞ்சினையும், ஆடு நடை அண்ணல்—வென்றியைத் தோற்றுவிக்கும் ஒழுக்கத்தினையுமுடைய தலைவ,

*10—17.* நுண் கொடி உழிஞை – நுண்ணிய கொடியாகிய உழிஞையினைச் சூடிய, வெல்போர் அறுகை-வெல்லும் போரைச் செய்யும் அறுகை என்பான், சேணனாயினும் கேள் என மொழிந்து-நீ செய்கின்ற வலிக்கு உதவி செய்தற்குச் சேயனாயினும் எனக்கு அவன்தான் நட்பினனெனச் சொல்லி, புலம் பெயர்ந்து ஒளித்த-பகைவனான மோகூர் மன்னனுக்கு அஞ்சி அப் பகைப் புலத்தி னீங்கி ஒளித்துக்கொண்டதனா லுண்டாகிய, களையாப் பூசற்கு-ஒருவராலும் மாற்றவொண்ணாத வருத்தத்தின்பொருட்டு, அரண்கள் தாஉறீஇ –அரண்களை வருத்தம் உறுவித்து, அணங்கு நிகழ்ந்தன்ன மோகூர் மன்னன் முரசங்கொண்டு-தெய்வம் வருத்திணற்போன்ற மோகூர் மன்னனின் முரசினைக் கைப்பற்றி, நெடுமொழி பணித்து – அவனின் வீரம் மேம்பட்ட வார்த்தையைப் பணியச் செய்து. அவன் வேம்பு முதல் தடிந்து – அவனுடைய காவல் மரமாகிய வேம்பினது அடிமரத்தை வெட்டி, முரசு செய முரச்சி-அவ்வேம்பினை முரசாகச் செய்யும்படி முற்றுவித்து, களிறு பல பூட்டி-அவன் ஏறும் களிற்றியானைகள் பலவற்றைப் பூட்டி ஒழுகை உய்த்த –வண்டியைச் செலுத்தியவனே,

*7—9.* நின் புகழ்ந்த யாக்கை-நின்னை எல்லா வீரரும் சொல்லிப் புகழ்தற்குக் காரணமாகிய யாக்கையாகிய, முழு வலி துஞ்சும்-நிரம்பிய மெய்வலி தங்கும், நோய் தபு நோன் தொடை—நோய் நீங்கிய வலிய உடம்பினை, நின் பாடுமகள் காணியர் – நின்னைப் பாடுமகள் காண்பாளாக;

*17–23.* கொழு இல் பை துணி–கொழுமை இல்லாத பசிய இறைச்சித் துண்டங்களை, வை தலை மறந்த துய் தலை கூகையை-வைத்த இடம் மறந்த உச்சிக் கொண்டையினையுடைய தலையையுடைய கூகையை, குரலாம் கவலை கவற்றும் பறந்தலை–அதன் பெடையாகிய குரால் வருத்துதல் செய்யும் இடுகாட்டிற் பிணஞ்சுடுமிடத்தினையும், முரசுடை தாயத்து அரசு பல ஓட்டி–முரசினையுடைய பழையதாய் வருகின்ற உரிமையையுடைய அரசர் பலரைக் கெடுத்து, துளங்கு நீர் வியலகம் ஆண்டு இனிது கழிந்த – அசைகின்ற நீரையுடைய கடலாற் சூழப்பட்ட அகன்ற இடத்தையுடைய உலகத்தை ஆண்டு இனி உலக வாழ்வு அமையுமென்று இனிதாக இறந்த, மன்னர் மறைத்த தாழி–மன்னரை மறைத்த தாழிகளையும், வன்னி மன்றத்து–வன்னிமரம் நிற்கும் மன்றத்தினையுமுடைய, விளங்கிய காடு–தன்றொழில் விளங்கிய காடு, காணிலியர்–காணுதொழிவதாக.

முடிபு; ஆடுநடை அண்ணல், ஒழுகை உய்த்தவ, நின் நோய்தபு நோன்றொடையினை நிற்பாடு மகள் காண்பாளாக; காடு காணுதொழிவதாக என்க.

ஆ—ரை. 1—7. ஆர்ப்பொடு விசும்பு துடையூ வெல்கொடி தேர்மிசை நுடங்க அமர்கடந்து பெற்றவற்றை ஓம்பாது வீசிக் கலஞ் செலச் சுரத்தலல்லது கனவினும் களைகென வறியா நெஞ்சத்து அண்ணல் என்க.

நிலத்தைப் புடைப்பதைப் போன்ற அதிர்ச்சியுண்டாகக் களத்தே போர் முரசு உருமென முழங்குதலின் ‘நிலம்புடைப் பன்ன ஆர்ப்பொடு’ என்றார். “உருமுநில னதிர்க்குங் குரலொடு......எறியும்......தழங்கு குரன் முரசே”

(பதிற் 30: 42-4) என்றார் பிறரும். புடைத்தல்–அடித்தல். ஆர்ப்பொடு (1) அமர்கடந்து (3) எனக் கூட்டுக. "வேந்தனோ டுங்கு நின், சிலைத்தார் முரசங் கறங்க, மலைத்தனை" (புற 36: 11-3) என வருதல் காண்க. இனி, ஆர்ப்பொடு கொடி நுடங்க (2) எனக் கூட்டினு மமையும். வான்றோய் கொடி நுடங்கல் விசும்பினைத் தடவுதல் போறலின் "விசும்பு துடையூ" என்றார். துடைத்தல் –தடவுதல். "மெய்ம் முழுதும் கையிற், றுடைத்து" கலி 95: 19-20. மலைநாடாகிய சேரநாட்டின் உயர்நிலத்திற் பொருந்திய நெடிய தேரின் உச்சியிற் பொருந்திய வெல்கொடி வானைத் தீண்டுமாறு போல உயர்ந்திருத்தலின் 'வான்றோய் வெல்கொடி' என்றார். பண்டு வென்றெடுத்த வெல்கொடியைத் தேர்மீது உயர்த்தியது பகைவர் கண்டு அஞ்சுதற்பொருட்டென்க. இதனை, 'வெல்கொடி நுடங்கவென்றது மாற்றாரெதிரே அவர்கண்டு நடுங்கும்படி பண்டுவென்ற கொடி நுடங்கவென்றவாறு' (பதிற் 67: 5 உரை) என்பதனாலு மறிக. கொடி நுடங்கல் செலவின் கடுமையால் என்பது,

"வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற ககைப்பநீ
நெடுந்தே ரோட்டிய" பதிற் 25: 11-3.

என்பதனாலுமறிக. நுடங்க (2) அமர்கடந்து (3) எனக் கூட்டுக. சேரன் பகைவரை வஞ்சியாது எதிர்நின்று பொருது வென்றமை தோன்ற 'அமர் கடந்து' என்றார். கடந்துபெற்ற பொருள்கள் பெரியவும் அரியவுமாதல், 'பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற அரியவென்னாது' என்பதனாற் பெறப்படும். சேரன் அரிதிற்பெற்ற அரும்பெரும் பொருள்களையும் தனக்கெனப் பாதுகாவாது பிறர்க்குக் கொடுத்தலின் 'ஓம்பாது வீசி' என்றார். 'வீசி' என்றதனாற் பொருள்களிற் பற்றின்றி எளிதினீந்தமை பெறப்படும்.

அமர்கடந்து பெற்றவற்றை ஓம்பாது வீசுதலோடமையாது தான் அணிந்த ஆபரணங்களையும் இரவலர்க்களித்தலின் 'அமர்கடந்து பெற்ற ஓம்பாது வீசிக், கலஞ்செலச் சுரத்தலல்லது' என்றார். அரசர் தாம் அணிந்த ஆபரணங்களை அளித்தல்,

"மார்பிற் பூண்ட வயங்குகா மூரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்" புற 150: 20–21.
"வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு மரவுற ழாரமொடு
புரையோன் மேனிப் பூத்தசல......... .....
முரைசெல வருளி யோனே" புற 398: 26-9.

என வருவனவற்றாலுமறிக. கலம், பகைவர்பாற் றிறையாகப் பெற்ற ஆபரணங்கள் எனினுமமையும். "வென்று கலந் தரீஇயர் வேண்டு புலத் திறுத்து" (பதிற் 53: 1) "பணிதிறை தந்த பாடுசா னன்கலம்" (அக 127: 7) எனவருவன காண்க. சுரத்தல் என்றார் மழை சொரிந்தாற்போலக் கொடுத்தலின் "மழைசுரந்தன்ன வீகை" (மலைபடு 580) என்றார் பிறரும். சுரத்தலல்லது என்றதற்கு ஏற்பக் கனைகென வறியா என்பதற்குக் கனைகென்று இரத்தலறியாதவெனவுரைக்க.

"நல்லமர்க் கடந்தநின் செல்லுறழ் தடக்கை
இரப்போர்க்குக் கவித லல்லதை யிரைஇய
மலர்பறி யாவெனக் கேட்டிகும்" பதிற் 52: 10-2.

"பிறரைத்தா னிரப்பறியல
னிரந்தோர்க்கு மறுப்பறியலன்" புற 239: 8-9.

என வருவன காண்க. கனவினும் என்ற உம்மை நனவினன்றிக் கனவினுமென எச்சவும்மை. அறியா நெஞ்சம் என இயையும். இரத்தலை விரும்பியறியா நெஞ்சமாதலின் 'கசடினெஞ்சத்து' என்றார். கசடு – குற்றம் 'அழுக்கு' புற 214: 2 உரை. ஆடு-வென்றி. புற 53: 14 உரை. நடை–ஒழுக்கம். "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புற 312: 4) என்புழிப்போல. அரசர் வென்றியொழுக்கமுடையராதல் "பாடுநர் புரவல னாடுநடை யண்ணல்" (பதிற் 86: 8) என்பதனானுமறிக.

10—7. அறுகையென்பான் மோகூர் மன்னனுக்குப் பகையாய்ச் சேரனுக்கு நட்பாயிருப்பானோர் குறுநில மன்னன். அவன் உழிஞையைச் சூடி மோகூர் மன்னனின் முழுமுதலரணை முற்றியமையின் 'உழிஞை அறுகை' என்றார். பகைவர் அரணை முற்றுதல் உழிஞைத் திணையாதல்.

"உழிஞை தானே மருதத்துப் புறனே" (புறத்திணை 9)
"முழுமுத லரண முற்றலுங் கோடலு
மனைநெறி மரபிற் றாகுமென்ப" (புறத்திணை 10)

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களான் அறிக. இதற்கு உழிஞை சூடிச் சேறல் மரபு. அறுகை தான் செய்த போர்களிலே பகைவரை வென்ற வலி காரணமாக மோகூர் மன்னனின் அரணை முற்றியமை தோன்ற 'வெல்போரறுகை' என்றார். அரணை முற்றியகாலை தன்னை எதிர்த்த மோகூர் மன்னனின் வலிக்கு ஆற்றாது அஞ்சி, 'நீ செய்கின்ற வலிக்கு உதவி செய்தற்குக் குட்டுவன் சேணனாயினும் எனக்கு அவன்தான் நட்பினன்' எனச் சொல்லி அறுகை அவ்விடத்தினீங்கி ஒளித்துக்கொண்டமையின் "அறுகை, சேணனாயினும் கேளெனமொழிந்து புலம்பெயர்ந் தொளித்த" என்றார். சேணன்–தூரத்திலுள்ளவன். மோகூர் மன்னனின் அரணை முற்றியிருந்தபோது அறுகைக்குச் சேரநாட்டு மூதூர்க்கணிருந்த குட்டுவன் நெடுந்தூரத்திலுள்ளானாதலின் அறுகை அவனைச் 'சேணன்' என்றான். சேணனாயினும் என்ற உம்மை எச்சவும்மை. 'உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே யிடுக்கண் களையும் நட்பினனாதலின் அறுகை அவனைக் 'கேள்' என மொழிந்தான். கேள்–நட்பினன். "கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை" (குறள் 808) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. புலம் என்றது தான் சென்றிறுத்த பகைப்புலத்தை. ஒளித்த பூசல் எனக் கூட்டி ஒளித்ததனாலுண்டாகிய வருத்தம் எனவுரைக்க. அது மோகூர் மன்னனை வென்று பிறர் ஒருவரால் மாற்றவொண்ணாத வருத்தமாகலின் 'களையாப் பூசல்' என்றார். பூசல் – வருத்தம். "கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே" (கலி 34: 24) என்புழிப்போல. குட்டுவன் அறுகையின் அவ்வருத்தத்தை மாற்றும்பொருட்டு அவன் முற்றிய மோகூர் மன்னனின் அரணை

அழித்து, எதிர்ந்த அவனைப் பொருது வென்று அவனது வீரமுரசினைக் கைப் பற்றி அவன் தன் மேம்பாட்டைக் கூறும் மொழியைப் பணித்துக் காவல் மரமாகிய வேம்பினை அடியோடு தடிந்தமையின் 'சுளையாப் பூசற், கரண்கடாவுறீஇ......மோகூர் மன்னன் முரசங் கொண்டு, நெடுமொழி பணித்தவன் வேம்புமுதறடிந்து' என்றார். அரண்கள் தா உறீஇ—அரண்களை வருத்த முறுவித்து; என்றது அழித்து என்றபடி. தா—வருத்தம். உறீஇ—உறுவித்து. "ஒரு நிலையே, வரைநில்லா விழுமமுறீஇ" (கலி 146: 1–2) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அரண்களை அழித்தலை உற்று எனினுமமையும். அரண்கள் தா உறீஇ என்பதற்கு 'மாற்றார் அரண்களை அழித்தற்றொழிலைத் தன்பாலே உறுவித்து' என்பர் பழையவுரைகாரர். மோகூர்மன்னன் தெய்வம் வருத்தினாற்போலப் பகைவர்க்கு வருத்தத்தைச் செய்தலின் 'அணங்கு நிகழ்ந்தன்ன மோகூர் மன்னன்' என்றார். "அணங்குருத் தன்ன கணங்கொ டானை" (புற 362: 6) எனப் பிறரும் கூறுதல் காண்க. 'அணங்கு நிகழ்ந்தன்ன மோகூர் மன்னன்" என்று அவன் ஆற்றலைக் கூறியது அவனை வென்று முரசு கொண்ட குட்டுவனின் பேராற்றல் நன்கு புலனாதற்பொருட்டென்க.

மோகூர் மன்னன் – மோகூருக்கு மன்னன். மோகூர் இடைவிடாமற் பெய்கின்ற மழையால் தவறாத விளைதலையுடையதென்பது; "மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள் .....மோகூர்" (மதுரைக் 507–8) என்பதனாலறியப்படும். மோகூர் மன்னன் பழையன் என்னும் குறுநில மன்னன் என்பது "பழையன் மோகூர்" (மதுரைக் 508) என்பதனாலும், 'பழையனென்னுங் குறுநில மன்னனுடைய மோகூரிடத்து' என்னும் அப்பகுதி (நச்) உரையானுமறியப்படும். இவன் மோகூர்க்குரிய காரணத்தால் 'மோகூர்' என்றும் வழங்கப் பட்டான் என்பது "மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்" (பதிற் 49: 8) என்பதனலறியப்படும். மோகூர் மன்னன் முரசங் கொண்டு என்றது மோகூர் மன்னனாகிய பழையன் என்பானைப் போரிலே வென்று அவன் முரசினைக் கைக்கொண்டு என்றவாறு.

> "அரசுபட வமருழக்கி
> முரசுகொண்டு" மதுரைக் 128: 9.
>
> "சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
> யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
> டொருங்ககப் படேஎ னாயின்" புற 72: 7-9.

என வருவன காண்க.

நெடுமொழி பணித்து என்றது மோகூர் மன்னன், தன் பேராண்மையாற் கூறிய நெடுமொழியை, அவனை வென்று முரசுகொள்ளல் முதலிய செயல்களாற் குழச்செய்து என்றவாறு. நெடுமொழி-வீரம் மேம்பட்ட வார்த்தை. புற 178:9 உரை. வஞ்சினம் எனினுமமையும். நெடுமொழி கூறுவார் பேராண்மையுடையாரென்பது 'நெடுமொழி மொழிதலாற் பேராண்மையும்' என்னும் புறநானூற்றுரையானுமறிக. (புற 178: 9 உரை). 'நெடுமொழி – உயர்ந்த புகழ்' என்பர் புறப்பொருள்வெண்பாமாலையுரையாசிரியர். (280 உரை).

வேம்புமுதறடிந்து என்றது பழையனைப் போரில் வென்று அவன் காவல் மரமாகிய வேம்பினது அடிமரத்தை வெட்டியென்றவாறு. இதனை,

"மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை யதிர மண்டி
.........................................
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்" பதிற் 49: 8-17.

என வருதலானுமறிக. இச்செய்தியை,

"பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய" (27: 124-6)

என சிலப்பதிகாரமும் கூறுதல் காண்க.

முரசுசெய முரச்சியென்றது அவ்வேம்பினை முரசாகச் செய்யும்படி முற்றுவித்து என்றவாறு. பகைவர் காவல் மரத்தினைத் தடிந்து அதனைக்கொண்டு *முரசு செய்தல்,

"பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த" பதிற் 11: 12-4.

என்பதனுலு மறிக. மூற்றுவித்தலாவது ஒழுகையேற்றலாம்படி துண்டங்களாகத் தறிப்பித்தல். இனி "முரஞ்சன் முதிர்வே" (தொல். உரி 37) என்பவாகலின் முரச்சி என்பதற்கு முதிர்ந்த பகுதி எனவுரைப்பினுமமையும். களிறென்றது மோகூர் மன்னன் களிற்றினை. களிறு பல பூட்டியென்றது அவனேறும் களிற்றியானைகள் பலவற்றை அவனை அவமதித்துச் ‡சாட்டிற்குக் §கடாவோ பாதியாகப் பூட்டியென்றவாறு. பூட்டியென்றதற்கு மோகூர் மன்னன் பெண்டிரின் கூந்தலை அரிந்து திரித்த மயிர்க் கயிற்றாற் பூட்டியெனக் கொள்க. என்னை?

"பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
முராரை முழுமுத றுமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தன் முரற்சியாற்
குஞ்சர வொழுகை பூட்டி" 13-7.

என இதன் பதிகத்து வந்தமையால். ஒழுகை-சகடம். "உமண ருப்பொ யொழுகை" புற 116: 7-8. உய்த்த என்பது உய்த்தவ என்பதன் விகாரம். உய்த்தல்-செலுத்துதல். 'ஒழுகை யுய்த்த (17) ஆடுநடை யண்ணல் (7) என மாறிக் கூட்டுக என்பர் பழையவுரைகாரர்.

---

‡. சாடு - சகடம். § கடாவோ பாதியாக - கடாக்களை ஒப்ப.

*7—9.* ஆடுநடையண்ணல், நின் நோய்தபு நோன்றொடையினை நிற்பாடு மகள் காண்பாளாக என்க.

சேரனின் மறம் புகழ் முதலியவற்றைப் பாடினி பாடுதலின் 'நிற்பாடு மகள்' என்றார்.

''புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே'' **புற 11: 10-11.**

''திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை'' **பு. வெ. மா 219.**

என வருவன காண்க. பரிசிலர் அரசரைப் பாடுதல், ''நின்னு நின் மலையும் பாடி வருநர்க்கு'' (**புற** 130: 3) என்பதனாலுமறிக. நோய்தபு நோன்றொடையினை (9) நிற்பாடுமகள் காணியர் (7) என மாறிக் கூட்டுக. இதனாற் பாடு மகள் நின்னைப் பாடிக் காணும்படி மறம் வண்மை முதலியவற்றையுடையை யாகி நோயின்றி நீ நெடுங்காலம் வாழ்கவென்று வாழ்த்தினார். காடு (23)காணி லியரே(8) என இயையும்.

நிற்புகழ்ந்த யாக்கையென்றது வீரர் நின்ற அணியிலே சென்று அவ்வணி யைக் குலைத்தலும், தன் வீரர்க்கு மெய்புகு கருவிபோலப் போரிற் புக்கால் வலியாய் முன்னிற்றலும் முதலிய இயல்புகளை எல்லா வீரரும் சொல்லி நின், னைப் புகழ்தற்குக் காரணமாகிய யாக்கையென்றவாறு.

''ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்த'' **சிறுபாண் 211-2.**

எனப் பிறரும் கூறுதல் காண்க. புகழ்ந்த யாக்கை, ''நோய் தீருமருந்து'' (**கலி** 60: 18) போனின்றது. முழுவலி – நிரம்பிய மெய்வலி. ''முடலை யாக்கை முழுவலி மாக்கள்'' என்றார் **நெடுநல்வாடையினும்** (32). 'துஞ்சும்' என்றார் அவ்வலி யாக்கைக்கண் என்றும் நிலைபெறுதலின். முழுவலி துஞ்சும் நோன் றொடைக்கண் நோய் சிறிதுமின்மை தோன்ற 'நோய்தபு' நோன்றொடை என றார். தபுதல்–நீங்குதல். ''நோய்தபு ஞாயிறே'' (**கலி** 143: 22) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. நோன் என்றது தசையின் வலியை. தொடை என் பதும் யாக்கை என்பதுபோல உடம்பிற்கு ஒருபெயர்.

யாக்கையாகிய நோய்தபு நோன்றொடை என்க. யாக்கையை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினமையான் இச்செய்யுளுக்கு **நோய்தபு நோன்றொடை** என்று பெயராயிற்று.

*17—23.* பைந்துணிகளை வைத்த இடமறந்த கூகையை அதன் பெடை யாகிய குரால் வருத்தும் பறந்தலையையும் மன்னர் மறைத்த தாழியையும் வன்னிமன்றத்தினையுமுடைய காடு என்க.

கொழு–கொழுமை. துணி – துண்டம். ''வெளிற்றுப் பனந்துணியின்'' **புற** 35: 22. வைத்த தலை, வைத்தலை என விகாரமாயிற்று. வைத்தலை மறந்த என்பதற்குத் துணியைத் தன் பெடைக்கென வைத்தலை மறந்த எனினுமாம். குரால் ஊன் உண்டல் ''புலவூன் பொருந்திய குராலின்'' (**மணி** 6: 76) என்பத னுலுமறிக துய்த்தலைக் கூகை என்றது பஞ்சுபோன்ற குட்டினையுடைய

கூகைச் சேவலே. "குடுமிக் கூகை" (மதுரைக்170) என்றார் பிறரும். துய்-பஞ்சு போலும் மயிர் புற 158: 24 உரை. கூகையையென இரண்டாவது விரிக்க. கவலே கவற்றும் என்பது "அணியலு மணிந்தன்று" (புற 1: 5)என்பதுபோல வந்தது. வருத்தத்தைச் செய்யும் என்பது பொருள். குரால்-கூகைப்பெடை.

"குடுமிக் கூகை குராலொடு முரல" மதுரைக் 170.
கூகைச் சேவல் குராலோ டேறி" நற் 319. 4.

என வருவன காண்க. பறந்தலையென்றது இடுகாட்டிற் பிணஞ்சுடுமிடத்தை.

"கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி
யொள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது" புற 240: 9–10.
"கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயற் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை" புற 245: 3–6.

என வருவன காண்க

முரசுடைத் தாயத் தரசர் பலரை வென்று கடலெல்லைவரையுமுள்ள அகன்ற இடத்தையுடைய உலகத்தை ஆண்டு இனிது கழிந்த மன்னன் என்க.

"இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநில
முடையிலே நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே" புற 363: 1-6.

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது

பிறராற் கொள்ளப்படாமையின் பழையதாய் வருகின்ற அரசுரிமையா தல் தோன்றத் 'தாயத்து' என்றார். தாயம்-பழையதாய் வருகின்ற உரிமை. "மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப், பாறர வந்த பழவிறற் றாயம்" (புற 75: 1–2) என்றார் பிறரும். அது பேரரசர் தாயமாதல் தோன்ற "முரசுடைத் தாயத்து" என்றார். சோழன் நலங்கிள்ளி என்னும் பெருவேந்தன், தனது அரசாட்சியை, "முரசுகெழு தாயத் தரசு" (புற 73: 3) எனக் கூறுதல் ஈண்டறியற்பாலது ஓட்டி-கெடுத்து மதுரைக் 678 நச். முந்நீர் முழுவதும் வளைஇப், பரந்துபட்ட வியன் ஞாலமாதலின் 'துளங்குநீர் வியலகம்' என்றார். நீர் இடையறாது அசைதலின் கடலைத் 'துளங்குநீர்' என்றார். "துளங்குநீர் வியலகம்" (பதிற் 51: 1) எனப் பிறரும் கூறுதல் காண்க. துளங்குதல்-அசைதல். 'முரசுடைத் தாயத் தரசுபலவோட்டி' என்றதனால் மன்னரின் பேராற்றலும், 'துளங்குநீர் வியலக மாண்டு' என்றதனால் பெருஞ்செல்வமுடைமையும் கூறினார். அத்தகைய மன்னர்களும் இறுதியில் இறந்துபோதல் தோன்ற "ஆண்டு கழிந்த மன்னர்" என்றார். இனிதுகழிந்த என்றது உலகம் முழுவதையும் ஆண்டு 'இனி உலக வாழ்வு அமையும்' என்று அதனிற் பற்றின்றி இனிதாகக் கழிந்த என்றவாறு. இனி, நோய் முதலியன இன்றிக் கழிந்த எனினுமமையும்.

தாழியென்பது பிணங்களைக் கவித்தற்கு மண்ணினுற் செய்யப்படும் இடமகன்ற கலம். "கலஞ்செய் கோவே......கண்ணகன் ருழி, வனைதல் வேட்டனையாயின்" (புற 228) என வருதல் காண்க. இறந்த மன்னரைத் தாழியுட் கவிக்கு மரபு,

"கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்
றேவருலக மெய்தின னாதலி
னன்ஞேற் கவிக்குங் கண்ணகன் ருழி" புற 228: 10-2

என்பதனுலுமறிக.

வன்னிமன்றமென்றது அக்காட்டில் வன்னிமரத்தையுடைய இடத்தினை. அதுதான் பிணத்தொடு சென்ருர் எல்லாரும் இருந்து மன்றுபோறலின் மன்றெனப்பட்டது. விளங்கிய காடு என்றது மன்னுயிரெல்லாம் அழியத் தான் மாத்திரம் அழியாது நிலைபெற்று இறந்தோர் உடலையெல்லாம் தின்னும் தன் தொழில் விளங்கிய காடென்றவாறு.

"அஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர் காதல ரழுத கண்ணீ
ரென்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
வெல்லார் புறனுந் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாம் தானுய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே" புற 356: 4-9.

"முதியோ ரென்னு னிளையோ ரென்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்" மணி 6: 99-101.

என வருவன காண்க.

இதனுற் சொல்லியது அவ்வனை நீ நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்திய வாருயிற்று.

## பழையவுரை

ஆர்ப்பொடு (1) அமர் கடந்து (3) எனக் கூட்டுக. 5. கலமென்றது தான் அணிந்த ஆபரணங்களை. 8. நிற்புகழ்ந்த யாக்கையென்றது நின்னை எல்லா வீரரும் சொல்லிப் புகழ்தற்குக் காரணமாகிய யாக்கையென்றவாறு. யாக்கையாகிய (8) நோய்தபு நோன்றொடை (9) என்க. யாக்கையை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினமையான் இதற்கு நோய்தபு நோன்றொடை என்று பெயராயிற்று. 10. அறுகையென்பான் மோகூர் மன்னனுக்குப் பகையாய்ச் சேரனுக்கு நட்பாயிருப்பானேர் குறுநில மன்னன். 11. சேணனுயினும் கேளெனமொழிந்தென்றது அக்கோ நீ செய்கின்ற வலிக்கு உதவி செய்தற்குச் சேயனுயினும் எனக்கு அவன்தான் நட்பெனச்சொல்லியென்றவாறு. 12. கனையாப் பூசல் — ஒருவரால் மாற்றவொண்ணுத வருத்தம். 13. அரண்கள் தாஉறீஇ யென்றது மாற்ருர் அரண்களை அழித்தற்ருெழிலைத் தன்பாலே உறுவித்தென்றவாறு. 16. முரசுசெய முரச்சியென்றது அவ்வேம்பினை முரசாகச் செய்யும்படி முற்றுவித்தென்றவாறு. முற்றுவித்தலாவது ஒழுகையேற்றலாம்

படி துண்டங்களாகத் தறிப்பித்தல். களிறென்றது மோகூர் மன்னன் களிற்றினை. களிறு பல பூட்டியென்றது அவனேறும் யானைகளை அவனை அவமதித்துச் சாட்டிற்குக் கடாவோபாதியாகப் பூட்டியென்றவாறு. பூட்டியென்பதற்கு "வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர், பல்லிருங் கூந்தன் முரற்சியாற், குஞ்சர வொழுகை பூட்டி" என இதன் பதிகத்து வந்தமையால் அம்மகளிர் கூந்தன் மயிர்க் கயிற்றாற் பூட்டியெனக் கொள்க. ஒழுகையுய்த்த (17) ஆடுநடையண்ணல் (7) என மாறிக் கூட்டுக. 18. கூகையையென இரண்டாவது விரிக்க. 17–9. பைந்துணிகள் வைத்த இடமறந்த கூகையை அதன் பெடையாகிய குரால் கவற்றுமென்க. வைத்தலை - விகாரம். கவலென்னும் பெயரைத் தாவென்பதுபோல வருத்தமென்றுரைக்க. கவலை கவற்றல்– வருத்தல். பறந்தலையென்றது இடுகாட்டிற் பிணஞ்சுடுமிடத்தை. 23. வன்னி மன்றமென்றது அக்காட்டில் வன்னிமரத்தையுடைய இடத்தினை. அதுதான் பிணத்தொடு சென்றாரெல்லாரும் இருந்து மன்று போறலின் மன்றெனப்பட்டது. விளங்கிய காடென்றது தன்றொழில் விளங்கிய காடென்றவாறு.

ஒழுகையுய்த்த (17) ஆடுநடையண்ணல் (7) நின் நோய்தபு நோன்றொடையினை (8) நிற்பாடுமகள் காண்பாளாக (7); காடு (23) காணுதொழிவதாக (8) என மாறிக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவனை நீ நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்திய வாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

2. வெல்கொடி: பதிற் 14: 16 ஒப்பு.

வான்றோய் வெல்கொடி: "வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடி" "மலையுறழ் யானை வான்றோய் வெல்கொடி" பதிற் 5ம் பதிகம் 1; 69: 1.

வெல்கொடியையுடைய தேர்: "வெல்கொடித், துனைகா லன்ன புனைதேர்" அக 251: 6–7.

கொடி தேர்மிசை நுடங்கல்: பதிற் 25: 11–3 ஒப்பு.

3—4. அமர்கடந்து பெற்றவற்றை ஈதல்: பதிற் 20: 13–6 ஒப்பு.

4. ஓம்பாது வீசி: பதிற் 20: 16 ஒப்பு.

5. கலஞ்சுரத்தல்: பதிற் 37: 4 ஒப்பு.

7. ஆடுநடை: "ஆடுநடைப் பொலிந்த புகழ்ச்சியின்" அக325: 7.

பாடுமகள்: 'பாடுமகளி ரோடே பொருந்தப் பரந்து' பட்டினப் 155 நச்.

9. முழுவலி: பெரும்பாண் 61; மதுரைக் 676; நெடுநல் 32.

வலிதுஞ்சல்: "வலிதுஞ்சு தடக்கை" புற 394: 3.

நோய்தபு: "நோய்தபு நெடுஞ்சுடர்" கலி 137: 20.

12. களையாப் பூசல்: "சிறுமையுற்ற களையாப் பூசல்" மலைபடு 314.

14. முரசுகொள்ளல்: "இருபெரு வேந்தரையு முடனிலை வென்று, முரசுங் குடையுங் கலனுங் கொண்டு" பதிற் 8 ஆம் பதிகம் 5–6; "அரசுபட வமருழக்கி, முரசுகொண்டு" மதுரைக் 128–9; "முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக், கொன்றுகளம் வேட்ட ஞான்றை" அக 36: 21–2; "உடலருந்

துப்பி ஞென்றுமொழி வேந்தரை, யணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப், பிணியுறு முரசங் கொண்ட காலை" "சினங்கெழு வேந்தரை, யருஞ்சமஞ் சிதை யத்தாக்கி முரசமொ, டொருங்ககப் படேஎ னாயின்" "மலைந்தோர், விசிபிணி முரசமொடு மண்பல தந்த, திருவீழ் நுண்பூட் பாண்டியன்" புற 25: 5–7; 72: 7-9; 179: 3-5.

15. நெடுமொழி: "நெடுமொழி மன்னர்" புற 54: 9.

18. துய்த்தலை: நற் 57: 3; அக 191: 1; புற 158: 24.

19. கவலை தவற்றும்: "உருவில் பேய்மகள் கவலை கவற்ற" பதிற் 67:11; "பேதை நெஞ்சங் கவலை கவற்ற" "ஏதிலாளன் கவலை கவற்ற" நற் 144: 4; 216: 8.

20. முரசுடைத் தாயத் தரசு: "முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்" புற 73: 3.

துளங்குநீர் வியலகம்: பதிற் 31: 21; 63: 17-8; 88: 3; முருகு 293; பொருந 178: 9; சிறுபாண் 114; பெரும்பாண் 18; 409–10; மதுரைக் 1-4; 199; நற் 130: 10–11; குறுந் 101: 1; 300: 7; பரி 'மாநிலம்' 93; கலி 146: 28; அக 379: 6; புற 18: 1-2; 19: 1; 35: 1–3; 58: 21–2; 201: 17; 213: 8; 363: 1; 382: 17.

21—2. வியலகமாண்ட மன்னர்: "உலகமாண்ட வுயர்ந்தோர்" "மலர் தலை யுலக மாண்டுகழிந் தோரே" மதுரைக் 23: 237; "தெண்கடல் வளாகம் பொதுமையின்றி, வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்" புற189: 1-2.

22—3. தாழியுடைய காடு: "தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே" புற 364: 13.

---

## ஊன்றுவை யடிசில்

(45) பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணிப்
புற்றடங் கரவி னொடுங்கிய வம்பின்
நொசிவுடை வில்லி னொசியா நெஞ்சிற்
களிறெறிந்து முரிந்த கதுவா யெஃகின்
விழுமியோர் துவன்றிய வகன்க ணாட்பின்
எழுமுடி மார்பி னெய்திய சேரல்
குண்டுக ணகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டுந்தா முள்ளழித் துண்ட
நாடுகெழு தாயத்து நனந்தலை யருப்பத்துக்
கதவங் காக்குங் கணையெழு வன்ன
நிலம்பெறு திணிதோ ளுயர வோச்சிப்
பிணம்பிறங் கழுவத்துத் துணங்கை யாடிச்
சோறுவே றென்னா வூன்றுவை யடிசில்
ஓடாப் பீட ருள்வழி யிறுத்து

முள்ளிடு பறியா வேணித் தெவ்வா
சிலைவிசை யடக்கிய மூரி வெண்டோல்
அனைய பண்பிற் றானை மன்னர்
இனியா ருளரோநின் முன்னு மில்லை
மழைகோளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவுந் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி யிமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடன் மறுத்திசி னோரே.

**இதுவுமது.**
**பெயர்—ஊன்றுவை யடிசில் (13).**

ப—ரை: *1—6.* *எழுமுடி மார்பின் எய்திய சேரல்—எழுமுடியாற் செய்த ஆரத்தை மார்பின்கண்ணே அணிந்த சேரனே, பொலம்பூ தும்பை—பொன்னாற் செய்த பூவினையுடைய தும்பையையும், பொறி கிளர் தூணி—ஒளி விளங்குகின்ற தூணியையும், புற்று அடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்—புற்றில் அடங்கிய பாம்பைப்போல அத்தூணியின்கண்ணே தங்கிய அம்பினையும், நொசிவுடை வில்லின்—வளைதலையுடைய வில்லினையும், நொசியா நெஞ்சின்—ஊறஞ்சி ஒடுங்காத நெஞ்சினையும், களிறு எறிந்து முரிந்த கதுவாய் எஃகின்—களிற்றைக் குத்தி முரிந்த வடுப்பொருந்திய வாயையுடைய வேலினையுமுடைய, விழுமியோர் துவன்றிய அகன்கண் நாட்பின்—வீரர்கள் நிறைந்த அகன்ற இடத்தையுடைய போர்க்களத்தில்,*

*7—12* *குண்டு கண் அகழிய மதில் பல கடந்து—ஆழ்ந்த இடத்தையுடைய அகழியையுடைய மதில்கள் பலவற்றை அழித்து, தாம் உள் அழித்து உண்ட—தாம் உள்ளே புகுந்து அரணினுள்ளோரை அழித்து உணவினை உண்ட, நாடுகெழு தாயத்து—நாட்டிற் பொருந்திய பழையதாய் வருகின்ற உரிமையையுடைய, நன தலை அருப்பத்து—அகன்ற இடத்தையுடைய அரண்களில், பிணம் பிறங்கு அழுவத்து—பிணங்கள் உயர்ந்து தோன்றும் பரப்பில், கதவம் காக்கும் கணை எழு அன்ன—கதவுகளைக் காக்கும் திரண்ட கணைய மரத்தைப் போன்ற, நிலம் பெறு திணிதோள்—பகைவர் நிலத்தைப் பெறுதற்குக் காரணமாகிய திணிந்த கையை, உயர ஓச்சி—உயரவீசி, பண்டும் பண்டும் துணங்கை ஆடி—முன்னும் முன்னும் துணங்கைக் கூத்தினை ஆடி,*

*13—17.* *சோறு வேறு என்னு—அரசனுக்கு அடுசோற்றில் இச்சோறு வேறு என்று சொல்லப்படாத, ஊன் துவை அடிசில்—ஊனையும் துவையையுமுடைய உணவினையுடைய, ஓடா பீடர் உள்வழி இறுத்து—முதுகிடாத வலியையுடைய வீரர் உள்ளவிடத்தே சென்று தங்கி, முள் இடுபு அறியா ஏணி தெவ்வர்—முள் இட்டு அரண் செய்தலை அறியாத பாசறை எல்லையையுடைய பகைவரின், சிலை விசை அடக்கிய—வில்லினின்று வரும் அம்பின் வேகத்தை அடங்கச் செய்த, மூரி வெண் தோல் அனைய பண்பின்—வலிய வெண்மையான தோற்கடகு போன்ற பண்பினையுடைய, தானை மன்னர்—படையினையுடைய மன்னராகிய.*

18—மழை கொள குறையாது—மேகம் முகத்தலாற் குறையாமலும், புனல் புக நிறையாது—யாற்றுநீர் புக மிகாமலும், விலங்கு வளி கடவும்-குறுக்காக வீசுகின்ற காற்றாற் செலுத்தப்படும், துளங்கு இரு கம சூல்-அசைகின்ற பெரிய நிறைந்த நீரினிடத்து, வயங்கு மணி இமைப்பின் வேல் இடுபு – விளங்குகின்ற மணியிமைப்புப்போலவிட்டுவிளங்கும் வேலை ஏற்றி நடப்பித்து, முழங்கு திரை பனிகடல் மறுத்திசினோர் – முழங்குகின்ற அலையையுடைய குளிர்ந்த கடலிற் புக்கு ஒருவினை செய்தற்கு அரிது என்பதனை மறுத்தோர், இனி யாருளரோ— இப்பொழுது யார் உளர். முன்னும் இல்லை நினக்கு முன்னும் இல்லை.

முடிபு சேரல், தானை மன்னராகிய கடன்மறுத்திசினோர் இனியாருளரோ? நின்முன்னுமில்லை என்க.

ஆ—ரை: 1—6. தும்பையையும் தூணியையும் அம்பினையும் வில்லினையும் நெஞ்சினையும் எஃகினையுமுடைய விழுமியோர் துவன்றிய நாட்பு என்க.

பொருதற்குச் செல்லும் வீரர் பொன்னாற் செய்த தும்பையினைச் சூடிய தனால் 'பொலம் பூந் தும்பை' என்றார். "பொலம்பூந் தும்பை, யீரைம் பதின் மரும் பொருதுகளத் தொழிய" (புற 2: 14-5) என்றார் பிறரும். பொறி-ஒளி. 'கண்பொறி போகிய-கண்ணொளி மழுங்கிய' புற 16: 13 உரை. புள்ளி எனினு மமையும். தூணி—அம்பு வைக்கும் கூடு. "வில்லோர் தூணி வீங்கப் பெய்த, அப்பு" (அக 9: 2-3) "அம்புபெய் தூணி" சீவக 2286) என வருவன காண்க. புற்றடங்கு அரவினைப் போலத் தூணியில் ஒடுங்கிய அம்பு என்க. தூணிக்குப் புற்றும் அப்புகளுக்குப் பாம்பும் உவமை. "புற்றி னாடு நுழை நாக மன்ன புகைவேக வாளிகள்" (கம்ப. நாகபாசப் 86) எனப் பிறரும் கூறுதல் காண்க.

பொருதற்கு நாணேற்றிய வில்லினையும் போரில் வரும் ஊறுக்கு அஞ்சி ஒடுங்காத மனத்தினையுமுடைமையால் 'நொசிவுடை வில்லி னொசியா நெஞ்சின்' என்றார். நொசிவு—நுண்மை. "நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை" என்பது தொல்காப்பியம் (உரி 78). நுண்மை – ஈண்டு வளைவின் மேற்று. 'நொசிந்த நோக்கினன் – வளைந்த நோக்கினன்.' என நச்சினார்க்கினியர் உரைத் தலுங் காண்க. (சீவக 2010 உரை). 'ஓசியா எனப் பிரித்து வளைதலில்லாத எனப் பொருள் கோடலுமொன்று. ஓசிதல்- வளைதல் என்னும் பொருட்டாதல் "கடிகாவிற் காலொற்ற வொல்கி, யொசியாக் கொடி" (கலி 92: 52: 3) என்புழிக் காண்க.

போரின்கண் பகைவர் களிற்றைக் குத்துதலால் இலைமுரிந்த வடுப்பட்ட வேலைக் 'களிறெறிந்து முரிந்த கதுவாயெஃகம்' என்றார். "எறிந்திலை முறிந்த கதுவாய் வேலின்" "கதுவாய் போகிய நுதிவா யெஃகமொடு" (புற 347: 4; 353: 15) என வருவன காண்க. கதுவாய்-வடு. "உயர் தொல்குடிக் கதுவா யாகப், பண்பில் சிறுதொழில் பயின்றதை யன்றியும்" (பெருங் (1) 35: 166-7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. எஃகம்—வேல். களிற்றை வேலால் எறிதல்,

"காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென" மலைபடு 129.

"வேலி னட்ட களிறு" புற 302: 9.

என வருவனவற்றானுமறிக. விழுமியோர் – பெரியோர். களிற்றை எறிந்த பெருஞ் செயலையுடையராகலின் வயவரை 'விழுமியோர்' என்றார்.

"ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செ யாடவர்" நெடுநல் 169–71.

"களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" புற 312: 6.

என வருவன காண்க. இனி, நிலையாமை எப்பொழுதும் உள்ளத்திற் கொண்டிருத்தலமைந்த வயவராதல்பற்றி 'விழுமியோர்' என்றார் எனினுமமையும். "காஞ்சி சான்ற வயவர்" (பதிற் 65: 4; 90: 39) எனப் பிறரும் கூறுதல் காண்க. "புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்கு" (மலைபடு 88) என்புழிக் 'காஞ்சி சான்ற வயவராதலின் அவரைப் புலவர் என்றார்' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. வயவரை விழுமியோர் எனல் "வேலீண்டு தானை விழுமியோர்" என்னும் புறத்தினுங்காண்க. (புற 41: 2)

களத்திற் பகைவர் படை கெட்டழியவும் சேரன் வீரர் கெடுதலின்றிக் களத்தில் நிறைந்திருத்தலின் 'விழுமியோர் துவன்றிய நாட்பின்' என்றார். துவன்றிய–நிறைந்த. "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" பதிற் 11: 23. இருதிறத்துப் படைகளும் நின்று வினைசெய்த அகன்ற இடமுடைய போர்க்களமாதலின் 'அகன்கண் நாட்பின்" என்றார். ஞாட்பு என்பது நாட்பு என வந்தது. ஞாட்பு–போர்க்களம். "இருந்துவாள் வயவ ரருந்தலை துமித்த, படுபுலாக் கமழு ஞாட்பில்" அக 89: 13-4. 'பூசற்களம்' என்பர் அகநானூற்றுப் பழையவுரைகாரர். (அக 89: 14 உரை) நாட்பின்(5) பிணம் பிறங்கழுவத்து (12) எனக் கூட்டுக.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் முன்னோரணிந்து வந்த எழுமுடியாற் செய்த ஆரத்தை மார்பின்கண் அணிந்திருந்தமையின் 'எழுமுடி மார்பி னெய்திய சேரல்' என்றார். இனி, "நாட்பின், எழுமுடி மார்பின்" எனக்கூட்டி நாட்பின்கண் எதிர்ந்த அரசர் எழுவரை வென்று அவர்கள் எழுமுடியானுஞ் செய்ததோர் ஆரமணிந்த மார்பு எனவுரைத்தலமைதோவெனின், இச்செங்குட்டுவன் சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மரை வென்றமை,

"ஆராச்செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ" (5ஆம் பதி 18-9)

என இதன் பதிகத்துக் கூறப்படுவதுபோல் ஒருங்கு எதிர்ந்த அரசர் எழுவரை வென்ற செய்தி யாண்டுங் கூறப்படாமையின் இவன் தன்முன்னோர் அணிந்து வந்த எழுமுடியாரத்தை அணிந்திருந்தான் எனக்கொள்வதல்லது அமையாதென்க. முன்னோர் அணிந்த எழுமுடியாரத்தை அவர் பின்னோரும் அணிந்து வந்தமை களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலை, "எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து......நார்முடிச் சேரல்" (பதிற் 40: 13-6) எனக் காப்பியாற்றுக்காப்பியனார் என்னும் புலவர் கூறுமாற்றானுமறிக. சேரல், அண்மை விளி.

பகைவர் எளிதிற் கடத்தற்கரிய ஆழ்ந்த இடத்தையுடைய அகழி சூழ்ந்த மதிலாதல் தோன்றக் 'குண்டுக ணகழிய மதில்' என்றார். குண்டுகணகழி என்பதற்கேற்ப மதில் என்பதற்கு உயர்வகல மிக்க மதில் எனக்கொள்க. ''குண்டு கிடங்கின் நெடுமதில்'' (பதிற் 20: 17–8) எனவும், ''நிலவரை யிறந்த குண்டு கண் ணகழி. வான்றோய் வன்ன புரிசை'' (புற 21 : 2-3) எனவும் வருவன காண்க. மதில்பல கடந்து என்றது பகையரசர் பலரின் மதில்கள் பலவற்றைக் கடந்து என்றவாறு. இனி அகழிசூழ்ந்த புறமதில் முதலாக உண் மதில்கள் பலவற்றைக் கடந்து எனினுமாம். கடந்து–அழித்து. 'அரண்கடந்து– அரணை அழித்து எனப் புறநானூற் றுரைகாரர் உரைத்தலுங் காண்க. (புற 11: 8 உரை). 'உட்புகுந்து' எனினுமமையும். உள்ளழித்து–அரணினுள்ளே அழிவுசெய்து. ''முரணவியச் சினஞ்சிறந்தோ ரரணகத்தோரை யமர் வென்றன்று'' (பு. வெ. மா 116) என வருதல் காண்க. உண்ட என்றது இன்று இனிது நுகர்ந்தனமாயின் மதில் கடந்து உள்ளழித்தன்றி உணவு உண்குவமல்லேம்' என்று தாம் உரைத்த வஞ்சினத்துக்கு ஏற்ப மதில் கடந்து உள்ளழித்து உணவினை உண்டவென்றவாறு.

''நெடுமதி னிரைஞாயில்
அம்புடை யாரெயி லுள்ளழித் துண்ட
அடாஅ வடுபுகை யட்டுமலர் மார்பன்'' பதிற் 20: 18-20.

எனப் பிறரும் கூறுதல் காண்க.

நாடுகெழு அருப்பம் எனக் கூட்டுக. ''அகநாடு புக்கவ ரருப்பம் வௌவி'' (மதுரைக் 149) எனப் பிறரும் வருதல் காண்க. தாயத்து அருப்பம் எனக் கூட்டி பகைவராற் கொள்ளப்பட்டமையின் பழையதாய் வருகின்ற உரிமையையுடைய அருப்பம் எனக் கொள்க. 'தாயம்–பழையதாய் வருகின்ற உரிமை' புற 73: 3 உரை. அகத்தோர் நலிவின்றி யிருத்தற்கேற்ற அகன்ற இடத்தையுடைய அருப்பமாதலின் 'நனந்தலை யருப்பம்' என்றார்.

''சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்'' குறள் 744.

என்றார் திருவள்ளுவரும். அகழும் மதிலுமுதலாகிய காவல்களையுடைய அரிய அரணாதலின் 'அருப்பம்' என்றார்.

''அருங்குழுமிளைக் குண்டுகிடங்கி
னுயர்ந்தோங்கிய நிரைப்புதவி
னெடுமதி னிரைஞாயி
லம்புமி ழயிலருப்பம்'' மதுரைக் 64: 7.

எனச் சான்றோர் கூறுதல் காண்க. அருப்பம்–அரிய அரண். கலி 146: 47 நச். அருப்பத்துப் பிணம் பிறங்கழுவத்து (12) எனக் கூட்டுக.

கதவம் என்றது எயிற் கதவத்தை. எழு–கணையமரம். இது கதவின் புறத்தே குறுக்காகப் போடப்படுவது. திரட்சியுடைமையால் இதனைக் 'கணையெழு' என்றார். கணை-திரட்சி. ''கணைக்கா னெய்தல் பெரும்பாண் 213. பகைவரது யானை மதிற்கதவத்தை எளிதிற் சிதையாதவாறு இத் திரண்ட எழு

தடுத்து வலிபெற நிற்றலின் 'கதவங் காக்குங் கணையெழு' என்றார். "எயிற் கதவங் காவல் கொண்ட, எழூஉ" (பதிற் 31: 19-20) "காப்புடைய வெழு" "எழுவிட் டமைத்த திண்ணிலைக் கதவி, னரைம ணிஞ்சி" (புற 14: 2; 341: 4-5) என வருவனவன காண்க. எழுவன்ன திணிதோள் (11) எனக் கூட்டுக. "எழுவுறழ் திணிதோள்" (புற 61: 16) என்றார் பிறரும். மாறுபட்ட பகைவரைப் பொருது வென்று அவர் நிலத்தைப் பெறுதற்குக் காரணமான திணிந்த தோளாதலின் 'நிலம்பெறு திணிதோள்' என்றார். இச் சேரன் பகைவர் நிலத்தைக் கொண்டமை "ஆண்மலி மருங்கி னாடகப் படுத்து .. ஒன்னார், உருப்பற நிரப்பினை" (பதிற் 5?: 14-6) என மேல் வருதலானுமறிக. திணி தோள்–'திண்ணிய தோள்' சிறுபாண் 49 நச். 'தசை செறிந்த தோள்' புற 39: 11 உரை. தோள் என்றது ஈண்டுக் கையை. "தாளிற் கடந்தட்டுத் தந் தையைக் கொன்றானைத், தோளிற் றிருகுவான் போன்ம்" (கலி 101: 31-2) என்புழிப் போல. அழுவத்துத் தோளுயர வோச்சித் துணங்கை யாடி எனக் கூட்டுக.

பிணம் பிறங்கழுவம்–இருதிறத்துப் படைகளும் மண்டிப் பொருதலான் மாவும் மாக்களும் பட்டுப் பிணங்கள் உயர்ந்த அழுவம். குட்டுவன் பிணம் பிறங்கப் பொருதமை, "படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து......அறுத்த, பெருஞ்சினக் குட்டுவன்" (பதிற் 49: 13-7) என்பதனாலுமறியப்படும். அழுவம்-பரப்பு. "உரவுநீ ரழுவத்து" பெரும்பாண் 350. ஈண்டு அழுவம் என்றது அகன்கண் ஞாட்பின் உட்களத்தை. பிணம் பிறங் கழுவத்துத் (12) தோளுயர வோச்சித் (11) துணங்கை யாடி (12) எனக் கூட்டுக. இதனாற் குட்டுவன் பகைவரைப் பொருது வென்றமை கூறினர், "வேந்துடை யருஞ் சமங் கொன்று புறம்பெற்று.......வென்றியாடிய தொடித்தோண் மீகை" "மன்பதை பெயர வரசுகளத் தொழியக், கொன்றுதோ ளோச்சிய வென் றாடு துணங்கை" (பதிற் 40: 10-12; 77: 3-4) எனச் சான்றோர் கூறுதல் காண்க.

பண்டும் பண்டும் (8) துணங்கை ஆடி (12) ஓடாப் பீட ருள்வழி யிறுத்து (14) எனக் கூட்டிப் பகைவரை வென்று முன்னும் முன்னும் துணங்கையாடி அதனாலுமமையாமல் மேலும் பொருதற்குப் பீடருள் வழியிறுத்து எனவுரைக்க. இதனை "அட்டா னானே குட்டுவன்" (பதிற் 47: 1) என மேல் வருதலினாலு மறிக. பண்டும் பண்டும்–முன்னும் முன்னும். "நின்னடி தொழுதனெம்....முன் னும் முன்னும் யாஞ் செய்தவப் பயத்தால்" (பரி 13: 61-3) என்புழி 'முன் னும் முன்னும்–பண்டும் பண்டும்' எனப் பரிமேலழகர் பொருளுரைத்தமை காண்க. 'முன்பேயும் முன்பேயும்' என்பர் புறநானூற்றுரைகாரர். (புற 151: 1 உரை).

சோறு வேறென்னா அடிசில் என்றது அரசனுக்கு அடுசோற்றில் இச்சோறு வேறு என்று சொல்லப்படாத அடிசில் என்றவாறு. இவ்வடைச் சிறப்பானே இச் செய்யுளுக்கு ஊன்றுவையடிசில் என்று பெயராயிற்று.

ஊன்றுவை என்பதற்கு ஊனையும் துவையையும் என் உம்மை விரிக்க, "ஊன்றுவை, கறிசோ றுண்டு" (புற 14: 13-4) என்புழி 'ஊன்றுவை–ஊனை

யும் துவையையும்' என அதன் உரையாசிரியர் உரைத்தமை காண்க. துவை-உணவின் விசேடம். இது மிக்க சுவையுடைத்தென்பது 'ஆறுங்கொழுந்துவை யென்பதற்கு விருப்பம் அமையாத கொழுந்துவையெனினுமமையும்' என்னும் புறப்பாட்டுரையானும் (புற 113: 2) அறியப்படும். ஊன்றுவையடிசில் அமிழ்துபோலும் இனிய உணவாதல்,

"குய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசி
விரவலர்த் தடுத்த வாயில்" புற 250: 1–2.

"அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில்" புற 390: 17.

என வருவனவற்றாலும், இதனை அரசரும் உண்டு வந்தமை,

"பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது
பிறிதுதொழி லறியா வாகலி னன்று
மெல்லிய பெரும தாமே" புற 14. 13-6.

"கனிகுய்யாற் கொழுந்துவையர்
..............................................
ஏம மாக விந்நில மாண்டோர்" புற 360. 5-8.

என வருவனவற்றானுமறியப்படும். அரசர் வீரர்க்கு ஊன்றுவை யடிசில் அளித்தல்,

"செவ்வூன் றோன்ற வெண்டுவை முதிரை
வாலூன் வல்சி மழவர்" பதிற் 55: 7–8.

என்பதனானுமறியப்படும். அடிசிலையுடைய பீடர் என இயையும். முதுகிடாத வலியையுடைய வீரராகலின் 'ஓடாப் பீடர்' என்றார். ஓடா – முதுகிடாத பெரும்பாண் 102 நச். பீடர்-பீடுடையவர். பீடு – வலி. "வேந்துபீ டழித்த வேந்துவேற் றானையொடு" (புற 225: 5) என்புழிப் பீடு-வலி என அதன் உரையாசிரியர் உரைத்தமை காண்க. ஊன்றுவை யடிசிலையுடைய ஓடாப்பீடர் என்றதனாற் பீடுஎன்பதற்கு உடல்வலியும் மனவலியும் கொள்க. "நண்ணாரு முட்குமென் பீடு" (குறள் 1088) என்புழிப் 'பீடென்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங் கொள்க' எனப் பரிமேலழகர் உரைத்தமை காண்க. பீடர் தெவ்வரின் (15) படைவீரராவர். முதுகிடாத வலிமிக்கவீரர் உள்வழியன்றிப் போர் குறித்தார் தம்மோடு பொருதற்குச் சென்று தங்காமையின் 'ஓடாப் பீட ருள்வழி யிறுத்து' என்றார்.

"அம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
யன்னோர்" பதிற் 42: 5-7.

என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

முள்ளிடு பறியா வேணித் தெவ்வர் என்றது தம் படைப் பெருமையான் முள்ளிட்டு அரண்செய்தலை யறியாத பாசறையெல்லையையுடைய பகைவர் என்றவாறு. "வாய் காவாது பரந்துபட்ட வியன் பாசறை" (புற 22: 24–5). என்பதற்குப் 'படைப்பெருமையாற் பகைவருட்கும் மதிப்புடைமையின் இடங்

காவாது பரந்து கிடக்கின்ற அகன்ற பாசறை' என அதன் உரைகாரர் எழுதி யிருத்தல் ஈண்டறியற்பாலது. பாசறை எல்லையை முள்ளிட்டு அரண் செய்தல்,

> "இடுமுட் புரிசை யேமுற வளைஇப்
> படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" முல்லைப் 27-8.
>
> "அமரி னிட்ட வருமுள் வேலிக்
> கல்லென் பாசறை" புற 301: 3-4.

என வருவனவற்றாலுமறிக. முள் என்றது காட்டின்கண்ணவாகிய வேலமுள் முதலாயினவற்றை. "இனநன்மாச் செலக்கண்டவர், கவை முள்ளிற் புழை யடைப்பவும்" (புற 98. 7-8) எனப் பிறரும் கூறுதல் காண்க. இடுபு-இட்டு. முருகு 190 நச்; பரி 13: 59 பரிமேல்.

வில்லினின்று வேகத்துடன் வரும் அம்பைத் தோற்கடகு தடுத்து விடுத லின் 'சிலைவிசை யடக்கிய தோல்' என்றார். 'விடுகணை மொசித்த, மூரிவெண் டோல்" (புற 285: 8-9) எனப் பிறரும் கூறுதல் காண்க. இனிச் சிலைவிசை யடக்கிய தானை மன்னர் எனக் கூட்டி அம்பு செலுத்தும் வில்வீரத்தை அடக்கிய தானை மன்னர் எனினுமமையும். மூரி என்பதற்குப் பெரிய எனினு மமையும். தோல்-கடகு. அக 24: 14 உரை.

தோல் அனைய பண்பு என்றது தான் அம்பு படில் தளராது பிறர்க்கு அரணமாகும் தோற்கடகு போன்ற பண்பென்றவாறு. தம்முடைய படை பகைவர்மேற் போம் காலத்து அவரது அம்பு முதலியவற்றைச் செலுத்தும் படைக்கு முன்னே நின்று அதனைத் தடுத்துத் தம் படைக்கு அரணமாய் நிற் கும் குட்டுவனைப் போன்ற வீரப்பண்பினையுடைய பிறமன்னர் இவன் காலத் தின்மையின் 'தோலனைய பண்பின் தானை மன்னர் இனியாருளரோ' என்றார். மன்னர் தம் தானைக்கு தோலனைய பண்பினராய் நிற்றல்வேண்டுமென்பது, 'மெய்ம்மறையென்றது அச்சான்றோர்க்கு மெய்புகு கருவிபோலப் போரிற் புக்கால் வலியாய் முன்னிற்றலின்' (பதிற் 14: 12 உரை) என்னும் உரைப்பகு தியானும் அறியப்படும்.

18—22. மேகம் முகக்கக் குறைவுபடாமலும் யாறுகள் பாய மிகுதலைச் செய்யாமலும் கடல் இருத்தலின் 'மழைகொளக் குறையாது புனல்புக நிறை யாது' என்றார்.

> "மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
> கரைபொரு திரங்கு முந்நீர்" மதுரைக் 424-5.

எனப் பிறரும் கூறுதல் காண்க. மழை-மேகம். புனல் என்றது யாற்று நீரினை "யாறு கடற்படர்ந் தாஅங்கு" (மலைபடு 52) "மாக்கட னோக்கி, நிலவரை யிழி தரும் பல்யாறு" (புற 42: 19-20) என வருவன காண்க. குறையாது நிறை யாது என்னும் எச்சங்களைக் கடவும் என்னும் வினையொடு முடித்து அத னைக் கடவப்படுமெனவுரைக்க. விலங்குவளி என்பதற்கு பொங்கியெழும் காற்று எனினுமமையும். விலங்குதல் – பொங்கியெழுதல். "விலங்கு சினம் சிறந்து" (அக 212: 17) எனப் பிறரும் கூறுதல் காண்க. துளங்குதல் – அசை

தல். கமஞ்சூல்-நிறைந்த நீர். சூல்போறலாற் சூலெனப்பட்டது. கமஞ்சூல் என்றது கடல் நீரை. "துளங்கிருங் கமஞ்சூல், நளியிரும் பரப்பின் மாக்கடல்" (பதிற் 11: 2-3) எனப் பிறரும் கூறுதல் காண்க.

மணியிமைப்பின் வேல்-மின்னுப்போல் விளங்கும் வேல். "வேலு மின்னின் விளங்கும்" (புற 42-4) என்றார் பிறரும். மணியிமைப்புப்போலும் மின்னுக்கு 'மணியிமைப்பு' என்பது பெயராயிற்று. "மின்மிளிர்ந் ததுபோற் ......சுடர்மணி பிறழ" "விடுகதிர் மின்னென விளங்குமணி யிமைப்ப' (பெருங் (1) 46: 251-2; (3) 5: 92) எனப் பிறரும் மணியிமைப்புக்கு மின்னை உவமை கூறியிருத்தல் ஈண்டறியற்பாலது இனி, மணியிமைப்பின்வேல் என்பதற்கு மணியையுடைய விட்டு விளங்கும் வேல் எனினுமமையும். "மணி வேல் பணிகொண்டவா றின்றோ ராண்ட ஐயே" என்னும் திருக்கோவையார் (72) உரையில் 'மணிவேல் மணியையுடைய வேல்' எனப் பேராசிரியர் உரைத்தலுங் காண்க. மணி-வேலின் கடைமணி. இது இலைவடிவுபோன்ற வேலிற்கும் அதன் காம்பிற்கும் இடையில் மணிபோல் ஒளியும் திரட்சியுமுடைய திண்ணிய உறுப்பு. 'வேலின் கடைமணிபோற் றிண்ணியன்' என இவ்வுறுப்பைத் திண்ணிய வீரர்க்கு உவமை கூறுவர்.

குட்டுவன் கடலிற்புக்கு ஒருவினை செய்தற்கு அரிது என்பதனை மறுத்து வேலை ஏற்றி நடப்பித்துக் கடலை அரணாகக்கொண்டு தீவொன்றில் வாழ்ந்த பகைவரொடு பொருதற்கு மேற்சென்றமைபோற் பிறமன்னர் செல்லாமையின் 'மன்னர் இனியாருளரோ ...வேலிடுபு... . கடன் மறுத்திசினோரே' என்றார். குட்டுவன் கடலிற்புக்கு வினை செய்தமை,

"கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்" பதிற் 46: 11-3.

"மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறுஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃகம்" அக 212: 16-20.

என வருவனவற்றானுமறியப்படும். முழங்குதிரைக் கடல் என்றதனாற் கடுங் காற்றும் பேரலையும் உடைமையும், பனிக்கடல் என்றதனால் ஆழமுடைமையும் புலப்படுத்தினார். கடல் என்றது குடகடலை. மறுத்திசினோரே என்பதில் ஏ அசை. இனி – இப்பொழுது. "இனிய சொல்லி யின்னாங்குப் பெயர்ப்ப தினியறிந்தேன்" (கலி 14: 8-9) என்புழிப்போல.

இச் சேரனின் முன்னோனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் துளங்கு பிசிருடைய மாக்கடனீக்கிக் கடம்பறுத்த பெருவிறலோனாயிருப்பவும், கடன் மறுத்திசினோர் நின் முன்னும் இல்லை என்றது குட்டுவன் கடலிற் புக்குச் செய்த போர்த்திறம் பற்றி என்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## பழையவுரை.

மதில்பல கடந்து (7) உள்ளழித் துண்ட (8) அருப்பத்துப் (9) பிணம் பிறங்கழுவத்துத் (12) தோளோச்சிப் (11) பண்டும் பண்டும் (8) துணங்கை யாடி (12) எனா மாறிக் கூட்டுக. 13. சோறுவே றென்ற அடிசிலென்றது அரசனுக்கு அடுசோற்றில் இச்சோறு வேறென்று சொல்லப்படாத அடிசி லென்றவாறு. இவ்வடைச்சிறப்பானே இதற்கு ஊன்றுவையடிசில் என்று பெயராயிற்று. 16-7. தோல் அனைய பண்பென்றது தான் அம்புபடில் தள ராது பிறர்க்கு அரணமாகும் தோற்கடகுபோன்ற பண்பென்றவாறு. குறை யாது நிறையாது என்னும் எச்சங்களைக் கடவும் (20) என்னும் வினையொடு முடித்து அதனைக் கடவப்படுமெனவுரைக்க. மணியிமைப்புப்போலும் மின் னுக்கு மணியிமைப்பென்பது பெயராயிற்று. வேலிடுபென்றது வேலை ஏற்றி நடப்பித்தென்றவாறு. 22. கடன்மறுத்தலென்பது கடலிற்புச்கு ஒருவினை செய்தற்கு அரிதென்பதனை மறுத்தலை.

சேரல் (6) கடன்மறுத்திசினோராகிய (22) தானைமன்னர் (17) இனியா ருளரோ? நின் முன்னுமில்லை (18) எனக்கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. **பொலம்பூந் தும்பை:** "புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை" **மதுரைக்** 737; "பொலங்தோட்டுப் பைந்தும்பை" "பொலங் தும்பை" **புற** 22: 20; 97: 15.

2. **புற்றடங் கரவு:** "பாம்புறை புற்றின்" **பெரும்பாண்** 227; "சொடு வரிப்புற்றம் வாய்ப்பவாங்கி, நல்லரா நடுங்க வுரறி" "அரவுவாழ் புற்றம்" **நற்** 125: 2-3; 325: 4; "பாம்புறை புற்றத்து" "பாம்புபடத் துவன்றிக், கொடுவிர லுளியம் கெண்டும், வடுவாழ் புற்றின" **அக** 64: 10; 88: 13-5; "நல்லரா வுறையும் புற்றம் போலவும்" "வரிமிடற், றரவுறை புற்றத் தற்றே" **புற** 309: 3; 329: 5-6; "உள்கரந்து பாம்புறையும், புற்றன்னர்" **நான்மணிக்** 57; "கதநாகம் புற்றடைய" **திணை. நூற்** 117; புற்றுறை பாம்பின்" **தொல்.** புற 13 நச்மேற்.

1—2. **தூணியில் அம்பு:** "கவர்கணைத் தூணி" **சிறுபாண்** 238; "ஆர் ததும்பு மயிலம்பு நிறைநாழி" **பரி** 18: 30; "வெல்வே லாவமாயின்" **புற** 323: 5; "அருங்கணை யடக்கிய வாவநாழிகை" **சீவக** 2224.

4. **களிறு எறிதலுக்கு வேல்உரியது:** "வேலீண்டழுவத்து......களிறு நிலஞ் சேர" **பதிற்** 84: 16-8; "எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண் கூர்ந்து, பிடிக்கண மறந்த வேழம்" **முல்லை** 68-9; "வெள்வேல், இலைநிறம் பெயர வோச்சி மாற்றுர், மலைமருண் யானை மண்டமரொழித்த" "வெள்வேல், அதனெழினி யருநிறத் தழுத்திய, பெருங்களிற் றெவ்வம் போல" **அக** 177: 13-5; 216: 13-5; "பெருந்தகை மறவன், மேல்வருங் களிற்றொடு வேறுரந்து" "வேந்தூர் யானைக்கல்ல, தேந்துவன் போலான்ற னிலங்கிலை வேலே" "சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம், வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே" "கறை

யடி யானைக்கல்ல, துறைகழிப் பறியா வேலோ னாரே" "பிறர்வேல் போலா தாகி யிவ்வூர், மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே.....இருங்கடற்றானை வேந்தர், பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னதே" புற 274: 2-4; 301: 15-6; 308: 4-5; 323: 6-7; 332: 1-10; "வெல்லான்கை வேல்பட வீழ்ந் தனவே......மலைபுரை யானை மறிந்து" "நெருப்பிமையாக், கைக்கொண்ட வெஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி" "ஓளிற்றெஃகம் படவீழ்ந்த, களிற் றின் கீழ்" பு. வெ. மா 135; 140; 146. "வேலுடைத் தடக்கை யார்கள் வேழ மேற் சென்ற போழ்தில்" "சென்று னிகல் களிறுயிர பிரியச் சின வேலோன்" சீவக 1677; 2262; "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" குறள் 74;

கதுவாயெஃகம்: "கதுவா யெஃகமொடு கடைமுத றேறும்" பெருங் (3) 24: 149.

4—5. யானை எறிந்த விழுமியோர்: பதிற் 28: 2-4 ஒப்பு.

6. எழுமுடி: "எழுமுடி கெழீஇய ...அகலத்து" பதிற் 14: 11.

7. குண்டகழி: "பாருடைத்த குண்டகழி" "குரூஉக் கெடிற்ற குண் டகழி" "கராஅங் கலித்த குண்டுகண் ணகழி" புற 14: 5; 18: 10; 37: 7; "கோள்வாய் முதலைய குண்டகழி" பு. வெ மா 110.

அகழிய மதில்: "குண்டுகண் ணகழி, வானுற வோங்கிய வளைந்துசெய் புரிசை" குண்டுக ணகழிய குறுந்தாண் ஞாயில், ஆரெயில்' பதிற் 53: 8-9; 71: 12-3; "திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின், வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி" மலைபடு 91-2; "நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி, வான்றோய் வன்ன புரிசை" புற 21: 2-3; "குண்டகழி மஞ்சிவரு ஞாயின் மதில்" பு. வெ. மா 99.

மதில்பல கடத்தல்: "அரண்பல கடந்த முரண்கொ டானை" நற் 150: 3.

8. பண்டும் பண்டும்: "பண்டும் பண்டும்" பரி 13: 63 பரிமேல். "பண் டும் பண்டும் பாடுந ருவப்ப" புற 151: 1; "பண்டும் பண்டும் பல்பிறப் புள வால்" மணி 21: 31.

9. அருப்பம்: "அருப்ப மமைஇய வமர்கடந்து" "மலையவு நிலத்தவு மருப் பம் வெளவி" பதிற் 50: 13; 90: 22; "வேட்டுப் புழை யருப்ப மாட்டி" முல்லை 26; "அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய' மலைபடு 378; "அருப்பமுடைத் தென்னு ளெவ்வம் பொருத்தி" கலி 146: 48. "வீங்குசிறை வியலருப்பம்" "அருப்பம் பேணா தமர்கடந் ததூஉம்" புற 17: 28; 224: 1.

10. கதவங் காக்கும் எழு: பதிற் 31: 19–20 ஒப்பு.

11. திணிதோள்: "வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்" முருகு 152; "சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்" சிறுபாண் 98;

10—11. தோளுக்கு எழு: பதிற் 31: 20 ஒப்பு.

12. பிணம்பிறங் கழுவம்: 'ஒன்னார், வேலுடைக் குழூஉச்சமந் ததைய நூறிக், கொன்று புறம் பெற்ற பிணம்பயி லழுவத்து" பதிற் 66: 4-5; "நல் லமரழுவத்து" சிலப் 27: 29.

**போர்க்களத்தில் துணங்கை ஆடல்:** "*வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி, வீந்குகு போர்க்களத் தாடுங்கோவே*" "*குருதி பனிற்றும் புலவுக்களத் தோனே, துணங்கை யாடிய வலம்படு கோமான்*" **பதிற்** *56: 7–8; 57: 3–4;* "*ஆளமர் வென்றி யடுகளத்துத் - தோள்பெயராக், காய்ந்தடு துப்பிற் கழன் மறவ ராடினுர், வேல்தொடு வெள்வாள் விதிர்த்து*" **பு. வெ. மா** *147;* "*கழித்துவா ளமலை யாடிக் காட்டுவார்*" **சீவக** *783.*

*13.* **ஊன்றுவை யடிசில்:** "*அட்டான் ருனுக் கொழுந்துவை யூன்சோறும்*" "*குய்க்கொள் கொழுந் துவை நெய்யுடை யடிசில்*" "*கனிகுய்யாற் கொழுந் துவையர்*" **புற** *113: 2; 160: 7; 360: 5;*

*19.* **மேகம் கடனீரை முகத்தல்:** **மதுரைக்** *75-6; 238-44;* **நற்** *112: 6-9; 140: 1; 153: 1; 289: 3-4; 329: 10-11; 346: 1–2;* **பரி** *7: 1-3; 8: 32; 20: 1-3; 20: 6-8;* **அக** *178: 18; 183: 6-9; 188: 1; 235: 5; 278: 1; 374: 1-3;* **புற** *161: 1-4; 205: 10-11;* **பு. வெ. மா** *276;* **கார்நாற்** *17, 33, 34;* **திணைமொழிஐம்** *23, 26, 27, 28;* **திணைமாலைநூற்** *93; 100, 104; 109, 114;* **சீவக** *789; 3071.*

*21—22.* "*துளங்கிருங் குட்டந் தொலைய வேலிட்டு*" "*கடலிகுப்ப வேலிட்டும்*" **பதிற்** *88: 5; 90: 20.*

*20.* **முழங்குதிரை:** "*விளங்கிரும் புணரி யுருமென முழங்கும்*" **பதிற்** *51: 2;* "*முழங்குதிரை கொழீஇய மூரியெக்கர்*" "*முழங்குதிரைப் புதுமணல்*" "*முழங்கு திரையின் சீர் தூங்கும்*" "*முழங்குதிரை கொழீஇய மூரியெக்கர்*" **நற்** *15: 1; 135: 7; 138: 10; 203: 1;* "*மாக்கடற் றிரையின் முழங்கி*" "*புணரி, குணிவாய் முரசி னிரங்கும்*" **குறுந்** *237: 5; 328: 2–3;* "*பெருந்திரை முழக்க மொடு*" **அக** *100: 5;* "*இமிழ்திரைப் பௌவம்*" **புற** *58: 21–2.*

**பனிக்கடல்: பதிற்** *41: 27* ஒப்பு.

---

## கரைவாய்ப் பருதி

(46) இழையர் குழையர் நறுந்தண் மாலையர்
சுடர்நிமி ரவிர்தொடி செறித்த முன்கைத்
திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்
வண்டுபடு கூந்தன் முடிபுனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபி னுழிஞை பாட
இனிதுபுறந் தந்தவர்க் கின்மகிழ் சுரத்தலிற்
சுரம்பல கடவுங் கரைவாய்ப் பருதி
ஊர்பாட் டெண்ணில் பைந்தலை துமியப்
பல்செருக் கடந்த கொல்களிற் றியானைக்

கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்குவ மென்னூர் பாடுபு பெயர்ந்தே.

**இதுவுமது.**
**பெயர்—கரைவாய்ப் பருதி.**

ப—ரை: 1—7. இழையர்-இழையை அணிந்தவரும், குழையர்-தளிரை அணிந்தவரும், நறு தண் மாலையர்-நறிய குளிர்ந்த மாலையை அணிந்தவருமாகிய, சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை-ஒளி மிகுகின்ற விளங்குகின்ற தொடியை அணிந்த முன்கையினையும், திறல் விடு திருமணி இலங்கு மார்பின்-சிறந்த ஒளியை விடுகின்ற அழகிய மணிவிளங்குகின்ற மார்பினையுமுடைய, வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர் - வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலை முடித்துப் புனைந்த பாடன் மகளிர், தொடை படு பேர் யாழ் பாலை பண்ணி - நரம்பின் கட்டமைந்த பெரிய யாழைப் பாலைப் பண்ணை வாசித்து, பணியா மரபின் உழிஞை பாட - பகைவர்க்குப் பணியாத முறைமையினையுடைய உழிஞைத் திணையைப் பாட, இனிது புறந்தந்து-அவரை இனிதாகப் பாதுகாத்து, இன் மகிழ் சுரத்தலின்-இனிய மகிழ்ச்சியைச் சுரத்தலின்,

8—14. சுரம் பல கடவும்-போர்க்களத்திற் படையொடு கூடித் தடுக்கும் அரிய இடங்கள் பலவற்றினும் செலுத்தப்படும், கரை வாய் பருதி-விளிம்பாகிய வாயையுடைய தேர் உருளை, ஊர் பாட்டு எண் இல் பை தலை துமிய-தான் ஊர்கின்ற பாடு தன்னிலே மடிந்தாருடைய அளவிறந்த பசிய தலைகள் வெட்டுப்பட, பல் செரு கடந்த - பல போர்களை வஞ்சியாது எதிர்நின்று வென்ற, கொல் களிறு யானை - கொல்கின்ற களிறாகிய யானைகளையுடைய, கோடு நரல் பௌவம் கலங்க வேல் இட்டு-சங்குகள் ஒலிக்கின்ற கடல் கலங்கும்படி வேலை ஏற்றி நடப்பித்து, உடை திரை பரப்பின் படு கடல் ஓட்டிய-முரிகின்ற திரைகளையுடைய பரப்பினையுடைய ஒலிக்கின்ற கடல் வலியை அழித்த, வெல் புகழ் குட்டுவன் பாடுபு கண்டோர்-வென்றிப் புகழையுடைய குட்டுவனைப் பாடிக் கண்டோர், பெயர்ந்து செல்குவம் என்னூர் – மீண்டு செல்வோம் என்று கருதார்.

முடிபு மகளிர் உழிஞை பாட மகிழ் சுரத்தலிற் குட்டுவற் பாடிக்கண்டோர் பெயர்ந்து செல்குவமென்னூர்; நிற்கவெனக் கருதுவர் என்க.

ஆ—ரை: 1—7. இழையர் குழையர் மாலையர் (1) ஆகிய மகளிர் (4) எனவும், முன்கையினையும் (2) மார்பினையுமுடைய (3) மகளிர் எனவும் கூட்டுக. மகளிர் என்றது விறலியரை. அவர் இழையராதல் "மின்னிழை விறலியர்" (பதிற் 54. 6) என்பதனுலுமறிக. குழை-தளிர். மகரக்குழை எனினுமமையும். "பூங்குழை யூசற் பொறைசால் காதின் .... பாடினி" (பொருந 30-47) எனப் பிறரும் கூறுதல் காண்க. பூவாணியன்ற மாலையாதல் தோன்ற 'நறுந்தண் மாலை' என்றார். 'பெருந்தண் கணவிர நறுந்தண் மாலை' (முருகு 233) என்றார் பிறரும். பொலங்தொடியாதலின் 'சுடர் நிமிர் அவிர் தொடி

என்றூர். "ஆய்பொன் னவிர் தொடி" (மதுரைக் 579) என்றூர் பிறரும். நிமிர்தல்-மிகுதல். மதுரைக் 387 நச். விறலியர் மார்பின்கண் விளங்குகின்ற மணியின் ஒளி இழை முதலியவற்றின் ஒளியிற் றிறலுடைமையின் இவ்வொளிக்கு ஆகுபெயரால் 'திறல்' என்று பெயராயிற்று. 'தியகத் திலங்கித் திறல்விடு கதிரொளி" (பெருங் (2) 19: 64) எனப் பிறரும் கூறுதல் காண்க. கூந்தலில் வண்டு படுதல் அது நறுநாற்றமுடைமையால் என்க. 'வண்டுபடு நாற்றத். திருள்புரை கூந்தல்" (நற் 270: 2-3) எனப் பிறரும் கூறுதல் காண்க. கூந்தன் முடிபுனை என்பதற்குக் கூந்தன் முடியைப் புனைந்த எனினுமமையும்.

தொடை—நரம்பின் கட்டு. "நரம்பின், றொடையமை கேள்வி" (பெரும்பாண் 15-16) என்றூர் பிறரும். தொடைபடு பேரியாழ் என்பதற்கு நரம்புத் தொடை பொருந்திய பேரியாழ் எனினுமமையும். பேரியாழ் நால்வகை யாழ்களில் ஒன்று. இது இருபத்தொரு நரம்புகளையுடையதென்பது 'இருபத்தொரு நரம்பாற் றொடுக்கப்படும் பேரியாழ்' எனப் புறநானூற்றுரைகாரரும் (புற 152 20 வி உரை) 'நால்வகை யாழிற்கும் நரம்புகொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும்..... கொள்ளப்படும்' என அடியார்க்குநல்லாரும் (சிலப் 3, 26 உரை) உரைத்தலான் அறியப்படும். "தொண்டுபடு திவவிற்......பேரியாழ்" (21-37) எனப் பேரியாழுக்குத் திவவு ஒன்பது மலைபடுகடாத்துக் கூறப்படுதலின் பேரியாழ் ஒன்பது நரம்புகளோடு கூடியதென்றும் அறியலாம்.

பேரியாழ் பாலை பண்ணி-பேரியாழைப் பாலையை வாசித்து. "நல்யாழ் மருதம் பண்ணி" (மலைபடு 469-70) என்பதற்கு 'நல்ல யாழை மருதத்தை வாசித்து' என நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க. பாலை – பாலையென்கின்ற பண். பண்ணி, அமைத்து எனினுமமையும் குட்டுவன் உழிஞையை மேற்கொள்ள விறலியர் அவற்கு வெற்றியுண்டாக வேண்டிப் பாலை பண்ணிப் பணியா மரபி னுழிஞையைப் பாடினர் என்க. § வாகை பாலையது புறனுதலின் பாலைப்பண் வெற்றியைக் குறிப்பதாகும். பணியா மரபு – பகைவர்க்குத் தாழாத இயல்பு. பகைவரது அரணை முற்றிய குட்டுவன் அவருடன் பொருது உட்புகுந்தழித்து அதனைக் கைப்பற்றுதலின் 'பணியா மரபி னுழிஞை' என்றூர். உழிஞை பாட—பகைவரின் முழுமுதல் அரணம் முற்றலும் கோடலுமாகிய உழிஞைத்திணைபற்றிய பாடல்களைப் பாட. பரிசிலர் அரசரின் புறத்திணைச் செய்திகளைப் புகழ்ந்து பாடல்,

"விரல்கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல்புண ரின்னிசைத் தழிஞ்சி பாடி" பதிற் 57: 8-9.

"அரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
யெஞ்சா மரபின் வஞ்சி பாட" புற 378: 8-9.

என வருவனவற்றானுமறிக

இனிது புறந்தந்து என்றது விறலியர் மனமகிழும்படி அணிகல முதலாயினவற்றை நல்கிப் பாதுகாத்து என்றவாறு. இன் மகிழ் சுரத்தல் – இனிய

* திவவு-நரம்பினைத் துவக்கும் வார்க்கட்டு. § 'வாகைதானே பாலையது புறனே" தொல் புற சூத் 18

மகிழ்ச்சியைச் சுரத்தல். இதனாற் பயன் முற்கூறிய புறந்தருதலாகிய கொடையோடே இவர்களை மயக்கிய முகனமர்தலுமுடையன் என்றவாறு. "முகனமர்ந்து .... அரிதேர் நல்கியு மமையான்" (பெரும்பாண் 478-90) எனவும், "இன்முகங் கரவா துவந்து நீ யளித்த" (புற 130: 4) எனவும் வருவன காண்க.

8—14. சுரம் என்றது போர்க்களத்தில் தேர் செலுத்தற்கு அரிதாம்படி பகைவர் படையொடு விலங்கும் அரிய இடங்களை. குட்டுவனின் தேர் அவ்வரிய இடங்கள் பலவற்றினும் செலுத்தப்படுதலின் 'சுரம்பல கடவும்' என்றார் கரைவாய்-கரையாகிய வாய். பருதி-வட்டம். "பருதி போகிய புடைகிளை கட்டி" (பதிற் 71) என்புழிப்போல. அதனையுடைமையால் தேருருளை பருதியெனப்பட்டது. "அந்தேர்ப் பருதி சுமந்தெழுந்த யானை" (களவழி 4) எனப் பிறரும் கூறுதல் காண்க.

ஊர் பாட்டு எண்ணில் பைந்தலை துமியவென்றது பைந்தலையைத் துமித்தற்கென்று தேரை வலியச் செலுத்துவதன்றி அப்பருதிதான் ஊர்கின்ற பாடுதன்னிலே யானைசெய்கின்ற போர்க்கு அஞ்சி ஓடி மடிந்தாருடைய அளவிறந்த பசிய தலையைத் துமியவென்றவாறு. இவ்வாறு பின்வந்த அடைச்சிறப்பான் இச்செய்யுளுக்குக் **கரைவாய்ப் பருதி** என்று பெயராயிற்று.

ஊர்தல்-போதல். 'வானூர் மதியம்" (நாலடி 125) போல. 'கொல்களிற்றியானைக் .. குட்டுவன்' என்றதனால் பைந்தலை என்பதற்கு யானை செய்கின்ற' போர்க்கு அஞ்சி மடிந்தாருடைய பைந்தலை என உரைக்கப்பட்டது. துமியக் (9) கடந்த (10) குட்டுவன் (13) என முடிக்க.

11—14. கோடு-சங்கு. "கோடீ ரிலங்கு வளை" குறுந் 11: 1. நரலுதல்-ஒலித்தல். "வளைநரலும் பனிப்பௌவத்து" (பதிற் 51: 14) "வலம்புரி வான்கோடு நரலு, மிலங்கு நீர்த்துறை" (நற் .72. 8-9) என வருவன காண்க. பௌவமென்றது தொன்றுமுதிர் பௌவமாகிய மேல்கடலை. கலங்க வேலிட்டுக்(11) கடலோட்டிய (12) வெல் புகழ்க் குட்டுவன் (13) என முடிக்க. கடலோட்டிய வென்றது தன்னுள் வாழ்வார்க்கு அரணாகிய கடல்வலியை அழித்தவென்றவாறு. கடல் வலியைப் பின்னிடச் செய்த எனினுமமையும். குட்டுவன், மகளிர் பாட இனிது புறந்தந்து அவர்க்கு இன்மகிழ் சுரத்தலைக் கண்டோர் பாடுபு பெயர்ந்து செல்குவமென்னர். அவன்பாலே நிற்கவெனக் கருதுவர் என்க.

இது அவன் முகனமர்ந்துதவுங் கொடைச்சிறப்பும் கடலோட்டிய வென்றிச் சிறப்பும் கூறியவாற்றால் புகழ்ச்சிக்கண் வந்த செந்துறைப்பாடாண்பாட்டு. இது முன்னிலைப் புறமொழிபோலப் படர்க்கைக்கண் வந்தது.

## பழையவுரை

இழையர் குழையர் மாலையர் (1) ஆகிய மகளிர் (4) எனக் கூட்டுக.
3. பிறவொளியிற் றிறலுடைமையான் இவ்வொளிக்கு ஆகுபெயரால் திறலென்று பெயராயிற்று. 7. இன் மகிழ் சுரத்தல்-இனிய மகிழ்ச்சியைச் சுரத்தல். இதனாற் பயன் முற்கூறிய புறந்தருதலாகிய கொடையோடே இவர்களை மயக்கிய முகனமர்தலும் உடையனென்றவாறு. 8. சுரம்பல வென்றது

பகைவரோடு பொருங்களத்தில் தேர் செலுத்தற்கு அரிதாம்படி படையொடு விலங்கும் அரிய இடங்கள் பலவற்றினுமென்றவாறு. பருதியென்றது வட்டம்; அதனை உடைமையால் தேருருளை பருதியெனப்பட்டது. (9) ஊர் பாட்டு எண்ணில் பைந்தலை துமிய வென்றது பைந்தலையைத் துமித்தற்கென்று தேரை வலியச் செலுத்துவதன்றி அப்பருதி தான் ஊர்கின்ற பாடு தன்னிலே யானைசெய்கின்ற போர்க்கு அஞ்சி ஓடி மடிந்தாருடைய அளவிறந்த பைந்தலை துமியவென்றவாறு. இவ்வாறு பின் வந்த அடைச் சிறப்பான் இதற்கு, கரைவாய்ப்பருதி என்று பெயராயிற்று. 12. கடலோட்டிய வென்றது தன்னுள் வாழ்வார்க்கு அரணாகிய கடல் வலியை அழித்தவென்றவாறு. 13-4. குட்டுவற் பாடிக் கண்டோர் பெயர்ந்து செல்குவமென்னுரென மாறிக் கூட்டுக.

மகளிர் (4) உழிஞை பாட (6) மகிழ் சுரத்தலிற் (7) குட்டுவற் (13) பாடிக் (14) கண்டோர் (13) பெயர்ந்து செல்குவமென்னுர் (14); நிற்கவெனக் கருதுவரென மாறிக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவன் கொடைச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1. "மின்னு குழையினர் கோதையர்" சீவக 2117.

2. அவிர்தொடி: "ஆய்கோ லவிர்தொடி" மதுரைக் 563.

தொடி முன்கை: "பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை" நெடுநல் 141; "அகன்றொடி செறித்த முன்கை" "பெருமட மகளிர் முன்கைச் சிறுகோற், பொலந்தொடி" நற் 77: 10; 197: 8-9; "ஒண்டொடி முன்கை" ஐங் 38: 4; "தொடியணி முன்கை" அக 226: 11; "கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்" "தொடி பிறழ் முன்கை யிளையோள்" புற 113: 8; 350: 10; "தொடிமுன்கை நல்லாய்" பழமொழி 209.

4. வண்டுபடு கூந்தல்: பதிற் 14: 14 ஒப்பு.

5. பேரியாழ் பாலைபண்ணி: "இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணி" பதிற் 66: 2.

9. தலைதுமிய: "பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமிய" மலைபடு 488.

10. பல்செருக் கடந்த: "பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கை" அக 342: 9.

களிற்றியானை: பதிற் 3ஆம் பதிகம் 6 ஒப்பு.

கொல்களிற்றியானை: "கொல்களிற் றியானை யெருத்தம் புல்லென" பதிற் 79: 10; "கொல்களிற் றெருத்தல சுரன்" நற் 92: 9; "காய்சினக், கொல்களிற் றியானை" அக 336: 14-5.

11. கோடுநரலல்: பதிற் 30: 6 ஒப்பு.

கோடுநரல் பௌவம்: "வளைஞரலும் பனிப்பௌவத்து" பதிற் 51: 14; "வளைநரல் பௌவம்" நற் கடவுள் 2.

12. உடைதிரை: நற் 159: 10; குறுந் 5: 3; 303: 3; அக 1: 18; 10: 9; சீவக 2650; 2652; சிலப் 7. 46.

13. வெல்புகழ்: "அடுதிற லுயர் புகழ்வேந்தே" மதுரைக் 130; "வெல் புக ழுலகேத்த விருந்துநாட் டுறைபவர்" "வெல்புக ழுயர்நிலை" கலி 26: 12; 105; 50; "பாடினுர் வெல்புகழைப் பல்புலவர்" பு. வெ. மா. 155.

13—4. அரசனைப் பாடிக்காணல்: "தமிழ்ஞ்சி பாடி.. ..கண்டனம் வரற்கு" "கைவல் பாண..... பாடினை செலினே" "பாடிக் காண்கு வந்திசிற் பெரும" பதிற் 57: 9–15; 67: 3-23; 82: 11; "பாடிச் சென்ற பரிசிலர் போல" "மாந்தரம், பொறையன் கடுங்கோப் பாடிச்சென்ற. குறையோர் கொள் கலம் போல" அக 65: 6; 142: 4-6, "நின்னு நின்மலையு பாடி வருநர்க்கு" "பாடி வருநரும் பிறரும் கூடி" "இசைமேந் தோன்றனிற் பாடிய யானே" "நீடுவாழ் கென்றியா னெடுங்கடை குறுகிப், பாடிநின்ற பசிநாட் சண்ணே" 'பாடிச் சென்றோர்க் கன்றியும்" "பாடி வந்திசிற் பெரும" புற 130: 3; 158: 18; 159: 28; 237: 1-2; 330: 5; 369: 22.

---

## நன்னுதல் விறலியர்.

(47) அட்டா னுனே குட்டுவ னடுதோறும்
பெற்ரு ணுரே பரிசிலர் களிறே
வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்து
வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு தெருவிற்
சொரிசுரை கவரு நெய்வழி புராலிற்
பாண்டில் விளக்குப் பருஉச்சுட ரழல
நன்னுதல் விறலிய ராடும்
தொன்னகர் வரைப்பினவ னுரையா ணுவே.

இதுவுமது
பெயர்—நன்னுதல் விறலியர் (7).

ப—ரை: குட்டுவன் அட்டு ஆனுன்—குட்டுவன் பகைவரைக் கொன்று அச்செயல் போதும் என்று ஓழியான்; அடு தொறும் பரிசிலர் களிறு பெற்று ஆனுர்—குட்டுவன் அமையானுய்ப் பகைவரைக் கொல்லும் தோறும் பரிசிலர் களிறுகளைப் பரிசாகப் பெற்றும் அமையாராயினர்.

3—8. வரை மிசை இழிதரும் அருவியின்—மலையின்மேலிருந்து விழும் அருவியைப் போல, மாடத்து அவிர் வரும் கொடி வளிமுனை நுடங்கு தெருவில் — மாடங்களில் விளங்கும் கொடிகள் காற்று அடித்தலால் அசைகின்ற தெருவினையுடைய. சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின் — நெய்யைச் சொரியும் உள்ளுப்புடையுண்டாயிருக்கின்ற திரிக்குழாய் தான் ஏற்றுக் கொண்ட நெய் வழிந்து பரவுதலால், பாண்டில் விளக்கு பருஉ சுடர் அழல— கால்விளக்கினது பருத்த கொழுந்து எரிய, நல் நுதல் விறலியர் ஆடும்— நல்ல நெற்றியையுடைய விறலியர் ஆடுகின்ற. தொல் நகர் வரைப்பின் உரை ஆனு—பழைய நகரங்களின் எல்லையில் அவன் புகழ்ச்சியமைந்த வார்த்தைகள் அமையா.

**முடிபு:** குட்டுவன் அட்டு ஆனன்; அடுதொறும் பரிசிலர் களிறு பெற்று ஆனர்; தொன்னகர் வரைப்புகளில் அவன் உரை ஆனு மாண்க.

**ஆ—ரை. 1—2.** குட்டுவன் தன்னொடு மாறுபட்ட பகைவரைப் போரிலே கொன்றும் அமையானுய் மேலும் பொருது பகைவரைக் கொல்லு தலின் 'அட்டானுனே குட்டுவன்' என்ருர். அட்டு – கொன்று. "அட்டுக் கனலு மயில் வேலோய்" **பு. வெ. மா** 17. குட்டுவன் அடுதொறும் களத்தே பெற்ற களிறுகளை ஈயுந்தொறும் பரிசிலர் அவற்றைப் பெற்றும் அமையா ராய் மேலும் பெறுதலின் 'அடுதொறும் பெற்ருனுரே பரிசிலர் களிறே'என் ருர். குட்டுவன் போரிற்பெற்ற களிறுகளை ஈந்தமை "பாடு விறலியர் பல் பிடி பெறுக......கொண்டி மன்னர் கொய்களிறு பெறுக ...என்றும் இகல் வினை மேவலே யாகலின்" (**பதிற்** 43: 22-9)என்பதனுலுமறிக. 'அடுதொறும்' என்றதனுல் செய்கின்ற பல போர்களிலும் குட்டுவன் பகைவரைக் கொன்று வென்றி பெறுதலும் 'பெற்ருனுரே பரிசிலர் களிறே, என்றதனுல் முன் பெற் றவர்க்கும் பின்னரும் வரையாது வழங்குதலும் அறியப்படும் பரிசிலர்-பாணர் கூத்தர் முதலியோர்.

**3—8.** வானுற நிவந்த மாடங்களின் மேலே கட்டப்பட்டு விளங்கும் நீண்ட துகிற்கொடிகள் காற்று அடித்தலால் மலையினின்று இழியும் அருவி யைப் போலத் தெருவில் நுடங்கலின், 'வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்து, வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு தெருவின்' என்ருர்.

"வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
.............................................
பல்வேறு குழூக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்க" **மதுரைக்** 357-74.

எனப் பிறரும் கூறுதல் காண்க. 'அருவியின்.... அவிர்வருங் கொடிநுடங்கும்' என்றதனுல் அருவி அவிர்வருதலும் நுடங்குதலும் கொள்க. "வயங்கு வெள் ளருவிய குன்றத்துக் கவாஅன்" (அக 202: 1) எனவும், "வேறுபல் துகிலி னுடங்கி......இழிதரு மருவி" (முருகு 296: 316) எனவும் வருவன காண்க. தெரு மருங்கி லமைந்த மாடங்களாதலின் அவற்றிற் கட்டிய கொடிகள்தெரு வில் நுடங்குவனவாயின. "துகிற்கொடி மாடவீதி" (சீவக 3043) என்ருர் பிறரும். தெருவின் (4) தொன்னகர் (8) எனக் கூட்டுக.

சுரை—உட்டுளை. இஃதிப்பொருட்டாதல், "அழலார் சுரையெயிற்று.....நா கம்" என்னும் **சிந்தாமணியினுங்** (2940) காண்க. ஈண்டுச் சுரையென்றது அதனையுடைய திரிக்குழாய்க்கு ஆகுபெயர். நெய்யைச் சொரியும் திரிக் குழாயைச் 'சொரி சுரை' என்ருர். "நெய்யுமிழ்சுரை" (முல்லை 48) என்ப தற்கு நெய்யைக் காலுகின்ற திரிக்குழாய் என **நச்சினார்க்கினியர்** உரைத்தலுங் காண்க. உரால்-பரத்தல். ஓடுதலுமாம். 'பாண்டில் விளக்கு-கால்விளக்கு' **நெடு நல்** 175 நச். விளக்கு, ஆகுபெயர். சுடரழல ஆடும் (7) எனக் கூட்டுக. பண் டைக்காலத்தில் ஆடல் முதலியன நிகழுமிடங்களிலும் பாசறையிடங்களிலும் பாண்டில் விளக்கு எரிக்கப்பட்டமை,

"சுட்டும் பாண்டிற் றிருநாறு விளக்கத்து
முழாவிமிழ் துணங்கைக்கு" பதிற் 52: 13-4.

"பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
.....................................
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே" நெடுநல் 175-88.

என வருவனவற்றானுமறியப்படும்.

நன்னுதல் விறலியர் என்றது தமது ஆடல் பாடற்கேற்ப நூலுட் சொல்லப்பட்ட அழகையுமுடையாரென்றவாறு. அவ்வழகினை நுதன்மேலிட்டுக் கூறியவாற்றான் இச்செய்யுளுக்கு **நன்னுதல் விறலியர்** என்று பெயராயிற்று.

விறலியர் அழகு,

"சுடர்நுதன் மடநோக்கின்
வாணகை யிலங்கெயிற்
றமிழ்துபொதி துவர்வா யசைநடை விறலியர்" பதிற் 51: 19-21

"வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத்தோள்
ஏந்தெழின் மழைக்கண் வனைந்துவர லிளமுலைப்
பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்
மின்னிழை விறலியர்" பதிற் 54 3-6

என வருவனவற்றானுமறிக.

நெய்வழிபு உராலிற் (5) சுடரழல (6) ஆடும் (7) என்றதனாற் சொல்லியது அந்த நகரிகளது செல்வமுடைமை. புகார் நகரின் செல்வமுடைமையை,

"செய்யு ணுரை யொய்யு மகளிர்
இரவும் பகலும் பாசிழை களையார்
குறும்பல் யாணர்க் குரவை யயரும்
................................... ...
புகாஅர்" பதிற் 73: 5-9.

எனப் பிறரும் கூறுதல் காண்க. பகையரசர் தம் தொன்னகர்களில் குட்டுவனைப் புகழ்ந்து மேன்மேலும் பேசுதலின் 'தொன்னகர் வரைப்பி னவனுரை யானுவே' என்றார்.

இதனாற் சொல்லியது அவன் கொடையினையும் அக் கொடைக்கு வருவாயாகிய பகைவரைக் கோறலையும் உடன் கூறியவாறாயிற்று.

## பழையவுரை.

தெருவின் (1) தொன்னகர் (8) எனக் கூட்டுக. 5. சொரி சுரை கவரும் நெய்யென்றது நெய்யைச் சொரியும் உள்ளூப்புடை யுண்டாயிருக்கின்ற திரிக்குழாய் தான் ஏற்றுக்கொண்ட நெய்யென்றவாறு. சுரையென்றது திரிக்குழாய்க்கு ஆகுபெயர். (6) பாண்டில் விளக்கு-கால் விளக்கு. நன்னு

தல் விறலியரென்றது தமது ஆடல் பாடற்கேற்ப நூலுட் சொல்லப்பட்ட அழகையுமுடையாரென்றவாறு. அவ்வழகினை நுதன்மேலிட்டுக் கூறியவாற்ருன் இதற்கு **நன்னுதல் விறலியர்** என்று பெயராயிற்று. 8. தொன்னகர்– அரசுடைய பழைய நகரிகள். செய் வழிபு உராலிற் (5) சுடரமூல (6) ஆடும் (7) என்றதனுற் சொல்லியது அந்த நகரிகளது செல்வமுடைமை.

குட்டுவன் அட்டு ஆனுன்; அடுதொறும் (1) பரிசிலர் களிறு பெற்று ஆனுர் (2); தொன்னகர் வரைப்புக்களில் அவன் உரை ஆனு (8) எனக் கூட்டி **வினைமுடிபு** செய்க

இதனுற் சொல்லியது அவன் கொடையினையும் அக் கொடைக்கு வருவாயாகிய **பகைவரைக் கோறலையும்** உடன் கூறியவாருயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1—2. **வென்று பெற்றவற்றைப் பரிசிலர்க்கு நல்கல்: பதிற்** 20: 13-6 ஒப்பு.

2. **பரிசிலர்க்கு யானை நல்கல்: பதிற்** 40: 26–31 ஒப்பு.

3. **வரைமிசை யிழிதரு மருவி: பதிற்** 25: 11 ஒப்பு.

**மாடத்துக்கு மலை:** "மழையாடு மலையி னிவந்த மாடமொடு" "மலைபுரை மாடத்து" "குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன, பருந்திருந் துகக்கும் பன்மாணல்லில்" **மதுரைக்** 355; 406; 501-2; "மலையென மழையென மாடமோங்கி" **மலைபடு** 484; "மலைபுரை நெடுநகர்க் கூடல்" **அக** 296: 12; "மலைக் கணத் தன்ன மாடம்" **புற** 390: 7; "வரை புரை மாடம்" **சீவக** 1446: "வரைநிரைத் தன்ன மாடந் தோறும்" **பெருங்** (5) 7: 51; "இறையுயர் மாடமெங்கணும் போர்த்து, மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்" **சிலப்** 10: 145-6.

3—4. **கொடிக்கு அருவி: பதிற்** 25: 11 ஒப்பு.

**மாடத்தையுடைய தெரு:** "மாடமலி மறுகின்" **முருகு** 71; "மாடமோங்கிய மணன்மலி மறுகில்" **பெரும்பாண்** 322; "மாட மறுகின்" **பரி** 20: 25; "மாடமலி மறுகின்" **அக** 346: 20; "மாட மறுகின்" **பு. வெ. மா** 234; "மாடமலி மறுகிற் பீடிகைத் தெருவின்" "மாட மறுகின்" **சிலப்** 6: 122; 15: 61. "மலைத்தொகை யன்ன மாட வீதி" **பெருங்** (3) 27. 216.

**மாடத்துக் கொடி:** "திண்கா ழேற்ற வியலிரு விலோதந், தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப, நிரைநிலை மாடத் தரமியந் தோறும்" **மதுரைக்** 449–51; "கொடிநுடங்கு மாடநகர்" **சீவக** 1798;

4. **கொடி நுடங்கு தெரு:** "கொடி நுடங்கு மறுகின்" **நற்** 227: 6 "கொடி நுடங்கு மறுகிற் கூடல்" **அக** 149: 14; "நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்" **தொல். புற** 5 நச் மேற்; "மதிலக வரைப்பிற், குடகாற் றெறிந்து கொடி நுடங்கு மறுகில்" **சிலப்** 14: 69-70.

**மு.** "முழவி னின்றதிர் மொய்வரைச் சென்னியி, னிழியும் வெள்ளருவித் திரள் யாவையும், குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே"

*"வானக்கி னின்று நுடங்குங்கொடி மாட மூதூர்" "துளங்கொளி மாடத் துச் சித் துகிற்கொடி நுடங்கும் வீதி" "குன்றுகண் டனைய கோலக் கொடிநெடு மாடமூதூர்" சீவக 34; 1866; 2129; 2374.*

5. திரிக்குழாய் நெய்யுகுத்தல்: *"நெய்தோய் திரியிற் றண்சித ருறைப்ப"* நற் *279: 4; "திரியுமிழ் நெய்யே போல்"* கலி *1521; "நெய்யுமிழ் சுடரின்"* அக *17: 20.*

7. *"ஆடுக விறலியர்"* பதிற் *58: 1; "கலம்பெறு விறலி யாடுமிவ் வூரே"* நற் *328: 11; "மகடூஉ, முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக், களரி யாவிரைக் கிளர்பூங் கோதை, வண்ண மார்பின் வனமுலைத் துயல்வர .....பல்லூர் பெயர்வன ராடி"* அக *301: 12-21.*

நன்னுதல் விறலியர்: *"நன்னுத லரிவை"* ஐங் *46: 2.*

---

## பேரெழில் வாழ்க்கை.

(48) பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலோ டுழந்த பனித்துறைப் பரதவ
ஆண்டுநீர்ப் பெற்ற தார மீண்டிவர்
கொள்ளாப் பாடற் கெளிதினி னீயும்
கல்லா வாய்மைய னிவனெனத் தத்தம்
கைவ லிளையர் நேர்கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
முனைசுடு கனையெரி யெரித்தலிற் பெரிதும்
இகழ்கவி னழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்பநின் பெயர்வா ழியரோ
நின்மலைப் பிறந்து நின்கடன் மண்டும்
மலிபுன னிகழ்தருந் தீநீர் விழவிற்
பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோ டுண்டினிது நுகரும்
தீம்புன லாய மாடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே.

துறை-இயன்மொழி வாழ்த்து.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர்-பேரெழில் வாழ்க்கை (15).

ப—ரை: *1—4. பை பொன் தாமரை பாணர் சூட்டி—பசிய பொன்னாற் செய்த தாமரைப் பூவைப் பாணர்க்கு அணிந்து, ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி—ஒள்ளிய நுதலினையுடைய விறலியர்க்குப் பொன்னரி மாலையைப் பூணக்*

கொடுத்து; கெடல் அரு பல்புகழ் நிலைஇ-கெடுதற்கரிய பலவாகிய புகழை நிலைப்பித்து, நீர் புக்கு கடலொடு உழந்த-கடல் நீரிற் சென்று அதன்கண்ணே வருந்தி வெற்றி பெற்ற, பனி துறை பரதவ-குளிர்ந்த துறையினையுடைய பரதவனே,

5—12. ஆண்டு நீர் பெற்ற தாரம் - கடலுட் போர் செய்து அவ்விடத்துப் பெற்ற பொருள்களை, ஈண்டு இவர் கொள்ளாப் பாடலுக்கு எளிதின் ஈயும்-இவ்விடத்தே இப்பரிசிலருடைய மனங்கொள்ளாப் பாட்டுக்கு எளிதாகக் கொடுத்தற்கு ஏதுவாகிய, கல்லா வாய்மையன் இவன் என-கல்லாத தன்மையை உண்மையாக உடையன் இவன் என்று, கை வல் இளையர் தத்தம் நேர்கை நிரப்ப-தம் தொழிலில் வல்ல இளையர் அடைவே தங்கள் தங்களுடைய ஒத்த கையைச் சுட்டி நிரைக்கும்படி, வணங்கிய சாயல்-இரவலரிடத்து வணங்கிய மென்மையினையும், வணங்கா ஆண்மை-பகைவரிடத்து வணங்காத ஆண்மையினையுமுடைய, முனை சுடு கனை எரி எரித்தலின்-பகைப் புலத்தைச் சுடுகின்ற மிக்க தீ எரித்தலால், பெரிதும் இதழ் கவின் அழிந்த மாலையொடு-மிகவும் இதழ்கள் அழகுகெட்ட மாலையொடு, சாந்து புலர்-சந்தனம் புலர்ந்த, பல் பொறி மார்ப-பல நல்ல இலக்கணத்தையுடைய மார்பனே,

12—8. நின் பெயர்-நின்னுடைய பெயர், நின் மலை பிறந்து நின் கடல் மண்டும்-நினக்குரிய மலையிலே தோன்றி நினக்குரிய மேல்கடலிலே மிக்குச் செல்லும், மலி புனல் நிகழ்தரும் தீ நீர் விழவின் - நிறைந்த நீரினையுடைய யாறுகளிலே புதிதாக வருகின்ற இனிய நீர் விழாவின்கண், வேனில் பொழில் வதி பேர் எழில் வாழ்க்கை-வேனிற்காலத்துப் பொழில்களிலே தங்கும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கையையுடைய, மே வரு சுற்றமோடு உண்டு-மனம் பொருந்துதல் வரும் சுற்றத்தோடு உண்டு, இனிது நுகரும்-செல்வத்தாற் கொள்ளும் பயன்களெல்லாம் கொள்ளும், தீ புனல் ஆயம் ஆடும் - இனிய புனலாடற்கு வந்த திரள் ஆடுகின்ற, காஞ்சியம் பெருந்துறை மணலினும் பல வாழியர் - காஞ்சி மரங்களையுடைய பெரிய துறையிடத்தேயுள்ள மணலினும் பலகாலம் வாழ்வதாக.

ஆ—ரை. 1—4. அரசர் பாணர்க்குப் பொற்றாமரையும் விறலியர்க்குப் பொன்னரிமாலையும் அளித்து வந்தமை,

> "ஈங்கிருந் தீமோ முதுவாய்ப் பாண
> .......... . ... ... ..................
> பாடினி மாலை யணிய
> வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே" புற 319: 9-15.

> "வாடா மாலை பாடினி யணியப்
> பாணன் சென்னிக் கேணி பூவா
> வெருமரு டாமரைப் பெருமலர் தயங்க' புற 364: 1-3.

என வருவனவற்றாலுமறியப்படும். உயர்ந்த பொன்னுதல் தோன்றப் 'பைம்பொன்' என்றார். "செங்கீரப் பசும்பொன்" (மதுரைக் 618) "வீறுயர் பசும்பொன்" (சிலப் 3: 165) எனப் பிறரும் கூறுதல் காண்க. பொன்னுக்குப் பசுமையாவது நெகிழ்ச்சி. "தாவினன் பொன்" (அக 212: 1) என்றார் பிறரும். பொற்றாமரையைச் சூட்டுதல் சென்னியில் என்பது, "எரியகைந் தன்ன வேடி

ருமரை, சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி'' (பொருந 159-60) என்பத னுலுமறியப்படும். விறலியரின் அழகினை நுதன்மேலிட்டு 'ஒண்ணுதல் விற லியர்' என்ருர். ஆரம்-பொன்னரிமாலை. ''பொன்னின் ருடையமை மாலை விறலியர் மலைய'' (பெரும்பாண் 485: 6) என்ருர் பிறரும். ''பாணன் சூடிய பைம்பொற் ருமரை, மாணிழை விறலி மாலையொடு விளங்க'' (புற 141: 1-2) என்புழி மாலை என்பதற்குப் 'பொன்னரிமாலை' என அதன் உரைகா ரர் உரைத்தலுங் காண்க. கெடலரும் என்புழி அருமை, இன்மை மேற்று. ''அருங்கேட னென்ப தறிக'' (குறள் 210) என்புழிப்போல. புகழ் கேடின்ரு தல், ''தொலையா நல்லிசை'' (மலைபடு 388) ''செல்லா நல்லிசை'' (அக 231: 11) ''கெடுவி னல்லிசை'' (புற 221: 2) என வருவனவற்ருலுமறிக. பல்புகழென் றது ஈதலாலுளதாகிய பலபுகழினை. ''பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே'' (புற 221: 1) என்ருர் பிறரும். இனி, வென்றி கொடை முதலியவற்ரு லுய புகழ் எனினுமமையும். நிலைஇ என்றது நிலைப்பித்து என்னும் பிறவினை. உடை திரைப் பரப்பிற் படுகடற் புக்கு வினைசெய்தலரிதாகவும் குட்டுவன் அதனை மறுத்துப் பகைவரொடு பொருதற்கு அவர்க்கு அரணுகிய கடலிற் சென்றமையின் 'நீர் புக்கு' என்ருர். கடலொடுழந்த – கடலிலே • வருந்திய. ''நின் படுந்திரைப் பனிக்கட லுழந்த தாளே'' (பதிற் 41: 26-7) என வந்தமை காண்க. ஒடு, வேறு வினையொடு. உழந்த என்றது பகைவரொடு பொரு தமையை. உழந்து வெற்றி பெற்றமை 'ஆண்டு நீர்ப் பெற்ற தாரம்' என் பதனுலறியப்படும். 'பரதவ' என்றதனுற் சொல்லியது அங்கடலின் உழத் தற்ருழிலொப்புமைபற்றி அக்கடற்றுறை வாழும் நுளையற்குப் பெயராகிய பரதவன் என்னும் பெயரான் இழித்துக் கூறினுன் போலக் குறிப்பான் உய ர்த்து வென்றி கூறினுனுகக் கொள்க.

5—12. ஆண்டு நீர்ப்பெற்ற பொருள்களை ஈண்டு இவர் கொள்ளாப் பாடற்கு எளிதாக ஈயும் கல்லா வாய்மையன் இவன் எனக் கைவலினை யர் தத்தம் கையைச் சுட்டி நிரைக்கும்படி இரவலரிடத்து வணங்கிய சாய வினையும் பகைவரிடத்து வணங்கா ஆண்மையினையுமுடைய சாந்து புலர் மார்ப என்க.

ஆண்டுநீர்ப்பெற்ற தாரம் என்றது கடலுட் போர் செய்து அரிதிற் பெற்ற பொருள்களை. தாரம்-பண்டங்கள். மதுரைக் 290 நச். 'தாரத்தை ஈண்டிவர் கொள்ளாப் பாடற்கெளிதினீயும் கல்லா வாய்மையன் இவன்' என்பது கைவ லினையர் கூற்று. ஈண்டு என்றது குட்டுவன் மூதூர்க்கணுள்ள நாளோலக் கத்தை. பகைவர்பாற் பெற்ற பொருள்களைத் தம் மூதூர்க் கொணர்ந்து பரிசிலர்க்கு உதவுதல் மரபு.

''அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி'' பதிற் 2ஆம் பதி.

என வருதல் காண்க. கொள்ளாப் பாடல்-குட்டுவன் புகழ்முழுவதும் கொள் ளாப் பாடலுமாம்.

---

நுளையர் - நெய்தனில மாக்கள். அவர்க்கு பரதவர் என்றும் பெயர். ''கடலர் திமிலர் சலுவர் நுளையர், பரதர் வலைஞர் நில மாக்கள்'' என்பது பிங்கலந்தை. 4.153

"களங்கொள் யானைக் கடுமான் பொறைய
விரிப்பி னகலுந் தொகுப்பி னெஞ்சு
மம்மர் நெஞ்சத் தெம்மனோர்க் கொருதலை
கைம்முற் றலநின் புகழே" புற 53: 5-8.

எனப் பொருந்திலிளங்கீரனுர் என்னும் புலவர் கூறுதல் காண்க. இனி, சான்றோரால் சிறந்ததென மதியாதபாடலுமாம். கொள்ளா — மதியா. பரி 21: 8 உரை. இவர் கொள்ளாப் பாடற்கு என்பதற்கு 'மனங்கொள்ளாப் பாடலையுடைய தரம் போதாதார்க்கு' என்பர் பழையவுரைகாரர். கடலொடுழந்து அரிதிற் பெற்ற பொருள்களை எளிதினீயும் என்றதனுற் குட்டுவன் *கொடைமடம கூறினர்.

கல்லா-கல்லாத தன்மை. என்றது இயல்பாகிய தன்மையை. 'கல்லா இளையர்—இயல்பாகிய போர்த் தொழிலையுடைய வீரர்' எனப் புறநானூற்றுரைகாரர் உரைத்தல் காண்க. (புற 266 உரை) குட்டுவன் இயல்பாகவே வள்ளற்றன்மையுடையனுதலின் 'ஈயும் கல்லா வாய்மையன் என்றார்.

இளையர் என்றது குட்டுவன்பாற் பரிசிற் பொருட்டாகச் சென்ற கூத்தர் பாணரில் இளையரை. அவர் யாழ் முதலிய இயங்களை வாசித்தலை வல்லராதலின் 'கைவ லிளையர்' என்றார். "காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர், கைவலிளையர்" (பதிற் 41: 5-6) எனவும், "கைவளம் பழுநிய நயந்தெரி பாலைக் கைவல் பாண்மகன்" (சிறுபாண் 36-7) எனவும் வருவன காண்க. நேர்கை—தம்மிலொத்தநை. கை நிரைப்ப என்பது இவன் எனக் கூறற்கு ஏற்பக் கையைச் சுட்டி நிரைக்கும்படி என்றவாறு. கையாற் சுட்டல் "கரையாவெங் நோக்கத்தாற் கைசுட்டிப் பெண்டிர்" (பரி 9: 35) என்புழிக் காண்க. குட்டுவன் ஈகையை நன்கறிந்தவர் பரிசிலராதலின 'கைவலிளையர் நேர்கை நிரைப்ப' என்றார்.

"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்த" சிறுபாண் 217-8.

என்றார் பிறரும். சாயல்-மென்மை. வணங்கிய சாயல் என்பதற்கு மகளிடத்து வணங்கிய மென்மை என்றுரைத்தல் அமையாதோவெனின், 'இவர், கொள்ளாப் பாடற் கெளிதினீயும் கல்லா வாய்மையன் இவன்' எனக் கைவலிளையர் கூறற்கு ஏற்பக் குட்டுவன் எளிதினீந்து இரவலரிடத்து மென்மையுடையனுய் ஒழுகுகின்றானுதலின் அமையாதென்க. அரசர் இரவலரிடத்து வணங்கிய சாயலும் பகைவரிடத்து வணங்கா ஆண்மையுமுடையராதலை,

"ஒளிறிலங் முத்தம் விறலியர்க் கீத்து
நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்
பண்ணமை நல்யாழ்ப் பாண்கடும் பருத்தி
நசைவர்க்கு மென்மை யல்லது பகைவர்க்
கிரும்பு பயன்படுக்குங் கருங்கைக் கொல்லன்

* கொடை மடம் என்பது வரையாது கொடுத்தல். "கொடை மடம் வரையாது கொடுத்தலாகும்"—திவாகரம். "பேகன, கொடை மடம் படுவதல்லது, படைமடம் படான்" புற 142: 4-6.

விசைத்தெறி கூடமொடு பொரூஉ
முலைக்கல் லன்ன வல்லா ளன்னே" புற 170: 11-17.

என்பதனுலுமறிக.

குட்டுவன் தான் அழிக்கவேண்டிய பகைப்புலத்தே தங்கி அதனை எரியூட்டினமையின் 'முனைசுடு கனையெரி யெரித்தலின்' என்ருர். "யாண்டு தலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து, முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு' (பதிற் 15: 1-2) எனப் பிறரும் கூறுதல் காண்க. இது 'எரி பரந்தெடுத்தல் (தொல். புற சூ 8) என்னும் துறையின் பாற்படும். முனை-பகைப்புலம். பட்டினப் 283 நச். கனையெரி - முழங்கு நெருப்பு எனினுமமையும் முழங்கா நின்றதீ' புற 229: 11 உரை. 'முழங்கும் அழல்' சிலப் 14: 122 உரை. பொருதற்கு மேற் செல்லுங்காற் சூடிய போர்க்கண்ணி அவ்வெரியால் மிகவும் இதழ் வாடிக் கவினழிந்தமையின் 'முனைசுடு கனையெரி யெரித்தலிற் பெரிதும் இதழ் கவி னழிந்த மாலையொடு' என்ருர்.

"வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறிந்த லானே" புற 6: 21-2.

எனப் பிறரும் கூறுதல் காண்க. மாலையொடு என்னும் ஒடு வேறுவினையொடு. சாந்துபுலர் மார்பவெனக் கூட்டுக.

பல்பொறியென்றது மார்பின் நல்ல இலக்கணங்களை. இதனைப் "புகன்ற மாண்பொறி .... மார்ப" (பதிற் 88: 30-5) என்புழிப் 'பொறியென்றது உத்தம இலக்கணங்களை' எனப் பழையவுரைகாரரும், "பல்பொறிக் கொண்ட வேங்தெழி லகலம்" (புற 161: 27) என்புழிப் பல்பொறியென்பதற்கு 'பல நல்ல இலக்கணம்' என அதன் உரைகாரரும் உரைத்தமையானு மறிக. இலக்கணமென்றது மார்பிற் பொருந்திய மூன்று வரியை. இதனை 'வரையகன் மார்பிடை வரியு மூன்றுள" (சீவக 1462) எனவும், 'மார்பின் செம்பொறி-மார்பிற் கிடக்கின்ற உத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்று வரி' (முருகு 104-5 நச்) எனவும் வருவனவற்ருலுமறிக.

மலைநாடனுகிய குட்டுவன் கடல் எல்லைவரையுமுள்ள நாட்டைத் தன்னடிப்படுத்தாள்கின்ற சிறப்புத் தோன்ற யாற்றினை 'நின்மலைப் பிறந்து நின் கடன் மண்டும் மலிபுனல்' என்ருர். குண குட கடல்களுக்கு இடைப்பட்ட நாடு முழுவதையும் சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் தன்னடிப் படுத்தாள்கின்ற சிறப்புப்பற்றி,

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னுட்டுப் பொருந" புற 2: 9-11.

என அவனை முடிநாகராயர் கூறியது ஈண்டறியற்பாலது. மண்டல் - மிக்குச் செல்லல். "குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி, கடன்மண் டழுவத்து" (மலைபடு 527-8) என்புழிக் 'கடன்மண்டு-கடலிலே மிக்குச் செல்கின்ற' என நச்சினுர்க்கினியர் உரைத்தலுங் காண்க. மலிபுனலையுடைமையின் யாறு 'மலிபுனல்' எனப்பட்டது. யாற்றுநீர் இனிய நீராதலின் 'தீநீர்' என்ருர்.

"செல்யாற்றுத் தீம்புனலின்" என்றார் பரிபாடலினும் (பரி 6: 79). யாறுகளில் புதுப்புனல் விழவு கொண்டாடப்படுதலின் 'மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவில்' என்றார். நீர் விழாவைப்பற்றிய செய்திகளைப் பரிபாடல் பெருங்கதை என்னும் நூல்களிற் காண்க. விழாவிற் பொழில்வதி எனக் கூட்டுக.

பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கையென்றது வேனிற் காலத்து மனையில் வைகாது பொழில்களிலே வதியும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கையென்றவாறு. இச் சிறப்பானே இச் செய்யுளுக்குப் பேரெழில் வாழ்க்கை என்று பெயராயிற்று.

வேனிற் பொழில் வதியென்க. நீர்விழாக்காலத்துப் பொழிலில் வதிதல்,

"புள்ளொலிப் பொய்கைப் பூந்துறை முன்னித்
தண்பொழில் கவைஇய சண்பகக் காவிற்
கண்டோர் மருளக் கண்டத் திறுத்த
விழாமலி சுற்றமொடு" பெருங் (1) 38: 277-80.

என்பதனாலுமறிக. வாழ்க்கையையுடைய (15) ஆயம் (17) எனக் கூட்டுக. நீர்விழாக்காலத்துப் புனலாயம் பொழில்களிலே வதிந்து தம் சுற்றத்தோடு உண்டு செல்வமுடையார் அச்செல்வத்தாற் கொள்ளும் பயன்களெல்லாம் கொள்ளுதலின் 'நீர் விழவிற் பொழில்வதி வாழ்க்கை சுற்றமோடுண்டு இனிது நுகரும் புனலாயம்' என்றார். மேவரும்-பொருந்துதல் வரும். 'மேவுதல் வரும்' கலி 104: 11 நச். நுகரும் புனலாயம் எனக் கூட்டுக. ஆயம் – திரள். "முளைநிரை முறுவலா ராயத்துள்" கலி 15: 25 ஆயம் ஆடும் பெருந்துறை என்க. பெருந்துறையென்றது அவ்வியாறுகளில் நீராடு பெருந்துறைகளை. "காவிரிப், பலராடு பெருந்துறை" (குறுந் 258) என்றார் பிறரும். அப் பெருந் துறைகளைக் காஞ்சியம் பெருந்துறையென்றது புனலாடற்கு வந்த மகளிர் திரள் அணிந்து விளையாடுதற்குத் தளிரும் முறியும் தாதும் பூவுங் கோடற் கேற்ற காஞ்சி மரங்கள் ஆண்டு மிகுதியாக நிற்றல்பற்றி என்க.

"மணன்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு
முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற மடைகரை" பதிற் 23. 19-20.

என்புழித் 'ததைந்த காஞ்சியென்றது விளையாட்டு மகளிர் பலரும் தளிரும் முறியும் தாதும் பூவும் கோடலாற் சிதைவுபட்டுக் கிடக்கின்ற காஞ்சி' எனப் பழையவுரைகாரர் உரைத்தமை ஈண்டறியற்பாலது. காஞ்சியம் பெருந் துறை என்பதற்குக் காஞ்சியென்னும் ஆற்றின் அழகிய பெருந்துறை' என் பாரும் உளர். பழையவுரைகாரரும் காஞ்சியை யாறாகக் கருதாது மரமாகவே கருதினர் என்பது மலிபுனற் காஞ்சி என இயைத்துப் பொருள் கூறாது 'மலிபுனலையுடைமையான் யாறுமலி புனலெனப்பட்டது. நிகழ்தருந் தீரென் றது அவ்வியாறுகளிலே புதிதாக வருகின்ற இனிய நீரென்றவாறு' என அவர் உரைத்தலான் அறியலாம்.

கடுத்து வருகின்ற யாற்றின் மலிபுனலாற் கொழித்திட்ட மணல்மலி பெருந்துறையாதலின் 'பெருந்துறை மணலினும்' என்றார். உம்மை–உயர்வு சிறப்பு. "மணன்மலி பெருந்துறை" (பதிற் 23: 19) எனப் பிறரும் கூறுதல்

காண்க. நின்பெயர் (12) பெருந்துறை மணலினும் பல (18). வாழியர் (12) என மாறிக் கூட்டுக. யாற்றுமணலினும் பலகாலம் வாழ்கவென்றல் மரபு. "எங்கோ வாழிய குடுமி ....நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" "தேர் வண் கிள்ளி தம்பி......சிறக்கநின் னாயுண்,மிக்குவரு மின்னீர்க் காவிரி, யெக்க ரிட்ட மணலினும் பலவே" (புற 9: 8–11; 43: 10-23) "மண்ணாள் வேந்தே நின்வா ணாட்க, டண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க" ( சிலப் 28: 125–6) என வருவன காண்க. தன் மலைப்பிறந்து தன்கடன் மண்டும் மலி புனலையுடைய குட்டுவனைச் செல்வமுடையையாகவென வாழ்த்தவேண்டுவ தின்மையின் 'நின்பெயர் வாழியரோ' என்றார்.

இதனால் சொல்லியது அவனை நீடுவாழ்கவென வாழ்த்தியவாறாயிற்று.

'கொள்ளாப் பாடற் கெளிதினி னீயும், கல்லாவாய்மையன்' எனவும், 'வணங்கிய சாயல் வணங்கா வாண்மை' எனவும் குட்டுவன் இயல்பைக் கூறு தலின் துறை இயன்மொழிவாழ்த்தாயிற்று.

## பழையவுரை.

3. நிலைஇயென்றது நிலைப்பித்தென்னும் பிறவினை. 4 கடலொடுழந்த வென்னும் ஓடு வேறுவினையொடு. 'பரதவ' என்றதனாற் சொல்லியது அக்கட லின் உழத்தற்றொழிலொப்புமைபற்றி அக்கடற்றுறை வாழும் நுளையற்குப் பெயராகிய பரதவனென்னும் பெயரான் இழித்துக் கூறினான்போலக் குறிப் பான் உயர்த்து வென்றி கூறினானாகக்கொள்க. 5-9. தாரத்தையென விரித்து ஈயும் (6) என்பதனொடு முடித்து, ஈயுமென்னும் பெயரெச்சத்தினைக் கல்லா வாய்மையன் (7) என்னும் காரணப்பெயரொடு முடித்து அப்பெயரை இக் கவி கூறுகின்றான் பிறர் கூற்றினைக் கொண்டு கூறுதற்கண் வந்த எனவொடு புணர்த்து, கடலுட் போர்செய்து அரிதிற் பெற்ற பொருளை எளிதாக மனங் கொள்ளாப் பாடலையுடைய தரம்போதாதார்க்குக் கொடுக்கும் பேதை இவ னென இழித்துக் கூறற்கு ஏற்பக் கைவலிளையர் அடைவே தத்தம் கையைச் சுட்டி நிரைக்கும்படி இரவலரிடத்து வணங்கிய மென்மையென வுரைக்க. ஆண்டு நீர்ப்போந்து பெற்ற தாரத்தையென்றான் இக்கவி கூறுகின்றான்; அவ்வுருபிற்கு முடிபாகிய ஈயுமென்றது கூறுகின்றார் கைவலிளையர்; அக் கைவலி ளையர் கூறிற்றாக இக்கவி கூறுகின்றானுக்குக் கொண்டு கூட்டாகப் புகுந்தமை யான் அவ்விரண்டாவதற்கு அவ்வீயுமென்னும் வினை முடிபாமெனக் கொள்க. இதற்குப் பிறவாறும் கூறுப. 7. கல்லா வாய்மையனென்றது கல்லாத தன் மையை உண்மையாக உடையனென்றவாறு. 11. மாலையொடென்னும் ஒடு வேறுவினையொடு. 11–2. சாந்துபுலர் மார்பவெனக் கூட்டுக. 14. மலிபுனலை யுடைமையின் யாறு மலிபுனலெனப்பட்டது. நிகழ்தருந் தீநீரென்றது அவ் வியாறுகளிலே புதிதாக வருகின்ற இனிய நீரென்றவாறு. 15. பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கையென்றது வேனிற்காலத்து மனையில் வைகாது பொழில்களிலே வதியும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கையென்ற வாறு. வேனிற்பொழில்வதியென்க. வாழ்க்கையையுடைய (15) ஆயம் (17)

எனக் கூட்டுக. இச் சிறப்பானே இதற்கு, பேரெழில் வாழ்க்கை என்று பெயராயிற்று. இனிப் பொழில்வய வேனிலென்பது பாடமாயின் பொழில் வயப் படுவதான பொருளுண்டாகிய வேனிலென உரைக்க. 16. இனிது நுகருமென்றது சுற்றத்தோடு உண்டலேயன்றிச் செல்வமுடையார் அச்செல்வத்தாற் கொள்ளும் பயன்களெல்லாம் கொள்ளுமென்றவாறு. 17. புனலாயம் –புனலாடற்கு வந்த திரள்.

பரதவ (4), வணங்கிய சாயலையும் வணங்கா ஆண்மையினையுமுடைய (9) சாந்துபுலர் (11) மார்ப, நின்பெயர் (12) பெருந்துறை மணலினும் பல (18) வாழியர் (12) எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதனாற் சொல்லியது அவனை நீடுவாழ்கவென வாழ்த்தியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி

1—2. "எரியகைந் தன்ன வேடி ழுமரை, சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி, நூலின் வலவா நுணங்கரின் மாலை, வாலொளி முத்தமொடு பாடினி யணிய" பொருந 159-62; "ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை, நீடிரும் பித்தை பொலியச் சூட்டி......புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின், றொடையமை மாலை விறலியர் மலைய" பெரும்பாண்481-6; "பொலந் தாமரைப் பூச்சூட்டியும்" மதுரைக் 103; "மறம்பாடிய பாடினியும்மே, யேருடைய விழுக்கழஞ்சிற், சீருடைய விழைபெற்றிசினே......கொலைவல் பாண்மகனும்மே எனவாங், கொள்ளழல் புரிந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற்றிசினே" "பாணன் சூடிய பசும்பொற் றாமரை" மாணிழை விறலி மாலையொடு விளங்க" "பாடினி மாலையணிய, வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே" "வாடா மாலை பாடினி யணியப், பாணன் சென்னிக் கேணி பூவா, வெரிமரு டாமரைப் பெருமலர் தயங்க" புற 11: 11–7; 141: 1–2; 319: 14–5; 364: 1-2.

2. "ஒளிதிகழ் முத்தம் விறலியர்க் கீந்து" புற 170: 11.

ஒண்ணுதல் விறலியர்: பொருந 110; புற 32: 4; 70: 14-5;

3. பல்புகழ்: பதிற் 12: 8 ஒப்பு.

கெடலரும் பல்புகழ் நிலைஇ: பதிற் 14: 21 ஒப்பு.

4. பனித்துறை: பதிற் 31: 6 ஒப்பு.

5–6. பகைவர்பாற் பெற்றவற்றைப் பரிசிலர்க்கீதல்: பதிற் 20: 13-6 ஒப்பு.

9. மு. "வணங்கிய சாயல் வணங்கா வாண்மை" பதிற் 70: 20.

10. கனையெரி: அக 79: 2; 105: 12; 305: 15; 379: 19; புற 23: 11; 229: 11; 315: 6; பு. வெ. மா 261; சீவக 2249; சிலப் 14: 122; மணி 2: 42.

பகைவர் முனையை எரியூட்டல்: பதிற் 15: 1–2 ஒப்பு.

11—2. சாந்துடைய மார்ப: பதிற் 50: 16–8; 80: 5; முருகு 193; மதுரைக் 493; குறுஞ்சி 120–1; குறுந் 150: 3; அக 26: 14; 36: 18; 224: 9; 338: 16; புற 308: 7; நாலடி 389; திணைநூற் 143; சிலப் 22: 92.

**சாந்தினையும் பொறியினையுமுடைய மார்பு:** *"புகன்ற மாண்பொறிப் பொலிந்த சாந்தமொடு......அருவி யருவரை யன்ன மார்பின்"* **பதிற்** *88: 30-5; "மார்பிற், குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு, நறுந்தண் ணியன்கொல்"* **நற்** *394: 7-9; "புலவர் புகழ்குறி கொண்ட பொலந்தா ரகலத்துத், தண்கமழ் சாந்த நுண்டுக ளணிய"* **அக** *354: 8-10; "அம்பகட் டெழிலிய செம்பொறி யாகத்து" "சாந்தருத்திப், பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகலம்"* **புற** *68: 5; 161: 21-7; "பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியன்"* **சீவக** *1706;*

*13—4.* **மலையிற் பிறந்து கடன்மண்டும் மலிபுனல்:** *"கல்வீ முருவி கடற்படர்ந் தாங்கு"* **பெரும்பாண்** *427; "மலைத்தலைய கடற் காவிரி"* **பட்டினப்** *6. "தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின், மீமிசை நல்யாறு கடற் படர்ந் தாஅங்கு" "குடமலைப் பிறந்த பெருந்தண் காவிரி, கடன்மண் டுழூவத்து"* **மலைபடு** *51: 2; 527-8; "மலைவரை மாலை யழிபெயல் காலைச், செல வரை காணுக் கடறலைக்கூட......போந்தது வையைப் புனல்" "வையாய், நின் பிறந்தையாகிய மலையை விட்டு இருத்தற்குரிய நின்கடற்றலைவ னில்லத்து நீ தனியே சேறல் இளிவரவு' 'கடலை நோக்கி மலையினின்றும் பரந்துவரும் யாற்றை யொக்க* **பரி***10 1-8; 11: 43-4;* பரிமேல் *16: 27* பரிமேல்; *'மலைமிசைத் தொடுத்த மலிந்துசெலல் நீத்தம், தலைநாண் மாமலர் தண்டுறை தயங்கக், கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்று"* **அக** *126: 3-5; "மலையி னிழிந்து மாக்கட ேனாக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போல" 'மணியன்னநீர் கடற்படருஞ், செவ்வரை' "மலிதிரைக், கடன்மண்டு புனலி னிழுமெனச் சென்று"* **புற** *42: 19-20; 137: 11-2; 237: 17-8.*

*14.* **நீர் விழவு:** *"நறுநீர் விழவின்" "ஒன்று தோறுந் துன்னின ராடும், நெடுநீர் விழவில்"* **பெருங்** *(1) 40: 4; 43: 14-5.*

*15. "அரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயில், ஆறு தகவும் பொழுதினன் மேவர, நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந், தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமார்"* **கலி** *92: 63-6.*

**மணலிற் பல:** *"திரையிடு மணலினும் பலரே யுரைசெல, மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே"* **மதுரைக்** *236 7; "தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்..... சேயாற்று, வடுவா ழெக்கர் மணலினும் பலரே"* **மலைபடு** *553-6; "முயங்குகஞ் சென்மோ நெஞ்சே.....தண்ணான் பொருநை மணலினும் பலவே"* **அக** *93: 16-23. "தாமே யாண்ட வேமங் காவல, ரிடுதிரை மணலினும் பலரே"* **புற** *363: 3-4; "எத்துணை யாற்று ளிடுமணல் .....அத்துணையும் பிற ரஞ்சொல்லி னார்மனம், புக்கனம்"* **வலையாபதி.** *"தொல்லை நம் பிறவி யெண்ணிற் றெருடகடன் மணலுமாற்று" "தருமணல் லலகை யாற்று"* **சீவக** *270: 3048; "பரவை வெண்மணலினும் பல புரவியின் பந்தி"* **வில்லிபாரதம்** *கிருட்டினன் 65.*

*12—8.* **மணலிற் பலவாழிய:** *"பூந்தார் மாற......நீடு வாழிய நெடுந் தகை தாழ்நீர் வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி, னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக், கடுவளி தொகுப்ப வீண்டிய, வடுவா ழெக்கர் மணலி*

*னும் பலவே" "தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை, நுண்பல மணலினு மேத்தி" "ஊழி வாழி பூழியர் பெருமகன் .... கல்லென் பொருநை மணலி னும்......பலவே"* புற *55: 6-21; 136: 25-6; 387: 28-36*; *"மண்ணாள் வேந்தே நின்வா ணாட்க, டண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க"* சிலப் *28: 125-6*.

---

## செங்கை மறவர்.

(49) யாமுஞ் சேறுக நீயிரும் வம்மின்
துயலுங் கோதைத் துளங்கியல் விறலியர்
கொளைவல் வாழ்க்கைநுங் கிளையினி துணீஇயர்
களிறுபரந் தியலக் கடுமா தாங்க
ஒளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப
எஃகுதுரந் தெழுதருங் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை யதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலி னவற்பரந் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரச நடுவட் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே.

**துறை—விறலியாற்றுப்படை.**
**வண்ணமும் தூக்கும் அது.**
**பெயர்—செங்கை மறவர் (10).**

ப—ரை. *4—17. களிறு பரந்து இயல — களிறுகள் பரந்து செல்லவும், கடுமா தாங்க — விரைந்த செலவினையுடைய குதிரையை மேல் ஆட்கள் குசையைத் தாங்கி வேண்டுமளவிலே பிடிக்கவும், ஒளிறு கொடி நுடங்க தேர் திரிந்து கொட்ப—விளங்குகின்ற கொடிகள் அசையும்படி தேர் மறிந்து திரியவும், எஃகு துரந்து எழுதரும்—வேற் படையைச் செலுத்தி எழுதலைச் செய்யும், கைகவர் கடு தார்—மாற்றார் படையின் கையென்னும் உறுப்பைச் சென்று கவரும் கடிய தூசிப்படையினையுடைய, வெல்போர் வேந்தரும் வேளிரும்—வெல்லும் போரினையுடைய அரசரும் குறுநில மன்னரும், ஒன்று மொழிந்து —ஒருவர் துணிந்ததே காரியமாக அனைவரும் துணிந்து சொல்லி உடன்வர, மொய் வளம் செருக்கி—வலியாகிய செல்வத்தானே மயங்கி, மொசிந்து வரு*

மோகூர்—அவரோடு கூடிவரும் மோகூருக்கு அரசனான பழையன் என்பானது, வலம் படு குழூஉ நிலை அதிர மண்டி—வென்றி படுதற்கு ஏதுவாகிய கூட்டத்தின் நிலை நடுங்கும்படி மிக்குச்சென்று, நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்—பகைவரது உடலுக்கு குருதியை அளைந்து சிவந்த கையையுடைய வீரருடைய, நிறம் படு குருதி—மார்பிலிருந்து உண்டாகும் இரத்தம், நிலம் படர்ந்து ஓடி—நிலத்திலே பரவி ஓடி, மழை நாள் புனலின் அவல் பரந்து ஓழுக — மழை பெய்யும் நாளில் உண்டாகும் சிவந்த வெள்ளம்போலப் பள்ளங்களிலே பரவிப் பாய, படு பிணம் பிறங்க—பட்டு வீழும் பிணங்கள் மிக, பாழ் பல செய்து—பாழ்கள் பலவற்றைச் செய்து, படு கண் முரசம் நடுவண் சிலைப்ப — ஒலிக்கின்ற கண்ணையுடைய வீரமுரசம் போர்க்களநடுவே நின்று படையை ஏவி ஒலிப்ப, வளன் அற நிகழ்ந்து—செல்வம் அறும்படியாகக் கொள்ளை நிகழ, வாழுநர் பலர்பட—வாழ்வார் பலர் பட, கரு சினை விறல் வேம்பு அறுத்த—கரிய கொம்பினையுடைய வெற்றியையுடைய வேம்பினை வெட்டிய, பெரு சின குட்டுவன் கண்டனம் வரற்கு—மிக்கசினத்தையுடைய குட்டுவனைக் கண்டு வருதற்கு.

1—3 யாமும் சேறுகம் – யாங்களும் செல்கின்றேம்; கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇயர்—பாட்டை வல்ல வாழ்க்கையையுடைய நும் சுற்றத்தார் இனிது உண்ணும்பொருட்டு, துயலும் கோதை துளங்கு இயல் விறலியர்—அசைகின்ற மாலையினையுடைய அசைகின்ற தன்மையினையுடைய விறலியரே, நீயிரும் வம்மின்—நீங்களும் வாருங்கள்.

முடிபு: குட்டுவற் கண்டனம் வரற்கு யாமும் சேறுகம்; நும்கிளை இனிது உணீஇயர் விறலியர் நீயிரும் வம்மின் என்க.

ஆ—ரை. 4—17. மோகூர் மன்னனின் குழூஉநிலை அதிர மண்டி மறவர் குருதி பரந்து ஓழுகப் பிணம் பிறங்கப் பாழ்பல செய்து முரசம் நடுவட் சிலைப்ப வளனற நிகழ வாழுநர் பலர்பட விறல்வேம் பறுத்த குட்டுவன் என்க.

களிறு பரந்து இயலவும் கடுமா தாங்கவும் தேர்திரிந்து கொட்பவும் எஃகு துரந்து எழுதரும் தார் என்க.

"களிறுபாய்ந் தியலக் கடுமா தாங்க
ஒளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப" பதிற் 81: 6-7.

எனப் பிறரும் கூறுதல் காண்க. படையிலுள்ள பெருங்களிறுகள் இடத்தே பரந்து அசைந்து செல்லுதலின் 'களிறு பரந் தியல' என்றார். இயல—அசைய. கடிய செலவினையுடைய குதிரையை முருகு 215 நச். நடக்கவொன்னுமமையும். அவற்றின் மேலாட்கள் குசைதாங்கி வேண்டுமளவிலே பிடித்தலின் 'கடுமா தாங்க' என்றார்.

"மாதாங் கெறுழ்த்தோண் மறவர்" மதுரைக் 729.

"நிமிர்பரிய மாதாங்கவும்" புற 14.7.

என வருவன காண்க. ஒளிறு கொடி—நெடிய தேர்மீது கட்டுதலால் விளங்குகின்ற கொடி. கொடி—வெல் கொடியுமாம். "வான்றோய் வெல்கொடி தேர்மிசை நுடங்க" (பதிற் 44: 2) என வந்தமை காண்க. கொடி நுடங்கல் தேரின் செலவு கடுமையால் என்க.

"வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற ககைப்பநீ
நெடுந்தே ரோட்டிய" பதிற் 25: 11-3.

எனப் பிறரும் கூறுதல் காண்க. எஃகு துரந்தெழுதரும் என்றது பகைவர் யானைப் புணர்நிரை துமிய வேலைச் செலுத்தி எழுதரும் என்றவாறு. "பகைவர், பைங்கண் யானைப் புணர்நிரை துமிய, உரந்துரந் தெறிந்த....மறவர்" (பதிற் 28: 11-3) என வருதல் காண்க. எழுதரும் - தோன்றும் எனினுமாம். கை-பக்கப் படை. இது படையின் உறுப்பாதல்,

"தூசியுங் கூழையு நெற்றியுங் கையும்
அணியு மென்ப தப்படைக் குறுப்பே" 6: 403.

என்னும் பிங்கலந்தையானுமறிக. * படை வகுப்புமாம். "கைமாண் கடற் படையுள்" (சீவக 1801) என்புழிக் 'கை—படை வகுப்பு' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. கைகவர் தார் என்க. கடுந்தாரையும் வெல்போரையுமுடைய வேந்தர் (7) என்க. வேந்தர் வினைவலியையும் அவர் தம் படைவலியையும் கூறியது அவரையும் வேளிரையும் துணையாகக்கொண்ட மோகூர் மன்னனை வென்ற குட்டுவனின் பெருவலி தோன்றற்பொருட்டென்க. வேந்தரும் வேளிரும் மோகூர் மன்னனுக்குத் துணையாகிக் குட்டுவனை எதிர்க்கும் ஒருமைப்பாடுடையராதல் தோன்ற 'ஒன்று மொழிந்து' என்றார். ஒன்று மொழிந்து-வஞ்சினமுரைத்து எனினுமாம். குட்டுவன் பெருவலியை உணர்ந்து எதிர்தல் தவிராது மொசிந்து வருதற்கு மோகூர் மன்னன் மொய் வளத்தாற் செருக்கினமை ஏதுவாகலின் 'மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்' என்றார். மொய்-வலி. இப்பொருட்டாதல், "பொய்தப, விறைபகை தணிப்ப" (கலி 78: 7-8) என்புழிக் காண்க. வளம்-மிகுதியுமாம். செருக்கி-மயங்கி. "கடாஅஞ் செருக்கி" குறிஞ்சி 164. செம்மாந்து எனினுமமையும். வேந்தரும் வேளிரும் உடன் வருதலின் 'மொசிந்துவரு மோகூர்' என்றார். மோகூருக்கு அரசனுதல்பற்றிப் பழையனை 'மோகூர்' என்றார். "மோகூர் பணியாமையின்" (அக 251: 10-11) எனப் பிறரும் கூறுதல் காண்க. குழூஉ—தானை. "ஒன்னார் வேலுடைக் குழூஉ" (பதிற் 66 4-5) என்றார் பிறரும். அதிரப்பொருதல் தும்பையாகலின் 'அதிரமண்டி' என்றார். மண்டிப் (9) பாழ்பலசெய்து (13) என முடிக்க.

நெய்த்தோர் தொட்ட செங்கை மறவரென்றது பகைவர் உடலில் தாங்கள் எறிந்த வேல் முதலிய கருவிகளைப் பறிக்கின்ற காலத்து அவருடைய உடலுகு குருதியை அளைந்து சிவந்த கையையுடைய மறவர் என்றவாறு. இச் சிறப்பானே இச்செய்யுளுக்குச் செங்கைமறவர் என்று பெயராயிற்று.

இனி, நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் என்பதற்குப் 'பொருகளத்தைப் பொருந்திய சேனைகெட எறிதற்குத் தன் மார்பகத்தைப் போழ்ந்த வேலைப் பறிக்கின்ற காலத்து அப்புண்ணுமிழ் குருதியை அளைந்து சிவந்த கையையுடைய மறவர் எனினுமமையும்.

---

* "உண்டைங் கையும் ஒட்டும் யூகமும், வந்தவணியும் படைவகுப்பின் பெயர்" —திவாகரம்

"மொய்யகத்து மன்னர் முரணினி யென்றுங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை — வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுட ரெஃகம் பறித்து" பு. வெ. மா. 142.

என வருதல் காண்க. "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" (குறள் 744) என்பதும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. நெய்த்தோர்-குருதி. "மத்தகத் திழிதரு நெய்த்தோர்ப் பெரும்புனல்" பெருங் (1) 46: 36. மறவர், மோகூர் மன்னனின் படைவீரர். அம் மறவரின் ஆற்றலைப் புலப்படுத்தியது அவர் குருதி நிலம்படர்ந்தோடும்படி அவரை வென்ற குட்டுவனின் பேராற்றலைப் புலப்படுத்தற்பொருட்டென்க. மறவர் நிறம்படு குருதி ஒழுக' என்றதனால் முதுகிடாத வலிசான்ற மறவரைக் குட்டுவன் அறநெறியாற் பொருது வென்றமை பெறப்படும். நிகழ்ந்து என்றதனை நிகழவெனத் திரிக்க. இனி, வளனறவெனவும் நிகழ்ந்து வாழுநரெனவும் அறுத்து நிகழ்தலை வாழ்வார்மேலேற்றி நிகழ்ந்துவாழ்தல் என்றலுமாம். ஆண்டு நிகழ்தல்-விளக்கம். வேம்பு-மோகூர் மன்னனின் காவல் மரம். அதனை விறல் வேம்பு என்றது பிறராற் றடியப்படாமையின் என்க. விறல் – வலியுமாம். விறன் முனை-வலிய பூசல். பு. வெ. மா 196 உரை. பாழ்பல செய்தும் சினந் தணியப் பெறானாகிப் பெருஞ்சினத்தோடு வேம்பு தடிந்தமையின் 'வேம்பறுத்த, பெருஞ் சினக் குட்டுவன் என்றார். இதனாற் குட்டுவன் வென்றியைக் கூறியது யாம் சென்று காண்பதற்கேற்ப அவன் பகைவரை வென்று பெற்ற பொருளுடையான் என்பது புலப்படுத்தற் பொருட்டென்க.

"குருதி பனிற்றும் புலவுக்களத் தோனே
துணங்கை யாடிய வலம்படு கோமான்
மெல்லிய வகுந்திற் சீறடி யொதுங்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
............ ................. ...........
புரவெதிர் கொள்வனைக் கண்டனம் வரற்கே" பதிற் 57: 3-15.

எனப் பிறரும் கூறுதல் காண்க. வரற்குச் (17) சேறுகம் (1) எனக் கூட்டுக.

1—3. யாம் என்றவர் குட்டுவன்பாற் பரிசில்பெறச் செல்வோராவர். உம்மை எச்சவும்மை. 'நீயிரும், என்றது விறலியரை. கோதை-ஈண்டு மார்பின் மாலை. "மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன், முயங்கிய நாள்தவச் சிறிதே" (குறுந் 393) என வருதல் காண்க. கோதை, மாலையாதல், "ஒள்ளிழைப், பாடுவல் விறலியர் கோதையும் புனைக" (புற 172: 2-3) என்புழிக் கோதை-மாலை என அதன் உரையாசிரியர் உரைத்தமையானுமறிக. விறலியர் நடக்குந்தோறும் மார்பிலணிந்த மாலையசைதலின் 'துயலுங் கோதை விறலியர்' என்றார். "மகடூஉ .....கிளர்பூங் கோதை, வண்ண மார்பின் வனமுலைத் துயல்வர......கோடிய சிறந்த (அக 301: 12-23) என வருதல் காண்க. இதனால் குட்டுவனைக் கண்டுவந்தற்கேற்ற ஒப்பனையுடையராதல் கூறினார். கொடியேர் சாயலுடைமையால் அசைகின்ற இயல்பினையுடைய விறலியரைத் 'துளங்கியல் விறலியர்' என்றார். கொளை-பாட்டு. விறலியர் சுற்றத்தார்

பாட்டை வல்லராதல் "கொளைவல் பாண்மகனும்மே" (புற 11: 15) என்பத னுலுமறிக. 'யாமும் சேறுகம்; விறலியர், நீயிரும் வம்மின்; அதனால் நுங்கிளை யினிதுண்பதாகுக' எனவும் உரைக்கலாம்.

இதனாற் சொல்லியது அவன் 9 வரையாவீகை கூறியவாறாயிற்று.

## பழையவுரை.

4. கடுமா தாங்கவென்றது கால் கடிய குதிரைமேல் ஆட்கள் வேண் டிய அளவுகளிலே செலவை விலக்கிச் செலுத்தவென்றவாறு. 5. திரிந்து கொட்ப வென்றது மறிந்து திரியவென்றவாறு. 6. கைகவர் கடுந்தாரென் றது மாற்றார் படையில் வகுத்து நிறுத்தின கைகளைச் சென்று கவரும் கடிய தூசிப்படையென்றவாறு. கடுந்தாரையுடைய (6) வேந்தர் (7) எனக் கூட்டுக. மொய்வளஞ் செருக்கியென்றது வலியாகிய செல்வத்தானே மயங்கி யென்றவாறு. மொய் என்பது வலி. 10. நெய்த்தோர் தொட்ட செங்கை மறவரென்றது பகைவருடலில் தாங்கள் எறிந்த வேல் முதலிய கருவிகளைப் பறிக்கின்ற காலத்து அவருடைய உடலுக்குக் குருதியை அளைந்து சிவந்த கையையுடைய மறவரென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு, **செங்கை மற வர்** என்று பெயராயிற்று. மறவரது (10) குருதி (11) எனக் கூட்டுக. குழூஉ நிலை அதிர மண்டிக் (9) குருதி (11) ஒழுகப் (12) பிணம் பிறங்கப் பாழ்பல செய்து (13) முரசம் நடுவட் சிலைப்ப (14) வளனற நிகழ வாழுநர் பலர்பட (15) விறல்வேம்பறுத்த (16) என முடிக்க. 15. வளன் அற நிகழ்ந்தென்றது செல்வமானது அறம்படியாகக் கொள்ள நிகழவென்றவாறு. நிகழவெனத் திரிக்க. இனி வளனறவெனவும் நிகழ்ந்து வாழுநரெனவும் அறுத்து நிகழ் தலை வாழ்வார்மேலேற்றி நிகழ்ந்து வாழ்தலென்றலுமாம். ஆண்டு நிகழ்தல்— விளக்கம்.

குட்டுவற் கண்டனம் வரற்கு (17) யாமும் சேறுகம் (1) நும் கிளை இனி துணீஇயர் (3) விறலியர் (2) நீயிரும் வம்மின் (1) எனக்கூட்டி **வினைமுடிபு** செய்க.

இதனாற் சொல்லியது அவன் வரையாவீகை கூறியவாறாயிற்று.

## ஒப்புமைப்பகுதி.

1. **வம்மின்:** கலி *104: 63*; புற *32: 6*.

2. **துயலுங்கோதை:** "கோதை துயல்வர" அக *292: 5*.

**துளங்கியல் விறலியர்:** "துளங்கியல்... இலங்குவளை விறலியர்" மலைபடு *43-6*.

4. **கடுமா:** பதிற் *28: 4* ஒப்பு.

5. **தேரில் கொடி நுடங்கல்:** பதிற் *25: 11-3* ஒப்பு.

7. **வெல்போர் வேந்தர்:** பதிற் *11: 14-6* ஒப்பு.

**வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிதல்:** பதிற் *30: 30* ஒப்பு.

10. **நெய்த்தோர்:** பதிற் *30: 37* ஒப்பு.

---

9. 'வரையாவீகை - எல்லார்க்கும் எப்பொருளும் வரையாது கொடுக்கும் வண மை' - புற 17: 40 உரை.

*11—5.* குருதிப்புனல்: பதிற் *36: 13* ஒப்பு.

*14.* மு. *"படுகண் முரச நடுவட் சிலைப்ப"* பதிற் *54: 13.*

படுகண்: *"படுகண் ஆகுளி" "படுகண் முழவு"* மலைபடு *140: 532; "படுகணிமிழ் கொளை"* பரி *16: 12.*

*16.* கருஞ்சினை வேம்பு: *"கருஞ்சினை வேம்பின்"* பதிற் *5ம் பதி 13. "கருஞ்சினை யரவாய் வேம்பின்"* பொருந *143-4; "கருஞ்சினை வேம்பின்" "கருஞ்சினை வேம்பும்"* புற *45: 2; 338: 5-6.*

*17.* கண்டனம் வரற்கு: *"புரவெதிர் கொள்வனைக் கண்டனம் வரற்கே"* பதிற் *57: 15; "கண்டனம் வருகஞ் சென்மோ"* நற் *235: 7.*

## வெருவரு புனற்றார்.

(50) மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கான்மயங்கு கதழுறை யாலியோடு சிதறிக்
கரும்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
செங்குணக் கொழுதுங் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூட லனையை
கொல்களிற், றுரவுத்திரை பிறழ வவ்வில் பிசிரப்
புரைதோல் வரைப்பி னெஃகுமீ னவிர்வர
விரவுப்பணை முழங்கொலி வெரீஇய வேந்தர்க்
கரண மாகிய வெருவரு புனற்றார்
கன்மிசை யவ்வுங் கடலவும் பிறவும்
அருப்ப மமைஇய வமர்கடந் துருத்த
ஆண்மலி மருங்கி னாடகப் படுத்து
நல்லிசை நனந்தலை யிரிய வொன்னார்
உருப்பற நிரப்பினை யாதலிற் சாந்துபுலர்பு
வண்ண நீவி வகைவனப் புற்ற
வரிஞிமி றிமிரு மார்புபிணி மகளிர்
விரிமென் கூந்தன் மெல்லணை வதிந்து
கொல்பிணி திருகிய மார்புகவர் முயக்கத்துப்
பொழுதுகொண் மரபின் மென்பிணி யவிழ
எவன்பல கழியுமோ பெரும பன்னாட்
பகைவெம் மையிற் பாசறை மரீஇப்
பாடரி தியைந்த சிறுதுயி லியலாது

25 கோடுமுழங் கிமிழிசை யெடுப்பும்
பீடுகெழு செல்வ மரீஇய கண்ணே.

**துறை-வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம்-ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்**
**தூக்கு-செந்தூக்கு**
**பெயர்-வெருவரு புனற்றார் (11)**

**ப—ரை:** **1—7.** *மாமலை-பெரிய மலையின்கண்ணே, முழக்கின் மான் கணம் பனிப்ப—தன் முழக்கத்தினால் மான் திரள் நடுங்கும்படி. கால் மயங்கு கதழ் உறை ஆலியொடு சிதறி—வானம் காற்றோடு மயங்குதலால்விரைந்த துளிகளை ஆலங்கட்டியுடன் சிதற. கரும்பு அமல் கழனிய நாடு வளம் பொழிய—கரும்புகள் நெருங்கிய கழனிகளையுடைய நாடு வளத்தைப் பொழிந்தாற்போல மிகவிளைய, வளம் கெழு சிறப்பின் உலகம் புரைஇ—நீர்வளம் பொருந்திய தலைமையால் உலகத்தைப் பாதுகாத்து. செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர் நிறை காவிரி அன்றியும்—நேர் கிழக்கே ஓடுகின்ற பெருக்காகிய நிறைந்த வெள்ளத்தையுடைய காவிரி அணையையாவதேயன்றி, மூன்று உடன் கூடிய கூட்டத்து அனையை—பூக்கள் பரந்தயாறுகள் மூன்று சேரக்கூடிய கூட்டத்தனையை;*

**8—16.** *கொல் களிற்று உரவு திரை பிறழ—கொல்கின்ற களிறுகளாகிய வலிய திரைகள் தம்மில் மாறுபட்டுப் புடைபெயர, அவ்வில் பிசிர—அவ்விற்கள் அத்திரைக்குப் பிசிராக, புரை தோல் வரைப்பின் எஃகு மீன் அவிர்வர—உயர்ந்த பரிசையின் எல்லையின்மேல் வேலாகிய மீன் விளங்குதல் வர, விரவு பணை முழங்கு ஒலி—வளை முதலியவற்றின் ஒலியோடு கலந்த பணையொலியாகியமுழங்கும் ஒலியையுடைய, வெரீஇய வேந்தர்க்கு அரணமாகிய—தம் பகையை வெருவி இவன்றன்னுடன் நட்பாகிய வேந்தர்க்குப் பாதுகாப்பாகிய, வெருவரு புனல் தார்—தன்னை அடைத்தார் வெருவரத்தக்க தூசிப்படையாகிய வெள்ளத்தை, கல்மிசையவ்வும்—மலைகளின் மேலுள்ளனவும், கடலவும்—கடலின்கணுள்ளனவும், பிறவும் – பிற இடங்களிலுள்ளனவுமாகிய, அருப்பம் அமைஇய—அரண்களை அமைத்த, அமர் கடந்து உருத்த—போரில் வஞ்சியாது எதிர் நின்று கோபித்த, ஆள் மலி மருங்கின் நாடு அகப்படுத்து - வீரர் மிக்க இடங்களையுடைய நாடுகளைக் கைப்பற்றி, நல் இசை நனந்தலை இரிய-நல்ல புகழ் அகன்ற இடத்தையுடைய உலகத்தை விட்டு நீங்க, ஒன்னார் உருப்புஅற நிரப்பினை—பகைவரது சினமாகிய தீ அழியும்படி நிரப்பினை; ஆதலின்—ஆதலினாலே,*

**22—6.** *பெரும-பெருமானே, பகை வெம்மையின்-பகைவரது கொடுமையினால், பல் நாள் பாசறை மரீஇ-பல நாட்கள் பாசறையில் மருவுகையால், அரிது பாடு இயைந்த சிறு துயில்-அரிதாகப் படுதல் இயைந்த சிறு துயிலும் இயலாமல், கோடு முழங்கு இமிழ் இசை எடுப்பும்-சங்கு இடையிடையே முழங்குகின்ற இமிழிசையையுடைய இயமரங்கள் எழுப்பும், பீடு கெழு செல்வம் மரீஇய கண்-வலிபொருந்திய புடைச் செல்வத்திலே பழகிய கண்,*

16—22. சாந்து புலர்பு-பூசிய சந்தனம் புலர, வண்ணம் நீவ-வண்ணம் துடைக்கப்பட, வகை வனப்பு உற்ற-பலவகையான அழகு பொருந்திய, வரி ஞிமிறு இமிரும் – வரியினையுடைய மிஞிறு ஒலிக்கும், மார்பு பிணி மகளிர்– மார்பாற் பிணிக்கப்பட்ட மகளிரது, விரி மெல் கூந்தல் மெல் அணை வதிந்து –விரிந்த மெல்லிய கூந்தலாகிய மெல்லிய படுக்கையிலே தங்கி, கொல் பிணி திருகிய மார்பு கவர் முயக்கத்து-வருத்துகின்ற காமமாகிய நோய் மிகுதலாலுண்டாகிய அவர் மார்பை விரும்பிச் சேர்ந்த முயக்கத்திலே, பொழுது கொள் மரபின் மெல் பிணி அவிழ–இராப் பொழுதைப் பயன்கொண்ட முறைமையினையுடைய சிறுதுயில் நீங்குதற்கு, பல எவன் கழியுமோ - நாள் பல நினக்கு எவன கழியுமோ.

முடிபு: நீ கூடலனையை; பெரும தார்ப்புனலை ஒன்னூர் உருப்பற நிரப்பினையாகையாலே யான் நின்னை ஒன்று கேட்கின்றேன்; பீடுகெழு செல்வம் மரீஇய கண் முயக்கத்துப் பொழுதுகொண் மரபின் மென்பிணி அவிழ நாள் பல நினக்கு எவன் கழியுமோ என்க

ஆ—ரை: 1—7. மாமலைக்கண்ணே முகில்உறை சிதற உலகத்தைப்புரந்து செங்குணக்கு ஒழுகும் காவிரியனையையாவதேயன்றிப் புனல் மூன்றும் சேரக் கூடிய கூட்டத்தனையை என்க.

மாமலையென்றது காவிரியின் பிறப்பிடமான குடகமலையை. காற்றுப் பொரும் இப்பெருமலைக்கண்ணே மான்கணம் நடுங்கும்படி முழக்கினொடு வானம் மழைபொழிதலாற் காவிரி ஒழுகுதலின் 'மாமலை முழக்கின் மான்கணம் பனிப்ப உறைசிதற ஒழுகும் காவிரி' என்றார்.

"குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி" மலைபடு 527.

"மலைத்தலைய . காவிரி"-குடகமலையிடத்தே தலையினையுடைய.....காவிரி பட்டினம் 6 நச்.

> "குடாஅது, பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற், பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்" — 'மேற்றிசைக்கண் பொன்படுகின்ற நெடிய குடகமலைக்கண்ணே முகிலின்கண் இடியேறு முழக்கிற் பூப்பரந்த புதுநீரையுடைய காவிரி உலகத்தைப் பாதுகாக்கும்'-புற 166: 26-8 உரை.
>
> "கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடுஞ், சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ்சுரப்பக், குடமலைப் பிறந்த...காவிரி"-'காற்றுப் பொரும் குடகவரையினது உச்சிக்கண்ணே கடிய குரலையுடைய உருமேற்றோடு சூன்முதிர்ந்த பருவப்புயல் தன்பெயலாகிய வளத்தைச் சுரத்தலானே அவ்வரையிற் பிறந்த.....காவிரி' சிலப் 10: 104-8 அடி நல்.

என வருவன காண்க.

முழக்கின் பனிப்பச் சிதறி எனக்கூட்டி முழக்கினால் பனிக்கும்படி அம்முழக்கினொடு சிதறி எனவுரைக்க இனி, பனிப்ப முழக்கின் சிதறி எனமாறிக் கூட்டிப் பனிக்கும்படி முழக்கினொடு சிதறி எனினுமமையும். "வரை முத லிரங்கு மேஏறொடு வான் ஞெமிர்ந்து, சிதரற் பெரும்பெயல் சிறத்தலின்" (மதுரைக்243-4) எனப் பிறரும் கூறுதல் காண்க. முழக்கின் கடுமை தோன்ற 'மான்கணம் பனிப்ப' என்றார். மான் கணம் - மானினது திரட்சி. மலைக்கண் மான்

திரளாக வாழ்தல் "மானினங் கலித்த மலை" (புற 138: 2) "மலைய வினங் கலங்க......கதழுமருவி யிழியும்" என்புழி 'இனம்-மானின முதலாயின' (பரி 6: 5-6 பரிமேல்) என வருவனவற்றானுமறிக. மலைக்கண்ணே அடிக்கின்ற கடிய காற்றொடு கலந்து துளி விரைந்து வீழ்தலின் 'கான்மயங்கு கதழுறை' என்றார். கால்-காற்று. கதழ்-விரைவு. உறை-துளி. முருகு 6 நச். உறையை ஆலியொடு சிதறி என்க.

"பலவுப்பல தடைஇய வேய்பயி லடுக்கத்து

.................. .............. ...............

பைபட விடிக்குங் கடுங்குர லேற்றொடு
ஆலி யழிதுளி தலைஇக்
கால்வீழ்த் தன்றுநின் கதுப்புறழ் புயலே" அக 323: 8-13.

"கழங்குற ழாலியொடு கதழுறை சிதறிப்
பெயலொடுங் கின்றால் வானம்" அக 334: 8-9.

என வருவன காண்க. சிதறி என்னும் வினைக்கு வானம் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. சிதறி என்பதனைச் சிதறவெனத் திரித்து அதனை ஒழுகும் (5) என்னும் வினையொடு முடிக்க.

நாடு என்றது சோழ நாட்டை காவிரிப் பேரியாற்று நீரினால் கரும்புகள் நெருங்கிய வயல்களையுடைய நாடாதலின் அதனைக், 'கரும்பமல் கழனிய நாடு' என்றார்.

"அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
வாடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கு
நாடெனப் படுவது நினதே யத்தை" புற 35: 8-11.

எனச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் புலவர் கூறுதல் காண்க. வளம் பொழிய-வளம் பொழிந்தாற் போல எக்காலத்தும் மிக விளைய.

"ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாந் — தேரின்
அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு" பொருந. இறுதி வெண்பா.

எனப் பிறரும் கூறுதல் காண்க. வளங்கெழு சிறப்பின் காவிரி எனக் கூட்டுக. வளம் என்றது நீர்வளத்தை. சிறப்பு என்றது பெருவறற் காலத்தும் நீரறாது ஒழுகுதலை. "புயன் மாறி, வான் பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற் காவிரி" (பட்டினப் 4-6) "இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும், அந்தண் காவிரி வந்துகவர் பூட்ட" (புற 35: 7-8) "தாவா நீர்க் காவிரிப் பாவை" மணி (3: 55) எனச் சான்றோர் கூறுதல் காண்க. இனி, வளங்கெழு சிறப்பின் உலகம் எனக் கூட்டினும் அமையும். காவிரி உலகு புரத்தல்.

"காவிரி புரக்கு நாடுகிழ வோனே" பொருந 248

பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்கண்" புற 166: 28-9

"காவிரி புரக்கு நன்னாட்டுப் பொருந" புற 393: 23

"வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
யூழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி" சிலப் 7: 27.

"காவிரி புரக்கு நாடுகிழ வோற்கு" சிலப் 27: 171.

என வருவனவற்றானுமறிக. உலகம் என்றது காவிரி பாயும் நாட்டை. உலகம் என்பது நிலத்தின் ஏகதேசத்திற்கும் வழங்குதல், "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல் அகத் சூ 5) என்பதனானுமறிக. செங்குணக்கு-நேர்கிழக்கு. காவிரி நேர் கிழக்கு ஒழுகுதல்,

"சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகு
மந்தண் காவிரி" அக 76: 11-2.

"..................காவிரிப் பாவை
செங்குணக் கொழுகி" மணி பதிகம் 12-3.

எனவருவனவற்றானுமறியப்படும். காவிரி எக்காலத்தும் இடையறாது போதலின் 'ஒழுகும்' என்றார். கலுழி – பெருக்கு. "கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று" (மலைபடு 555) என்புழிக் கலுழி என்பதற்கும் 'பெருக்கு' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமை காண்க. காவிரியன்றியும் உலகத்தைப் புரத்தலின் காவிரியனையை யாவதேயன்றியென்றவாறு.

பூவிரி புனல் ஒரு மூன்று-பூப்பரந்த யாறுகள் மூன்று. பூவிரி புனல் யாறாதல்,

"வான்மலர் தாஅ, யந்தண் புனல்வையை யாறு" பரி 12: 9-10.

"மல்குமலர் வேய்ந்த மாயப் புதுப்புனல்" கலி 98: 34.

"பூவிரி புதுநீர்க் காவிரி" புற 166: 28.

என வருவனவற்றானுமறிக. 'மூன்றுடன் கூடிய கூடலென்றது அக்காவிரிதானும் ஆன்பொருநையும் குடவனாறுமென இம்மூன்றும் சேரக்கூடிய கூட்டம்' என்பர் பழையவுரைகாரர். "இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்" (புற 273: 5) எனப் பிறரும் கூறுதல் காண்க. உலகத்தைப் புரத்தலிற் காவிரி அனையை யாவதேயன்றி யாறுகள் மூன்றும் சேரக்கூடிய கூட்டத்தனையை ஒப்பாய் என்பார் 'மூன்றுடன் கூடிய கூடலனையை' என்றார். இதனாற் செங்குட்டுவன் உலகு புரத்தலிற் காவிரியினும் மேம்பாடுடையனாதல் கூறினார்.

8—16. களிறுகளாகிய திரைகள் பிறழ, அவ்விற்கள் அத்திரைக்குப் பிசிராக, தோல்வரைப்பின் வேலாகிய மீன் விளங்க, பணையாகிய முழங்கொலியையுடைய தூசிப்படையாகிய புனலை ஒன்னார் உருப்பற நிரப்பினை என்க.

குட்டுவனின் தூசிப்படை கடல்போன்றதாகலின் அப்படையிலுள்ள களிறு விற்படை வேற்படை பணையொலி என்னுமிவற்றை கடலின் திரையாகவும் பிசிராகவும் மீனாகவும் முழங்கொலியாகவும் உருவகஞ்செய்தார்.

"முடிமன ரெழுதரு பருதி மொய்களி
றுடைதிரை மாக்கல மொளிறு வாட்படை

அடுதிற லெறிசுரு வாகக் காய்ந்தன
கடலிரண் டெதிர்ந்ததோர் கால மொத்ததே'' சீவக 2223.

என்பதும், 'மன்னர் பருதியாகக் களிறு மரக்கலமாகக் குதிரை திரையாக வாட்படை சுருவாகத் தம்மிற் காய்ந்தனவாகிய இரண்டு கடல் போர்செய்தற்கு எதிர்ந்ததொரு காலமுண்டாயின் அதனை ஒத்தது' என்னும் அப்பகுதி(நச்) உரையும்,

''கார்த்தரங்கந் திரை தோணி சுருக்கடன் மீனெறிவோர்
போர்த் தரங்கந் துறை மானுந் துறைவர்'' திருக்கோவை 187

என்பதும், 'குதிரைத் திரள் தரங்கத்திற்கும், தேர் தோணிக்கும், யானை சுருவிற்கும், காலாள் மீனெறிவோர்க்கும் போர்க்களங் கடற்கு முவமையாகவுரைக்க, என அப்பகுதிக்குப் பேராசிரியர் எழுதிய விசேடவுரையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன.

தம்மில் மாறுபட்டுப் புடைபெயரும் வலிய களிற்று யானைகள் கடலில் மலைபோல் உயர்ந்து எழும் திரைபோறலின் 'கொல்களிற் றுரவுத்திரை பிறழ' என்றார்.

''கட்டற்கோ டிருமருப்புக் கால்பாக னூக
அடற்கோட் டியானை திரையா'' திணைமாலை நூற் 43
''எயிலடு களிறேபோ லிடுமண லெடுங்கோட்டைப்
பயிறிரை நடுநன்னாட் பாய்ந்துறாஉந் துறைவகேள்'' கலி 135: 4-5

எனப் பிறரும் களிற்றைத் திரைக்கு உவமை கூறியிருத்தல் ஈண்டறியற்பாலது. உரவுத்திரை-வலியதிரை. உரவுநீர் - வலியினையுடையநீர் என நச்சினார்க்கினியர் உரைத்தலும் (கலி 149: 3 உரை) காண்க. பரக்கின்ற திரை எனினுமமையும். மேலாட்கள் களிற்றின் மேலே அடக்கிய விற்படைகள் திரையிற் றோற்றும் நீர்த்துளிபோற் றோன்றலின் 'அவ்வில் பிசிர' என்றார்.

''கோல்பொரு கொடுஞ்சிலை குருதி வெம்படை
மேலவ ரடக்குபு வேழ மேறலின்'' சீவக 2212

என்பதனால் மேலாட்கள் விற்படை முதலியவற்றை களிற்றின்மேல் அடக்கி அவற்றை ஏறிச்செல்லல் அறியப்படும். வல்வில் என்பது பாடமாயின் வலிய விற்கள் எனவுரைக்க. பிசிர வென்றது பெயரடியாகப் பிறந்த வினை,

புரை-உயர்பு. தோல்-பரிசை புற 16: 2 உரை. தோலுக்கு உயர்வு அம்பு படில் தளராது பிறர்க்கு அரணமாகும் பண்பு. ''தோலணைய பண்பு'' (பதிற் 45: 16-7) என்பது ஈண்டு சிந்திக்கத்தக்கது நெடிய வேற்கள் வீரர் கொண்டு செல்லும் பரிசையின் மேலாக விளங்கித் தோன்றலின் 'தோல் வரைப்பின் எஃகுமீ னவிர்வர' என்றார். தோல்வரைப்பு என்றது பரிசைப் படையின் அணியை. வரைப்பு-அணி. மலைபடு 88 நச். பரிசையின் எல்லையுமாம். ''தோன்மிசைத் தெழுதரும் விரிந்திலங் கெஃகின்''(பதிற் 66: 12) எனப் பிறரும் கூறுதல் காண்க. வேல் மீனைப்போல விட்டு விளங்குதலின் 'எஃகுமீன் அவிர்விர' என்றார்.

''உறழ்வே லன்ன வொண்கயல்'' புற 249: 6
''வயற்கெண்டையின் வேல் பிறழினும்'' புற 287: 4

என வருவன காண்க. தோல்வரைப்பி னெஃகினை மீளுக உருவகித்தமைக்கேற் பத் தோல்வரைப்பு என்பதற்குப் பரிசையாகிய ஆமையின் வரைப்பின் என வுரைக்க, "கமடமாம் பரிசை வாங்கி" (குற்றாலப் திருநதிச் 21) எனப் பிறரும் கூறுதல் காண்க. பிறழ பிசிர அவிர்வர என நின்ற செயவெனெச்சங்களை நிரப் பினை (16) என்னும் பிறவினையொடு முடிக்க.

விரவுப்பணை-வயிர் வளை முதலியவற்றின் ஒலியொடு கலந்து ஒலித்தலையு டைய முரசு.

"முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ணல் நெடுவரை" புற 158: 1-2

"குணில் பொரக் குளிறின முரசம் வெள்வளை
பணைபரந் தார்த்தன பம்பை வெம்பின" சீவக 2222

என வருவன காண்க. இனி, தொகுதிகொண்ட முரசங்களின் ஒலி ஒன்றோடொ ன்று கலந்து ஒலித்தல்பற்றி 'விரவுப் பணை' என்றார் எனினுமமையும். "தோடு கொண் முரசுங் கிழிந்தன கண்ணே" (புற 238: 8) எனப் பிறண்டும் வருதல் காண்க. பணை-முரசு நெடுநல் 115 நச். பணையொலியாகிய முழங்கொலியென்க முரசின் ஒலி கடலின் முழங்கொலி போன்றதென்பது "முந்நீர் போல முழங் கிசை நன்பணை" (மதுரைக் 361-2) என்பதனானுமறியப்படும். திரை பிறழ, வில்பிசிர, மீன் அவிர்வர முழங்கொலியையுடைய புனல் என்றதனால் ஈண்டுப் புனல் என்றது கடலையென்க. தம்பகையை வெருவிக் குட்டுவன் றன்னுடன் நட்பாகிய வேந்தர்க்குத் துன்பம் வாராமற் காவலாக அமைதலின் 'வெரீஇய வேந்தர்க்கரணமாகிய புனற்றூர்' என்றார். இதனால் தம் பகையை வெருவாது இவன்றன்னுடன் பகையாகிய வேந்தற்குத் தெய்வம் வருத்தியது போல்வது எனக் கொள்க.

"நகைவர்க் கரண மாகிப் பகைவர்க்குச்
சூர்நிகழ்ந் தற்றுநின் றூளை" பதிற் 31: 34-5

எனப் பிறரும் கூறுதல் காண்க.

வெருவரு புனற்றூர் என்றது தன்னை அடைத்தார் வெருவரத்தக்க புனற் றூர் என்றவாறு. இச்சிறப்பானே இச்செய்யுளுக்கு வெருவருபுனற்றூர் என்று பெயராயிற்று.

வெருவரு-வெருவுதல் வருதற்காரணமான எனினுமமையும். 'களிற்றுத் திரை' எஃகுமின் எனக் கூறியவற்றிற்கு ஏற்பப் புனற்றூர் என்றதனைத் தார்ப்புனல் என்றவாறுகக் கொள்க. தார்ப்புனலை (11) ஒன்னார் (15) உருப் பற நிரப்பினை (16) எனக் கூட்டுக.

'கன்மிசை யவ்வுங் கடலவும் பிறவும், அருப்ப மமைஇய ஒன்னார்' எனவும், 'அமர்கடந் துருத்த ஒன்னார்' எனவும் கூட்டுக. மலை முதலிய இடங்களில் அரண்களை அமைத்து அரசாண்ட வேந்தர் குட்டுவனொடு மாறுபட்டமையின் 'கன்மிசை யவ்வும் .....அமைஇய ஒன்னார்' என்றார். கல்-மலை. மலை முதலிய இடங்களில் அரண்கள் அமைக்கப்பட்டமை, "மலையவு நிலத்தவு மருப்பம்" (பதிற் 90: 20) என்பதனாலுமறியப்படும்.

கண்மிசையவ்வும் அருப்பம் அமைஇய ஒன்னார் என்றது மலை நாட்டிற் சிலபகுதிகளைத் தமதாகக்கொண்டு அரண்களையமைத்துக் குட்டுவனுக்கு அடங்கி யொழுகாத குறுநில மன்னரை. மிசையவும் என்றது மிசையவ்வும் என விகாரம் பெற்றது.

கடல அருப்பம் அமைஇய ஒன்னார் என்றது கடலை அரணாகக் கொண்ட தீவகத்தே அரண்களையமைத்து இடர் விளைத்த பகைவர்களை. பிறவும் அருப்பம் அமைஇய ஒன்னார் என்றது மலையும் கடலுமொழிந்த நாடு முதலிய இடங்களில் அரண்களை அமைத்தபகைவர்களை. அமர்கடந்துருத்தஎன்பதற்குப்போரை வென்று நின்னுடன் கோபித்த எனினுமமையும். உருத்தல்-கோபித்தல். ஒன்னார் காவலாக அமைத்த வீரர் மிக்க இடங்களிற் சென்று பொருது வென்று அவர் நாட்டை கைப்பற்றினமையின் 'ஆண்மலி மருங்கி னாடகப்படுத்து' என்றார். குட்டுவன் நாடகப்படுத்தமை. "நிலம்பெறு திணிதோளுயர வோச்சி" (பதிற் 45: 11) என்பதனாலுமறியப்படும். ஆள் - வீரர். "ஆளழிப்படுத்த வாளே ருழவ" (புற 365: 13) என்றார் பிறரும்.

குட்டுவனின்படை பொருது வெல்லுதலாற் பகைவரது உலகிற் பரந்த நல்ல புகழ் நீங்குதலின் 'நல்லிசை நனந்தலை யிரிய ..நிரப்பினை' என்றார். நல்லிசை—வென்றி கொடை முதலியவற்றானாய நல்ல புகழ். நனந்தலையையுடைய உலகினை 'நனந்தலை' என்றார். குட்டுவனால் நிரப்பப்பட்ட படை பொருது வென்றிகோடலாற் பகைவரின் சினம் அழிதலின் ' தார்ப்புனலை, ஒன்னார் உருப்பற நிரப்பினை' என்றார். உருப்பு-வெம்மை. ' உறுவெயிற் குலைஇய வுருப் பவிர் குரம்பை" சிறுபாண் 174. தார்ப்புனல் என்றதற்கு ஏற்ப உருப்பென்றது தணிச் சினத்தி யென்றவாறாகக் கொள்க. ஆதலின் என ஏதுப் பொருட்கண் நின்ற ஐந்தாவதற்கு யான் நின்னை ஒன்று கேட்கின்றேன் என்று ஒரு சொல் வருவிக்க.

*16—26.* பெரும! பன்னாட் பாசறை மரீஇ அரிதின் இயைந்த சிறுதுயிலியலாது இமிழிசை எடுப்பும் செல்வம் மரீஇய கண் சாந்து புலர வண்ணநீவ மார்புபிணி மகளிர் கூந்தன் மெல்லணை வதிந்து மார்புகவர் முயக்கத்துப் பொழுதுகொள் மரபின் மென்பிணி யவிழ நாள்பல எவன் கழியுமோ என்க.

சாந்து புலர (16) வண்ண நீவ (17) எனத் திரிக்க. சாந்துபுலர வென்றது குட்டுவன் மார்பிற் பூசியசந்தனம் புணர்ச்சியாற் புலரவென்றவாறு. வண்ணம் என்றது நிறமுடைய கலவையை. "வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோ, ளொண்ணுதல் விறலியர்" (புற 32: 3-4) எனப் பிறரும் கூறுதல் காண்க. நீவ என்றது மகளிர் முலையினும் தோளினும் பூசப்பட்ட வண்ணம் புணர்ச்சியாற் றுடைபட என்றவாறு. வகைவனப்புற்ற மகளிர், மார்புபிணி மகளிர் எனக் கூட்டுக. வகைவனப்பு என்றது சுடர்நுதல் பணைத்தோள் முகிழ்முலை துவர்வாய் முதலிய உறுப்புக்களாலும் அவிர் இழை பூந்துகில் முதலியவற்றாலும் உண்டாகிய பலவகை அழகினை.

"வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத்தோள்
ஏந்தெழின் மழைக்கண் வனைந்துவர விளமுலைப்
பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்
மின்னிழை விறலியர்" பதிற் 54: 3-6

என்பதனுலுமறிக. வகை—கூறுபாடு. வனப்பு—தோற்றப்பொலிவுமாம். "வகை யெழில் வனப்பு" (கலி 17: 13) என்புழி வனப்பு என்பதற்குத் 'தோற்றப் பொலிவு' என நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க. வரிஞிமிறிமிரு மார்பு எனக் கூட்டிச் சந்தனம் மாலை என்பவற்றை அணிதலால் வரிஞிமிறு ஒலிக்கும் மார்பு எனக் கொள்க.

"சார லாரம் வண்டுபட நீவி" நற் 259: 6

"படுவண் டார்க்கும் பைந்தார் மார்பின்" நற் 173: 8

என வருவன காண்க. வரிஞிமிறு-'வரியினையுடைய மிஞிறு' கலி 127: 3 நச். 'வரியினையுடைய தேனீ' புற 93: 12 உரை. வரிஞிமிறு என்றதனை உம்மைத் தொகையாகக் கொண்டு வண்டும் மிஞிறும் என உரைப்பினுமமையும். வரி என்பது வண்டு என்னும் பொருட்டாதல் "வானி லணித்த வரியூதும் பன்மல ரால்" என்னும் பரிபாடலிற் காண்க. (பரி 18: 49)

மார்பு பிணி மகளிர் என்றது மார்பாற் பிணிக்கப்பட்ட மகளிரென்றவாறு. ஆடவர் மார்பு மகளிரைப் பிணித்தல் "அணங்கெழி லரிவையர்ப் பிணிக்கும், மணங்கமழ் மார்ப" (பதிற் 68: 19–20) என்பதனுலுமறிக. பிணித்தல் என்றது மார்பினுற் பெறும் இன்பத்தை விரும்பி அதனை நினைத்தலே. "ஆர்கலி வெற்பன் மார்பு நயந்துறையும், யானே" (நற் 104) "நின்மார்பு நயந்த நன் னுதலரிவை" (ஐங் 46) எனவருவன காண்க. மகளிர் என்றது பெருந்தேவியை. "காதலன் றுன்பங் காணாது கழிந்த, மாதரோ பெருந்திருவுறுக" (சிலப் 25: 111-2) என்புழி 'மாதர்-அவன்றேவி' என அதன் அரும்பதவுரைகாரர் உரைத் தமை காண்க.

விரிமென் கூந்தன் மெல்லணை வதிந்து என்றது தலைவியின்விரிந்த மெல் லிய கூந்தலாகிய மெல்லிய அணையிலே தங்கி என்றவாறு. "கணங்குழை நல் லவர் கதுப்பற லணைத் துஞ்சி" (கலி 71: 19) எனவும், "கூந்தன் மெல்லணைத் துஞ்சி" (அக 308: 13) எனவும் வருவன காண்க. வதிந்து (19) பொழுது கொள் (21) எனக் கூட்டுக.

கொல் பிணி திருகிய முயக்கம் என்றது வருத்துகின்ற காமமாகிய நோய் திருகுதல் காரணமாக உண்டாகிய முயக்கம் என்றவாறு.

"பொனங்கொடி யமிர்தனும் பொன்னெடுங் குன்றனும்
அனங்கனுக் கிலக்க மாகி யம்புகொண் டழுந்த வின்னார்
இனந்தமக் கெங்கு மில்லா ரியைந்தன ரென்ப" சீவக 188.

"அலைத்தது காமன் சேனை யருநுனை யம்பு மூழ்க
முலைக்குவட் டிடைப்பட் டாற்றுன் முத்துக முயங்கினுனே" சீவக 490.

என பிறரும் கூறுதல் காண்க. மார்பு கவர் முயக்கம்-மகளிர் மார்பை விரும் பிச் சேர்ந்த முயக்கம். "யாமிவள், சுணங்கணி யாக மடைய முயங்கி" (நற் 52: 3-4) என வருதல் காண்க. இனி ஒருவர் மார்பை ஒருவர் விரும்பிச் சேர்ந்த முயக்கமுமாம்.

"மயங்குமலர்க் கோதை நன்மார்பு முயங்கல்
இனிதுமன்" குறுந் 339: 4–5.

"கூதிரிற் செறியுங் குன்ற நாட
வனைந்துவர விளமுலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைத லினிதா கின்றே" அக 58: 6-9.

எனப் பிறரும் கூறுதல் காண்க. கவர்-விருப்பு.

முயக்கத்துப் (20) பொழுதுகொண் மரபின் மென்பிணி (21) என்றது முயக்கத்திலே இராப்பொழுதைப் பயன்கொண்ட முறைமையினையுடைய மெல்லிய உறக்கமென்றவாறு. மென்பிணியென்றது புணர்ச்சியவதிக்கண் அப்புணர்ச்சியலையலான் வந்த சிறுதுயிலை. "வளமலர்க் கோதை தன்னை வாய் விடான் குழையப் புல்லி, அளமர விலாத வின்பக் கடலகத் தழுந்தினானே" (சீவக841) என்பதன் விசேடவுரையில் 'புணர்ச்சியிறுதிக்கண் அவசத்தால் மூலையிடைத் துயிலுந் துயிலை' என நச்சினார்க்கினியர் உரைத்தலுங் காண்க. பிணியவிழவென்றது அச்சிறுதுயிலிறுதியில் கண்விழித்தலை. கண்ணைப் பூவென்னும் நினைவினாய்ப் 'பிணியவிழ' வெனப் பூத்தொழிலாற் கூறினார்.

"கொழுநகைக் குறும்போது குறிப்பிற் பிரியாப்
புணர்ச்சி மகளிர் போகத்துக் கழுமித்
துயிற்கண் டிறந்த தோற்றம் போல
நறவுவாய் திறந்து நாண்மதுக் கமழ" பெருங் (2) 15: 21-4.

எனப் பிறரும் கூறுதல் காண்க. பூ மென்பிணியவிழ்தலை,

"பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ" அக 4: 2.

"மென்பிணி முகையவிழ்ந் தலர்ந்த
தண்கமழ் புதுமலர்" அக 238: 17-8.

"கூம்புவிடு மென்பிணி யவிழ்ந்த வரம்பல்" புற 209: 3.

என வருவனவற்றிற் காண்க. பல எவன் கழியுமோ என மாறிக் கூட்டி பல என்பதற்கு நாள் பல என ஒருசொல் வருவிக்க.

பன்னாட் (22) பாசறை மரீஇ (23) எனக் கூட்டுக. பகைவெம்மை-பகைவரது வெம்மை. "பகை வெம்மையி னசையா வூக்கலை" (பதிற். வந்தனென் 5) என்றார் பிறரும். மரீஇயென்பதனை மருவவெனத் திரித்து மருவுகையாலென்க.

பாடரிது இயைந்த சிறுதுயில் என்றது இராப்பொழுதெல்லாம் பகைவரை வெல்கைக்கு உளத்திற்சென்ற சூழ்ச்சி முடிவிலே அரிதாகப் படுதல் இயைந்த சிறுதுயிலென்றவாறு. அரசர் பாசறையிலிருந்து பகைவரை வெல்கைக்குச் சூழ்தலை,

"ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து" முல்லை 75-6.

"ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
யிரவி னெல்லை வருவது நாடி" புற 366: 10-11.

'எண்ணரும் பாசறை' - போர்செய்து வெல்லுமாற்றை
எண்ணும் அரிய பாசறையிடத்து' தொல். கற் சூ 54 நச்.

என வருவனவற்றுலுமறிக. இயலாது (24) இசையெடுப்பும் (25) எனக் கூட்டுக. சிறுதுயிலும் இயலாமல் சங்கு இடையிடையே முழங்குகின்ற, ஓசையையுடைய வாச்சியங்கள் எழுப்புதலின் 'சிறுதுயி லியலாது கோடு முழங்கு இமிழிசையெடுப்பும்' என்றார். கோடு-சங்கு. எடுப்பும் கண் எனக் கூட்டுக. பீடுகெழு செல்வம் என்றது படைச் செல்வத்தை. பீடு-வலி. "வேந்து பீடழித்த வேந்துவேற் றனையோடு" புறு 225: 5. மரீஇயகண்ணென்றது அப்படை முகத்திலே நாள்தோறும் அமர்ந்தும் துயிலெழுந்தும் உலவிப் பழகின கண்ணென்றவாறு.

இதனுற் சொல்லியது அவன் காமவேட்கையிற் போர்வேட்கை மிகுத்துக் கூறியவாருயிற்று.

தார்ப்புனலை ஒன்னுர் உருப்பற நினைப்பினையென எடுத்துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் துறை வஞ்சித்துறைப்பாடாறுயிற்று.

கொல்களிறு என்பது கூன்.

## பழையவுரை.

மாமலைக்கண்ணே (1) உறை சிதறி (2) எனக்கூட்டி அதனைச் சிதறவெனத் திரிக்க. 4. உலகம் புரைஇ யென்றது உலகத்தைப் புரந்தென்றவாறு. 7. மூன்றுடன் கூடிய கூடலென்றது அக் காவிரிதானும் ஆன்பொருநையும் குடவனுறுமென இம்மூன்றும் சேரக்கூடிய கூட்டமென்றவாறு. காவிரி அனையையாவதேயன்றி (6) மூன்றுடன் கூடிய கூட்டத்தனையை (7) எனக் கொள்க. 8. உரவுத்திரை பிறழவென்றது வலிய திரைகள் தம்மில் மாறுபட்டுப் புடைபெயரவென்றவாறு. அவ்வில் பிசிரவென்றது அவ்விற்கள் அத்திரைக்குப் பிசிராகவென்றவாறு. பிசிரவென்றது பெயரடியாகப் பிறந்த வினை. பிறழ (8) என்றது முதலாக நின்ற செயவெனெச்சங்களை நிரப்பினை (16) என்னும் பிறவினையொடு முடிக்க. 10. பணையாகிய முழங்கொலியென இருபெயரொட்டு. ஒலியையுடைய (10) புனல் (11) எனக் கூட்டுக. 10. வெரீஇய வேந்தரென்றது தம்பகையை வெருவி இவன்றன்னுடன் நட்பாகிய வேந்தரென்க. 11. வெருவரு புனற்றரென்றது தன்னை அடைத்தார் வெருவரத்தக்க புனற்றரென்றவாறு. இச்சிறப்பானே இதற்கு வெருவருபுனற்றர் என்று பெயராயிற்று. புனற்றரென்றதனைத் தார்ப்புனலென்றவாருகக் கொள்க. 16. உருப்பென்றதனைச் சினத்தியென்றவாருகக்கொள்க ஆதலினென ஏதுப்பொருட்கண் நின்ற ஐந்தாவதற்கு யான் நின்னை ஒன்றுகேட்கின்றேனென்று ஒருசொல் வருவிக்க. சாந்துபுலர (16) வண்ணம் நீவ (17) எனத் திரிக்க. 18. மார்புபிணி மகளிரென்றது மார்பாற் பிணிக்கப்பட்ட மகளிரென்றவாறு. வதிந்து (19) என்னும் எச்சத்தினைப் பொழுதுகொள் (21) என்னும் வினையொடு முடிக்க. முயக்கத்துப் (20) பொழுதுகொண் மரபின் மென்பிணி(20) என்றது முயக்கத்திலே இராப்பொழுதைப் பயன்கொண்ட முறைமையினையுடைய மெல்லிய உறக்கமென்றவாறு. மென்பிணியென்றது புணர்ச்சியவதிக்கண் அப்புணர்ச்சியலையலான் வந்த சிறுதுயிலை. கண்ணைப் பூவென்னும் நின்

வினணுய்ப் பிணியவிழவெனப் பூத்தொழிலாற் கூறினுனென்க. 22. நாள் பல எவன் கழியுமோவென நாளென்பது வருவிக்க. பின்னின்ற பன்னுள் (22) என்பதனைப் பாசறை மரீஇ (23) என்பதனேடு கூட்டுக. மரீஇயென்பதனை மருவவெனத் திரித்து மருவுகையாலென்க. 24. பாடரிது இயைந்த சிறுதுயி லென்றது இராப்பொழுதெல்லாம் பகைவரை வெல்கைக்கு உளத்திற் சென்ற சூழ்ச்சி முடிவிலே அரிதாகப் படுதல் இயைந்த சிறுதுயிலென்றவாறு. சிறு துயிலையுடைய (24) கண் (26) எனக் கூட்டுக. இயலாது (24) இசையெடுப் பும் (25) எனக் கூட்டுக. 25 இமிழிசையென்றது இமிழிசையையுடைய இய மரங்களை. கோடு—சங்கு. முழங்கென்றது அவ்விய மரங்களுக்கு இடையிடையே முழங்குகின்றவென்றவாறு. 26. பீடுகெழு செல்வமென்றது படைச் செல்வம். பீடு-வலி. மரீஇய கண்ணென்றது அப்படைமுகத்திலே நாள்தோறும் அமர்ந் தும் துயிலெழுந்தும் உலவிப் பழகின கண்ணென்றவாறு.

நீ கூடலனையை (7); பெரும (22), தார்ப்புனலை (11) ஒன்னுர் (15) உருப்பற நிணைப்பினை யாகையாலே (16) யான் நின்னை ஒன்று கேட்கின் றேன்; பீடுகெழு செல்வம் மரீஇய கண் (26) மயக்கத்துப் (20) பொழுது கொண் மரபின் மென்பிணி அவிழ (21) நாள்பல நினக்கு எவன் கழியுமோ (22) எனக் கூட்டி வினை முடிபு செய்க.

இதனுற் சொல்லியது அவன் காமவேட்கையிற் போர்வேட்கை மிகுத்துக் கூறியவாருயிற்று.

தார்ப்புனலை (11) ஒன்னுர் (15) உருப்பற நிரப்பினை (16) என எடுத் துச் செலவினை மேலிட்டுக் கூறினமையால் துறை வஞ்சித்துறைப் பாடாண் ஆயிற்று.

கொல்களிற்று (8) என்பது கூன்.

## ஒப்புமைப்பகுதி.

1. மாமலை: "மாமலையிற் கணங்கொண்டு" பதிற் 80: 2. "வான மாமலை, வாய்சூழ்பு கறுப்ப" குறிஞ்சி 227;

மான்கணம்: "மான்கண மரமுதற் றெவிட்ட" குறிஞ்சி 217; "மான் கண மலிந்ததோர், விதலை கானத்து" "மான்கண மருட்சியும்" பெருங் (4) 15: 50-1; (5) 4: 141.

மலையில் மான்: "வரையக நண்ணி .....தெரியுநர் கொண்ட......புள்ளி யிரலை" பதிற் 74: 7-10; "அடுக்கத்துச், சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப் பிணை" புற 2: 20-1.

2. கதழுறை சிதறி: "மாமழை, வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறி" முருகு 7-8. "கதழுறை கடுகினும்" நற் 201: 8; "வீழுறை யினிய சிதறி" குறுந் 270: 2; "கதழுறை வானஞ்சிதற" ஐந்எழுபது. 18.

உறை ஆலியொடு சிதறல்: "உறைவீ ழாலியிற் றெருக்குஞ் சாரல்" "ஆலித் தண்மழை" ஐங் 213: 3; 437: 2; "ஆலி வானிற் காலொடு பாறி" "தண்மழை யாலியிற் ருஅய்" "இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை .....தண்

வரல் ஆலியொடு, பருஉப்பெயல் அழிதுளி தலைஇ வானவின்று, குரூஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை" "ஆலி யழிதுளி பொழிந்த வைகறை" அக 9: 7; 211: 5; 304: 1-5; 308: 3; கண்டிரண் முத்தங் கடுப்பப் புறவெல்லாந், தண்டுளி யாலி புரளப் புயல்கான்று, கொண்டெழில் வானமுங் கொண்டன்று" கார் 23.

1—2. மலையில் காற்றும் மழையும்: "குடவரை யகத்துக், கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினும்" நற் 201: 7-8.

3. கரும்பின் கழனி: "ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த, வயல்" முல்லை 32-3; "கரும்பல்லது காடறியாப், பெருந்தண் பணை" "வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின், பாத்திப் பன்மலர்ப் பூத்த தும்பின" புற 1: 5-6; 386: 10-11; "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனி" சீவக 2902.

6. காவிரி: "கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று, நெடுஞ்சுழி நீத்தம்" "மாவண் சோழர், கழைமாய் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை" "பூவிரி யகன்றுறைக் கணைவிசைக் கடுநீர்க், காவிரிப் பேரியாற்று" "சோழர், இலங்குநீர்க் காவிரி" "நெடுவெண் மருதொரு வஞ்சி சாஅய், விடியல் வந்த பெருநீர்க் காவிரி" "நெடுநீர்க் காவிரி" அக 62. 9 10; 123. 10-11; 181: 11-2; 213: 21-2; 226: 9-10; 396: 14; "மிக்குவரு மிந்நீர்க் காவிரி" "தண் புனற் காவிரி" "கரைபொரு, திரங்குபுன னெரிதரு மிகுபெருங் காவிரி" புற 43: 22; 58: 1; 174: 7-8; "கரைகொன் றிழிதரூஉங் காவிரி" களவழி 35.

5—6. மலிர்நிறைக் காவிரி: "காவிரி மலிர்நிறை யன்ன" ஐங் 42: 3; "புதுவது வந்த காவிரிக், கோடுதோய் மலிர்நிறை" "நாடார் காவிரிக் கோடுதோய் மலிர்நிறை" அக 166: 14-5; 341: 4; "சுரந்த காவிரி மரங் கொன் மலிநீர்" புற 68: 9.

2—6. மழை பெய்தலால் யாறு ஒழுகல்: "குணகடல் கொண்டு குடகடன் முற்றி, யிரவு மெல்லையும் விளிவிடனறியா, தவலு மிசையு நீர்த் திரள் பீண்டிக், கவலையங் குழும்பி னருவி யொலிப்பக், கழைவளர் சாரற் களிற் றின நடுங்க, வரைமுத லிரங்கு மேறொடு வான் ஞெமிர்ந்து, சிதரற் பெரும் பெயல் சிறத்தலிற் றுங்காது, குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி, நிவந்துசெ னீத்தம்" மதுரைக் 238-46; "துளிபெயல் பொறித்த புள்ளித் தொல்கரை, பொருதிரை நிவப்பின் வரும் யாறு" நற் 114: 7-8; "பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ் மீமிசைத் தாஅயவீஇ சுமந்துவந், திழிதரும் புனலும்" குறுந் 100: 1-3; "மலைவரை மாலை யழிபெயல் காலை, செலவரை காணுக் கடறலைக் கூடி......போந்தது வையைப் புனல்" "புரைகெழு சையம் பொழிமழை தாழ, நெரிதரூஉம் வையைப் புனல்" "மரு அற்க வான மலிதந்து நீத்தம், வருஅற்க வையை நினக்கு" "காலைக் கடல் படிந்து காய்கதிரோன் போயவழி, மாலை மலைமணந்து மண்டுயின்ற கங்குலான், வானுற்று மழை தலைஇ......கவிநாற்றங், தானுற்றங் கலந்துடன் றழீஇவந்து தரூஉம் வையை" பரி 10: 1-8; 11: 14-5; 16: 54-5; 20: 6-11: "குணகடன் முகந்த கொள்ளை வானம்......வலனேர்பு கோணிமிர் கொடியின் வசிபட மின்னி, உருமுர றதிர்

குரல் தலைஇப் பாளுட், பெருமலை மீமிசை முற்றின வாயின், வாளிலங் கருவி தாஅய் நாளை, இருவெதி ரங்கழை ஓசியத் தீண்டி, வருவது மாதோ" அக 278: 1-9; "வானந் தண்டுளி தலைஇ யானுது, கல்பொரு திரங்கு மல்லற் பேர் யாற்று" புற 192: 7-8.

8. கொல்களிறு: பதிற் 43: 25 ஒப்பு.

உரவுத்திரை: "உரவுத்திரை கடுகிய வுருத்தெழு வெள்ளம்" பதிற் 72: 10; "உரவுத்திரை யடுங்கரை" குறிஞ்சி 178-9; "உரவுத்திரை யுழக்கியும்" பட்டினப் 101; "மணிதுணிந் தன்ன மாயிரும் பரப்பி, னுரவுத்திரை" "உர வுத்திரை பொருத பிணர்படு தடவுமுதல்" "பெருங்கடல், இரவுத் தலைமண் டிலம் பெயர்ந்தென வுரவுத் திரை, எறிவன போல வரூஉம்" நற் 159: 1-2; 235: 1; 373: 6-8; "உரவுத்திரை பொருத திணிமண லடைகரை" குறுந் 175: 2;

9. தோல்வரைப்பு: "நிரைத்தோல் வரைப்பின்" பதிற் 88: 16.

பரிசையும் வேலும்: "புலவுவா யெஃகம், வடிமணிப் பலகையொடு நிரைஇ" பெரும்பாண் 119-20; "பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகு நிரைத்து" முல்லை 41; "கிடுகு நிரைத் தெஃகூன்றி" பட்டினப் 78; "நெய்கனி நெடுவேல் எஃகிலை யிமைக்கும், மழைமருள் பஃறோல்" "மணியணி பலகை மாக்காழ் நெடுவேல்" அக 123: 9-10; 369: 18.

10. "விரவுப் பணை முழங்கும்" பதிற் 88: 16.

11. வெருவரு: "வெருவரு செலவின் வெகுளி வேழம்" பொருந 172; "வெருவருந் தோற்றத்து" முல்லை 60; "வேழத் தன்ன வெருவரு செலவின்" மதுரைக் 392.

12—3. "மலையவு நிலத்தவு மருப்பம் வௌவி" பதிற் 90: 22.

13. அருப்பம்: பதிற் 45 9 ஒப்பு.

அமர்கடந்து: "அமர்கடந்து மலைந்த ......பகைவர்" பதிற் 14: 8.

15. நல்லிசை: பதிற் 11: 21 ஒப்பு.

16—8. சாந்து புலர் மார்பு: பதிற் 48: 11-2 ஒப்பு.

18. வரிஞிமிறு: "வரிஞிமி றிமிர்ந் தார்ப்ப" கலி 127: 3; "வரிஞிமி றூர்க்கும் வாய்புகு கடாஅத்து அக 78: 3; "வரிஞிமி றூர்க்கும்" புற 93: 12.

ஞிமி றிமிரு மார்பு: "தண்டா ரகலம் வண்டிமிர் பூத" "ஆரநீவிய வணி கிள ராகஞ், சார னீளிடைச் சாலவண் டார்ப்பச், செல்வன் செல்லுங்கொ ருனே" நற் 235: 8; 344: 6-8; "ஆர மார்பி னரிஞிமி றூர்ப்ப" அக 102: 10.

19. கூந்தன் மெல்லணை: "திருந்திழை யல்குற் பெருந்தோட் குறு மகள்......இரும்பன் மெல்லணை" நற் 366: 3-7; "பயினறுங் கதுப்பிற் பாயலு முள்ளார்" "நறுமென் கூந்தன் மெல்லணை யேமே" குறுந் 254: 5; 270: 8; "கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத் துஞ்சி" "பல்லிருங் கூந்த லணைகொடுப் பேம் யாம்" "ஒள்ளிழை, வாருறு கூந்தற் றுயில் பெறும்" கலி 71: 19; 101: 41-2; 104: 20-1; "திருமணி விளக்கிற் பெறுகுவை, யிருண்மென் கூந்தலே முறை துயிலே" "தண்ணறுங் கமழ்தொடை வேய்ந்தநின், மண்ணுறு கூந்தன்

மரீஇய துயிலே'' "நின், ஆடுவன் டரற்று முச்சித், தோடார் கூந்தன் மரீஇ யோரே'' "பொருள்வயின் நீடலோ விலர்நின், இருளேங் கூந்தல் இன்று யின் மறந்தே'' "கூந்தல் மெல்லணைத் துஞ்சிப்....பெயர்குவை'' அக 92: 12-3; 223: 15-6; 231: 13-5; 233: 14-5; 308: 12-5.

17—20. வண்ணநீவ முயங்கல்: "கோடெழி லகலல்குற் கொடியன்னூர் முலை மூழ்கிப், பாடழி சாந்தினன்" கலி 67: 10-11; "துகிலிணைப் பொலிந்த பகலணைப் பள்ளியுள், முகிழ்ந்தேந் திளமுலை முத்தொடு முழீஇத், திகழ்ந் தேந் தகலத்துச் செஞ்சாந்து சிதையப்......புல்லுவயின்'' பெருங் (2) 16: 84-7.

20. மார்புகவர் முயக்கம்: "சுணங்கணி வுற்ற விளங்கு பூணன், மார் புறுமுயக்கிடை ஞெமிர்ந்த சோர்குழை'' "நன்மார் படைய முயங்கி'' "யா மத், திழையணி யாகம் வடுக்கொள முயங்கி'',"நறுங்காழாரமொடு மிடைந்த மார்பிற், குறும்பொறிக் கொண்ட கொம்மையம் புகர்ப்பிற், கருங்கண் வெம் முலை ஞெமுங்கப் புல்லி'' நற் 20: 8-9; 182: 6; 229: 6-7; 314: 4-5; "கழனி யூரன் மார்புற மரீஇத், திதலை யல்கு னின்மகள், பசலை கொள்வ தெவன்கொ லன்னாய்'' ஐங் 29: 3-5; "முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி'' கலி 92: 3; "திதலை யணிந்த தேங்கொண் மென்முலை, நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரக லம், வீங்க முயங்கல் யாம்வேண் டினமே'' "நீளிருங் கூந்தல் மாஅயோ ளொடு, வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர், நுரைமுகந் தன்ன மென் பூஞ் சேக்கை, நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து, நலங்கே ழாகம் பூண் வடுப் பொறிப்ப, முயங்குகஞ் சென்மோ நெஞ்சே'' "அரையுற் றமைந்த வாரம் நீவிப், புரையப் பூண்ட கோதை மார்பினை, நல்லகம் வடுக்கொள முயங்கி நீவந், தெல்லினிப் பெயர்த லெனக்குமா ரினிதே'' "மறம்புகல் மழ களி றுறங்கும் நாடன், ஆரமார்பின் அரிஞிமி றூர்ப்பத், தாரன் கண்ணியன் எஃகுடை வலத்தன் .....அகல முயங்கித் தோள்மணந், தின்சொல் லளைஇப் பெயர்ந்தனன் தோழி'' "நுண்ணிதிற் கூட்டிய படுமா ஞாரந், தண்ணிது கமழும் நின்மார் பொருநாள், அடைய முயங்கே மாயின்'' "முகிழ்த்துவர விளமுலை மூழ்கப் பல்லூழ், முயங்க லியைவது மன்னோ'' அக 26: 13-5; 93: 11-6; 100: 1-4; 102: 9-15; 218: 14-6; 242: 16-7; "நன்வய லூரன் நறுஞ்சாந் தணியகலம், புல்லிப் புடைபெயரா மாத்திரைக்கண்'' திணைநூற் 143; "கொடிவளர் குவிமுலைத் தடத்துள் வைகியும்'' சீவக 196.

முயக்கத்தால் துயிலல்: "இல்லோர் நயந்த காதலர் கவவுப் பிணித் துஞ்சி" மதுரைக் 662-3.

23. பகைவெம்மையின்: பகைவெம்மையி னசையா வூக்கலை'' பதிற். வந்தனென் 5.

26. மரீஇய கண்ணே: "மார்புறப் படுத்தன் மரீஇய கண்ணே'' நற் 171: 11.

## பதிகம்

வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமா னெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானம் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்ப லருவிக கங்கை மண்ணி
இனந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறா வல்வி லிடும்பிற் புறத்திறுத்
துறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுர னெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து
பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுத றுமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தன் முரற்சியாற்
குஞ்சர வொழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
நிலைச்செருவி னாற்றலை யறுத்துக்
கெடலருந் தானையொடு

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் கரணமமைந்த காசறு செய்யுட் பரணர் பாடினார் பத்துப்பாட்டு.

**அவைதாம்:** *சுடர்வீ வேங்கை, தசும்புதுளங்கிருக்கை, ஏறுவேணி, நோய்தபு நோன்றொடை, ஊன்றுவையடிசில், கரைவாய்ப் பருதி, நன்னுதல் விறலியர், பேரெழில் வாழ்க்கை, செங்கைமறவர், வெருவருபுனற்றார்,* **இவை பாட்டின் பதிகம்.**

**பாடிப்பெற்ற பரிசில்:** *உம்பற்காட்டு வாரியையும் தன்மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ.*

*கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்* **ஐம்பத்தையாண்டு** *வீற்றிருந்தான்.*

**ப—ரை:** *1—3. வடவர் உட்கும்—வடக்கு நாட்டிலுள்ள அரசர் அஞ்சுதற்குக் காரணமாகிய, வான் தோய் வெல் கொடி—வானைத் தீண்டும் வெல் கொடியையுடைய, குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்கு—குடநாட்டிலுள்ளார்க்கு அரசனாகிய நெடுஞ்சேரலாதன் என்னும் அரசனுக்கு, சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்—சோழன் மணக்கிள்ளியின் மகள் ஈன்ற மகன்,*

4—8. கடவுள் பத்தினி கல்கோள் வேண்டி—பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் படிவம் அமைத்தற்கு இமயத்துக் கல்கொள்ளுதலை விரும்பி, கான் நவில் கானம் கணையில் போகி—காற்றுப் பயின்ற காட்டில் அம்பைப் போல விரைந்து சென்று, ஆரிய அண்ணலை வீட்டி—ஆரிய மன்னருள் தலைவனைத் தோற்கச்செய்து, பெரு இசை இன்பல் அருவி கங்கை மண்ணி—மிக்க புகழையுடைய இனிய பல அருவிகளையுடைய கங்கையில் அக்கல்லை நீர்ப்படை செய்து, இனம் தெரி பல் ஆன் கன்றொடு கொண்டு—நல்ல இனமென்று ஆராயப்பட்ட பல பசுக்களை அவற்றின் கன்றுகளோடு கைக்கொண்டு,

9. மாறு வல் வில் இடும்பில் புறத்து இறுத்து—நீங்காத வலிய வில்லையுடைய இடும்பாத வனத்தினிடத்தே தங்கி,

10—11. உறு புலி அன்ன வயவர் வீழ—மிக்க புலியைப் போன்ற வீரர் வீழ, சிறு குரல் நெய்தல் வியலூர் நூறி—சிறிய பூங்கொத்தாகிய நெய்தற் பூக்களையுடைய வியலூரை அழித்து,

13—7. பழையன் காக்கும் கரு சினை வேம்பின்—பழையன் என்னும் குறுநில மன்னன் தன் காவல்மரமாகக் காத்துவந்த கரிய கோட்டினையுடைய வேம்பினது, முழாரை முழுமுதல் துமிய பண்ணி - முழாப்போலும் புக்கத்தை யுடைய பெரிய அடியைத் துண்டமாகச் செய்து, வால் இழை கழித்த நறும்பல் பெண்டிர் - தூய அணிகலங்களை நீக்கிய நறிய பல பெண்டிரது, பல் இரு கூந்தல் முரற்சியால் – பலவாகிய கரிய கூந்தலைத் திரித்த கயிற்றால், குஞ்சர ஒழுகை பூட்டி—பழையனது யானைகளைச் சகடவொழுங்கிற் கடாக்களாகப் பூட்டி,

17—20. வெ திறல்—கொடிய வலியினையுடைய, ஆரா செருவில்—தொலையாத போரில், சோழர் குடிக்கு உரியோர் ஒன்பதின்மர் வீழ— சோழரது அரசிற்கு உரியோராகிய ஒன்பதுபேர் வீழும்படி, வாயில் புறத்து இறுத்து —நேரிவாயிலினிடத்துத் தங்கி, நிலை செருவின் ஆற்றலை அறுத்து—நாடோறுஞ் செய்யும் போரின் வலியைக் குறைத்து,

21—2. கெடல் அரு தானையொடு—கேடில்லாத படையொடு சென்று, கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவனை—கடலின்கண் வாழும் பகைவரைப் பிறக்கிடுமாறு கெடுத்த செங்குட்டுவனை, கரணம் அமைந்த காசு அறுசெய்யுட் பரணர் பாடினர் பத்துப்பாட்டு—கரணம் அமைந்த குற்றமற்ற செய்யுட்களைச் செய்யும் பரணர் என்னும் புலவர் பாடினர் பத்துப்பாட்டு.

முடிபு: கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக் கானம் போகி ஆரிய வண்ணலை வீட்டிக் கங்கை மண்ணிப் பல்லான் கன்றொடு கொண்டு இடும்பிற் புறத்திறுத்து வயவர் வீழ வியலூர் நூறி அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து பழையன் காக்கும் வேம்பின் முழுமுத றுமியப்பண்ணி பெண்டிர் கூந்தன் முரற்சியாற் குஞ்சரவொழுகை பூட்டி ஆராச் செருவிற் சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மர் வீழ நேரிவாயிற் புறத்து இறுத்துத் தானையொடு கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடினர் பத்துப்பாட்டு என்க.

ஆ—ரை 1-3: நெடுஞ்சேரலாதன் வடவாரியரை அலறபொருது வென்று எடுத்த வெல்கொடி அவர்க்கு அச்சத்தை விளைத்தலின் 'வடவருட்டும் வான்றோய் வெல்கொடி நெடுஞ்சேரலாதற்கு' என்றார். வெல்கொடி பகைவர்க்கு அச்சம் விளைத்தல், 'வெல்கொடி நுடங்கவென்றது மாற்றாரெதிரே அவர்கண்டு நடுங்கும்படி பண்டுவென்ற கொடி நுடங்கவென்றவாறு' (பதிற் 67: 5) என்பதனுலுமறிக. உட்கும்—அஞ்சும். "ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறல்" புற 39: 5. உட்கும் கொடி எனக் கூட்டுக. உட்கும் சேரலாதன் எனக் கூட்டினும் அமையும். "நெடுநக ரரசுதுயி லீயாது. மாதிரம் பனிக்கும் மறம் விங்கு பல்புகழ்" (பதிற் 12: 7-8) என வந்தமை காண்க. மிகவுயர்ந்த வெல் கொடியாதல்பற்றி 'வான்றோய் வெல்கொடியென்றார். "வான்றோய் வெல் கொடி" "மலையுறழ் யானை வான்றோய் வெல்கொடி" (பதிற் 44: 2; 69-1) எனப் பிறரும் கூறுதல் காண்க. குடவர்—குடநாட்டார். நெடுஞ்சேரலாதன் என்றது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை. நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்ற மகன் செங்குட்டுவன் என இயையும்.

சோழன் மணக்கிள்ளி என்பது ஆண்பாற்பெயர். கிள்ளி என்பது ஆண்பாற்பெயராய் சோழவேந்தர்க்கு வழங்கி வருதல் நெடுங்கிள்ளி, நெடுமுடிக்கிள்ளி, மாவண்கிள்ளி, வென்வேற் கிள்ளி எனச் சோழவேந்தரைக் குறிக்கும் பாக்கள் சங்கநூல்களில் வருதலால் அறியலாம். மணக்கிள்ளியீன்ற மகன் என்பதற்கு மணக்கிள்ளியின் மகள் ஈன்ற மகன் எனக்கொள்க.

> 'குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட
> சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன்மகளீன்ற
> மைந்தன்......செங்குட்டுவன்' (சிலப் 29.)

என இளங்கோவடிகள் கூறுதல் காண்க. சோழன் மகள் நற்சோணை என்பது,

> 'குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட
> சேரலாதற்குத் திகழொளி ஞாயிற் றேழ்பரி நெடுந்தேர்ச்
> சோழன் றன்மக ணற்சோணை யீன்ற மக்க ளிருவருள்' (சிலப் பதிக [1-2 உரை.)

என அடியார்க்குநல்லார் கூறுதலான் அறியலாம்.

4—8. கடவுட் பத்தினி—பத்தினியாகிய கடவுள். என்றது கண்ணகியை. "வானகத், தத்திற நிற்கநம் மகனு டடைந்தவிப், பத்தினிக் கடவுளை" (சிலப் 25: 112-4) என வருதல் காண்க. கற்கோள் பத்தினிக் கடவுளின் படிவம் அமைத்தற்பொருட்டு. "மாபெரும் பத்தினிக், கடவுளெழுதவோர் கற்றரா னெனின்" எனச் சிலப்பதிகாரத்து (25: 129-30) வருதல் காண்க. கானவில்—மணம் பயின்ற எனினுமாம். வடவாரிய மன்னர் ஆங்கோர் மடவரலை மாலை சூட்டி உடனுறைந்த விருக்கை தன்னில் ஒன்றுமொழி நகையினராய்த் தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழும் இமய நெற்றியில் விளங்கு விற் புலி கயல் பொறிந்த நாள் எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லைப்போலும் என்ற வார்த்தை அங்குவாழு மாதவர் வந்தறிவுறுத்தவிடத்துச் சினஞ்சிறந்து மேற்செல்லக் கருதியிருந்த செங்குட்டுவனை "வியன்பே ரிமயத்துக் கற்கால் கொள்ளினும் கடவுளாகும்" (சிலப் 25: 118-9)

என்ற வார்த்தை இடக்துரப்ப விரைந்து சேறல்பற்றிக் 'கணையிற் போகி' என்றார். "உடுவுறு கணையிற் போகி" (அக 292: 12) எனப் பிறரும் கூறுதல் காண்க.

ஆரியவண்ணல் என்றது முன்னொருகால் இவனுக்குத் தோற்ற ஆரிய மன்னருள் தலைவனை.

"உடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்" சிலப் 28-120-1

என்புழி 'ஆரியமன்னரென்றது முன்னொருகால் இவனுக்குத் தோற்றார் சிலர்' என அரும்பதவுரைகாரர் உரைத்தல் காண்க. கங்கையென்றுலகேத்திய கடவுண்மா நதியாகலின் 'பேரிசைக் கங்கை' என்றார். யமுனை முதலிய இனிய பல அருவிகள் கலத்தல்பற்றி 'இன்ப லருவிக் கங்கை' என்றார். "கங்கை யாற்றிடை யோடுங் † கரியவள்" என்றார் கம்பரும். (கம்ப. கங்கை23.) மண்ணி –நீர்ப்படை செய்து, இமயமலையிற் கல்கொண்டமையின் s அம்மலையினின் றிழிதரும் கங்கையில் நீர்ப்படைசெய்தான்.

"கங்கைப்பேர் யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களி னீர்ப்படை செய்து" சிலப் 27: 14-6.

என வருதல் காண்க.

பல்லான் கொண்டு என்றது இமயமலையினின்றும் பல பசுக்களைக்கொண்டு போந்து என்றவாறு. இதனை,

"வில்லவன் வந்தான் வியன்பே ரிமயத்துப்
பல்லா னிரையொடு படர்குவிர் நீரெனக்
காவல ருனிரை நீர்த்துறை படீஇக்
கோவல ரூதுங் குழலின் பாணியும்" சிலப் 27: 238-41.

என்பதனாலும், 'பல்லானிரை–வடக்கு நின்றும் கொண்டுபோந்த நிரை' என்னும் அரும்பதவுரையாசிரியர் உரையானும் அறியலாம்.

9. இடும்பில்-ஓரூர். குட்டுவன் உயர்ந்த தேரினையுடைய படையோடு இடும்பில் என்னும் மூதூர்ப் புறத்தே தங்கிக் கொடிய போரினை வென்றான் என்பது.

"நெடுந்தேர்த் தானையொ டிடும்பிற்புறத் திறுத்துக்
கொடும்போர் கடந்து" சிலப் 28: 118-9.

என்பதனாலுமறியப்படும்.

மாறா, வல்வில் என்பன இடும்பிலுள்ள வீரர்க்கு அடை. மாறா என்பதற்கு முதுகிடாத என்றுரைப்பினுமமையும். வல்வில் என்றது ஓரேகாலத்திற் பல பொருள்களை ஊடுருவிச்செல்லும்படி அம்பைச் செலுத்தும் வலிய வில்லை.

† கரியவள்-கரியநிறமுடைய யமுனை.

s "ஞெமையியோங் குயர்வரை யிமயத் துச்சி, வாஅ னிழிதரும் வயங்குவெள் ளருவிக் கங்கை" நற் 369.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம்" புற 152: 1-6.

எனச் சான்றோர் கூறுதல் காண்க. புறம்–அவ்விடம். இறுத்துவென்று என ஒருசொல் வருவிக்க.

10—11. உறு புலி-மிக்க புலி. புலியன்ன வயவர் – புலிபோன்ற வலியினையுடைய வயவர்.

"உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்" சிறுபாண் 122.

"அடுபுலி முன்பிற் றொடுகழன் மறவர்" அக 75: 6.

என வருவனகாண்க. வயவர் வீழ நூறி எனக் கூட்டுக. கழியினிடத்தே சிறிய கொத்தாகிய நெய்தற்பூக்களையுடைய வியலூராதலின் 'சிறுகுரல் நெய்தல் வியலூர்' என்றார்.

"சிறுகுர னெய்தலெம் பெருங்கழி நாட்டே" அக 120: 15-6.

"கழியே, சிறுகுர னெய்தலொடு காவி கூம்ப" அக 350: 1.

என வருவன காண்க. வியலூர் நன்னன் வேண்மானுக்கு உரியதாயிருந்த தென்பது,

"நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்" 97 12-3.

என அகநானூற்றில் வருதலான் அறியலாம். குட்டுவன் வியலூரை அழித்தமை,

"கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையிற்
சிறுகுர னெய்தல் வியலூ ரெறிந்தபின்" சிலப் 28: 114-5.

என்பதனுலுமறியப்படும்.

12. நண்ணி–அணுகி. "அலர்தாய துறை நண்ணி" கலி 35: 6. கொடுகூர்–ஓரூர். பகைவரொடு நிகழ்ந்த போரில் சேரன் இதனை அழித்தமையின் 'கொடுகூ ரெறிந்து' என்றார். எறிதல்–அழித்தல்.

13—7. பழையன் காக்கும் வேம்பு என்க. பழையனது காவல்மரமாகிய வேம்பினைக் குட்டுவன் தடிந்தமை,

"பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய" சிலப் 27: 124-6.

என்பதனுலுமறிக. சினை–கிளை. முழாரை - முழாவரை என்பதன் மரூஉ. "முழாவரைப் போந்தை" (புற 85: 7) எனப் பிறரும் கூறுதல் காண்க. வாலிழை கழித்த பெண்டிர் என்றது அப்பழையன் பெண்டிரை. வாலிழை –வெளிய முத்தாரம் எனினுமாம். 'வாலிய இழை' கலி 119: 14 நச். 'அழகிய

ஆபரணம்' பு. வெ. மா. 21 உரை. பழையன் இறந்தமையின் அவன் பெண்டிர் இழைகழித்தனர். கணவனை இழந்த மகளிர் இழை கழித்தலை,

"அறிந்தோன் மன்ற வறிவுடை யாள
னிறந்தோன் றானே யளித்திவ் வுலகம்
... ... ... ... ...
மெல்லியன் மகளிரு மிழைகளைந் தனரே" புற 224: 10-17.

"நிரையிவட் டந்து நடுக லாகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போல" புற 261: 15-9.

எனவருவனவற்றானுமறிக. நறும்பெண்டிர் பல்பெண்டிர் எனத் தனித்தனி கூட்டுக. நறும்பெண்டிர் என்றது அவரது இயற்கை மணத்தைக் கூறியபடி.

"கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதைபோல
நறிய நல்லோண் மேனி" குறுந் 62: 1-4.

"வேங்கையுங் காந்தளு நாறி
ஆம்பன் மலரினுந் தாண்றன் ணியளே" குறுந் 84: 4-5.

எனச் சான்றோர் கூறுதல் காண்க. இனி நறுமைஎன்பதற்கு நன்மை எனக் கொண்டு கற்பு அழகு எனக்கொள்ளினுமமையும் பழையனுக்குப் பெண்டிர் பலராதலின் 'பல்பெண்டிர்' என்றார். குழல் முதலிய பலவகையாக முடிக்கப் படும் கரிய கூந்தலாதலின் 'பல்லிருங் கூந்தல்' என்றார். வாலிழை கழித்த பெண்டிர் நீக்கிய கூந்தலால் திரித்த கயிற்றைக் 'கூந்தன் முரற்சி' என்றார். கணவனை இழந்த பெண்டிர் தம் கூந்தலை நீக்குதலை,

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
யல்லி யுணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டு
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே" புற 250: 4-9.

"வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போல" புற 261: 16-9.

என வருவனவற்றாலறிக. 'கூந்தன் முரற்சியென்றது அவர் கூந்தலை அரிந்து திரித்த கயிற்றினை' என்பர் பழையவுரைகாரர். குஞ்சரவொழுகை பூட்டியது அப்பழையன் வேம்பினை முரசாகச் செய்யும்படி ஏற்றிக்கொண்டு போதற்கு, குஞ்சரம் அவனேறும் யானைகள். ஒழுகை-பண்டி. இது சகடம் என்பதன் தமிழ்ச் சொல். செல்வது என்பது பொருள்.

17—20. சோழ அரசிற்குரியோராகிய ஒன்பதின்மர் ஒத்த தன்மையினை யுடையராய் தன் மைத்துனனாகிய பெருங்கிள்ளி இளவரசாக இருந்தலைப்

பொருநராய் அக்கிள்ளியின் ஏவலைக் கொள்ளாராய் அவன் நாடாட்சியினைச் சிதைக்கும் தன்மையையுடையரானமையின் குட்டுவன் தன் மைத்துனன் பொருட்டு நேரிவாயில் என்ற ஊரில் தங்கிச்செய்த போரில் அவர் வீழும்படி வென்றமையின், "சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மர் வீழ வாயிற் புறத் திறுத்து, நிலைச்செருவி னாற்றலைய றுத்து" என்றார். இதனை இளங்கோவடிகள்

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த பண்பின ரொன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலின்
ஒன்பது குடையு மொருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்" 27: 118-23.

"ஆர்புனை தெரிய லொன்பது மன்னரை
னேரி வாயி னிலைச்செரு வென்று" 28: 116-9.

எனச் சிலப்பதிகாரத்தில் கூறுதலானுமறிக.

வெந்திறற் சோழர் குடிக்குரியார் எனக் கூட்டுக. ஆராச் செரு-தொலையாத போர். குடிக்குரியோரென்றது அரசிற்குரியாரை. வீழ இறுத்து அறுத்து என முடிக்க. நேரிவாயிலை வாயில் என்றது முதற்குறை. 'நேரி வாயில்-உறையூர்த் தெற்கில் வாயிலதோரூர்' என்பர் அரும்பதவுரைகாரர். (சிலப் 28: 117) நிலைச்செரு-நிலைபெற்ற போர் எனினுமாம்.

21—2. கெடலருந்தானை – கேடில்லாத தானை. என்றது முதுகிடாத தானையை. கடல் பிறக்கு ஓட்டிய – கடல் வலியைப் பிறக்கிடுமாறு அழித்த எனினுமாம். செங்குட்டுவன் தானையொடு கடல்பிறக்கோட்டியமை.

"மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப்பேர் யாற்றுக் கரைபோகிய
செங்குட்டுவன்" சிலப் 30 கட்டுரை.

என இளங்கோவடிகள் கூறுதலானும் அறிக.

## பழையவுரை.

இதன் பதிகத்துக் கடவுட் பத்தினி (4) என்றது கண்ணகியை. 9. இடும்பில் என்றது இடும்பாதவனத்தை புறம்–அவ்விடம். வாலிழை கழித்த பெண்டிரென்றது அவர் கூந்தலை அரிந்து திரித்த கயிற்றினை. 17. குஞ்சரவொழுகை பூட்டியது அப்பழையன் வேம்பினை ஏற்றிக்கொண்டு போதற்கு. 18. குடிக் குரியோரென்றது அரசிற்குரியாரை.

## ஒப்புமைப்பகுதி

1. வடவர்: "வடவர் தந்த வான்கேழ் வட்டம்" நெடுநல் 51; "வடவர் வாட" பட்டினப் 276.

வான்றோய் வெல்கொடி: பதிற் 44: 2 ஒப்பு.

2. குட்க்கோ நெடுஞ்சேர லாதற்கு: பதிற் 6ஆம் பதி 1.

4. கடவுட் பத்தினி: "வான்றரு சிறப்பிற், கடவுட் பத்தினி" சிலப் 27: 1-2.

கடவுட்பத்தினிக்குக் கற்கொண்டமை: இமயமால்வரைக் கெங்கோன் செல்வது, கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்" "விற்றலைக் கொண்ட வியன்பேரிமையத்தோர், கற்கொண்டு பெயருமெங் காவலன்" "வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது, கடவுளெழுதவோர் கற்கே யாயின், ஓங்கிய விமயத்துக் கற்கால் கொண்டு" "பொற்கோட் டிமயத்துப் பொருவறு பத்தினிக் கற்கால் கொண்டனன் காவலனுங்கெவ்" "வடபே ரிமயத்து வான் றரு சிறப்பிற், கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்" சிலப் 25: 168-9; 25: 183-4; 26: 150-2; 26: 253-4; 27: 1–2;

5. கானம் போகி: "பனிவார் சிமையக் கானம் போகி" மதுரைக் 148.

விரைந்த செலவிற்குக் கணை: 'மெய்கணை நிழலிற் கழியுமிவ் வுலகத்து" நற்46: 2; "நல்லறி விழந்த காமம், வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே" குறுந் 231: 5–6; "கணைவிசைக் கடுவளி" "கணைவிசைக் கடுநீர்க் காவிரி" "உடுவுறு கணையிற் போகி" "கணைகழிந் தன்ன கோன்கால் வண்பரி" அக 121: 13; 181: 11-2; 292: 12; 400: 14.

7. அருவிக்கங்கை: "வயங்கு வெள் ளருவிக் கங்கையம் பேர் யாற்று" நற் 369: 8–9.

4—7. கல்லைக்கங்கை மண்ணி: "ஓங்கியவிமயத்துக் கற்கால் கொண்டு, விங்குநீர்க் கங்கையி னீர்ப்படை செய்து" சிலப் 26: 152-3;

8. பல்லான்: "பல்லான் குழுவத்து" "பல்லான் கோவலர்" குறுந் 190 –7; 358: 6; "பல்லான் பொதுவர்" "பல்லா னினநிரை" கலி 103: 5; 113: 29.

9. வல்வில்: "எயிலெறி வல்வில்" பதிற் 58: 10; "கொடுந்தொழில் வல் வில்" முருகு 194; "ஓடாவல்வில்" முல்லை 39; "வல்வில் லோரி" "வல்வில் லம்பின்" நற் 6: 9; 198: 10; "வல்வில் லோரி" "வல்வி லிளையர்" "வல்விற் கானவர்" குறுந் 100: 5; 275: 6; 335: 6; "வல்வில் விடலை" "வல்விற் கானை" ஐங் 373: 5; 390: 3; "கைபுனை வல்வில்" "வரிபுனை வல்வில்" கலி 7: 6; 104: 56; "வல்விற் புன்றுறை" "வல்வி லிளையரொடு" "வல்வி லிளையர்" "வல்வில், ஓரி" "வல்வி லெறுழ்த்தோட் பரதவர் கோமகன்" "செல் சாத்தெறியும் பண்பில் வாழ்க்கை, வல்வி லிளையர்" "குலாஅ வல்விற் கொடுநோக் காடவர்" "வான்போழ் வல்விற் சுற்றி" "செறிமடை யம்பின் வல்விற் கானவன்" அக 44: 9; 120: 12; 152: 15; 209: 13-4; 226: 7; 245: 6-7; 265: 17; 281: 5; 282: 2; "வல்வில் வேட்டுவன்" "வல்வில் வேட்டம்" "வல்வி லோரியும்" "இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த. "வல்வின் மறவர்" "வலாஅர் வல்விற் குலாவரக் கோலி" "வல்வி லிளையர்க்கு" விசைப்புறு வல்வில்" புற 150: 7; 152: 6; 158: 5; 259: 2-3; 324: 6; 353: 10; 369: 8; "கோட்டமை வல்வில்" ஐந் ஐம்பது 34; "கூற்றன வல்வில் விடலையோடு" திணை ஐம் 20; "வல்வில், கார்க்கெதிர் மேகம்போலக் கணமழை கான்ற" சீவக 801; "வல்வி லெயினர்" சிலப் 12: 13.

10. வயவருக்குப் புலி: "கொடுவரி கூடிக் குழூஉக் கொண்டனைத்தால். .....நிணநிரை வேலார் நிரை" "புலிக்கணமும் . ...போல்வார்" "குயவரி வேங்கை யனைய வயவர்" பு. வெ. மா 9; 25; 58; "கந்தடு களிறு கொல்லுங் கருவரை யுழுவை யன்னான்" சீவக 1219.

வயவர் வீழ: பதிற் 12: 1 ஒப்பு.

14. முழாரை: "முழவுமுதற் புன்னை" "புன்னையங் கொழுநிழன், முழவு முதற் பிணிக்கும்" நற் 307: 6; 315: 7-8; "முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணை" குறுந் 301: 1; "முழவுத்தா ளெரிவேங்கை" கலி 44: 4; "முழா வரைப் போந்தை" புற 85: 7;

முழுமுதல் பதிற் 11: 5 ஒப்பு.

முழுமுத றுமியப்பண்ணி: "தொன்னிலை முழுமுத றுமியப் பண்ணி" அக 45: 10.

15. வாலிழைப் பெண்டிர்: "வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்" "வாலிழை மகளிர்" நற் 76: 5; 380: 5; "வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற" "வாலிழை நெகிழ்த்தோர் வாரார்" "வாலிழை மகளிர் விழவணி கூட்டும்" குறுந் 45: 2; 188: 3; 386: 3; நீலமேனி வாலிழை" "வாலிழை யொண்ணுத லரிவை" ஐங். கடவுள்; 73: 1–2; "வாலிழை மகளிர்" கலி 119: 14; "வாலிழை மகளிர் நால்வர் கூடி" அக 86: 12; "வாலிழை, மங்கையர்" "வாலிழை மட மங்கையர்" புற 6: 23-4; 11: 2.

நறும்பல்: "நறும்பல் கூந்தல்" சிலப் 10: 39.

பல்லிருங் கூந்தல்: "பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்மார்" நெடுநல் 54; "பல்லிருங் கதுப்பில்" நற் 367: 7; "பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே" குறுந் 19: 5; "பல்லிருங் கூந்தன் மெல்லியளோள்" "பல்லிருங் கூந்தல் பசப்பு நீவிடிற், செல்வேந் தில்ல யாமே" ஐங் 308: 1; 429: 1-2; "பல்லிருங், கூந்த லணைகொடுப் பேம் யாம்" கலி 101: 41–2; "பல்லிருங் கூந்தன் மெல்லியன் மெல்லியன் மடந்தை" "பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க" அக 43: 11; 86: 16; "பல்லிருங் கூந்தன் மகளிர்" புற 73: 13; "பல்லிருங் கூந்தல் பணி நோனுன்" கார்நாற் 24; "பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியும்" சிலப் 2: 65;

கூந்தன் முரற்சி: "கூந்தன் முரற்சியிற் கொடிதே" நற் 270: 10.

ஒழுகை: சிறுபாண் 55; நற் 183: 3; அக 30: 6; 159: 2; புற 116: 8.

குஞ்சரவொழுகை: "குஞ்சர வொழுகையிற் கோநக ரெதிர்கொள, வஞ் சியுட் புகுந்தனன் செங்குட்டுவனென்" சிலப் 27: 255–6.

17. வெந்திறல்: "வெந்திறற் றடக்கை" பதிற் 86: 2; "வெந்திறற் கடு வளி" குறுந் 39: 1.

18. ஆராச்செரு: "ஆராச் செருவி னைவர்" பெரும்பாண் 417.

20. நிலைச்செரு பதிற் 4ஆம் பதிகம் 8 ஒப்பு.